உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கந்தபுராணம்

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களாலும்

அவர்களது சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகராயிருந்த

பொன்னம்பலபிள்ளையாலும்

கத்தியரூபமாகச் செய்யப்பட்டது.

சிதம்பர சைவபபிரகாசவிததியாசாலைத தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு.)

சித்தார்த்தி௵ சித்திரைமீ

இதன்விலை ரூபா - ௨.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

நால்வகையோனிகளுள் ஒருயோனி வாய்ப்பட்டுப் பிறப்பவை யாவை அவையெல்லாம் பசுக்கள், அப்படிப் பிறத்தலில்லாதது யாது அது பதிப்பொருள் என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும்வண்ணம் நிற்பது. ஆதலால், வேதம் புராணம் இதிகாசம் முதலிய நூல்களிலே மற்றைத்தேவர்களெல்லாம் அப்படிப் பிறந்திறத்தல் சொல்லப்படுதலானும், சிவனுக்கு அது உண்டென்பது எங்காயினும் சொல்லப்படாமையானும், அநாதிமுத்தசித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

இப்படித்துணியப்படும் முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமானை, அவர் அருளிச்செய்த வேதாகமங்களிலே விதித்தபடி, தங்கள் தங்கள் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் ஏற்ப, மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றும் சொல்லப்படுவார்கள். இச்சைவர்கள் பல சமயத்தாருக்கும் பொதுவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக்கொண்டே, பின்பு தங்களுக்குச் சிறப்புவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையர்களாய் ஒழுகல் வேண்டும்.

பொதுவிலக்கணங்களாவன கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, பிறர்மனைநயவாமை, வரைவின்மகளிர்நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம்.

சிறப்பிலக்கணங்கள் புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும். அவற்றுள், புறத்திலக்கணம் பத்து; அவையாவன விபூதி ருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்களைத் தரித்தல், குருவைப் பூசித்தல், சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசைசெய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலயங்களிலே சென்று சிவலிங்கப்பெருமானைத் தரிசித்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம். உடலிலக்கணம் பத்து; அவையாவன, சிவபெருமானுடைய பெருமையைப் பேசும்போது கண்டம் விம்முதல், அதனைச் சிந்தித்து மகிழுந்தோறும் நாத்துடித்தெழும்பாமை, நகைதுடித்தல், சரீரங்குலுங்குதல், உரோமஞ்சிலிர்த்தல், வேர்த்தல், தன்வசமன்றி நாப்பெயராமை, ஆனந்தக்கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல் என்பவைகளாம். அகத்திலக்கணம் மூன்று; அவையாவன பஞ்சாக்ஷரத்தை மானதமாகச் செபித்தல், மானதபூசை, சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.

இவ்விருபத்துமூன்றிலக்கணங்களுள் ஒன்றாகிய சிவபுராணங் கேட்டல் தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னையொழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொதுவிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது. யாதினாலெனின், விபூதி ருத்திராக்ஷதாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனாகிய இன்பத்தையும் கொலை முதலிய பாவங்களையும் அவற்றின் பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராணமாதலினென்க. ஆதலால், சைவசமயிகள் யாவரும் சிவபுராணங்கேட்டல்வேண்டுமென்பது துணிவு. இக்கருத்துப்பற்றியன்றோ, திருக்கோயில், திருமடம், தீர்த்தக்கரை முதலிய புண்ணியத்தானங்களிலே சிவபுராணத்தைப் பூசைசெய்தலும், வாசித்துப் பொருள்சொல்லுதலும், கேட்டலும், பெரும்புண்ணியங்களென்று, சிவசாத்திரங்களிலே விதிக்கப்பட்டன.

கல்வியறிவொழுக்கங்கள் உடையவர்களாய்ச் சிவபத்திமான்களாய் உள்ளவர்களே சிவபுராணங்களை வாசித்துப் பொருள் சொல்லுதற்கு உரியவர்கள். அவர்கள் நாடோறும் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, நித்திய கருமம் முடித்துக்கொண்டு, கோமயத்தினாலே சுத்திசெய்யப்பட்ட புண்ணியத்தானத்திலே, பீடத்தின்மீது சிவபுராணத் திருமுறையை வைத்து விதிப்படி பூசைசெய்து, நமஸ்கரித்து, இருந்துகொண்டு, வாசித்துப் பொருள்சொல்லல் வேண்டும். கேட்பவர்கள் நாடோறும் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து, நித்தியகருமம் முடித்துக்கொண்டு வந்து, சிவபுராணத் திருமுறையை நமஸ்கரித்து, இருந்துகொண்டு, பிறிதொன்றினுங் கருத்தை இறக்காது, சிரத்தையோடு கேட்டல்வேண்டும். சிவபுராணம் படிக்குஞ்சபையிலே உயர்ந்த ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்தல், நித்திரை செய்தல், வெற்றிலைபாக்குண்ணுதல், உடம்பு போர்த்துக்கொள்ளுதல், பிற வார்த்தைகளைப் பேசுதல், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்லுதல், சிரித்தல், சிவபுராணம் வாசித்துப் பொருள்சொல்வோரை நன்குமதியாது அவமதி செய்தல் முதலிய பாவங்களைச் செய்தோர் நரகத்திலே நெடுங்காலந் தண்டிக்கப்பட்டு, பின்பு இழிந்த பிறப்பை அடைந்து, வருந்துவர்கள். இவையெல்லாம் உபதேசகாண்டத்திலும் பிரமோத்தரகாண்டத்திலும் காண்க.

இப்படியே இத்தேசத்துக் கோயிலதிகாரிகளும் மடாதிபதிகளும் சிவபுராணப் பிரசாரகர்களை நியோகித்து, கோயில்களிலும் மடங்களிலும் சிவபுராணங்களை வாசித்துப் பொருள்சொல்லும்படி செய்வார்களாயின், சைவசமயிகள் யாவரும் பேராசையோடு நியமமாகக் கேட்பார்களே. கேட்பார்களாயின், பெருங்கருணாநிதியாகிய சிவபெருமானுடைய மகிமையையும், புண்ணியபாவங்களையும், அவற்றின் பயன்களையும் எளிதில் அறிவார்களே. அறிவார்களாயின், பெரும்பான்மையும் பாவங்களுக்கு அஞ்சித் தங்கள் தங்களால் இயன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து, உய்வார்களே.

இவ்வழக்கம் முற்காலத்திருந்தது என்பதும், அதனால் உலகத்தாருக்கு விளைந்த பயனும், பிரமோத்தரகாண்டம் முதலிய நூல்களிலே கண்டுகொள்க. ஈழதேசத்துள்ள திருக்கோயில்களெங்கும் பண்டுதொட்டு இதுகாறும் வருடந்தோறும் கந்தபுராணம் முதலிய சில புராணங்களை வாசித்துப் பொருள்சொல்லி

வருகின்றார்கள். அங்குள்ளோர்கள் வாசிப்பவர்களையும் பொருள்சொல்வோர்களையும் சிரத்தையோடு வழிபட்டு அவர்களுக்கு வேண்டுவன கொடுத்து, நியமமாகக் கேட்டுவருகின்றார்கள். இத்தேசத்திலே இக்காலத்திலே இவ்வழக்கம் வீழ்ந்தது: ஆதலாற்றானே, ஆசிரியர்களை வழிபட்டுக் கற்றுணர்ந்த புலவர்கள் ஒழிய மற்றையாவரும் சிவபுராணங்களை அறியாதவர்களாயிருக்கின்றார்கள்.

இதுகண்டு, நம்முடைய சைவசமய நூல்களை எல்லாருக்கும் எளிதின் உபயோகமாகும்பொருட்டு வெளிப்படையாகிய வசனநடையிற்செய்து அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தின், அது பெரும்புண்ணியமாகும் என்று துணிந்து, சில வருடத்துக்கு முன்னே பெரியபுராணத்தை அப்படிச் செய்தேன். அது அநேகருக்குப் பெரும்பயன் விளைத்தலைக் கண்டிருந்தமையால், கந்தபுராணத்தையும் அப்படியே செய்கின்றேன்.

சைவசமயிகள் இச்சிவபுராணங்களை வாங்கி, தங்கள் தங்கள் சுற்றத்தார் முதலாயினோர் கேட்ப, மெய்யன்போடு வாசித்து, பாவங்களை வெறுத்து, தங்கள் தங்களால் இயன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து, சிவபெருமானை வழிபட்டு, உய்யக்கடவர்கள்.

ஆறுமுகநாவலர்.

U. V. S. IYER LIBRARY
22475

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இற்றைக்கு ஐம்பது வருஷங்களுக்கு முன்னே இக்கந்தபுராணவசனத்தை அசுரகாண்டம் அசுரர்யாகப் படலம் வரையும் எழுதி அச்சிட்டுச் சஞ்சிகையாக வெளிப்படுத்தினார்கள். எஞ்சியபாகம் அவர்களால் எழுதப்படாமையால், நான் அதனை நூதனமாக எழுதி, அவர்கள் எழுதியதையும் சேர்த்து அச்சிட்டேன்.

வசனநடை இயற்றுவதில் மிகச் சிறந்தவர்கள் என்று யாவராலும் புகழப்படும் நாவலரவர்களுடைய வசனத்தோடு என்வசனத்தையும் ஒருங்கு சேர்த்தல், சூரியனோடு மின்மினியைப் பிரகாசிக்க வைத்தல்போல எள்ளற் பாட்டிற்கு ஏதுவாமாயினும், அன்பர்களாகிய அறிஞர்கள் சிலர் இயன்றவரை எழுதுக எனப் பணித்த ஏவலை மறுத்தற்கு அஞ்சியும், எப்படியாவது இதனைப் பூர்த்தி செய்துவிடல் வேண்டும் என்று என்மனத்திலெழுந்த ஆசையினால் ஏவப்பட்டும், ஒருவாறு எழுதினேன்.

இது, கலியுகவரதராகிய கந்தசுவாமியினுடைய சரித்திரம் என்னும் பெருமை பற்றியும், நாவலரவர்கள் வசனத்தோடு சேர்ந்ததென்னும் சம்பந்தம் பற்றியும், அறிஞர்கள் என்வசனத்தையும் அங்கீகரிப்பார்கள் என்றெண்ணுகின்றேன்.

வேல்சேர்ந்தசெங்கைக்குமரன்வியன்காதைதன்னை
மால்சேர்ந்துரைத்தேன்றமிழ்ப்பாவழுவுற்றதேனும்
நூல்சேர்ந்தசான்றீர்குணமேன்மைநுவன்றுகொண்மின்
பால்சேர்ந்ததனாற்புனலும்பயனாவதன்றே.

சிதம்பரம்
சைவப்பிரகாசவித்தியாசாலை
சாதாரண௵ பங்குனி௴

ச. பொன்னம்பலவன்.

உ

காண்டவகராதி.

காண்டம்.	பக்கம்.
அசுரகாண்டம்	௮௫
உற்பத்திகாண்டம்	௧௦
தக்ஷகாண்டம்	௪௨௭
தேவகாண்டம்	௪௦௯
மகேந்திரகாண்டம்	௧௯௧
யுத்தகாண்டம்	௨௫௩

படலவகராதி.

படலம்.	பக்கம்.
அகத்தியப்படலம்	௧௪௪
அக்கினிமுகாசுரன்வதைப்படலம்	௩௧௮
அசமுகிசோகப்படலம்	௧௬௯
அசமுகிநகர்காண்படலம்	௧௭௩
அசமுகிபுலம்புறுபடலம்	௧௭௫
அசமுகிப்படலம்	௧௬௪
அசுரேந்திரன்மகேந்திரஞ்செல்படலம்	௭௪
அசுரர்தோற்றுபடலம்	௮௫
அசுரர்யாகப்படலம்	௧௦௫
அடிமுடிதேடுபடலம்	௫௧௯
அண்டகோசப்படலம்	௧௧௪
அதிவீரன்வதைப்படலம்	௧௯௬
அமரர்சிறைபுகுபடலம்	௧௮௧
அயனைச்சிறைநீக்குபடலம்	௫௭
அயனைச்சிறைபுரிபடலம்	௫௬
அயிராணிசோகப்படலம்	௧௫௮
அரசுசெய்படலம்	௧௩௩
அவைபுகுபடலம்	௨௧௯
அனந்தன்சாபநீங்குபடலம்	௪௯௭
இந்திரபுரிப்படலம்	௪௨௩
இந்திரனருச்சனைப்படலம்	௧௫௬
இந்திரன்கயிலைசெல்படலம்	௧௬௩
இந்திரன்கரந்துறைபடலம்	௧௩௯
இந்திரன்மீட்சிப்படலம்	௧௭௦
இந்திராணிமறுதலைப்படலம்	௧௬௬
இரணியன்புலம்புறுபடலம்	௪௦௫
இரணியன்யுத்தப்படலம்	௩௦௯
இரண்டாநாட்சூரபன்மன்யுத்தப்படலம்	௨௭௫
இலங்கைவீழ்படலம்	௧௯௬
உபதேசப்படலம்	௪௨௭
உமைகயிலைநீங்குபடலம்	௪௪௧
உமைதவம்புரிபடலம்	௪௪௫
உமைவருபடலம்	௫௦௪
உருத்திரர்கேள்விப்படலம்	௧௩௦
எதிர்கொள்படலம்	௧௨௮
ஏமகூடப்படலம்	௨௫௩
கடல்பாய்படலம்	௧௯௪
கடவுள்வாழ்த்து	௨
கணங்கள்செல்படலம்	௩௧
கந்தவிரதப்படலம்	௫௨௬
கந்தவெற்புறுபடலம்	௪௨௨
கயமுகனுற்பத்திப்படலம்	௪௮௪
கயமுகன்வதைப்படலம்	௨௦௦
காசிபனுபதேசப்படலம்	௮௬
காமதகனப்படலம்	௧௬
காவலாளர்வதைப்படலம்	௨௨௯
காவிரிநீங்குபடலம்	௧௫௦
காளிந்திப்படலம்	௪௪௪
கிரவுஞ்சப்படலம்	௧௪௬
குமாரபுரிப்படலம்	௭௮
சகத்திரவாகுகள்வதைப்படலம்	௨௩௨
சதமுகன்வதைப்படலம்	௨௨௮
சந்திரசாபப்படலம்	௪௩௬
சயந்தன்கனவுகாண்படலம்	௨௧௪
சயந்தன்புலம்புறுபடலம்	௨௦௯
சரவணப்படலம்	௪௫
சாலைசெய்படலம்	௪௫௫
சிங்கமுகாசுரன்வதைப்படலம்	௩௫௦
சுக்கிரனுபதேசப்படலம்	௧௧௨
சுரம்புகுப்படலம்	௮௦
சூரபன்மன்வதைப்படலம்	௩௭௫
சூரனகர்புரிபடலம்	௨௩௯
சூரனமைச்சியற்படலம்	௨௪௧
சூரனரசிருக்கைப்படலம்	௧௭௧

படலம்.	பக்கம்.
சூரன்றண்டஞ்செய்படலம்	௧௭௭
தகரேறுபடலம்	௫௪
தக்கன்கயிலைசெல்படலம்	௪௫௦
தக்கன்சிவபூசைசெய்படலம்	௫௨௫
தக்கன்மகப்பெறுபடலம்	௪௩௨
தக்கன்றவஞ்செய்படலம்	௪௩௦
ததீசிப்படலம்	௪௫௭
ததீசியுத்தரப்படலம்	௪௬௨
தருமகோபன்வதைப்படலம்	௩௩௫
தவங்காண்படலம்	௨௫
தாரகன்வதைப்படலம்	௬௩
தானப்படலம்	௫௦௦
திக்குவிசயப்படலம்	௧௨௨
திருக்கல்யாணப்படலம்	௩௩
திருக்குற்றாலப்படலம்	௧௫௪
திருக்கைலாசப்படலம்	௧௦
திருச்செந்திப்படலம்	௮௧
திருப்பரங்குன்றுசேர்படலம்	௪௦௯
திருமணப்படலம்	௪௪௭
திருவவதாரப்படலம்	௩௭
திருவிளையாட்டுப்படலம்	௪௭
துணைவர்வருபடலம்	௪௩
தெய்வயானையம்மைதிருமணப்படலம்	௪௧௦
தேவகிரிப்படலம்	௭௨
தேவரையேவல்கொள்படலம்	௧௩௪
தேவர்கள்போற்றுபடலம்	௪௦௪
தேவர்புலம்புறுபடலம்	௧௫௬
நகரழிபடலம்	௨௩௦
நகர்செய்படலம்	௧௩௧
நகர்புகுபடலம்	௨௦௨
நகர்புகுபடலம்	௩௦௬
படையெழுபடலம்	௬௩
பட்டாபிடேகப்படலம்	௧௩௨
பார்ப்பதிப்படலம்	௧௧
பானுகோபன்வதைப்படலம்	௩௩௯
பிரமயாகப்படலம்	௪௫௨
புதல்வரைப்பெறுபடல	௧௩௬
புராணவரலாறு	௫
மகாகாளர்வருபடலம்.	௧௬௭
மகாசாத்தாப்படலம்	௧௫௯
மகேந்திரஞ்செல்படலம்	௧௯௮
மணம்பேசுபடலம்	௨௮
மாயைநீங்குபடலம்	௧௦௪
மாயைப்படலம்	௮௩
மாயையுபதேசப்படலம்	௧௦௩
மார்க்கண்டேயப்படலம்	௮௭
மீட்சிப்படலம்	௪௦௭
முதனாட்பானுகோபன்யுத்தப் படலம்	௨௫௭
மூவாயிரர்வதைப்படலம்	௩௩௦
மூன்றாநாட்பானுகோபன் யுத்தப்படலம்	௨௯௬
மேருப்படலம்	௧௨
மோனநீங்குபடலம்	௨௩
யாகசங்காரப்படலம்	௫௦௮
யாளிமுகன்வதைப்படலம்	௨௩௬
வச்சிரவாகுவதைப்படலம்	௨௩௩
வரம்பெறுபடலம்	௧௧௦
வரவுகேள்விப்படலம்	௨௫௫
வரைபுனைபடலம்	௩௦
வழிநடைப்படலம்	௭௭
வள்ளியம்மைதிருமணப்படலம்	௫௩௫
விடைபெறுபடலம்	௬௦
விண்குடியேற்றுபடலம்	௪௨௦
விந்தகிரிப்படலம்	௧௪௨
விந்தம்பிலம்புகுபடலம்	௧௪௭
வில்வலன்வாதாவிப்படலம்	௧௩௭
வில்வலன்வாதாவிவதைப்படலம்	௧௪௮
வீரசிங்கன்வதைப்படலம்	௧௯௫
வீரபத்திரப்படலம்	௫௦௭
வீரவாகுகந்தமாதனஞ்செல்படலம்	௧௯௧
வீரவாகுசயந்தனைத்தேற்றுபடலம்	௨௧௬
வீரவாகுமீட்சிப்படலம்	௨௩௮
வேள்விப்படலம்	௫௦௩

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கந்தபுராணம்

விநாயகர் காப்பு.

திகடசக்கரச்செம்முகமைந்துளான்
சகடசக்கரத்தாமரைநாயக
னகடசக்கரவின்மணியாவுறை
விகடசக்கரன்மெய்ப்பதம்போற்றுவாம்.

உ. உச்சியின்மகுடமின்னவொளிர்தரநுதலினோடை
வச்சிரமருப்பினொற்றைமணிகொள்கிம்புரிவயங்க
மெய்ச்செவிக்கவரிதூங்கவேழமாமுகங்கொண்டுற்ற
கச்சியின்விகடசக்ரகணபதிக்கன்புசெய்வாம்.

சுப்பிரமணியர் காப்பு.

. மூவிருமுகங்கள்போற்றிமுகம்பொழிகருணைபோற்றி
யேவருந்துதிக்கநின்றவீராறுதோள்போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேண்மலரடிபோற்றியன்னான்
சேவலுமயிலும்போற்றிதிருக்கைவேல்போற்றிபோற்றி.

நூற்பயன்.

இந்திரராகிப்பார்மேலின்பமுற்றினிதுமேவிச்
சிந்தையினினைந்தமுற்றிச்சிவகதியதனிற்சேர்வ
ரந்தமிலவுணர்தங்களுடல்கெடமுனிந்தசெவ்வேற்
கந்தவேள்புராணந்தன்னைக்காதலித்தோதுவோரே.

வாழ்த்து.

ரு. வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன்
கோன்முறையரசுசெய்கக்குறைவிலாதுயிர்கள்வாழ்க
நான்மறையறங்களோங்கநற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

வுள் வாழ்த்து.

சிவபெருமான்.

௧. திருவந்ததொல்லைப்புவனத்தொடுதேவர்போற்றிப்
பெருவந்தனைசெய்தறிதற்கரும்பெற்றியெய்தி
யருவந்தனையுமுருவத்தையுமன்றிநின்றா
னொருவன்றனதுபதந்தன்னையுளத்துள்வைப்பாம்.

௨. ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாகியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

வேறு.

௩. பிறப்பதுமிறப்பதும்பெயருஞ்செய்கையு
மறப்பதுநினைப்பதும்வடிவம்யாவையுந்
துறப்பதுமின்மையும்பிறவுஞ்சூழ்கலாச்
சிறப்புடையரனடிசென்னிசேர்த்துவாம்.

பூமலர்மிசைவருபுனிதனாதியோர்
தாமுணர்வரியதோர்தலைமையெய்தியே
மாமறைமுதற்கொருவடிவமாகியோன்
காமருசெய்யபூங்கழல்கள்போற்றுவாம்.

௫. பங்கயன்முகுந்தனும்பரமென்றுன்னியே
தங்களிலிருவருஞ்சமர்செய்துற்றுழி
யங்கவர்வெருவரவங்கியாயெழு
புங்கவன்மலரடிபோற்றிசெய்குவாம்.

காண்பவன்முதலியதிறமுங்காட்டுவான்
மாண்புடையோனுமாய்வலிகொள்வான்றொடர்
பூண்பதின்றாய்நயம்புணர்க்கும்புங்கவன்
சேண்பொலிதிருநடச்செயலையேத்துவாம்.

சிவசத்தி.

௭. செறிதரு[illegible]யிர்தொறுந்திகழ்ந்துமன்னிய
மறுவறும[illegible]னிடமரபின்மேவியே
யறுவகைநெறிகளும்பிறவுமாக்கிய
விறைவிதன்மலரடியிறைஞ்சியேத்துவாம்.

விநாயகக்கடவுள்.

௮. மண்ணுலகத்தினிற்பிறவிமாசற
வெண்ணியபொருளெலாமெளிதின்முற்றுறக்
கண்ணுதலுடையதோர்களிற்றுமாமுகப்
பண்ணவன்மலரடிபணிந்துபோற்றுவாம்.

கடவுள்வாழ்த்து.

வைரவக்கடவுள்.

பரமனைமதித்திடாப்பங்கயாசன
னொருதலைகிள்ளியேயொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங்கொண்டுதண்டமுன்
புரிதருவடுகனைப்போற்றிசெய்குவாம்.

௧௦. வெஞ்சினப்பரியழன்மீதுபோர்த்திடு
மஞ்சனப்புகையெனவாலமாமெனச்
செஞ்சுடர்ப்படிவமேற்செறித்தமாமணிக்
கஞ்சுகக்கடவுள்பொற்கழல்களேத்துவாம்.

வீரபத்திரக்கடவுள்.

௧௧. அடைந்தவியுண்டிடுமமரர்யாவரு
முடைந்திடவெருவியேமுனிவர்வேதிய
ருடைந்திடமாமகமொடியத்தக்கனைத்
தடிந்திடுசேவகன்சரணம்போற்றுவாம்.

சுப்பிரமணியக்கடவுள்.

௧௨. இருப்பரங்குறைத்திடுமெஃகவேலுடைப்
பொருப்பரங்குணர்வுறப்புதல்விதன்மிசை
விருப்பரங்கமரிடைவிளங்கக்காட்டிய
திருப்பரங்குன்றமர்சேயைப்போற்றுவாம்.

௧௩. சூரலைவாயிடைத்தொலைத்துமார்புகீண்
டீரலைவாயிடுமெஃகமேந்தியே
வேரலைவாய்தருவெள்ளிவெற்பொரீஇச்
சீரலைவாய்வருசேயைப்போற்றுவாம.

௧௪. காவினன்குடியுறுகாமர்பொன்னகர்
மேவினன்குடிவரவிளியச்சூர்முதல்
பூவினன்குடிலையம்பொருட்குமாலுற
வாவினன்குடிவருமமலற்போற்றுவாம்.

௧௫. நீரகத்தேதனைநினையுமன்பினோர்
போகத்தலமரும்பிறவிநீத்திடுந்
தீரகத்துருவமாந்தலைமையெய்திய
வேரகத்தறுமுகனடிகளேத்துவாம்.

. ஒன்றுதொருடலையொருவியாவிமெய்
துன்றுதொருடலைத்தொடங்கியையகை
மன்றுதொருடியவள்ளல்காமுறக்
குன்றுதொருடியகுமரற்போற்றுவாம்.

கடவுள்வாழ்த்து.

கள. எழுமுதிரைப்புனத்திறைவிமுன்புதன்
கிழமுதிரிளநலங்கிடைப்பமுன்னவன்
மழமுதிர்களிறெனவருதல்வேண்டிய
பழமுதிர்சோலையம்பகவற்போற்றுவாம்.

கஅ. ஈறுசேர்பொழுதினுமிறுதியின்றியே
மாறிலாதிருந்திடும்வளங்கொள்காஞ்சியிற்
கூறுசீர்புனைதருகுமரகோட்டம்வா
ழாறுமாமுகப்பிரானடிகள்போற்றுவாம்.

திருநந்திதேவர்.

ககூ. ஐயிருபுராணநூலமலற்கோதியுஞ்
செய்யபன்மறைகளுந்தெரிந்துமாயையர்ன்
மெய்யறுருள்புகல்வியாதனீட்டிய
கையடுநந்திதன்கழல்கள்போற்றுவாம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

உ0. பண்டைவல்வினையினாற்பாயுடுத்துழல்
குண்டரைவென்றுமுன்கூடல்வைகியே
வெண்டிருநீற்றொளிவிளங்கச்செய்திடுந
தண்டமிழ்விரகன்மெய்த்தாள்கள்போற்றுவாம்.

திருநாவுக்கரசுநாயனார்.

உக. பொய்யுரைநூல்சிலபுகலுந்தீயமண்
கையர்கள்பிணித்துமுன்கடலகத்திடு
வெய்யகற்றோணியாய்மிதப்பமேற்படுந்
துய்யசொல்லரசர்தாடொழுதுபோற்றுவாம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

உஉ. வறந்திடுபொய்கைமுன்னிரம்பமற்றவ
ணுறைந்திடுமுதலைவந்துதிப்பவன்னதா
லிறந்திடுமகன்வளர்ந்தெய்தப்பாடலொன்
றறைந்திடுசுந்தரனடிகள்போற்றுவாம்.

மாணிக்கவாசகசுவாமிகள்.

உங. கந்தமொய்ப்பிரிபடுங்கணபங்கம்மெனச்
சிந்தைகொள்சாக்கியர்தியங்கமூகராய்
முந்தொருமூகையைமொழிவித்தெந்நிதபால்
வந்திடுமடிகளைவணக்கஞ்செய்குவாம்.

திருத்தொண்டர்கள்.

உச. அண்டருநான்முகத்தயனும்யாவருங்
கண்டிடவரியதோர்காட்சிக்கண்ணவா
யெண்டகுசிவனடியெய்திவாழ்திருத்
தொண்டர்தம்பதமலர்தொழுதுபோற்றுவாம்.

சரசுவதி.

உ௩. தாவறுமுலகெலாந்தந்தநான்முகத்
தேவுதன்றுணைவியாய்ச்செறிந்தபல்லுயிர்
நாவுதொறிருந்திடுநலங்கொள்வாணிதன்
பூவடிமுடிமிசைப்புனைந்துபோற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்.

புராணவரலாறு.

வடக்கின்கண்ணே திருவேங்கடமும் தெற்கின்கண்ணே குமரியும் கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் கடலும் எல்லையாகவுடைய தமிழ்நாட்டிலே, சான்றோருடைத்தெனச் சிறந்து விளங்காநின்ற தொண்டைமண்டலத்தின் கண்ணே காஞ்சீபுரமென ஒருதிருநகரமுண்டு. அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னுஞ் சத்தபுரிகளுள்ளும் காஞ்சீபுரமே சிறந்தது. அது காஞ்சி, திரிபுவனசாரம், காமபீடம், தபோமயம், திரிமூர்த்திவாசம், துண்டீரபுரம், இலயசித்து, பிரயபுரம், விண்டுபுரம், சிவபுரம், சகலசித்திகரம், கன்னிகாப்பு என்னும் பன்னிரண்டு * திருப்பெயர்களையுடையது.

அத்திருக்காஞ்சிநகரத்திலே சிவபெருமான் முதலியோர்க்கு அறுபத்தாறுயிரம் * ஆலயங்களுண்டு. அவற்றுள் நூற்றெட்டுச் சிறந்தன. அவற்றுள்ளும் சிவபெருமானுக்கு இருபது சிறந்தன. திருமாலுக்கு எட்டுச் சிறந்தன. சிவபெருமானுக்குரிய ஆலயங்கள் இருபதாவன திருவேகம்பம், கச்சபாலயம், திருக்காயாரோகணம், திருமேற்றளி, இந்திராலயம், பணாதரேசம், மணீசம், சதுர்முகசங்கரம், சுரகரேசம், பரசுராமேசம், உருத்திரர்கா, மாகாகாளேசம், வராகேசம், திருவோத்தூர், திருமாற்பேறு, அநேகபேசம், வேதநூபுரம், திருமயானம், கடம்பை, வீராட்டகாசம் என்பனவாம். திருமாலுக்குரிய ஆலயங்களெட்டாவன அத்திகிரி, வெஃகா, சந்திரகண்டம், நிராகாரம், அட்டபுயம், சகாளாங்கம், ஊரகம், பாடகம் என்பனவாம். அவ்விருபத்தெட்டினுள்ளும் திருவேகம்பம், கச்சபாலயம், திருக்காயாரோகணம் என்னுமூன்றுஞ் சிறந்தன. அவற்றினுள்ளும் திருவேகம்பஞ் சிறந்தது.

திருவேகம்பம் கம்பாநதியின்கரையருகே வேதவடிவாகிய மாவடியினுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் உயிர்கள்பொருட்டுச் செய்தருளும் அநாதிமுத்தபதியாகிய சிவபெருமான், தமது வாசகமாகிய வேதத்துக்கும் அதன்வாச்சியமாகிய தமக்கும் வேறுபாடில்லையென்பதை யாவரும் உணர்ந்துய்யும்வண்ணம், வேதவடிவாகிய அம்மாவினது மூலத்தின்கண்ணே, எந்நாளும் திருவேகம்பநாதரென்னும் திருப்பெயரோடு, சிவலிங்கமூர்த்தியாய் எழுந்தருளியிருப்பர்.

---

* இந்த இரண்டெண்களும் காஞ்சிப்புராணத்திற் கண்டபடி காட்டப்பட்டன.

திருவேகம்பநாதருடைய அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவி யார், உலகாணித்தீர்த்தக்கரையினருகே சிற்பரவியோமமாகிய பிலத்தின்கண்ணே, காமாக்ஷியென்னுந் திருப்பெயரோடு தவஞ்செய்துகொண்டிருக்கும் ஆலயம் காமக் கோட்டமெனப் பெயர்பெறும். அதற்கோர்பக்கத்திலே குமரகோட்டமெனப் பெயர்கொண்ட ஓராலயமுண்டு. அதிலே, சிவபெருமானுடைய இளைய திருக் குமாரராகிய சுப்பிரமணியக்கடவுள், தம்மை வழிபடும் அடியார்களுக்கு வேண் டிய வேண்டியவாறே போக மோக்ஷங்களைக் கொடுத்துக்கொண்டு, எழுந்தருளி யிருப்பர்.

இத்துணைச்சிறப்பினதாகிய திருக்காஞ்சிநகரத்தினுள்ள கச்சபாலயமென் னுஞ் சிவாலயத்தின்கண்ணே, பிரமதேவர் சிவபெருமானைப் பூசைசெய்து கொண்டு, தமது பத்தினியாகிய சரசுவதியோடும் அங்கிருந்தார். இருக்கு நாளிலே, சௌனகர் முதலிய முனிவர்களெல்லாரும் திருக்காஞ்சி நகரத்தை அடைந்து, பிரமதேவர் திருமுன் சென்று, அவரை வணங்கித் துதித்து, படைத் தற்றொழிற்கிறைவராகிய சுவாமீ, அடியேங்கள் இதுகாறும் கிருகத்தர்களாய் இல்லறத்தைச் செய்துகொண்டு இப்பூமியினுள்ள நகரங்களெங்குமிருந்தேம், இனி வானப்பிரத்தர்களாய்த் தவஞ்செய்ய விரும்புகின்றேம், அவ்வாறு தவஞ் செய்யும்பொருட்டு ஒரு தபோவனம் பணித்தருளும் என்று விண்ணப்பஞ்செய் தார்கள். அதுகேட்ட பிரமதேவர் ஒருதருப்பையை எடுத்துச் சக்கரமாக்கி நிலத் திலேயுருட்டி, இருடிகளை நோக்கி, முனிவர்களே, நீங்களெல்லீரும் இச்சக்கரத் தின்பின்னே செல்லுங்கள், இச்சக்கரந்தங்கும் வனமே உங்களுக்குத் தபோவன மாகக்கொள்ளுங்கள் என்றார். உடனே முனிவர்கள் பிரமதேவரை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, சென்றார்கள். சக்கரம் விரைந்து சென்று ஒருவனத் திலே தங்கிற்று. அதனால் அவ்வனம் நைமிசமெனப் பெயர்பெற்றது. முனிவர்க ளெல்லாரும் அவ்வனத்தின்கண்ணே தவஞ்செய்துகொண்டிருந்தார்கள். சிலகால மாயினபின், வேதவிதிப்படி சகச்சிரசமமென்னும் யாகஞ்செய்து, சித்தசுத்தி யடைந்து, மெய்யுணர்வுடையராயினார்கள்.

இவ்வாறிருக்கும்பொழுது, உண்மையறிவானந்தவடிவாகிய சிவபெருமானு டைய திருவடிக்கமலங்கண்மலரும் நெஞ்சத்தடத்தையுடையவரும், வியாசமுனி வருடைய மாணாக்கரும், விபூதி ருத்திராக்ஷமென்னுஞ் சிவசின்னங்களை விதிப் படி தரித்தவருமாகிய சூதமுனிவர் அங்கே சென்றார். அதுகண்ட முனிவர்கள் யாவரும் மிக்கவுவகையோடு விரைந்தெதிர்கொண்டு வணங்கி, தங்களாச்சிரமத் துக்கு அழைத்துக்கொண்டு சென்று, ஒருயர்ந்த ஆசனத்தின்மீதிருத்தி, அவரு டைய திருவடிகளை நறுமலர்கொண்டு விதிப்படி பூசித்து, நிலத்திலே எட்டுறுப் புந்தோய மும்முறை வணங்கியெழுந்து, அஞ்சலிசெய்துகொண்டு நின்றார்கள். சூதமுனிவர் நீவிரிருங்களென்று பணித்தருளியபின், இருந்தார்கள். இருந்து கொண்டு கருணாநிதியாகிய சுவாமீ, சிவபெருமானுடைய இளைய திருக்குமாரரும் கிருபாசமுத்திரமுமாகிய சுப்பிரமணியக்கடவுளுடைய சரித்திரத்தை அறிதல் வேண்டுமென்னும் பேராசையுடையேமாயினேம், அதனை அடியேங்களுக்கு அரு ளிச்செய்யும் என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அது கேட்ட சூதமுனிவர் அழ லிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருக, மெய்ம்மயிர் பொடிப்ப, ஆனந்த

வருவி சொரிய, சுப்பிரமணியக்கடவுளையும் தமதாசாரியராகிய வியாசமுனிவரை யுஞ் சிந்தித்துத் துதித்துக்கொண்டு, இவ்வாறு சொல்வாராயினார்:—

ஆதிகற்பத்திலே துவாபரயுகத்திலே, ஆன்மாக்கள் செய்த தீவினையினாலே வேதங்களெல்லாம் அடிதலை தடுமாறின. அதனாலே தேவர்களும் முனிவர்களும் மனிதர்களும் மதிமயங்கி, மெய்யுணர்வு சிறிதுமில்லாதவர்களாகி, வேதநெறியை விடுத்து, பல புறச்சமயங்களைக் கற்பித்துக்கொண்டு, அவற்றின்வழி ஒழுகுவா ராயினார்கள். விட்டுணுவும் பிரமாவும் அதுகண்டிரங்கி, சுவதந்திரராகிய சிவ பெருமானுடைய திருவருளாலன்றி இம்மயக்கம் நீங்குவதன்றென்று துணிந்து, இந்திரன் முதலிய தேவர்கள் சூழத் திருக்கைலாசமலையை அடைந்து, செம் பொற்றிருக்கோயிலின் முதற்கோபுரவாயிற்கண் எழுந்தருளியிருக்குஞ் சித்தாந்த சைவசமயாசாரியராகிய திருநந்திதேவரைத் தரிசித்து, எம்பெருமானுக்கு அடி யேங்களுடைய வரவை விண்ணப்பஞ்செய்தருளும் என்று பிரார்த்தித்தார்கள். திருநந்திதேவர் மகாதேவர் திருமுன் சென்று வணங்கி யெழுந்து, அஞ்சலிசெ ய்து நின்று, தேவர்களுடைய வரவை விண்ணப்பஞ்செய்தார். பரமேசுரன் தேவ ர்களை உள்ளே அழைத்துக்கொண்டு வரும்பொருட்டுப் பணித்தருள, திருநந்தி தேவர் வணங்கிக்கொண்டு புறத்தே சென்று, தேவர்களை அணுகி, ஓ தேவர்களே, எம்பெருமான் உங்களை உள்ளே வரும்பொருட்டுப் பணித்தருளினார், வாருங்கள் என்றார். உடனே விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும் தங்கள் கவலையை ஒழி த்து, புழுத்தநாயினுங் கடையேமாகிய எங்களையும் ஒரு பொருளாகக்கொண்டு எம்பெருமான் உள்ளே வரும்வண்ணம் பணித்தருளிய பெருங்கருணை இருந்தபடி என்னை என்னை என்று, ஆனந்தவருவி பொழிய மெய்ம்மயிர் சிலிர்ப்பக் குதூக லங்கொண்டு, திருநந்திதேவரோடும் எண்ணில்லாத வாயில்களைக் கடந்து, உள்ளே சென்று, பேரானந்தப் பெருங்கடலாகிய சிவபெருமானைத் தூரத்தே தரிசித்து, அடியற்ற மரம்போலப் பலகாலும் வீழ்ந்து வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து அஞ் சலிசெய்துகொண்டு திருமுன் சென்று, நறுமலர்களாலே பூசித்து, வணங்கித் துதித்துக்கொண்டு, தலைபணிந்து ஆடையொதுக்கி வாய்புதைத்து நின்றார்கள்.

அப்பொழுது சருவலோகைகநாயகராகிய சிவபெருமான் பெருங்கருணைகூர் ந்து, விட்டுணு முதலிய தேவர்களை நோக்கி, உங்களரசியல்களெல்லாம் ஒருகுறையு மின்றி நன்றாக நடக்கின்றனவா என்று வினவியருளினார். அதுகேட்ட விட்டுணு வணங்கி நின்று, விசுவாதிகரும் விசுவசேவியருமாகிய சுவாமீ, பிரமாவினுடைய படைத்தற்றொழிலும் அடியேனுடைய காத்தற்றொழிலும் இயமனுடைய அழித் தற்றொழிலும் மற்றைத் தேவர்களுடைய தொழில்களும் உம்முடைய திருவரு ளினாலே நன்றாக நடக்கின்றன; அது நிற்க, உலகத்துள்ள ஆன்மாக்கள் மெய்ந் நூலாகிய வேதத்தின் வாச்சியமாய் உள்ள நீரே பசுபதியென்பதைச் சிறிதுமுண ராது மதிமயங்கி, உலோகாயதம், ஆருகதம், பௌத்தம், மீமாஞ்சை, பாஞ்சராத் திரம், மாயாவாதம் என்னும் புறச்சமயங்களின்வழி ஒழுகுகின்றார்கள்; ஆதலால், அவர்கள் இம்மயக்கத்தினின்று நீங்கி நீரே பரம்பொருளெனத் துணிந்து உம் மையே வழிபட்டுய்யும்பொருட்டுச் சிறிது திருவருள்செய்தல்வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பரமகருணாநிதியாகிய சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, நீ உன்கலைகளுள் ஒன்றுகொண்டு பூமியின்

கண்ணே வியாதனென்னும் பெயரையுடைய இருடியாய்ப் பிறந்து, வேதங்களெல்லாவற்றையும் ஓதாதுணர்ந்து, அவற்றை நான்காக வகுத்து, நன்மாணுக்கர்களுக்கு உபதேசிக்கக்கடவாய்; வேதத்தை ஓதியுணர்ந்தும் மெய்ப்பொருட்டுணிவு பிறவாதவருக்கும் வேதத்துக்கு அருகரல்லாதவருக்கும் பயன்படும்பொருட்டுப் பதினெண்புராணங்களை நாம் முன்னே நந்திக்கு உபதேசித்தேம்; அவன் அவைகளைச் சனற்குமாரனுக்கு உபதேசித்தான்; நீ அவைகளை அச்சனற்குமாரனிடத்தே கேட்டறிந்துகொண்டு, அவைகளையும் உன் மாணுக்கர்களுக்கு உபதேசிக்கக் கடவாய் என்று திருவாய்மலர்ந்தருளினர். விட்டுணு அதற்கியைந்து, சிவபெருமானை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, பிரமா முதலிய தேவர்களோடுந் தமது வைகுண்டத்தை அடைந்து, அவர்களெல்லாரையுந் தங்கள் தங்கள் பதத்துக்குப் போம்வண்ணம் விடுத்து, தாம் அங்கெழுந்தருளியிருந்தார்.

அருட்கடலாகிய அவ்விட்டுணு தம்முடைய கலைகளுள் ஒருகலைகொண்டு, பூமியின்கண்ணே கங்கைக்கரையிலே பராசரமுனிவருக்குச் சத்தியவதியென்னும் பெயரையுடைய யோசனகந்தியிடத்தே திருவவதாரஞ் செய்தருளினர். அவர் வதரிகாவனத்தில் இருந்துகொண்டு வாதராயணரென்னும் பெயரைப் பெற்று, சிவபெருமானுடைய திருவருளினாலே வேதங்களெல்லாவற்றையும் ஓதாதுணர்ந்தார். தாமுணர்ந்த வேதங்களை நான்காக வகுத்து, உலகத்தார் உய்யும் வண்ணம் நிறுவியருளினர். அதனால், அவருக்கு வியாசரென்னுந் திருப்பெயர் உண்டாயிற்று. அவ்வியாசமுனிவர் சனற்குமாரமகாமுனிவரை வழிபட்டுப் பதினெண்புராணங்களையுங் கேட்டறிந்தார். அதன்பின் வரையறைப்படாத வேதத்தின் உண்மைப்பொருளைப் பரிபக்குவர்கள் உணரும்பொருட்டு வேதாந்தசூத்திரஞ் செய்தருளினர். அவர் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னு நான்குவேதங்களையும் முறையே பைலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்னு நான்குமாணுக்கர்களுக்கும் உபதேசித்தருளினர். வேதாந்தசூத்திரத்தையும் சைமினி முதலிய நால்வருக்கும் உபதேசித்தருளினர். பின்னர் அவர்களை நோக்கி, நீங்கள் இவ்வேதங்களை உங்களை வழிபடும் நன்மாணுக்கர்களெல்லாருக்கும் உபதேசிக்கக்கடவீர்களென்று பணித்தருள, அவர்களும் அவ்வாறே உபதேசித்தார்கள். அதன்பின் வியாசமுனிவர் பதினெண்புராணங்களையும் எனக்கு உபதேசித்து, அவைகளை உலகத்துள்ள யாவருக்கும் உணர்த்தும்பொருட்டுப் பணித்தருளினர். அவ்வாறே யானும் அவற்றை உபதேசித்தேன். இவ்வாறே வியாசமுனிவருடைய திருவருளினாலே நான்குவேதங்களும் வேதாந்தசூத்திரமும் பதினெண்புராணங்களும் உலகமெங்கும் பரந்தன.

பதினெண்புராணங்களாவன பிரமபுராணம், பதுமபுராணம், வைணவபுராணம், சைவபுராணம், பாகவதபுராணம், பவிடியபுராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேயபுராணம், ஆக்கினேயபுராணம், பிரமகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம், காந்தபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமாண்டபுராணம் என்பனவாம். இப்பதினெட்டும் நாலிலக்ஷத்தெண்ணுயிரங்கிரந்தமுடையன. இவற்றுள், சைவபுராணம், பவிடியபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்டபுராணம் என்

புராணவரலாறு.

லும் பத்துஞ் சிவபுராணங்கள். காருடபுராணம், நாரதீயபுராணம், வைணவபுராணம், பாகவதபுராணம் என்னு நான்கும் விட்டுணுபுராணங்கள். பிரமபுராணம், பதுமபுராணம் என்னு மிரண்டும் பிரமபுராணங்கள். ஆக்கினேயம் அக்கினி புராணம். பிரமகைவர்த்தம் சூரியபுராணம். சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம். வைணவபுராணநான்கும் தாமசங்களாம். பிரமபுராணமிரண்டும் இராசசங்களாம். அக்கினிபுராணமும் சூரியபுராணமும் திரிகுணயுத்தமாம். ஆதலால், சிவபுராணங்களே இப்பதினெட்டினுள்ளும் உயர்ந்தனவாம். அவற்றுள்ளும் காந்தம் மிகவுயர்ந்ததாய், சகல வேதாந்தங்களின் சாரத்தையும் உள்ளடக்கினதாய், ஐம்பது கண்டங்களாற் புனையப்பட்டதாய், ஓரிலக்கங்கிரந்தமுடைத்தாயிருக்கும். அது சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என ஆறுசங்கிதைபுடையது. அவற்றுள், சனற்குமாரசங்கிதை ஐம்பத்தையாயிரங்கிரந்தமும், சூதசங்கிதை ஆறாயிரங்கிரந்தமும், பிரமசங்கிதை மூவாயிரங்கிரந்தமும், விட்டுணுசங்கிதை ஐயாயிரங்கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதிணுயிரங்கிரந்தமும், சூரசங்கிதை ஆயிரங்கிரந்தமுமுடையன. முப்பதிணுயிரங் கிரந்தமுடைய சங்கரசங்கிதை பன்னிரண்டு கண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசியகண்டம். அது பதின்மூவாயிரங் கிரந்தமுடையதாய், உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என ஏழுகாண்டங்களையுடையதாயிருக்கும். உண்மையறிவானந்தவடிவாகிய சுப்பிரமணியக் கடவுளுடைய சரித்திரம் அடங்கிய இச்சிவரகசியகண்டத்தை இப்போது உங்களுக்குச் சொல்வேன், நீங்கள் சிரத்தையோடு கேளுங்கள்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

உற்பத்திகாண்டம்.

திருக்கைலாசப்படலம்.

அநாதிமலமுத்தராய், நித்தியராய், சர்வவியாபகராய், சர்வஞ்ஞராய், சர்வகர்த்தாவாய், நித்தியானந்தராய் உள்ள முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், சர்வான்மாக்களுக்கும் அருள்செய்யும்பொருட்டு, ஒரு திருமுகமும், அடியார்களது துயரத்தை ஒழிக்குந் திருப்புன்முறுவலும், சந்திரன் சூரியன் அக்கினி என்னும் முச்சுடர்களாகிய மூன்று திருக்கண்களும் கங்கையையும் பிறையையும் கொன்றைமாலையையுஞ் சூடிய சடாமுடியும், சங்கக்குண்டலத்தையும் தோட்டையும் அணிந்த திருச்செவிகளும், திருநீலகண்டமும், மான் மழு அபயம் வரதம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும், விபூதியினாலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத்திருமேனியும், வெள்ளைப்பூணூலையும் கற்பங்கடோறும் இறந்த எண்ணில்லாத பிரமவிட்டுணுக்களுடைய தலைகளாலும் என்புகளாலுந் தொடுக்கப்பட்ட மாலைகளையும் அணிந்த திருமார்பும், புலித்தோலை உடுத்து உடைவாளுடனே கச்சையுடைத்தாய் விளங்குந் திருவரையும், வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்கும் செந்தாமரைமலர்போலுந் திருவடிகளும் உடைய ஸ்ரீகண்டசரீரியாய், பலவிரத்தினங்களாலே புனையப்பட்ட வெள்ளிமயமாகிய நாலுவித சிகரங்களோடு கூடிய நிருமலமாகிய திருக்கைலாசமலையிலே, உயர்வொப்பில்லாத செம்பொற்றிருக்கோயிலிலே, எண்ணில்கோடி சூரியர்களது ஒளியைப்போலும் ஒளியையுடைய திவ்விய சிங்காசனத்தின்மேலே, தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியார் தமது இடப்பாகத்தின்மேவ, அளவிறந்த பெருங்கருணையோடும் எழுந்தருளியிருந்தார்.

அப்பொழுது பூதர்கள் நாலுவித வாத்தியங்களை முழக்கினார்கள், இருபுறத்தும் வெண்சாமரம் வீசினார்கள், ஆலவட்டம் அசைத்தார்கள். தும்புருநாரதர்களும் விஞ்சையர்களும் இசைபாடினார்கள். சனகாதர்கள் சிவபெருமானுடைய திருவருளை நினைந்து நினைந்து, என்புகளெல்லாம் அழலிடைப்பட்ட வெண்ணெய்போலக் கரைந்து நெக்குநெக்குருக, சரீரநடுங்க, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, மயிர்க்கால்தோறுந் திவலையுண்டாக, மதகினிற் புறப்படுஞ் சலம்போல ஆனந்தவருவி பொழிய, நாத்தழுதழுப்ப, உரைதடுமாற, கரையற்ற இன்பக்கடலின் அழுந்தி நின்றார்கள். முனிவர்கள் தங்கள் கைகள் சிரசின்மீதேறிக் குவிய, நினைப்பினும் ஓதினும் செவிமடுப்பினும் புத்தமிர்தத்தினும் தித்திக்கும் வேதசிரசுகளாகிய

உபநிடதங்களை எடுத்தோதினார்கள். தேவர்கள் பேரானந்தப்பெருங்கடலின் முழுகி, ஹரஹரமுழக்கஞ்செய்து, கைகொட்டி, ஆடிப் பாடினார்கள். பரமகிருபாளுவாகிய திருநந்திதேவர் தமது திருக்கரத்திற் பொற்பிரம்புகொண்டு, அடியார் கூட்டத்தை வரிசையின்முறை நிறுவி, சிவபெருமான்றிருமுன்னே இருபக்கத்தும் உலாவிக்கொண்டு, அவ்வகிலகாரணருடைய உயர்வொப்பில்லாத பெருங்கீர்த்தியைப் படித்தார்.

திருச்சிற்றம்பலம்.

பார்ப்பதிப்படலம்.

சிவபெருமான் இவ்வண்ணம் எழுந்தருளியிருக்கும்பொழுது, வாமபாகத்தின் எழுந்தருளியிருந்த உமாதேவியார் தமது திருவுளத்திலே ஒன்றை நினைந்து, விரைந்தெழுந்து, சிவபெருமானை வணங்கி நின்று, "எல்லாவறிவும் எல்லாத்தொழிலும் எல்லாமுதன்மையுமுடைய பரமபதியே, உம்மை இகழ்ந்த தக்கனிடத்தே அடியேன் சிலகாலம் வளர்ந்து, தாக்ஷாயிணியென்னும் பெயரைப் பெற்றேன். இனி இப்பெயரையும் அவனிடத்தே வளர்ந்த இச்சரீரத்தையும் தரித்தற்கு அஞ்சுகின்றேன், ஆதலின் இவைகளை நீக்குமாறு பணித்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார். சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, "நமது சத்தியே, நீ இவ்வண்ணம் முயலுதல் எண்ணில்லாத உன் புதல்வர்களாகிய ஆன்மாக்கள் முத்தியெய்தும்பொருட்டேயாம்; உன்கருத்து முற்றவேண்டுமாயிற் சொல்வேங்கேள்; இமையமலையரையன் உன்னைத் தன்மகளாக வளர்த்து நமக்கு விவாகஞ்செய்துதர விரும்பி, நம்மை நோக்கிக் கொடுந்தவஞ் செய்கின்றான். நீ ஒரு குழந்தைவடிவாய் அவனிடத்தே சென்று வளர்ந்து, ஐந்துவயசாயபின் நம்மை நோக்கித் தவஞ்செய்யக்கடவாய்; அப்பொழுது நாம் வந்து உன்னை விவாகஞ்செய்து அழைத்துக்கொண்டு வருவேம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே உமாதேவியார் திருவுளமகிழ்ந்து, சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு திருக்கைலாசமலையினின்று நீங்கி, இமையமலையையடைந்தார்.

இமையமலையின்மேலே மானசவாவியென்னும் பெயரையுடைய ஒருதடாகமுண்டு. அதிலே, மலையரையன், தான் உமாதேவியாரைத் தன்மகளாகப் பெறுதற்பொருட்டும், அவளைச் சிவபெருமானுக்கு விவாகஞ்செய்துகொடுத்தற்பொருட்டும், அருந்தவஞ் செய்துகொண்டிருந்தான். உலகமனைத்தையுங் கருப்பமெய்தாது பெற்றருளிய பெருங்கருணைப்பெருமாட்டியார் அம்மலையரையன் காணும் வண்ணம் அவ்வாவியிலுள்ள ஒரு தாமரைமலரின்மேலே குழந்தைவடிவாய் எழுந்தருளியிருந்தார். மலையரையன் அதுகண்டு, "உமாதேவி யடியேன்பொருட்டுச் சிவபெருமானை நீங்கினள்போலும், சிறியேன் செய்த தவத்துக்கிரங்கியருளிய எம்பெருமானுடைய பெருங்கருணை இருந்தபடி என்னே!" என்று பேரானந்தப்பெருங்கடலின்மூழ்கி, ஆனந்தவருவி பொழிய, மெய்ம்மயிர் பொடிப்ப, அடியேன் உய்ந்தேன் உய்ந்தேன் என்று, பாடியாடி, உமாதேவியாரை வணங்கி

நின்றான். பின்பு தாமரைமலர் மேலிருக்கும் உமாதேவியைத் தனது கையாலெடுத்து, சிரமேற்றாங்கிக்கொண்டு, விரைந்து சென்று, தன்வீட்டினுள்ளே புகுந்து, தன்மனைவியாகிய மேனை கையிற்கொடுத்தான். மேனை தொழுது வாங்கிக்கொண்டு, பெருமானே, இவள் உன்னிடத்து வந்ததெங்ஙனம் என்று வினவ, மலையரையன் நிகழ்ந்தனவெல்லாம் அவளுக்குச் சொன்னான். மேனை அது கேட்டு, சிவபெருமானது திருவருளைத் துதித்து, பெருமகிழ்ச்சியடைந்தாள். மேனைக்குத் தனங்களினின்றும் பால் சுரந்து பெருகிற்று, மெய்ம்மயிர் சிலிர்த்தது. உமாதேவியுடைய திருவருளே உள்ளமெங்கும் நிறைந்தது. மேனை உமாதேவியைத் திவ்வியாபரணங்களினாலே அலங்கரித்து, மெய்யன்போடு வளர்த்தாள்.

இவ்வாறே உமாதேவியார் இவரிடத்தே வளர்ந்து, ஐந்துவயசு சென்றபின், சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்யக் கருதி, மலையரையனை நோக்கி, "முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் என்னை விவாகஞ்செய்துகொள்ளும்பொருட்டு இம்மலையில் ஒருபக்கத்தே அவரை நோக்கித் தவஞ்செய்யக்கருதுகின்றேன், கன்னியரோடும் என்னை விடுக்கக்கடவாய்" என்றாள். மலையரையன் பார்ப்பதியம்மையாரை நோக்கி, "அம்மே, நீ நம்மினின்று நீங்கித் தவஞ்செய்தற்கு ஒத்த பருவம் இதுவன்று, உனக்கு ஐந்துவயசுமாத்திரமே சென்றன, இக்கருத்தை ஒழித்துவிடு" என்றான். பார்ப்பதியம்மையார் திருநகைசெய்து, "யாவரேயாயினும் சுதந்திரராகிய சிவபெருமானாலே காக்கப்படுவதன்றித் தம்மாலும் பிறராலுங் காக்கப்படுவதில்லை, இது துணிவு. தவஞ்செய்வேனென யான் பேசியதும் எம்பெருமானது திருவருளே; இனி மறுது விடைதரக்கடவாய்" என்றாள். மலையரையன் அதற்கியைந்து, அம்மலையினொருபக்கத்தே ஒரு தவச்சாலை செய்வித்து, தன் இளைஞராகிய கன்னியர் பலரோடும் பார்ப்பதியை அங்கே விடுத்தான். பார்ப்பதியம்மையார் அந்தத் தவச்சாலையை அடைந்து, கன்னியர் பலர் சூழ, சிவபெருமானைச் சிந்தித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தார். மலையரையனும் மேனையும் நாடோறுஞ் சென்று, உமாதேவியாரைக் கண்டுகொண்டு திரும்புவார்கள். அது நிற்க, இனி உமாதேவியைப் பிரிந்த சிவபெருமானுடைய செயலைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

மேருப்படலம்.

உயிர்களையெல்லாம் பெற்று அவைகளுக்குப் போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுத்தருளும் அருள்வடிவாகிய உமாதேவியார் இமையமலையின்மீது தவஞ்செய்துகொண்டிருக்கும்போது, சூரபன்மா, அசுரர்கள்சூழ, இப்பூமியின்கண்ணே அரசுசெய்துகொண்டிருந்தான். அப்போது, கல்லாலநிழலின்கண்ணே தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த சிவபெருமானிடத்தே வேதநூற்பொருளைப் பெற்ற சனகர், சனந்தனர், சநாதனர், சனற்குமாரர் என்னும் முனீந்திரர் நால்வரும் மாயையினாலே ஞானநிலை பெறாதவராகி, பின்னும் நெடுங்காலந் தவஞ்செய்து, திருக்கைலாசமலையை அடைந்து, முதற்கோபுரவாயிலில் எழுந்தருளி

யிருக்கும் சித்தாந்தசைவசிகாமணியாகிய திருநந்திதேவரை வணங்கி நின்றார்கள். உடனே திருநந்திதேவர் அம்முனீந்திரர்களைக் கருணையோடும் செம்பொற்றிருக்கோயிலினுள்ளே அழைத்துக்கொண்டு சென்றார். முனீந்திரர்கள் பிரமவிட்டுணுக்களுக்கும் வேதங்களுக்கும் எட்டாத ஞானநாயகரைத் தூரத்தே தரிசித்து, மொழி தடுமாற, மெய்ம்மயிர் பொடிப்ப, ஆனந்தக்கண்ணீர் பெருக, அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருக, இருகைகளையும் சிரமீது குவித்துக்கொண்டு திருமுன் சென்று, திருவடிகளைப் பலகாலும் நமஸ்கரித்து, எழுந்து, அஞ்சலிசெய்து நின்று, சிவபெருமானது நிரதிசயமாகிய ஐசுவரியத்தை உணர்த்தாநின்ற உபநிடதங்களாலே துதித்தார்கள். துதித்தபின்பு, "ஞானானந்தமயமாகிய முழுமுதற்கடவுளே, அடியேங்கள் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதியும் ஞானநிலைபெறுதேமாயினேம். அருட்கடலே, ஏகாத்துமவாதசுருதி முதலிய சுருதிகளாலே மதி மயங்குகின்றது; பெருங்கருணைகூர்ந்து, அம்மயக்கத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அடியார்க்கு எளியராகிய பரமகருணாநிதி அம்முனீந்திரர்கண்மீது திருநோக்கம் வைத்து, "அன்பர்களே, உங்கள் மதிமயக்கம் நீங்கும்வண்ணம் நாம் இரகசியமாகிய திவ்வியாகமத்தை உபதேசிப்போம், இருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். முனீந்திரர்கள் நால்வரும் பேருவகை பூத்து, எம்பெருமானுடைய திருவடிகளின்முன் இருந்தார்கள். சிவபெருமான் திருநந்திதேவரை நோக்கி, "மன்மதனன்றி மற்றைத்தேவர் யாவரேனும் உள்ளே விடுக்காதே" என்று பணித்தருள, திருநந்திதேவர் அத்திருவாக்கைச் சிரமேற்கொண்டு, சிவபெருமானைத் தொழுது, முதற்கோபுரவாயிலை அடைந்து, காவல்செய்துகொண்டிருந்தார்.

கிருபாமூர்த்தியாகிய சிவபெருமான் தமது சந்நிதியில் இருக்கின்ற சனகர் முதலிய முனீந்திரர்கள் நால்வரும் தொழுது கேட்ப, திவ்வியாகமங்களிலே சொல்லப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குபாதங்களுள்ளும் சரியை முதலிய முதன்மூன்றுபாதத்தையும் உபதேசித்தருளினார். அது கேட்ட முனீந்திரர்கள், "கருணைக்கடலே, இனி ஞானபாதத்தையும் உபதேசித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சிவபெருமான் திருநகைசெய்து, "ஞானபாதம் ஏனையனபோல வாயினாற் சொல்லற்பாலதன்று; அது இப்படியிருத்தலேயாம்" என்று திருவாய்மலர்ந்து, அந்நெறியினை அவர்களுக்கு உணர்த்தும்பொருட்டு, தமது திருமார்பின்கண்ணே ஒரு திருக்கரத்தைச் சேர்த்தி, மௌனமுத்திரை காட்டி, ஒருகணம் ஒருசெயலுமின்றி யோகஞ்செய்வார்போல் எழுந்தருளியிருந்தார். அது கண்ட முனீந்திரர்கள் தங்கள் தங்கள் உள்ளம் ஒடுங்கப்பெற்று, சிவஞானத்தை அடைந்து, சித்திரப்பாவைபோல் அசைவற்றிருந்தார்கள்.

சிவபெருமான் இவ்வண்ணம் எழுந்தருளியிருக்கும் கணமொன்றினுள்ளே பிரமா விட்டுணு முதலிய தேவர்களுக்கெல்லாம் பற்பல யுகங்கள்சென்றன. ஆடவரையும் மகளிரையும் காமப்பற்றை விளைத்துப் புணர்த்தற்கு மன்மதன் நிற்பவும், சிவபெருமான் போகவடிவமன்றி யோகவடிவங்கொண்டு வீற்றிருத்தலால், திருமால் முதலிய தேவர்களும் மனிதர்களும் மற்றைச்சீவர்களும் காமப்

பற்றும் புணர்ச்சியும் இல்லாது வருத்தமுற்றார்கள். அதனாலே கரு மல்குத லின்றி, உயிர்களெல்லாம் நாடோறுங் குறைந்தன. இதனாலே, அகிலகாரணர் சிவ பெருமானே என்பது தெள்ளிதிற் றுணியப்படும்.

இவ்வாறே சிவபெருமான் யோகத்திருக்கும்பொழுது, சூரபன்மன் தீங்கு செய்தமையால் இந்திரன் தன்மனைவியாகிய இந்திராணியோடும் தேவர்களோடும் சுவர்க்கத்தை விட்டுப் பூமியில் வந்தான். திருக்கைலாயமலையை அடைந்தும் சிவ பெருமானைத் தரிசிக்கப்பெறாமையால் சோகத்தோடு மீண்டு, மகாமேருமலையை அடைந்து, சூரனுடைய குமாரனாகிய பானுகோபன் சுவர்க்கத்தை எரித்துத் தன்குமாரனாகிய சயந்தனையும் தேவர்களையுஞ் சிறைசெய்தமையை அறிந்தான். அம்மேருமலையிலே சிவபெருமானைச் சிந்தித்து நெடுங்காலந் தவஞ்செய்தான். சிவபெருமான் இடபமேற்கொண்டு, இந்திரனுக்குத் தோன்றியருளினார். அது கண்ட இந்திரன் வணங்கித் துதிக்க, முற்றறிவையுடைய சிவபெருமான் இந் திரனை நோக்கி, "நீ நெடுங்காலங் கொடுந்தவஞ்செய்து வருந்தினாய், உனக்கு வேண்டும் வரம் யாது?" என்று அறியாதார்போலக் கேட்டருளினார். இந்திரன் வணங்கி நின்று, "பரமகருணாகரரே, தீயோனாகிய சூரன் அடியேங்களையெல்லாம் துயரப்படுத்தி, சுவர்க்கத்தை எரித்துவிட்டு, அடியேனுடைய குமாரனாகிய சயந் தனையும் தேவர்களையுஞ் சிறைப்படுத்தினான், அச்சூரனைக் கொன்று அடியேங் களைக் காத்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். சிவபெருமான் இந்திரனை நோக்கி, "யஞ்ஞத்துக்கு ஈசுரனாகிய நம்மை இகழ்ந்து தக்கன் செய்த வேள்வியின் இருந்த பெருங்கொடும் பாவத்தினாலே நீங்கள் இப்படித் துயருறுகின்றீர்கள்; இனி நம்மிடத்தே ஒருகுமாரன் பிறந்து சூரனைக் கொன்று உங்களைக் காப்பான்" என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினார்.

சிவபெருமான் மறைந்தருளலும், இந்திரன் கவற்சிகொண்டு, "எம்பெரு மான் சனகர் முதலிய முனீந்திரர்கள்பொருட்டுத் திருக்கைலாசத்திலே யோகத் தெழுந்தருளியிருக்கின்றார், உமாதேவியார் இமையமலையிலே தவஞ்செய்துகொ ண்டிருக்கின்றார்; இங்ஙனமாக இவர்களுக்குப் புதல்வன் உதிப்பது எங்ஙனம்?" என்று நினைந்து, சோகத்தோடும் மனோவதியென்னும் நகரத்தை அடைந்து, அங்கிருந்த தன்குருவாகிய வியாழனுடைய மனைவியிடத்தே இந்திராணியை இருத்திவிட்டு, தேவர்களோடும் பிரமதேவருடைய கோயிலிற் சென்றான். அங்கே, சிவபெருமான் யோகத்திருத்தலினாலே தன் படைத்தற்றொழில் நிக ழாமைபற்றிக் கவற்சிகொண்டிருக்கும் பிரமதேவரைக் கண்டு, வணங்கி, அஞ் சலிசெய்து நின்றான். பிரமதேவர் இந்திரனை நோக்கி, "நீ இங்கு வந்ததென்னை?" என்று வினவ, இந்திரன் சூரன் செய்யுந் துன்பத்தையும், சிவபெருமான் யோகத் திருத்தலையும், தன்னுடைய தவத்தைக் கண்டு சிவபெருமான் அருளிச்செய்த மையையும் பிரமதேவருக்குச் சொன்னான்.

பிரமதேவர் இந்திரனை நோக்கி, இவ்வாறு சொல்வாராயினர்: எவ்வுயிர்க் கும் மேலாகிய சிவபெருமான் கருணைக்குன்றயுளும் தம்மை வழிபடும் மெய்யடி யார்க்கு அருள்செய்வோரும் முறைசெய்வோருமாகலின், எம்மை ஆண்டருளும் பொருட்டுத் திருக்கைலாசமலையின்கண்ணே யோகியர்போல வீற்றிருந்தருளினார்.

விட்டுணுவாலும் என்னாலும் தேடியறியப்படாது நின்ற விசுவாதிகராகிய அவரு க்கு உயர்வும் இல்லை ஒப்பும் இல்லை: அவ்வியல்புடைய முழுமுதற்கடவுள் முனி வர்கள்பொருட்டு யோகவடிவங்கொண்டிருத்தல் நம்முடைய குறைகளனைத்தையும் ஒழிக்குந் திருவருளேயன்றி, வேறன்று. சிவபெருமான் சருவான்மாக்களையுஞ் சங்கரித்தல் பிறப்பிறப்புக்களினாலும் சுவர்க்கநரகத்திற்குச் செல்லுதல் மீளுதல் களினாலும் அவைகளுக்கு உளதாய இளைப்பை நீக்குங்கருணையன்றோ; அது போலவே நமக்குச் சூரனைக்கொண்டு துன்பஞ்செய்வித்தலும் நாஞ்செய்த தீவி னைப்பயன்களை ஊட்டித் தொலைத்து நமக்கு முத்தியைத் தரும் பெருங்கருணையே, தாய் தந்தையர் தாம் பெற்ற புதல்வர்களுக்கு யாதானுமோர் நோயுற்றவழிப் பிற ரைக்கொண்டும் அறுத்தல் கீறுதல் முதலிய துயரங்களைச் செய்வித்தும் தீர்ப்பா ர்களன்றோ. அது அப்புதல்வர்கண்மீது வைத்த அன்பன்றி வன்கண்மையன்றே. அதுபோலவே, சிவபெருமானும் நம்முடைய தீவினைகளைத் தீர்க்கும்பொருட்டே இவ்வண்ணஞ் செய்விக்கின்றார். நாஞ்செய்த தீவினைகளெல்லாம் நீங்குங்காலம் அணுகியதுபோலும். ஆதலாற்றானே, எம்பெருமான் பெருங்கருணையோடும் உன க்குத் தோன்றி இவ்வண்ணந் திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். இனி நாமெல் லாம் துன்பக்கடலினின்றும் கரையேறினம்போலும். சிவபெருமான் இனி நமக் கருள்செய்வார். அதற்கு நாமும் முயலுமாறு சிறிதுண்டு. நாம் இதனை விட்டு ணுவுக்குச் சொல்லி, இதற்கு வேண்டுஞ்செய்கையை விரைந்து செய்தல்வேண் டும் என்றார்.

பிரமதேவர் இப்படிச் சொல்லி, இருக்கைவிட்டெழுந்து, இந்திரன் முதலிய தேவர்கள் சூழச் சென்று, வைகுண்டத்தை அடைந்து, விட்டுணுவை வணங்கி நின்றார். விட்டுணு கருணைசெய்து, தம்புதல்வராகிய பிரமதேவருக்கு ஆசனங் கொடுத்து, அவரை நோக்கி, "உன்னுடைய படைத்தற்றொழில் இடையூறின்றி நடக்கின்றதா" என்று வினாவினார். பிரமதேவர் விட்டுணுவை நோக்கிச் சொல்ல லுற்றார்: சுவாமீ, இதனைக் கேட்க, முன்னாளிலே சனகன், சனந்தனன், சனாத னன், சனற்குமாரன் என்னும் முனிவர் நால்வரும் என்கருத்திலே தோன்றினார் கள். நான் அவர்களை நோக்கி, நான் செய்யும் இப்படைத்தற்றொழிலை நீங்கள் செய்துகொண்டு இங்கிருங்கள் என்றேன். அதற்கு அவர்கள் நகைசெய்து, பாச மாகிய சிறையிற்பட்டுப் படைத்தற்றொழிலாகிய விலங்கை நாங்கள் பூணேம், நாங்கள் ஞானானந்தமயராகிய சிவபெருமானுடைய திருவடிகளை அடைவேம் என்று சொல்லிக்கொண்டு விரைந்து சென்று, சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தார்கள். சிவபெருமான் அவர்களுக்குத் தோன்றி, உங்களுக்கு வேண்டியது யாது என்று வினாவியருள, அவர்கள் சிவபெருமானை வணங்கி, அடியேங்களுக்கு வேதப்பொருளை உபதேசித்தருளுக என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சிவபெரு மான் சருணைகூர்ந்து, திருக்கைலாசமலையின்மீது தென்சிகரத்தினிற்கும் கல்லால நிழலின்கண்ணே தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து, அம்முனிவர்கள் நால்வருக்கும் வேதப்பொருளை உபதேசித்து, மறைந்தருளினார். முனிவர்கள் நால்வரும் பூமியிலே போய், ஞானம் நிலைபெறாமையால் வருத்தமுற்று, பின்னுந் தவஞ்செய்து சிவபெருமானுடைய திருவருளினாலே திருக்கைலாசமலையை அடை ந்தார்கள். சிவபெருமான் அவர்களுடைய மலபரிபாகத்தைக் கண்டு, திவ்வியாக மங்களால் உணர்த்தப்படும் நான்குபாதங்களுள்ளும் சரியை முதலிய மூன்

மூன்றுபாதத்தையும் உபதேசித்து, ஞானம் அவ்வண்ணஞ் சொல்லற்பாலதல்லா மையால் அவர்கள் காணும்பொருட்டு மௌனமுத்திரை காட்டி எழுந்தருளினார். அப்பொழுது முனிவர்கள் தங்கள் மனம் ஒடுங்கி, மும்மலமுநீங்கி, சிவானந்தபரவசர்களாய்ச் செயலற்றிருந்தார்கள். இவ்வாறு சிவபெருமான் யோகத்திருக்கும் கணமொன்றினுள்ளே பற்பலயுகங்கள் சென்றன. சிவபெருமான் உமாதேவியாரைப் பிரிந்து யோகத்திருத்தலால், ஆண்பெண் முயக்கம் இன்றாயிற்று. ஆகவே, என்படைத்தற்றொழில் தவறியது. இது நிற்க, சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தினாலே எண்ணில்லாத போகங்களைப் புசிக்குஞ் சூரபன்மனானவன் நம்மையெல்லாம் வருத்துகின்றானே, இவ்விந்திரனுடைய குமாரனாகிய சயந்தனையும் தேவர்களையுஞ் சிறைப்படுத்தினான். இவ்வண்ணம் நமக்கெல்லாம் நாடோறும் பெருந்துயரம் விளையவும், சிவபெருமான் அறியாதார்போல எழுந்தருளியிருக்கின்றார். இதற்கு யாது செய்யலாம்! சொல்லுக என்றார்.

பிரமதேவர் இவ்வாறு சொல்லக்கேட்ட விட்டுணு அவரை நோக்கிச் சொல்லுகின்றார்: சர்வான்மாக்களிடத்தும் நிறைந்து சகலத்திற்குங் காரணராய் உள்ள மகாதேவர் யோகவடிவங்கொண்டு எழுந்தருளியிருப்பாராயின், காமப்பற்றுடையராய் முன்போலிருக்கும் இயல்புடையார் யாவர்! சிவபெருமான், நாமெல்லாம் தம்மை இகழ்ந்த தக்கனுடைய யாகத்திருந்த அதிபாதகத்தை ஊட்டித் தொலைத்து, அதன்பின்பு முன்னைவாழ்வை நமக்கருளிச்செய்யும்பொருட்டுத் திருவுளங் கொண்டருளினார். சூரபன்மனுக்கு வரங்கொடுத்தமையும், தேவர்கள் யாவரும் தம்மைச் சாராவண்ணம் முனிவர்கள்பொருட்டு யோகத்திருந்து உயிர்களுக்குத் துன்பஞ் செய்தலும், நுண்ணுணர்வால் ஆராயுமிடத்து, எம்மாட்டுளதாகிய பொருளேயன்றிப் பிறிதொன்றன்று. சிவபெருமான் மௌனத்தை நீங்கி மலையரையன் புதல்வியாகிய உமாதேவியைத் திருக்கல்யாணஞ் செய்தருளுவராயின், பிரமனே, படைத்தற்றொழில் கைகூடும். இனி ஒருகுமாரர் திருவவதாரஞ் செய்வாராயின், சூரன் முதலிய அசுரர்களெல்லாம் நாசமடைவர்கள், உலகமெல்லாம் முன்போல உய்யும். இது நிறைவேறும்பொருட்டு ஒன்று சொல்வேன், கேள். எல்லாருக்குங் காமப்பற்றை விளைவிக்கும் மன்மதனை விடுப்பாயாயின், சிவபெருமான் மௌனநீங்கி, உமாதேவியாரைத் திருககல்யாணஞ்செய்து, ஒரு குமாரரைத் த்ந்தருளுவர் என்றார். பிரமதேவர் அது கேட்டு, மனமகிழ்ந்து, "அவ்வாறு செய்வேன்" என்று சொல்லி, இருக்கைவிட்டெழுந்து, விடைபெற்றுக்கொண்டு, இந்திரன் முதலிய தேவர்களோடு சென்று, மனோவதி நகரத்தை அடைந்து, தமது கோயிலின் வீற்றிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

காமதகனப்படலம்.

பிரமதேவர் மன்மதன் வரும்பொருட்டு நினைந்தார். நினைந்தவுடனே மன்மதன் விரைந்து வந்து, பிரமதேவரை வணங்கி, அஞ்சலிசெய்து நின்று, "சுவாமீ, நீர் அடியேனை மனசிலே நினைந்தது என்னை" என்று வினாவினான்.

பிரமதேவர் மன்மதனை நோக்கி, "நீ எங்கள்பொருட்டுத் திருக்கைலாசமலையிற் சென்று, சிவபெருமான் மௌனநீங்கி உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்யும்பொருட்டு அவர்மீது உன் பாணங்களைத் தொடுப்பாயாக" என்றார். அது கேட்டவுடனே, மன்மதன் தன்னிரண்டு காதுகளையும் விரைவிலே பொத்தி, வருத்தமுற்று, "சிவசிவ" என்று சொல்லி, "ஐயையோ! பெருங்கொடும்பாவத்தை விளைவிக்கும் இவ்வசனத்தைக்கேட்டேனே" என்று கிலேசமுற்று, பிரமதேவரை நோக்கி, இவ்வாறு சொல்வானாயினான்: "வன்கண்ணரும் அறிவுடையோரிடத்துச் சென்றால், அவ்வறிவுடையோர் அவருக்கு உய்யுநெறியைப் போதிப்பர். நான் உம்மிடத்து வர, நீர் எனக்கு இக்கடுஞ்சொல்லைச் சொன்னீர். என்னிடத்தே உமக்குச் சிறிதும் அருளில்லையா! நான் என் கருப்புவில்லையும் புட்பபாணத்தையுங்கொண்டு, பூமிதேவியையும் இலக்குமியையும் புணரும்வண்ணம் என்பிதாவாகிய விட்டுணுவை வென்றிலனோ? நீர் சரசுவதியைப் புணரும்படிக்கும் உம்மாலே படைக்கப்பட்ட திலோத்தமை மீது இச்சைகொண்டு உள்ளப்புணர்ச்சி செய்யும்படிக்கும் உம்மை நான் மயக்கிக் கீர்த்திபெற்றிலனோ? இலக்குமியை விட்டுணுவுடைய மார்பில் வைத்திலனோ? சரசுவதியை உம்முடைய நாவில் இருத்திலனோ? இந்திரன் இந்திராணியைப்புணரவும், அகலியையினாலே அவனுடைய உடம்பெங்கும் ஆயிரம் யோனிகள் உண்டாகவும் செய்திலனோ? முன்னொருநாள் சூரியனும் இந்திரனும் பெண்வடிவங்கொண்ட பாகனாகிய அருணனைப் புணர்ந்து வசையுறும் வண்ணம் மயக்கிலனோ? இருபத்தேழு நக்ஷத்திரங்களைப் புணருஞ் சந்திரன் தன் குருவாகிய வியாழனுடைய மனைவியாகிய தாரையைப் புணர்ந்து புதனைப் பெறும்வண்ணம் செய்திலனோ? வேதங்கள் யாவையும் நன்குணர்ந்த தேவர்களெல்லாரையும் மகளிருடைய குற்றேவல்களைச் செய்யும்வண்ணம் மயக்கிலனோ? வசிட்டர், மரீசி, அகத்தியர், அத்திரி, கௌதமர், காசிபர் முதலிய துறவிகளுடைய வலிமையைக் கெடுத்திலனோ? மனிதர்களுள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்குவருணத்தாரையும் அனுலோமர் அறுவரையும் பிரதிலோமர் அறுவரையும் கோளகர், குண்டகர், கானீனர் என்னும் புறக்குடிகள் மூவரையும் பெண்மயலில் வீழ்த்திலனோ? என்னுணையைக் கடந்தவர் யாவருளர்? இங்கே சொன்னவைகளெல்லாம் பரதந்திரனாகிய என்னால், முடியுமா! சுவதந்திரராகிய சிவபெருமானுடைய சத்தியே என்னை ஏவிநின்று செய்யும். என்பாணங்களினாலே விட்டுணு முதலிய பசுக்களை வெல்வதன்றி, பரமபதியாகிய சிவபெருமானை வெல்லுதல் கூடுமோ? சிவபெருமானை வழிபட்டு அவரால் அருளப்பட்ட அதிகாரத்தைப் பெற்றவரைப்போல அச்சிவபெருமானையும் எண்ணிப்பேசினீரே! சோதிவடிவாயுள்ள சிவபெருமான்மீது நான் பாணங்களைத் தொடுக்கினும் செல்லுமா? திருக்கரமும் திருநகையும் திருக்கண்ணும் திருமேனியும் அக்கினியாக உள்ள சிவபெருமானை நான் எய்யும்படி செல்வேனாயின், இவ்வுயிர்கொண்டு உய்யுந்திறம் உண்டோ? சொல்லும் சொல்லும். விருப்பு வெறுப்பில்லாத பரம்பொருளை மயக்குவது எப்படி? ஐயையோ சிவபெருமானையும் பிறர்போல நினைந்தீரே! அவருடைய பேராற்றலைத்தொலைத்தல் யாவராலாயினுங்கூடுமோ? பேசும் பேசும். சூறைக்காற்று அடிக்கும் இடத்தே ஒரு சிறுபூளை எதிர்க்குமாயின், சிவபெருமான் திருமுன்னே சிறியேன் போர் செய்யப் புகுவேன். சிவபெருமானோடும் எதிர்ந்தவர்களுள் வலிதொலைந்து தீய

ருற்றவரும் இறந்தவருமன்றி உய்ந்தவர் யாவர்? இவ்விட்டுணு முதலியோர் யாவரும் முன்னாளிலே பாணமாதல் முதலிய தத்தம் பணிகளைச் செய்யும்பொழுது, அவர்கள் கருத்தை அறிந்து சிவபெருமான் தமது திருநகையினாலே முப்புரங்களையும் எரித்தமையை அறியீரா? தம்மை வழிபடும் மார்க்கண்டேயரை வைது கொண்டு பெருங்கோபத்தோடு எதிர்ந்த இயமனை எம்பெருமான் தமது திருவடியினால் உதைத்தமையை அறியீரா? முன்னாளிலே நீரும் விட்டுணுவும் 'யானே பரம்பொருள்' 'யானே பரம்பொருள்' என்று வாதிக்கும்பொழுது, எம்பெருமான் எழுந்தருளிவந்து, தம்மை இகழ்ந்த உம்முடைய உச்சிச்சிரசைக் கொய்தமையை மறந்தீரா? சலந்தரன் முதலிய அசுரர்கள் பலர் எம்பெருமானோடு எதிர்ந்து இறந்தொழிந்தமையைக் கேட்டிலீரா? உம்முடைய குமாரனாகிய தக்கனுடைய யாகத்திருந்தவர் யாவரும் எம்பெருமானால் விடுத்தருளப்பட்ட வீரபத்திரக்கடவுளினாலே மானமிழந்து வலிதொலைந்து இறந்தமையைப் பார்த்திலீரா? திருப்பாற்கடலினின்றுந் தோன்றி விட்டுணுவும் அஞ்சி ஓட்டெடுக்கும் வண்ணம் துரந்த ஆலாகலவிஷத்தை உண்டருளினாரே! உமாதேவியுடைய திருக்கை விரலிற்றோன்றி உலகெங்கும் பரந்த கங்கையை ஓரணுவைப்போலச் சடையிற் கொண்டருளினாரே! தம்மை இகழ்ந்த கரசிங்கத்தையும் யானையையும் புலியையும் உரித்து அவற்றின் தோல்களைப் போர்வையும் உடையுமாகக் கொண்டருளினமையைப் பார்த்திலீரா? தமது பெருமையை ஆராயாது யாவராயினும் அகந்தைகொள்வராயின், உடனே அவருடைய வலிமையைத் தொலைத்தல் சிவபெருமான் செயலென்பது அறியீரா? கடைநாளிலே உலகங்களெல்லாம் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றும் ஒரு பொறியினாலே பொடிபடுமென்பது, ஐயையோ, உமக்கு விளங்காதா? இத்தன்மைத்தாகிய முடிவிலாற்றலையுடைய சிவபெருமானை நான் என்கருப்புவில்லையும் புட்ப பாணத்தையுங் கொண்டு பொரச் சிறிதுந் துணியேன். தம்முயிர்மீது விருப்பில்லாதவரே இது செய்யத் துணிவர். ஆதிகாலத்தில் உலகத்தைப் படைக்கும்பொருட்டுத் தம்மோடு பிரிவில்லாத அருட்சத்தியையே தமக்கு மனைவியெனத் தாமாக இருத்தியருளிய பெருங்கருணைப் பெருமானை நானா மயல்செய்வது! இது நன்று நன்று" என்றான்.

மன்மதன் இவ்வாறு கூறி மறுக்கவும், பிரமதேவர் மனக்கவலைகொண்டு, சிறிதுபொழுது ஆலோசித்து, பெருமூச்செறிந்து, மன்மதனைநோக்கிச் சொல்வாராயினார்: "நீ சிவபெருமானுடைய பெருமையை எடுத்துப் பேசினாய். இது சத்தியமே. சிவபெருமானைப் பொருதல் எளிதா, யாவருக்கும் அரிதன்றோ! ஆயினும், தம்மை அடைந்தோரது துயரத்தை ஒழித்தருளும் எம்பெருமானுடைய திருவருளினால் இக்கருமம் உன்னாலே முடியும். பிறரான் முடியுமா, முடியாது. எல்லார்செயலும் இறைவன்செயலேயன்றிப் பிறிதன்று. அவருடைய திருவருளையின்றி ஓரணுவும் அசையாது, யாவும் நில்லா. நீ இப்பொழுது அவரிடத்தே செல்லக்கடவாய்; உன்செயலும் அவர்செயலே. இறுமாந்து தம்மைப் புகழும் தேவர்கள் யாவரும் மறுகும்வண்ணம் எம்பெருமான் ஓரியக்கவடிவங்கொண்டு வந்திருந்து ஒருதுரும்பை நிறுவி அலைந்தும் தஞ்செய்கையெனக் காட்டியருளினாரே. நம்மாலும் சிலமுற்றுமென்றல் நாணன்றோ? உயிர்ப்பொருளும் உயிரில் பொருளுமாகிய யாவும் பாவைபோலும், அவற்றை ஆட்டுவிப்பவர் சிவபெரு

ரானே. ஆராயுங்கால், நம்மால் ஒன்று ஆகுமா! மன்மதனே, இதனை நீ இந்நாள் காறும் அறிந்திலையா! நீ விரைந்து அவரைப் பொரும்வண்ணம் செல்லக்கடவாய்; அதுவும் அவரருளே. இன்னும் சொல்வேன் கேள். துன்பமனுபவிப்போர் யாவராயினும் தமக்கு உதவிசெய்யும்பொருட்டு இரந்தாராயின், ஒருவன் அது செய்யாது மறுத்துத் தன்னுயிரைத் தாங்குதல் உலகநடைக்குத் தக்கதா? ஒருவன் பிறருக்கு யாதாயினுமோருதவியைச் செய்யவல்லனாயின், தானே செய்தல் உத்தமம், அவர் சொல்லியபின் செய்தல் மத்திமம், சொல்லியபின்பும் பலநாண் மறுத்துப் பின் செய்தல் அதமம். யாவராயினும் துன்பமுழந்து வருந்துவராயின், அதனை நீக்குதற்பொருட்டுத் தம்முயிரை விடினும், அது தருமமே. மறுத்தாராயின், பாவமும் பழியும் நீங்காவாம். ஒருவன் தானுய்தலே பொருளாகக் கொண்டு பிறருக்கு உதவிசெய்யாதொழிவனாயின், அவன் சிறியோனே; அவன் கழித்த நாள் நன்னாளாகுமா? அவன்வாழ்க்கை பொய்கையின் மலர்ந்த கொட்டி போலும். விட்டுணுவைப் பொருது வென்ற ததீசிமுனிவர் விருத்திரனைக் கொல்லும்பொருட்டு இந்திரன் வந்திரப்பத் தம்முதுகெலும்பைக் கொடுத்து உயிர் விட்டமையை நீ கேட்டிலையா? எம்பெருமான் திருப்பாற்கடலினின்றுந் தோன்றிய ஆலாகலவிஷத்தை உண்டு தேவர்களுக்கு அமிர்தமருளிச் செய்தமையை நீ சிறிதும் அறிந்திலையா? அவ்வாலாகலம் தாக்கும்பொழுது 'வருந்தாதொழியுங்கள்' என்று சொல்லி, விட்டுணு ஒருகணமாயினும் ஊக்கத்தோடு எதிர்ந்து நின்று நம்மைக் காக்கும்பொருட்டுத் தாம் கறுத்தமையை நீ கண்டிலையா? யாராயினுமொருவர் பிறர்மீது அன்புகூர்ந்து அவருக்கு உதவிசெய்ய விரும்புவராயின், அதனாலே தமக்கு வரும் பெருங்கொடுந்துன்பத்தையேனும் மரணத்தையேனும் பாரார்; புகழொன்றே பயனாகக் கொள்வர். யாவரினும் வலிய சூரபன்மனுடைய ஏவலினாலே நாமெல்லாம் துன்பமுற்று வருந்துகின்றோம். இனி அது நீங்கும்படி சிவபெருமான் ஒருதிருக்குமாரரைத் தரும்வண்ணம் பஞ்சபாணங்களைச் செலுத்தும்பொருட்டு உன்னை நாம் வேண்டுகின்றோம். ஆதலால், நமது துன்பத்தை ஒழிக்கும்பொருட்டு உனக்கு மரணம் வரினும் அதைத் தவறாகக் கொள்ளாதே. புகழைத் தேடுவோர் யாது வரினும் எதிர்செல்வர். இனி மறுத்துப் பேசாதே; நாம் பணித்தபடி செல்லக்கடவாய்" என்றார்.

பிரமதேவர் இவ்வாறு சொல்லவும், மன்மதன் துயரங்கொண்டு, "நான் சிவபெருமானுக்கு மாறுகொண்டு பொரமாட்டேன். இஃதன்றி எனக்கடுத்ததொன்று சொல்லும், செய்வேன்" என்றான். உடனே பிரமதேவர் கோபங்கொண்டு, "நாம் நயந்துசொல்லிய சொல்லை மறுத்துவிட்டாய். நாஞ்சொல்லியபடி செய்வாயாயின், உய்வாய். இன்னும் மறுப்பாயாயின், உனக்குச் சாபமிடுவேம். யாது துணிவு? சொல்வாயாக" என்றார். மன்மதன் அதுகேட்டு, வருந்திப் பெருமூச்செறிந்து, "நான் இனி யாது செய்வேன்" என்று கிலேசித்து, தன்மனதைத் தேற்றிக்கொண்டு, பிரமதேவரை நோக்கி, "சுவாமீ, நான் நீரிடுஞ் சாபத்தினாலே முன்னையியல்பிழந்து துன்பமனுபவித்து வருந்துதலினும் சிவபெருமான் திருமுன் சென்று பாணங்களைத் தொடுத்து மாளினுஞ் சிறந்தது. அங்ஙனம் மாண்டாற் பின்னும் உய்யலாம். நீர் கோபிக்கவேண்டாம். நான் இன்று சிவபெருமானோடு போர்செய்யப் போகின்றேன்" என்றான். பிரமதேவர் மனமகிழ்ந்து, "மன்மதனே, நீ நாம் பணித்தபடி செய்யத் துணிந்தது நன்று நன்று. சிவபெரு

மானிடத்தே உன்னை விடுத்து யாமிங்கிரேம், தொடர்ந்து பின்னேவருவேம். அஞ்சாதே, போ" என்று ஏவினர். அப்பொழுது இந்திரன் மன்மதனை நோக்கி, "மைந்தனே, நான் தேவர்களோடும் துன்பமனுபவித்துச் சிறுமையுற்றமை உனக்குத் தெரியுமே. நமக்கு வாழ்வு தருங்கருத்துடையையாயின், சிவபெருமான் உமாதேவியைத் திருக்கல்யாணஞ்செய்யும்வண்ணம் புரியக்கடவாய்" என்ருன்.

அதுகேட்ட மன்மதன் அங்குநின்று நீங்கி, தன்னகரத்தை அடைந்து, தன்மனைவியாகிய இரதிக்கு அவ்வியற்கையைச் சொல்லி, அவளைத் தெளிவித்து ஒருப்படுத்திக்கொண்டு, புட்பபாணங்கள் இட்ட தூணியை முதுகிலே கட்டி, மாந்தளிராகிய உடைவாளை அரையிலே வைத்து, வில்லைக் கையிற்கொண்டு, குயில்கள் காளமாகவும் கடல்கள் முரசமாகவும் ஒலிக்க, திரைகள் சாமரமாக அசைந்து செல்ல, மற்சக்கொடி செல்ல, சந்திரன் குடையாக நிழற்ற, கிளிகளாகிய குதிரைகள் பூண்ட தென்றலாகிய தேர்மீது இரதியோடுமேறி, தன்னுலகத்தை அகன்று, துர்ச்சகுனங்கள் அளவில்லாதன நிகழ, திருக்கைலாசமலையை அணுகினன். தூரத்தே திருக்கைலாசமலையைக் கண்டு தேரினின்றுமிறங்கி, வணங்கிக்கொண்டு, தனக்கு அயலில் வந்த பரிசனத்தை அங்கு நிறுத்தி, புலியைத் துயிலுணர்த்தப்புகும் மான்போல இரதியோடு துணிந்து சென்ருன். திருக்கைலாசமலைமேல் ஏறி, அங்கே புணர்ச்சியின்றி இருந்த மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் காமப்பற்றை விளைவிக்க நினைந்து, தன்கைவில்லை வளைத்துப் புட்பபாணங்களைத் தொடுத்தான். சிவபெருமானுடைய திருக்கோயிலின் முதற் கோபுரவாயிற்கண் எழுந்தருளியிராநின்ற சிவானுபூதிப்பெருவாழ்வாகிய திருநந்திதேவர் அதுகண்டு, கோபித்து, "இது மன்மதனுடைய செய்கையே" என்று திருவுளங்கொண்டு, "உம்" என்று உரப்பினர். அதனல் மன்மதனுடைய பாணங்கள் மிருகங்கண்மேலும் பறவைகண்மேலும் செல்லாது ஆகாயத்திலே தடைப்பட்டு நின்றன. மன்மதன் அதுகண்டு, திருநந்திதேவருடைய காவலையும் ஆணையையும் நோக்கி, பெருமூச்செறிந்து, நடுநடுங்கி, விடமி அவர் திருமுன் விரைந்துசென்று, அவரை வணங்கி எழுந்து, அஞ்சலிசெய்து நின்று, தோத்திரம்பண்ணினன். திருநந்திதேவர் மன்மதனைநோக்கி, "நீ இம்மலைக்கண் வந்தது என்னை" என்று வினவியருள, மன்மதன் பிரமதேவருடைய புணர்ப்பனைத்தையும் திருநந்திதேவருக்கு மெய்ம்மையாக விண்ணப்பஞ்செய்தான். அது கேட்ட திருநந்திதேவர் தமது திருவுளத்திலே இவ்வாறு எண்ணுவாராயினர்: "பிரமன் முதலிய தேவர்கள் தங்கள் துன்பம் நீங்குநிமித்தம் இம்மன்மதனை விடுத்தார்கள். சிவபெருமான் தாம் யோகத்திருக்கும்பொழுது யாவர் வரினும் உள்ளே விடுக்கலாகாதெனவும், மன்மதனைமாத்திரம் விடுக்கலாமெனவும், எனக்குப் பணித்தருளினர். பசுவைக் கொன்று யாகஞ்செய்து பின்னர் அப்பசுவை முன்போல எழுப்பும்படி வேதஞ்சொல்லியவாறுபோல எம்பெருமானும் மன்மதனைக் கொன்று உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ்செய்து, பின்பு அவனை முன்போலவே எழுப்பும்படி திருவுளங்கொண்டருளினர்போலும். ஆதலால், இது அருளே, இவன்வரவும் ஆணையே" என்று நினைந்து, மன்மதனை நோக்கி, "நீ சிவபெருமான் திருமுன் செல்லல்வேண்டுமா" என்ருர். மன்மதன் வணங்கி நின்று, "சுவாமீ, அடியேனுக்கு மரணம் வரினும் சிவபெருமான்திருமுன் செல்லுதற்கு உடன்பட்டு இங்கு வந்தேன். அதற்கியைந்த வகைமையை அரு

ளிச்செய்யும்" என்று விண்ணப்பஞ்செய்தான். திருநந்திதேவர் "நீ சிவபெருமான் றிருமுன் செல்ல விரும்பினையாயின், மேலைவாயிலாலே செல்லக்கடவாய்" என்றார்.

மன்மதன் வணங்கி விடைபெற்றுக்கொண்டு, மேலைவாயிலாலே சென்று, தேவதேவராகிய சிவபெருமான் அக்கினிமலைபோல மௌனத்தோடு எழுந்தருளியிருந்த திருவெல்லையை அணுகினான். அணுகியவுடனே, ஒப்பில்லாத தொருசரபம் இருந்தமை கண்ட சிங்கக்குட்டிபோலச் சிவபெருமான் எழுந்தருளியிருந்தமை கண்ட விட்டுணுகுமாரனாகிய மன்மதன் அஞ்சி சரீரமெல்லாம் வேர்ப்ப நடுநடுங்கி, தன்கையிற்கொண்ட படையோடு அவசமாக விரைவில் வீழ்ந்தான். உடனே இரதி "ஐயையோ இறந்தான்போலும்" என்று அன்பங்கொண்டு, அவனை எடுத்துக் கையிற்றாங்கித் தேற்றினாள். மன்மதன் அறிவுபெற்று, "தந்துயரொழித்தலொன்றே பயனாகக்கொண்ட பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள், திருநகையினாலே முப்புரத்தையும் எரித்தருளிய மகாதேவரைப் பொரும்வண்ணம், என்னை இங்கு விடுத்தார்கள். நீவினையேற்கு இப்போதே மரணம் வந்தணுகியது. இதற்கும் ஐயமுண்டா! மகாதேவர் எழுந்தருளியிருக்கும் இத்திருக்கோலத்தைக் கண்டவுடனே அஞ்சி நடுநடுங்கி அவசமாயினேனே! இவ்வியல்புடைய சிறியேன் கைக்கொண்ட பாணங்களா இம்மகாதேவரை வெல்வன! இதனைப் பிரமனும் தேவர்களும் அறியார்கள்போலும். பிரசண்டவாயுமுன்னே தீபத்தைப் போக்கினால் அது நிற்குமா. அதுபோலவே தேவர்கள் வாக்குக்கும் மனசுக்கும் எட்டாத இப்பரம்பொருளுக்கு முன்னே சிறியேனை விடுத்தார்கள். இம்மகாதேவருடைய திருநோக்கினாலே இனிச் சிறிதுபொழுதினுள்ளே நான் நுண்பொடியாவேன். சருவலோகங்களையும் சங்கரிக்கும் இம்முழுமுதற்கடவுளைப் புட்பபாணங்கொண்டு நானோ பொரவல்லேன்! இது நகைப்புக்கிடமன்றோ! இது விதியின்செய்கையே. விதியை யாவர் கடக்கவல்லர்! பிரமனாலும் முடியாதன்றோ! இவையெல்லாம் சிவன்செயலே. யாது முடியுமோ! அறியேன். நான் இவ்வாறு தாங்கிக்கிடத்தலாகாது. இனி விரைந்தெழுந்து, வில்லைவளைத்துப் புட்பபாணங்களைப் பூட்டி, எம்பெருமான் பக்கத்தே நின்று, வல்லவாறு செய்வேன். மேலே பட்டவா படுக" என்று நினைந்து, கீழ்விழுந்த வில்லை எடுத்து வளைத்து, புட்பபாணங்களைப் பூட்டிக்கொண்டு, இரதி தன்னை அகலாது செல்ல, சிவபெருமானுக்கு ஒருபக்கத்திலே போய்ப் பொரும்வண்ணம் முயன்று நின்றான்.

மன்மதன் இங்கே நிற்க, மனோவதிநகரத்திலே பிரமதேவரை இந்திரன் வணங்கி, "சுவாமீ, நீர் மன்மதனைச் சிவபெருமானிடத்து விடுத்தீரே, அவன் செய்யும் போரைப் பார்க்கும்வண்ணம் நாமெல்லாம் போதல்வேண்டும்" என்றான். பிரமதேவர் அதற்கிசைந்து, இந்திரன் முதலிய தேவர்களோடு சென்று, திருக்கைலாசமலையின்மீது ஒருபக்கத்தே போய், சிவபெருமானைத் துதித்து, மன்மதனுடைய செயலைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

மன்மதன் "நான் நினைத்தது முடிப்பேன்" என்று, புட்பபாணங்களைந்தையும் சிவபெருமான்மீது செல்லவிட்டான். அவை திருமேனிமீது படுதலும், சிவபெருமான் மன்மதனைச் சிறிதே பார்த்தார். பார்த்தவுடனே, மன்மதனை அக்கினி

வடிவாகிய நெற்றிக்கண் விரைந்து சுட்டது. திருக்கைலாசமலையெங்கும் புகை பரந்தது. பரத்தலும், கீழைக்கோபுரவாயிலின்கண் எழுந்தருளியிருந்த திருநந்தி தேவர், அதுகண்டு தம்மைச் சூழ்ந்த கணங்களை நோக்கி, "உள்ளே சென்ற மன் மதன் இறந்துவிட்டான். மன்மதனைப் பொடித்தது எம்பெருமானுடைய நெற்றிக் கண்ணுமிழ்ந்த அக்கினியன்று, சிவபெருமானை எய்வேனென்று துணிந்து சொல்லி இங்கு வந்த அவன் செயற்கையே அவனைச் சுட்டதுபோலும். இனி இரதியானவள் தன்கணவன் இறந்தமை கண்டு புலம்பி எம்பெருமானை வந்திரப்ப, எம்பெருமான் மன்மதனை உயிர்ப்பித்தருளுவர்" என்று திருவாய்மலர்ந்தருளி னார். அதுகேட்ட கணர்கள் சருவான்மாக்களும் உய்யும்பொருட்டுத் திருவுளங் கொண்டருளும் எம்பெருமானுடைய திருவருணீர்மையை எடுத்துத் துதிசெய்து கொண்டிருந்தார்கள்.

சிவபெருமான் மன்மதனை எரித்துவிட்டு, முன்போலவே மௌனத்தோடு எழுந்தருளியிருந்தார். இரதி தன்கணவன் இறந்தமை கண்டு, துயரங்கொண்டு அறிவிழந்து, கண்ணீர்சொரிய உடம்பெங்கும் வேர்வை தோன்றக் கீழேவிழுந் தாள். சிறிதுபொழுது சென்றபின், அறிவு வருதலும், கையினாலே வயிறலைத் துப் புலம்புவாளாயினாள்: "இலக்குமி குமாரனே, என்னுயிரே, விட்டுணுபுதல் வனே, சம்பரனுக்குப் பகைவனே, கருப்புவில்லைக் கையிற்கொண்ட வீரனே, நீ செம்பவளமலையைப்போலும் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினால் எரிந் தாயே! தேவர்களுடைய கண்களெல்லாம் உறங்கினவோ! பிரமதேவரும் மகிழ்ந் தனரோ! 'முன்னாளிலே முப்புரங்களை எரித்தருளிய மகாதேவர்மேலே போர்செ ய்யப்போதல் முறையோ முறையோ' என்று நான் சொன்னாலும் கேட்டாயில் லையே! தேவர்களுடைய பணியைச் செய்வதே துணிவாகக்கொண்டாயே! உன் சரீரம் பொடியாய்ப்போயிற்றே! இது கண்டும் உய்வாருண்டா! என்னுயிராகிய நீ இறந்தபின்னும் நான் தனியே இருக்கலாமா! மகாதேவருடைய நெற்றிக்கண் உனக்கு மாறாக, உன்வலிமை இலதாக, உன்சரீரமோ நீறாக, திருக்கைலாசமலை யெல்லாம் நெருப்பாக, கவலை தேவர்களுடைய நெஞ்சத்ததாக, ஆறாத பெருந்துய ரம் எனக்காக, நீ எங்கே ஒளித்தாய்? அருவாயேனும் சொல்லாயோ! ஒன்றும் பேசாதிருக்கின்றாயே! என்கணவனே, உனக்கு நான் யாதாயினுங்குறை செய்த துண்டா! தேவர்களிடத்தோ, இந்திரனிடத்தோ, உன்னை இங்கு விடுத்த பிரம னிடத்தோ, 'சிவபெருமானுடைய மௌனநிலையைச் சிதைப்பேன்' என்று இங்கு விரைந்து வந்த உன்னிடத்தோ, நீ பொடியாயிறந்த இந்தப்பழி யாரிடத்துச் சென்றதையா! சிவபெருமானுடைய யோகத்தைத் தவிர்க்கவேண்டின், தேவர்க ளெல்லாரும் இறந்தார்களோ! என்கணவனே, நீ மாத்திரமா இலக்காய் நின்றாய்! உன்னைக் கொல்லாமற் கொன்றார்களே! என்னுயிருக்குங் கொலைசூழ்ந்தார்களே! பொல்லாதவர்களுக்கு நன்மைசெய்வது தம்முயிர்போகும்பொருட்டன்றோ? நான் என்ன பாவஞ்செய்தேனோ! என்போலும் மகளிருக்கு என்னவிடர்செய்தேனோ! முன்னை விதியை அறிவேனோ! ஐயையோ இப்படி முடிந்ததே! என்காவலவோ, தமியேனைக் காத்திடாயோ! சிவபெருமானை நோவதற்கு நீதி உண்டோ! உன்முடி யைக்காணேனே! அழகொழுகாநின்ற உனது திருமுகப்பொலிவைக் காணேனே! இரத்தினாபரணங்கள் விளங்காநின்ற புயங்களைக் காணேனே! மார்பினழகைக் காணேனே! புட்பபாணங்களைக் காணேனே! வில்லைக் காணேனே! போர்செய்யுங்

கோலத்தைக் காணேனே! நான் என்செய்வேன், என்செய்வேன்! என்கணவா, என்னையொழித்து எவ்விடத்தே இருக்கின்றாய்! அந்நாளிலே அக்கினி சாக்ஷியாக, தேவர்களும் பிரமவிட்டுணுக்களுங்காண, என்னை மங்கலியந்தரித்து விவாகஞ்செய்தபொழுது 'நான் உன்னைப் பிரியேன்' என்று சத்தியஞ்செய்தாயே! வேனின்மன்னவோ மன்னவோ, என்னைத் தனியே விட்டுப்போதல் நீதியோ! சொல்லு. போ என்று உன்னை இங்கு விடுத்த தேவர்களெல்லாம் பொடியாய்ப் போன உன்னை வா என்று விரைந்தெழுப்பமாட்டார்களோ! உன்பிதா மிகவலியவன் என்று சொல்வார்களே! ஓவென்று நானிங்கே அழவும், வந்தானில்லையே! உறங்கினாயோ! எரிந்துபோவாயென்று உன்சிரத்தில் விதித்திருந்தால், அவரையெல்லாம் நான் வெறுக்கலாமோ! பிரமாவையும் இந்திரனையும் உன்பிதாவாகிய விட்டுணுவையும் முனிவர்களையும் மற்றை யாவரையும் உன்னுடைய புட்பபாணத்தினால் மருட்டி வென்றாய்; அதுபோலவே சிவபெருமானையும் நினைந்து, இப்படியழிந்தாயே! இது விளக்கில் வீழும் விட்டிலின்செயல்போலுமன்றோ! பூஞ்சோலையிலே பனிநீர்ச்சிவிறிகொண்டு விளையாடிப் பூக்கொய்து, புட்பசயனத்தின்மீது சிறுதென்றல் இனிது வீச, பச்சைக்கர்ப்பூரங்கலந்த சந்தனச்சேறாடி, இருவருமாய்க் கூடித் துயில்செய்த வாழ்வும் பொய்யாகிக் கனவுகண்ட கதையாயிற்றே! தம்மை மருமகனென்று அவமதித்த தக்கனுடைய வேள்வியை அழித்த மகாதேவரைப் போர்செய்யென்று தேவர்களெல்லாம் உன்னை விடுத்தார்களே! அவர்களாலே பொடிபட்டாயே! நானும் உன்னைப்போல ஆறாத பெருந்துயரத்தினால் எரிகின்றேன்! என்னுயிரே, நானும் அங்கே வருகின்றேன் வருகின்றேன்" என்று புலம்பி வருந்தினாள்.

திருச்சிற்றம்பலம்.

மோனநீங்குபடலம்.

பிரமா முதலிய தேவர்களெல்லாரும் மன்மதன் பொடிபட்டமையையும் சிவபெருமான் முன்போலவே மௌனத்தோடு எழுந்தருளியிருத்தலையுங் கண்டு, சரீரம் நடுநடுங்கி, கண்ணீர் வார, வேர்வை தோன்ற, துன்பக்கடலின் வீழ்ந்து, அழுதார்கள். "நாமெல்லாம் உய்யும்வண்ணம் மன்மதனைச் சிவபெருமானிடத்தே விடுத்தேம், சிவபெருமான் அவனைப் பொடிபடுத்தனர். அவர் மௌனநிலையை விடுத்திலர், முன்போலவே எழுந்தருளியிருக்கின்றார். ஐயையோ இனி யாது செய்வேம்" என்று அயர்ந்தார்கள். "மன்மதனைப் பொடிபடுத்திய எம்பெருமானுடைய மௌனநிலையை உபாயத்தினாலே நீக்குதல் கூடாது; அவர் நம்மைத் துயரத்தினின்றும் நீக்கிக் காத்தல்வேண்டுமாயின், நாமெல்லாம் அவரைத் துதிப்பதே கடன்" என்று கோபுரத்தின் புறத்தே சென்று துதிக்கலுற்றார்கள்: "நஞ்சை உண்டும், கங்கையைச் சூடியும், நெற்றியிலே அக்கினிக்கண்ணைப் படைத்தும், அசுரர்களைக் கொன்றும், முன்னாளிலே அடியேங்களைக் காத்தருளினீர். இப்பொழுது அருள்செய்யீராயின், புதல்வர்களாகிய எங்களுக்குப் பிதாவாகிய உம்மையன்றிப் புகலிடமாவார் யாவர்! அன்பர்கள் குற்றமே செயினும் குணமாகக்கொண்

டருளும் எம்பெருமானே, உம்முடைய திருவடிகளே சரணம் என்று அடைந்தோம். நாம் நாடோறும் சூரபன்மாவினாலே நலிவெய்தி மாளலாமா! சிறிதாயினும் எமது துயரத்தைத் திருவுளங்கொண்டருளீரா? நீர் உமாதேவியாரைப் பிரிந்து யோகநெறி காட்டற்கண் உமக்கு ஓரிறைப்பொழுதுமாத்திரமே சென்றது; எங்களுக்கோ பலயுகங்கள் சென்றன. இன்னும் நீர் புறக்கணித்திருப்பீராயின், நாமெல்லாம் உய்வது எப்படி! விட்டுணு முதலியோர் யாவரும் உம்மை நோக்கித் தவஞ்செய்து உம்முடைய திருவடிகளைப் பூசித்துத் துதிக்க, நீரே இப்பதங்களெல்லாவற்றையும் அருளிச்செய்தீர். தோற்றமும் ஈறும் இல்லாதவராகிப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்யும் முழுமுதற்கடவுள் நீரே. இத்தன்மையையுடைய நீர் செய்யும் இத்தவநிலை எம்பொருட்டன்றி உம்பொருட்டன்றே. அடியேங்கள் முன்செய்த பெருங்கொடும் பாவத்தினாலே சிறியேங்களை இடராகிய வாளினாலே நாடோறும் அரிகின்றீர். இனி எங்களைக் காத்தருளும், அல்லது விரைந்து கொன்றுவிடும். இவ்விரண்டினுள் எது உமக்குப் பிரீதியோ அது செய்யும். நீர் உமாதேவியாரைத் திருக்கலியாணஞ்செய்து அடியேங்களைக் காத்தருளும்வண்ணம் மன்மதனை உம்மிடத்து விடுத்தேம் அறிவிலாதேம். நீர் அவனைப் பொடிபடுத்தி முன்போலவே எழுந்தருளியிருக்கின்றீர். அடியேங்கள் இவ்வாறு வருந்தலாமா! இனியாயினும் சிறிது திருவுளமிரங்கீரா! நரசிங்க முதலிய மிருகங்களை உரித்து அவற்றின்றோல்களைத் தரித்தருளினீர். தக்கனுடைய யாகத்தை வீரபத்திரக்கடவுளைக் கொண்டு தடிந்தருளினீர். அதுபோலவே, சூரபன்மனைக் கொன்று, அடியேங்களுடைய துயரத்தை நீக்கியருளும்" என்றார்கள்.

பிரமா முதலிய தேவர்கள் உருகுகின்ற அரக்குப்போலச் சரீரம் தளர்ந்து, இவ்வாறே மனநொந்து அழுது துதித்தலும், அவர்களுடைய பாவம் முடிவதற்கு அணித்தாயினமையால், சிவபெருமான் திருவுளமிரங்கி, திருநந்திதேவரை நினைந்தருளினார். அதனை அறிந்த திருநந்திதேவர் சிவபெருமான்றிருமுன் சென்று, நமஸ்கரித்து எழுந்து, அஞ்சலிசெய்துநின்றார். சிவபெருமான் அவரை நோக்கி, "பிரமன் முதலிய தேவர்களை நம்முன் அழைத்துக்கொண்டுவரக்கடவாய்" என்று பணித்தருள, திருநந்திதேவர் முதற்கடையில் வந்தார். அது கண்ட பிரமா முதலிய தேவர்களெல்லாரும் திருநந்திதேவரை வணங்கித் துதித்தார்கள். திருநந்திதேவர் அவர்களை நோக்கி, "எம்பெருமான் உங்களை உள்ளே அழைத்துக்கொண்டு வரும்வண்ணம் பணித்தருளினார். வருந்தாதொழிமின், வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். இத்திருவாக்குச் செவிகடோறும் வார்த்த அமிர்தம்போலப் புகுதலும், தேவர்கள் பேரானந்தப்பெருங்கடலின் மூழ்கி, ஆரவாரித்துச் சிவபெருமானைப் பாடியாடினார்கள். திருநந்திதேவர் தேவர்களைச் சிவபெருமான்றிருமுன்னே கொண்டு சென்றுய்ப்ப, அவர்கள் சிவபெருமானைத் தரிசித்துப் பலகாலும் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலிசெய்து நின்று, தோத்திரம்பண்ணினார்கள். சிவபெருமான் அவர்கண்மீது திருநோக்கஞ் செய்து, "உங்கள் துன்பத்தையும் வேண்டுகோளையுஞ் சொல்லுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதற்குத் தேவர்கள் "பெருங்கருணைக்கடலே, அளப்பில்லாத யுகங்களாக அடியேங்கள் சூரபன்மனுடைய ஆணையினாலே துன்பப்படுகின்றேம். அடியேங்களுடைய துன்பத்தை நீக்குவோர் நீரன்றி வேறு யாரு

ளர்? சூரபன்மனைக் கொல்லும்பொருட்டு ஒரு குமாரரைத் தந்தருளும்வண்ணம், இமையமலையின்மீது தவஞ்செய்யாநின்ற உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சிவபெருமான் அதற்கிசைந்து, "நீங்கள் வருந்தாதொழிமின், நாம் உங்கள்பொருட்டு இமையமலைமீது தவஞ்செய்யும் உமையைக் கல்யாணஞ்செய்து, உங்கள் வருத்தத்தை நீக்குவோம். இனி நீங்களெல்லீரும் போங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். பிரமா முதலிய தேவர்களெல்லாரும் வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, துயரநீங்கி, மகாமேரு மலைமீது சென்றார்கள்.

இரதி அதுகண்டு, எம்பெருமான் திருமுன்னே வணங்கித் துதித்து, "முறையோ முறையோ! சுவாமீ, பிரமா முதலிய தேவர்களுடைய புணர்ப்பினாலே அடியேனுடைய நாயகன் இங்கே வந்து உம்மாலிறந்தான். அவன்செய்த குற்றத்தைத் திருவுளங்கொள்ளாது அருள்செய்க" என்று விண்ணப்பஞ்செய்தாள். சிவபெருமான் கருணை கூர்ந்து, "இரதியே, நீ புலம்பாதொழி. நாம் இமையமலைமீது சென்று உமையை விவாகஞ் செய்யும்பொழுது உன்னுயகனை உயிர்ப்பித்தருளுவோம்; நீ போகக்கடவாய்" என்று அருளிச்செய்தார். இரதி அது கேட்டு மனமகிழ்ந்து, வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, இமையமலையிற்சென்று, ஒருபக்கத்தே முகிலினது வரவை நோக்கும் மயில்போலிருந்தாள்.

சிவபெருமான் உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ்செய்து தேவர்களுடைய துன்பத்தை ஒழிக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, சனகர்முதலிய முனிவர்கள் நால்வரையும் நோக்கி, "மைந்தர்களே, ஞானயோகம் சொல்லற்பாலதன்று; அது இவ்வாறு மௌனத்தோடிருந்து நம்மை அறிவதேயாம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அது கேட்ட முனிவர்கள் தெளிந்து மனமகிழ்ந்து, சிவபெருமானை மெய்யன்போடு வணங்கி நின்று, "கிருபாசமுத்திரமே, அடியேங்கள் முன்னைமயக்கம் நீங்கி உய்ந்தேம்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான் "இனி நீங்கள் நிட்டையிலிருந்து நமது சாயுச்சியபதத்தை அடையக்கடவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து, விடைகொடுத்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

தவங்காண்படலம்.

முனிவர்கள் சென்றபின்பு, சிவபெருமான் இமையமலைமீது தவஞ்செய்யும் பார்ப்பதியம்மைக்குத் தம்மாட்டுள்ள அன்பையுங்காதலையும் யாவருக்குங் காட்டும்வண்ணம் திருவுளங்கொண்டு, கல்லாடையுடையும், சிகையும், விபூதியாலாகிய திரிபுண்டரமும், பூணூலும், கமண்டலம் பொருந்திய கையும், மழையையும் பனியையும் வெய்யிலையும் காக்கும் ஓலையும், தண்டும் உடைய ஒரு முதிய பிராமணவடிவங்கொண்டு இமையமலையிற் சென்று, உமாதேவியார் தவஞ்செய்யுஞ் சாலையை அடைந்தார். கடைகாப்போராகிய மகளிர்கள் பலர் "இவர் பெரியவர்" என்று வந்து, அவர் திருவடிகளை வணங்கி நின்று, "முதியோரே, இம்

மலைமீது வருதல் எளிதன்று; சுவாமிகள் வந்த காரியம் யாது" என்றார்கள். அதற்குப் பிராமணர் "பார்ப்பதியம்மை செய்யுந் தவத்தைப் பார்க்க வந்தேன்" என்றார்.

உடனே சிலர் உமாதேவியிடத்தே சென்று, வயோதிகப்பிராமணருடைய வரவை விண்ணப்பஞ் செய்தார்கள். உமாதேவியார் "அவர் முதியவராயின், இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று பணித்தருள, அம்மகளிர்கள் பிராமணரை உமாதேவியார் திருமுன் கொண்டுசென்றுய்த்தார்கள். உடனே உமாதேவியார் "இவர் எம்பெருமானுடைய அடியவர்" என்று தொழுதார். அப்பொழுது தேவியாருக்கு மெய்த்துணையாயுள்ள விசயையென்பவள் ஓராசனமிட்டு, பிராமணரை அதன்மேல் இருத்தினாள். உமாதேவியாரும் பக்கத்திலே நின்றார். பிராமணர் உமாதேவியை விருப்பத்தோடு பார்த்து, "உனதழகெல்லாம் அழிய, சரீரத்துள்ள தசை குன்ற, பெருந்தவஞ்செய்கின்றாய். யாது விரும்பினை? சொல்" என்றார். உமாதேவியார் விசயையுடைய முகத்தை நோக்கி, குறிப்பினாலே "இவருக்கு எதிர்மொழி சொல்லக்கடவாய்" என்று கண் காட்ட, விசயை "சுவாமீ, இவ்வம்மையானவள் தன்னைச் சிவபெருமான் திருக்கல்யாணஞ்செய்து தம்மிடத் திருத்திக்கொள்ளும்பொருட்டுத் தவஞ்செய்கின்றாள்" என்றாள். பிராமணர் நகைத்து, "பிரமவிட்டுணுக்களாலும் அறியப்படாத சிவபெருமான் இவளுடைய தவத்துக்கு எய்துவாரா? எய்தினும், இவளை விருப்பத்தோடு விவாகஞ் செய்வாரா? இவள் அறியாதே தவஞ்செய்கின்றனள். சிவபெருமான் இவளுக்கு எளியவரா? இவள் வருந்தித் தவஞ்செய்தலால் ஒரு பயனுமில்லை. இத்துணைப்பெறலரும் பொருள் இவளுக்கு எளிதாகுமா? இவளுடைய அழகு பலகாலம் வறிதுபட்டதன்றோ! இனி இத்தவத்தை விரைந்து விடுதலே இவளுக்குக் கடன்" என்றார். அதுகேட்டவுடனே உமாதேவியார் "ஐயையோ! எம்பெருமானுக்கு இவர் அன்பர், முதுகுரவர் என்று எண்ணினேன். இவர் இக்கடுஞ்சொல்லைச் சொல்வாரென்பது அறியேன்" என்று திருவுளத்திலே கோபங்கொண்டு, வருந்திப் பெருமூச்செறிந்து, பொறுக்கலாற்றாமையால் நாணை விடுத்து, பிராமணரை நோக்கி, "தோற்றமும் இறுதியுமில்லாத மகாதேவர் என்கருத்தை முடியாது விடுவாராயினும், நான் இத்தவத்தை விடுவேனோ! இன்னும் மிகக்கொடுந்தவத்தை அளப்பில்லாத காலஞ்செய்து உயிர்விடுவேன். நீ மிக மூத்தமையால் மயங்கினாய். பித்தனோ நீ" என்றார். அதுகேட்ட பிராமணராகிய சிவபெருமான் மீட்டும் ஒருபுணர்ப்பைத் திருவுளங்கொண்டு, உமாதேவியாரை நோக்கி, "பெண்ணே, நீ விரும்பிய சிவனுடைய வளத்தினியல்பை நன்றாகக் கேட்டறிந்திலைபோலும். அதனை நாஞ்சொல்லுகின்றோம், கேள். சிவனுக்கு வஸ்திரம் தோல்; வாகனம் எருது; ஆபரணம் பாம்பு, எலும்பு, தலைமாலை, பன்றிக்கோடு முதலியன; போசனபாத்திரம் தலையோடு; போசனம் பிக்ஷையும் நஞ்சும்; நடனசாலை சுடுகாடு; அணிவன வெள்ளெருக்கு, அறுகு, கொன்றை, நொச்சி, மத்தம், கங்கை, பாம்பு முதலியன பல; சந்தனம் சாம்பர்; கையிற்றரிப்பன சூலம், மான், மழு, உடுக்கு, அக்கினி என்பன; சேனை பூதம். அச்சிவனுக்குத் தாயும் தந்தையும் சுற்றமும் உருவும் குணமுமில்லை. அவனுக்கு உரிய வளங்கள் இவைகளே. இவைகளெல்லாம் உன்னுடையனவாகும்பொருட்டா நீ தவஞ்செய்து இளைத்தாய்? சிறப்புப்பொருந்திய அளப்பிலாத வளங்களையுடைய மகாராசாவுடைய புத்திரிக்கு இது இயையுமா" என்றார்.

பார்ப்பதியம்மையார் அதுகேட்டவுடனே, திருச்செவிகளைத் திருக்கரங்களினாலே பொத்தி, "சிவசிவ" என்று சொல்லி, இரங்கி, பெருங்கோபங்கொண்டு, வருத்தமுற்று, பிராமணரை நோக்கி, "பார்ப்பானே, கேள். பரமபதியாகிய எம்பெருமானிடத்து உன்மனசிலே சிறிதாயினும் அன்பு நிகழ்ந்ததில்லை. நீ இச்சிவவேடங்கொண்டமை வேடுவர் காட்டிலுள்ள பறவைகளைக் கவரும்பொருட்டுப் புதலை மேற்கொண்டமைபோலும். முன்னாளிலே தக்கனென்பானொருவன் உன்னைப்போலவே எம்பெருமானை இப்படி இகழ்ந்துபேசினதும் அதனால் அவன் பட்டபாடும் நீ கேட்டாயில்லையா! ஐயையோ! எம்பெருமானை இப்படி நீ என்முன் இகழ்ந்தாயே! பார்ப்பானே, நீ இந்நாள்வரையும் வேதங்களைச் சிறிதும் ஆராய்ந்தறிந்திலைபோலும். பார்ப்பார்கள், சிவபெருமானே பரம்பொருளென்று துணிந்து கூறுநின்ற வேதங்களை ஓதினாராயினும், அவ்வேதநெறியின் நில்லாது, தீயொழுக்கத்தையே மேற்கொண்டு சிவபெருமானை இகழ்ந்து இகழ்ந்து அவ்வதிபாதகத்தினாலே முத்தியெய்தாது பிறந்தும் இறந்தும் உழலும்வண்ணம், முன்னாளிலே இருடிகளாலே பெற்ற சாபம், ஐயையோ, உன்னையும் மயக்காது விடுமா! சகற்பிதாவாகித் தங்களைப் பெற்றுத் தங்கள் தொழிலுக்கு அதிபதியாகித் தங்களுக்கு இன்றியாமையாச் சிறப்பினையுடைய சிவபெருமானை நீங்கி, தங்கணவரை விடுத்துப் பிறர்பக்கமாகிக் கற்பினையிழந்த மகளிரைப்போலும் பார்ப்பார்களுடைய முறையையே நீ செய்தாய். உன்னை நான் வெறுப்பதென்னை! ஆயினும், பார்ப்பார்களுள்ளே வேதத்தில் விதித்தபடி விபூதி உருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்களைத் தரித்து, சிவபெருமானுக்குத் தொண்டுசெய்வோரும் உண்டு. நீ அவர்போலச் சிவசின்னங்களைத் தரித்தும் சிவபெருமானை இகழ்ந்தாயெனின், அசுரர்களுள்ளும் உன்னைப்போலுந் தீயவர் இல்லை இல்லை. விருப்பு வெறுப்பில்லாத அநாதி பகவனை நீ இங்கே இகழ்ந்தனவெல்லாம் சருவான்மாக்களும் உய்யும்வண்ணம் பெருங்கருணையினாலே பூண்டருளுங் குறிகளென்று அறியக்கடவாய். இவையெல்லாம் எம்பெருமானுக்குப் புகழேயாம். அவருடைய இயல்பினைத்தும் யாவரறியவல்லவர்! நீ இகழ்ச்சிபோலப் பேசியவைகளெல்லாம் பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் தம்மை வழிபட்டுத் துதிக்க அவர்களுக்கு வலிமையையும் அதிகாரத்தையுங் கொடுத்தருளிய மகாதேவர் விருப்பும் வெறுப்புமின்றி உயிர்களுக்கு அருள்செய்யும் நிலையே என்று நினை. இவ்வாறே வேதமுதலிய உண்மை நூல்களெல்லாம் சொல்கின்றன. இவையெல்லாம் சித்தசுத்தியையுடைய பெரியோர்கள் அறிவார்கள். சிவநிந்தை செய்யும் அதிபாதகனாகிய உனக்குச் சொல்லொணாது: சொல்லிற் பாவம் பாவம்! பொய்வேடத்தவனே, புறம்பே போய்விடு" என்றார்.

உடனே பிராமணவேடங்கொண்ட கள்வராகிய சிவபெருமான், "பெண்ணே, உன்மேல் இச்சைகொண்டு வந்த என்செயலைக் கேளாது, என்னைப் புறத்தே போம்படி சொல்லுகின்றாய். இது தருமா! நான் இங்கு வந்தது உன்னை விவாகஞ்செய்துகொள்ளற்பொருட்டே" என்றார். உடனே பார்ப்பதியம்மையார் திருச்செவிகளைப் பொத்தி, பொறுக்கலாற்றாது வருந்தி, சரீரம் பதைபதைக்க விம்மி, "இக்கிழவன் போகான்: நானே போவேன்" என்று, தமது செந்தாமரைமலர்போலும் அருமைத்திருவடிகள் சேப்ப, அங்கோரிடத்தே போதலுற்றார். போதலோடும், பெருங்கருணைத் திருவிளையாட்டையுடைய சிவபெருமான் பார்ப்பதியம்மையாரு

டைய இயற்கையை நோக்கி, எல்லையில்லாத பேரருள் கூர்ந்து, பிராமணவேடத்தை ஒழித்து, பலகணங்கள் சூழ்ந்து துதிப்ப, இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினர். உமாதேவியார் அதுகண்டு, திருமேனி நடுநடுங்கி, நாணங்கொண்டு, பலகாலும் நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலிசெய்து நின்று, தோத்திரம் பண்ணி, "அளவற்ற அறிவினாலும் எட்டாத முழுமுதற்கடவுளே, உம்முடைய மாயையை அறிந்திலேன். அறிவொருசிறிதுமில்லாச் சிறியேன் உம்மை இகழ்ந்தமையைப் பெருங்கருணையோடும் பொறுத்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார். அதற்குச் சிவபெருமான், "கேளாய், உமையே, நீ நம்மிடத்துள்ள அன்புமிகுதியினாலே முன்சொல்லியனவெல்லாம் துதியாகவே கொண்டோம். உன்னிடத்தே குற்றம் உண்டாயினன்றோ நாம் பொறுப்பது. இனி நீ கொடிய தவத்தினால் வருந்தாதொழி. நாளை உன்னை விவாகஞ்செய்ய வருவேம்" என்று திருவாய் மலர்ந்து, மறைந்தருளினர். உமாதேவியார் திருவுளமிகமகிழ்ந்து, சிவபெருமானைச் சிந்தித்துத் துதித்துக்கொண்டிருந்தார்.

அங்குள்ள மகளிர்சிலர் மலையரையனிடத்துச் சென்று, சிவபெருமான் எழுந்தருளிவந்து பார்ப்பதியம்மைக்கு அருளிச்செய்தமையைத் தெரிவித்தார்கள். மலையரையன் மனத்துயரநீங்கி, விரைந்து தன்மனைவியாகிய மேனையோடு சென்று, உமாதேவியாரைத் தன்கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

திருச்சிற்றம்பலம்.

மணம்பேசுபடலம்.

பார்ப்பதியம்மையாருடைய தவத்தைக் கண்டு திருவருள்செய்து திருக்கைலாசமலையை அடைந்து வீற்றிருந்தருளிய சிவபெருமான், சத்தவிருடிகளைத் தந்திருமுன் வரும்வண்ணம், திருவுளத்தே நினைந்தருளினர். அதனை அறிந்த இருடிகள் எழுவரும் மனம் அஞ்சி, சரீரநடுநடுங்கி, விரைந்து வந்து, சிவபெருமானை வணங்கி, அஞ்சலிசெய்து நின்று, "மகாதேவரே, பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் உம்முடைய ஏவலுக்கு உரியர்களாய் இருப்ப, அடியேங்களை நினைந்தருளினீர். அதனால் அவர்கள் செய்த தவத்தினும் அடியேங்கள் செய்த தவமே அதிகம்போலும். எம்பரமபிதாவே, நீர் சிறியேங்களைப் பெருங்கருணையோடு நினைந்தருளினமையால், உய்ந்தோம் உய்ந்தோம். அடியேங்கள் செய்த பெருங்கொடும் பாவங்களெல்லாம் நீங்கிவிட்டன. இனி ஒரு தீதுண்டாகுமா! அநாதியே தொடங்கி ஐந்தொழிலையும் இடையறாது செய்தருளும் பகவனே, நீர் அடியேங்களுடைய புன்மையை ஒழிக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டருளினீர். அடியேங்களால் விரைந்து செயற்பாலதனைப் பணித்தருளுக!" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். தேவதேவர் இருடிகண்மீது திருவருணோக்கஞ்செய்து, "அன்பர்களே, நீங்கள் இமையமலையரையனிடத்தே சென்று, பார்ப்பதியை இன்றைக்கு நமக்கு விவாகஞ்செய்து தரும்வண்ணம் பேசிக்கொண்டு, விரைந்து நம்முன் வரக்கடவீர்கள்" என்று பணித்தருளினர்.

இருடிகள் அத்திருப்பணியைச் சிரமேற்கொண்டு, சிவபெருமானை வணங்கி, நடந்து, இமையமலையரையன்முன் செல்ல, அவன் தன் மனைவியோடும் எதிர் கொண்டு வணங்கி, அழைத்துக்கொண்டு சென்று, ஆசனத்திருத்தி, பூசித்துத் துதித்து நின்று, "இருடிகளே, உங்களுடைய திருவடித்தாமரைகள் படுதலால், இவ்விமையமலை மகாமேருமலையைப்போலத் தூய்தாகித் தலைமையும் பெற்றது. சிறியேனுடைய பிறவியும் இப்பொழுதே நீங்கியது. நீங்கள் அடியேனிடத்து வந்த நிமித்தம் யாது? சொல்லுக" என்றான். அதற்கு இருடிகள் "அரசனே, உயிர்க்குயிராய் நின்ற சிவபெருமான் உன் புதல்வியாகிய பார்ப்பதியம்மையைத் திருக்கல்யாணஞ்செய்யத் திருவுளங்கொண்டு, உன்னோடு பேசும்பொருட்டு எங்களை விடுத்தருளினார். இதுவே எங்கள் வரலாறு" என்றார்கள். மலையரையன் அதற்கியைந்து, "சருவலோகைக நாயகராகிய சிவபெருமானுக்குச் சருவலோகங்களையும் சருவான்மாக்களையும் பெற்றும் நித்தியகன்னிகையாயுள்ள உமாதேவியைத் திருக்கல்யாணஞ்செய்து கொடுத்துச் சிறியேனையும் அடிமையாகக்கொடுப்பேன்" என்றான். மலையரையன்பக்கத்தே நின்ற மனைவியாகிய மேனை "பிரமதேவருடைய புதல்வனாகிய தக்கன் தன்புதல்வியை விவாகஞ்செய்துகொடுப்ப, சிவபெருமான் அவனுடைய சிரசைச் சேதித்தார் என்று பேசுகின்றார்கள். அதனை நினைந்து நினைந்து, மனம் அஞ்சுகின்றது. இவ்வாறாக, அவருக்கு எங்கள் புதல்வியை விவாகஞ்செய்துகொடுப்பது எங்ஙனம்" என்றாள். இருடிகள் மேனையை நோக்கி, "நீ வருந்தாதொழி, நீ உயர்வொப்பில்லாத சிவபெருமானுடைய செய்கையை நன்றாக அறிந்திலை. தக்கன் யாகத்திலே தமக்குக் கொடுக்கற்பாலதாகிய அவியை மாற்றித் தம்மை இகழ்ந்தமையால், சிவபெருமான் அவனுடைய சிரசைச் சேதித்தருளினார். தம்மை வழிபடும் அடியார்களுக்கு அனுக்கிரகமும் அல்லாதவர்களுக்கு நிக்கிரகமுஞ்செய்தல் சிவபெருமானியல்பு. இவ்வுண்மையை மேலோர் யாவரும் நன்குணர்வர்கள். நீயும் இதனை அறியக்கடவாய். வேறொன்றும் சிந்தனைசெய்யாதே" என்றார்கள். மலையரையன் "இது சத்தியம்" என்றான். மேனை அஞ்சி நடுநடுங்கி, "ஐயையோ! எம்பெருமானுடைய செய்கையை அறியாதே சொல்லிவிட்டேன்" என்று நினைந்து, வருத்தமுற்று, இருடிகளுடைய திருவடிகளை வணங்கி நின்று, "பெண்ணறிவென்பது பெரும் பேதைமையை உடையதன்றோ! அடியேன் சிவபெருமானுடைய திருவருணீர்மையைச் சிறிதும் அறிந்திலேன். சிறியேன் சொல்லிய புன்மொழியைப் பொறுத்தருளுக" என்றாள். இருடிகள் அவளிடத்தே திருவருள் செய்தார்கள். மலையரையன் இருடிகளை நோக்கி, "அறிவுசிறிதுமில்லாத இவளுடைய புன்மொழியைத் திருவுளத்திலே கொண்டருளாதொழிமின். உமாதேவியைத் திருக்கல்யாணஞ்செய்யும்பொருட்டு எழுந்தருளி வரும்வண்ணம் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ்செய்யுங்கள்" என்றான்.

அதுகேட்ட இருடிகள் எழுவரும் மனமிகமகிழ்ந்து, மலையரையனையும் மேனையையும் அங்கே நிறுத்தி, திருக்கைலாசமலையை அடைந்து, சிவபெருமான் திருமுன் சென்று, அவரை வணங்கித் துதித்து, திருக்கல்யாணத்திற்கு மலையரையன் உடன்பட்டமையை விண்ணப்பஞ்செய்தார்கள். சிவபெருமான் "முனி

வீர்காள், நீங்கள் உங்கள்செயலைச் செய்யும்பொருட்டுப் போங்கள்" என்று விடை கொடுத்தருள, இருடிகள் சிவபெருமானைவணங்கித் துதித்துக்கொண்டு; தங்கள் பதத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

வரைபுனைபடலம்.*

மலையரையன் தன்புதல்வியாகிய உமாதேவிக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு "உன்னை நாம் விவாகஞ்செய்வேம்" என்று திருவாய்மலர்ந்தருளினமையையும் சத்தவிருடிகளைத் தன்னிடத்து விடுத்து மணம்பேசுவித்தமையையும் நினைந்து, மனமகிழ்ந்து, உமாதேவியைச் சிவபெருமானுக்குத் திருக்கல்யாணஞ் செய்துகொடுக்கக் கருதி, தேவதச்சனைத் தன்முன் வரும்வண்ணம் நினைந்தான். உடனே தேவதச்சன் அவனெதிர் வந்து, வணங்கி நின்று, "என்னை நீ நினைந்ததென்னை! என்னாலே செயற்பாலதாகிய பணியாது? சொல்லுக" என்றான். அதற்கு மலையரையன் "நம்மை ஆட்கொண்டருளும் சிவபெருமானுக்கு யான்பெற்ற உலகமாதாவாகிய உமாதேவியைத் திருக்கல்யாணஞ் செய்துகொடுக்கக் கருதுகின்றேன். ஆதலால், நீ இந்நகரமுழுதையும் அமராவதிபோல அலங்கரிக்கக்கடவாய்" என்றான்.

அதுகேட்ட தேவதச்சன் மனமகிழ்ந்து, அந்நகரத்தை அலங்கரிக்க நினைந்தான். இமையமலையின்மேலே கோபுரங்களையும், மன்றங்களையும், சூளிகைகளையும், நிலைத்தேர்களையும், மண்டபங்களையும், வீதிதோறும் பூம்பந்தர்களையும் செய்தான். பந்தர்களின்மேலே கொடிகளைக் கட்டி, உள்ளே மேற்கட்டிகளினாலே அணிசெய்து, சாமரங்களையும் பூமாலைகளையும் தூக்கினான். வாழைகளையும் கமுகுகளையும் நாட்டினான். தோரணங்களைக் கட்டினான். எண்ணில்லாத தேவர்கள் கொணரும் பொருள்களெல்லாம் வைக்கும்வண்ணம் பலவகைப்பட்ட சாலைகளைச் செய்தான். கோயிலுக்கு ஒரு பக்கத்தே பதினாயிரம் யோசனைப் பரப்பினதாகிய ஒரு புரிசையையும், அதன் வாயில்களனைத்தினும் கோபுரங்களையும், செய்தான். அதனடுவே திருக்கல்யாணமண்டபத்தைச் செம்பொன்னினாலே செய்து, நிலத்தைச் சந்தனமும் கஸ்தூரியும் புழுகும் கலந்த பனிநீரினாலே பூசி, நறுமலர்களைத் தூவினான். தேவர்களெல்லாருக்கும் ஆசனங்களைச் செய்தான். பலநிறங்களாலும் வேதிகைகளை இயற்றினான். கண்ணாடிகளையும் பூமாலைகளையும் சாமரங்களையும் வஸ்திரங்களையும் இரத்தினமாலைகளையுந் தூக்கினான். தேவர்களும் முனிவர்களும் அரம்பையர்களும்போலப் பிரதிமைகளைச் செய்து, சாமரம் வீசுதல் வீணைவாசித்தல் நடனஞ்செய்தல் முதலிய தொழில்களைச் செய்யுமாறமைத்தான். இவ்வாறு செய்யப்பட்ட திருமணச்சாலையினுள்ளே, சிவபெருமானும் உமாதேவியாரும் எழுந்தருளியிருக்கும்பொருட்டு, இந்திரநீலரத்தினத்தினாலே ஒரு திவ்விய சிங்காசனஞ் செய்தான். குண்டமண்டலவேதிகைகளை வகுத்து, வேள்வித்திரவியங்களையும் அட்டமங்கலங்களையும் அமைத்தான். பக்கத்திலே சூரியகாந்தம், சந்திரகாந்தம், பவளம், முத்து, வைரம், பதுமராக

முதலியவற்றினால் எண்ணில்லாத மண்டபங்களைச் செய்தான். புறத்திலே தாமரை முதலிய பூக்கள் மலரும் வாவிகளைச் செய்தான். மரகதம், பளிங்கு, வைரம், மாணிக்கம், பொன் முதலியவற்றால் பூந்தடாகங்களைச் செய்தான். கற்பகம், சந்தனம், அகில், வாழை, கமுகு, பலா, மா, புன்னை முதலிய மரங்களைப் பற்பல ரத்தினங்களாலே செய்தான்.

இவ்வாறே தேவத்தச்சன் தன்னினைவினாலே செய்துமுடித்தலும், மலையரையன் அது கண்டு மகிழ்ந்து, பிரமா விட்டுணு முதலிய தேவர்களும் முனிவர்களும் தங்கள் தங்கள் மனைவியர்களோடும் உமாதேவியுடைய திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவரும்பொருட்டுத் தூதர்களை எங்கும் விடுத்தான். தூதர்களுடைய வசனத்தை அறிந்து, தேவர்களும் முனிவர்களும் "நாமெல்லாம் சிவபெருமானை வணங்கிக்கொண்டு அவரோடும் வருவேம்" என்றார்கள். துர்க்கையும், காளியும், சத்தநதிகளும், இலக்குமியும், சரசுவதியும், இந்திராணியும், இருடி பத்தினிகளும், அரம்பையர்களும் இமையமலையை அடைந்து, உமாதேவியாரை வணங்கினார்கள். இலக்குமி சரசுவதி முதலிய மகளிர்கள் தவத்தான் வருந்திய திருமேனியையுடைய உமாதேவியை வணங்கி, திருமணக்கோலஞ்செய்யும் பெரும்பேற்றைப் பெற்றார்கள். மகாமேரு மந்தரம் முதலிய சுற்றங்களும், கடல்களும், நாகங்களும், திக்குயானைகளும், பிறவும் வந்தன.

மலையரையன் தன்சுற்றத்தாரோடு திருக்கைலாசமலையை அடைந்து, திருநந்திதேவர் உள்ளே விடுப்பச் சென்று, பரமசிவனை வணங்கி நின்று, "எம்பெருமானே, உலகமாதாவாகிய உமாதேவியைத் திருக்கல்யாணஞ் செய்யும்பொருட்டுத் திருவுளங்கொண்டருளினீர். சோதிடநூலோர் மங்கலதினமெனக் கூறிய பங்குனியுத்திரம் இன்றேயாகும். எம்பரமபிதாவே, இப்பொழுது இமையமலைக்கு எழுந்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். சிவபெருமான் மலையரையனை நோக்கி, "நாம் இப்பொழுதே எல்லையில்லாத கணங்கள் சூழ இமையமலைக்கு எழுந்தருளுவோம். நீ முன்னேபோகக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். மலையரையன் சிவபெருமானை வணங்கித் துதித்துக்கொண்டு, மீண்டு தன் னகரத்தை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

கணங்கள்செல்படலம்.

கைலாசபதி திருநந்திதேவரை நோக்கி, "நம்முடைய கல்யாணத்தைத் தரிசிக்கும்பொருட்டு, உருத்திரகணங்களையும், விட்டுணு பிரமன் இந்திரன் முதலிய தேவரையும், மற்றை யாவரையும் இங்கே தரக்கடவாய்" என்று பணித்தருளினார். திருநந்திதேவர் அத்திருப்பணியைச் சிரமேற்கொண்டு, அவர்களெல்லாரும் திருக்கல்யாணத்தின்பொருட்டு வரும்வண்ணம் நினைந்தார். அதனை யாவரும் அறிந்து, சிவபெருமானைத் துதித்து, விம்மிதமும் பத்தியும் பெருமிதமும் மகிழ்ச்சியும் திரண்டு செலுத்த, திருக்கைலாசத்துக்கு வருதலுற்றார்கள்.

காலாக்கினிருத்திரர் பஞ்சவத்திரனும் இடபகேதுவும் உள்ளிட்ட ஆயிரகோடி கணங்கள் சூழ வந்தார். கூர்மாண்டேசர் எழுபத்திரண்டுகோடி பூதங்கள்சூழ வந்தார். ஆடகேசுரர் கோடி கோடி ருத்திரர்கள் சூழ வந்தார். வீரபத்திரக் கடவுள் நூறுபத்தாயிரகோடி பூதங்கள் சூழ வந்தார். அரிகர புத்திரராகிய ஐயனூர் நூறுகோடி பூதங்கள் சூழ வந்தார். பதினோருருத்திரர்கள் வந்தார்கள். ஈண்டுக் கூறிய உருத்திரர்களன்றி மற்றைப் பலபுவனங்களினுமுள்ள உருத்திரர்களும் வந்தார்கள். புத்திதத்துவத்திற் பொருந்திய பைசாசபுவனம், இராக்கதபுவனம், இயக்கபுவனம், காந்தருவபுவனம், ஐந்திரபுவனம், சௌமியபுவனம், பிராசேசுரபுவனம், பிராமியபுவனம் என்னும் எட்டுப்புவனங்களினுள்ளோரும் வந்தார்கள். பவர் முதலிய அட்டமூர்த்திகள் எண்ணூறுகோடி பூதங்கள் சூழ வந்தார்கள். குண்டோதரர் நூறுகோடி பூதங்கள் சூழ வந்தார். கண்டகண்ணரும் பிஞ்கியும் நூற்றிருகோடி பூதங்கள் சூழ வந்தார்கள். பானுகம்பர் நூற்றைம்பதுகோடி பூதங்கள் சூழ வந்தார். சங்குகன்னர் பலகோடி பூதங்கள் சூழ வந்தார். காளகண்டரும், தண்டியும், நீலரும், காரும், விச்சுவமாலியும் மற்றைப் பூதர்களும் எண்ணில்லாத சேனைகளோடு வந்தார்கள். ஈசானர் நூற்றுமுப்பது கோடி பூதங்கள் சூழ வந்தார். விட்டுணு, பிரமா, இந்திரன், திக்குப்பாலகர், தேவர்கள், சூரியன் சந்திரன் முதலிய கிரகங்கள், நக்ஷத்திரங்கள், சத்தமாதர்கள், அட்டவசுக்கள், விஞ்சையர்கள், இருடிகள் முதலிய யாவரும் வந்தார்கள். வேதங்கள், ஆகமங்கள், மந்திரங்கள், பிருதிவி முதலிய பூதங்கள், உலகங்கள், நகரங்கள், காலங்கள் முதலியனவெல்லாம் தைவத வடிவங்கொண்டு வந்தன.

இவ்வண்ணமே திருக்கைலாசமலையில் யாவரும் யாவும் வந்த தன்மையைத் திருநந்திதேவர் கண்டு மிக மகிழ்ந்து, உள்ளே புகுந்து, சிவபெருமானுக்கு விண்ணப்பஞ்செய்தருள, சிவபெருமான் "யாவரையும் இங்கே அழைத்துக்கொண்டு வரக்கடவாய்" என்று பணித்தருளினார். அதுகேட்ட திருநந்திதேவர் முதற்கடையை அடைந்து, அங்கு நின்ற உருத்திரர்கள், தேவர்கள், முனிவர்கள் முதலிய யாவரையும் திருக்கோயிலினுள்ளே செல்ல விடுத்தார். விடுத்தகாலையில், அவர்களெல்லாரும் திவ்விய சிங்காசனத்தின்மீது எழுந்தருளியிருக்கும் பரம கிருபாளுவாகிய சிவபெருமானைத் தரிசித்து, பேரன்போடு வணங்கி வணங்கி எழுந்து, சிரசின்மீது குவித்த கைகளோடு அவருடைய திருப்புகழைத் துதித்துக்கொண்டு சந்நிதியை அணுகினார்கள். திருநந்திதேவர் அங்கு நின்ற உருத்திரர் முதலிய யாவரையும் தம்முடைய திருவிரலினாலே வெவ்வேறாகச் சுட்டிக் காட்டி விண்ணப்பஞ்செய்தார்.

அப்பொழுது பிரமதேவர் எம்பெருமான் அணியும்பொருட்டு முடி முதலிய பலவகைப்பட்ட திவ்வியாபரணங்களையும் படைத்து ஒரு பொற்பீடிகையிலே கொண்டுபோய்த் திருமுன் வைத்து, வணங்கி நின்று, "எம்பரமபிதாவே, உமக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை. அடியேங்கள் உய்யும்பொருட்டுத் திருக்கல்யாணஞ் செய்யத் திருவுளங் கொண்டருளினீர். உமது திருமேனியிலுள்ள சர்ப்பாபரணங்களை ஒழித்து, இவ்விரத்தினாபரணங்களை அணிந்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார். அதுகேட்ட மகாதேவர் திருப்புன்முறுவல்செய்து, "பிரமனே, நீ அன்போடு தந்தமையால் நாம் இவற்றை அணிந்தாற்போல மகிழ்க்

தேம்" என்று திருவாய்மலர்ந்து, அவ்வாபரணங்களைத் தமது திருக்கரத்தினாலே தொட்டருளினார். பின்பு தமது திருமேனியிலுள்ள சர்ப்பாபரணங்களை இரத்தினாபரணங்களாகும்வண்ணம் திருவுளங்கொண்டருள, அவை அவ்வாறாயின. அதுகண்டு, யாவரும் அற்புதமடைந்து, வணங்கினார்கள்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கல்யாணப்படலம்.

சிவபெருமான், இமையமலைக்குச் செல்லத் திருவுளங்கொண்டு, தமது பக்கத்துள்ள கணநாதர்களுக்குக் குறிப்பாலுணர்த்தி, சிங்காசனத்தினின்றும் எழுந்து, திருநந்திதேவர் துதித்துக்கொண்டு முன்னே செல்ல, தேவர்களும் முனிவர்களும் புகழ, தும்புருநாரதர்களும் விஞ்சையர்களும் இசை பாட, வேதாகமங்கள் துதிக்க, தமது செம்பொற்றிருக்கோயிலினின்றும் நீங்கி, தமது திருவடிகளைக் குண்டோதரருடைய புயத்தின்மீது வைத்து, சின்மயமாகிய இடபத்தின்மேல் ஏறியருளினார். எம்பெருமான் இடபத்தின்மீது தோன்றி விளங்க, பக்கத்து வந்தவர்களும் திருக்கோயிற்புறத்து நின்றவர்களுமாகிய யாவருங் கண்டு கண்களித்து, வணங்கித் துதித்து, கடல்போல ஆர்த்தார்கள். மகாதேவர் இடபமேற்கொண்டு எழுந்தருளும்போது, விநாயகக்கடவுள் ஐந்நூற்றேழுகோடி பூதங்கள் சூழ வந்து, வணங்கிக்கொண்டு, முன்னே சென்றருளினார். சூரியனும் சந்திரனும் குடையையும், வாயு சாமரத்தையும், வருணன் சாந்தாற்றியையும், இந்திரன் ஆலவட்டத்தையும், எடுத்துக்கொண்டு, பக்கத்தே தத்தம் பணிகளைச் செய்தார்கள். பூதர்கள் பலவகைப்பட்ட வாத்தியங்களை முழக்கினார்கள். எம்பெருமானுடைய ஏவலினாலே, உருத்திரர்களும், பிரமவிட்டுணுக்களும், முனிவர்களும், பிறரும் தேர், விமானம், மிருகம், பறவை முதலிய தங்கள் தங்கள் வாகனத்தின்மேற்கொண்டார்கள். இவ்வண்ணமே யாவருஞ் சூழ்ந்து செல்ல, சிவபெருமான் திருக்கைலாசமலையை அகன்று, உலகம் வாழும்வண்ணம் இமையமலைமீது சென்றருளினார்.

அதனையறிந்த மலையரையன் தன்சுற்றத்தாரோடும் எதிர்கொண்டு வணங்கி, தன்னுடைய ஓஷதிப்பிரஸ்தமென்னும் நகரத்துக்கு அழைத்துக்கொண்டு போயினான். சிவபெருமான் அந்நகரத்துள்ள வீதிகளைக் கடந்து, பார்ப்பதியம்மையாருடைய திருக்கோயிலுக்கு அணித்தாகச் சென்றருளினார். அப்பொழுது மலையரையனுடைய ஏவலினாலே, இருடிகள் பல பூரண கும்பங்களை ஏந்திக்கொண்டு வந்தார்கள்; மகளிர்கள் அட்டமங்கலங்களைக் கொண்டுவந்து காட்டினார்கள்; வேறு பல மகளிர்கள் நீராசனஞ்சுற்றினார்கள். திருமணச்சாலைக்கு முன் சென்றவுடனே, யாவரும் தங்கள் தங்கள் வாகனத்தினின்றும் இறங்க, ஞானநாயகராகிய சிவபெருமான் இடபவாகனத்தினின்றும் இறங்கியருளினார்.

அப்பொழுது மேனை அரம்பையர்களோடு வந்து, எம்பெருமானுடைய திருவடிகளைக் காமதேனுவின்பாலினாலாட்டி, கைதொழுதுகொண்டு திரும்பினாள்.

உடனே சிவபெருமான் திருநந்திதேவர் கொண்டுவந்து வைத்த பாதுகையின் மேலே தம்முடைய அருமைத்திருவடிகளைச் சேர்த்தி, இருபக்கத்தும் பிரமாவும் விட்டுணுவும் கைகொடுப்ப, தமது திருக்கரங்களினாலே பற்றிக்கொண்டு, நானாவிதவாத்தியங்கள் ஒலிக்க, தேவர்கள் துதிக்க, வித்தியாதரர்கள் பாட, கணங்கள் ஆரவாரிக்க, உருத்திரர்கள் சூழ, திருக்கோயிலினுள்ளே சென்று, பிரமாவும் விட்டுணுவும் வேண்ட, அங்குள்ள அழகுகளனைத்தையும் திருநந்திதேவர் காட்டச் சென்று சென்று பார்த்தருளினார்.

வேதங்களுக்கும் எட்டாது நின்ற பரமபதியாகிய சிவபெருமான் அழகனைத்தையும் பார்த்துக்கொண்டு, திருமணச்சாலையினுள்ளே சென்று, இந்திரநீலரத்தினாசனத்தின்மேலே வீற்றிருந்தருளினார். வீற்றிருந்தருளும்பொழுது, வீரபத்திரர், காலாக்கினிருத்திரர், கூர்மாண்டேசர், ஆடகேசுரர், ஐயனார் முதலிய உருத்திரர்களும், பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானைச் சூழத் தங்கள் தங்களுக்குரிய ஆசனத்தின்மேலிருந்தார்கள். அப்பொழுது, திருக்கல்யாணத்தைத் தரிசிக்கும்பொருட்டு எப்புவனத்தினுமுள்ள யாவரும் வந்து கூடினமையால், இமயமலை நடுங்கியது. பூமியின்வடபால் தாழ, தென்பால் மிகவுயர்ந்தது. உடனே தேவர்கள் முதலிய யாவரும் ஏங்கி வருத்தமுற்று, "சிவனே சிவனே" என்று ஓலமிட்டார்கள். சிவபெருமான் அது கண்டு, திருமுறுவல்செய்து, அவர்களுடைய குறையை நீக்கத் திருவுளங்கொண்டு, திருநந்திதேவரை நோக்கி, "அகத்தியமுனிவனை இங்கே அழைத்துக்கொண்டுவா" என்று பணித்தருளினார். திருநந்திதேவர் வணங்கிக்கொண்டு போய், அகத்தியமுனிவரைக் கூவ, அவர் அங்கு வந்தார். அவரை அழைத்துக்கொண்டுபோய்ச் சிவபெருமான்றிருமுன் விடுப்ப, அவர் திருவடிகளை வணங்கி அஞ்சலிசெய்துகொண்டு நின்றார். சிவபெருமான் அகத்தியமுனிவரை நோக்கி, "முனிவனே, இங்கே யாவரும் வந்து கூடினமையால், வடபால் தாழத் தென்பால் மிகவுயர்ந்தது. இதனால் உயிர்களெல்லாம் மிகக் கலங்குகின்றன. மந்தரமுதலிய மலைகளும் மகாமேருவும் தளர்வுறடையும். ஆதலால், நீ இம்மலையினின்று நீங்கித் தென்னாட்டிற்சென்று பொதியமலையின்மேல் இருக்கக்கடவாய். அது செய்வையாயின் பூமிமுழுதும் முன்போலச் சமமாய்விடும்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட அகத்தியமுனிவர் அச்சம்பொருந்தி, "பரமகருணாநிதியாகிய பிதாவே, அடியேன் யாதாயினும் அபராதஞ்செய்தேனோ! கொடியேனை இங்கே இருக்கும்வண்ணம் பணித்தருளாது தூரத்தே செல்லும் வண்ணம் திருவாய்மலர்ந்தருளுகின்றீர்" என்று விண்ணப்பஞ்செய்தார். சிவபெருமான் அகத்தியமுனிவரை நோக்கி, "உனக்கு ஒப்பாகிய முனிவர்கள் உலகத்து உண்டோ, இல்லை. பிரமனும் உனக்கு ஒப்பல்லன். ஆதலால், நீ நினைந்த யாவையும் தவறின்றி முடிக்கவல்லை. இவ்வரியசெய்கை மற்றைமுனிவர்களாலேனும் தேவர்களாலேனும் முடியுமா! யாவரினும் மேலாகிய உன்னாலேமாத்திரம் முடியும். போகக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அகத்தியமுனிவர் "எமது பரமபிதாவே, பிரமாவும் விட்டுணும் இந்திரனும் நிற்க, இச்செய்கையை அடியேன் செய்யும்வண்ணம் பணித்தருளினீர். இதனால் நான் செய்ததே தவம்போலும். அடியேனுக்கு இப்பணியைப் பணித்தருளினீராயின், உமது திருமணக்கோலத்தை வணங்காது பிரிதலாற்றாமையால் என்மனம் மிகக்

கவல்கின்றதே. இதற்கு யாது செய்வேன்" என்று விண்ணப்பஞ்செய்தார். அதற்குக் கைலாசபதி "முனிவனே, நீ சிறிதுங்கவலாது பொதியமலைக்குச் செல்லக்கடவாய். நாம் அங்கு வந்து, நமது கல்யாணக்கோலத்தை உனக்குக் காட்டுவோம். நீ மகிழ்ந்து, தரிசிக்கக்கடவை. நம்மைத் தியானித்துக்கொண்டு அங்கே சிலநாளிருந்து, பின்பு முன்போல நமது பக்கத்து வருவாயாக" என்று அருளிச்செய்தார்.

அகத்தியமுனிவர் அதற்கிசைந்து, மகாதேவருடைய திருவடிகளைப் பல முறை வணங்கி, எழுந்து நின்று, அஞ்சலிசெய்து, துதித்து, பெருமூச்செறிந்து, அரிதினீங்கி, தென்றிசையை நோக்கிச் சென்று, பொதியமலையை அடைந்தார். முப்புரத்தையுந் தகிக்கத் திருவுளங்கொண்டு தாமேறிய பூமியாகிய தேரை ஒரு திருவடியாலூன்றிப் பாதலத்திட்ட சிவபெருமானுடைய திருவுருவைத் தியானித்துக்கொண்டு, அப்பொதியமலையில் எழுந்தருளியிருந்தார். இருக்க, வடபாலும் தென்பாலும் துலைத்தட்டுப்போலச் சமமாயின. அப்பொழுது ஆன்மாக்களெல்லாம் துன்பநீங்கி, சிவபெருமானைத் துதித்து மகிழ்ச்சியுற்றன.

அகத்தியமுனிவர் சென்றபின்பு, இமையமலையிலே தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானுடைய திருவருணீர்மையை எடுத்துத் துதித்தார்கள். அப்பொழுது மலையரையனுடைய ஏவலினாலே, உலகமாதாவாகிய உமாதேவியார், துர்க்கை காக்க, இந்திராணி அடைப்பை ஏந்த, கங்கைள் சாமரம் வீச, காளிகள் குடை பிடிக்க, இலக்குமி கைகொடுப்ப, சரசுவதி துதிக்க, எழுந்தருளிவந்து, திருமணச்சாலையை அடைந்து, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கினார். அதுகண்ட சிவபெருமான் "நம்பக்கத்தே இருக்கக்கடவாய்" என்று பணித்தருள, பார்ப்பதியார், இலக்குமி முதலியோர் யாவருந்துதிக்க, எழுந்தருளியிருந்தார். அப்பொழுது மேனை தீர்த்தமும், சந்தனமும், மலர்களும் பிறவுங் கொண்டு வந்தாள். மலையரையன் சிவபெருமானை வணங்கிக்கொண்டிருந்து, மேனை கரகநீர் விடுப்ப, அவருடைய திருவடிகளை விளக்கி, சந்தனத்தாலும் நறுமலராலும் பூசைசெய்தான். பூசைசெய்தபின்பு, உமாதேவியாருடைய திருக்கரத்தைச் சிவபெருமானுடைய திருக்கரத்தில் வைத்து, "நான் என்புதல்வியாகிய உமாதேவியை உமக்குத் தந்தேன்" என்று வேதமந்திரங்களைச் சொல்லித் தாராதத்தஞ்செய்தான். அப்பொழுது அரம்பையர்கள் ஆடினார்கள்; சித்தர்களும் கந்தருவர்களும் தும்புருநாரதர்களும் இசைபாடினார்கள்; தேவர்களும் முனிவர்களும் வேதங்களைச் சொன்னார்கள்; இலக்குமியும் சரசுவதியும் பிறரும் மங்கலம்பாடினார்கள்; பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழக்கினார்கள். மலையரையன் பசுப்பால், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், நெய், தேன் முதலியவற்றைப் பாசனத்திலிட்டு, சிவபெருமான் திருமுன் வைத்து, "எம்பெருமானே, இவற்றைத் திருவமுது செய்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தான். சிவபெருமான் அவற்றைத் திருக்கரத்தினாலே தொட்டு, திருவருள்சுரந்து, "நாம் இவற்றை அமுதுசெய்தாற்போல உவந்தேம். நீ எடுத்துக்கொள்ளக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். மலையரையன் பேரன்போடு அந்நிருமாலியத்தை எடுத்து, மலர், கந்தம், தீர்த்தம் என்பவற்றோடும் ஒருபக்கத்தே வைத்தான்.

பிரமதேவர் சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே, பூமியினும் சுவர்க்கத்தினும் உள்ளோர் யாவரும் தங்கள் தங்களுக்கு அடுத்த விவாகச்சடங்கைச் செய்யும்வண்ணம் சர்வலோகத்துக்கும் நாயகராகிய நீர் நடத்தியருளல்வேண்டும். ஆதலால், இனிச் செயற்பாலதாகிய விவாகச்சடங்கை முற்றுவிக்கும்பொருட்டு அனுமதிசெய்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார். அதற்குச் சிவபெருமான் திருமுறுவல்செய்து, இயைந்தருள, பிரமதேவர் அக்கினியையும் அதற்கு வேண்டும் பொருள்களையும் வருவித்து, பிருகற்பதியும் சுக்கிரனும் மற்றைமுனிவர்களும் பக்கத்தே சூழ, விவாகச்சடங்கனைத்தையும் செய்து முடித்தார். முடித்த பின்பு, சிவபெருமானையும் உமாதேவியாரையும் அங்குள்ளோர் யாவரும் வணங்கினார்கள். மகாதேவரும் தேவியாரும் அவர்களெல்லாருக்கும் திருவருள்செய்தார்கள். அதுகண்டு, மலையரையன் "இதுவே ஏற்ற சமயம்" என்று நினைந்து, சிவபெருமானுடைய தீர்த்தம், மலர், சந்தனம், அவி முதலியவற்றைப் பிரமா முதலிய தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிறருக்குங்கொடுப்ப, அவர்கள் யாவரும் அவற்றை மெய்யன்போடு அணிந்து உட்கொண்டு, "நம்முடைய வினைகளெல்லாம் இன்றே கழிந்தன" என்று பெருமகிழ்ச்சியுற்றார்கள். அதன்பின் மலையரையனும் மேனையும் அவர் சுற்றத்தாரும் பிறரும் அணிந்து உட்கொண்டு, இன்பமடைந்தார்கள்.

அப்பொழுது தாபதநிலையாளாகி * அங்கிருந்த இரதி வந்து சிவபெருமானை வணங்கி நின்று, "சுவாமீ, அடியேனுடைய துன்பத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பஞ்செய்தாள். சிவபெருமான் அதுகேட்டு, "இரதியே, நீ வருந்தாதொழி" என்று திருவாய்மலர்ந்து, மன்மதன் வந்துதிக்கும்வண்ணம் திருவுளங்கொண்டருளினார். உடனே மன்மதன் தோன்றி, சிவபெருமானை வணங்கித் துதித்து, "கிருபாசமுத்திரமாகிய சுவாமீ, அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். சிவபெருமான் மன்மதனை நோக்கி, "நாம் உன்னைக் கோபித்தாலன்றோ பின்பு அது தணிவது. மனம் வருந்தாதொழி. நம்முடைய அக்கினிக்கண்ணினாலே உன்சரீரம் விரைந்து சாம்பராயிற்று. அது கண்டு உன்மனைவியாகிய இரதி உன்னை உயிர்ப்பிக்கும்பொருட்டு நம்மைப் பிரார்த்தித்தாள். நீ அவளுக்குமாத்திரம் உருவமாயிருக்கக்கடவாய். மற்றைத் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் அருவமாயிருந்துகொண்டு உன்னரசியலை நடாத்தக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்து, அவனுக்கு உரிய அரசையும் சிறப்பையும் ஆணையையும் வலியையுங்கொடுத்து, இரதியோடும் தன்னகரத்திற்குச் செல்லும்வண்ணம் விடைகொடுத்தருளினார். மன்மதனும் இரதியும் சிவபெருமானை வணங்கிக்கொண்டு போனார்கள்.

அதன்பின் சிவபெருமான் உமாதேவியாரோடு சிங்காசனத்தினின்றும் இறங்கி, உருத்திரர்களும் தேவர்களும் முனிவர்களும் பிறருந்துதிக்கப் பூதர்கள் வாத்தியங்களை முழக்கச் சென்று, இடபவாகனத்தின்மீதேறி, உமாதேவியாரைத் தமது பக்கத்திருத்தித் தழுவிக்கொண்டு இடபவாகனத்தை நடத்தி, இமையமலையைக் கடந்து, திருக்கைலாசமலையை அடைந்தார். அடைந்தவுடனே, விட்டுணுவையும், பிரமாவையும், மலையரையனையும், இந்திரனையும், தேவர்களையும், முனி

* தாபதநிலை - கணவனை இழந்தாள் நோற்கும் விரதவொழுக்கம்.

வர்களையும், தங்கள் தங்கள் இடங்களுக்குச் செல்லும்வண்ணம், முன்னே விடுத்தருளினார். பின்பு காலாக்கினிருத்திரர், கூர்மாண்டேசர், ஐயனார், வீரபத்திரர் முதலிய உருத்திரர்களுக்கும், விநாயகக்கடவுளுக்கும், கணநாதர்களுக்கும் விடை கொடுத்து, திருக்கோயிலினுள்ளே புகுந்து, இடபவாகனத்தினின்றும் இறங்கி, உமாதேவியாரோடு சென்று, சிங்காசனத்தின்மேல் முன்போல வீற்றிருந்தருளினார். உயிர்க்குயிராகிய சிவபெருமான் உமாதேவியார் தமது பக்கத்திலே பொருந்த வீற்றிருந்தருளலும், ஆண் பெண் என்னும் இருபாலினவாகிய உயிர்களெல்லாம் முன்னைத் துன்பநீங்கி, இன்பத்தோடு போகத்தையனுபவித்துக் கொண்டிருந்தன.

திருச்சிற்றம்பலம்.

திருவவதாரப்படலம்.

இவ்வாறே பற்பலநாட்செல்லலும், பின்னொருநாளிலே, பிரமா, விட்டுணு, இந்திரன், திக்குப்பாலகர், முனிவர்கள், தேவர்கள் முதலிய யாவரும் மகாமேருமலையிலே கூடி, சூரனால் மிகமெலிந்து, "சிவபெருமான் உலகத்தை அசுரர்களுக்குக் கொடுத்து, யோகிபோலிருந்துகொண்டு, நமக்குத் துன்பத்தை விளைத்தார். நாம் போய்ப் பிரார்த்தித்தலும், திருவுளமிரங்கி உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ்செய்தார். செய்தும், ஒரு திருக்குமாரரைப் பெற்று நம்மைக் காத்தருளாது வாளாவிருப்பதென்னை! விருப்பும் வெறுப்புமின்றி யாவருக்கும் ஓரியல்புடையராகி அவரவர் வினைகளை அறிந்து அததற்குரிய பயன்களைக் கொடுத்தருளுஞ் சிவபெருமானை நாம் வெறுத்தல் குற்றம். நாம் அருந்தவஞ்செய்யாது தவறு செய்தேம் என்று நம்மை நோதலே தகுதி. ஆயினும், எம்பெருமானுடைய திருவடிகளை அடைந்து வழிபடின், தீயனவெல்லாம் நீங்கும், நல்லனவெல்லாம் ஆகும். இது திண்ணம். ஆதலால், இன்னும் கைலாசபதிக்கு இதனை விண்ணப்பஞ்செய்யும்பொருட்டு நாமெல்லாம் போகக்கடவேம்" என்றார்கள். அப்பொழுது பிரமதேவர் "சிவபெருமானுடைய செய்கையை நாம் கேட்டறிந்துகொண்டே போதல்வேண்டும். ஒரு தூதனை முன்னே விடுத்தறிவேம்" என்று சொல்லிக்கொண்டு, வாயுதேவனை நோக்கி, "மைந்தனே, நீ திருக்கைலாசமலையிலுள்ள திருக்கோயிலிற்சென்று, சிவபெருமானுடைய செய்கையை அறிந்துகொண்டு வருவாயாக" என்றார். அதுகேட்ட வாயுதேவன் "மன்மதனையெரித்த சிவபெருமானுதிருமுன் செல்லுதல் அரிது. செல்லிற்றீமையே விளையும். இச்செய்கை என்னால் முடிவதன்று. என்மனம் அஞ்சுகின்றது" என்றான். பிரமதேவர் வாயுதேவனை நோக்கி, "அஞ்சாதே. வலிமையுடனே எங்கும் உலாவும் இயல்பினையுடைய நீயேயன்றி இது செய்யவல்லவர் வேறொரு தேவருண்டோ, இல்லை. உற்றவிடத்து உதவிசெய்வோரும், வரையாது கொடுப்போரும், தவஞ்செய்வோரும், போர்செய்யும் வீரரும் பிறிதொருபொருளையும் விரும்பார், வருத்தத்தையும் பாரார், உயிர் நீங்க வரினும் கவலாது நன்றென்று மகிழுவர். ஆதலால், எங்களுக்கெல்லாம் உதவிசெய்யும்பொருட்டு நீ போகக்கடவாய்" என்றார்

அதற்கு வாயுதேவன் உடன்பட்டெழுந்து, விடைபெற்றுக்கொண்டு, திருக்கைலாசமலையிற்சென்று, அதன்பக்கத்திலே வீழும் நதியில் ஆடி, பூஞ்சோலையின் மலர்களிலுள்ள நறுமணம் அளாவி, தென்றலாய் அசைந்துகொண்டு மெல்லத் திருக்கோயிலினுள்ளே செல்வானாயினான். முற்றக்கடைவாயிலின் எழுந்தருளியிருக்குந் திருநந்திதேவர் அதுகண்டு, மிகக்கோபித்து உரப்பினார். உரப்பலும், இடியொலிகேட்ட பாம்புபோல வாயுதேவன் சிறிதும் வலியின்றி வெருவி விழுந்தான். விழுந்த வாயுதேவன் எல்லையில்லாத அச்சத்துடனே இரங்கி எழுந்து, முன்னையுருவங்கொண்டு தோன்றி, திருநந்திதேவருடைய திருவடிகளை வணங்கி, "பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும் சிவபெருமானைத் தரிசிக்க நினைந்து, என்னை நோக்கி, 'நீ விரைந்து சென்று சமயம் அறிந்துகொண்டு வருவாயாக' என்றார்கள். அதற்கு நாயேன் 'சிவபெருமானுடைய திருவிளையாடலை அறிதல் அரிது. அவரிடத்தே செல்ல நான் அஞ்சுகின்றேன்' என்று மறுத்தேன். அது கேளாது அவர்கள் மீண்டுந் தங்கள் வருத்தத்தைச் சொல்லிச் சிறியேனை வலிந்தேவினார்கள். ஆதலால், அடியேன் அஞ்சியஞ்சித் தென்றலாய் மெல்ல வந்தேன். உமக்கு இதனை விண்ணப்பஞ்செய்ய நினைந்திலேன். அறிவில்லாதேனுடைய பிழையைப் பொறுத்தருளுக. சூரபன்மனாலே மானநீங்கி வருந்தியினைந்துவிட்டேன். அதனாலே செய்யத்தக்கது இன்னது ஒழியத்தக்கது இன்னது என்று அறிகின்றிலேன். அறிவுமயங்கினேன். மற்றைத் தேவர்களும் இவ்வாறேயாயினர். எம்பெருமானே, உமது கோபத்துக்கு இலக்காயினார் ஒருவருமில்லை. சிறியேன்பொருட்டுக் கோபங்கொண்டருளலாமா? பொறுத்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். திருநந்திதேவர் கோபந்தணிந்து, "நாம் இங்கே உன்னுயிரைத் தந்தேம். நில்லாதே. மீண்டு போய்விடு" என்று ஏவியருளினார். வாயுதேவன் திருநந்திதேவரை வணங்கிக்கொண்டு, விரைந்து திருக்கைலாசமலையினின்று நீங்கி, மகாமேருமலையிலுள்ள தேவர்கூட்டத்தை அடைந்து, விட்டுணுவையும் பிரமதேவரையும் வணங்கி, திருநந்திதேவருடைய வன்மையையும் நிகழ்ந்த காரியத்தையும் விரித்துச் சொன்னான்.

விட்டுணுவும், பிரமதேவரும், இந்திரனும் அதுகேட்டு, பெருந்துயரக் கடலின் அழுந்தி, தம்முள் ஆராய்ந்து தெளிந்து, "எம்பெருமானுடைய செய்கையை அறிந்து வரும்பொருட்டு வாயுவை விடுத்தேம். அவன் திருநந்திதேவருடைய ஆணையினால் அஞ்சி நடுநடுங்கித் திரும்பிவிட்டான். இனி நாமெல்லாம் திருக்கைலாசமலையிற்சென்று சிவபெருமானுக்கு நம்முடைய குறையை விண்ணப்பஞ்செய்வதே துணிவு" என்றார்கள். இவ்வாறே எல்லாருந் துணிந்துகொண்டு, மகாமேருமலையினின்று நீங்கி, திருக்கைலாசமலையை அடைந்து, திருக்கோயிலின்முன் சென்று, திருநந்திதேவரை வணங்கி நின்று, "கருணாநிதியே, அடியேங்களுடைய துன்பமுற்றையுந் திருவுளத்திலடைத்து, மகாதேவருக்கு அடியேங்களுடைய வரவை விண்ணப்பஞ்செய்து, அடியேங்களைச் சந்நிதியிலே விரைந்து அழைத்துக்கொண்டுபோய் விட்டருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். திருநந்திதேவர் அவர்களை "நில்லுங்கள்" என்று நிறுவி, உள்ளே போய்ச் சிவபெருமானை வணங்கி நின்று, "பரமகிருபாலுவாகிய சுவாமீ, உம்முடைய திருவடிகளைத் தரிசிக்கும்பொருட்டுப் பிரம விட்டுணு முதலியோர் யாவரும் வந்து நிற்கின்றனர்" என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் "இங்கே

அழைத்துக்கொண்டு வா" என்று பணித்தருளினார். உடனே திருநந்திதேவர் சிவபெருமானை வணங்கிக்கொண்டு விரைந்து சென்று, "பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லீரும் வாருங்கள்" என்று கூவியருளினார். கூவியருளலும், முகிலினது பேரொலியைக் கேட்ட சாதகப்புட்கள்போலப் பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் மிக மகிழ்ந்து, உள்ளே சென்று, அருட்சத்தியாகிய உமாதேவியாரோடு வீற்றிருந்தருளிய பெருங்கருணைக்கடலாகிய மகாதேவர் சந்நிதியை அடைந்து, அவருடைய திருவடிகளைப் பலகாலும் வணங்கி எழுந்து, அஞ்சலிசெய்து நின்று, துதித்தார்கள்.

சிவபெருமான் தேவர்கண்மீது திருவருணோக்கஞ்செய்து, "நீங்கள் மிக வருந்தினீர்கள். உங்களுக்கு வேண்டும் வரம் யாது? சொல்லுங்கள், தருவேம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட தேவர்கள் "எம்பெருமானே, அடியேங்களெல்லாம் இந்நாள்காறும் சூரன் முதலிய அசுரர்களால் வருந்தினோம். இனி அவ்வருத்த நீங்கி முன்னையாக்கத்தை அடையும்பொருட்டுப் பரம கருணாநிதியாகிய உம்மிடத்தே ஒருவரம் வேண்டுகின்றோம். சருவான்மாக்களையும் பெற்ற நித்திய கன்னிகையாகிய உமாதேவியாரை நீர் திருக்கல்யாணஞ் செய்தமை தீவினைக்கடலினமுந்திய சிறியேங்களை ஆளுதற்கு ஒரேதுக் காட்டுதற்கன்றி அவரிடமாக ஒரு திருக்குமாரரைப் பெறுதற்கன்று. உற்பத்தியும், திதியும், நாசமும், அருவமும், உருவமும், ஒப்பும், ஏதுவும், போக்கும், வரவும், இன்பமும், துன்பமும் இன்றி நின்ற அநாதிமலமுத்தரே, ஒரு திருக்குமாரரை உமக்கொப்பாக உம்மிடத்தினின்றுந் தோற்றுவித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

சிவபெருமான் "நீங்கள் சிறிதும் வருந்தாதொழிமின். புதல்வனைத்தருவேம்" என்று திருவாய்மலர்ந்து, தமது பழைய ஆறு திருமுகங்களையுங்* கொண்டு, அத்திருமுகங்களினுள்ள நெற்றிக்கண்கடோறும் ஒவ்வோர் அக்கினிப் பொறியைத் தோற்றுவித்தருளினார். அவ்வாறு பொறிகளும், பிரம விட்டுணு முதலியோர் யாவரும் சிறிதும் அணுகலாற்றாத மிக்க வெம்மையை உடையனவாகி, உலகமெங்கும் பரந்தன. அப்பொழுது வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன; கடல்களெல்லாம் வற்றின; வடவாமுகாக்கினியும் தன்செருக்கு நீங்கிற்று; பூமி பிளந்தது; மலைகளெல்லாம் நெக்கன; அட்டநாகங்களும் நெளித்து நீங்கின; அட்டதிக்கயங்களும் அழுது தியங்கின; உயிர்களெல்லாம் நடுங்கின. சிவபெருமானுடைய நெற்றிக்கண்களினின்றும் தோன்றிய அக்கினிப்பொறிகள், பெருங்கருணை செய்யும்வண்ணம் பிறந்தனவாதலால், ஒருயிரையும் நாசஞ்செய்தில; எவர்களையும் எவைகளையும் அச்சமாத்திரஞ்செய்தன. அப்பொறிகளின் வெம்மையைக் கண்டு, சிவபெருமான் பக்கத்தே எழுந்தருளியிருந்த உமாதேவியார் வேர்த்துத் திருவுளங் கலங்கி எழுந்து, தமது திருவடிகளினுள்ள சிலம்புகள் புலம்பித் தாக்க, தமது திருக்கோயிலினுள்ளே ஓடினார். சிவபெருமான்றிருமுன்னர் நின்ற பிரமா முதலிய தேவர்களெல்லாரும் அவ்வக்கினிப்பொறிகளைக் கண்டு அஞ்சி நடுநடுங்கி, இடந்தோறும் வெருவியோடினார்கள். கடனடுவினுள்ள தெப்பத்தின் பாய்மரத்தை நீங்கிய காகம் பின்னும் அதனையே அடைதல்போல, அவ்வாறு

* ஐந்துமுகத்தோடு அதோமுகமொன்று கூட்டி ஆறுமுகமெனக் கொள்க.

ஓடிய தேவர்களெல்லாரும் பெருமூச்செறிந்துகொண்டு மீண்டும் எம்பெருமான் றிருமுன் வந்து வணங்கித் துதித்து, "பரமபிதாவே, அசுரர்களைக் கொல்லும் பொருட்டு ஒரு திருக்குமாரரைத் தந்தருளும்வண்ணம் வந்து பிரார்த்தித்தேம். நீர் முடிவில்லாத அக்கினியைத் தோற்றுவித்தருளினீர். எம்பெருமானே, அடியேங்கள் உய்வது எங்ஙனம்! முற்காலத்திலே உமாதேவியாருடைய திருக்கரத்தினின்றும் தோன்றிய கங்கைபோல இப்பொழுது உமது நெற்றிக்கண்களினின்றும் தோன்றிய அக்கினிப்பொறிகளும் உலகமெங்கும் பரந்தன. ஒருகணத்தினுள்ளே அவைகளை மாற்றுதொழிவீராயின், அவைகள் சருவான்மாக்களையும் அழித்துப்போடும். அக்கினிப்பொறியின் வெம்மையை ஆற்றாது அஞ்சி யோடிய நாங்கள் மீண்டும் உம்முடைய திருவடிகளையே அடைந்தேம். ஆராயுமிடத்து, அடியேங்களுக்குப் புகலிடம் உம்மையல்லாது பிறிதுண்டோ, இல்லை. அடியேங்களுடைய துன்பமுற்றையும் நீக்குதற்குரிய நீர் அடியேங்களுக்குத் துன்பமே செய்வீராயின், அதனை விலக்க வல்லவர் வேறியாவர்! உலகமுழுதையும் இறைப்பொழுதினுள்ளே முடிக்கின்ற இவ்வக்கினியை நீக்கி எங்கள் குறையை முடித்தருளுக" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அப்பொழுது சிவபெருமான் தேவர்களை நோக்கி, "அஞ்சாதொழிமின்கள்" என்று கையமைத்து, புதியனவாகத் தோன்றிய ஐந்துதிருமுகங்களையும் மறைத்து, ஒரு திருமுகத்தோடு முன்போல எழுந்தருளியிருந்து, தம்முடைய நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றி உலகமெங்கும் பரந்த அக்கினிப்பொறிகள் தமது திருமுன் வரும்வண்ணம் திருவுளங்கொண்டருளினர். உடனே எங்கும் பரந்த அக்கினி முன்போல ஆறுபொறிகளாய் வந்து சந்நிதியை அடைந்தது. அது கண்டு, சிவபெருமான் வாயுதேவனையும் அக்கினிதேவனையும் நோக்கி, "நீங்களிருவீரும் இவ்வக்கினிப்பொறிகளைத் தாங்கிக்கொண்டு சென்று கங்கையில் விடக்கடவீர்கள். அஃது இவைகளைச் சரவணப்பொய்கையிலே கொண்டுசென்றுய்க்கும்" என்று பணித்தருளினர். வாயுதேவனும் அக்கினிதேவனும் அதுகேட்டு, மனவருத்தமுற்று நடுநடுங்கி, மும்முறை வணங்கி, "எம்பெருமானே, ஒருநொடிப்பொழுதினுள்ளே உலகங்களெல்லாம் பரந்த இவ்வக்கினிப்பொறிகள் உமது திருவருளினலே சிறுகின. அரிது அரிது! இவைகளை அடியேங்கள் தாங்க வல்லமா! உலகத்தைச் சங்கரிக்கும் உமது நெற்றிக்கண்ணினின்றும் தோன்றிய இவ்வக்கினியைப் பிரமவிட்டுணுக்கடாமும் ஒரு கணப்பொழுதாயினும் தாங்க வல்லவர்களா! முற்காலத்தெழுந்த ஆலாகலம்போலப் படர்ந்த இவ்வக்கினியைக் கண்டவுடனே நில்லாது வருந்தி ஓடினேம். இவற்றை அணுகவும் அஞ்சுகின்றேம். இவ்வாறாக, இவற்றை நாங்கள் சிரமேற்கொண்டு செல்லுதல் கூடுமோ! இவ்வக்கினியை அடைதற்கு நினைப்பினும் எழாது உள்ளம் வெப்புறுகின்றது; சரீரம் வேர்க்கின்றது. நாங்கள் எப்படித் தாங்குவோம்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான் "இவ்வக்கினிப்பொறிகளைச் [illegible]து சென்று கங்கையில் விடும்பொருட்டு உங்களுக்குத் திண்மை உண்டாகுக" என்று திருவாய் மலர்ந்தருளினர். வாயுதேவனும் அக்கினிதேவனும் அதற்கிசைந்து, சிவபெருமானைத் துதித்தார்கள். அதுகண்ட பிரமவிட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் துளக்க நீங்கி, "எங்கள் துன்பம் இன்றே நீங்கியது" என்று மனமகிழ்ந்து, சரீரம் பூரித்தார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "இவ்வக்கினி சரவணப்

பொய்கையிலே சேர்ந்து, ஒரு குமாரனாய் வளர்ந்து, சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று உங்களுக்கு அருள்செய்யும். நீங்களெல்லீரும் போங்கள்" என்று திரு வாய்மலர்ந்தருளினார். பிரம விட்டுணு முதலிய தேவர்கள் "உய்ந்தனம் உய்ந் தனம். இனி அடியேங்களுக்கு ஓர் குறையுமில்லை" என்று சொல்லி, சிவபெரு மானை வணங்கிக்கொண்டு அங்குநின்று நீங்கினார்கள்.

வாயுதேவன் சிவபெருமானுடைய திருவடிகளை அக்கினிதேவனோடு வண ங்கி எழுந்து, அவருடைய திருவருளினாலே அக்கினிப்பொறிகளாறையும் சிர மேற்றாங்கிக்கொண்டு, திருக்கோயிலை நீங்கிச் செல்வானாயினான். அதனைப் பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் பெருமகிழ்ச்சியோடு கண்டு, "சுத்த சிவ சோதியாகிய எம்பெருமான் தமது நெற்றிக்கண்ணினின்றும் ஒரு திருக்கு மாரரை அக்கினிவடிவமாகத் தோற்றுவித்தருளினார். சூரபன்மன் இறத்தற்கும் நாம் முன்னையாக்கத்தைப் பெறுதற்கும் இன்னஞ் சிலநாளிருத்தலால், சிவபெரு மான் தம்முடைய திருக்குமாரர் சரவணப்பொய்கையிலே குழந்தையாக வளரும் வண்ணம் அருள்செய்தார். சிவபெருமானுடைய செயல்களெல்லாம் திருவருளே. இங்கே அக்கினியைத் தோற்றுவித்ததும் எம்மாட்டுள்ள பெருங்கருணையா யிற்றே. இதுவே அதற்குச் சான்று. இனி அசுரரெல்லாம் இறந்தனர். நங்குறை தீர்ந்தது. நாமும் சரவணப்பொய்கைக்குச் செல்வேம்" என்றார்கள். அக்கினிப் பொறிகளைத் தாங்கும் வாயுதேவன் தங்களுக்குமுன் செல்ல, திருக்கைலாசமலை யைக் கடந்து செல்வாராயினார்கள். ஒருநாழிகை செல்ல, வாயுதேவன் "இவ்வக் கினிப்பொறிகளைத் தாங்குதல் அரிது அரிது" என்று புலம்பி, சிவபெருமானு டைய திருவருளினாலே வலிமை பெற்ற அக்கினிதேவனுடைய சிரசிலே அப் பொறிகளைச் சேர்த்தினான். சேர்த்தலும், அக்கினிதேவன் சரீரம் வேர்த்து மிக, மெலிந்து ஒருநாழிகையிலே தாங்கிக்கொண்டு, பிறிதொருநாழிகை தாங்கலாற் றாது விரைந்து சென்று, அவைகளைக் கங்கையில் விடுத்தான். அப்பொறிகள் வந்தடைந்தவுடனே, கங்கையானது, சிவபெருமானுடைய சடையின் மறைந் தமைபோல, வறந்தது. சிவபெருமானுடைய திருவருளையறிந்து கங்கையானது அப்பொறிகளைத் தன் சிரமேலேந்திக்கொண்டு ஒருநாழிகையினுள்ளே சென்று, சரவணப்பொய்கையில் விடுத்தது. பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் அதுகாறும் வந்து, அண்ணியதாகிய விளைவை நாடிக் காக்கும் வறியார்போலச் சரவணப்பொய்கையைப் பேருவகையோடு சேர்ந்தார்கள். பிரமா ஆகாயத்தினும், விட்டுணு பூமியினும், இந்திரன் முதலிய திக்குப்பாலகர்கள் எண்டிசைகளினும் நின்று காத்தார்கள். கங்கையும் வறக்கும்வண்ணம் புகுந்த அக்கினிப்பொறிக ளாறும் இமையமலைச்சாரலினுள்ள சரவணப்பொய்கையிலே புகுதலும், அது சிவபெருமானுடைய திருவருளினாலே வறத்தலின்றி முன்போலிருந்தது.

அருவமும் உருவமுமாய் அநாதியாய ஒன்றாய்ப் பலவாய்ப் பரப்பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பே திருமேனியாக, கருணைவெள்ளம் பொழியாநின்ற ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களுங்கொண்டு, முருகக்கடவுள், உலகம் உய்யும்வண்ணம், திருவவதாரஞ்செய்தருளினார். செய்தருளலும், ஆகாயத்திலே துந்துபிகள் ஒலித்தன; வேதங்களெல்லாம் ஆர்த்தன; பிரமாவும், விட்டுணுவும், இந்திரனும், முனிவர்களும் பூமாரி பெய்து, "அடியேங்களுக்கு அருள்செய்க"

என்று துதித்துச் சூழ்ந்தார்கள். உலகத்துள்ள உயிர்களெல்லாவற்றிற்கும் உவகைக்குறிப்புண்டாயின. சூரன் முதலிய அசுரர்களெல்லாருக்கும் இறப்பையுணர்த்துங் குறிப்புக்களுண்டாயின. வேதங்களாலும் மனத்தாலும் வாக்காலும் அறியொணாது எங்கும் நிறைந்து நின்ற நிருமலராகிய முதற்கடவுள் ஆறுதிருமுகங்களையுடையராய்த் தோன்றி, உயிர்களிடத்துள்ள பேரருளோடும் சரவணப்பொய்கையிலே செந்தாமரை மலரின்மீது வீற்றிருந்தருளினார்.

அம்முருகக்கடவுள் கைக்குழந்தைபோலச் செய்யுந் திருவிளையாடலைக் கண்டு, விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும் கார்த்திகை மகளிர்களைநோக்கி, "சரவணப்பொய்கையிலே ஆறுமுகக்கடவுளாய் வீற்றிருந்தருளும் எம்பெருமான் ஒரு குழந்தைபோலத் தோன்றினார். நீங்கள் அவருக்கு நாடோறும் உங்கள் முலைப்பாலைக் கொடுத்து, அவரை வளர்க்கக்கடவீர்கள்" என்றார்கள். கார்த்திகைமகளிர்கள் அறுவரும் அதற்கியைந்து, சரவணப்பொய்கையில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளை அடைந்து துதிக்க, அவ்வறுமுகக்கடவுள் தம்மை அடைந்தோர்க்கு வேண்டியன அருள்செய்யும் பெருங்கருணைக் கடலாதலால், வெவ்வேறாக ஆறுசிறுவர் வடிவங்கொண்டருளினார். கொண்டருளலும், கார்த்திகைமகளிர்கள் அறுவரும் மிக மகிழ்ந்து, அச்சிறுவர்களறுவரையும் வெவ்வேறெடுத்து, தங்கள் தங்கள் முலைப்பாலை ஊட்ட, அவ்வறுமுகக்கடவுள் திருமுறுவல்செய்து, நீங்காத பேரருளினாலே மிக வருந்தினார்போல உண்டருளினார். உண்டபின், ஆறுசிறுவராய் நின்ற ஒரு முதற்கடவுளை, அம்மகளிர்கள் சரவணப்பொய்கையினுள்ள தாமரைமலர்களாகிய சயனத்தின்மீது சேர்த்துத் துயில்செய்வித்துத் துதித்தார்கள். அம்முருகக்கடவுள், திருவருளினாலே, துயில்செய்ய ஒருருவமும், துயில்செய்து விரைந்தெழுந்து மதலைபேச ஒருருவமும், மாதாவின் முலைப்பாலைச் செம்பவளத்திருவாய்வைத்து உண்ண ஒருருவமும், நகைத்துக்கொண்டிருக்க ஒருருவமும், விளையாட ஒருருவமும், அழ ஒருருவமும், உடையராயினார். தவழ ஒருருவமும், தளர்ந்துசெல்ல ஒருருவமும், நில்லாது விரைந்து எழுந்து விழ ஒருருவமும், இருக்க ஒருருவமும், பொய்கையெங்குஞ் சென்றுழக்க ஒருருவமும், மாதாவிடத்திருக்க ஒருருவமும் உடையராயினார். கூத்தாட ஒருருவமும், செங்கைகொட்ட ஒருருவமும், பாட்டுப்பாட ஒருருவமும், பார்க்க ஒருருவமும், ஓட வோருருவமும், ஒளித்தொளிக்க ஒருருவமும் உடையராயினார். இவ்வாறே ஆறுதிருமேனியும் கணமொன்றினுள்ளே ஆயிரம் பேதமாம் வண்ணம், முழுமுதற்கடவுளாய் நின்ற குமாரசுவாமி எண்ணில்லாத திருவிளையாட்டைச் செய்தருளினார்.

பிரம விட்டுணு முதலிய தேவர்களும், முனிவர்களும், பிறரும் அதுகண்டு அற்புதமடைந்து, "இவ்வொருபாலரே பல சிறுவர் வடிவங்கொண்டு நம்முன்னே கணப்பொழுதினுள்ளே எண்ணில் பேதத்தராயினார். ஆராயுங்கால், இக்குமாரசுவாமியுடைய திருவிளையாடல் எங்களாலும் அறிவரியது. இவர் எல்லா மாயமுஞ் செய்யவல்லவர்; வரம்பில்லாத அறிவினையுடையர். கைக்குழந்தைபோலத் தோன்றிய இவர் செய்யும் இம்மாயைபோல ஒருவரும் செய்யவல்லரல்லர். பிறிது சொல்லி யென்னை! நாமும் இவ்வாறு செய்ததொன்றில்லை. இவர் உயர்வொப்பில்லாத சிவபெருமானேயாம்" என்று சொல்லி, வணங்கி நின்றார்கள்.

கீர்த்திகைமகளிர்கள் அறுவரும் அறுமுகக்கடவுளுடைய திருவிளையாடன் முழுதையும் நோக்கி நோக்கி, மிக்க அற்புதமடைந்து, குழந்தைகளெனக் கொள்ளுதலை ஒழித்து, சிறிதும் பிரியாது அஞ்சி, வழிபடு கடவுளாகவே கொண்டு, மெய்யன்போடு துதித்தார்கள்.

அறுமுகக்கடவுளுடைய திருவவதாரத்தைச் சொன்னோம். இனி அக்கடவுளுக்குத் தம்பியர்களாய் உமாதேவியாரிடத்தே இலக்கத்தொன்பதின்மர் உதித்த தன்மையைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

துணைவர்வருபடலம்.

சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய அக்கினிப்பொறிகளின் வெம்மையை ஆற்றாது, உமாதேவியார், திருவடிகளினுள்ள சிலம்புகள் தாக்கலால் நவரத்தினங்கள் சிதறும்வண்ணம், அஞ்சியோடினார். திருவுளத்திலே "விட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் சிவபெருமானை வணங்கி, 'நீர் ஒரு திருக்குமாரனைத் தந்தருளும்' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணினின்றும் அக்கினிப்பொறிகளைத் தோற்றுவித்து, ஒரு குமாரனாய் வளரும்வண்ணம் சரவணப்பொய்கையிலே சேர்ப்பித்தருளினார்" என்றுணர்ந்தார். அதன்பின் "எம்பெருமானுக்குக் குமாரன் என்னிடத்தே தோன்றாவண்ணம் தடுத்த பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களுடைய பன்னியர்களுக்கெல்லாம் புதல்வர்கள் இல்லாதொழிக" என்றார். உமாதேவியார் இவ்வாறே சொல்லிக்கொண்டு, மீண்டு சென்று, சிவபெருமான் சந்நிதியை அடைந்து, அவருடைய திருவடிகளை வணங்கி நின்று, "எம்பெருமானே, தேவர்களெல்லாரும் குறையிரப்ப, நீர் தோற்றுவித்தருளிய அக்கினிப்பொறிகளின் வன்மையையும் வெம்மையையும் கண்டு, வெம்பிச் சரீரமுற்றும் பதைபதைப்ப, ஓடினேன். பின்பு நீர் அவ்வக்கினிப்பொறிகளை இங்குநின்றும் அகற்றினமையால் மீண்டேன்" என்று விண்ணப்பஞ்செய்தார். சிவபெருமான் கருணைசெய்து, தேவியாரைத் தம்பக்கத்திருத்தியருளினார்.

உமாதேவியார் முன் ஓடியபொழுது, அவருடைய திருவடிச்சிலம்பினின்றுஞ் சிதறிய இரத்தினங்களெல்லாம் சிவபெருமான்றிருமுன் விளங்கின. சிவபெருமானுடைய ஆணையினாலே, அந்நவரத்தினங்களினும் உமாதேவியாருடைய திருவுருவந் தோன்றியது. அவ்வுருவங்களைச் சிவபெருமான் நோக்கி, திருவருளினால் "வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருள, ஒவ்வோரிரத்தினத்துக்கு ஒவ்வோர் சத்தியாக நவசத்திகள் தோன்றினார்கள். அவர்கள், சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி நின்று அவரிடத்தே விருப்பம் வைத்தமையால், இருடிபத்தினிகள்போல விரைவிலே கருப்பமுற்றார்கள். இவையாவையும் பார்ப்பதியார் கண்டு, அந்நவசத்திகண்மீது கோபங்கொண்டு, "நீங்கள் இங்கு நமக்கு மாறாயினமையால், பலகாலம் இக்கருப்பத்தோடிருக்கக்கடவீர்கள்" என்று சபித்தார். அப்

பொழுது நவசத்திகள் அஞ்சி நடுநடுங்கிச் சரீரம் வெயர்த்தார்கள். அவ்வெயர் வையினின்றும், தேவ தேவருடைய திருவருளினாலே, ஓரிலக்கவீரர்கள் உதித் தார்கள். அவ்வீரர்கள் இடியேறொக்கும் சொல்லையுடையர்களும், பொன்னு டையை உடுத்தவர்களும், வாளையும் பரிசையையும் கையிலேந்தினவர்களுமாய், சிவபெருமான் றிருமுன்சென்று, அவருடைய திருவடிகளை வணங்கித் துதித் துக்கொண்டு நின்றார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "நம் புதல்வர்களே, கேளுங்கள். தேவர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்களைக் கொல்லும்பொருட்டு, நமது புதல்வனாகிய முருகக்கடவுளுக்கு நீங்கள் யாவிரும் படைகளாகக் கட வீர்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அவ்வீரர்கள் இலக்கரும், நாடோ றும் பேரன்புடையர்களாய், சிவசந்நிதியை அகலாது, திருத்தொண்டின் வழி நின்றார்கள்.

முன்னே பார்ப்பதியார் சபிப்ப, நவசத்திகள் நடுநடுங்கி, அவ்வம்மையாரை வழிபாடுசெய்துகொண்டு, கருப்பத்தோடு பலகாலம் இருந்தார்கள். அந்நவசத்தி களுடைய கருவினுள்ளே நந்திகணத்தவர்கள் சிசுக்களாய்ப் புகுந்து, காளையர் களாகி, சிவபெருமானைச் சிந்தித்துத் தொழுதுகொண்டிருந்தார்கள். அவர்கள் இவ்வாறு யோகஞ்செய்துகொண்டிருத்தலால் கருப்பம் மிகப்பாரமாதலும், நவசத் திகள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி நின்று, "அடியேங்கள் இந்நாள்காறும் இக்கருப்பத்தினால் வருந்தினேம். இனித் தாங்கலாற்றேம். திரு வுளமிரங்கியருளுங்கள்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப்பொழுது சிவ பெருமான் திருவுளமிரங்கி, தேவியாருடைய திருமுகத்தை நோக்கி, "உமையே, உன்காற்சிலம்பினின்றும் உதித்த இந்நவசத்திகள் உன்சாபங் காரணமாக நெடுங் காலம் கருப்பத்தைச் சுமந்து மிக வருந்தினார்கள். இனிப் புதல்வர்களைப் பெறும் பொருட்டு அருள்செய்க" என்று பணித்தருளினார். உமாதேவியார் "நன்று" என்று அதற்கிசைந்து, திருமுறுவல்செய்து, நவசத்திகளை நோக்கி, "இனி நீங் கள் புதல்வர்களைப் பெறக்கடவீர்கள்" என்று திருவாய்மலர்ந்தருள, அவர்கள் வயிற்றினுள் யோகஞ்செய்துகொண்டிருக்கும் வீரர்கள் அதனையறிந்து, யோக த்தை விடுத்து, மனமிகமகிழ்ந்து, சிவபெருமானுடைய திருவருளை நினைந்து தொழுது, பிறக்கும்பொருட்டு நினைந்தார்கள்.

நவசத்திகள் உமாதேவியாருடைய பெருங்கருணைத் திருவாக்கைக் கேட்ட லும், கவற்சி நீங்கி, மகாதேவரையும் தேவியாரையும் வணங்கித் துதித்து, விடைபெற்றுக்கொண்டு அங்குநின்று நீங்கி, ஓரிடத்தே சென்று, புதல்வரைப் பெற்றார்கள். மாணிக்கவல்லியிடத்து வீரவாகுவும், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராகவல்லியிடத்து வீரமகேந்திரரும், கோமேதவல்லியிட த்து வீரமகேச்சுரரும், வைடூரியவல்லியிடத்து வீரபுரந்தரரும், வைரவல்லி யிடத்து வீரராக்கதரும், மரகதவல்லியிடத்து வீரமார்த்தாண்டரும், பவள வல்லியிடத்து வீராந்தகரும், இந்திரநீலவல்லியிடத்து வீரதீரரும், அவதரித் தார்கள். இவ்வீரர்களொன்பதின்மரும், சிவபிரானுடைய திருவருளினாலே, தங் கள் தங்கள் அன்னையர்களுடைய நிறத்தையுடையர்களாய், பொன்னுடையுடுத்த வர்களாய், பலகாலம் வளர்ந்த உறுப்புக்களோடும் நவசத்திகளுடைய உந்தியின் வழியே பிரமதேவரைப்போல் உதித்தார்கள். இவ்வண்ணம் உதிக்க வீரர்கள்

சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி எழுதலும், சிவபெருமான் பார்ப்பதியாரை நோக்கி, "நம்மைந்தர்களாகிய இவர்கள் அறிவுடையர்கள், ஆற்றலுடையர்கள்; மானமாகிய அருங்கலமுடையர்கள். இவர்கள் புதியர்களல்லர், நந்திகணத்தவர்கள்" என்று சொல்லியருளினார். தேவியார் அதுகேட்டு, அம்மைந்தர்களுக்குத் திருவருள்புரிந்தார். சிவபெருமான் அவர்களெல்லாருக்கும் தனித்தனி வாள்கொடுத்து, "ஓரிலக்கமைந்தர்களோடு நீங்களுங்கூடி, உங்களுக்கு நாயகனாகிய அறுமுகக்கடவுளை நீங்காது, அவன் பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டொழுகக்கடவீர்கள்" என்று அருளிச்செய்ய, அவர்களும் அதற்கியைந்து வணங்கினார்கள். இவ்வொன்பதுவீரரும் இலக்கவீரர்களோடு கலந்து, எம்பெருமானுடைய திருக்கோயிலை அகலாது, அங்கிருந்தார்கள். சத்திகளொன்பதின்மரும் உமாதேவியாரை நீங்காது, அவர்பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

சரவணப்படலம்.

சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, "உமையே முன்னே நமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிச் சரவணப்பொய்கையிலிருக்கும் உன்புதல்வனை நாம் போய் இங்கே கொண்டுவருவோம், வா" என்று திருவாய்மலர்ந்தருளினார். உமாதேவியார் அதுகேட்டு, உவகையும் அன்புங்கொண்டெழுந்து, "எம்பெருமானே, நம்முடைய குமாரனை நாம் கொண்டுவருவேம், எழுந்தருளுக" என்றார். உடனே சிவபெருமான் எழுந்து, உமாதேவியாரோடும் இடபமீது ஏறியருளினார். அதுகண்ட தேவர்கள் "நம்முடைய தீவினைகளெல்லாங்கழிந்தன" என்று மனமிக மகிழ்ந்து, நந்திகணத்தோடு அணைந்து துதித்தார்கள். ஆலாலசுந்தரர் முதலிய கணத்தர்களும், உருத்திரர்களும் வந்து இருபக்கத்தும் நெருங்கித் துதித்தார்கள். ஞானசாரியராகிய திருநந்திதேவர் விடுப்ப, பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் பூமாரிபெய்து, திருவடிகளை வணங்கிக்கொண்டு சூழ்ந்தார்கள். பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழக்கினார்கள். நான்குவேதங்களும் பிரணவமும் பல கலைகளும் ஒலித்தன. விஞ்சையர்கள் கீதம்பாடினார்கள். சூரியர்கள் வெண்குடை பிடித்தார்கள். பூதர்கள் சாமரம் வீசினார்கள். நூறுகோடி பூதர்கள் சூழ்ந்தார்கள். இடபக்கொடிகள் நெருங்கிச் சென்றன. அப்பொழுது உமாதேவியாரோடும் இடபமேற்கொண்டருளிய சிவபெருமான் தமது திருக்கோயிலினின்று நீங்கி, திருக்கைலாசத்தைக் கடந்து, இமையமலைச்சாரலினுள்ள சரவணப்பொய்கையை அடைந்தார். கைலாசபதியும் பார்ப்பதியம்மையாரும் ஆறுருவங்கொண்ட முருகக்கடவுளுடைய தன்மையைப் பார்த்துத் திருவருள்செய்து, சரவணப்பொய்கைக்கரையிலே நின்றார்கள். அப்பொய்கையிலே ஆறுதிருவுருவங்கொண்டுலாவி வீற்றிருந்தருளுங் குமாரக்கடவுள் சிவபெருமானையும் உமாதேவியாரையுங் கண்டு, திருமுகமலர்ந்து திருவுளங்களித்தார். அப்பொழுது மகாதேவர் உமாதேவியாரை நோக்கி, "நீ போய் உன்புதல்வனைக் கொண்டுவரக்கட

வாய்" என்று பணித்தருள, தேவியார் இடபவாகனத்தினின்றும் விரைந்து இறங்கி, திருவுள்ளத்தே கிளர்ந்த பேராசையோடு சென்று, சரவணப்பொய்கையில் எழுந்தருளியிருந்த தமது திருக்குமாரருடைய ஆறுருவங்களையும் இரண்டு திருக்கரங்களினாலும் அன்போடு எடுத்துத் தழுவி, ஆறுதிருமுகங்களும் பன்னிரண்டு திருப்புயங்களுங்கொண்ட ஒருருவமாம் வண்ணஞ்செய்தருளினார். அக்குமாரசுவாமி உமாதேவியாரால் ஆறு திருவுருவும் ஒன்றாகி, கந்தர் என்னுந் திருநாமத்தைப் பெற்றார். உமாதேவியார் தம்மாலே தழுவப்பட்ட குமாரவேளுடைய முடிதோறும் மோந்து, முதுகைத் தடவலும், அவ்வம்மையாருடைய திருமுலைகள் சுரந்து பால்சொரிந்தன. சிவபெருமானது திருவருளாகியும் நிருமலமாகியும் பரஞானமாகியுமுள்ள தம்முடைய திருமுலைகள் பொழிந்த பாலை ஓரிரத்தினவள்ளத்திலேற்று, முருகக்கடவுளுக்கு அன்பினுடன் ஊட்டினார். ஊட்டிய பின்பு, அக்குமாரக்கடவுளைக் கொண்டுபோய், எம்பெருமான்திருமுன்னே வணங்குவிப்ப, அவர் தம்முடைய திருக்கரங்களினால் எடுத்து, மார்பிலணைத்து, பெருங்கருணையோடும் தமது பக்கத்திருத்தியருளினார். பின்பு உமாதேவியாரையும் திருக்கரத்தினால் எடுத்து, தமதிடப்பக்கத் திருத்தியருளினார்.

இடபத்தின்மீது சிவபெருமானுக்கும் பார்ப்பதியம்மையாருக்கும் இடையே ஆறுமுகக்கடவுள் எழுந்தருளியிருத்தலைக் கண்டு, பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்கள் கடல்போல் ஆரவாரித்து, அணுகி, பக்கத்தும் முன்னும் பின்னும் நெருங்கி, "சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றியருளிய குமாரசுவாமியே, அடியேங்கள் சூரபன்மனால் மிகவருந்தினேம். இனிச் சிறியேங்களை ஆட்கொண்டருளும்" என்று விண்ணப்பஞ்செய்து, பூமழை பொழிந்து, வணங்கி எழுந்து, வாழ்த்தினார்கள். அப்பொழுது கார்த்திகைமகளிர்கள் சிவபெருமானைப் பேரன்போடு வணங்கி எழுந்தார்கள். கைலாசபதி அவர்கண்மீது திருவருணோக்கஞ்செய்து, "நம்முடைய குமாரனாகிய இவன், உங்களால் வளர்க்கப்பட்டமையால், கார்த்திகேயன் என்னும் பெயரைப் பெறக்கடவன். யாவராயினும் உங்கள் நக்ஷத்திரத்திலே இவனை மெய்யன்போடு வழிபடுவாராயின், அவர் வேண்டும் வரங்களைக் கொடுத்து, முத்தியை அருளிச்செய்வேம்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

உமாதேவியார் தம்முடைய திருக்குமாரரைச் சென்று தழுவியபொழுது சொரிந்த திருமுலைப்பால் நதிபோலப் பெருகிச் சரவணப்பொய்கையிலே புகுதலும், தங்கள் தந்தையாராகிய பராசரமுனிவருடைய சாபத்தினால் அப்பொய்கையுள் மீனாய்த் திரிந்த ஆறுசிறுவரும் அப்பாலைப் பருகினார்கள். பருகியபொழுது, மீன்வடிவம் ஒழிய முன்னைவடிவங்கொண்டு எழுந்து, பொய்கையை நீங்கி, சிவபெருமான் திருமுன் சென்று வணங்கித் துதித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் அவர்களைநோக்கி, "நீங்கள் திருப்பரங்குன்றிலே தவஞ்செய்துகொண்டிருங்கள். சிலநாளாயபின், நம்முடைய குமாரனாகிய இவன்வந்து உங்களுக்கு அருள்செய்வன்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட சிறுவர்களறுவரும் மனமகிழ்ந்து சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, சென்றார்கள். சிவபெருமான் கார்த்திகைமகளிர்களையும் பிரம விட்டுணு முதலிய தேவர்களையும் தங்கள் தங்கள் இடத்துக்குச் செல்லும்வண்ணம் விடுத்து, திருக்கை

லாசமலையை அடைந்து, முருகக்கடவுளோடும் உமாதேவியாரோடும் இடபவாக னத்தினின்றும் இறங்கி நடந்து, செம்பொற்றிருக்கோயிலிற்சென்று, சிங்கா சனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். நவவீரர்களும் இலக்கவீரர்களும் தங்கள் தலைவனாகிய முருகக்கடவுளை நறுமலர்களாலே பூசித்து வணங்கித் துதித்து, அவர்தொண்டின்வழி நின்றார்கள்.

திருச்சிற்றம்பலம்.

திருவிளையாட்டுப்படலம்.

மகாதேவருக்குந் தேவியாருக்கும் இடையே எழுந்தருளியிருந்த முருகக் கடவுள் தம்முடைய தம்பியர்களோடும் எழுந்து, பெருங்கருணையினாலே திரு விளையாடல்செய்யத் திருவுளங்கொண்டருளினார். திருவடிகளிலே தண்டையும் சிலம்பும் கழலும் சதங்கையும் ஒலிக்க, திருவரையிலே கிங்கிணி இசைக்க, திருச்செவிகளிலே குண்டலமும், திருமார்பிலே மதாணியும், திருநெற்றியிலே வீரபட்டிகையும் விளங்கத் திருவிளையாடல்செய்வார். சபைதோறும் உலாவுவர், வாவிதோறும் உலாவுவர், பூஞ்சோலைதோறும் உலாவுவர், ஆறுதோறும் உலாவு வர், குன்றுதோறும் உலாவுவர், குளத்தில் உலாவுவர், ஆற்றிடைக்குறையில் உலாவுவர், ஆத்தீண்டுகுற்றியையுடைய இடத்தில் உலாவுவர், அந்தணர்சாலை யில் உலாவுவர், சிவதலந்தோறும் உலாவுவர், கடம்பமரம் நிற்கும் இடந்தோறும் உலாவுவர், வடமொழி தமிழ்மொழி கற்குங் கழகந்தோறும் உலாவுவர், பூமியில் உலாவுவர், திக்குக்களில் உலாவுவர், கடல்களில் உலாவுவர், ஆகாயத்தில் உலாவு வர், சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் உள்ள இடங் களில் உலாவுவர், கந்தருவர் சித்தர் கருடர் முதலாயினோருடைய உலகங்களில் உலாவுவர், இந்திரனுடைய உலகத்தில் உலாவுவர், இருடிகளுடைய உலகத்தில் உலாவுவர், பிரமலோகத்தில் உலாவுவர், விட்டுணுலோகத்தில் உலாவுவர், சத்தி லோகத்தில் உலாவுவர், சிவலோகத்தில் உலாவுவர், பிருதிவியண்டங்களெங்கும் உலாவுவர், அப்புவண்டங்களெங்கும் உலாவுவர், தேயுவண்டங்களெங்கும் உலாவு வர், வாயுவண்டங்களெங்கும் உலாவுவர், ஆகாயவண்டங்களெங்கும் உலாவுவர், மற்றைப்புவனங்களினும் உலாவுவர். ஆறுதிருமுகங்களோடும் பாலராய்த் திரி வர், ஒரு திருமுகத்தோடு குமாரராய்த் திரிவர், பிராமணராய்த் திரிவர், முனிவ ராய்த் திரிவர், வீரராய்த் திரிவர், காலாற்செல்லுவர், குதிரைமீது செல்லுவர், யானைமீது செல்லுவர், தேர்மீது செல்லுவர், சிங்கமீது செல்லுவர், ஆட்டுக்கடா மீது செல்லுவர், விமானமீது செல்லுவர், மயின்மீது செல்லுவர், மணியை அசைப்பர், குழலை ஊதுவர், கோட்டை இசைப்பர், வீணை வாசிப்பர், நானாவித வாத்தியங்களை முழக்குவர், இசைபாடுவர், கூத்தாடுவர்.

இவ்வாறே முருகக்கடவுள் பல திருவுருவங்கொண்டு எவ்விடத்தும் திரு விளையாடல் செய்யும்பொழுது, உலகமாதாவாகிய உமாதேவியார் அதனையறிந்து வியந்து, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி நின்று, "எம்பெருமானே,

நம்முடைய குமாரன் சிறுகுழவிப்பருவத்தே செய்யும் ஆடற்றொழில் எனக்கு அத்தியற்புதமாயிருக்கின்றது. ஆராயுங்கால், அவனுக்கு ஒப்பாவார் பிறரில்லை. மாயையில் உமக்கு ஒப்பாவன். அவனுடைய பெருமையை அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார். பார்ப்பதியம்மையார் தாம் அறியாதார்போல இவ்வாறு வினவுதலும், சிவபெருமான் அவரை நோக்கி, "உமையே, எல்லாவுயிர்களும் அறிந்து உய்யும் பொருட்டு உன்குமாரனதியல்பை நீ நம்மிடத்து வினவினாய். அவனியல்பைச் சொல்வேம், கேள். நமது நெற்றிக் கண்ணினின்றுந் தோன்றிய குமாரன் கங்கையிலே கொண்டுசென்று சரவணப் பொய்கையில் விடப்பட்டமையால் காங்கேயன் எனவும், சரவணத்திலே தோன்றினமையால் சரவணபவன் எனவும், கார்த்திகைமகளிர்களாலே பாலூட்டி வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் எனவும், உன்னாலே ஆறுருவமுந் திரட்டி ஒன்றாக்கப்பட்டமையால் கந்தன் எனவும், பெயர்பெற்றான். நமக்கு ஆறுமுகங்களுண்டு. அவை தாமே கந்தனுக்கு முகங்களாயின. தாரகப்பிரமமாயுள்ள நமது ஆறெழுத்தும் ஒன்றாகி உன்குமாரனுடைய மந்திரமாகிய சடாக்ஷரமாயிற்று. ஆதலால், அறுமுகக்கடவுள் நமது சத்தியே. அவனுக்கும் நமக்கும் வேற்றுமையில்லை. அவன் நம்மைப்போல நீக்கமின்றி எங்கும் வியாபித்திருக்கின்றனன். பாலன்போலத் தோன்றுவன். எல்லாப்பொருளையும் புலப்படக்காணும் முற்றறிவுடையவன். தன்னை அன்போடு வழிபடுவோர்க்குச் செல்வத்தையும் ஞானத்தையும் முத்தியையும் கொடுக்க வல்லவன். இனிமேல் அவன் பிரமனை வேதத்துக்கெல்லாம் மூலமாய் நின்ற பிரணவத்தின் பொருளை வினவி, அவன் அதனை அறியாது மயங்கக் கண்டு, அவனைச் சிரசிலே குட்டிச் சிறைப்படுத்தி, தானே உயிர்களனைத்தையும் படைத்துக்கொண்டிருப்பன். அதன்பின் தாரகாசுரனையும், சிங்கமுகாசுரனையும், சூரபன்மாவையும், மற்றை யசுரர்களையுங் கொன்று, பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களுடைய இடுக்கணை நீக்கி, அவர்களுக்குப் பேரருள் செய்வன். இவையெல்லாம் பின்னர் நீ காண்பாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். எம்பெருமாட்டியார் தமதருமைத் திருக்குமாரருடைய பெருமையைக் கேட்டுத் திருவுளமகிழ்ந்து எழுந்தருளியிருந்தார். அது நிற்க.

உலகங்களனைத்தினுஞ்சென்று திருவிளையாடல்செய்யும் சண்முகக்கடவுள் பின் ஒரு திருவிளையாடல் செய்வாராயினார். குலமலைகளனைத்தையும் ஓரிடத்து ஒருங்கு கூட்டுவர். அவைகளைப் பின்பு தலைதடுமாற்றமாகப் பூமியில் நிறுத்துவர். கடல்களனைத்தையும் ஒன்றாக்குவர். மகாமேருமலையைப் பாதாளத்திற் பொருந்த அழுத்துவர். கங்காநதியை அடைப்பர். பாதாளத்துள்ள எட்டு நாகங்களையும் பிடித்து மகாமேரு முதலிய மலைகளிலே பூட்டிக் கட்டி, உயிர்களுக்கு ஊறில்லாவண்ணஞ் சிறுதேர்களாகக்கொண்டு உருட்டிச்செல்வர். திக்குயானைகளை ஒன்றோடொன்று பொரும்வண்ணஞ்செய்வர். ஆகாயகங்காசலத்தால் வடவாமுகாக்கினியை அவிப்பர். கருடனையும் வாசுகியையும் பிடித்து, தம்முள் மாறுபட்டுப் பொரும்வண்ணம் இயற்றுவர். பாதாளத்துள்ள நாகர்களைப் பூமியிற்சேர்த்தி, பூமியிலுள்ள கடல்களனைத்தையும் பாதாளத்திற் புகும்வண்ணம் விடுவர். சூரியனைச் சந்திரமண்டலத்தில் எறிவர். சந்திரனைச் சூரியமண்டலத்தில் விடுவர். திக்குப்பாலகர்களுடைய பதங்களனைத்தையும் முன்னைத்தானத்தினின்றும்

பிரித்துப் பிறழ வைப்பர். முகில்களுள்ளிருந்த மின்களையும் இடியேறுகளையும் பற்றி, மாலைசெய்தணிவர். சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும் பிறவும் ஆகாயத்துச் செல்லும் விமானங்களையும் தேர்களையும் பிணித்த கயிறுகள் தாரு வன்கையிலிருப்பன, அவற்றின் வேண்டுவனவற்றை இடையில் அரிந்து, பூமியி னும் திக்குக்களினும் செல்லும்வண்ணம் விடுவர். ஆகாயத்திற்செல்லும் விற்களி ரண்டையும் பற்றி, கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் உண்டைகளாகக்கொண்டு, தேவர்களுடைய தலையும் மார்பும் தோளும் கழுத்தும் முகமும் இலக்காக எய்து, வில்வன்மை காட்டுவர். சீவன்முத்தருக்கன்றிப் பிறருக்கு வெளிப்படாத நிருமல மூர்த்தியாகிய அறுமுகக்கடவுள், தேவர்கள் மனிதர்கள் முதலிய யாவரும் அஞ் சித் தங்கள் தங்கள் உள்ளமும் உடம்பும் தளர்தலன்றிச் சிதைவுறுவண்ணம், இவ்வாறே எண்ணில்லாத திருவிளையாடல்களைச் செய்தருளினர்.

அப்பொழுது பூமியினுள்ள அசுரர்கள் அதனை நோக்கி, தாம் பெரும்பாவி களாதலால், எம்பெருமானாகிய அறுமுகக்கடவுளுடைய திருமேனியைக் கண்டில ராகி, "இது செய்தவர் யாவர்" என்று தியக்கமுற்றார்கள். அசுரர்கள் யாவரும் பின்னுஞ் சிலநாள் சீவிக்கும்வண்ணம் ஆயுள் பெற்றுள்ளமையால், முருகக்கட வுள் அவர்களுக்குத் தமது திருமேனியைக் காட்டாதுலாவினர். உலாவலும், அவர்கள் தேடித் தேடி ஒருவரையுங்காணாமையால், "பிரம விட்டுணுக்களாலும் காணப்படாத சிவபெருமானுடைய மாயமே இது" என்றார்கள். முருகக்கடவு ளது செய்கையைப் பூமியினுள்ள மனிதர்கள் கண்டு, "கொடுங்கோல் செலுத்தா நின்ற அசுரர்களெல்லாரும் இறப்பது திண்ணம். இது அதற்கு ஏதுவாய்த் தோன்றிய விம்மிதம்போலும்" என்றார்கள். திக்குப்பாலகர்களும் சூரியன் சந்தி ரன் முதலாயினோரும் சண்முகக்கடவுளுடைய செய்கையைக் கண்டு, அவரு டைய திருவுருவத்தைக் காணாதவர்களாய், "இது அசுரர்கள் செய்கையன்று. வேறியாரோ செய்தார்" என்றிரங்கி ஒருங்கு கூடி, "இந்திரன் சிலரோடும் மகா மேருமலையில் இருக்கின்றனன்; பிரமதேவரும் அங்கிருக்கின்றார். நாமெல்லாம் அவர்களிடத்தே சென்று இதனைச் சொல்வேம்" என்று துணிந்துகொண்டு, சூர னுக்கும் அஞ்சித் துயரத்தோடு சென்று, மேருசிகரத்தை அடைந்தார்கள். அங்கே, அறுமுகக்கடவுளுடைய திருவிளையாடலைக் கண்டு அவர் திருவுருவத் தைக் காணாது வருந்தும் மனத்தனாய் இருந்த இந்திரனைக்கண்டு, அவன்முன் சென்று வணங்கி, இருந்துகொண்டு, "பூவுலகத்தினும் வானுலகத்தினும் உள்ள முன்னை நிலைமைகளனைத்தையும் யாரோ மாறுபடச் செய்தனர். அவரை இன்ன ரென நாங்கள் அறிந்திலம். அசுரர்கள் இது செய்திலர்போலும். நிகழ்ந்த இப் புணர்ப்பு யாது" என்றார்கள். இந்திரன் அதுகேட்டு, "நானும் இதனை ஆராய் ந்துகொண்டே இருக்கின்றேன். சிறிதும் அறிந்திலேன். நாமெல்லாஞ்சென்று பிரமதேவரை வினவுவோம். எழுமின்கள்" என்றான். உடனே, அவ்விந்திரன் முத லிய தேவர்கள் யாவரும் மெய்த்தவஞ்செய்தன்மையால், அவர்கள் கண்ணுக்குத் தெரியும்வண்ணம், அறுமுகக்கடவுள் ஒருதிருமுகமுடைய பாலராய் அம்மலை மீது தோன்றியருளினர்.

தேவர்கள் கொண்ட மயக்கம் நீங்கும்வண்ணம் தமது செய்கையைக் காட்ட வந்த எம்பெருமான், மகாமேருமலையை அசைத்து, தாமரையிதழைக் கொய்து

சிந்துதல்போலக் கொடுமுடிகளைப் பறித்து வீசினர். இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் அங்ஙனந்தோன்றிய குமாரசுவாமியைக் கண்டு, "ஐயையோ! பூவுலகத்தையும் வானுலகத்தையும் திரிவுசெய்தவன் இவனேயாகும்" என்று, சிங்கத்தையெதிர்ந்த விலங்குகள்போலக் கலங்கி, "இவனது வன்மையை ஆராயுங்கால், இவனைப் பாலனெனக் கொள்கின்றிலம். அசுரரினும் இவன் மிகக் கொடியன். யாவரும் எய்தாத மாயமுடையன். இவனை இங்கே போர்செய்து வெல்வேம்" என்று துணிந்து சூழ்ந்தார்கள். அப்பொழுது இந்திரன் முன்னுளிலே தந்தமொடிந்து திருவெண்காட்டிற்சென்று சிவபெருமானைப் பூசித்துத் தந்தம் பெற்றுக்கொண்டு அங்கிருந்த வெள்ளையானையாகிய ஐராவதத்தை நினைக்க, அது அங்கு வந்தது. உடனே இந்திரன் போர்க்கோலங்கொண்டு, குலிசம், வாள், வில், வேல் என்னும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவ்வைராவதமேலேறி, முருகக்கடவுளைத் தேவர்களோடு வளைந்து போர்செய்யத் தொடங்கினன். குமாரசுவாமி தம்மைத் தேவர்கள் பகைவராய் வளைந்தமையை நோக்கி, திருநகைசெய்து, யாதும் எண்ணாது முன்போலவே தமது திருவிளையாடலைச் செய்தார். இந்திரன் படைக்கலங்கள் பலவற்றைக் குமாரசுவாமிமேல் விடுப்ப, அவையெல்லாம் அவர் மீது மலர்போலப்பட்டன. அதுகண்டு, இந்திரன் குலிசத்தை விட்டு ஆரவாரித்தான். அக்குலிசம் எம்பெருமானுடைய திருமார்பிலே பட்டு, நுண்மணல்போலத் துகளாயிற்று. இந்திரன் அது கண்டு துயரத்தழுந்த, ஐராவதம் ஒலித்துக்கொண்டு குமாரசுவாமி திருமுன் சென்றது. முருகக்கடவுள் அது கண்டு, சங்கற்பமாத்திரத்தால் ஓர் வில்லையும் பல பாணங்களையும் விரைந்து படைத்துக்கொண்டு, வில்லை வளைத்து நாணொலிசெய்து, ஒரு பாணத்தை அவ்யானையின் நெற்றியிற்புக விடுத்தார். உடனே ஐராவதம் புலம்பி வீழ்ந்திறந்தது. அது கண்ட இந்திரன் "ஐயையோ" என்று இரங்கி, அணுகி நின்று, கோபத்தோடு தன்வில்லை வளைப்ப, முருகக்கடவுள் ஓரம்பை அவன்புயமீது விடுத்தார். இந்திரன் வருத்தமுற்றுத் தன்வன்மை இழந்து, விற்றொழிலினீங்கித் தன்கையினிருந்த வேலொன்றைக் குமாரசுவாமி மீது விடுத்தான். அவ்வேல் ஒருசிறு புற்போலச் சென்று பட, அது கண்ட தேவர்கள் யாவரும் அற்புதமடைந்தார்கள். முருகக்கடவுள் இந்திரனுடைய முடியை ஓரம்பினாலும், கொடியை ஓரம்பினாலும், மார்பிற்கவசத்தை ஓரம்பினாலும் அழித்து, அவன்மார்பிலே ஏழம்பை விடுத்தார். உடனே இந்திரன் அயர்ந்து வீழ்ந்தான். அது கண்ட மற்றைத் தேவர்களெல்லாரும் கந்தசுவாமியை வளைந்து பொருதார்கள். அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் வருணனை நான்கம்பினாலும், இயமனை ஐந்தம்பினாலும், சந்திரனை ஓரம்பினாலும், சூரியனை மூன்றம்பினாலும், வாயுவை இரண்டம்பினாலும், அக்கினியை மூன்றம்பினாலும், கொன்று நின்றார். எஞ்சிய தேவர்களெல்லாரும் குமாரசுவாமியினுடைய நிலைமையை நோக்கி, "இவனே இன்றைக்கு எல்லாரையுங் கொன்றுவிடுவன்" என்று துணிந்து, சிரபத்தின் வன்மையைக் கண்ட சிங்கக்கூட்டம்போல, மனங்கலங்கி நடுநடுங்கி ஓடினார்கள். அதுகண்ட முருகக்கடவுள் அப்போர்க்களத்திலே தனிநின்றுலாவினர்.

இச்செயலை நாரதமுனிவர் கண்டு, தேவகுருவாகிய பிருகற்பதியிடத்துச் சென்று, சொன்னர். பிருகற்பதி அது கேட்டு, "தேவர்களுடைய வாழ்க்கை இறந்ததுபோலும்" என்று சொல்லிக்கொண்டு, துயருற்று விரைந்துசென்று,

போர்க்களத்தை அடைந்து, தேவர்கள் அங்கிறந்துகிடத்தல் கண்டு, மனங்கவ ன்று, குகப்பிரான் அங்கு நின்று செய்யும் திருவிளையாடலைத் தரிசித்தார். தரி சித்து, அவருடைய திருவடித்தாமரைகளை வணங்கித் துதித்து, "எம்பெரு மானே, தாரகன், சிங்கமுகன், சூரன் என்னும் அசுரர்கள் தண்டிப்ப இந்திரன் நாடோறும் துன்பமுழந்து, தன்பதத்தை விடுத்து, இம்மேருமலையில் மறைந் திருந்தான். அவன் உம்முடைய திருவடிகளை அடைந்து வழிபட்டு, உம்மைக் கொண்டு தன்பகைவர்களைக்கொல்வித்து, முன்போலத் தன்னரசைப் பெற நினைந் திருந்தான். பலகாலம் அருந்தவஞ்செய்து வாடினன். சரவணத்தடத்திற் சென்று உமது திருவவதாரத்தை நோக்கி, தன்றுயரமெல்லாம் நீங்கினாற்போல உவகை பூத்தான். உமக்குத் தொண்டுசெய்ய விரும்பிய இந்திரன் நீர் இவ்வாறு திருவிளை யாடல்செய்வதை அறிந்திலன். விட்டுணு முதலியோர் தேடிக்காணாத சிவபெரு மானும் உமாதேவியாரும் அவர் திருவருள்பெற்றோர் சிலருமன்றி உமது திரு விளையாடலை அறியவல்லார் வேறியாவர்! அடியேம் பாசத்தையும் பசுவையும் பகுத்து இஃதித்தன்மையது என்று அறிந்திலேம். பாசத்தினின்று நீங்கிலேம். சிற்றறிவுடையேம். இவ்வியல்புடைய சிறியேம் பதிப்பொருளாகிய உமது பெருங் கருணைத் திருவிளையாடலை அறிய வல்லமா! ஆதலால், இந்திரன் தனது அஞ் ஞானங் காரணமாக உமது திருவிளையாடலைத் தீது என்று நினைந்து, உம்மோடு போர் செய்தனன். நீதி சேர் தண்டமே நீர் புரிந்தீர். மற்றைத்தேவர்களும் அஞ் ஞானத்தால் உம்மோடு பொருதிறந்தார்கள். தந்தைதாயர்களே தமக்குப் பிழை செய்த தம்புதல்வர்களைக் கொல்வார்களாயின், அவர்களுக்கு வேறு யாவர் அருள் செய்குவர்! ஞானவடிவாகிய சுவாமீ, சரபமானது சிங்கத்தைக்கொல்வதன்றி மின்மினியைக் கொல்லுதல் வெற்றியாகுமா! அருட்பெருங்கடலே, வலியர்களா கிய அசுரர்கள் ஒழியும்வண்ணம் வேரோடறுத்தருளும். எளியவர்களும் உம்மு டைய திருவடிகளை மறத்தலில்லாத அன்பர்களுமாகிய தேவர்களுடைய பிழை யைப் பொறுத்தருளும். மரக்கலத்தினாலே தாங்கப்படுவோரும் அதனாலே தங் கள் செல்வத்தை அடைதற்பாலருமாகிய வணிகர்கள் அதனைச் சாய்த்து அது கவிழ்ப்பத் தாம் இறத்தல்போல, உம்மாலே தாங்கப்படுவோரும் உம்மாலே தங் கள் செல்வத்தை அடைதற்பாலருமாகிய தேவர்கள் உம்மைப் பொருது நீர் கொல்லத் தாம் இறந்தார்கள். உம்முடைய அடித்தொண்டர்கள் செய்த பிழை யைத் திருவுளங்கொள்ளாதொழிக. இவர்கள் இங்கு அறிவுபெற்றெழும்வண் ணம் திருவருள்செய்க" என்று விண்ணப்பஞ்செய்தார்.

முன்னவர்க்கெல்லாம் முன்னவராகிய முருகக்கடவுள் அீது கேட்டுத் திரு முறுவல்செய்து, இந்திரன் முதலிய தேவர்கள் ஐராவதத்தோடும் எழும்வண் ணம் திருவுளங்கொண்டருளினார். உடனே இந்திரன் முதலிய தேவர்கள் எழு ந்து, மெய்யறிவு தோன்ற, தாங்கள் முன்செய்த செயற்கையை அறிந்து, தாங் கள் போர்செய்தது கந்தசுவாமியோடென்று நினைந்து, மனங்கலங்கி, வாடி, நடு நடுங்கி, ஒடுங்கினார்கள். அவர்கள் முருகக்கடவுள் திருவிளையாடல் செய்தலைக் காண்டலும், அவருடைய திருவடித்தாமரைகளைப் பலமுறை வணங்கி எழுந்து, துதித்து, சரீரநடுநடுங்கிக்கொண்டு நின்றார்கள். அதுகண்ட குமாரசுவாமி "வரு ந்தாதொழிமின் வருந்தாதொழிமின்" என்று திருவருள்செய்தார். தேவர்கள் துயரமும் அச்சமுநீங்கி, முருகக்கடவுளை வணங்கி, "எம்பெருமானே, அமிர்தத்

தோடு நஞ்சுகலந்து உண்பவரை அந்நஞ்சன்றி அமிர்தமா கொல்லும். அது போல உமது திருவருளினாலே செல்வத்தைப் பெறக் கருதிய அடியேங்கள் உம்மோடு பொருதமையால், நீர் எம்மைக் கொன்றீரல்லீர், அக்குற்றமே நம்மைக் கொன்றது. முன்னாளிலே சிவபெருமானை இகழ்ந்த தக்கனுடைய யாகத்தில் தரப்பட்ட பாகத்தை யாம் உண்ட அதிபாதகம் இன்னும் முடிந்திலது. அதனோடு உம்மைப் பொருத அதிபாதகமுங்கூடிற்று. எம்பரமபிதாவே, நீர் பெருங் கருணையினால் இப்போது அடியேங்களைத் தண்டித்து, அப்பாவங்களைத் தொலைத்தருளினீர். ஆதலால், அடியேங்களுக்கு நீர் செய்த திருவருளுக்கு நாங்கள் செய்யுங் கைம்மாறு யாது! எங்களை உமக்கு அடியார்களாகத் தருவேமெனின், அநாதி மலபெத்த பசுக்களாகிய நாங்கள் அநாதிமலமுத்த பதியாகிய உமக்கு என்றும் அடிமைகளேயன்றோ! அவ்வாறாக, அடியேங்களைப் புதிதாகத் தருவது எங்ஙனம்! சிறுவர்கள் தங்களைத் தங்கள் தந்தையர்களுக்குக் கொடுத்தல் தகுதியாமா! அறிவில்லாதேம் செய்த பிழைகளனைத்தையும் திருவுளத்திற்கொள்ளாது பொறுத்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

முருகக்கடவுள் அதுகேட்டு, "நம்மை நீங்கள் முன்னே ஒரு பாலன் என்று நினைந்து பொருதீர்கள். நமது வன்மையையும் பெருமையையும், இன்னும் நீங்கள் உணரும்வண்ணம் ,காட்டுவேம்" என்று திருவாய்மலர்ந்து, எட்டுத்திக்குக்களும், பதினாலுலகங்களும், எட்டுமலைகளும், ஏழுகடல்களும், புறவேலையும், சக்கரவாளகிரியும், வெவ்வேறண்டநிரைகளும், சருவான்மாக்களும், பிரம விட்டுணுருத்திரர்களும் அடங்கிய பாரமேசுரரூபத்தைக் கொண்டருளினார். பாதாளமெல்லாம் திருவடிகளும், திகந்தமெல்லாம் திருப்புயங்களும், ஆகாயமெல்லாம் திருமுடிகளும், சோமசூரியாக்கினியெல்லாம் திருக்கண்களும், நடுவெல்லாம் திருமேனியும், வேதங்களெல்லாம் திருவாயும், ஞானமெல்லாம் திருச்செவிகளும், பக்கம் பிரம விட்டுணுக்களும், சிந்தை உமாதேவியாரும், ஆன்மாச் சிவபெருமானுமாக இவ்வாறு முருகக்கடவுள் விசுவரூபங்கொண்டு நிற்ப, இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் "இஃதற்புதம் இஃதற்புதம்" என்று வணங்கி, ஆகாயத்தை நோக்கினார்கள். திருமேனிமுற்றையும் அதனழகையுங்காணாது, முழந்தாள்வரையும் அரிதாகக் கண்டு புகழ்ந்து, "ஞானானந்தவடிவாகிய முழுமுதற் கடவுளே, அடியேங்கண்முன் நீர் கொண்டருளிய விசுவரூபத்தை முற்றும் தரிசித்திலேம். அடியேங்கள் முற்றும் தரிசிக்கும்வண்ணம் காட்டியருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். பெருங்கருணைக்கடலாகிய சுப்பிரமணியக்கடவுள் திருவுளமிரங்கித் தேவர்களுக்குத் திவ்விய நேத்திரத்தைக் கொடுத்து, அநந்த கோடி சூரியர்கள் திரண்டாற்போலப் பேரொளியை வீசிநின்ற தமது பாரமேசுரரூபத்தைக் காட்டியருளினார். தேவர்கள் அறுமுகக்கடவுளுடைய திருவுருவுமுற்றையும், அடிமுதன் முடிகாறும் அவரது திருவருளினாலே தரிசித்து, அளப்பில்லாத அண்டங்களும், ஆன்மாக்களும், திரிமூர்த்திகளும் அவ்வடிவத்திருப்பக் கண்டு, ஆனந்தபரவசர்களாய் வணங்கித் துதித்து நின்று "எம்பெருமானே, பிருதிவியண்ட முதலிய அண்டங்களும், அங்கங்குள்ள தேவர்களும், உயிர்ப்பொருள்களும், உயிரில்பொருள்களும், பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் திரிமூர்த்திகளும் உமது திருமேனியில் இருப்பக் கண்டேம். உமது திருமேனியா அகிலமும் இருப்பது! விசுவமெல்லாம் நீரேயாய் இருக்கும் உண்மையை

அடியேங்கள் இந்நாள்காறும் அறிந்திலேம். நீரே வந்து அறிவித்தமையால் இப்பொழுதறிந்தேம். உமது திருமேனியேயன்றிப் பிறிதொருபொருளையுங் காணேம். உமது திருவடிவத்தைச் சிறியேங்கள் காணவல்லமா! ஒரு பிரமன் இறந்தபோது விட்டுணு பேருருவங்கொண்டு திருப்பாற்கடலிலே துயில்செய்யும் அகந்தையை ஒழிக்கும்வண்ணம் சிவபெருமான் அண்டங்களெல்லாம் ஆபரணங் களாக ஒரு திருமேனிகொண்டருளினார் என்னுந் தன்மையை, எம்பெருமானே, உமது திருமேனியிற்கண்டேம். உமது திருவுருவம் பிரமாவும் விட்டுணுவும் பல காலமுந்தேட அவர்களுக்குத் தோன்றாது அக்கினிவடிவாய் நின்ற சிவபிரானது திருவுருவமேபோலும். எம்பரம்பிதாவே, இதனை யாவரும் அறிகிலர். எங்களைப் போல உமது திருவருளைப் பெற்று அடியையும் முடியையும் தெரிந்தவர் யாவர்! விட்டுணுவும் பிரமாவும் உலகத்தோடும் ஒருவரை ஒருவர் விழுங்கி உந்தியாலும் முகத்தாலும் தோற்றுவித்து இருவரும் மாறுபடும்பொழுது எடுத்த பேருருவங் கள் நீர் கொண்டருளிய திருவுருவத்துக்கு மிகச் சிறியனவேயாம். ஆதலால் எம் பிரானே நீர் அருவமும் உருவமுமாய் நின்ற ஏகநாயகரேயாகும். அடியேங்கள் செய்த தவத்தினாலே சூரன் முதலிய அவுணர்களைக்கொன்று அடியேங்களு டைய துன்பத்தை நீக்கும்பொருட்டுப் பாலராய்த் திருவவதாரஞ்செய்தருளினீர். எவ்வுருவங்களுக்கும் ஓரிடமாயுள்ள உமது திருவுருவத்தைத் தரிசித்துச் சிறப் படைந்தேம். இருவினைப் பயன்களை நுகர்தற்கெடுத்த சரீரத்துன்பம் நீங்கிவிடு வேம். இனி நாங்கள் பிறவித்துன்ப மடையாது நிரதிசய முத்தியின்பத்தை அடைவேம்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். பின்பு முருகக்கடவுளுடைய விசுவரூபத்தை நோக்கி மனம் மிக வெருவச் சரீரம் அலமர மயங்கி, "எம்பெரு மானே, உமது திருவுருவம் அளப்பில்லாத ஒளியையுடையது. இனிப் பார்த்தல் கூடாது. கண்களெல்லாம் ஒளியிழந்தன. அன்றியும் இதன்பெருமையை நோக்கி, அஞ்சுகின்றேம். அடியேங்கள் உய்யும்வண்ணம், முன்னைத் திருவுருவங்கொண்டு தோன்றியருளுக" என்று பிரார்த்தித்தார்கள்.

முருகக்கடவுள் தமது விசுவரூபத்தை ஒழித்து, ஆறுதிருமுகங்களோடும் முன்னைவடிவங்கொண்டு தோன்ற, இந்திரன் வணங்கித் துதித்து, "பெருங்கருணை நிதியே, சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று, அடியேனும் தேவர்களும் தொண்டுசெய்யச் சுவர்க்கத்தை அரசுசெய்துகொண்டிருத்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தான். தம்மை வழிபடும் அடியார்களுக்கு அவரவர் வேண்டியவாறே இம்மை மறுமை வீடுகளைக் கொடுத்தருளும் பெருங்கருணைக்கடலாகிய அறுமு கக்கடவுளுக்கு இந்திரன் தன்னரசைக் கொடுப்பான் சொல்லிய வாசகம் அக்கினி தேவனுக்கு ஒருவன் ஒருதீப்பங்கொடுக்கச் சங்கற்பித்தமைபோலும். சுப்பிரமணி யக்கடவுள் இந்திரனை நோக்கி நகைத்து, "நீ நமக்குத் தந்த அரசை நாம் உனக் குத் தந்தேம். நீங்கள் சேனைகளாக நாமே சேனாபதியாகி அசுரர்களெல்லாரை யும் கொல்வேம். வருந்தாதொழி" என்று அருளிச்செய்தார். இந்திரன் அது கேட்டுத் தேவர்களோடும் மகிழ்ச்சியுற்று, முருகக்கடவுளை நோக்கி, சுவாமீ, இவ் வண்டத்துள்ள மலைகள், கடல்கள், உலகங்கள், உயிர்கண்முதலியனவெல்லாம் இந்நாளில் உம்மாலே முறை பிறழ்ந்தன. அவைகளையெல்லாம் முன்புபோல நிறு வியருளும்" என்று பிரார்த்தித்தான். முருகக்கடவுள் திருநகைசெய்து, "இவ் வண்டத்தில் நம்மாலே முறைபிறழ்ந்தனவெல்லாம் முன்னைநிலையை அடையக்கட

வன" என்று திருவாய்மலர்ந்தருள, அவையெல்லாம் முன்னைநிலையை அடைந்தன. யாவரும் அதுகண்டு, அற்புதமடைந்து நின்றார்கள்.

அப்பொழுது இந்திரன் முருகக்கடவுளை வணங்கி, "அநாதிபகவரே, வேதசிரசிலே விளங்காநின்ற உம்முடைய திருவடிகளைப் பூசிக்க விரும்புகின்றேம். அது செய்யும்வண்ணம் திருவருள் புரிக" என்று வேண்டினன். முருகக்கடவுள் அதற்கியைந்து, தேவர்கள் பின்றொடர நடந்து, மகாமேருமலையை நீங்கி, திருக்கைலாசமலையின் பக்கத்துள்ள ஒருமலையை அடைந்தார். அப்பொழுது இந்திரன் தேவத்தச்சனை நினைக்க, அவன் இந்திரன்முன் வந்து, கைதொழுதுகொண்டு நின்றான். இந்திரன் அவனை நோக்கி, "நீ இங்கே ஒருதிருக்கோயில் செய்யக்கடவாய்" என்றான். தேவத்தச்சன் அங்கே ஒரு திருக்கோயிலும், அதனுள்ளே ஒரு திவ்விய சிங்காசனமுஞ் செய்தான். தேவர்கள் பலர் இந்திரனுடைய ஏவலினாலே, திருமஞ்சனம், சந்தனம், நறுமலர், தூபம், தீபம் முதலிய பூசோபகரணங்களெல்லாம் கொண்டுவந்தார்கள். அப்பொழுது இந்திரன் ஆறுமுகக்கடவுளை வணங்கி, "சுவாமீ, உம்முடைய திருவடிகளை அடியேங்கள் பூசித்து உய்யும்பொருட்டு இத்திருக்கோயிலினுள் எழுந்தருளுக" என்று பிரார்த்தித்தான். வேதப்பொருளாகிய சுப்பிரமணியக்கடவுள் அது கேட்டு, தேவர்களெல்லாரும் துதிப்பத் திருக்கோயிலினுள்ளே புகுந்து, திவ்வியசிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். அப்பொழுது இந்திரனும் தேவர்களும் "ஞானநாயகரே, அடியேங்கள் உமக்குச் சேனையாக நீர் சேனாதிபதியாகுக" என்று ஆகாயகங்காசலத்தினாலே திருமஞ்சனமாட்டி, செம்பட்டாடை சாத்தி, சந்தனக்குழம்பு மட்டித்து, திவ்வியாபரணங்கள் அணிந்து, திருமாலைகள் சூட்டி, தூபதீபங்காட்டி, பூசைசெய்து வலஞ்செய்து, வணங்கித் தோத்திரம்பண்ணினார்கள். அதன்பின் முருகக்கடவுள் அங்குநின்று மறைந்து, திருக்கைலாசமலையை அடைந்தார். இந்திரனும் தேவர்களும் அற்புதத்துடன் அம்மலையை நீங்கினார்கள். கந்தசுவாமி தேவர்கள் பூசிப்ப எழுந்தருளியிருந்தமையால், அம்மலை கந்தவெற்பெனப் பெயர்பெற்றது. கந்தவெற்பை நீங்கி, இந்திரன் மனோவதிநகரத்தை அடைந்தான்; மற்றைத்தேவர்களெல்லாரும் தங்கள் தங்கள் தானத்திற்சென்று, முன்போலிருந்தார்கள். திருக்கைலாசமலையை அடைந்த முருகக்கடவுள், இலக்கத்தொன்பதுவீரர்களும் பூதர்களும் சேவிப்ப, அங்கெழுந்தருளியிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

கரோமுபடலம்.

முருகக்கடவுள் திருக்கைலாசமலையில் எழுந்தருளியிருக்கும்பொழுது, நாரதமுனிவர், சிவபெருமானுக்குப் பிரீதியாம்வண்ணம், பூமியிலே தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களுஞ் சூழ, ஒரு யாகஞ்செய்தார். அந்த யாகாக்கினியினின்றும் ஓராட்டுக்கடாத் தோன்றியது. யாகத்துள்ளோர் யாவரும் அதுகண்டு, அஞ்சியோடினார்கள். ஓடினவர்கள் யாவரையும் பூவுலகத்தினும் வானுலகத்தினும் துரந்து சென்று, சிலரைத் தாக்கிக் கொன்றது. எங்கெங்குந் திரிந்து மிக்க கோபத்தோடும் உயிர்களுக்கு நாசம் விளைத்தது. அப்பொழுது நாரதமுனிவரும்

மற்றை இருடிகளும் தேவர்களும் ஓடித் திருக்கைலாசமலையை அடைந்தார்கள். அவர்கள் தாங்கள் திருமலைமீது ஏறிவரும்பொழுது, அறுமுகக்கடவுள் இலக்கத்தொன்பது வீரர்களோடு கூடி விளையாடல் கண்டு, "நாம் சிவபெருமானிடத்துச் செல்லவேண்டாம். நமது துயரத்தை நீக்கும்பொருட்டுக் குமாரசுவாமியே ஈண்டு நம்மெதிரே எழுந்தருளிவந்தார். இவர் சிறுவரல்லர். இந்திரனையும் தேவர்களையும் கொன்று மீண்டெழுவித்தவர். நமது குறையை முடித்தல் இவருக்கு எளிது. நிகழ்ந்ததனை இவருக்கு விண்ணப்பஞ்செய்வேம்" என்று தங்களுள்ளே தெளிந்துகொண்டு, எம்பெருமான்றிருமுன் சென்று, அவருடைய திருவடித்தாமரைகளை வணங்கித் துதித்தார்கள். கந்தசுவாமி அவர்களுடைய துயரத்தைக் கண்டு, "நீங்கள் மிக வருந்தினீர்கள். நிகழ்ந்தது யாது? சொல்லுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். இருடிகளும் தேவர்களும் அது கேட்டு, "அடியேங்கள் வேதவிதிப்படி ஒரு யாகஞ் செய்தேம். யாகாக்கினியினின்றும் ஓராட்டுக்கடா எழுந்து, எங்களைக் கொல்ல நினைந்தது. அவ்வாடெழுங் கிளர்ச்சியைக் கண்டு, அடியேங்கள் யாகத்தை விட்டு இங்கே ஓடிவந்தேம். அது கோபத்தோடு தொடர்ந்து சிலரைக் கொன்றது. பூவுலகத்தினும் வானுலகத்தினும் அதனால் எண்ணிலுயிர்கள் இறந்தன. இன்னும் ஒருநாழிகையினுள்ளே எல்லாவுயிர்களும் இறந்துவிடும். அவ்வாட்டின் வன்மையை அடக்கி, அடியேங்களுடைய அச்சத்தை நீக்கி, யாகத்தை முற்றுவித்தருளுக" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

முருகக்கடவுள் அவர்கண்மீது திருவருணோக்கஞ்செய்து, "அஞ்சாதொழிமின்கள் அஞ்சாதொழிமின்கள்" என்று கையமைத்து, வீரவாகு தேவரை நோக்கி, "யாகாக்கினியினின்றுந் தோன்றி இவர்கள் யாகத்தை அழித்து உயிர்களைக் கொன்று கொன்று எங்குந்திரியாநின்ற ஆட்டுக்கடாவை நீ விரைந்து சென்று பிடித்துக்கொண்டு வா" என்று பணித்தருளினார். வீரவாகுதேவர் அத்திருப்பணியைச் சிரமேற்கொண்டு, முருகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கித் துதித்துக்கொண்டு, திருக்கைலாசமலையை நீங்கி, ஆட்டுக்கடாவைத் தேடுவாராயினார். பூமியினும் கீழேழுலகங்களினும் தேடிக் காணாமையால் மேலுலகங்களிலே தேடி, பிரமலோகத்தின் முன் அவ்வாட்டுக்கடாச் செல்லக் கண்டு, அது அஞ்சும்வண்ணம் ஆர்த்து விரைந்து சென்று, அதன் கோட்டைப் பிடித்து இழுத்துக்கொண்டு திருக்கைலாசமலையை அடைந்து, முருகக்கடவுடிருமுன் விடுத்து, வணங்கி நின்றார். முருகக்கடவுள் தேவர்களையும் இருடிகளையும் நோக்கி, "ஆட்டுக்கடா நம்மிடத்து வந்துவிட்டது. இனி நீங்கள் வருந்தாது பூமியிற் சென்று நீங்கள் தொடங்கிய யாகத்தை முடியுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அவர்கள் அதுகேட்டு, "எம்பெருமானே, அடியேங்கள் உய்யும்பொருட்டு இவ்வாட்டுக்கடாவை வாகனமாகக் கொண்டருளும்" என்று பிரார்த்தித்தார்கள். முருகக்கடவுள் "நாம் இதனை வாகனமாகக் கொள்வேம். நீங்கள் போய், யாகத்தை முடியுங்கள்" என்று அருளிச்செய்தார். நாரதர் முதலாயினோர் யாவரும் முருகக்கடவுளை வணங்கிக்கொண்டு பூமியிற்சென்று, யாகத்தை முடித்தார்கள். அவர்கள் செய்த தவத்தினாலே முருகக்கடவுள், அன்றுதொட்டு அவ்வாட்டுக்கடாவைத் தமக்கு வாகனமாகக் கொண்டருளினார்.

திருச்சிற்றம்பலம்.

அயனைச்சிறைபுரிபடலம்.

சுப்பிரமணியக்கடவுள் ஆட்டுக்கடாமேலேறி எவ்வுலகங்களினும் உலாவித் திருவிளையாடல் செய்துகொண்டு திருக்கைலாசமலையில் எழுந்தருளியிருக்கும் நாள்களில், ஒருநாளிலே பிரமதேவர் முதலாயினோர் திருக்கைலாசமலையிற் சென்று, சிவபெருமானை வணங்கித் திருவருள்பெற்றுக்கொண்டு, மீண்டு திருவாயிலை அடைந்தார்கள். அடையும்பொழுது, ஆறுமுகக்கடவுள், அச்செம்பொற் கோயிலின் முதற்கோபுரத்துள்ளே 'இலக்கத்தொன்பது வீரரும் சூழ்ந்து துதிப்ப, எழுந்தருளியிருந்தார். அம்முருகக்கடவுள் சிவபெருமானை வணங்கிக் கொண்டு மீளும் தேவர்களுள்ளே தலைவராகிய பிரமதேவரை நோக்கி, "இங்கே வா" என்று விளிக்க, பிரமதேவர் சென்று, முருகக்கடவுளை நமஸ்கரியாது அஞ்சலிசெய்தார். முருகக்கடவுள் பிரமதேவருடைய உள்ளக்கருத்தை நோக்கி, "பிரமனே, இரு" என்று சொல்லி இருத்தி, "நீ யாதுதொழில் செய்கின்றாய்" என்று வினவ, பிரமதேவர் "சிவபெருமானுடைய ஆணையினாலே நான் படைத்தற்றொழில் செய்கின்றேன்" என்றார். முருகக்கடவுள் அது கேட்டவுடனே திருமுறுவல்செய்து, "நீ படைத்தற்றொழில் செய்வையாயின், வேதங்களெல்லாம் உனக்கு வருமா" என்று வினவ, பிரமதேவர் "ஆதிகாலத்தில் என்னைப் படைத்தருளிய சிவபெருமான் வேதாகமங்களைச் செய்து, அவற்றுட் சிலவற்றை யான் உய்யும்பொருட்டு எனக்கு உபதேசித்தருளினார். அவற்றை நான் அறிவேன்" என்றார். முருகக்கடவுள் "பிரமனே, அவற்றுள் ஓரிருக்குச் சொல்லக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருள, பிரமதேவர் வேதங்களுக்கெல்லாம் முன் சொல்லப்படும் பிரணவத்தை முன்னே சொல்லிக்கொண்டு வேதஞ்சொல்லத் தொடங்கினார். தொடங்கலும், அப்பிரணவத்தைத் தம்முடைய திருமுகங்களுள் ஒன்றாகவுடைய முருகக்கடவுள் திருநகைசெய்து, "நில். நீ முன் சொல்லிய 'ஓம்' என்னுஞ் சொற்குப் பொருள் யாது! சொல்லக்கடவாய்" என்றார். உடனே பிரமதேவர் பிரணவத்தின் பொருள் தமக்கு விளங்காமையால், கண்களை விழித்து நாணமுற்று விக்கித் திகைத்திருந்தார். சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும், மற்றைத் தேவர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், எல்லாமந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாயும், காசியில் இறப்பவருக்கு எம்பெருமான் உபதேசித்தருளும் தாரகப்பிரமமாயும் உள்ள பிரணவத்தின் பொருளை ஆராய்ந்தார். பிரணவத்தைச் சொல்லுந்தன்மாத்திரமன்றி அதன்பொருளை அறிந்திலர். யாது செய்வார்! சிவபிரானது திருவருளினால் அதனை முன் பெற்றிலர். அதனால் மயங்குவாராயினார். அதன்பொருளை யாவர் சொல்ல வல்லவர்! வேதங்களுக்கெல்லாம் முதலினும் இறுதியினும் சொல்லப்படும் "ஓம்" என்னும் ஓரெழுத்தின் உண்மைப்பொருளைப் பிரமதேவரும் அறியாது மயங்கினராயின், நாம் இனிச் சிறிது அறிந்தனம் என்பது நகையே.

பிரமதேவர் பிரணவத்துக்குப் பொருள் இதுவென்று சொல்லாது மயங்கலும், ஆறுமுகக்கடவுள் "இதன்பொருளை அறியாத நீ படைத்தற்றொழில் செய்வது எங்ஙனம்" என்று சொல்லி, பிரமதேவருடைய நான்குசிரசுகளும் குலுங்

கும்வண்ணம் குட்டி, கீழே விழும்வண்ணம் திருவடியினால் உதைத்து, தம்முடைய பரிசனரைக்கொண்டு கந்தவெற்பிலே விலங்கு பூட்டிச் சிறையிடுவித்தார். அதன்பின் தாம் கந்தவெற்பிற்சென்று, ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களுங்கொண்டு, ஒரு திருக்கரம் செபமாலையும், ஒரு திருக்கரம் கமண்டலமும் தாங்க, மற்றையிருதிருக்கரங்களும் வரதமும் அபயமுந்தர, பிரமதேவரைப் போலப் படைத்தற்றொழில் செய்துகொண்டிருந்தார். பிரமதேவரைச் சிறையிடுவித்தலும், அவரோடு வந்த தேவர்களெல்லாரும் மனநடுங்கி முருகக்கடவுளைத் தொழுதுகொண்டு, தங்கள் பதங்களை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

அயனைச்சிறைநீக்குபடலம்.

உயிர்க்குயிராய், பரஞ்சுடராய், வேதமுடிவின் விளங்கும் மெய்ப்பொருளாய், படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிற்கும் இறைவராய் உள்ள சுப்பிரமணியக்கடவுள் இவ்வாறே அளப்பில்காலம் படைத்தற்றொழில் செய்துகொண்டிருப்ப, விட்டுணு பிரமதேவரைச் சிறைநீக்குவிக்கக் கருதி, தேவர்களையும் முனிவர்களையும் தம்மிடத்து வரும்வண்ணம் நினைந்தார். அதனை அறிந்து ஆதித்தர்களும், மருத்துவர்களும், வசுக்களும், சத்தமாதர்களும், விஞ்சையர்களும், கருடர்களும், இயக்கர்களும், திக்குப்பாலகர்களும், சந்திரனும், மற்றைக்கிரகங்களும், நக்ஷத்திரங்களும், அகத்தியர் முதலிய முனிவர்களும், பிரமரொன்பதின்மரும், சேடனும், உரகர்களும் வந்தார்கள்.

விட்டுணு அவர்களோடு சென்று, திருக்கைலாசமலையை அடைந்து, திருநந்திதேவர் விடுப்ப உள்ளே போய், தமக்குத் தாமே ஒப்பாகிய சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை வணங்கி, உபநிடதங்களாலே தோத்திரஞ்செய்துகொண்டு நின்றார். நிற்றலும், சிவபெருமான் அவர்கண்மீது திருவருணோக்கஞ்செய்து, "நீங்கள் எந்நாளும் இல்லதொரு துயரத்தோடு இன்று நம்மிடத்து வந்தமை யாது" என்று வினவியருளினார். அது கேட்ட விட்டுணு வாய் புதைத்து நின்று, "சருவலோகைகநாயகரே, உம்முடைய திருக்குமாரர் இங்கு வந்த பிரமனைப் பிரணவத்திற்குப் பொருள் கேட்டு, அவன் அஃதறியாது மயங்க, அவனைக் குட்டிச் சிறையிடுவித்து, அவனது படைத்தற்றொழிலுஞ் செய்கின்றார். கருணைக்கடலே, முருகக்கடவுளைப்போலப் பிரமனும் உமக்கு மைந்தனேயன்றோ. அவன் ஊழினால் அளப்பில்காலம் சிறைப்பட்டு மனநொந்து வாடித் துயருறுகின்றான். எம்பெருமானே, அவன் சிறையை நீக்கியருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்.

உடனே கருணாகரராகிய பரமசிவன் திருநந்திதேவரை நோக்கி, "நம்முடைய குமாரனாகிய கந்தன் பிரமனைச் சிறையிடுவித்தான் என்கின்றனர். நீ அவனிடத்து விரைந்து சென்று, நமது வாசகத்தைச் சொல்லி, பிரமனைச் சிறைவிடுவித்து, இங்கு மீளக்கடவாய்" என்று பணித்தருளினார். திருநந்திதேவர் அத்

திருப்பணியைச் சிரமேற்றுங்கி, எம்பெருமானை வணங்கிக்கொண்டு, அளப்பில் கணங்கள் சூழப் போய்க் கந்தவெற்பை அடைந்து, திருக்கோயிலிற்புகுந்து, சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடித் தாமரைகளை வணங்கி எழுந்து அஞ்சலி செய்து துதித்துக்கொண்டு, வாய்புதைத்து நின்று, "சுவாமீ, பிரமனைச் சிறை நீக்கும்பொருட்டு உமக்குச் சொல்லும்வண்ணம் எம்பெருமான் அடியேனை இங்கு விடுத்தருளினர். அவனைத் தடையின்றிச் சிறைநீக்கியருளுக. பிரணவப்பொருள் அவன் சொல்லுதற்கு எளியதா" என்று சொன்னர். சொல்லுமுன், முருகக்கடவுள் கோபித்து, "நான் பிரமனைச் சிறைநீக்கேன். நீ நிற்பாயாயின், உன்னையும் சிறையிடுவிப்பேன். விரைந்து போய்விடு" என்றார். உடனே திருநந்திதேவர் வேறென்றும் பேசாது, அஞ்சி நடுநடுங்கி, முருகக்கடவுளை வணங்கிக்கொண்டு, மீண்டு திருக்கைலாசமலையை அடைந்து, எம்பெருமான்றிருமுன் சென்று, வணங்கி நின்று, முருகக்கடவுள் திருவாய்மலர்ந்த வாசகத்தை விண்ணப்பஞ்செய்தார்.

அது கேட்டலும் எம்பெருமான் திருநகைசெய்து, சிங்காசனத்தினின்றும் விரைந்தெழுந்து, திருக்கோயிலை நீங்கி, இடபவாகனமீது ஏறியருளினர். விட்டுணுவும் தேவர்கள் முனிவர்கள் முதலாயினேரும் தொழுதுகொண்டு எம்பெருமான் பின்னே சென்றார்கள். பூதர்கள் துதித்துக்கொண்டு பக்கத்தே சூழ்ந்தார்கள். சிவபெருமான் இவ்வாறே இடபமூர்ந்து திருக்கைலாசமலையை நீங்கி, கந்தவெற்பை அடைந்து, முருகக்கடவுளது திருக்கோயிலுக்கு முன் சென்றவுடனே இடபவாகனத்தினின்றும் இறங்கி, உள்ளே புகுந்தருளினர். அது கண்டவுடனே குமாரசுவாமி விரைந்து இருக்கைவிட்டெழுந்து, எதிர்கொண்டு வணங்கி, அழைத்துக்கொண்டுபோய், தமது திவ்வியசிங்காசனத்தினமேல் இருத்தி, "உயிர்க்குயிராகிய எம்பெருமானே, நீர் இங்கு எழுந்தருளிவந்த காரியம் யாது" என்று விண்ணப்பஞ்செய்தார். சிவபெருமான் "நம்புதல்வனே, நீ பிரமனைச் சிறையிடுவித்தாய். நாம் அதனை நீக்கக் கருதி வந்தேம். அவனைச் சிறைவிடக் கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினர். எம்பெருமான் மிக்க அன்போடு திருவாய்மலர்ந்தருளிய இவ்வின்சொல்லைக் கேட்டபொழுது, முருகக்கடவுள் தமது திருமுடியை அசைத்து, "ஓரெழுத்தாகிய பிரணவத்தின் பொருளை அறியாதவன் உலகத்தைப் படைப்பன் என்பது பேதைமையே. அவன் வேதங்கள் வல்லனென்பதும் அதுபோலும். உமது திருவருள் அழகிது அழகிது. வேதத்துக்கு முன்னின்ற ஓரெழுத்தின் பொருளை அறியமாட்டாதவன் உமக்குப் பூசை செய்யவும், நீர் படைத்தற்றொழிலாகிய பாரத்தை அவன்மீது சுமத்தினீர். இப்படைத்தற்றொழிலைப் பெற்றமையால், பிரமன் யாவரையும் சிறிதாயினும் மதிக்கின்றிலன். உம்மை அவன் வழிபடினும், அகங்காரத சிறிதும் நீங்கிற்றிலன். ஆதலால், யான் அவனைச் சிறைநீக்கேன்" என்றார். அப்பொழுது பெருங்கருணைநிதியாகிய கைலாசபதி "மைந்தனே, உன்செய்கை என்னை? நாம் பணித்தவாறே நந்தி வந்து பிரமனைச் சிறைநீக்கும்வண்ணம் சொல்லவும் நீ கேட்டிலை. நாம் வந்து சொல்லினும் கேட்கின்றிலை. எதிர்மறுத்துப் பேசுகின்றாய்" என்று சற்றே கோபமுடையவர்போலத் திருவாய்மலர்ந்தருளினர். முருகக்கடவுள் சிவபிரானதியல்பை நோக்கி, வணங்கிநின்று, "எம்பெருமானே, உமக்குத் திருவுளம் இதுவாயின், பிரமனை விரைந்து சிறைநீக்கித் தருவேன்" என்று விண்ணப்பஞ்

செய்ய, சிவபெருமான் அவர்மீது திருவருள்சுரந்தார். சண்முகக்கடவுள் தமது பக்கத்தினின்ற பூதர்களிற் சிலரை நோக்கி, "நீங்கள் விரைந்து சென்று பிரமனைச் சிறைநீக்கி நம்முன் கொண்டுவாருங்கள்" என்று பணித்தருள, அவர்கள் போய், பிரமதேவரைச் சிறைவிடுத்துக் கொண்டுவந்து, குமாரசுவாமி திருமுன் விடுத்தார்கள். விடுத்தலும், முருகக்கடவுள் பிரமதேவரைக் கையிலே பிடித்து எம்பெருமான்றிருமுன் விடுத்தார்.

உடனே பிரமதேவர் எம்பெருமானை மெய்யன்போடு வணங்கி, வெள்கி நின்றார். எம்பெருமான் அவர்மீது திருவருணோக்கஞ்செய்து, "நீ நெடுங்காலம் சிறையிருந்து இளைத்தனைபோலும்" என்று திருவாய்மலர்ந்தருள, பிரமதேவர் "கருணாநிதியே, உம்முடைய திருக்குமாரர் அடியேனுக்குச் செய்த இத்தண்டம் தீதன்று. சிறியேனுக்கு மெய்யுணர்வைத் தந்து, யான் என்னும் அகந்தையை ஓட்டி, தீவினைகளையெல்லாங் களைந்து, சித்தசுத்தியை விளைத்தது" என்று விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது கைலாசபதி பிரமதேவரை நோக்கி, "நீ இன்றுதொட்டு உன்படைத்தற்றொழிலை முன்போலவே செய்துகொண்டிருக்கக்கடவாய்" என்று அருளிச்செய்தார். அதன்பின் முருகக்கடவுளை நோக்கித் திருமுறுவல்செய்து திருவருள் சுரந்து, "மைந்தனே, வா" என்று திருவாய்மலர்ந்து, அவரைத் தமது திருக்கரத்தினால் எடுத்து, திருத்தொடைமீது இருத்திக்கொண்டு, உச்சிமோந்து, தமது அருமைத்திருக்கரத்தினாலே தழுவி, "பிரமனும் அறியாத பிரணவத்தின் பொருள் உனக்கு வருமா? வருமாயிற் சொல்வாயாக" என்று திருவாய்மலர்ந்தருளினார். அப்பொழுது முருகக்கடவுள் "முற்றொருங்குணர்ந்த முழுமுதற்கடவுளே, உலகமெல்லாம் பெற்றருளிய மாதாவாகிய எம்பெருமாட்டிக்கு நீர் பிறரறியாவண்ணம் உபதேசித்தருளிய பிரணவப்பொருளை இரகசியமாகச் சொல்வதன்றி யாருங்கேட்பச் சொல்லலாமா" என்று விண்ணப்பஞ்செய்தார். செய்தலும், எம்பெருமான் திருநகைசெய்து, "மைந்தனே, நமக்கு இரகசியமாகச் சொல்வாயாக" என்று திருவாய்மலர்ந்து, திருச்செவி கொடுப்ப, சண்முகக்கடவுள் எம்பெருமானுக்குப் பிரணவப்பொருளைச் சொன்னார். அது கேட்டு ஞானநாயகராகிய கைலாசபதி திருவுளமகிழ்ந்து, திருவருள்செய்து, குமாரசுவாமியை அங்கிருக்கும்வண்ணம் பணித்து, இடபவாகனமேற்கொண்டு, முன்போல யாவரும் துதிப்பச் சென்று, திருக்கைலாசமலையை அடைந்து, பிரமவிட்டுணுக்களுக்கும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் விடைகொடுத்து, தமது திருக்கோயிலிற் புகுந்து, வீற்றிருந்தருளினார்.

சுப்பிரமணியக்கடவுள், கந்தவெற்பினுள்ள திருக்கோயிலினுள்ளே திவ்விய சிங்காசனத்தின்மீதேறி, இலக்கத்தொன்பதுவீரரும் பூதர்களும் சேவிப்ப, எல்லையில்லாத பெருங்கருணையோடும் எழுந்தருளியிருந்தார். முற்றொருங்குணர்ந்த பரமாசாரியராகிய அம்முருகக்கடவுள் தம்மை மெய்யன்போடு விதிப்படி வழிபடலுற்ற நன்மாணாக்கராகிய அகத்தியமுனிவருக்குப் பிரணவப்பொருளையும், வேதசிவாகமங்களையும், உலகமெல்லாம் உய்யும்வண்ணம், உபதேசித்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

விடைபெறுபடலம்.

முருகக்கடவுள் கந்தவெற்பில் எழுந்தருளியிருக்கும்பொழுது, விட்டுணு வின் புதல்வியர்களாகிய அமிர்தவல்லி சுந்தரவல்லி என்னும் இருவரும் முருகக் கடவுளுக்குப் பத்தினிகளாக விரும்பி, அவரைக் குறித்துச் சரவணப்பொய்கை யில் அருந்தவஞ்செய்தார்கள். முருகக்கடவுள் அதனை அறிந்து, கந்தவெற்பை நீங்கிச் சரவணப்பொய்கையிற் சென்றார். அதுகண்ட கன்னியரிருவரும் அஞ்சி வணங்கி நின்று துதிக்க, முருகக்கடவுள் அவர்களை நோக்கி, "நீங்கள் யாது விரும்பித் தவஞ்செய்தீர்கள்" என்று வினவியருளினார். கன்னியரிருவரும் கைகு வித்து நின்று, "எம்பெருமானே, நீர் அடியேங்களைக் கல்யாணஞ்செய்துகொள் ளும்பொருட்டுத் தவஞ்செய்தேம். திருவருள் செய்க" என்று விண்ணப்பஞ்செய் தார்கள். அறுமுகக்கடவுள் அவர்களை நோக்கி, "மூத்தாளாகிய அமிர்தவல்லியே, நீ இந்திரனுக்கு மகளாய் வளரக்கடவாய். இளையாளாகிய சுந்தரவல்லியே, நீ பூமி யிலே சிவமுனிக்குப் புதல்வியாய் வேடரிடத்து வளரக்கடவாய். இவ்வாறு வள ரும்பொழுது, நாம் வந்து உங்களைக் கல்யாணஞ்செய்துகொள்வேம். போங்கள்" என்று திருவாய்மலர்ந்தருள, கன்னியரிருவரும் கைதொழுது விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள்.

அமிர்தவல்லி ஒரு குழந்தைவடிவங்கொண்டு மேருமலையில் இருந்த இந்தி ரன்முன் சென்று, "அரசனே, யான் உன்னோடு தோன்றிய உபேந்திரனுடைய மகள். ஆதலால், என்னை நீ வளர்க்கக்கடவாய்" என்றாள். இந்திரன் அவளை நோக்கி, "தாயே, இங்கு வா" என்று சொல்லி, ஐராவதத்தை அழைத்து, "இவள் நம்முடைய மகள். இவளை நீ அன்போடு வளர்க்கக்கடவாய். இவள்பொரு ட்டு இனி நமக்கு அளப்பில்லாத சிறப்புண்டாகும்" என்றான். ஐராவதம் அவ ளைப் பிடர்மேற் கொண்டு சென்று, மனோவதியில் இருத்தி வளர்த்தது. அதனால் அவள் தெய்வயானை எனப் பெயர்பெற்று, குமாரசுவாமியைத் தியானித்துக்கொ ண்டிருந்தாள். சுந்தரவல்லி தொண்டைநாட்டினுள்ள வள்ளிமலையிலே தவஞ்செய் துகொண்டிருந்த சிவமுனிவருக்கு மகளாகும்பொருட்டுச் சென்றாள்.

சுப்பிரமணியக்கடவுள், விட்டுணுவின் புதல்வியரிருவருக்கும் வரங்கொடு த்தபின், கந்தவெற்பை அடைந்து, பெருங்கருணையோடும் அங்கெழுந்தருளியிருந் தார். சிலநாளாயபின், இலக்கத்தொன்பதுவீரர்களும் பூதங்களும் சூழத் திருக் கைலாசமலையை அடைந்து, தாய் தந்தையரிருவரையும் வணங்கிக்கொண்டு, அவர் களுக்கு நடுவே எழுந்தருளியிருந்தார்.

அறுமுகக்கடவுள் இவ்வாறு எழுந்தருளியிருக்கும்பொழுது, இந்திரன் முத லிய தேவர்கள் தங்கள் குறையைச் சொல்லி, பிரமதேவரையும் விட்டுணுவையும் முன்கொண்டு திருக்கைலாசமலையை அடைந்தார்கள். திருநந்திதேவர் "நில்லுங் கள்" என்று அவர்களைத் தடுக்க, அவர்கள் தளர்ந்து, பலநாட் பெருந்துயரத் தோடு நின்றார்கள். அவ்வாறு நின்ற பிரமவிட்டுணு முதலிய தேவர்கள் ஒருநாள் திருநந்திதேவரை வணங்கித் துதித்து, அவருக்குத் தங்கள் துயரத்தை விண்

ண்ப்பஞ்செய்தார்கள். அதுகேட்ட திருநந்திதேவர் திருவுளமிரங்கி, "இனி உங்கள் கவற்சியை விடுங்கள். யான் எம்பெருமான்றிருமுன் சென்று, உங்கள் குறையை விண்ணப்பஞ்செய்து, உங்களை விரைவில் அங்கே கொண்டுபோய் விடுவேன். இங்கிருங்கள்" என்று சொல்லிக்கொண்டு, உள்ளே புகுந்து, சிவபெருமானை வணங்கி நின்று, "சுவாமீ, பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் திருக்கோயின் முதற்கடைவாயிலின் நிற்கின்றார்கள்" என்று விண்ணப்பஞ்செய்தார். கருணாநிதியாகிய கைலாசபதி "அவர்களெல்லாரையும் நம்முன்னே அழைத்துக்கொண்டு வா" என்று பணித்தருள, திருநந்திதேவர் மீண்டு சென்று, "எல்லீரும் வாருங்கள்" என்று அருளிச்செய்தார்.

உடனே தேவர்களெல்லாரும் திருக்கோயிலினுள்ளே விரைந்து சென்று, கிருபாசமுத்திரமாகிய சிவபெருமானை வணங்கினார்கள். அதற்குள், இடருறு மனத்தினனாகிய இந்திரன் "அருட்சத்தியாகிய உமாதேவியாரோடும் எழுந்தருளியிராநின்ற முதற்கடவுளே, சிறியேங்கள் எண்ணில்லாத யுகங்களாகச் சூரன் முதலிய அசுரர்களால் வருந்தி ஒடுங்கினேம். அடியேனுடைய புதல்வனாகிய சயந்தனும் தேவர்களும் அரம்பையர்களும் சூரனுடைய நகரத்திலே சிறையிலிருக்கின்றார்கள். சுவர்க்கலோகம் அசுரர்களால் அழிந்தது. இவையெல்லாம் அடியேன் விண்ணப்பஞ்செய்தல்வேண்டுமோ! முற்றறிவுடைய பதிப்பொருளாகிய நீர் இவையெல்லாம் அறிவீரே. முன்னே அடியேன் தவஞ்செய்தபொழுது, நீர் எழுந்தருளிவந்து, 'நம்மிடத்தே ஒரு குமாரன் பிறந்து சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று உங்களைக் காப்பான்' என்று திருவாய்மலர்ந்தருளினீரே. அவ்வாறே திருக்குமாரரும் திருவவதாரஞ்செய்திருக்கின்றாரே. இந்நாள்காறும் எங்கள் துயரத்தை நீக்கத் திருவுளங்கொண்டிலீரே. அடியேங்கள் பவப்பயன் இன்னுந் தொலைந்திலதுபோலும். சூரனுடைய வன்மையைத் தொலைக்க வல்லவர் பிறரில்லை. அடியேன் என்றுயரத்தை உம்மிடத்தன்றி வேறியாரிடத்துச் சொல்வேன்! யாரை நோவேன்! கடனடுவே காகத்துக்கு மரக்கலமல்லது பிறிதோரிடம் இன்மைபோல, அடியேங்களுக்கு இத்திருக்கைலாசமன்றிப் பிறிதோரிடமில்லையே. அடியேங்களுடைய துயரத்தை நீக்கும் துணைவர் நீரன்றி ஒருவரும் இல்லை இல்லை. அக்கினியாயினும் அதன்மீது நித்திரைசெய்யலாம். நஞ்சாயினும் அதனை உண்ணலாம். பகைவராலே செய்யப்படும் துயரம் ஆற்றரிது ஆற்றரிது! இக்கீழ்மை போதும் போதும்! புதல்வருக்குத் தீதை நீக்கவும் திருவைக் கொடுக்கவும் தாதையரன்றி வேறியாவருளர்! ஆதலால், கருணாநிதியே, இனிச் சிறியேங்களைக் காத்தருளும் காத்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்து வணங்கினான். அப்பொழுது பிரம விட்டுணுக்கள், "எம்பெருமானே, சூரபன்மன் உயிர்களுக்குச் செய்யும் வருத்தம் எம்மாலே சொல்வதரிது. இனிச் சிறிதும் தாழ்க்காது இப்பொழுதே அருள்செய்யும்" என்று வேண்டினார்கள்.

சிவபெருமான் அவற்றைக் கேட்டலும் பெருங்கருணை கூர்ந்து, "இனி உங்கள் கவற்சியை விடுங்கள்" என்று அருளிச்செய்து, அங்கெழுந்தருளியிருந்த அறுமுகக்கடவுளை நோக்கி, "உலகத்துள்ள உயிர்களுக்குத் துன்பஞ்செய்து தேவருலகத்தை அழித்துக் கெடுதலில்லாத வலிமைகொண்டுற்ற சூரபன்மனை அசுரர்களோடு கொன்று, வைதிகமார்க்கத்தை நிறுவி, தேவர்களுடைய துன்

பத்தை நீக்கி, இந்திரனுக்கு அவனரசைக் கொடுத்து, மீள்வாயாக" என்று பணித்தருளினார். முருகக்கடவுள் அதுகேட்டு, "எம்பெருமானே, அடியேன் இப்பணியைச் செய்வேன்" என்று விண்ணப்பஞ்செய்தார். அதன்பின் சிவபெருமான் பதினொருருத்திரர்களைத் திருவுளத்தில் நினைந்தருள, அவர்கள் வந்தார்கள். சிவபெருமான் "நீங்கள் இவன்கையில் படைக்கலங்களாக இருக்கக்கடவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து, அவர்களைப் படைக்கலங்களாக்கி, முருகக்கடவுளுடைய திருக்கரங்களிற் கொடுத்தருளினார். பதினொருருத்திரர்களும் தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்னும் பதினொருபடைக்கலங்களாகி, அறுமுகக்கடவுளுடைய திருக்கரங்களில் வீற்றிருந்தார்கள். பின்பு சிவபெருமான், ஏவியக்கால், ஐம்பெரும்பூதங்களை அழிப்பதும், சருவான்மாக்களையும் ஒருங்கு முடிப்பதும், யாவர்மேல் விடுக்கினும் அவருடைய வன்மையையும் வரங்களையும் கெடுத்து உயிரை உண்பதும், எவ்வெப்படைக்கலங்களுக்கும் நாயகமுமாகிய ஓர் வேலாயுதத்தைச் சிருட்டித்து, முருகக்கடவுளுடைய திருக்கரத்திற் கொடுத்தருளினார். அதன்பின் தாம் ஏவினவற்றைச் செய்துகொண்டு தம்பக்கத்து நின்ற இலக்கத்தொன்பது குமாரர்களை நோக்கி, "நீங்கள் யாவருக்கும் முதல்வனாகிய இக்குமாரனோடு சென்று, அசுரர்களைக் கொல்லக்கடவீர்கள்" என்று பணித்து, அவர்களுக்குப் பல படைக்கலங்களையும் உதவி, முருகக்கடவுளுக்கு அவர்களைத் துணைப்படைகளாகக் கொடுத்தருளினார். பின்பு அண்டாபரணர், நந்தி, உக்கிரர், சண்டர், அக்கினிநேத்திரர், சிங்கர் முதலிய கணநாதர்களை நோக்கி, "நீங்கள் இரண்டாயிரம்வெள்ளம் பூதங்களோடு சண்முகனுக்குச் சேனாதிபதிகளாய்ச் செல்லக்கடவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து, முருகக்கடவுளுக்கு அவர்களைப் படைத்தலைவர்களாகக் கொடுத்தருளினார். ஐம்பெரும்பூதங்களின் வன்மையையும் அங்கங்குள்ள பொருள்களின் வன்மையையும் பிரமன் முதலிய தேவர்களுடைய வன்மையையும் ஒருங்குகொண்டதும், இலக்கங்குதிரைபூண்டதும், மனத்தினும் விரைந்து செல்வதுமாகிய ஒருதேரைத் திருவுளத்தினாலே சிருட்டித்து, முருகக்கடவுளுக்கு ஏறும் வண்ணம் கொடுத்தருளினார். இவ்வாறெல்லாம் சிவபெருமான் விரைந்துதவி, "இனி நீ போகக்கடவாய்" என்று பணித்தருளினார்.

அறுமுகக்கடவுள் மகாதேவரையும் தேவியாரையும் தொழுதுகொண்டு வலஞ்செய்து மும்முறை நமஸ்கரித்து எழுந்து, தோத்திரஞ்செய்துகொண்டு நிற்ப, எம்பெருமான் திருவுளத்திலே கிளர்ந்த பெருமகிழ்ச்சியோடு அம்முருகக்கடவுளைத் தழுவி, தமது அருமைத் திருக்கரத்தினால் எடுத்துத் திருத்தொடையில் இருத்தி, உச்சிமோந்து திருவருள்புரிந்து, எம்பெருமாட்டியாருடைய திருக்கரங்களிலே கொடுத்தருளினார். எம்பெருமாட்டியார் தமது அருமைத் திருக்குமாரரைத் தமது மடியில் இருத்திப் பெருங்கருணையோடு தழுவி, உச்சிமோந்து, "உன்னை அடுத்த இலக்கத்தொன்பது வீரர்கள் படைஞராய்ச் சூழச் சென்று, அசுரர்களைக் கொன்று, இத்தேவர்களுடைய குறையை முடித்து, மீள்வாயாக" என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே அறுமுகக்கடவுள் எம்பெருமானையும் எம்பெருமாட்டியாரையும் வணங்கி எழுந்து, விடைபெற்றுக்கொண்டு, சென்றார். இலக்கத்தொன்பது வீரர்களும், பூதசேனாதிபதிகளும் சிவபிரானையும் உமாதேவியாரையும் மும்முறை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, சென்றார்கள்.

அங்கு நின்ற பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் "எம் பரமபிதாவே நீர் அடியேங்களைக் காத்தருளினீர். இனி எங்கள் நெஞ்சத்து ஓர் குறையுமில்லை. உய்ந்தனம் உய்ந்தனம்" என்று விண்ணப்பஞ்செய்துகொண்டு, சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி, எழுந்தார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அருள்செய்யும் நாயகனாகிய குமரனோடும் நீங்களும் நடவுங்கள்" என்று விடைகொடுத்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

படையெழுச்சிப்படலம்.

சிவபெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு செல்லும்பொழுது, விட்டுணு அயலில் வரும் வாயுதேவனை நோக்கி, "நீ அறுமுகக்கடவுளுடைய தேர் மேல் ஏறி, முட்கோலும் மத்திகையுங்கொண்டு பாகனாய்ச் செலுத்தக்கடவாய்" என்று பணித்தார். வாயுதேவன் அதற்கிசைந்து, ஆகாயத்திற் செல்லும் தேர் மேலே பாய்ந்து, தன்னினமாகிய வாயுக்கள் பக்கத்துவர, மகிழ்ச்சியோடு செலுத்திக்கொண்டு குமாரசுவாமி திருமுன்விடுத்து, "எம்பெருமானே, இத்தேர்மீது ஏறியருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். முருகக்கடவுள் பேரருள் புரிந்து, அத்தேர்மீது ஏறியருளினார்.

அது கண்ட இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் "இனிச் சூரன் இறந்தான் இறந்தான்" என்று துள்ளி ஆர்த்தார்கள். இலக்கத்தொன்பது வீரர்களும் முருகக்கடவுளைச் சூழ்ந்தார்கள். தேவர்களும் முனிவர்களும் அவ்வீரர்களைச் சூழ்ந்தார்கள். திருக்கைலாசமலையில் இருந்த அநந்தவெள்ளம் பூதங்களுள் இரண்டாயிரம்வெள்ளத்தர்கள் நூற்றெட்டுச்சேனாதிபதிகளோடும் முருகக்கடவுளிடத்து வந்து, வணங்கித் துதித்து, ஆரவாரித்தார்கள். அவர்களிற்சிலர் பலவித வாத்தியங்களை முழக்கினார்கள். அதுகண்ட அறுமுகக்கடவுள் பூதசேனைகள் சூழத் திருக்கைலாசமலையை நீத்துப் பூமிமேற் சென்றருளினார்.

திருச்சிற்றம்பலம்.

தாரகன்வதைப்படலம்.

அறுமுகக்கடவுள் சேனையோடு செல்லும் நெறியிலே, தாரகாசுரனுக்கு உறையுளாய்த் தன்னை அடைந்தோரை வருத்தும் கிரௌஞ்சமலை சேர்ந்தது. அதனைக் கண்டவுடனே, தேவர்கள் மனம் பதைபதைத்தார்கள்; இந்திரன் கலக்கங்கொண்டு நின்றான். அப்பொழுது நாரதமுனிவர் வந்து, முருகக்கடவுளுடைய திருவடித்தாமரைகளை வணங்கி நின்று, "எம்பெருமானே, அந்தணர்களும் முனிவர்களும் இச்சுரத்திற்செல்லும்பொழுது தன்னுள்ளே வழிகாட்டி வரவரப்

புணர்த்துக் கொன்று பின் அகத்தியமுனிவருடைய சாபத்தினாலே இவ்வடிவமாய் நிற்கும் கிரௌஞ்சமலை இதுவே. இம்மலைக்கு ஒருபக்கத்துள்ள மாயபுரியிலே, சூரனுக்கு இளவலும், யானைமுகத்தையுடையவனும், போரிலே விட்டுணுவுடைய சக்கரத்தைப் பதக்கமாகக் கொண்ட வீரனுமாகிய தாரகன் இருக்கின்றான். இவனைக் கொல்வீராயின், இவன்றமையனாகிய சூரனை வெல்லல் மிக எளிது" என்று விண்ணப்பஞ்செய்தார். அது கேட்ட குமாரசுவாமி "அவனை இங்கே கொல்வேம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் மனக்கவலை நீங்கி, "தாரகன் இன்றே இறந்தனன்" என்று மகிழ்ச்சியுற்றார்கள்.

முருகக்கடவுள் தம்பக்கத்து நின்ற வீரவாகுதேவரை நோக்கி, "இளவலே, அம்மலை கிரௌஞ்சம். அதன் ஒருபக்கத்துள்ள மாயபுரியிலே தாரகாசுரன் அசுரசேனைகளோடு இருக்கின்றான். நீ உன்றம்பியர்களாகிய இலக்கத்தெண்மர்களோடும் ஆயிரம்வெள்ளம் பூதர்களோடும் பூதசேனாதிபதிகளோடும் போய், அவனுடைய நகரத்தை வளையக்கடவாய். தடுத்தெதிர்ந்து போர்செய்யும் அசுரசேனைகளைக் கொல்லக்கடவாய். தாரகன் எதிர்வானாயின், அவனோடு பொரக்கடவாய். உன்னாலரிதாயின், நாம் அவனைக் கொல்ல வருவேம். நீ முன்னே போ" என்று பணித்தருளினார். வீரவாகுதேவர் அதுகேட்டு, "நன்று" என்று சொல்லி, பூமியின்மேல் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து இருகைகளையுஞ் சிரமேற்குவித்துக் கொண்டு நின்றார். பின்பு முருகக்கடவுள் இலக்கத்தெண்மரையும் பூதர்களையும் நோக்கி, "நீங்கள் அசுரர்களைப் பொரும்பொருட்டு வீரவாகுவோடு போங்கள்" என்று பணித்தருளினார். அவர்கள் யாவரும் எம்பிரானுடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு போதற்குன்னலும், உயிர்க்குயிராகிய சண்முகக்கடவுள் தம்பக்கத்து நின்ற தேவத்தச்சனை நோக்கி, "வீரவாகு முதலிய யாவருக்கும் கொடுக்கும்பொருட்டு நீ பல தேர்களைச் செய்யக்கடவாய்" என்று பணித்தருளினார். தேவத்தச்சன் ஒருமாத்திரை ஒடுங்குமுன்னரே குதிரைகளுஞ் சிங்கங்களும் பூதங்களும் பூண்ட பலதேர்களைச் செய்தான். எம்பெருமான் அத்தேர்களை வீரவாகுதேவர் முதலிய இலக்கத்தொன்பதுவீரர்களுக்கும் பூதசேனாதிபதிகளுக்கும் கொடுத்தருளினார். வீரவாகுதேவர் முதலாயினோர்கள் எம்பெருமானை மும்முறை வலஞ்செய்து வணங்கி விடைபெற்று, அத்தேர்கண்மேல் ஏறிக்கொண்டு, ஆயிரம்வெள்ளம் பூதர்களோடு சென்றார்கள். வீரவாகுதேவர் பூதசேனாதிபதிகளுக்கும் இலக்கத்தெட்டுவீரர்களுக்கும் நாயகராய், நடுவே சென்றார். முருகக்கடவுள் வீரவாகுதேவரை முன்னே ஏவி, ஆயிரம்வெள்ளம் பூதர்கள் சூழவும், இந்திரன் முதலிய தேவர்கள் வணங்கவும், கடைக்கூழையிலே சென்றார்.

நானாவிதவாத்தியங்கள் முழங்க, வீரர்களும் பூதர்களும் சூழ, வீரவாகுதேவர் மாயபுரியைச் சேர்ந்தார். சேர்ந்தவுடன், பூதர்கள் போய், நகரத்தினுள்ளே புகுந்து, எதிர்ந்த அசுரர்களோடு போர்செய்துகொண்டு நின்றார்கள். அது கண்ட தூதர்கள் ஓடிப்போய்க் கோயிலினுள்ளே புகுந்து, தாரகாசுரனை வணங்கி நின்று, "அரசனே, 'சூரபன்மன் தேவர்களை இட்ட சிறையை நீக்கும்பொருட்டுச் சிவபெருமான் கந்தசுவாமி என்னும பெயரையுடைய ஒருகுமாரரைப் பெற்றருளி

ஞர். அவர் அசுரர்களெல்லாரையும் கொன்றுவிடுவர்' என்று ஆகாயத்திலே செல்லும் தேவர்கள் சொல்லக் கேட்டேம். நாம் 'இவர்கள் வார்த்தை என்னை' என்றிருந்தேம். இப்பொழுது அவர்கள் கூறியவாறே இரண்டாயிரம் வெள்ளம் பூதங்கள்சூழக் கந்தசுவாமி வந்தார். முன்னுற்ற தூசிப்படை நமது நகரத்தை வளைந்தது" என்றார்கள். உடனே தாரகன் மிகக்கோபங்கொண்டு, சிங்காசனத்தினின்றும் நீங்கி, தூதர்களை நோக்கி, "இந்நகரத்தை வளைத்த சேனையை உலர்ந்த புற்காட்டின் அக்கினி புகுந்தாற்போல விரைந்து கொல்வேம். நம்முடைய சேனைகண்முற்றையும் உழுந்துருளுமுன் கொண்டுவாருங்கள்" என்று பணித்தான். அப்பணியைச் செய்யும்பொருட்டுத் தூதர்கள் செல்லலும், தாரகன் அங்கு நின்ற பரிசனரை நோக்கி, "நமது தேரைக்கொண்டுவாருங்கள்" என்றான். அவர்கள் ஒருநொடியினுள்ளே தேரைக்கொண்டுவந்தார்கள். தாரகன் அத்தேர்மீதேறி, மந்திரிகள் துதிக்க, சாமரம் இரட்ட, படைவைக்குஞ்சம் வீச, வெண்குடை நிழற்ற, வலம்புரிகள் ஒலிக்க, மகாமேருமலையைப் போலும் ஒரு வைரத்தண்டமும் பலபடைக்கலங்களும் பலசிங்கங்களால் இழுக்கப்படும் தேர்மீது செல்ல, தூதர்களாலே கூவப்பட்ட அசுரசேனைகள் யானை குதிரை தேர்களோடு வந்து நெருங்க, படைத்தலைவர்கள் பல தேர்கண்மீதேறிச் சூழ, தன்னகரத்தை நீங்கிச் சென்றான். அது கண்ட பூதர்கள் ஆரவாரித்து எதிர்ந்து சென்று, சண்முகக்கடவுளுடைய திருவடிகளைத் துதித்துக்கொண்டு, குன்றுகளையும், மரங்களையும், தண்டங்களையும், மழுக்களையும், சூலங்களையும் அசுரர்கண்மேல் வீச, அசுரர்கள் அம்புகளையும், வேல்களையும், சக்கரங்களையும் எதிர்வீசிப் போர்செய்தார்கள். இவ்வாறு பொரும்பொழுது, இரத்தநதிபெருக, தோள்களும் தலைகளும் துள்ள, குடர்கள் சிந்த, அசுரர்கள் பலர் இறந்தார்கள். பூதர்களுஞ்சிலர் மாய்ந்தார்கள்.

பூதர்களாலே தன்சேனை இறத்தல் கண்ட தாரகன் மிகக்கோபங்கொண்டு, தேரினின்றும் பூமியிலே குதித்து, ஒருதண்டத்தை எடுத்து, பூதர்களைக் கொன்று, அண்டமும் குலுங்கும்வண்ணம் ஆரவாரித்து, கால்களால் உழக்கிச் சென்றான். தாரகன் பூதர்களைக் கொன்றமையையும் அவனை எதிர்க்கும் வன்மை தங்களிடத்தின்மையையும் மதித்து நோக்கி, பூதசேனாதிபதிகள் மனந்தளர்ந்து, சிதறி ஓடினார்கள். அது கண்ட இலக்கவீரர்கள் மிகக்கோபங்கொண்டு, நானாவித வாத்தியங்கள் ஒலிக்க, வில்லைவளைத்து, அம்புகளைத் தொடுத்துக்கொண்டு, தாரகனை விரைந்து வளைந்தார்கள். அவர்கள் தொடுத்த அம்புகள் தாரகனுடைய சரீரத்தைப் பிளந்தில, ஊறேனும் செய்தில, வறுமையால் மிக்கான் ஒருவன் செல்வருக்குச்சொல்லும் சொற்போல வறிது மீண்டன. அம்புகளெல்லாம் தாரகன் மார்பிலே பொள்ளெனப்பட்டு மீண்டு, மலைமீது சிதறும் கன்மாரிபோலாயின. வீரர்கள் அது கண்டு வெகுண்டு, தெய்வப்படைக்கலங்களைச் செலுத்த, அவைகள் தாரகன்மீது பட்டுத் தம்வலி சிந்தி மறிந்து சென்றன. தேவர்கள் அதனை நோக்கிக் கைகுலைத்திரங்கினார்கள். அப்பொழுது தாரகன் தன் வைரத்தண்டத்தைச் சுழற்றி, தன்னைச் சூழ்கின்ற தேர்களெல்லாவற்றையும் அடித்து, புழைக்கையை நீட்டி, இலக்கவீரர்களையும் வாரி, வில்லோடு வீழும்வண்ணம் கடலிலெறிந்தான். வீழ்ந்த வீரர்கள் வில்லோடெழுந்து, ஒருபக்கத்தே போனார்கள்.

வீரகேசரி அதனை நோக்கிக் கோபத்தோடு சென்று, முருகக்கடவுளுடைய் திருவடிகளை மனத்துட்கொண்டு, வில்லை வளைத்து, நூறம்புகளைத் தொடுத்து, தாரகனுடைய மகுடத்தைத் தள்ளி, கடலும் நாணும்வண்ணம் ஆரவாரித்தார். அவ்வோதை கேட்ட தேவர்கள் அவர்மீது பூமாரி பொழிந்தார்கள். தாரகன் அது கண்டு, வேர்த்து மானமுற்று, தன்கைத்தண்டத்தை வீரகேசரிமீதெறிந்து விட்டு, தன்றேர்மீதேறி, ஒரு மகுடத்தைத் தரித்தான். தாரகன் எறிந்த தண்டம் தம்மார்பிலே படுதலும், வீரகேசரி மயங்கி வீழ்ந்தார். வீரவாகுதேவர் அது கண்டு வெகுண்டு, தாரகனெதிர்சென்று, வில்லை வளைத்து, அம்புகளைத் தொடுத்து, அவன் சரீரத்தே செறித்தார். தாரகன் ஒருவில்லை வளைத்து, வீரவாகுதேவர்மீது சரமழையைப் பொழிந்தான். அப்பொழுது வீரவாகுதேவர் பதினொன்கு பாணந்தொடுத்து, தாரகனுடைய வில்லைத் துணித்தார். தாரகன் "இனி நீ இறந்தாய். இதற்கு ஐயமில்லை" என்று சொல்லி, ஒரு சூலத்தைச் செலுத்தினான். அச்சூலம் தம்மார்பிலே படுதலும், வீரவாகுதேவர் மயங்கி நிற்ப, தாரகன் அது கண்டு, இடிபோலார்த்தான். வீரவாகுதேவருடைய தம்பியரெழுவர் தாரகனோ டெதிர்ந்து பொருது, தோற்றார்கள். வீரவாகுதேவர் அது கண்டு, "நம்முடைய தம்பியர்களெல்லாரும் பொருது தோற்றார்கள்" என்று, தாரகனெதிர்சென்று, ஒருவில்லை வளைத்து, நாணொலியெடுத்தார். அப்பொழுது மலைகளெல்லாம் சுழன்றன. அசுரர்கள் இருகாதையும் பொத்திக்கொண்டு, ஏங்கி ஓடினார்கள். முகிலின் து வரவைக் கண்டு மகிழ்ச்சியுற்றோர் பின் அதனிடியொலி கேட்டலும் மயங்கித் தளர்தல்போல, வீரவாகுதேவரது வரவைக் கண்டு மகிழ்ச்சியுற்ற தேவர்கள் யாவரும், பின் அவரது நாணொலி கேட்டலும், அஞ்சி ஏங்கினார்கள். வீரவாகுதேவர் வில்லை வளைத்து, அக்கினிபோல வெகுண்டு, தாரகனை நோக்கி, "பூதர்களையும் வீரர்களையும் வன்மையால் வென்றும் என்று நினைந்தனைபோலும். நான் உன்னை விரைந்து கொல்வேன்" என்றார். அதுகேட்ட தாரகன் "விட்டுணு விடுத்த சக்கரத்தை என் கழுத்திலே பதக்கமாகத் தரித்தேன். இவ்வாறு செய்த என்வலியை எண்ணாது 'நான் உன்னைக் கொல்வேன்' என்றாய். சிங்கத்தை நரி வெல்லுமா! இங்கு வந்த பூதப்படைகளெல்லாம் இறந்தன. வீரர்களெல்லாரும் தொலைந்தார்கள். நீயும் அயர்ந்து நின்றாய். இப்போது வீரம்பேசுகின்றாய். பார், என்வலியினால் உன்னைக் கொல்வேன்" என்றான். அப்பொழுது வீரவாகுதேவர் ஆயிரம்பாணங்களைத் தொடுக்க, தாரகன் தன்கைவில்லை வளைத்து, ஆயிரம் பாணங்களை விரைந்து எதிர்தூண்டி, அவற்றைச் சின்னஞ்செய்து, வேறு நூறு பாணங்களைச் செலுத்தினான். வீரவாகுதேவர் அத்துணைக்கணைகள் தொடுத்து, அவற்றை மாற்றினார். தாரகன் அது கண்டு, "வில்வன்மையில் ஒப்பில்லாத இவ்வீரனைத் தெய்வப்படைக்கலங்களாலே கொல்வேன்" என்று சிந்தித்து, அக்கினிப்படைக்கலத்தை விட, வீரவாகுதேவரும் வெகுண்டு அக்கினிப்படைக்கலத்தை ஏவி, அதனை அழித்தார். தாரகன் வருணப்படைக்கலத்தை விட, வீரவாகுதேவரும் வருணப்படைக்கலத்தை ஏவி, அதனைத் துண்டமாக்கினார். தாரகன் சூரியப்படைக்கலத்தை விட, வீரவாகுதேவரும் சூரியப்படைக்கலத்தை ஏவி, அதனைத் தொலைத்தார். தாரகன் வாயுப்படைக்கலத்தை விட, வீரவாகுதேவரும் வாயுப்படைக்கலத்தை ஏவி, அதனைச் சிதைத்தார். தாரகன் பிரமப்படைக்கலத்தை விட, வீரவாகுதேவரும் பிரமப்படைக்கலத்தை ஏவி அதனை மாற்றினார்.

தாரகன் இவற்றைக் கண்டு, அற்புதங்கொண்டு, "நான் விடுத்த தேவப் படைக்கலங்களெல்லாவற்றையும் இவ்வீரன் வென்றான். இனி நான் இவனை மாயையினால் வெல்வேன்" என்று நினைந்து, மாயாமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு, எண்ணில்லாத வடிவங்களைத் தாங்கி, அளப்பில்லாத படைக்கலங்களைச் செலுத்தினான். இருட்குழாம் எங்கும் பரந்தாற்போல அவனொருவனே எங்குமாய் நின்று போர்செய்ய, தேவர்கள் அது கண்டு கலங்கி ஏங்கினார்கள். முன்னரே தூரத்தோடிநின்ற பூதர்கள் வெருண்டு பின்னரும் ஓடினார்கள். முன் போர்செய்து அயர்ந்த வீரர்களும் அச்சங்கொண்டு நின்றார்கள். அசுரர்கள் முறுவல்செய்து குணலையிட்டார்கள். * தாரகன் செய்யும் மாயப்போரையும் அது கண்டு யாவரும் அஞ்சுதலையும் வீரவாகுதேவர் அக்கினிப்பொறி சிந்த நோக்கி, வீரபத்திரப்படைக்கலத்தை விடும்வண்ணம் எடுத்தார். எடுத்தலும், சூரியன் முன் இருள்போலத் தாரகனுடைய மாயைமுற்றும் அப்பொழுதே அழிந்தது. அழிதலும், தனித்து நின்ற தாரகன் வீரவாகுதேவரைப் பின்பு மாயையால் வெல்லும்வண்ணம் பிறிதோர் சூழ்ச்சியைக் கடைப்பிடித்து, தன்றேரை விட்டு விரைந்தோடினான். ஓடலும், வீரவாகுதேவர் "தோற்றோடினவன்மேலே படைக்கலம் விடுத்தல் வீரமன்று" என்று சிந்தித்து, அவ்வீரபத்திரப்படைக்கலத்தைத் தூணியுள் இட்டார். அதன்பின் "யான் வலியிழந்தோடிய தாரகன்பின் விரைந்து சென்று, அவனைப் பிடித்துப் புயத்தைக் கயிற்றினாலேகட்டி, எம்பெருமானாகிய சண்முகக்கடவுடிருமுன் கொண்டுசென்று விடுப்பேன்" என்று நினைந்து, முருகக்கடவுளைச் சிந்தித்து, கடல்போல ஆரவாரித்து, வைதுகொண்டு, தாரகனைத் தொடர்ந்தணுகினார். அணுகலும், தாரகன் மாயைக்கு உறையுளாகிய கிரௌஞ்சமலையின் குகையொன்றினுள்ளே சென்றொளித்தான். அவன் சென்ற குகையினுள்ளே வீரவாகுதேவர் புகுதலும், அம்மலை முற்றும் சூரியன் செல்லாத இருணிலம்போல் இருந்தது. வீரவாகுதேவர் திருவடிகளினாலே தடவி நடந்து, தாரகனைக் காணாது, அம்மலையின் புணர்ப்பினாலே மீளுநெறியையுங் காணாது, வெருண்டு, "இம்மலையின் மாயை இது" என்று சிந்தித்து நின்றார். அப்பொழுது அசுரனாகிய கிரௌஞ்சமலை அது கண்டு, வீரவாகுதேவருடைய அறிவை மயக்க, அவர் மயங்கி முன்னையறிவெல்லாம் இழந்து, துயின்றார்.

இவ்வாறே அம்மலையினுள் வீரவாகுதேவர் துயிறலும், அவருடைய தம்பியர்கள் இலக்கத்தெண்மரும் பூதசேனாதிபதிகளும் விம்மிச் சிறகில்லாப் பறவைபோல மெலிந்து, "நமது நாயகர் தோற்றோடிய தாரகனைத் தொடர்ந்து சென்றார். இன்னும் மீண்டிலர். அவனோடு மலையினுள்ளே நின்று போர்செய்கின்றார்போலும். நாமும் அங்கே போவேம்" என்று நினைந்து, அங்கு நின்று நீங்கி, விரைந்து சென்று, வீரவாகுதேவர் புகுந்த குகையினுள்ளே புகுந்தார்கள். கிரௌஞ்சமலை வீரவாகுதேவருக்குப்போல எண்ணில்லாத மாயத்தைச் செய்தலும், அவர்கள் யாவரும் மயங்கித் துயின்றார்கள். தாரகன் வந்து அதனை நோக்கி, "நம்மாயையால் இவர்களெல்லாரும் ஒருங்கே இறந்தார்கள்" என்று மகிழ்ந்து, மலையின்மேல் எழுந்தான்.

---

* குணலை - வீராவேசத்தாற்கொக்கரித்தல்.

ஆகாயத்து நின்ற தேவர்கள் இவையனைத்தையுங் கண்டு, கண்ணீர்வார அழுது கலங்கிப் பதைபதைத்தோடினார்கள். பூதப்படைகள் தலைவரின்மையால் அச்சமுற்றன. மலைமீதெழுந்த தாரகன் ஒரு தேர்மேற்கொண்டு, அசுரர்கள் பலரும் வந்து வந்து ஆர்த்துச் சூழ, ஒரு வில்லை வளைத்துப் போர்க்களத்திற் சென்று, நாணேற்றைகொண்டு, கோடிகோடி பாணங்களை ஒருதொடையாகவே பூட்டி, பூதர் கண்மேற் பொழிந்தான். பொழிதலும் பூதர்கள் சுழன்று திசைகளினும் ஆகாயத்தினும் சிதறியோடினார்கள்.

நாரதமுனிவர் இவையெல்லாங் கண்டு இரங்கி, சரீரநடுநடுங்கி வெயர்த்து வழிக்கொண்டு விரைந்து போன தேவர்களோடு சென்று, தேவசேனாதிபதியாகிய சண்முகக்கடவுள் நின்றருளிய கடைக்கூழையை அடைந்து, அவருடைய திருவடித்தாமரைகளை வணங்கி நின்று, "எம்பெருமானே, உம்முடைய படைவீரர்கள் பெரும்போர் செய்து, அசுரப்படைகளையும் மந்திரிகளையுங் கொன்று, தாரகனோடு பொருதார்கள். தாரகன் தன் சூழ்ச்சியினாலே வீரவாகுதேவரையும் இலக்கத்தெட்டு வீரர்களையும் பூதசேனாதிபதிகளையும் கிரௌஞ்சமலையினுள்ளே புகுவித்தான். புகுவித்தவுடனே, கிரௌஞ்சமலை மாயையைச் செய்ய, அவர்கள் யாவரும் மயங்கினார்கள்போலும். தாரகன் இதனை அறிந்து, மகிழ்ச்சியோடு போர்க்களத்தை அடைந்து, நம்முடைய சேனைகண்மீது சரமாரி பொழிய, அவைகள் தோற்றோடின. எல்லாவுயிர்களினும் நிறைந்திருக்கும் முழுமுதற்கடவுளாகிய நீர் இவையெல்லாம் அறிவீரே" என்று விண்ணப்பஞ்செய்தார். அருட்பெருங்கடலாகிய சண்முகக்கடவுள் நாரதமுனிவருடைய உள்ளத்தையும் தேவர்களுடைய துயரத்தையும் நோக்கி, "எல்லீரும் இது கேளுங்கள். நாம் போர்க்களத்திலே சென்று, தாரகனை வேலாயுதத்தினாலே கொன்று, கிரௌஞ்சகிரியைப் பிளந்து, வீரர்களை ஒரிறைப்பொழுதினுள்ளே மீட்டருள்வோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட யாவரும் மனத்துயரநீங்கி, முடிவில்லாத மகிழ்ச்சியுடன் கூத்தாடி, இசைபாடி, முருகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கினார்கள். அப்பொழுது முருகக்கடவுள் தமது சாரதியாகிய வாயுதேவனை நோக்கி, "மனசினும் விரைந்து செல்லும்வண்ணம் தேரைச் செலுத்துவாயாக" என்று பணித்தருள, வாயுதேவன் "நன்று" என்று வணங்கி, தன்னினமாகிய வாயுக்கள் புடைசெல்ல, குதிரைகளைத் தூண்டி ஆர்த்தான். அப்பொழுது வானமும், பூமியும், அங்குள்ள மலைகளும், கடல்களும், திக்கயங்களும் நடுங்கின. சண்முகக்கடவுளுடைய தேர் இவ்வாறே ஆகாயமார்க்கமாகச் சென்றது. பூதசேனைகள் அவரைச் சூழ்ந்து சென்றார்கள். போரிலே தோற்றோடிய பூதர்களெல்லாரும் முருகக்கடவுளைத் தரிசித்தவுடனே வணங்கிக்கொண்டு, ஆற்றலோடும் அவரைச் சூழ்ந்து சென்றார்கள். இவ்வாறே முருகக்கடவுள் தாரகனுடைய போர்க்களத்தை அடைந்தார். பூதர்களோடு அசுரர்கள் போர்செய்து பலர் இறந்தார்கள். மற்றவர்களெல்லாரும் வலியழிந்து தோற்றோடினார்கள்.

தாரகன் தன்சேனைகள் தோல்வியடைந்தமையை நோக்கி, வில்லைவளைத்து, பல பாணங்களைத் தொடுத்துக்கொண்டு நடந்து, தன்னோடெதிர்ந்த கணநாதர்களெல்லாரையும் பலபாணங்களைச் சொரிந்து துரந்துகொண்டு, குமாரசுவாமி திருமுன் அடைந்தான். அடைந்தவுடனே, சிந்தையின்கண்ணே கோபாக்கினி

சோலிக்கத் தூதர்களை நோக்கி, "இவன்றானே சிவனுடைய குமாரன்" என்று வினவ, அவர்கள் "ஆம், அரசனே" என்றார்கள். உடனே தாரகன் தேரை விரைந்து செலுத்திக்கொண்டு குமாரசுவாமி திருமுன் சென்று, பூரணசந்திரர் போலும் ஆறு திருமுகங்களையும், பன்னிரண்டு திருக்கண்களினின்றும் பொழியா நின்ற திருவருளையும், வேலாயுதம் முதலிய படைக்கலங்களையும், பன்னிரண்டு திருக்கரங்களையும், தண்ணடை ஒலிக்கும் செந்தாமரைமலர்போன்ற அருமைத்திருவடிகளையும் கண்டான். இவ்வாறே சிற்பரமூர்த்தியாகிய முருகக்கடவுளுடைய திருவுருவனைத்தையும் நோக்கி, அற்புதமடைந்து, "இவன் நம்மேலே போர் செய்யவந்தான் என்றால், கற்பனைகடந்த ஆதிக்கடவுளேபோலும்" என்றான். இவ்வாறு எண்ணியபின்பு, யாவருக்கும் முதல்வராகிய சிவபெருமான் தமக்குத் தந்த வரத்தையும், வீரத்தையும், வன்மையையும், செல்வத்தையும், நினைந்து கோபித்து, கந்தசுவாமியை நோக்கி, "கேள், பிள்ளாய். விட்டுணுவுக்கும் பிரமனுக்கும் இந்திரனுக்குமன்றிச் சிவபெருமானுக்கும் எமக்கும் போர்செய்தற்கு ஒருகாரணமுமில்லை. நீ வந்ததென்னை? சொல்" என்றான். அதற்கு முருகக்கடவுள் "உயிர்கள் செய்யும் நல்வினை தீவினைகளை நாடி, அவற்றிற்கேற்ப அருளும் தண்டமுஞ் செய்யும் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் தேவர்களை நீங்கள் சிறையில் வைத்தமையைத் திருவுளங்கொண்டு, உங்கள் வீரத்தையும் வன்மையையும் அழிக்கும்பொருட்டு நம்மை விடுத்தருளினர்" என்று திருவாய்மலர்ந்தார். அது கேட்ட தாரகன் "கருடன்மேற்கொண்டு என்னோடெதிர்ந்து பொருத விட்டுணுவினுடைய சக்கரம் என்கழுத்தில் ஆபரணமாயிருத்தலை நீ காண்கிலையா? இந்நாள்காறும் எம்மோடு பகைத்துப் போர்செய்யப் புகுந்தவர்கள் யாவருள்ளும் சிறிது போழ்தினுள் இறந்தவர்களும் தோற்றோடினவர்களுமன்றி எம்மை வென்றவர்கள் இல்லை. இது நீ கேட்டிலையா? நீ என்னோடு பொரும்வண்ணம் விடுத்த தலைவர்களை நான் வென்று கிரௌஞ்சமலையினுள்ளே மாளும்வண்ணஞ் செய்தேன, பல கணங்களைக் கொன்றேன். இவற்றை நீ அறிந்திலையா? பிள்ளாய், நீ என்னோடு பொருது வருந்தாது உன்றந்தையாகிய சிவனிடத்தே போய்விடு" என்றான். அறுமுகக்கடவுள் அது கேட்டு, "ததீசிமுனிவன்மேல் விட்டுணு விடுத்த சக்கரம் தன் கூரை இழந்துபோய்க் குயவன் கைச்சக்கரம்போலாயினதை நீ கேட்டிலையா? படைக்கலங்களுக்கெல்லாம் நாயகமாகிய நம்முடைய வேற்படை விட்டுணுகைச் சக்கரம்போலப் பழிப்படுமா? அது உன்னுயிரை விரைவின் உண்டுவிடும். பூமி முழுதையும் உண்டு பரந்த பேரிருள் சூரியன் உதிக்க அகலுதல்போல, இவ்வுலகனைத்தையும் வென்ற உங்கள் பேராற்றல் இங்கு நாம் வர இமைப்பின்மாய்ந்தது. மாயைகளெவற்றையும் தன்னிடத்தே காட்டிய கிரௌஞ்சவெற்பையும், கள்வனே, உன்னையும், வேலாயுதத்தினாலே கொன்று, நமது சேனையை விரைவிலே மீட்கின்றேம்" என்று திருவாய்மலர்ந்தார்.

உடனே தாரகன் கோபங்கொண்டு வில்லை வளைத்து நாணொலியெடுக்க, தேவர்களும் தியக்கமடைந்தார்கள். அப்பொழுது அறுமுகக்கடவுள் தமது திருக்கரத்திருந்த வில்லை வளைத்து, நாணோதைகொண்டார். கோள்ளனும், பிரமா முதலாயினரும் அஞ்சினார்கள், உலகமெல்லாம் ஏங்கின. தாரகனும் தலையசைத்தான். தலையசைத்த தாரகன் அளப்பில்லாத கணைகளைத் தூண்ட, அறுமுகக்கடவுள் ஆயிரம் பாணங்களைத் தூண்டி அவற்றைத் துணித்தார். தாரகன்

கோபித்துப் பின்னும் ஆயிரம் பாணஞ் செலுத்த, முருகக்கடவுள் பத்துப்பாணஞ் செலுத்தி அவற்றை மாற்றினார். மீட்டும் தாரகன் அம்புகளை வில்லிலே பூட்டலும், முருகக்கடவுள் ஒருபாணந் தொடுத்து, அவன் வில்லைத் துண்டமாக்கினார். தாரகன் வேறோர் வில்லைவளைக்க, முருகக்கடவுள் ஆயிரம் பாணங்களை அவன்மீது செலுத்தினார். அது கண்ட தாரகன் ஆயிரம்பாணங்களைச் செலுத்தி, அப்பாணங்கள் யாவற்றையும் நீறாக்கி, வேறு ஆநந்தம் பாணங்களைச் செலுத்தினான். முருகக்கடவுள் அவைகளை அறுத்து, கோடிபாணங்களைத் தூண்டி, தாரகனுடைய சரீரமெங்கும் செறிவித்தார். செறிவித்தலும், தாரகன் கோபங்கொண்டு, இருகோடிபாணங்களைச் செலுத்த, முருகக்கடவுள் அவைகளைப் பாணங்களினால் மாற்றி, இரண்டு பாணங்களைச் செலுத்தி, தாரகனுடைய புழைக்கையையும் கோடுகளையும் துணித்து வீழ்த்தினார். உடனே தாரகன் தளர்ந்து வெகுண்டு, ஆயிரம் பாணங்களைத் தொடுத்து, முருகக்கடவுளுடைய தேர்க்கொடியை அறுத்தான். அது கண்டு, முருகக்கடவுள் எட்டம்பினாலே தாரகனுடைய வில்லைத் துணித்து, ஆயிரமம்பு தூண்டி, அவனுடைய தேரையும், குதிரைகளையும், பாகனையும் அழித்தார். தாரகன் வேறொரு தேர்மீதேறி, ஓர் வில்லை வளைத்து, முருகக்கடவுளுடைய சாரதியாகிய வாயுதேவனுடைய புயங்களில் ஆயிரமம்பு தொடுத்தான். முருகக்கடவுள் தமது சாரதியுடைய வருத்தத்தை அறிந்து, ஆயிரம் பாணங்களைத் தாரகனுடைய நெற்றியிலே புகும்வண்ணம் செலுத்த, அவன் இரத்தம் பெருகத் தன்றேர்மீது புலம்பி மயங்கி வீழ்ந்தான்.

தாரகன் வீழ்தலும், அவனுடைய படைவீரர் அதனை நோக்கி, கோபங்கொண்டு, எம்பெருமானை வளைந்து, சூலம் சக்கரம் தோமரம் முதலிய பல படைக்கலங்களை அவர்மீது பொழிந்து, ஆர்த்தார்கள். குமாரசுவாமி அது கண்டு, தம்வில்லை வளைத்து, சரமாரி பொழிந்து, அவுணர்கள் விடுத்த படைக்கலங்கள் யாவையும் அறுத்தார். மீட்டும் சரமாரி பொழிந்து, அசுரர்களுடைய தலைகளையும் மார்புகளையும் வாய்களையும் கைகளையும் தோள்களையும் தாள்களையுந் துணித்தார். இரத்தம் எங்கும் கடல்போலப் பெருகியது. முருகக்கடவுளுடைய பாணங்களினாலே அசுரர்களிற் பலர் இறந்தார்கள். சிலர் இரத்தக்கடலிலே பாய்ந்து நீந்தி, நத்தமுயிர்கொண்டோடினார்கள்.

அப்பொழுது தாரகன் மயக்க நீங்கி எழுந்து, தன்னயலிலே நின்ற தன் சேனைகளைக் காணாது துன்பங்கொண்டு, நகைத்து, "பரமசிவனுடைய சிறுவனொருவன் போர்செய்ய, நான் என்புழைக்கையையும் கோடுகளையும் இழந்து, மயங்கி வீழ்ந்தேன். என்சேனைகளையும் இழந்தேன். இங்கே தனித்து நிற்கின்றேன். என்னாண்மை அழகிது அழகிது. வில்வன்மைகொண்டு எண்ணிறந்த பாணங்களைத் தூண்டி இப்பாலகனுடைய உயிரைக் குடித்தலும் வெல்லலும் அரிது. இனித் தேவப்படைக்கலங்களைச் செலுத்தக்கடவேன்" என்று சிந்தித்தான். சிந்தித்து, விட்டுணுப்படைக்கலம் பிரமப்படைக்கலம் முதலிய தேவப்படைக்கலங்கள் யாவற்றையும் விட விட, அவையெல்லாம் வந்து வந்து, அஞ்சி நடுநடுங்கி, எம்பெருமான் பக்கத்தே ஒதுங்கித் துதித்துக்கொண்டு நின்றன. தாரகன் அது கண்டு, அகந்தையை ஒழித்தான், சிறிதஞ்சினான், மிக விம்மிதமடைந்தான். அக்கினிசொரிக்குங் கண்ணிணையுடையனாகி, "இவனை வெல்லல் அரிது

போலும்" என்று மனசினினைந்தான். "இனிச் சிவப்படைக்கலத்தை விடக்கடவேன்" என்று சிந்தித்து, அதனை எடுத்து, மனத்தினாலே பூசித்துக் கோபத்தோடு செலுத்தினான். அச்சிவப்படைக்கலம் நஞ்சையும், தேவப்படைக்கலங்களையும், பூதங்களையும், பாம்புகளையும், சூலங்களையும், அக்கினியையும் உண்டாக்கிக் கொண்டு, சருவாண்டங்களும் சருவான்மாக்களும் உலைந்து சுழலும்வண்ணம் உருத்துச் சென்றது. சுப்பிரமணியக்கடவுள் அது கண்டு, தந்தையாராகிய சிவபெருமானைத் திருவுளத்திலே தியானித்துக்கொண்டு, ஒரு திருக்கரத்தை நீட்டி, அச்சிவப்படைக்கலத்தைப் பற்றிக்கொண்டார். தாரகன் அது கண்டு, "இன்றே எமது செல்வம் அழிந்தது" என்று ஏங்கினான். "தேவதேவராகிய சிவபெருமானுடைய படைக்கலத்தைச் செலுத்தினேன். அதனையும் எதிர்ந்து பற்றினான். இவ்வறுமுகக்கடவுளுடைய வன்மை ஒருவராலே சொல்லற்பாலதா! ஆயினும் இவன் தருமப்போரன்றி வஞ்சகப்போர் செய்ய நினையான். நான் மாயைகளைச் செய்து, மறைந்து நின்று போர்செய்வேன்" என்று சிந்தித்து, விரைந்து தேரோடு கிரௌஞ்சமலையின்முன் சென்று, "நீ வல்ல மாயைகளை விரைந்து செய்வாயாக செய்வாயாக" என்றான். உடனே கிரௌஞ்சமலை மாயையினாலே முப்புரங்கள் பலவாய்வர, தாரகன் அப்புரங்களிலுள்ள அசுரர்களாய் வந்தான். கிரௌஞ்சமலை பல பல முகில்களாய் வர, தாரகன் அவற்றினுள்ளே இடியாய் வந்தான். கிரௌஞ்சமலை பல கடல்களாய் வர, தாரகன் அவற்றினுள்ளே வடவாமுகாக்கினியாய் வந்தான். கிரௌஞ்சமலை சக்கரவாளகிரியைச்சூழும் இருளாய் வர, தாரகன் அதனுள்ளே பூதர்களாய் வந்தான். கிரௌஞ்சமலை அட்டதிக்கயங்களாய் வர, தாரகன் குலமலைகளாய்ச் சடசடவென்னும் ஒலியோடு வந்தான். கிரௌஞ்சமலை வாயுவாய் வர, தாரகன் அக்கினியாய் வந்தான். கிரௌஞ்சமலை நெருப்புக்கொள்ளிகளாய் ஆகாயத்து வர, தாரகன் ஆயிரகோடி சூரியர்களாய் வந்தான்.

இவ்வாறே தாரகன் கிரௌஞ்சகிரியோடும் அளவில்லாத மாயையின் வடிவங்களைக் கொண்டு எங்குந் திரிதலும், அறுமுகக்கடவுள் இவற்றைக் கண்டு, தமது திருக்கரத்திலுள்ள வேலாயுதத்தை நோக்கி, "நீ தாரகாசுரனையும் கிரௌஞ்சமலையையும் ஓரிறை செல்லுமுன் பிளந்து, உள்ளுயிருண்டு புறத்தே சென்று, இலக்கத்தொன்பது வீரர்களையும் பூதசேனாதிபதிகளையும் மீட்டுக்கொண்டு, இங்கு வருவாயாக" என்று பணித்து, அதனைச் செலுத்தினார். சருவசங்கார காலத்தில் மாயையினாகிய உலகங்களையும் அவற்றின்கணுள்ள உயிர்களையும் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றும் அக்கினி சுடுதல்போல, அவ்வேலாயுதம் தாரகனும் கிரௌஞ்சகிரியும் அங்கே செய்த மாயைகளனைத்தையும் விரைவின் அழித்தது. எம்பெருமானுடைய ஆறுதிருமுகங்களினு நின்று எழுந்த கோபம் திரண்டொரு வடிவெடுத்துச் செல்லல்போலவும், சிவபெருமானுடைய முத்தலைச்சூலமிரண்டு ஒருபடையாய்ச் செல்லல்போலவும், அவ்வேற்படை சென்றது. செல்லலும், தாரகன் "இதனை நான் பிடித்து முறித்துவிடுவேன்" என்று கோபத்தோடு விரைந்து வந்தான். அச்சஞ் சிறிதும் இல்லாத தாரகன் கருடன்மேற்செல்லும் பாம்புபோலச் சீறி கனுகுதலும், அவ்வேலாயுதம் அவனது மார்பாகிய வைரமலையின்மீது இடிபோலப் பட்டு, அதனைக் கிழித்துப்போய்க் கிரௌஞ்சமலையிலே பட்டு, அதனை உருவிச் சென்று, வீரமும்

புகழுங்கொண்டு விளங்கினாற்போல இரத்தமுழுந்துகளுமாடி, விரைந்து மீண்டது. மீண்ட வேலாயுதம் மலையினுள்ளே துயில்கின்ற வீரர்களை எழுப்பிவிட்டு, ஆகாயத்திலே போய்க் கங்கைநீராடிச் சுத்தவடிவாய், எம்பெருமானுடைய திருக்கரத்தில் வந்து, முன்போல் இருந்தது. வேலாயுதம் தாரகனுடைய மார்பிலும் கிரௌஞ்சகிரியிலும் பட்டுருவிய பேரோசையைக் கேட்டு, உலகத்துள்ளோர்கள் "பூமி பிளந்தது" என்பாரும், "மகாமேருமலை வெடித்தது" என்பாரும், "அண்டம் உடைந்தது" என்பாரும் ஆயினார்கள். வேலாயுதம் தன் மார்பை ஊடறுத்துச் செல்ல, தாரகாசுரன் அநந்தகோடி யிடிகள்போல ஆர்த்து, எழுந்து துள்ளிப் பூமியில் விழுந்து, பதைபதைத்து இறந்தான்.

அறுமுகக்கடவுள் செலுத்திய வேலாயுதம் மீண்டு அவரது திருக்கரத்து இருப்ப, தாரகன் இறந்தமையையும், கிரௌஞ்சகிரி பிளந்தமையையும், விட்டுணுவும் பிரமாவும் இந்திரனும் தேவர்களும் முனிவர்களும் நோக்கி, ஆரவாரித்தார்கள், கூத்தாடினார்கள், இருகைகளையும் சிரசின்மேற்குவித்துக் குமாரசுவாமியைத் துதித்தார்கள், பூமாரி பொழிந்தார்கள், வலஞ்செய்து பாடினார்கள், திருமுன்னே பலமுறை வணங்கி நின்றார்கள், பேரானந்தப்பெருங்கடலின் மூழ்கினார்கள்.

கிரௌஞ்சகிரி அழிந்தவுடனே, அதனுள்ளே துயின்ற வீரவாகுதேவர்முதலிய வீரர்களெல்லாரும் மயக்கநீங்கி, விரைந்து சென்று, சண்முகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கித் துதித்துக்கொண்டு, அவர் பக்கத்தை அடைந்தார்கள். பெருங்கருணாநிதியாகிய சுப்பிரமணியக்கடவுள் அவர்களை நோக்கி, "நீங்களெல்லீரும் தாரகனுடைய கிரௌஞ்சகிரியுட்பட்டு, மாயையின் அழுந்தி அறிவிழந்து வருந்தினீர்கள்போலும்" என்று திருவாய்மலர்ந்தருளினார். தண்ணளியோடு கூடிய இவ்வருமைத்திருவாக்கைக் கேட்ட வீரர்கள் "எம்பெருமானே, உமது திருவருள் இருக்கும்பொழுது அடியேங்கள் ஊறடைவதுண்டா? மையலுடன் உறங்குவோர்போல இன்பமடைந்ததன்றிக் கிரௌஞ்சமலையினது மாயத்தினாலே சிறிதும் துன்பமடைந்திலேம்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப்பொழுது குமாரசுவாமி வீரவாகுதேவரை அழைத்து, முன்னே தாரகன் விடுப்பத் தாம் பற்றிய சிவப்படைக்கலத்தை அவர்கையிற் கொடுத்து, "இதனை நீ வைத்துக் கொள்ளக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்து, திருவருள் புரிந்தார். அதன்பின்பு, தாரகனுடைய யுத்தத்தில் இறந்த பூதர்களெல்லாரையும் "நீங்களெல்லீரும் எழுங்கள்" என்று எழுப்பி, பூதசேனைகள் சூழ, தேவர்கள் துதிக்க, வீரர்கள் நெருங்க, செருக்களத்தினின்றும் நீங்கினார்.

திருச்சிற்றம்பலம்.

தேவகிரிப்படலம்.

முருகக்கடவுள் போர்க்களத்தை அகன்று, தேவர்களும் பூதர்களும் வீரர்களும் துதிக்க வந்து, அங்கு நின்ற இமையமலையைக் கடந்து, தென்றிசையின் நடந்து, சூரியன் அஸ்தமயனஞ்செய்யும்பொழுது தேவகிரியை அடைந்தார். அவ்விரவிலே அம்மலையின் ஒருபக்கத்தெய்தி, விட்டுணுவும், பிரமாவும், இந்தி

ர்னும், தேவர்களும் முருகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, "பெருங்கருணாநிதியே, வன்கண்மையையுடைய தாரகாசுரன் வருத்த இந்நாள்காறும் சிறியேங்கள் வருந்தினேம். எம்மாட்டுள்ள பெருங்கருணையினாலே அவனைக் கிரௌஞ்சகிரியோடு கொன்றருளினீர். உம்மைப் பூசிக்க நினைந்தேம். இம்மலையில் எழுந்தருளியிருத்தல்வேண்டும். இவ்வரந்தருக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அருட்பெருங்கடலாகிய முருகக்கடவுள் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருள, தேவர்கள் அதுகண்டு, சரீரம் பூரிக்க உரோமஞ்சிலிர்க்கத் துள்ளிப் பேருவகை பூத்தார்கள். முருகக்கடவுள் சேனைகளோடும் தேவர்களோடும் தேவகிரிமேற்சென்று, தம்மைத் தொழுதுகொண்டு தம்பக்கத்து வந்த தேவத்தச்சனை நோக்கி, "நாமும், நம்முடைய தம்பியர்களும், தேவர்களும், கணங்களும் இருக்கும்பொருட்டு, இம்மலையின்கண்ணே ஒரு நகரத்தை இப்பொழுதே விரைவின் உண்டாக்கக்கடவாய்" என்று பணித்தருளினார். அது கேட்ட தேவத்தச்சன் "சுவாமீ, அவ்வாறே செய்வேன்" என்று விண்ணப்பஞ்செய்து, திருவடிகளை வணங்கிக்கொண்டு போய், அவ்விடத்தே ஒரு நகரத்தையும், அதனுள்ளே எம்பெருமான் எழுந்தருளியிருக்கும்பொருட்டு ஒரு செம்பொற்றிருக்கோயிலையும், அதனுள்ளே ஓரிரத்தின சிங்காசனத்தையும் செய்து முடித்துக்கொண்டு, மீண்டு வந்து, விண்ணப்பஞ்செய்தான்.

சண்முகக்கடவுள் தம்மைச் சூழ்ந்த யாவரோடும் அத்திருநகரத்தினுள்ளே போய், பூதசேனைகளைத் திருக்கோயிற்றிருவீதியிலே நிறுவி, தேரினின்றும் இறங்கி, செம்பொற்பாதுகைகளிலே தமதருமைத்திருவடிகளை வைத்து, வீரர்களும் தேவர்களும் சூழ, திருக்கோயிலினுள்ளே புகுந்து, சூரியர்கள் யாரும் ஒரோவழிக் கூடினாற்போலப் பேரொளி வீசும் இரத்தினசிங்காசனத்தின்மேல் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது பிரமா முதலிய தேவர்கள் யாவரும் எம்பெருமானைப் பூசிக்க நினைந்து, உமாதேவியாருடைய திருக்கரத்திற்றோன்றிய கங்கையை நினைப்ப, அஃதங்கு வந்தது. பின்னர் இரத்தினாபரணம், பீதாம்பரம், நறுமலர், சந்தனம், தூபம், தீபம் முதலிய பூசோபகரணங்களனைத்தையும் அங்கு வருவித்தார்கள். முன்னே அமுதம் வைத்த குடங்களைக் கொணர்ந்து, வேதங்களைச் சொல்லிக் கங்கையிலே திருமஞ்சனமெடுத்தார்கள். பிரமா முதலிய தேவர்களும் முனிவர்களும் சண்முகக்கடவுள் பக்கத்தை அடைந்து, அவருடைய மந்திரத்தைச் சொல்லித் திருமஞ்சனமாட்டினார்கள். அதன்பின், முன்னே தரித்த பீதாம்பரத்தை நீக்கி, வேறு பீதாம்பரஞ் சாத்தி, வேறொரு சிங்காசனத்தின்மேல் எழுந்தருளியிருக்கச்செய்து, அவருடைய திருநாமத்தைச் சொல்லி, நறுமலர்களைச் சாத்தி, திருமாலைகளைச் சூட்டி, சந்தனக்குழம்பை அணிந்து, பச்சைக்கர்ப்பூரத்தை அப்பி, புழுகையும், கஸ்தூரியையும் மட்டித்து, திருமேனியெங்கும் திவ்வியாபரணங்களைச் சாத்தி, மணியொலியோடு தூபதீபங்காட்டி, மெய்யன்போடு வலஞ்செய்து வணங்கித் துதித்தார்கள். தேவர்களெல்லாருங்கூடி இவ்வாறு பூசிப்ப, அறுமுகக்கடவுள் பெருங்கருணையினாலே அதனை ஏற்றுக்கொண்டு, அங்கெழுந்தருளியிருந்தார். அதுநிற்க, தாரகனுடைய புதல்வனாகிய அசுரேந்திரன் செய்ததும் பிறவுஞ் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

அசுரேந்திரன் மகேந்திரஞ்செல்படலம்.

அறுமுகக்கடவுள் செலுத்திய வேலாயுதத்தினாலே தாரகன் இறந்தமையைச் சிலதூதர்கள் போய்ச் சொல்ல, அவனுடைய மனைவியாகிய சௌரி வருத்தமுற்று, மற்றை மனைவியர்களும் பிறரும் தன்னைச் சூழ்ந்து பதைத்திரங்க, துன்பத்துடனே சென்று, தன் கணவன்மேல் வீழ்ந்து, புலம்புவாளாயினாள்: "சிவபெருமானுடைய திருவருளைப் பெற்ற நீ விட்டுணுபதத்திற் சென்றாயல்லை, பிரமபதத்திற்சென்றாயல்லை, திருக்கைலாசத்திற் சென்றாயல்லது வேறெங்குச் சென்றாய்! தன் சக்கரத்தை உனக்காபரணமாகத் தந்த விட்டுணுவும் இந்திரனும் மற்றைத் தேவர்களும் இயமனும் மற்றனைவர்களும் இன்றன்றோ தங்கள் மனக்கவலையெல்லாம் தீர்ந்தார்கள். தேவர்கள் யாவரும் புலம்பும் வண்ணம் அசுரமன்னவர்களோடும் நீ வரும் பவனியைக் காணாதேன் பறவைக்கூட்டஞ்சூழத் துயிலும் உன்னை, எம்பெருமானே, இப்படியே காண்பேனாயினேன். நான் உன்னைத் தழுவுதல்கண்டும், நீ என்னைத் தழுவாதிருந்தனை. அது பலருங்காணிற் பழுதாமென்றொழிந்தாயாயின், மயங்காநின்ற எனக்கு ஒரு சொல்லாயினும் சொல்கின்றிலையே! வறிதே துயில்கின்றாய். என்மேல் யாதாயினும் வெறுப்புண்டா? கைலாசபதி உனக்குத் தந்த வரம் மெய்யென்றே இந்நாள்காறும் துணிந்திருந்தேன். அது பொய்யாய் விளைந்ததுவோ! என்கணவா, இறந்தனையே. ஐயோ! இதற்கோ நீ முன் அருந்தவஞ் செய்தாய். உயர்வொப்பில்லாத சிவபெருமான் பெற்ற குமாரனோடு நீ ஏன் எதிர்ந்தாய்! ஐயோ இறந்தாயே! விதிவலியை யாவர் கடந்தவர்! அசுரர்கள் சூழும்வண்ணம் சிங்காசனத்தில் வீற்றிருந்த நீ போர்க்களத்திறந்தாயே. என்னாயகனே, சொல். இதுவுஞ் சிலநாளோ. சிவபெருமான் உனக்குத் தந்த வரத்தை நீ நம்பினையே. அவருடைய சூழ்ச்சியைச் சிறிதும் உணராது உயிருந்தொலைந்தாயே. இனி உன்னைத் தமியேன் காண்பது எந்நாளோ! சிவகுமாரன் வந்து போர்செய்ய நீ முன்னை வலியிழந்து இறந்தனையென்பது கேட்டும், பின்னும் உயிரோடிருந்தேன். என்னினும் பேரன்புடையோர் யாவர்! இனி நான் யாது செய்வேன்" என்று இரங்கினாள். மற்றை மனைவியர்களும் வந்து நெருங்கித் தாரகனைச் சுற்றிப் புலம்பித் துயருற்றார்கள்.

அப்பொழுது சிங்கமுகாசுரனுடைய ஆசுரபுரிக்குப் போயிருந்த புதல்வனாகிய அசுரேந்திரன் கேள்வியுற்று வந்து, தன் பிதாவாகிய தாரகன் இறந்ததனைக் கண்டு, பெருமூச்செறிந்தான், அழுதான், கைகுலைத்தான், சோகத்தழுங்கினான், விழுந்தயர்ந்தான், பின்பு தெளிந்தான். முன்னொருநாளும் அடையாத பெருந்துயரத்தழுந்திய புதல்வன் எழுந்து சென்று, தன் மாதாவுடைய கால்களில் விழுந்து, "அம்மே, உன்கணவன் எங்கே சென்றான்! சொல்வாயாக" என்று நின்று புலம்பினான். பின்பு தன் மாதா முதலாயினோரை "நீங்கள் ஒருபக்கத்தே போயிருங்கள்" என்று ஏவி, தன்னயலில்நின்ற அசுரர்களைக் கொண்டு அக்கினி விறகு முதலிய கருவிகள் பலவற்றையும் வருவித்தான். தந்தையாகிய தாரகனது சரீரத்தை முன்போலப் பொருத்தி, ஒரு தேர்மீதேற்றி, சுடுகாட்டிற் சேர்த்தி,

சந்தனப்பள்ளிமீது கிடத்தி, ஈமக்கடன்களைச் செய்து, தகனம் பண்ணினான். பண்ணும்பொழுது, மாதாவாகிய சௌரி சென்று, "நான் என் கணவனுடன் செல்லுதற்கு அக்கினிவளர்க்கக்கடவாய்" என்று சொல்ல, அசுரேந்திரன் அது கேட்டு, நடுநடுங்கி, அவள் கால்களின் வீழ்ந்து, "தாயே, என்னைக் காப்பாற்றிக் கொண்டிருப்பாயாக" என்றான். சௌரி அதனை மறுத்துக் கோபித்துரைக்க, அசுரேந்திரன் "அவ்வாறாகுக" என்றான். மற்றைத்தாயர்களும் "நாங்களும் கணவனோடு செல்லும்வண்ணம் அக்கினி வளர்க்கக்கடவாய்" என்று சொல்ல, அசுரேந்திரன் அதற்கிசைந்து அக்கினி வளர்க்க, தாயர்களெல்லாரும் அதில் வீழ்ந்தார்கள்.

வீழ்ந்தபொழுது அசுரேந்திரன் புலம்பி, அந்நகரத்தை அக்கணமே நீங்கி, தன்கிளைஞர் சிலர் தன்னைச் சூழச் சென்று, தென்கடலினுள்ள வீரமகேந்திர புரியை யடைந்தான். அங்கே சூரபன்மனுடைய கோயிலிற் புகுந்து, அவனுடைய கால்களின் வீழ்ந்து, தன்கைகளால் அவற்றைப் பிடித்துக்கொண்டு அழுதான். சூரன் அது கண்டு, "மைந்தனே, நீ புலம்பாதே. நிகழ்ந்தது யாது? சொல்வாயாக" என்றான். அப்பொழுது அசுரேந்திரன் "பிதாவே, இந்திரனுடைய புணர்ப்பினாலே பரமசிவனுடைய குமாரனாகிய கந்தன் பூதசேனைகளோடு வந்து, உன்றம்பியைக் கிரௌஞ்சமலையோடு வேற்படையினாலே கொன்று, பூமியில் வந்தான்" என்றான். சூரன் அதுகேட்டு, "நன்று நன்று" என்று இடிபோலச் சிரித்து, "கிரௌஞ்சகிரியோடு தாரகனைச் சிவனுடைய குமாரனா கொல்வான்! இது பொய்வார்த்தை. மைந்தனே, அஞ்சாதே. உண்மை சொல்வாயாக" என்றான். அதற்கு அசுரேந்திரன் "பிதாவே, இது உண்மை. என்றந்தையையும் கிரௌஞ்சகிரியையும் சிவனுடைய குமாரன் வேலாயுதத்தினாலே கொன்றுவிட்டுச் சென்றான். நான் விதிப்படி ஈமக்கடன் செய்து முடித்துக்கொண்டு, பெருந்துயரத்தோடும் உன்னிடத்து வந்தேன்" என்றான். அது கேட்டலும், சூரனுடைய மனசிலே கோபாக்கினி கிளர்ந்தது; கண்கள் அக்கினியைக் கான்றன; நாசிகள் புகையைத் தோற்றுவித்தன. சரீரத்து ரோமங்கள் பொறியைச் சிந்தின. நெறித்த புருவமிரண்டும் நெற்றிமேற்சென்றன. பற்கள் அதரத்தைக் கவ்விக் கடித்தன. உதடுகள் துடித்தன. மனம் ககனகூடத்தையும் இடிக்க நினைந்தது. இவ்வாறே கோபாக்கினி எழுந்து சொலிக்க, தாரகன்மீது தொடரும் அன்பினாலே சூரனிடத்துச் சேர்ந்த துன்பக்கடல் அவ்வக்கினியினாற்றலை அவித்தது. கண்களினின்றும் பொழியாநின்ற நீர் நதிபோலவும், சரீரத்திற்றோன்றிய வேர்வை கடல்போலவும், பெருகின. சூரபன்மன் இவ்வாறே துன்பக்கடலில் அழுந்திச் சிங்காதனத்தினின்றுந் தவறிப் பூமியில் வீழ்ந்து, இடிபோல அழுதான். பக்கத்துநின்ற அசுரர்கள் துன்பத்தழுந்தி, ஏங்கி வீழ்ந்தழுதார்கள். அந்நகரமெங்கும் அழுகையொலியே மலிந்தது.

அப்பொழுது சூரபன்மன் முன் அவிந்த கோபாக்கினி பின் மனத்தின் மூள, மானமும் நாணமும் வருத்த, விரைந்தெழுந்து, தன்னேவலர்களை நோக்கி, "என்றம்பியைக் கொன்ற கந்தனை நான் சென்று பொருது வென்றுவரல்வேண்டும். என்னுடைய தேரையும் படைக்கலங்களையும் கவசத்தையும் ஒருகணத்திலுள்ளே கொண்டுவாருங்கள்" என்றான். உடனே ஏவலர்கள் யாவரும் அவ்வாறு

செய்யும்பொருட்டுப் போனார்கள். அசுரர்கள் அதனை அறிந்து குறைவற்ற படைகளோடு வந்து சேர்ந்தார்கள். இவற்றைக் காண்டலும், மந்திரிகளுள் ஒருவனாகிய அமோகன் சூரனுடைய கால்களை வணங்கி நின்று, "மகாராசாவே, அடியேன் ஒருசொற் சொல்வேன். கோபங்கொள்ளாது அதனைக் கேட்க" என்று சொல்லலுற்றான்: "படைத்தொழில் கற்றுப் பகைவரைத் தாங்கூறிய வஞ்சினப்படியே கொல்ல வல்ல வீரர்கள், தந்நகரத்தைப் பகைவர் வந்து வளைப்பினும், எண்ணியன்றிக் கோபத்தை மேற்கொண்டு விரைந்து போர்செய்யச் செல்லார். பகைவருடைய குலத்தையும், உட்கோளையும், வந்த நிலத்தையும், அவருடைய முன்னோரது நெறியையும், அவர்கொண்ட கோபத்தையும், அவருடைய படையையும், வலியையும் வினவியன்றிப் பிறிதொன்று மனங்கொள்வாரா? பகைவர் வரத்தின் வலியரோ, மாயையின் வலியரோ, படைக்கலக்கல்வியின் வலியரோ, உரத்தின் வலியரோ, ஊக்கத்தின் வலியரோ என்று இவற்றை ஆராய்வர். ஒற்றரைத் தூண்டி அவரது வலியை உணர்ந்தாராயினும், வேறோரொற்றனாலன்றி அவர் கூற்றை மனத்துட்கொள்ளார். அப்பகைவரைச் சூழுஞ் சேனையன்றி அவருக்குப் பிறிதிடத்தும் சேனையுண்டோ என்று பின்னும் ஒற்றரை விடுத்தாராய்வர். வினையினது விளைவை ஒருகாலும் மெலிதென நினையார். அவரது சேனையையும் அவரது தன்மையையும் சிறுமையாகக் கருதார். தமக்குப் பகைவர் வரின், கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல் என்னும் முன்னை மூன்றுபாயங்களையும் ஆராய்ந்து நிலைமையறிந்து செய்வர். இம்மூன்றின் வாராவழித் தம்மரசியன் மரபுக்கேற்பக் கொடுஞ்சினங்கொண்டு குற்றந்தீர்ந்த படைஞரோடும் படைக்கலங்களோடும் எதிர்ந்து சுற்றி, பகைவரதியல்பை அறிந்து, அதற்கேற்பப் பொருது வெற்றிகொண்டு மீள்வர். எதிர்க்க வலியிலாதார் எதிர்ந்தவழியும், அரசராயினோர் அவரோடு போரைக் குறித்துச் செல்லல் பழியதன்றோ! அவரை வெல்லக் கருதினும், தம்படைஞரைத் தூண்டி வெல்வர். அதுவே பெறற்கரும்புகழ். உலகத்துள்ள அரசரதியற்கை இதுவேயாகும். அரசனே, உனக்கொப்பாரில்லை. நீ அழிவில்லாய். எவ்வுலகுமாளுவாய். குற்றமொன்றும் அடையாய். தேவர்கள் யாவரையும் ஏவல்கொண்டாய். பிரமனுந் திருமாலும் நாடோறும் புகழுமாறிருந்தாய். இத்தன்மைத்தாய வலி பெற்றுள்ள நீ, எளியனாகிய இந்திரன்சொற்கேட்டுப் பூதமே படையாகப் பரமசிவன் நேற்றுப் பெற்ற பிள்ளை எதிர்ந்திடின், அவனை வெல்லக் கருதிச் செல்வையாயின், அது உனக்கு வசையன்றோ? நீ பகைவரது வன்மையை அறியாய். அவருடைய படைஞரது வன்மையை அறியாய். உனது அரும்பெருந்தலைமையை நினையாய். செயற்பாலனவற்றை அமைச்சரோடுஞ் சூழாய். வாளா கோபமேல்கொண்டு செல்லலும் வலியின்பாலதா! வீரமும் வலியும் மிக்கோராயினும், விதி வந்தெய்தின், வலியில்லாராலும் கொல்லப்படுவர். உன்னைப்போல அழியாவாற்றல் பெருமையால், தாரகன் மழலை தேறாத சிறுவனாலும் கொல்லப்பட்டான். தண்டை ஒலிக்கும் சீறடிகளையுடைய சிறுவன் தாரகனைக் கொன்றது அற்புதமன்று. வலியரும் ஒருகாலத்து வன்மையை இழப்பர். மெலியரும் ஒருகாலத்து வீரராய் விளங்குவர். யாருமொப்பாகாது வைகும் இராசராசனாகிய நீ சிறுவன்மேற் போர்குறித்துச் செல்லல் புகழன்று. அவனது சிறப்பையும் வலியையும் அறிந்துகொண்டு, பின் அவனின் வல்ல வீரரைப் படைஞரோடேவி வெற்றிகொண்டிருக்கக்கடவை" என்றான்.

ஆமோகன் இவ்வாறு தேற்ற, சூரபன்மன் அது கேட்டு, "இது உறுதி" என்று தெளிந்து, கோபத்தை விடுத்து, சிங்காசனமீதேறி இருந்துகொண்டு, தன்னயலினின்ற ஏவலாளருட்சிலரை நோக்கி, "பகன், மயூரன், சேனன், சக்கரவாகன், சுகன் முதலிய தூதர்களை அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று பணித்தான். அவர்கள் சூரபன்மனை வணங்கித் துதித்துச் சென்று, அத்தூதர்களை அழைத்துக்கொண்டு வந்து விடுத்தார்கள். தூதர்கள் வணங்கி நிற்ப, சூரன் அவர்களை நோக்கி, "நீங்கள் விரைந்துபோய், பூமியில் வந்த கந்தனியல்பையும், அவனுடைய படைஞர்களாகிய பூதர்களுடைய தொகையையும், பிறவனைத்தையும் ஆராய்ந்தறிந்துகொண்டு இங்கு வருவீர்களாக" என்று பணித்தான். தூதர்கள் அப்பணியைச் சிரமேற்கொண்டு, சூரனை வணங்கி, பூமியை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் சென்றபின்பு, சூரபன்மன் அசுரர்கள் துதிக்க வீற்றிருந்து அரசுசெய்தான். அது நிற்க, ஆறுமுகக்கடவுள் தேவகிரியை நீங்கிப் பூமியில் எழுந்தருளிவந்தமையைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

வழிநடைப்படலம்.

தேவகிரியில் எழுந்தருளியிருந்த ஆறுமுகக்கடவுள், சூரியன் உதித்தபின்பு, அதனை நீங்கி, சேனைகளும் தேவர்களும் சூழத் தென்றிசைநோக்கிச் சென்றார். உமாதேவியார் தம்மை நீக்கி வலஞ்செய்யும் பிருங்கிமுனிவர் துணிந்த வேதமுடிவை உணர்ந்து சிவபெருமானுடைய இடப்பாகத்தைச் சேரவிரும்பிப் பூசித்த திருக்கேதாரத்தை முன்னே தரிசித்தார். விட்டுணுவுக்கும் சிவபெருமானே பரம்பொருள் என்னும் உண்மையை மானுடர்கள் தெளியும்வண்ணம் வியாசமுனிவர் எடுத்த கையே தெளிவித்த காசியம்பதியைத் தரிசித்தார். சிலாதமுனிவருடைய குமாரராகிய திருநந்திதேவர் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும்பொருட்டு ஒரு மலையாகுவன் என்று அருந்தவஞ்செய்து மலையாகிக் கைலாசபதியைத் தம்முடிமேற்புனைந்த திருப்பருப்பதத்தைத் தரிசித்தார். உமாதேவியாரோடு முனிந்து சுவாமிமலையை விடுத்துப் பாதாளத்திற் சென்று ஒரு குகைவழியே முன்னே தாம் வந்ததும் சுவாமி புட்கரிணிதீரத்திலே விட்டுணு முதலிய தேவர்கள் தம்மைப் பூசித்ததுமாகிய திருவேங்கடமலையைப் பார்த்தார். சிலந்தியும் பாம்பும் யானையும் சிவகோசரியாரும் கண்ணப்பநாயனாரும் நக்கீரதேவரும் கன்னியரும் முத்தியடையும் தக்கிணகைலாசமாகிய திருக்காளத்திமலையைத் தரிசித்தார். காளியானவள் இப்பூமி முழுதையும் அழித்தற்கு எழுந்த நாளிலே பிரமன் முதலியோர் யாவரும் அஞ்சவும் அவள் செருக்கழியும் வண்ணம் சிவபெருமான் தமது ஆடலால் வென்றருளிய திருவாலங்காட்டைத் தரிசித்தார். பிரளயகாலத்தும் அழிவில்லாததாய்ப் பிரமா விட்டுணு முதலிய தேவர்களுக்கு உறையுளாய்ச் சிவபெருமான் மாமரநிழலின்கண் வீற்றிருந்தருள்வதாய் உள்ள திருக்காஞ்சி நகரத்தைத் தரிசித்தார். அங்கே உமாதேவியார் பூசித்த திருவேகம்பத்தையும் விட்டுணுவும் பிரமனும் தேவர்களும் பூசித்த மற்றையாலயங்களை

யும் தரிசித்தார். "யானே பரம்பொருள் யானே பரம்பொருள்" என்று பிரமனும் விட்டுணுவும் இகலும்பொழுது அவர்கணடுவே தோன்றி அவர்களால் அடிமுடி தெரியப்படாததாகித் தன்னைத் தியானித்தோர்க்கெல்லாம் முத்தியைக் கொடுத்துக்கொண்டு நிற்கும் திருவண்ணுமலையைத் தரிசித்தார். சிவபெருமான் ஒரு விருத்தப்பிராமண வடிவங்கொண்டு வந்து அடிமையோலைகாட்டிச் சுந்தரமூர்த்தியை வழக்கில் வென்று விவாகத்தை விலக்கி ஆட்கொண்டருளிய திருவெண்ணெய்நல்லூரைத் தரிசித்தார். உமாதேவியார் புடைவையால் வீசச் சிவபெருமான் தமது திருத்தொடையின் மேற்கிடத்தி இறந்த உயிர்கட்கெல்லாம் திருவைந்தெழுத்தினுண்மையை உபதேசித்துத் தமது சாரூப்பியத்தைக் கொடுத்தருளுமியல்பினலே காசிபோலச் சிறந்த விருத்தாசலத்தைத் தரிசித்தார். பதஞ்சலிமுனிவரும் வியாக்கிரபாதமுனிவருமாகிய இருவரும் தரிசிக்கும்பொருட்டு எல்லையில்லாத பெருங்கருணையினாலே சிவபெருமான் ஆனந்தநிருத்தஞ்செய்தருளும் திருத்தில்லைநகரத்தைத் தரிசித்தார். அங்கே கனகசபையின்கணிணே சிவகாமியம்மையார் தரிசிக்கும்வண்ணம் சபாநாதர் செய்தருளும் உயர்வொப்பில்லாத ஆனந்ததாண்டவத்தைத் தரிசித்து, திருவுளங் களிந்துருக வணங்கிச் சென்றார். அகத்தியமுனிவருடைய கையினுள்ள கமண்டலத்தின்கணின்று நீங்கிப் பூமியின்கண் வேறுவேறுய்ப் பெருகிப் பற்பலபெயர்களைத் தாங்கிச் செல்லும் காவேரியாற்றின் வடகரையிலுள்ள மண்ணியாற்றங்கரையை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

குமாரபுரிப்படலம்.

அறுமுகக்கடவுள் மண்ணியாற்றங்கரையை அடைந்தபொழுது, சூரியன் அஸ்தமயனமானன். பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் முருகக்கடவுளை வணங்கி, "எம்பெருமானே, இவ்வாற்றங்கரையெல்லாம் மணற் குன்றுகள் மலிந்தன, சோலைகள் நிறைந்தன, சிவஸ்தலங்கள் எண்ணில்லாதன இருக்கின்றன. ஆதலால், இந்நதிக்கரையில் இருந்தருளுக" என்று பிரார்த்தித்தார்கள். அது கேட்ட முருகக்கடவுள் தேவத்தச்சனுகிய விசுவகன்மாவை நோக்கி, "இவ்விடத்தில் ஒரு கணத்தினுள்ளே நமக்கு ஒரு நகரம் செய்வாயாக" என்று பணித்தருளினர். உடனே தேவத்தச்சன் எம்பெருமான் தம்முடைய சேனைகளோடும் தேவர்களோடும் எழுந்தருளியிருக்கும்பொருட்டு மண்ணியாற்றின்றென்கரையிலே ஒரு திருநகரத்தை மனத்தால் உண்டாக்கிக் கொண்டு, முருகக்கடவுளை வணங்கி, "எம்பெருமானே, இந்நகரத்தினுள் எழுந்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். முருகக்கடவுள் தேரினின்றும் இறங்கி, தேவர்களும் சேனைகளுஞ்சூழ அந்நகரத்தினுள்ளே புகுந்து, அங்குள்ள வளங்களனைத்தையும் நோக்கி, "நாம் இருத்தற்கு இது நல்ல நகரம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அது கேட்டலும் தேவர்களெல்லாரும் அந்நகரத்திற்குத் "திருச்சேய்ஞலூர்" எனப் பெயரிட்

சேய்நலூர் என்பது சேய்ஞலூர் எனப் போலியாயிற்று. இது வடமொழியிலே குமாரபுரி எனப்படும்.

டார்கள். முருகக்கடவுள் தம்பியர்களும் பூதசேனாதிபதிகளும் தேவர்களும் சூழும்வண்ணம் அங்குள்ள திருக்கோயிலிற்சென்று, எழுந்தருளியிருந்தார். பிரமன் முதலிய தேவர்கள், எம்பெருமான் விடுத்தருள, அத்திருக்கோயிலுக்குப் புறத்தே சென்று, தங்கள் தங்களுக்கு அமைக்கப்பட்ட இருக்கைகளை அடைந்தார்கள்.

இந்திரனானவன், தாரகாசுரன் கிரௌஞ்சகிரியோடு இறந்தமையால், தன் றுயரமுழுதும் நீங்கிப் பெருமகிழ்ச்சியோடிருந்தான். அப்பொழுது சீர்காழியிலுள்ள வனதேவதை இந்திரனை அடைந்து வணங்கி, அவ்விந்திரன் தன்னுபரணங்களையும் தன்மனைவியாகிய இந்திராணியுடைய ஆபரணங்களையும் பொதிந்து தன்னிடத்து வைத்த கிழியை அவனெதிரே வைத்து, "இறைவனே, நீ இந்திராணியோடு வந்து சீர்காழியிலே தவஞ்செய்தநாளிலே என்னிடத்து வைத்த ஆபரணக்கிழி இது. ஏற்றுக்கொள்க" என்று சொல்லி நின்றது. இந்திரன் அவ்வாபரணக்கிழியை விரலினாலே நீக்கலும், தன்மனைவியினுடைய ஆபரணங்கள் மேலே தோன்ற, அது கண்டு, அவளை நினைந்து, காமநோய்க்கவலை அடைந்து, தன்னேவலாளரை நோக்கி, "இக்கிழியை முன்போலக் கட்டிச் சேமித்து வையுங்கள்" என்று பணிக்க, அவர்கள் அவ்வாறு செய்தார்கள். பின்னர் இந்திரன் வனதேவதைக்கு விடைகொடுத்து, காமாக்கினியால் வெதும்பிய உள்ளத்தையும் உடம்பையும் உடையனாய், குளிர்மையின்மேல் உளம்வைத்துச் சென்று, பூஞ்சோலையின் புறத்துள்ள ஒரு மணற்குன்றின்மீதிருந்து, காமநோயால் மிக வருந்திப் புலம்பினான்.

இவ்வாறிருக்கும்பொழுது சூரியன் உதித்தது. உதித்தலும், இந்திரன் மனத்தெழுந்த காமாக்கினி தணிந்தது. தணிதலும், இந்திரன் பதைபதைத்து, விரைந்து எழுந்து, நகைத்து, வெள்கினான். "ஐயையோ! எனக்கு இது வருவதே" என்றான். "காமமானது தீமையென்பன யாவையும் விளைக்கும், சிறப்பையும் செல்வத்தையுங் கெடுக்கும், நல்லறிவைத் தொலைக்கும், நன்னெறியைத் தடுத்து நரகத்தில் விடுக்கும். ஆதலால், ஆராயுமிடத்துக் காமத்தின் மிக்க பகை இல்லை" என்று நினைந்து, அவ்விடத்து நின்று நீங்கி, தேவர்களெல்லாரும் சூழச் சென்று, அறுமுகக்கடவுள் சந்நிதியை அடைந்து பலமுறை வணங்கி எழுந்து, துதித்துக்கொண்டு நின்றான்.

முருகக்கடவுள் இந்திரனை நோக்கி, "நாம் சிவபெருமானைப் பூசிக்க விரும்புகின்றோம். நீ அதற்குரிய உபகரணங்கள் பலவற்றையும் வருவிக்கக்கடவாய்" என்று பணித்தருளினார். உடனே இந்திரன் வணங்கிக்கொண்டு போய், தன்னேவலாளர் பலரை வெவ்வேறிடங்களின் ஏவி, திருமஞ்சனம், நறுமலர், பீதாம்பரம், திருவமுது, தூபம், தீபம், சுகந்தங்கள் முதலிய உபகரணங்களனைத்தையும் விரைவின் வருவித்தான். அறுமுகக்கடவுள் தேவதச்சனைக்கொண்டு ஒரு திருக்கோயில் செய்வித்து, சைவாகமவிதிப்படி ஒரு சிவலிங்கந் தாபித்து, பூசை செய்து, மும்முறை வணங்கித் துதித்தார். அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாரோடும் இடபமீது தோன்றியருளினார். அறுமுகக்கடவுள் எம்பெருமானை வணங்கி எழுந்து, சிரமேல் அஞ்சலிசெய்து நின்று, துதித்தார். இலக்கத்தொன்

பதுவீரர்களும், தேவர்களும், பூதர்களும் சிவபெருமானைத் தரிசித்து, மெய்ம்மயிர் பொடிப்ப மனங்கசிந்துருக மும்முறை வணங்கி, எண்டிசையும் செவிடுபடும் வண்ணம் துதித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் குமாரசுவாமியை நோக்கி, "உன்வழிபாட்டுக்கு உவகைசெய்தாம். நீ இதனைக் கொள்ளக்கடவாய்" என்று, உலகமுற்றையும் ஓரிறைப்பொழுதினுள் முடிக்கும் உருத்திரபாசுபதப்படைக்கலத்தைக் கொடுத்து, "இது நம்மிடத்தே தோன்றிய படைக்கலம். பிரம விட்டுணுக்களும் இது பெற்றிலர். இதனைத்தாங்க வல்லார் யாவர்! சூரனுடைய சேனைகளைச் சங்கரிக்கும்பொருட்டு, மைந்தனே, நீ இதனைக் கொள்ளக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

சுரம்புகுபடலம்.

சிவபெருமான் மறைந்தருளலும், முருகக்கடவுள் அவரைத் துதித்துக்கொண்டு, தேர்மீதேறி, வீரர்களும், தேவர்களும், பூதர்களுஞ் சூழத் திருச்சேய்ஞலூரை நீங்கி, காவேரியாற்றைக் கடந்து, திருவிடைமருதூர், மாயூரம், திருப்பறியலூர் முதலிய சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருவாரூரை அடைந்தார். அங்குள்ள திருக்கோயில்களைத் தரிசித்துக்கொண்டு கொல்லனுடைய உலையினுள்ள அக்கினியிற்காய்ச்சிய இரும்புபோலும் மிக்க வெப்பத்தையுடைய பாலைவனத்திலே சென்றார். செல்லலும், அப்பாலைவனம் நறுமலர்ச்சோலைபோல மிகக்குளிர்மையுடைத்தாயிற்று.

முருகக்கடவுள் தன்வெம்மை நீங்கிய சுரத்திற் செல்லும்பொழுது, திருப்பரங்குன்றிலே தவஞ்செய்துகொண்டிருந்த பராசரமுனிவருடைய புதல்வர்களாகிய தத்தர், அநந்தர், நந்தி, சதுர்முகர், சக்கிரபாணி, மாலி என்னும் அறுவரும் ஞானநோக்கத்தினாலே அதனை அறிந்து, எம்பெருமானுடைய திருவருளை நினைந்து, திருப்பரங்குன்றினின்று நீங்கி, வடதிசையை நோக்கி நடந்தார்கள். பாலைநிலத்தெல்லைக்கு நேரே வரும்பொழுது, அறுமுகக்கடவுள் அணிமையின் எழுந்தருளிவந்தார். புதல்வர்கள் அறுவரும் முருகக்கடவுளைத் தரிசித்து, வணங்கித் துதித்து நின்று, "தேவதேவரே, அடியேங்களுக்குத் திருவருள் செய்க" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப்பொழுது இந்திரன் முருகக்கடவுளை வணங்கி நின்று, "எம்பெருமானே, பராசரமுனிவருடைய புதல்வர்களாகிய இவர்களறுவரும் சிறுபருவத்திலே சரவணப்பொய்கையிற் பாய்ந்து முழுகி அலைக்கலுற்றார்கள். அப்பொழுது அங்குள்ள மீன்கள் இடந்தோறும் ஓட, இவர்கள் அது கண்டு, அவைகளைப் பற்றிக் கரையில் விடுத்து, உலாவினார்கள். உலாவும்பொழுது, மத்தியானசந்தி முடிக்கும்பொருட்டுப் பராசரமுனிவர் அங்கு வந்தார்.

அவர் தம்புதல்வர்களாகிய இவர்களுடைய புன்றொழிலை நோக்கி, கோபங்கொண்டு, 'பிள்ளைகாள், நீங்கள் இப்பொய்கையிலே மீன்களாய்த் திரியக்கடவீர்கள்' என்று சபித்தார். உடனே இவ்வறுவரும் மீன்களாகி, அஞ்சி, 'இம்மீனுருவம் நீங்குவது எந்நாள்? சொல்லியருளும்' என்றார்கள். பராசரமுனிவர் அது கேட்டு, 'இப்பொய்கையிலே அறுமுகக்கடவுள் சிவபெருமானது திருவருளினால் எழுந்தருளியிருக்கும்பொழுது அவரை எடுக்கும் உமாதேவியாரது திருமுலைப்பால் வெள்ளமாய்ப் பெருகும். அதனை நீங்கள் உண்ணும்பொழுது முன்னையுருவத்தை அடைவீர்கள்' என்று சொல்லி, மத்தியானசந்தியை முடித்துக்கொண்டு, சென்றார். மீன்வடிவடைந்த இவ்வறுவரும் அன்று தொட்டு அளப்பில்காலம் மயக்கம் பொருந்திச் சரவணப்பொய்கையிற்றிரிந்தார்கள். எம்பெருமானே, நீர் அப்பொய்கையில் எழுந்தருளியிருத்தலும், எம்பெருமாட்டியார் கண்டு உம்மை எடுப்ப, அவருடைய திருமுலைகளினின்றும் சொரிந்த பால் வெள்ளமாய்ப் பெருகியது. அதனை இவர்கள் உண்டு, மயக்கநீங்கி, முன்னைவடிவத்தை அடைந்து, சிவபெருமானுடைய திருவருளினாலே திருப்பரங்குன்றத்திற்சென்று தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது எம்பெருமான் இங்கு எழுந்தருளுவதை அறிந்து, வந்தார்கள்" என்று விண்ணப்பஞ்செய்தான்.

முருகக்கடவுள் அது கேட்டு, பராசரமுனிவருடைய புதல்வர்களை நோக்கி, "நீங்கள் நம்மோடு வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அவர்களறுவரும் "எம்பெருமானே, உம்மைச் சரணடைந்தேம்" என்று வணங்கிச் செல்ல, சண்முகக்கடவுள் சுரத்தைக் கடந்து போயினார்.

திருச்சிற்றம்பலம்.

திருச்செந்திப்படலம்.

முருகக்கடவுள் சுரத்தைக் கடந்து சென்று, சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருச்செங்குன்றூரைத் தரிசித்துக்கொண்டு, கடற்கரையின் உள்ள அலைவாயாகிய திருச்செந்தூரை அடைந்து, தேவத்தச்சனைக்கொண்டு ஒரு திருக்கோயில் செய்வித்து, தேரினின்றும் இறங்கி, அதனுள்ளே புகுந்து, வீரர்களும் பூதசேனாதிபதிகளும் தேவர்களும் துதிப்ப, திவ்விய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். வீற்றிருந்தருளியபின் இந்திரனைநோக்கி, "சூரன் முதலாயினோர் பிறந்ததும், தவஞ்செய்ததும், வரம்பெற்றதும், அரசுசெய்வதும், அவர்களுடைய மாயமும், வெற்றியும், வலியும், மேன்மையும், உங்களிடத்து இந்நாள்காறும் செய்த துன்பமுமாகிய எல்லாம் நமக்குச் சொல்லக்கடவாய்" என்று பணித்தருளினார். இந்திரன் குருவாகிய பிருகற்பதியை அன்போடு நோக்கி, "நீர் இவைகளைச் சொல்லியருளும்" என்றான். பிருகற்பதி அதற்கிசைந்து, அறு

முகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, "எம்பெருமானே, நீர் உயிர்கடோறுஞ் செறிந்திருக்கின்றீர், எப்பொருளையும் அறிவீர். அடியேங்களுடைய துன்பத்தை நீக்கத் திருவுளங்கொண்டு பாலவடிவங்கொண்டருளினீர். உமது செயலை யாவர் அறிய வல்லவர்! முன்னே எல்லையில்லாத புவனங்களும், மும்மூர்த்திகளும், உயிர்த்தொகைகளும் அடங்கிய விசுவரூபத்தைக்கொண்டு தோன்றியருளினீர். உமது மாயத்தை யாவர் அறியவல்லவர்! அசுரர்களுடைய தன்மையை நீர் வினவியது, அதனை யறிதற்பொருட்டன்று, சிறியேங்களுடைய துன்பத்தைக் களைந்து இன்பத்தை அருளும்பொருட்டே. ஆகையால், அசுரர்களுடைய தன்மைகளெல்லாவற்றையும் அடியேன் அறிந்தவாறே சொல்கின்றேன்" என்று சொல்லலுற்றார்.

திருச்சிற்றம்பலம்.

உற்பத்திகாண்டமுற்றிற்று.

இரண்டாவது

அசுரகாண்டம்.

மாயைப்படலம்.

ஊரிலான் குணங்குறியிலான் செயலிலானுரைக்கும்
பேரிலானொருமுன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான வரல்போக்கிலான் மேலிலான்றனக்கு
நேரிலானுயிர்க்கடவுளாயென்னுளே நின்றான்.

காசிபமுனிவருடைய புதல்வர்களாகிய அறுபத்தாறுகோடியசுரர்களுக்கு அரசனாகிய அசுரேந்திரன் மங்கலகேசியென்னும் அரக்கியை விவாகஞ்செய்து, சுரசையென்னும் மகளைப் பெற்றான். அவள் வளர்ந்தபின், அசுரகுருவாகிய சுக்கிரன் மாயையின் கல்விகளனைத்தையும் அவளுக்குணர்த்தி, அவளுடைய கல்வித்திறத்தை நோக்கி, அவளுக்கு மாயையென்று பெயரிட்டார். பின்பு அசுரர்களுடைய சிறுமையையும், தேவர்களுடைய பெருமையையும், தேவர்கள் அசுரர்களால் வருந்தும்வண்ணம் திருநந்திதேவர் சபித்தமையையும் தம்முள்ளத்து நினைந்து, மேல்வருந் தன்மையையும் அறிந்து, மாயையை விளித்து, "மாயையே, கேள். விட்டுணுவாலும், இந்திரனாலும், இருடிகளாலும், தேவர்களாலும், அளப்பில்லாத அசுரர்கள் இறந்தார்கள். உன்றந்தையும் வலியிழந்தொடுங்கினான். இனி உன்னாற்றானே அசுரர்களுக்கு மேன்மை உண்டாகும். நீ இலக்குமியும் வந்து வணங்கற்பாலதாகிய பேரழகையுடைய ஒருருவத்தைக் கொண்டுபோய், காசிபமுனிவரை அடைந்து, உன் வல்லபத்தைக் காட்டி, ஆசை பூட்டி, இரவிலே அவரோடு புணர்ந்து, அசுரர்களை உண்டாக்கி, அவர்களுக்குப் பெயரிட்டு, அவர்கள் எல்லையில்லாத வளங்களைப் பெறும்பொருட்டு அவர்களுக்கியலும் யாகங்களையும் தவங்களையும் உணர்த்தி, மீளக்கடவாய்" என்று பணித்தார். மாயை அதற்கிசைந்து, சுக்கிரனை வணங்கிப் போய், தன்றந்தையாகிய அசுரேந்திரனுக்கு இதனைச் சொல்லி, விடைபெற்றுக்கொண்டு, மகாமேருவுக்கு வடதிசையிலே காசிபமுனிவர் தவஞ்செய்யும் எல்லையை அடைந்தாள்.

மாயை காசிபமுனிவருடைய இருக்கையிலே வாவிகளையும், பூஞ்சோலைகளையும், செய்குன்றுகளையும், மண்டபங்களையும், பூஞ்சயனங்களையும் உண்டாக்கினாள். காசிபமுனிவர் அவற்றையெல்லாங் கண்டு, அதிசயமடைந்து, ஆசையினாலே அவற்றை நெடுநேரம் உற்றுநோக்கி, "இவையெல்லாம் இங்கே செய்தவர் யாவர்"

என்றெண்ணி, சுற்றெங்கும் பார்த்து, ஒருவரையுங் காணாது, சித்திரப்பாவை போலாகி, "வானநாடிழிந்ததோ! இந்திரனுடைய நாடிழிந்ததோ! குபேரன் முதலியோரது நாடிழிந்ததோ! இங்ஙனமன்றாயின், இவை இங்குத் தோன்றியவாறறிகிலேன். இது பிரமதேவருடைய செய்கையோ! விட்டுணுவினுடைய செய்கையோ! அவ்விருவரானும் அறியப்படாத சிவபெருமானுடைய செய்கையோ! பிறருடைய செய்கையோ! அறிகிலேன். இக்காட்டிலே புகுந்த இத்திரு நன்மைக்கேதுவோ! தீமைக்கேதுவோ! இதுவும் அறிகிலேன். இங்கே யாது நிகழினும் நிகழுக. அதனியற்கை நமக்கு மேலே விளங்கும். நம்மறிவு இங்ஙனஞ்சென்றது பழுது" என்று சிந்தித்து, தம்மனத்தைத் தேற்றி, முன்போலத் தவஞ்செய்யப் புகுந்தார். புகும்பொழுது, அதுகண்ட மாயை ஓரிரத்தினக்குன்றின்மேலே பேரழகோடு தோன்றி நின்றாள். காசிபமுனிவர் அவளை நோக்கி, மையல்கொண்டு, தவத்தை விடுத்து, அவளெதிரேசென்று நின்று, "இலக்குமியினும் அழகிய மாதே, நின்வரவு நன்று நன்று. உன்குலம் யாது? உன்வாழ்பதி யாது? உன்பெயர் யாது? உன்னைப் பெற்றவர் யாவர்? சொல்லுக" என்றார். மாயை அது கேட்டு, "முனிவரே, நீர் இவ்வாறு வினவி நிற்றல் தகுதியன்று. அன்றியும் நீர் என்னிடத்திற்றனித்து வந்தீர். தவஞ்செய்வார்க்கு இது நன்றோ! தவத்தை விடுத்து அறிவில்லாதார்போலப் பேசிக்கொண்டு என்னை யணுகுதல் நீதியன்று. உமது கடனைச் செய்யப்போம்" என்றாள். காசிபமுனிவர் "மங்கையே, கேள். எண்ணில்காலம் உடலம் வெம்ப உள்ளம் மெலியத் தவம்பல செய்தல் இங்கு வேண்டியவற்றை அடைதற்கன்றோ. நான்றவஞ்செய்தது உன்னைச் சேர்தற்பொருட்டேயாம். நீ இங்கு வந்தனை. ஆகவே, என்றவத்திற்குப் பயன் எய்தியது. இனித் தவம் வேண்டுமோ! பேரும் ஊரும் பிறவும் வினவிய எனக்கு ஒரு விடையுஞ் சொலகின்றிலை. ஆயினும், அவையெல்லாம் பின்னர் அறிந்துகொள்வேன். என்னைக் காமநோய் ஈர்கின்றது. இரங்கக்கடவாய்" என்றார். மாயை அது கேட்டு நகைசெய்து, "நீர் இவ்வாறு நெடுந்தவஞ்செய்தது என்பொருட்டா! அங்ஙனமன்றே. பொய்சொல்லல் முறையா" என்றாள். காசிபமுனிவர் "நான் பொய் சொல்லிற்றிலேன். மெய்ம்மையே சொன்னேன். யான் நெடுங்காலந் தவஞ்செய்தது முத்திபெற்றுய்யும்பொருட்டு. அதனையே எனக்கருள்செய்ய வந்தாய். உன்னைப் புணர்தலன்றோ முத்தியாவது. இதுவன்றி எனக்குப் பிறிதொருபேறுமில்லை. ஆதலால், உன்னையே அடைந்தேன்" என்றார். மாயை அவரை நோக்கி, "நான் உத்தரபூமியினுள்ளேன். மேருமலைக்குத் தென்றிசையினுள்ள கங்காநதியிலே ஸ்நானஞ்செய்யச் செல்கின்றேன். நீர் இங்கு நில்லும்" என்றாள். அதற்குக் காசிபமுனிவர் "கங்கை முதலிய நதிகளெல்லையும், சிவதலங்கள் யாவையும், விட்டுணு தலங்கள் யாவையும், ஓரிமைப்பொழுதினுள் இங்கே அழைப்பேன். பொன்னுலகையும், விஞ்சையருலகையும், திக்குப்பாலகர்களுலகையும், பிறருலகையும், அங்கங்குள்ள தேவர்களோடும் வளங்களோடும், இப்பொழுதே இங்கு விரைந்தழைக்கவல்லேன். மும்மூர்த்திகளையும், மூவுலகத்துள்ளோர் யாவரையும், நீ காணவெண்ணினும், இங்கே வரும்வண்ணஞ் செய்வேன். நீ விரும்பினையாயின், தேவாமிர்தத்தையும் விரைந்து தருவேன். நீ எப்பொருளை விரும்பினும் அப்பொருள் யாவையும் இமைப்பொழுதினுள்ளே தருவேன். அஃதன்றிப் புதல்வர்களை விரும்பினும் உண்டாக்குவேன். இவர்கட்கு ஒப்பில்லை என்று கூறும்வண்ணம் அவர்களை வானுலகத்து விடுப்பேன். மேனகை அரம்பை முதலிய தேவ

மகளிர்கள் வந்து உன்னேவல் புரியும்வண்ணஞ் செய்வேன். மையல்கொண்டு தியங்கும் எனதாவி உய்யும்வண்ணம் விரைந்தருள்செய்க" என்றார். மாயை முறுவலெய்தி, "தனித்தவளென்று இவ்வாறு சொன்னீர். இனி இதனை ஒழித்துவிடும். மேலோருக்கு இது இசையுமா? நானும் முன்னினைந்தவிடத்துச் செல்வேன். நீர் இங்கே தவஞ்செய்துகொண்டிரும்" என்று சொல்லி, கங்கையின் றிசையை நோக்கி விரைந்து செல்வாள்போலச் சென்றாள். செல்லலும், காசிபர் தொடர்ந்து செல்ல, மாயை அரூபமெய்தி மறைந்து நின்றாள். காசிபமுனிவர் எங்கும் நோக்கிக் காணாது, வருந்திப் புலம்பினார்.

திருச்சிற்றம்பலம்.

அசுரர்தோற்றுபடலம்.

காசிபமுனிவர் மாயையைத் தேடி மயல்கொண்டு வாடும்பொழுது, சூரியன் அஸ்தமயனமானான். காசிபமுனிவர் அவ்விரவிலே காமநோயால் மிகவருந்தி, மாயையை நினைந்து, பலவாறு புலம்பிச் சோர்ந்தார். அப்பொழுது மாயை காசிபர் முன்பு வெளிப்பட்டு நின்றாள். அது கண்ட காசிபமுனிவர் மகிழ்ச்சிகொண்டு, அவண்முன் சென்று, "நீ என்னை விரைந்தாள்வாயாக" என்று வேண்டினார். மாயை அவரை நோக்கி, "அஞ்சாதொழிக. இங்கு நின்ற என்வடிவத்துக்கிசையயும் வடிவமும் இனி யான் கொள்ளும் வடிவத்தை ஒக்கும் வடிவமும் உடனே உடனே கொள்வீராயின், நான் உம்மைப் புணர்வேன்" என்றாள். காசிபமுனிவர் அது கேட்டலும் மனமகிழ்ந்து, பேரழகையுடைய ஒரு தேவவடிவங்கொண்டார். மாயை அது கண்டு வியந்து, நகைசெய்து, அவரைக் கைப்பற்றிக்கொண்டு சென்று, அங்குள்ள ஒரு மண்டபத்தினுள்ளே புகுந்து, தன்னாணையால் உளதாகிய சயனத்தின்மீது முதல்யாமத்தில் அவரோடு கூடினாள். அப்பொழுது சூரபன்மா அவளிடத்துப் பிறந்தான். அப்புணர்ச்சிக்கண் இருவர் சரீரத்துந் தோன்றிய வேர்வையினின்றும் முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உதித்தார்கள். மாயை அவ்வசுரர்களையும் சூரபன்மாவையும் அங்கே நிறுவி, காசிபமுனிவரோடும் வேறொரு மண்டபத்தினுள்ளே புகுந்து, பெண்சிங்க வடிவங்கொண்டாள். காசிபமுனிவர் ஆண்சிங்க வடிவங்கொண்டு, இரண்டாம் யாமத்தில் அவளோடு புணர்ந்தார். அப்பொழுது ஆயிரஞ் சிங்கமுகங்களும் இரண்டாயிரங் கைகளுமுடைய சிங்கமுகாசுரன் பிறந்தான். அப்புணர்ச்சிக்கண் இருவர் சரீரத்தினுந்தோன்றிய வேர்வையினின்றும் சிங்கமுகத்தர்களாகிய நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உதித்தார்கள். மாயை அவ்வசுரர்களையும் சிங்கமுகாசுரனையும் அங்கே நிறுவி, வேறொரு மண்டபத்தினுள்ளே புகுந்து, பெண்யானை வடிவங்கொண்டாள். காசிபமுனிவர் ஆண்யானை வடிவங்கொண்டு, மூன்றாம் யாமத்தில் அவளோடு புணர்ந்தார். அப்பொழுது நான்குகோடுகள் பொருந்திய யானைமுகத்தையுடைய தாரகாசுரன் பிறந்தான். அப்புணர்ச்சிக்கண் இருவர்சரீரத்தினுந் தோன்றிய வேர்வையினின்றும் யானைமுகத்தையுடைய நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உதித்தார்கள். மாயை அவ்வசுரர்களையும் தாரகாசுரனையும்

அங்கே நிறுவி, வேறொருமண்டபத்தினுள்ளே புகுந்து, ஆட்டுப்பிணு வடிவங் கொண்டாள். காசிபமுனிவர் ஆட்டுக்கடா வடிவங்கொண்டு, நான்காம்யாமத்தில் அவளோடு புணர்ந்தார். அப்பொழுது அசமுகி பிறந்தாள். அப்புணர்ச்சிக்கண் இருவர் சரீரத்தினும் தோன்றிய வேர்வையினின்றும் ஆட்டுமுகத்தையுடைய முப்பதினுயிரம்வெள்ளம் அசுரர்கள் உதித்தார்கள். மாயையும் காசிபமுனிவரும் அவர்களை அங்கே நிறுவி, வேறுள்ள மண்டபங்கடோறும் புகுந்து, யாளி, புலி, குதிரை, மான், கோ, கரடி, பன்றி, கூளி முதலிய வடிவங்களெல்லாங்கொண்டு, வைகறையிலே புணர்ந்து, அறுபதினுயிரம்வெள்ளம் அசுரர்களைப் பெற்றார்கள். அப்பொழுது சூரியன் உதித்தான். மாயையும் காசிபமுனிவரும் தங்கள் தங்கள் முன்னை வடிவத்தைக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளாகிய சூரன் முதலிய நால்வரையும் இரண்டிலக்கம் வெள்ளம் அசுரர்களையும் அற்புதத்தோடு கண்டு, அன்பினையுடையர்களாய் நின்றார்கள்.

திருச்சிற்றம்பலம்.

காசிபனுபதேசப்படலம்.

சூரபன்மன் சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் தன்னுடன் வரச் சென்று, காசிபமுனிவர் மாயை என்னும் இருமுதுகுரவர்களுடைய பாதங்களை வணங்கி, "நாங்கள் செய்வதென்னை? சொல்லுங்கள்" என்றான். அது கேட்ட காசிபமுனிவர் சொல்வாராயினர்:—

"பிள்ளைகாள், நான் உங்களுக்கு ஒருறுதியை உணர்த்துகின்றேன். நீங்கள் மூவிரும் அந்நெறியே நிற்கக்கடவீர்கள். அறிவால் அமைந்த பெரியோர்கள் ஆராயத்தக்க பொருள்கள் பதி, பசு, பாசம் என மூன்றும். வேதாகமங்களெல்லா வற்றாலும் உணர்த்தப்படுவன இவையே. நித்தியராய், வியாபகராய், ஞானனந்த மயராய், உயிர்கள்பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்யுஞ் சிவபெருமானே பதியெனப்படு வர். வேண்டுதல் வேண்டாமையில்லாத சிவபெருமானுடைய இலக்கணத்தைச் சொல்லுதல் யாவர்க்கும் அரிது. வேதங்களாலும் துணியப்படாத அவருடைய இலக்கணத்தை 'இத்தன்மையதென்று நாம் பேசவல்லமா! ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களாகிய பாசங்களாலே பந்திக்கப்பட்டுள்ள பசுக்க ளாகிய உயிர்கள் எண்ணில்லாதன. அவை அநாதியே உள்ளன. அவை தாம் தாம் செய்த நல்வினை தீவினைகளினலே இடையறாது பிறந்திறந்துழலும். பிருதி வியண்டத்தும், அப்புவண்டத்தும், தேயுவண்டத்தும், வாயுவண்டத்தும், ஆகாயவண்டத்தும் உதிக்கும். அவற்றிற்கு ஓரிடமே நிலையென்று சொல்லற் பாலதா! அவை தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைத் தோற்றத்தையுடையனவாம். அவை பிறக்குமுன் கருப் புத்தினும் அழியும், பிறந்தபின்னும் அழியும், சிலநாளிருந்தும் அழியும், காளை ப்பருவத்தினும் அழியும், மூப்பினும் அழியும், அவற்றினிலையாமை இத்தன்

மையதென்று சொல்லலாகுமா! உயிர்த்தொகை கதிரெழுதுகளினும் மிகுதி யுடைத்தென்று சொல்லுதலும் அறியாமையே. இறந்தவுயிர்களும் பிறந்தவுயிர் களும் இவ்வளவையுடையனவென எண்ணற்பாலனவா! கல்வியும், வீரமும், செல் வமும், வலியும், பிறவும் நீர்க்குமிழிபோல நிலையில்லாதனவாம். தருமமென ஒரு பொருளுண்டு. அது இருமையின்பத்தையும் எளிதிற் பயப்பது. அது அருமை யினெய்தும் பொருள். அது ஒருமையுடையோர்க்கன்றிப் பிறர்க்கு அறிவரிது. இத்துணைச்சிறப்பினதாகிய தருமத்தை ஒருயிர் செய்யுமாயின், அன்பும் அரு ளும் உண்டாகும். அவை உண்டாக, தவம் உண்டாகும். அஃது உண்டாக, அவ் வுயிர் சிவபிரானை அடையும். அடையின், பிறவிக்குக் காரணமாகிய மும்மலங் களினின்று நீங்கி, பேரின்பத்தை அனுபவிக்கும். ஆதலால், தவம்போலச் சிறந் தது பிறிதொன்றுமில்லை. ஐம்பொறிகளை அடக்கித் தவஞ்செய்து, முத்தியின் பத்தைப் பெற்றவர் சிலர், இம்மையின்பத்தைப் பெற்றவர் சிலர், இருமையின்பத் தையும் பெற்றவர் சிலர். தம்முடம்பை வாட்டி நெடுங்காலந் தவஞ்செய்தவ ரல்லரோ தேவர்களாகி மேற்பதங்களைப் பெற்று வாழ்வோரெல்லாரும். பத்திமை யோடு தவஞ்செய்து முத்தியின்பத்தைப் பெற்றவர்களை இவ்வளவினர்களென்று சொல்வதரிது. தவஞ்செய்து இருமையின்பத்தையும் பெற்றவர்கள் பிரமா விட் டுணு முதலியோர். தவஞ்செய்யாது பிறவுயிர்களுக்குத் துன்பஞ்செய்யும் பாவி களுக்கு இருமையின்பமும் இல்லை. அவர்கள் மீண்டும் மீண்டும் பிறவித்துன்பத் தழுந்துவர்கள். இவ்வுண்மையை அறிந்து அறிவிப்பினும், பூமியிலுள்ளோர் கொலை களவு முதலிய பாவங்களினின்றும் நீங்குகின்றிலர். அதனால் முத்தியின் பம் பெறாது சனனமரணத் துன்பங்களை அடைகின்றனர். இருமையின்பத்துக் கும் ஏதுவாயுள்ள தவத்துக்கு உயர்வுமில்லை, ஒப்புமில்லை. தவத்தை ஒப்பது தவமேயாம். ஆதலால், பிள்ளைகளே, நீங்கள் தருமத்தைச் செய்யுங்கள். பாவ த்தை விலக்குங்கள். சிவபெருமானைத் தியானித்துப் பெருந்தவம் புரியுங்கள். இதுவன்றிச் செய்யத்தக்கது யாது! உடம்பை வாட்டித் தவஞ்செய்வோர் உலக மெல்லாம் வியக்கும்படி வாழ்வர், அடைந்தாரைக் காப்பர், பகைவரை அழிப்பர், விரும்பிய பொருள்களெல்லாம் அடைவர், நித்தராய் இருப்பர். இது உங்கண் மனத்தே திடம்பெறும்வண்ணம் உங்களுக்கு ஒரு கதைசொல்வேன்" என்று காசிபமுனிவர் சொல்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

மார்க்கண்டேயப்படலம்.

"கடகமென்னும் நகரத்திலே பெருந்தவத்தினாற் சிறந்த குச்சகர் என்னும் பிராமணர் ஒருவருளர். அவருடைய புதல்வராகிய கௌச்சிகர் என்பவர் வேதங் களின் மிக வல்லராய், பிறவிக்கடலினின்றும் நீங்கும்பொருட்டுச் சிவபெரு மானைச் சிந்தித்துத் தவஞ்செய்யக் கருதி, அங்குள்ள ஒரு தடாகக்கரையை அடைந்து, உண்டியும் உறக்கமுமின்றி, மௌனம் பொருந்தி, ஆத்தீண்டு குற்றி போல அசைவின்றி இருந்துகொண்டு, சிவபெருமானுடைய திருவைந்தெழுத்

தைச் சிந்தித்து, பேரின்பக்கடலின் மூழ்கித் தவஞ்செய்தார். செய்யும்பொழுது, மரை காட்டா முதலிய மிருகங்கள் தங்கள் தங்கள் உடம்பினுள்ள தினவு நீங் கும்வண்ணம் அவருடைய சரீரத்திலே உரைத்துக்கொண்டு போகும். இவ்வாறு செய்யவும், கௌச்சிகமுனிவர் இதுவொன்றும் அறியாது தவஞ்செய்துகொண் டிருந்தார். அதனை அறிந்த விட்டுணு, தேவர்கள் சூழ, அங்கு வந்து, அவரு டைய அருந்தவத்தைக் கண்டு, அற்புதங்கொண்டு, அவர்முன்சென்று, அவரது சரீரத்தைத் தமது திருக்கரத்தினாலே தடவி, 'முனிவனே, உன்பெயர் மிருக கண்டேயன்' என்றார். உடனே மிருககண்டேயர் எழுந்து, கைதொழுது நின்றார். விட்டுணு அவரை நோக்கி, 'அநாதிமுத்த சித்துருவாகிய சிவபெருமானது பெருங்கருணை உன்னிடத்தே பெருகுக. நீ முன் செய்த தீவினைகளெல்லாம் நீங் குக' என்று சொல்லி, தேவர்களோடு மறைந்தருளினார்.

விட்டுணு மறைந்தருளலும், மிருககண்டேயர் தமது தந்தையாராகிய குச்சக முனிவரிடத்தே சென்று, அவரை வணங்க, அவர் மனமகிழ்ந்து, எடுத்துத் தழு விக்கொண்டு, 'நீ தவஞ்செய்தபோது நிகழ்ந்ததனைச் சொல்வாயாக' என்று வினா வினார். மிருககண்டேயர் தமது தந்தையார் கேட்ப நிகழ்ந்தனவெல்லாம் விண்ணப் பஞ்செய்தார். அது கேட்ட குச்சகமுனிவர் மனமகிழ்ந்து, 'இத்தன்மைத்தாகிய தவம் உன்குலத்தார்களுள் உனக்குப்போல வேறியாவர்க்கு உளது! இத்தவஞ் செய்த உனக்கு அரியது யாது! பூமி அந்தரம் சுவர்க்கமென்னும் மூவுலகத்தி னும் உள்ளவர்களுள் உன்னை ஒப்பவர் யாவர்! நீ செய்த தவத்தைச் சிவபெரு மானேயன்றி வேறி யாவர் காண்பவர்' எனப் புகழ்ந்து கூறினார். பின்பு சிவபெரு மானது திருவருளினாலே வேறொரு நினைப்பு வரலும், குச்சகமுனிவர் மிருககண் டேயரை நோக்கி, 'மைந்தனே, வேதத்திலே விதிக்கப்பட்ட பிரமசரியம், கிருகத் தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நான்காச்சிரமங்களுள் முன்னையதை இன்றுகாறும் அனுட்டித்தாய். பின்னையவிரண்டும் பின் அனுட்டிக்கப்படுவன வாதலால், அவற்றை இங்கே பேசவேண்டுவதின்று, இரண்டாவதாகிய கிருகத் தாச்சிரமத்தை இனி நீ அனுட்டித்தல்வேண்டும்' என்றார்.

மிருககண்டேயர் அது கேட்டு, 'எந்தையார் இனியதோருறுதி சொன்னார்' என்று உள்ளே முறுவலித்து, தந்தையாரை நோக்கி, 'அநாதியே பிணித்த பாச த்தை அறுக்கவேண்டிய சிறியேன் பின்னும் ஒரு பாசத்தினாலே பிணிக்கப் படுவேனாயின், பசுபதியாகிய சிவபெருமானை எவ்வாறு அடைவேன்! ஐயையோ! பிறவித்துன்பமாகிய பெருங்கடலின் வீழ்ந்து உலைவேனே! தன் கைகளே பற்றுக் கோடாகத் தவழும் முடவனொருவன் அக்கைகளுக்கும் நோயொன்று வந்தக்கால் யாது செய்வான்! நானும் அவன்போலத் தளர்வேனே! தவவொழுக்கம் இருக்க இல்லொழுக்கம் பூண்டு வினைகளைப் போக்கக் கருதுதல் நல்லநீர் இருக்கச் சேற் றிலே மூழ்கிச் சரீரத்தழுக்கை நீக்கக் கருதுதல்போலுமன்றோ! பூமியினுள்ள அளப்பில்லாத பெரும் பாவங்களைப் பிரமதேவர் பெண்ணுருவமாகப் படைத் தனர். என்பிதாவே, உமக்கு அது விளங்கும். அவ்வியல்புடைய பெண்களை மனத்தே நினைக்கும் பாவம் எழுபிறப்பினும் நீங்காதே. இச்சைகொண்டு சுழலா நின்ற ஐம்புலன்களாகிய பூதங்கள் இழுக்கப் புலம்பாநின்ற சிறியேனைப் பெண் ணாகிய பேயும் வந்து பற்றியக்கால், யாது செய்வேன்! ஐயையோ எனக்கோ இது

வீரும்! பெண்ணாசையானது பலநாளும் பூமியின்கண்ணே துன்பத்தின் மூழ்கு விக்கும், பின்னாளிலே நரகக்குழியில் வீழ்த்திவிடும், எந்நாளில் ஆடவருக்கு இன்பம் பயக்குமோ அறியேன். துன்பநுகர்தற்கு ஏதுவாகிய தீவினையையுடையோர் இன்ப நுகர்வார்போலப் பெண்கள் வயப்படுகின்றனர். நாயானது தன் பற்கள் நடுங்கும்வண்ணம் தசையில்லாத எலும்பைக் கறித்தால் சுவையைப் பெறுமா! பெண்ணாசையானது ஒருவருள்ளத்தே புகுமாயின், அது பின்னர் நீங்குமியல்புடையதா! அது குன்றாது எந்நாளும் உயிரைப் பற்றி ஈரும். நஞ்சு மிக இனிது; அது பின் ஒருநாளும் நலியாது. பெண்களுடைய உள்ளக்கருத்துப் பிறரால் அறியப்படுவதா! அவரோடு நீக்கமின்றிப் பலநாட்பழகி, அவருள்ளத்திருக்குந் தேவனும் உணர்தற்கரியதன்றே! மனமொன்று வாக்கொன்று செய்கையொன்றாகப் பேதைமையையே கடைப்பிடித்துப் பெரும்பவஞ்செய்யும் பெண்கள் வலையிற்பட்டு மயங்கினோரல்லரோ பிறந்தும் இறந்தும் உழல்கின்றோர்! ஆனால் உலகத்தின்கண்ணே கற்பினையுடைய மகளிர் இல்லையோ என்பீராயின், தத்தங் கணவர்வழி வழுவாதொழுகும் மகளிருஞ் சிலர் உண்டு. ஒரு மரக்கொம்பிலே தீயை மூட்டினால் அது மிகச் சுவாலித்துத் தான் பற்றல்கூடாத பலவற்றினும் போய்ப் பற்றும். அதுபோலவே, ஒரு பெண்ணினிடத்தே காமமுடையராயின், அது வளர்ந்து தான் பற்றல்கூடாத பலரிடத்தும் போய்ப் பற்றும். பேரழகையுடைய மகளிர்கள் பலர் புடைசூழவும், இந்திரனுக்குக் கௌதம முனிவருடைய பன்னியாகிய அகலியையினாலே ஒருகாலும் நீங்காத பெரும்பழி வந்தெய்தியது. பிரமதேவர் தம்மாலே படைக்கப்பட்ட திலோத்தமைமேல் மையல்கொண்டு நான்குமுக முடையராயினமை நாம் உணராததன்று. மற்றைத் தேவர்களும் முனிவர்களும் காமத்தினால் அடைந்த துன்பங்களெல்லாம் சொல்லப்புகின், அளவுபடா. அவையெல்லாம் நிற்க, பிறவித்துன்பத்தை நீக்க விரும்பிய யான் அத்துன்பத்தை மேன்மேலும் வளர்க்குமியல்புடைய பெண்கள் கூட்டத்தை விரும்பேன். இந்திரன் முதலிய தேவர்களுடைய பதத்தையும் விரும்பேன். இல்வாழ்க்கை யென்னும் சிறையினும் வீழேன். ஐம்புலங்களின் மாயும் மயக்கத்தை ஒழித்து, தவமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் அழியாச் செல்வத்தைப் பெற்று இன்பமுற்றிருப்பேன்' என்றார்.

குச்சகமுனிவர் அது கேட்டு, 'இவன் இல்லொழுக்கத்தை இகழ்கின்றான். வேதத்துணிவையும் கொள்கின்றிலன். தவமயல் பூண்டான்' என்று துயரங் கொண்டு, மிருககண்டரை நோக்கி, மைந்தனே, ஒரு கன்னியை விவாகஞ்செய்து குலத்தொழிலை நடாத்தும்பொருட்டுக் குமாரரைப் பெற்று பின்னன்றே தவஞ் செய்து முத்தியடைதல் முறைமை. அறியாமையிற் கட்டுண்ட உலகத்தார் போல நீயும் காமவின்பத்தை நுகர்தற்பொருட்டா இல்லொழுக்கத்தை அனுட்டிக்கச் சொன்னேன். இறந்த மேலோர்களுடைய துன்பத்தையும் நரகமடைதலையும் நீக்கும்வண்ணம் புதல்வரைப் பெறும்பொருட்டு ஒரு கன்னியை நீ விவாகம் பண்ணல்வேண்டும். புத்திரரென்னும் சொல்லின் பொருளை மறந்தாய்போலும். இவ்வுண்மையை நீ ஆராய்ந்து இல்லறம் பூண்டு நிற்றலே உத்தமநெறி. தவத்தினதொழுக்கம் அதுவே. ஒரு மலையின்மீதேற விரும்பினோன் அதன் சாரலை அடைந்து, படிப்படியே ஏறிப்போதலன்றி, கீழ் நின்று மேலே பாயுந்தன்மைக்கொக்கும் நீ இப்போது தவஞ்செய்யக் கருதுதல். மரம் விலங்கு முதலியவற்றை,

அவற்றால் வரும் பயனைக் கொள்ளுதற்கன்றோ, நீக்காது கொள்ளுவர். அவ்வாறே நீயும் இல்லறமும் மகப்பேறுமாகிய பயன்களின்பொருட்டே ஒரு கன்னியை விவாகஞ்செய்து பின்பு அருந்தவஞ்செய்யக்கடவாய். இவ்வில்வாழ்க்கையை முன்னுளே நினைத்திலை. இந்நாள்காறும் பிரமசரியத்தையே அனுட்டித்தாய். தேவர்களுக்கு அவி முதலிய சிறப்புக்களைச் செய்யாது, மைந்தனே, நீ இப்பொழுதே தவஞ்செய்யக் கருதுதல் தகுதியா! இல்லொழுக்கத்தில் நிற்பவருக்குத் தத்தமொழுக்கத்திலே தவறுண்டாயினும், அதற்குப் பரிகாரமுண்டு, தவவொழுக்கத்திலே நிற்பவருக்குத் தவறுண்டாயின், உய்தலரிது. அது மலையுச்சியினின்றும் தவறுதல்போலும். நீ பிறவித் துன்பத்தினின்று நீங்க விரும்பினையெனினும், நாட்செல்லத் துறப்பதன்றி விரைவிலே துறக்கலாமா! உன் முன்னோர்கள்போலவே நீயும் இல்லொழுக்கத்தை அனுட்டிக்கக்கடவாய். பசுபதியாகிய சிவபெருமான் தாம் உமாதேவியாரோடு கூடி, பிரமா விட்டுணு முதலிய தேவர்களும் முனிவர்களும் மற்றை யாவரும் மனைவியரோடு இல்லறத்தொழுகும்வண்ணம் பணித்தருளினர். அச்சிவபெருமான் நிறுவிய வரம்பை நீ மறுக்காதே. மகப்பேற்றை விரும்பி, என்சொல்லை வெறுக்காது கொள்ளக்கடவாய். உலகியலை விலக்காதே. இன்னும் மாறுபட்டு ஒன்றும் பேசாதே. இப்போதே எமர்களைத் துறவாதே. வசிட்டமுனிவர் அருந்ததியைத் தம்பக்கத்திருத்தியும் பழிபெறாது தவமேன்மையோடு இருக்கின்றாரே. வேண்டுதல் வேண்டாமையில்லாத தூயோர்கள் பெண்களோடு புணரினும், தவஞ்செய்யினும், அவர்களுள்ளத்தறிவு வேறுபடுமோ, வேறுபடாது. நற்குண நற்செய்கைகளையுடைய பெண்ணை விவாகஞ்செய்யின், தானமும் தவமும் உளவாகும், மண்ணுலகத்தின்பமும் விண்ணுலகத்தின்பமும் எய்தும். தங்கணவரையே கடவுளாகக் கொண்டு வழிபடும் கற்பினையுடையாரது சொல்வின்வழியே தெய்வமும் முகிலும் நிற்குமாயின், ஆண்டகைமையோரும் அவர்களுக்கு நிகரல்லர். இல்லொழுக்கத்தை முன்னே அனுட்டியாது, தவவொழுக்கத்தைத் தொடங்குவையாயின், மாயமிகுந்த காமவிடம் வந்தணுகின், விதி காக்கினும் அதனை விலக்கலாமா! துறந்தவர்களுக்கு உணவு முதலியன கொடுத்து, இறந்தவர்களுக்குத் தீக்கடன் நீர்க்கடன்களைச் செய்து பல தருமங்களையும் இயற்றி, விருந்தோம்பும் இல்லறமன்றி, மானுடப் பிறவியாலாகும் பேருதவி வேறியாது! ஆடவர்களும் பெண்களும் நன்மை தீமை செய்தல் ஊழ்வழியன்றிப் பிறிதன்று. உழவர்கள் வயலின்கண்ணே வித்திய வித்தின் பயனேயன்றிப் பிறிது பெறுவார்களா! முன்னே நல்லறமாகிய இல்லறத்தை நடாத்தி, பின்றுறத்தலே துறவு. இவ்வாறு செய்வையாயின், உனக்குக் குற்றம் வாராது. இதனை நீ மறுத்துப் பேசாதே, இது நமதாணை' என்றார்.

அது கேட்ட மிருககண்டேயர் 'எந்தையார் இல்லொழுக்கத்தை வேதத் துணிவென்றார். சிவபெருமானது பணியுமாமென்றார். இனிச் சொல்வதென்னை' என்று நினைந்து வருந்தி, 'தங்கள் தங்கள் குரவர்கள் கடலின் வீழக்கடவீர்கள் என்றாராயினும், அன்போடும் அது செய்தலே புத்திரருக்குக் கடனாகும். அது புதுமையன்று. யானும் இதனை மறுக்காது செய்குவன். தாய் தந்தை குரு என்னும் மூவருடைய சொல்லை மறுத்தவரும், வேதநெறியை மாற்றினவரும், எரிவாய்நரகத்து வீழ்வர். ஆதலால், இவர்சொல்லை நான் விலக்குதல் முறையன்று' என்று துணிந்துகொண்டு, தந்தையாராகிய குச்சகமுனிவருடைய திரு

வடிகளை வணங்கி, பிதாவே, முனியாதொழிக. நீர் பணித்தபடி நிற்பேன். உமக்குச் சொல்வதொன்றுண்டு. தன்சொற்கு அமையாத மனையாளோடு கூடி வாழ்தலினும், நரகத்து வீழ்தலே இனிது. அவளோடு கூடி வாழும் ஆடவனுக்கு அவளையன்றிப் பின்னுமோரியமனும் நோயும் உண்டோ! அடியேன் கூறும் இலக்கணங்கள் சிறிதுங்குறைவின்றி நிறைந்த கன்னி கிடைப்பாளாயின், அவளை நான் விவாகஞ்செய்வேன்' என்றார்.

குச்சகமுனிவர் அது கேட்டு மனமகிழ்ந்து, ஐயாதனே, 'நீ என்சொல்லை மறாது உட்கொண்டமையால், நானும் உய்ந்தேன், உன்றாயும் உய்ந்தாள், என் சுற்றங்களும் உய்ந்தன, தவங்களும் உய்ந்தன, மண்ணுலகத்தோரும் உய்ந்தனர், விண்ணுலகத்தோரும் உய்ந்தனர், இந்திரனும் உய்ந்தனன். உன்விருப்பத்தைச் சொல்வாயாக. நீ கூறிய இலக்கணங்களெல்லாம் பூண்டு, குற்றம் ஒரு சிறிதுமில்லாத ஒரு கன்னியைத் தேடி, உன்னிடத்தே புணர்ப்பேன். அது செய்யாதொழிவேனாயின், என்னுடைய தவம் குன்றுக' என்றார். குச்சகமுனிவர் இவ்வாறு கூறுரை சொல்லலும், மிருககண்டேயர் அவருடைய திருவடிகளை வணங்கி, உம்முடைய புதல்வனாகிய சிறியேன் உய்யும்பொருட்டு இது சொன்னீர். நீரோ தவத்தினிற் சிறந்த முனிவரர். உமக்கு எய்துதற்கரியதொருபொருள் மூவுலகத்தினும் உண்டோ, இல்லை. ஆயினும், நான் சொல்வதுண்டு. தந்தையை இழந்தவர், தாயை இழந்தவர், தமக்கையரில்லாதவர், தங்கையரில்லாதவர், ஆடவரோடு பிறவாதவர், இம்முத்திறத்தரை இழந்தவர், சுற்றமில்லாதவர், திருவற்றவர், உயர்குடியிற்பிறவாதவர், பிணியாளராகிய தாய் தந்தையரிடத்துப் பிறந்தவர், தேவர்களுக்குரிய பெயர் பெறாது விலங்குகளுக்குரிய பெயரைப் பெற்றவர், பிசாசின் பெயரைப் பெற்றவர், புறச்சமயப்படுகுழியின் வீழ்ந்தவர், பிணியர், ஊமையர், முடவர், செவிடர், பிறர்வீட்டிற்செல்வோர், பொதுமகளிர் போல விழிப்பவர், பலமுறை ஆடவரை நோக்கித் தலைக்கடையில் நிற்பவர், தம்மை அழகுபெற அலங்கரிப்பவர், பேருண்டியை உடையவர், பெருநதுயிலையுடையவர், தன்னினும் மூத்தவர், தன்கோத்திரத்துப் பிறந்தவர், நெடியவர், குறளானோர், பருத்தவர், மெல்லிய உருவத்தையுடையவர், கருநிறத்தவர், பொன்னிறத்தவர், பசப்பையுடையவர், விளர்ப்பையுடையவர், உதிரநிறத்தையுடையவர், நாணமில்லாதவர், ஆடவர்புணர்ச்சியை நண்ணினவர், சிரிப்பவர், நிலையில்லாதவர், வலிமிக்கவர், தாய்தந்தையருடைய ஆணையைக் கடந்தவர், கோபமுடையவர், பகையுடையவர், சண்டைசெய்பவர், கூத்து முதலியன காண விரும்புவோர், மன்மதனாற் கவல்கின்றவர், சிவபிரானிடத்து அன்பில்லாதவர், முனிவர்களை இகழ்பவர், உயிர்களிடத்து இரக்கமில்லாதவர், தங்குலநெறியிலே நில்லாதவர், தீக்குணத்தவர், நிறையில்லாதவர், ஆசாரியனை மனிதனென்று நினைப்பவர், தேவரைக் கல்லென்பவர், பத்துவயதின் மிக்கவர், பூப்புப்பருவம் வந்தணுகினவர், ஒத்த குணமில்லாதவர், அச்சமில்லாத மனத்தையுடையவர், இடிபோலப் பேசுவோர், தம்மைத் தந்தை தாயர் விவாகஞ்செய்து கொடுக்குமுன் ஒருவரிடத்து வேட்கை வைத்து அவரைச் சேரவிரும்புவோர், பெருமிதமுடையவர், மடமும் பயிர்ப்புமில்லாதவர், பிறக்கும்போதே கண்ணில்லாதவர், பின்பு கண்ணிழந்தவர், மறுப் பொருந்திய கண்ணினையுடையவர், படலம் பொருந்திய கண்ணினையுடையவர், மெல்லெனப் பார்க்குங் குருடர், சாய்ந்த கண்ணையுடை

யவர், பூனைக்கண்ணையுடையவர், பேய்போலச் சுழலுஞ் செங்கண்ணையுடையவர், தூறுமயிரையுடையவர், நரைத்த மயிரையுடையவர், பெருங்கூந்தலுடையவர், சிறுகூந்தலுடையவர், விரிந்த அளகமுடையவர், செம்மயிருடையவர், நிலத்தில் இறங்கிய கூந்தலையுடையவர், உதிர்ந்த மயிரையுடையவர், விலங்குபோல வலிய மயிரையுடையவர், சிறுத்த கண்ணையுடையவர், நெடுமூக்கையுடையவர், ஒன்றிய புருவங்களையுடையவர், குறிய காதையுடையவர், உயர்ந்த தந்தத்தையுடையவர், வளைந்த கழுத்தையுடையவர், மறுப்பொருந்திய முகத்தையுடையவர், தேம மில்லாத தனத்தையுடையவர், நுடங்கிய இடையில்லாதவர், கல்லுப்போலப் பருத்த வயிற்றையுடையவர், நல்லிலக்கணமில்லாத நிதம்பத்தையுடையவர், வாயும் உள்ளங்கைகளும் நகங்களும் உள்ளங்கால்களும் சிவப்பில்லாதவர், மயிர் பரந்த காலையுடையவர், அன்னம்போலும் மென்னடையில்லாதவர், விரல் பூமி யிலே தோயாதவர் என்னும் இத்தன்மையராகிய மகளிர்களும் பிறரும் விவா கத்திற்கு உரியர்களல்லர். இத்தன்மையராயின், நான் விரும்பேன். இவ்வியல்பு முழுவதுமில்லாத கன்னி உண்டாயின், விரும்புவேன். நீர் ஆராய்ந்து விவாகஞ் செய்து தரக்கடவீர்' என்றார். குச்சகமுனிவர் அது கேட்டு, மகிழ்ச்சியும் முறுவலுங்கொண்டு, 'நல்லிலக்கணமுடைய கன்னியைத் தேடி, உனக்குத் தரு வேன்' என்றார்.

இவ்வாறு கூறிய குச்சகமுனிவர் மிருககண்டரை நிறுவி, தாம் உல கெங்கும் ஒருகன்னியைத் தேடித் திரிந்து, தம்மெதிர்ப்பட்ட சில முனிவர்களால் சோழதேசத்திலே அநாமயமென்னும் வனத்திலே உசத்திய முனிவரிடத்திலே ஒரு கன்னிகை இருத்தலை அறிந்து, அவரிடத்தே சென்றார். உசத்தியமுனிவர் குச்சகமுனிவரை வணங்க, குச்சகமுனிவர் உசத்தியமுனிவரை எதிருறத் தொழுது தழுவினார். உசத்தியமுனிவர் குச்சகமுனிவரைத் தமதாச்சிரமத் திலே அழைத்துக்கொண்டு போய், ஆசனத்திருத்தி, தம்முடைய பன்னியையும் புதல்வியையும் அங்கே அழைத்து, அவரை வணங்குவித்து, அவரைவிதிப்படி பூசித்து, அமுதுசெய்வித்தார். அதன் பின்பு அவரை நோக்கி, 'சுவாமீ, நீர் அடியேனிடத்து எழுந்தருளியதென்னை' என்று வினவினார். குச்சகமுனிவர் மனமகிழ்ந்து, 'நீர் பெருந்தவஞ்செய்து பெற்ற புதல்வியை என்புதல்வனுக்கு மணம்பேசும்பொருட்டு வந்தேன்' என்றார். உசத்தியமுனிவர் அது கேட்டு மகிழ்ந்து, 'என்புதல்வியாகிய விருத்தையை உம்முடைய புதல்வனுக்கு விவா கஞ்செய்து தரும்பொருட்டு நான் முன் செய்த தவம் யாதோ' என்று சொல்லி, விவாகத்துக்கு உடன்பட்டு, அம்முனிவரை அங்கே சிலநாளிருத்தி, வழிபடு வாராயினர்.

ஒருநாள் உசத்தியமுனிவருடைய பன்னியாகிய மங்கலை விடுப்ப, மகளாகிய விருத்தை தன்னுடைய தோழியர்களோடு சென்று, கான்யாற்றிலே நீராடி, பக்கத்துள்ள சோலையிலே போய், மலர் கொய்து, விளையாடிக்கொண்டு திரும் பினள். திரும்பும்பொழுது, மதயானையொன்று எதிரே வந்தது. அதனைக் கண் டோர் யாவரும் அஞ்சித் தனித்தனியே விரைந்தோடினார்கள். விருத்தை கண்டு துன்பமுற்று, 'இனி யாது செய்யலாம்' என்றிரங்கி ஏங்கி, மிகவிரைந்தோடி னள். ஓடலும், புதர் மூடிய தூரவொன்றணுக, அதில் விழுந்தழுந்தி இறங்

தீாள். யானை மலயமாளுட்டைச் சார நடந்தது. தனித்தனியே ஓடிய் தோழியர் கள் யாவரும் பின் ஒருங்கு கூடி, விருத்தையைத் தேடிக் காணுது, பெருந்துயர மடைந்து, உசத்தியமுனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்து, மங்கலைக்கு இதனைச் சொன்னார்கள். மங்கலை அது கேட்டலும், கண்ணீர்வார வயிற்றினடித்து அழுதுகொண்டு, தன் கணவருடைய பாதங்களின் வீழ்ந்து, நிகழ்ந்த தனைச் சொன்னாள். உசத்தியமுனிவர் அது கேட்டு, மனங்கவன்றழுது, தன் புதல்வியோடு சென்று பிரிந்த தோழியரை நோக்கி, 'என்புதல்வியை யானை கொன்றதா? சொல்லுங்கள்' என்றார். தோழியர்கள் முனிவரை நோக்கி, 'நாங்கள் நீராடி மலர்கொய்துகொண்டு திரும்பும்பொழுது, யானை வந்தது கண்டு, எல்லோமும் தனித்தனி ஓடினோம். பின்பு விருத்தையைத் தேடிக் காணுது திரும்பினோம்' என்றார்கள். உசத்தியமுனிவர் அவ்வெல்லையிற்சென்று தேடித் தியக்குற்று நின்றார். தம்மகளுடைய ஆபரணங்கள் ஒருநெறியிலே ஓரொன்ருகச் சிந்திக் கிடப்பக் கண்டு, 'என்மகள் சென்ற நெறி இதுவே' என்று துணிந்து, 'ஆபரணம் போகிய நெறியே தொட்டுப் புதல்வியைக் காண்போம்' என்று, பெண்களோடு போக, துரவொன்று வந்தணுகியது. அதிலே தம்மகளைக் கண்டு, நெடிதுயிர்த்து, கண்ணீர் பெருக அதனுள்ளே குதித்து, மகளை எடுத்துக் கரையிலே சேர்த்து, அழுதார். உடனே பெண்களெல்லாரும் விருத்தையைத் தழுவிக்கொண்டழுதார்கள். நற்றாயாகிய மங்கலை அது கேட்டு, பெருந்துயரக் கடலின் அழுந்தி, வயிற்றினடித்து, விருத்தையின்மீது வீழ்ந்து அழுதாள்.

குச்சகமுனிவர் இவையெல்லாம் அறிந்து, அவ்விடத்துச் சேர்ந்து, அழுகின்ற பெண்களை நோக்கி, 'இக்கன்னியை நான் உயிர்ப்பித்துத் தருவேன், அழா தொழிமின்கள்' என்று தேற்றி, வேறோரிடத்திருந்த உசத்தியமுனிவரைப் பார்த்து, 'கல்வியில்லாதவரும், சிறியரும், முதியரும், பாலரும், மகளிரும்போல நீர் இவ்வாறு துன்புறுகின்றீர். ஊழ்வினைமுறையை அறிகிலீர். அறிஞராகிய நீர் இவ்வியல்பினராயின், வேறியாவர் தெளியுமியல்பினர்! ஐயரே, கேளும். மனத்திற்றுன்பத்தை ஒழித்துவிடும். நான் இக்கன்னியை நாளை உயிர்ப்பித்துத் தருவேன். பின்பு என்புதல்வனுக்கு நீர் இவளை விவாகஞ்செய்துகொடும். இதனை ஐயுற்று வருந்தாதொழியும். விதியும் அதுவே. இதனை நான் ஞான நோக்கத்தினல் அறிந்தேன். விருத்தையினது சரீரத்தை எண்ணெய்த்தோணியில் வைத்திரும். நான் தவஞ்செய்து உயிரை மீட்டுத்தருவேன்' என்றார். அது கேட்ட உசத்தியமுனிவர் தம்மகளுடைய சரீரத்தை எண்ணெயில் வைத்தனர்.

குச்சகமுனிவர் போய், ஒருபொய்கையிலே மூழ்கி நின்று, இயமனை நினைந்து தவஞ்செய்தார். அப்பொழுது, முன்னே பெண்கள் அஞ்சும் வண்ணம் வந்த மதயானை மீண்டணைந்து, அப்பொய்கையினுள்ளே புகுந்து, புழைக்கையினாலே துளாவி, அங்கு நின்ற குச்சகமுனிவரைப் பற்றித் தன்பிடர்மேல் ஏற்றிக்கொண்டு, நெடுந்தூரஞ்சென்றது. குச்சகமுனிவர் உணர்ந்து, பின்னர் மதயானையை நோக்கி, 'இது என்னைப் பற்றிச் செல்வதென்னை' என்றெண்ணி, ஞானநோக்கத்தினாலே அதனது ஊழ்முறையை நினைவாராயினர்:—

'கலிங்கநாட்டிலே அரிபுரத்திலே வணிகர்குலத்திலே தேவதத்தன் என்றொருவன் இருந்தான். அவனுடைய புதல்வனாகிய தருமதத்தன் மிக்க செல்வத்தையுடையனாய், தருமங்களைச் செய்து பெரும்புகழ் பெற்றான். அவன் தன்னுடைய தந்தையும் தாயும் இறத்தலும், தமியனாகித் துயருழந்து, பின் ஒருவாறு தேறியிருக்கும்பொழுது, ஓரிரதவாதி முண்டிதமாகிய சிரசையும், குண்டலம் பொருந்திய காதையும், உபவீதம் அணிந்த மார்பையும், விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்த நெற்றியையும், உருத்திராக்ஷமாலையையும், பிரம்பு பொருந்திய கையையும் உடையனாய், அவனிடத்து வந்தான். தருமதத்தன் அவ்விரதவாதியைக் கண்டு, வணங்கி, தன்வீட்டினுள் அழைத்துக்கொண்டு சென்று, அமுது செய்வித்து, முகமன் கூறி, பின்பு அவனை நோக்கி, 'சுவாமீ, நீர் இங்கு வந்ததென்னை' என்றான். வாதி அது கேட்டு, 'சிவபிரான் அருளிச்செய்த வித்தையொன்று நம்மிடத்துளது. அது எவருக்கும் பேசுந்தன்மையதன்று. குருபத்தியுடையார்க்குமாத்திரம் சொல்லத்தக்கது. நெஞ்சிற் சிறிதும் மாசில்லாத உனக்கு நாம் அதை உணர்த்துவேம். சிவபிரானிடத்துத் தோன்றிய இரதமுண்டு. அதனாலே வேண்டிய பொன்னைச் செய்வோம். அது நமக்கு அரியதன்று. அதுபோல இன்னும் பலவுள. அவற்றைப் பெருந்தவமுடைய பெரியோர்களன்றி வேறியார் விரும்பாதவர்! காரிரும்பை நாகமாக்குவோம். மீட்டும் அதனைப் பொன்னாக்குவோம். மகாமேருமலையும் திருக்கைலாசமலையுமாகிய இரண்டனையும் யாரும் நோக்கவே காட்டுவோம். இவை நமக்கரியனவா! ஈயத்தையும் இரதத்தையும் வெள்ளியாக்குவோம். வங்கத்தைப் பொன்னாக்குவோம். இரும்பிற் செம்புண்டாக்குவோம். ஈயத்தையும் அவ்வாறே செய்வோம். அளப்பில்லாத பிருதிவியண்டங்கள் யாவையும் பொன்மயமாக்குவோம். நமது வன்மையை உள்ளவாறு சொல்ல விரும்பினேமாயின், அளப்பில்லாத வருடங்கள் வேண்டும். ஒரு பொன்னைக் கோடிபொன்னாக்குவோம். கோடிபொன்னை மலைபோலக் கோடி கோடி பொன்னாக்குவோம். உன்பொருளனைத்தையும் தருவையாயின், உன் வீட்டிலே அப்பொருளை வைத்தற்கு இடமில்லையென்னும்படி செய்வோம்' என்றான். இவ்வாறு கூறிய வாதியைத் தருமதத்தன் வணங்கி, முன்னே தன்னிடத்துள்ள நிதியையும், பின்னே தன்னால் ஈட்டப்பட்ட நிதியையும், பேடகங்களில் உள்ள ஆபரணங்களையும் கொண்டுவந்து, அவன்முன் வைத்தான். வாதி அவற்றை நோக்கி, 'ஓகோ! வணிகரிற்றிலகனாகிய உன்னிடத்துள்ள செல்வம் இதுதானோ' என்று கைதட்டிச் சிரித்து, 'இப்பொருள் நமது வித்தையில் இறைக்கும் போதாது. இது நாம் உருக்குமுகத்திலே சிந்துகின்ற அளவுங் காணாது. நீ நம்பின்றிரிவையாயின், அளப்பில்லாத பொருள் தருவோம். இதனை வைத்துக்கொள்வாயாக' என்றான். அப்பொழுது தருமதத்தன் 'சுவாமீ, கோபியாதொழிக. நீர் வேண்டிய பெருநிதிமுழுதும் தேடிக் கொண்டுவருவேன். இரும்' என்று சொல்லிக்கொண்டு போய், வஸ்திரங்களையும், நிலங்களையும், இரத்தினங்களையும், ஆபரணங்களையும், வீடுகளையும், ஆடுமாடுகளையும் விற்று, மதிமயக்கத்தினாலே தருமத்தையும் விற்றான். இவ்வாறு தேடிய பெருநிதியனைத்தையும் கொண்டுவந்து, வாதிமுன் வைத்து நிற்றலும், வாதி மனமகிழ்ந்து, அவையெல்லாவற்றையும் அக்கினியிலே உருக்கித் திரட்டி, ஒருருவாக்கி, அதனிரட்டி எடைகொண்ட இரதத்தை ஓரம்பியிலிட்டு, அப்பொன்முழுதையும் உரைத்து, அதனை உருட்டி, மட்குகையினுள்ளே மருந்தை உள்ளுறுத்திப் பொன்னை உள்ளிட்டு, அத

னிடத்தே ஒரு களங்கத்தை இட்டு, சீலைமண்செய்து, அக்கினியிலே நூற்றெட்டுக் குக்குடபுடமிட்டு, அதனைப் பார்த்து, 'மிகவும் மாற்று வந்தது. இனி ஒரு வராகியிலே பழுக்கும். காற்றில்லாத ஒருறையுள் காட்டு' என்றான். தருமதத்தன் ஒருறையுளைக் காட்டலும், இரதவாதி அதனுள்ளே போய், விறகின்மீது சுடலையக்கினிகொண்டு வராகிமேலிட்டுப் புகைப்பித்தான். அதனாலே தருமதத்தன் கண்ணீர் பொழிய, சரீரம் வெதும்ப, எங்கும் வேர்ப்ப, ஊமைபோல ஒன்றும் பேசாமலும், போக முயலாமலும், வாளாவிருந்தான். அப்பொழுது இரதவாதி பொற்குகையை எடுத்து, மெல்லெனத் தனது வஸ்திரத்தினுள்ளே மறைத்துக்கொண்டு, அதுபோலத் தன்னிடத்திருந்த வேறொருகுகையைப் பக்கத்து வைத்து, புகையைத் தணித்து, தருமதத்தனை நோக்கி, 'இக்குகையை உன் கையினால் எடுத்து, இவ்வக்கினிமேல் வைப்பாயாக' என்றான். தருமதத்தன் அவ்வாறு செய்தலும், இரதவாதி அதற்குரியன யாவற்றையும் அமைத்துச் சேமஞ்செய்து, தருமதத்தனை நோக்கி, 'நீ உணவில்லாமலும், ஒருவரோடும் பேசாமலும், பெண்களை விரும்பாமலும், பிறரைப் பாராமலும், மூன்றுநாள் நம்மையே சிந்தித்துக்கொண்டிருக்கக்கடவாய். நாம் காளிசந்நிதியிலே ஒருயாகம் முடித்தல்வேண்டும். முடித்துக்கொண்டு நாலாநாள் இங்கே வருவோம்' என்றான். தருமதத்தன் 'அவ்வாறே செய்க' என்று சொல்லி, அவனை மும்முறை வணங்கி, அவன்பின் செல்லாது நின்றான். இரதவாதி அங்குநின்றும் விரைந்து நெடுந்தூரம் போய், உருமாறி, வேறோரிடத்தை அடைந்தான். தருமதத்தன் இரதவாதி விதித்தபடியே இருந்து, மூன்றுநாட்செல்லலும், 'பெரியவர் சொல்லிய நாளெல்லை சென்றுவிட்டதே. இன்று வந்திலர். அவர் சொற்றப்புவாரா' என்று தளர்ந்து, காளிகோயிலினும் நகரத்தினும் அவனைத் தேடிக் காணாது மயங்கி வாடி, வீட்டிற்குத் திரும்பினான். முன் வைத்த குகையை எடுத்துப் பார்த்து, அது இரும்பாயிருக்கக் கண்டு, மிகுந்த துயரமடைந்து வீழ்ந்திறந்தான். அவன் தருமத்தை விற்ற பாவத்தினாலே 'யானையாய்ப் பிறந்தான்' என்றுணர்ந்தார்.

இவ்வுண்மையை உணர்ந்த குச்சகமுனிவர் 'இவ்வியானைப்பிறப்பை விரைவிலே நீக்குவேன்' என்று சொல்லி, 'நான் முன்செய்த தவத்திலே ஒருநாட்டவம் இவ்வியானைக்கு எய்துக' என்றார். உடனே யானைவடிவத்தை ஒழித்து, தேவவடிவத்தை அடைந்து, தேவவிமானத்தேறி, குச்சகமுனிவரைத் தொழுதுகொண்டு, விண்ணுலகத்தை அடைந்தான். அதன் பின்பு, குச்சகமுனிவர் பொய்கையிலே முன்போலத் தவஞ்செய்தலும், இயமன் வந்து, 'முனிவரே, உம்முடைய தவத்தை நோக்கி மகிழ்ந்தனம். நம்மிடத்து வேண்டியது என்னை' என்றான். குச்சகமுனிவர் இயமனை வணங்கி, 'உசத்தியமுனிவருடைய புதல்வியை என்புதல்வனுக்கு மணம்பேச வந்தேன். அவள் நேற்றிறந்தனள். அவளை முன்போலத் தந்தருளும்' என்றார். அப்பொழுது இயமன் தன்றூதனொருவனை நோக்கி, 'இம்முனிவர் வேண்டிய கன்னியினது உயிரை வைத்தோமே. அதனை நீ விரைவின் இங்கே மீட்டுக் கொண்டுவந்து விடுவாயாக' என்று பணித்து, மறைந்தான். தூதுவன் அவ்வுயிரைக் கொண்டுவந்து, அவளுடைய சரீரத்துள் விடுத்தான். உடற்குள் உயிர் வருதலும், விருத்தை துயிலுணர்ந்தாள்போல எழுந்தாள். எல்லாரும் அவளைச் சூழ்ந்தார்கள். மாதாவாகிய மங்கலை அவளைத் தழுவினாள். தந்தையாராகிய உசத்தியமுனிவர் அவளை எடுத்தணைத்துப் பல

கால் உச்சிமோந்து, தன்னிருதொடைமீதிருத்தி, 'என்றவப்பபனுகிய குச்சக முனிவர் நேற்றுக் கூறியவாறே தவஞ்செய்து இவளை உய்வித்தருளினார்' என்றார். பின்பு புதல்வியை நோக்கி, 'நீ இங்கு நிகழ்ந்ததும், இறந்ததும், மீண்டதும் முறைப்படியே சொல்வாயாக' என்று சொல்ல, அவள் அது கேட்டு, தான் தோழியர்களோடு போனதும், கான்யாற்றிலே நீராடியதும், மீண்டதும், யானை வந்ததும், அதனைக் கண்டோடினதும், தானொருத்தி தனித்ததும், தூரவில் வீழ்ந்திறந்ததும், மீண்டதும், இயமலோகத்தில் நிகழ்வனவும் விரித்துச் சொன்னாள்.

அது கேட்டு மகிழும்பொழுது, இயமனுடைய அருளைப் பெற்ற குச்சக முனிவர் வந்தார். வருதலும், உசத்தியமுனிவர் தம்முடைய பன்னியோடும் புதல்வியோடும் சுற்றத்தோடும் அவரை எதிர்கொண்டு, வணங்கித் துதித்து, 'என்னுடைய உயிரும், என் பன்னியுடைய உயிரும், சுற்றத்தாருடைய உயிரும், நண்பர்களுடைய உயிரும் நிற்கும்வண்ணம், நான் தவத்தினாலே பெற்ற விருத்தையுடைய உயிரைத் தந்தருளினீர். இது உமக்கு அரியதா! பூமியின்கண் உள்ள உயிர்களனைத்தையும் காத்தருளும் கடவுளும் நீரென்றே என்மனம் கருதுகின்றது. உமது திருவுளத்தை யாவர் அறிவார்! உம்முடைய புதல்வனுக்கு என் புதல்வியைக் கொள்ளும்பொருட்டு வந்தீரோ! இயமனாலே போன உயிரை மீண்டும் அழைத்துத் தரும்பொருட்டு வந்தீரோ! சொல்லும்' என்று முகமன்கள் பலவற்றை எடுத்துச் சொல்லி, அவரை அழைத்துக்கொண்டு தமதாச்சிரமத்தை அடைந்தார். பின்பும் சிலநாள் குச்சகமுனிவரை அங்கிருத்தி, 'சுவாமீ, உம்முடைய புதல்வரை இங்கே அழைத்துக்கொண்டு வாரும். என் புதல்வியை விவாகஞ்செய்து கொடுப்பேன்' என்றார். குச்சகமுனிவர் தம்முடைய புதல்வரை அழைத்துக்கொண்டு வரலும், உசத்தியமுனிவர் சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே, தம்முடைய புதல்வியாகிய விருத்தையை மிருககண்டியருக்கு விதிமுறையே விவாகஞ்செய்து கொடுத்தார்.

மிருககண்டியரும் விருத்தையும் அன்பினோடு கூடி இல்லறம் நடாத்த, குச்சகமுனிவர் பலநாட் கண்டுகொண்டு, தவஞ்செய்யும்பொருட்டு உத்தரதேசத்துக்குப் போனார். மிருககண்டியர் தமது பெருந்தவவலியினாலே மிருகண்டு என்னும் ஒரு புதல்வரைப் பெற்று, அவருக்கு ஆறுவயசு சென்றபொழுது உபநயனம் முடித்துவிட்டு, தமது தந்தையார்போலத் தாமும் தவஞ்செய்யப் போயினார்.

மிருகண்டுமுனிவர் பிரமசரியம் அனுட்டித்து முடித்து, முற்கலமுனிவருடைய புதல்வியாகிய மருத்துவதியை விவாகஞ்செய்து, இல்லறத்தை நடாத்தினார். சிலகாலமானபின், புதல்வர் இல்லாமையால் மனம் வருந்தி, தம்முடைய மனைவியோடும் சுற்றத்தாரோடும் அநாமயவனத்தை நீங்கி, காசியை அடைந்தார். அடைந்து, கங்காநதியில் ஸ்நானஞ்செய்து, மணிகன்னிகை என்னும் திருக்கோயிலிற் சென்று, சிவபெருமானை வலஞ்செய்து வணங்கித் துதித்தார். அத்திருக்கோயிலுக்கு அணித்தாகிய ஓரிடத்திலே சிவபெருமானைச் சிவாகமவிதிப்படி வழிபட்டார். வெய்யில், பனி, மழை, காற்று என்பவற்றிற்கு அஞ்சாத மரம்போல, ஆறுபருவத்தும், புத்திரபாக்கியத்தை விரும்பிச் சிவபெருமானைச் சிந்

தித்து, ஒருவருடம் தவஞ்செய்தார். அப்பொழுது சிவபெருமான் எழுந்தருளி வருதலும், மிருகண்டுமுனிவர் அவரை வணங்கித் துதித்தார். சிவபெருமான் மிருகண்டுமுனிவரை நோக்கி, 'நீ யாது விரும்பினாய்' என்று வினாவியருளலும், மிருகண்டுமுனிவர் 'எம்பெருமானே, அடியேன் புத்திரபாக்கியத்தை விரும்பினேன். தந்தருளுக' என்று விண்ணப்பஞ்செய்தார். சிவபெருமான் திருமுறுவல் செய்து, 'தீக்குணமே உடையவனாய், அறிவு சிறிதும் இல்லாதவனாய், ஊமையும் செவிடும் முடமும் குருடுமாய், வயசு நூறினும் நோயால் வருந்துவோனாய் உள்ள ஒரு புதல்வனைத் தருவேமா? அழகு மிக்குடையனாய், உறுப்புக்குறைவு இல்லாதவனாய், நோய்களாலே சிறிதும் வருந்ாதவனாய், பலகலைகளினும் பயின்று வல்லனாய், நம்மிடத்து அன்புடையனாய், பதினாறுவயசுமாத்திரம் பெற்றவனாய் உள்ள ஒரு புதல்வனைத் தருவேமா? உன்னெண்ணம் யாது? சொல்' என்று திருவாய்மலர்ந்தருளினார். மிருகண்டுமுனிவர் அவற்றை நன்காராய்ந்து துணிந்துகொண்டு, 'பெருங்கருணாநிதியே, வயசு குறுகினாலும், அறிவுடையனாய், உடற்குற்றம் சிறிதும் இல்லாதவனாய், எம்பெருமானே, உம்மிடத்து அன்புடையனாய், உள்ள ஒரு புதல்வனையே விரும்பினேன். தந்தருளுக' என்று விண்ணப்பஞ்செய்தார். செய்தலும், சிவபெருமான் 'உனக்குச் சற்புத்திரனைத் தந்தேம்' என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினார். மிருகண்டுமுனிவர் சிவபெருமானைத் துதித்துக்கொண்டு, மனமகிழ்ந்து, தஞ்சுற்றத்தாரோடும் காசியிற்றானே இருந்தார்.

இவ்வாறிருக்கு நாளிலே, பூமியிலுள்ளோர் துன்பத்தினின்று நீங்கவும், சிவபுண்ணியம் ஓங்கவும், தவத்தையுடைய முனிவர்கள் உய்யவும், சற்சமயமாகிய வைதிகசைவம் வாழவும், இயமன் இறக்கவும், எம்பெருமானது திருவருளினாலே, மிருகண்டுமுனிவருடைய பன்னியாகிய மருத்துவதியுடைய அருமைத்திருவயிற்றிலே ஒரு கருப்பம் வந்தடைந்தது. அடைதலும், மிருகண்டுமுனிவர் அதனை அறிந்து, அங்குள்ள சிவனடியார்கள் யாவருக்கும் வேண்டிய வேண்டியவாறே பலவளங்களையும் கொடுத்து, மாசந்தோறும் செயற்பாலனவாகிய கடன்களைச் செய்துகொண்டிருந்தார். பங்குனிமாசத்திலே, இரேவதி நக்ஷத்திரத்திலே, மிதுனலக்கினத்திலே, சுக்கிரனும் குருவும் உச்சத்தானத்தில் இருப்ப, சூரியன் முதலிய மற்றைக் கிரகங்கள் நட்பும் ஆட்சியும் ஆகிய தானங்களில் இருப்ப, ஒரு சற்புத்திரர் * திருவவதாரஞ்செய்தார். அப்பொழுது, சுற்றத்தார்கள் இரத்தினங்களையும், பொன்னையும், பொற்சுண்ணத்தையும், நறுமலரையும், மகரந்தத்தையும், கலவைச்சாந்தையும், கஸ்தூரிச்சேற்றையும் இடந்தோறும் வீசி ஆர்த்தார்கள். தேவதுந்துபிகள் ஒலித்தன. மும்மூர்த்திகளல்லாத மற்றையாவரும் ஆசிசெய்தார்கள். திருக்காசிநகரமன்றி உலகமெல்லாம் களிப்புற்றன. தந்தையாராகிய மிருகண்டுமுனிவர் கங்காநதியிலே ஸ்நானஞ்செய்து, பிராமணர் முதலியோர்கட்கெல்லாம் தானம் கொடுத்து, சாதகர்மம் முதலியனவற்றைச் செய்தார். பிரமதேவர் வந்து, அச்சற்புத்திரருக்கு 'மார்க்கண்டேயர்' என்று நாமகரணஞ்செய்தார். பிள்ளை மறுவற்ற சந்திரன்போல வளர்தலும், உபநிட்டானம் அன்னப்பிராசனம் முதலியவற்றைச் செய்து, ஒரு வருடத்திலே, சௌள

* இவருடைய திருவவதாரகாலத்தையுணர்த்தும் "மீனமுமுடிந்த நாளும்" என்னுஞ் செய்யுட்கு வேறு பொருள்கள் கூறுவாருமுளர்.

கர்மமும், இரண்டாம் வருடத்திலே, கன்னவேதனமும் செய்தார். ஐந்தாம் வயசிலே உபநயனஞ்செய்து, வேதம் முதலிய கலைகளெல்லாவற்றையும் உணர்த்துவிக்க, மார்க்கண்டேயமுனிவர் அவைகளின் மெய்ப்பொருளை உணர்ந்து, சிவபெருமானே அநாதிமுத்த சித்துருவாகிய முதற்கடவுள் என்று துணிந்து அவருடைய திருவடிகளே புகலிடமாகக் கொண்டார். சிவபெருமானையும், அவருடைய அடியார்களையும், தங்குருவையும், முனிவர்களையும், தாய்தந்தையர்களையும், சிரத்தையோடு வழிபடுவாராய், பிரமசரியத்தை வழுவாது அநுட்டித்தார்.

இவ்வாறு ஒழுகும்பொழுது, பதினாறுவயசு சென்றது. தாய்தந்தையர்கள் அதனை அறிந்து, தங்கள் குமாரரை நோக்கி, தனித்தனியே இருந்துகொண்டு, பெருந்துயர்க்கடலின் மூழ்கி, அழுது வருந்தினார்கள். மார்க்கண்டேயமுனிவர் அது கண்டு, அவர்களை அணுகி, அவர்கள் பாதங்களை வணங்கி, 'நீங்கள் துன்பமுறுகின்றீர்கள். இது என்னை! இன்னும் யான் யாதுமொன்றறியேன். இனித் துன்பத்தை ஒழிமின்கள். உங்களிடத்து நிகழ்ந்தது யாது? சொல்லுங்கள்' என்றார். தந்தையார் அது கேட்டு, 'மைந்தனே, நீ இருக்க, நாம் வேறொரு துன்பம் எய்தி மெலிவதும் உண்டோ! முன்னாளிலே சிவபெருமான் உனக்குப் பதினாறு வயசு என்று அருளிச்செய்தார். அது சென்றதனால், துன்பமுறுகின்றோம்' என்றார். உடனே மார்க்கண்டேயர் அவர்முகத்தை நோக்கி, 'நீங்கள் சிறிதும் இரங்கவேண்டாம். உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்த சிவபெருமானைப் பூசைசெய்து, இயமனுடைய வலியைக் கடந்து, உங்களிடத்து விரைந்து வந்தடைவேன். நீங்கள் இங்கிருங்கள்' என்று சொல்லி அவர்களைத் தேற்றி, அவர்கள் பாதங்களின் வீழ்ந்து வணங்கி நின்றார். நிற்க, தந்தைதாயர் இருவரும் அவரை மார்பில் அணைத்து, உச்சிமோந்து, முன்னை வருத்தநீங்கி, மனமகிழ்ந்தார்கள்.

மார்க்கண்டேயமுனிவர் இருமுதுகுரவர்களுடைய ஏவலினாலே, சிவபெருமானது திருவருளும் தமக்கு அவர்மாட்டுள்ள அன்புமே உடனுறுதுணையாய்ச் செல்ல, பெருமகிழ்ச்சி பொங்க, விரைந்து போய், மணிகன்னிகை என்னும் திருக்கோயிலிற் புகுந்தார். என்புகள் நெக்கு நெக்குருக, ஆனந்தவருவி பொழிய, சிவபெருமானை வலஞ்செய்து, திருமுன்னே வணங்கி, தென்றிசையின் ஓரிடத்து இருந்துகொண்டு, சிவலிங்கந்தாபித்து, பலநாள் அன்போடு பூசித்துத் துதித்து அருந்தவஞ்செய்தார். அன்புவலையிற் படுவோராகிய சிவபெருமான் வெளிப்பட்டு, 'நீ அருந்தவமும் பூசையும் செய்கின்றாய். நாம் அவற்றில் மிக விருப்பம் அடைந்தேம். நீ விரும்பியது யாது? இனிச் சொல்வாயாக' என்று திருவாய் மலர்ந்தருளினார். மார்க்கண்டேயமுனிவர் 'பரமபிதாவே, அநாதிமலமுத்தரே, சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சமெல்லாம் நிறைந்த மெய்யரே, யாவருக்கும் மேலானவரே, மெய்யடியார்களுடைய மலத்தை ஒழித்தருளும் கருணாநிதியே, அக்கினியை ஏந்திய திருக்கரத்தை உடையவரே, சிறியேன் இயமன் கைப்படாது உய்யும்பொருட்டு நீர் எதிர்வந்து அருளல்வேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்தார். செய்தலும், கிருபாசமுத்திரமாகிய எம்பெருமான் 'இயமனுக்கு அஞ்சாதே அஞ்சாதே' என்று திருவாய்மலர்ந்து, தம்முடைய அருமைத்திரு

யடிகளிரண்டையும் மார்க்கண்டேயமுனிவருடைய சிரசில் வைத்தருளினர் வைத்தருளலும், மார்க்கண்டேயமுனிவர் 'இனி உய்ந்தேன் உய்ந்தேன்' என்று சொல்ல, சிவபெருமான் முன்போலச் சிவலிங்கத்தில் மறைந்து எழுந்தருளியிருந்தார்.

அதன்பின்பு மார்க்கண்டேயமுனிவருக்குப் பதினாறு வயசெல்லை செல்லலும், ஒரு யமதூதன் தோன்றி, சிவபூசையைக் கண்டு அஞ்சி, 'நான் மார்க்கண்டேயரை அண்டுவது அரிது' என்று மீண்டு போய், இயமனை வணங்கி நின்று, 'இறைவனே, காசியிலே மார்க்கண்டேயன் எனப் பெயர்பெற்ற ஒரு பிராமணன் இருக்கின்றான். அவன் சிவபெருமானிடத்தே பதிந்த சிந்தையை உடையவன், அவருடைய திருவடிகள் பொருந்திய சிரசை உடையவன், எந்நாளும் அவருடைய திருப்புகழையே பேசும் நாவினை உடையவன், அவன் சிவபூசை செய்கின்றான். அப்பாலனை அணுக அஞ்சினேன், அவன் முன்னும் சென்றிலேன். அவன் சிவபெருமானிடத்து இருக்கின்றனன்' என்றான். உடனே இயமன் மிகக்கோபங்கொண்டு, பெருமூச்செறிந்து, 'அச்சிறுவன் நாசமில்லாத முதற்கடவுளோ' என்றான். பின்பு 'நம்முடைய கணக்கர்களை அழைத்துக்கொண்டு வாருங்கள்' என்று பணிக்க, அங்கு நின்ற தூதனொருவன் ஓடிப்போய், 'எம்மரசன் அழைக்கின்றான். வாருங்கள்' என்று கூவ, அவர்கள் வந்து இயமனை வணங்கினார்கள். இயமன் 'காசியிலே சிவபூசை செய்துகொண்டிருக்கும் மார்க்கண்டேயன் என்னும் சிறுவனுக்கு வயசெல்லை சொல்லுங்கள்' என்றான். சித்திரகுத்தர் என்னும் கணக்கர்களிருவரும் தங்கள் கையிலுள்ள கணக்கைப் பார்த்து, 'அரசனே, சிவபெருமான் முன்னாளிலே பதினாறுவயசு என்று எல்லைகூறினார், அவ்வெல்லை சென்றது. அச்சிறுவன் செய்த சிவபூசை தருமத்தின்பாலது. பெருந்தவத்தையுடைய முனிவர்களாயினும், பொதுவாகாது தமக்கே சிறப்பாயுள்ள ஐசுவரியத்தை உடையர்களாயினும், அறிஞர்களாயினும், வலியர்களாயினும், விதியை வெல்ல வல்லவர் யாவர்! ஆதலால், அச்சிறுவன் சுவர்க்கம் அடைதற்கு உரியன். நரகத்துன்பத்திற்குத் தப்பினன். இதுவே அவனிலைமை' என்றார்கள். இயமன் கோபங்கொண்டு தன்மந்திரியாகிய காலனை விளித்து, 'காசியிலுள்ள மார்க்கண்டேயன் என்னும் பிராமணனை இங்கே கொண்டுவரக்கடவாய்' என்று பணித்தான். பணித்தலும், காலன் காசியை அடைந்து, மார்க்கண்டேயமுனிவர் இருக்கும் இடத்தே போய், அவருடைய சிவபூசையையும் குறிப்பையும் கண்டு, 'இவர் வருவது எங்ஙனம்' என்று எண்ணி ஏங்கி, அவர் கண்ணுக்குத் தெரியும் வண்ணம் சென்று அவரை வணங்கினன். வணங்கலும், மார்க்கண்டேயமுனிவர் 'நீ யார்? சொல்' என்றார். காலன் அதுகேட்டு, 'இயமனுக்கு அடிமை செய்கின்ற காலன் யான். இங்கு வந்த காரணம் யாதென்பீராயிற் சொல்வேன். உமக்குச் சிவபெருமான் அருளிச்செய்த பதினாறு வயசெல்லை நேற்றே சென்றது. இனி நீர் தென்புலத்திற்கு வருதல்வேண்டும். இது தமக்குந்தன்மையதன்று. பிரமதேவருக்கும் அடுக்குந்தன்மையது, இது புதிதாகப் புகுந்ததன்று. படைத்தல் காத்தல்கள்போல, இயமன் அழித்தலும் சிவபெருமான் இட்ட பணியேயாம். ஆதலால், அவன் உம்மை அழைக்கின்றனன். அன்றியும் நீர் சிவபூசைசெய்வதைப் பலரும் சொல்லக்கேட்டு, மனமகிழ்ந்து, உம்மைக்காண விரும்புகின்றான். அவன் அழித்தற்றொழில் உடையனாதலால், அவனைக் கொடியன் என்பர்

அறிவிலார். அவன் உயிர்களெல்லாவற்றிற்கும் முடிவிலே அவ்வவற்றின் செய்வினை குறித்து, முறைசெய்குவன். அதனால், அவனை நடுவன் என்றே உலகமெல்லாம் கூறும். நீர் மனசிலே யாதும் எண்ணுதொழிமின். நீர் இயமபுரத்துக்கு வருவீராயின், இயமன் உம்மை எதிர்கொண்டு வணங்கித் துதித்து, இன்சொற்சொல்லி, உமக்கு இந்திரபதத்தைத் தருவன். வாரும்' என்றான். மார்க்கண்டேயமுனிவர் அதுகேட்டலும், 'யாவருக்கும் இறைவராகிய சிவபெருமானை வழிபடும் அன்பர்கள் இந்திரலோகத்துக்கும் போகார்கள், உன்னுடைய இயமலோகத்துக்கும் வாரார்கள். எவ்வுலகங்களுக்கும் மேலாகிய சிவலோகத்தை அடைந்து இனிது வாழ்ந்திருப்பார்கள். நானும் சிவபெருமானுடைய அடியார்க்கடியவன். ஆதலால், உங்கள் யமலோகத்துக்கு வரேன். பிரம விட்டுணுக்களுடைய பதங்களையும் விரும்பேன். விரைந்து போய்விடு போய்விடு' என்றார். அது கேட்ட காலன் 'நன்று, என்று சொல்லிக்கொண்டுபோய், இயமனை வணங்கி, நிகழ்ந்தனவெல்லாம் சொன்னான். ௭

அப்பொழுது இயமன் உளம் பதைபதைக்க, உடலமெங்கும் வெயர்க்க, கண்கள் கனல் பொழிய, புருவக்கடை நிமிரக் கோபங்கொண்டு, 'எருமைக்கடாவைக் கொண்டுவாருங்கள்' என்று பணித்தான். பணித்தலும், எருமைக்கடா வந்தது. வருதலும், இயமன் அதன்மேல் ஏறிக்கொண்டு, குடைநிழற்ற, கொடிபிடிக்க, வீரர்கள் சூழ்ந்து துதிக்கச் சென்று, காசியை அடைந்து, மார்க்கண்டேயமுனிவர் இருக்கும் இடத்தே போய், சிவந்த குஞ்சியும், கரிய சரீரமும், கோபத்தினால் அக்கினி சொலிக்கும் கண்களும், பிடித்த பாசமும், கையில் ஏந்திய தண்டமும், சூலமுமாய் எதிர்த்தான். எதிர்த்தலும், மார்க்கண்டேயமுனிவர் 'இயமன் வந்து அணுகினான்' என்று சிந்தித்து, அவன் செய்கையை நோக்கி, எம்பெருமானுடைய திருவடிகளைத் துதித்து வணங்கினார். அப்பொழுது இயமன் 'மைந்தனே, நீ யாது நினைந்தாய்! யாது செய்தாய்! முன்னையூழின் முறைமையையும் சிவபெருமானது திருவாக்கையும் கடக்கலாமா? ஊழ்வலியைச் சிறிதும் ஆராய்ந்திலை. உறுதி ஒன்றும் அறிந்திலைபோலும். இறப்புப் பிறப்பென்பன யாவரும் பெறுகுவர். அது பேசல்வேண்டுமோ! பெருந்தவத்தை உடையோர்க்கும் இயலாத இது இயலும் என்று துணிந்து இவ்வாறு இருத்தல் கற்றுணர்ந்த ஆடவருக்குத் தகுதியா! நீ சிவபெருமானுடைய திருவடிகளிலே மிக்க அன்புடையை என்பது சத்தியம். ஆயினும், நீ நாடோறும் செய்யும் சிவபூசை உன்பாவத்தைப் போக்குவதன்றி, நான் வீசும் பாசத்தை விலக்கவும் வல்லதா! கடலினுள்ள மணலை எண்ணினும், ஆகாயத்துள்ள நக்ஷத்திரத்தை எண்ணினும், என்னுணையால் இறந்த இந்திரர்களை எண்ணலாமா! இறந்தவர்களாகிய தேவர்களையும் அசுரர்களையும் சொல்லப் புகின், முடிவு பெறாது. அவ்வாறாக, மற்றையோரைச் சொல்லல்வேண்டுமோ! பிறப்பிறப்புக்கள் பிரமனுக்கும் உண்டு, விட்டுணுவுக்கும் உண்டு, எனக்கும் உண்டு. இங்ஙனமாயின், உனக்கும் உண்டென்பது உரைத்தல் வேண்டுமோ! நான் சிவபெருமானை முன்னே பூசைசெய்தமையால், அவர் எனக்கு அருளிச்செய்தவை இச்வரசியலும், நான் ஏந்திய பாசமும் சூலமும் மழுவும் தண்டும். தேவர்கள் காப்பினும், படைத்தல் காத்தல் அழித்தல்கள் செய்யும் மும்மூர்த்திகள் காப்பினும், மற்றை வலியோர் யாவர் காப்பினும் காக்க. நான் உன்னுயிரை இன்று கொண்டன்றி மீள்வேனோ! நீ துன்பங்கொள்ளாதே. சிவனை

டியாராயினும், முடிவு வந்தெய்தில், அவரைத் தென்புலத்திற் சேர்த்துவேன். இது திண்ணம். இனி நீ என்பின் வருவாயாக' என்றான்.

மார்க்கண்டேயமுனிவர் அதுகேட்டு, 'இயமனே, கேள். முடிவென்பது எம்பெருமானுடைய அடியார்களுக்கு இல்லை. உண்டாயினும், உன்னுலகத்துக்கு வாரார்கள், திருக்கைலாசமலைக்குப் போவார்கள். அவர்களுடைய தன்மையைச் சொல்வேன், கேள். அவர்கள் துறவிகளாயினும், இல்வாழ்க்கையர்களாயினும், முத்தியின்பத்தை அடைவார்கள். அவர்கள் பதி, பசு, பாசமென்னும் மூப்பொருள்களின் இலக்கணத்தையும் அறிந்தவர்கள். அவர்கள் பிறவித்துன்பத்தினின்றும் நீங்கினவர்கள். அவர்களுடைய திருவடிகளைச் சேர்தலே பரபதஞ்சேர்தல். அவர்கள் உன்னை மதியார்கள், தேவர்களை மதியார்கள், தேவேந்திரனை மதியார்கள், பிரமனை மதியார்கள், விட்டுணுவையும் மதியார்கள். சிவபெருமானுக்கும் அவருடைய திருவடியார்களுக்கும் வேற்றுமை கருதுதல் அறியாமையே என்று வேதங்களெல்லாம் சொல்லும் உண்மைப்பொருள் பொய்க்குமா, பொய்யாது. சிவனடியார்கள் செம்மையாகிய சிந்தையை உடையவர்கள், யாவரினும் சிறந்தவர்கள், பற்றற்றவர்கள், தம்மையும் துறந்து நின்றவர்கள், சீவன்முத்தராகி இம்மையினும் பேரின்பத்தை அனுபவிப்பவர்கள், இன்மையாவது யாண்டும் இல்லாதவர்கள், நன்மையென்பதே இயல்பாகப் பொருந்தினவர்கள். இவ்வியல்புடையவர்கள் சுவர்க்கமுதலிய புன்பொருள்களை விரும்புவார்களா, விரும்பார்கள். அவர்களுடைய தன்மையை யாவர் சொல்ல வல்லவர்! அவர்களுடைய வன்மையை நீ சிறிதும் அறிந்திலை. உலகத்தாரைப்போல அவர்களையும் நினைந்தாய். அவர்களை அடைந்த என்னுயிருக்கும் தீங்கு நினைந்தாய். இவையெல்லாம் உன்னுயிரும் இத்தலைமையும் ஒழிதற்குக் காரணமன்றோ! தீயசொற்களை என்செவி கேட்கச் சொல்கின்றாய். மேல் நிகழ்வதனை அறிகின்றிலை. மூடனே மூடனே, நீ இங்கே நிற்கப் பெறுவாயோ! போ போ' என்றார்.

மார்க்கண்டேயமுனிவர் இவ்வாறு கூறக் கேட்ட இயமன் அக்கினிசொலிக்கும் கண்ணையுடையனாய், 'என்னை நீ அச்சுறுத்துகின்றாய். வலியில்லாதவனே, நம்முயிரை இயமன் கைக்கொள்ளமாட்டான் என்று நினைந்தாய்போலும்' என்றான். இடியேறுபோல ஆர்த்தான். 'இவன் நேரே நின்றால் வாரான்' என்று நினைந்தான். நீலமலைபோல மார்க்கண்டேயர்முன் சென்றான். பாசத்தை வீசி ஈர்த்தான். அப்பொழுது மார்க்கண்டேயமுனிவர் எம்பெருமானைத் துதித்துக்கொண்டு, அவருடைய நித்தியானந்த வடிவாகிய திருவடிநீழலைப் பிரியாது நின்றார். 'இனி இம்மைந்தன் இறந்தானன்றோ' என்று தேவர்களும் மயங்கினார்கள். இயமனைப்பாசம் தங்கழுத்தின் உற்றும், இடர் சிறிதும் உறாத மார்க்கண்டேய முனிவர் முன்பு திரிபுராந்தகராகிய முதற்கடவுள் 'மைந்தனே, உனது துன்பத்தைத் தீர்க்கின்றோம். நீ அஞ்சாதே அஞ்சாதே' என்று திருவாய்மலர்ந்துகொண்டு தோன்றியருளினார். 'மதத்தினால் மிக்க இவ்வியமன் நம்மைந்தனுடைய உயிரைக் கொள்ள நினைந்தான்' என்று திருவுளங்கொண்டு, கோபித்து, தமது இடப்பாதத்தினாலே அவனைச் சிறிதுதைத்தார். உதைத்தவுடனே இயமன் பூமியில் வீழ்ந்திறந்தான். அவன் பக்கத்து நின்ற சேனைகளும் அவன் வாகனமாகிய எருமைக்கடாவும் ஏங்கி வீழ்ந்திறந்தன.

அந்தக்காலத்திலே 'எம்முயிரைக் காக்கச் சிவபெருமான் உண்டு. இயமன் வந்து யாது செய்வான்' என்று வடமொழியினாலே தோத்திரஞ் செய்துகொண்டு தனிநின்ற மார்க்கண்டேயமுனிவரைக் காலகாலராகிய எம்பெருமான் கண்டு, திருவுளமகிழ்ந்து, 'மைந்தனே, நீ நம்மை மெய்யன்போடு பூசைசெய்தமையால், நாம் உனக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம்' என்று திருவாய்மலர்ந்து, சிவலிங்கத்தின் மறைந்தருளினார். சிவபெருமானுக்கு மார்க்கண்டேயமுனிவரிடத்தும் இயமனிடத்தும் விருப்பும் வெறுப்பும் இல்லை. அறிஞர்கள், ஆராயுங்கால், எம்பெருமான் செய்தவை முறையேயாம் என்று துணிவர்கள். அங்கு நின்ற மார்க்கண்டேயமுனிவர் எம்பெருமானுடைய திருவுருவத்தை அன்பினோடு தியானித்துக்கொண்டு, மணிகன்னிகை என்னும் திருக்கோயிலினுள்ளே சென்று, எம்பெருமானை வணங்கிக்கொண்டு போய், தம்மைக்குறித்துக் கண்ணீர் பெருகப் புலம்பினையும் தந்தைதாயர்களைப் பணிந்து, அவர்களுடைய துயரமுழுதையும் மாற்றினார். அத்திருநகரத்திலே சிலநாள் இருந்து, பின்பு அங்குநின்று நீங்கி, சிவதலங்கள் யாவையும் பத்தியோடு வணங்கித் துதித்து, சீவன்முத்தராயினார். அவர் விண்ணுலகத்தினும் உளர், மண்ணுலகத்தினும் உளர், தம்மை விரும்பித் துதிப்போர்கள் கண்ணினும் உளர், கருத்தினும் உளர். அவர் செயல் நினைக்கற்பாலதுமன்று, சொல்லற்பாலதுமன்று, அவர் கண்ட பிரமகற்பங்களும் விட்டுணுகற்பங்களும் கணக்கில்லாதன.

மார்க்கண்டேயமுனிவருக்குத் துன்பஞ்செய்த இயமன் இறந்தமையால், பூமியின்கண் உள்ள உயிர்களெல்லாம் நெடுங்காலம் இறப்பின்றி வளர்ந்து பெருகின. ஆதலால், பூமிதேவி பாரம் பொறுக்கலாற்றாது, விட்டுணுவை வணங்கித் தன்றுன்பத்தை விண்ணப்பஞ்செய்தாள். விட்டுணுவும் பிரமதேவரும் இந்திரன் முதலிய தேவர்கள் யாவரோடும் திருக்கைலாசமலையை அடைந்து, சிவபெருமானை அன்போடு வணங்கித் துதித்தார்கள். துதித்தலும், கைலாசபதி விட்டுணுவை நோக்கி, 'நீங்கள் வந்ததென்னை' என்று திருவாய்மலர்ந்தருளினார். அதற்கு விட்டுணு 'எம்பெருமானே, இங்குள்ள பிரமன் முதலிய தேவர்களெல்லாரும் நீர் விதித்தவாறே தங்கள் தங்கள் அரசியலை இதுகாறும் வழுவாது நடாத்தினார்கள். எனக்கு நீர் விதித்தருளிய காவற்றொழிலை உமது திருவருளே துணையாக நாடோறும் வழுவாது செய்கின்றேன். இதற்கு ஒருகுறை எய்தியது. அதனை விண்ணப்பஞ்செய்வேன், கேட்டருளும். உமது திருவருளை நினையாமையினால், இயமன் இறந்துபோயினான். அதனாலே பூமியினுள்ள உயிர்கள் வளர்ந்து பெருகின. அவற்றைச் சுமக்கும் பூமிதேவி துன்புறுகின்றாள். அவள் துன்புற, உயிர்களெல்லாம் பிறந்து பிறந்து பின் இறவாமலே பெருகுமாயின், என்காவற்றொழில் என்படும்! என்படும்! அழித்தற்றொழிலுக்குத் தலைவர் ஒருவரும் இல்லை. நீர் கோபியாது இயமன் செய்த தீமையைப் பொறுத்து, அவனை உயிர்ப்பித்தருளும். இதனை மறுக்காதொழியும்' என்று திருவடிகளை வணங்கி வேண்டினார். அப்பொழுது சிவபெருமான் 'இயமனே, எழும்பக்கடவாய்' என்று திருவாய்மலர்ந்தருளினார். அருளலும், இயமன் உயிர்பெற்று வந்து, கைலாசபதியை வணங்கி, 'எம்பெருமானே, உம்முடைய திருவடி படுதலினால் அடியேன் உய்ந்தேன்' என்று விண்ணப்பஞ்செய்தான். சிவபெருமான் இயமனை நோக்கி, 'நம்முடைய சின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு நம்

ஸ்த் தியானிக்கும் அன்பர்களிடத்தே 'நான் இயமன்' என்று சொல்லி நீ போகாதே! நம்மடியார்களை மனிதர்களென்று எண்ணாது, நாமென்றே எண்ணக் கடவாய். அவர்களைக் கண்டால், அவர்கள் கால்களின் வீழ்ந்து வணங்கக்கட வாய். மனமொழிமெய்களாலே புண்ணியபாவங்களைச் செய்யும் மற்றையோர்க ளைச் சுவர்க்கநரகத்தில் இருத்தக்கடவாய்' என்று திருவாய்மலர்ந்து, 'உன்படை யோடு போவாயாக' என்று பணித்தருளினார். இயமன் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு, முன் இறந்த எருமைக்கடாவோடும் சேனைக ளோடும் தென்புலத்தை அடைந்து, தன்னரசியலை நடாத்துவானாயினான். விட் டுணு முதலிய தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானை மும்முறை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருக்கைலாசமலையை நீங்கித் தங்கள் தங்கள் பதங்களை அடைந்தார்கள். இயமன் 'முன்போல் இன்னமும் யாது விளையுமோ' என்று மார்க்கண்டேயமுனிவருடைய சரித்திரத்தை ஓதுவோர் முன்னும் செல்லு தற்கு அஞ்சுவன்.

தவவலியினாலே, குச்சகமுனிவர் ஒரு பெண்ணுக்கு உயிர்கொடுத்தார், ஒரு யானையைத் தேவனாக்கிச் சுவர்க்கபதத்திருத்தினார், அவர் புதல்வராகிய மிருக கண்டூயமுனிவர் பிரம விட்டுணு முதலியோர் புகழும் முதன்மையைப் பெற்றார், அவர் புதல்வராகிய மிருகண்டுமுனிவர் ஒப்பில்லாத ஒரு சற்புத்திரரைப் பெற் றார், அவர் புதல்வராகிய மார்க்கண்டேயமுனிவர் விதியைக் கடந்து இயமனது வலியை அகற்றி, ஒருகாலும் இறப்பில்லாதவராயினார், இது சத்தியமென்றறியக் கடவீர்கள். இன்னும் தவத்தின் பெருமையைச் சொல்வேன்" என்று காசிப முனிவர் சொன்னார்.

திருச்சிற்றம்பலம்.

மாயையுபதேசப்படலம்.

காசிபமுனிவர் இவ்வாறு சொல்லலும், மாயை நகைத்துக் காசிபமுனி வரை நோக்கி, "முனிவரரே, நீர் உண்மையாகிய உறுதியையே சொன்னீர். ஆயி னும், முத்திவிருப்புடைய முனிவர்களுக்கன்றி நாம் பெற்ற சிறுவர்களுக்கு இவ்வாறு சொல்லலாமா! இவர்கள் பெருஞ்செல்வத்தையும், வெற்றியையும், இன்பத்தையும், அழிவில்லாத ஆயுளையும், பெரும்புகழையும், குற்றமற்ற வாழ்க் கையையும் அடைதல்வேண்டும். அவையெல்லாம் விரைவின் அடைதற்பொரு ட்டு இவர்களுக்கு உபாயம் சொல்லும்" என்றாள். அது கேட்ட காசிபமுனிவர் "இதுவா உனதெண்ணம்! நீயே அதனை இவர்களுக்குச் சொல்லக்கடவாய்" என் றார். மாயை தன்புதல்வர்களை நோக்கி, "இம்முனிவரர் சொல்லியது, உண் மையேயாயினும், உங்களுக்கு ஆவதன்று. நான் சொல்வேன், கேளுங்கள்" என்று சொல்லலுற்றாள்:—

"அறிவினையுடைய உயிர்களுக்கெல்லாம் பிறவியால் ஆகும் பயன் கல்விப் பொருள் செல்வப்பொருள் என இரண்டாம். உயிரானது இவ்விரண்டனுள் ஒன்றை அடையாதாயின், அவ்வுயிரினும் பேய்ப்பிறப்பே மிகப் பெருமையுடை

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

யது. இவ்விருபொருளின் வன்மையையும் அறிஞர்கள் ஆராய்வாராயின், கல்விப் பொருளினும் செல்வப்பொருளே சிறந்ததெனத் துணிவர். கலைகளெல்லாவற்றை யும் நெடுங்காலம் விடாது கற்றவராயினும், வறியராயின், செல்வத்தை வேண்டித் தம்பகைவரையும் பணிந்து நிற்பர். அளப்பில்லாத கல்வியையும் பலவகை வளங் களையுங் கொள்ளுதற்கும், அவற்றைக் குறையாது வளர்த்தற்கும், அணிசெய்தற் கும், கருவியாதலால், செல்வப்பொருளே மேலாயது. கல்வியறிவின் மிகச்சிறந்த வரும் செல்வமுடையரல்லாக்கால், உலகம் அவரைக் குற்றத்துட்படுத்தும். கல் வியையன்றி மேன்மையையும், தருமத்தையும், புகழையும், வெற்றியையும், பிறவற்றையும் ஆக்கலால், செல்வத்திற் சிறந்தது பிறிதொன்றுமில்லை. ஒருவர் செல்வத்தைப் பெற விரும்புவராயின், ஊக்கம் உடையராகுக. அஃதுடைய ராகச் செல்வம் உண்டாகும். அவ்வூக்கத்திலே இடையறாது நிலைபெறுவராயின், பெருஞ்செல்வம் விரைந்தெய்தும். அச்செல்வம் பலவகைப்படும். அவையனைத் தையும் ஒருவரும் பெற்றிலர். நீங்கள் அவையனைத்தையும் பெற முயலுங்கள். இதுவன்றி உங்களுக்கு உறுதி பிறிதில்லை. நீங்கள் எங்களிடத்து நேற்றிரவு பிறந்தமையால், நிருதகதியினராயினீர்கள். உங்களுக்குப் பகைவர்கள் தேவர்கள் யாவரும். அவர்கள் தங்கள் முயற்சியினாற்றானே தலைமை பெற்றவர்கள். நீங்கள் அவர்களினும் தலைமை பெறுவீர்கள்போலும். ஆக்கம் அடையும்பொருட்டு நீங் கள் மூவிரும் முயலுங்கள். முயலுமுறைமையை நான் எடுத்துச் சொல்வேன். இத்திசை ஆலந்தீவெனப் பெயர்பெறும். இவ்விடத்துக்கு நேரே போன உத்தர பூமி அசுரர்கள் தவஞ்செய்தற்கு ஏற்றது. நீங்கள் இப்பரிசனங்களோடு அப்பூமி யிற் சென்று, வேள்வியின்பொருட்டுக் குண்ட முதலியன செய்து, நச்சுச்சமித் திட்டு, அக்கினி சொலிப்பித்து ஓமத்திரவியங்களையும், இரத்தங்களையும், மாமி சங்களையும், பிறவற்றையும் தூவி, தேவதேவராகிய சிவபெருமானைத் துதி த்து, வேள்வியைப் பற்பகல் செய்யுங்கள். செய்வீர்களாயின், எம்பெருமான் அரு ளோடு வெளிப்பட்டு, நீங்கள் விரும்பிய அனைத்தையும் தந்தருளுவர். நீங்கள் மூவிரும் இவ்வேள்வியை முயறற்பொருட்டு அங்குச் சென்றவுடனே, அதற்கு அவ்விடத்து வேண்டும் பொருள்களனைத்தையும் வேறுவேறாக நான் தருவேன். போங்கள்" என்று சொல்லி, அவ்வேள்வி செய்யும் விதியையும், அதற்கு வேண் டும் மந்திரங்களையும், சூரன் முதலிய மூவருக்கும் உபதேசித்தாள். அப் பொழுது சூரன் தன்றம்பியர்களோடும் தாய்தந்தையர்களை வணங்கி விடைபெற் றுக்கொண்டு, புறப்பட்டான்.

திருச்சிற்றம்பலம்.

மாயைநீங்குபடலம்.

சூரன் முதலிய புதல்வர்கள் சென்றபொழுது, மாயை தன்பக்கத்திருந்த காசிபமுனிவரை நோக்கி, "இனி நான் புதல்வர்களைப் பேணும்பொருட்டுப் போகின்றேன். நீர் கவலாதிரும்" என்று நிறுவிப் போயினாள். போதலும், காசிப முனிவர் அவண்மேல் வைத்த ஆசை செலுத்த அவள் பின்னே போய், நீ

னின்னை விட்டுப்போதல் நீதியோ" என்றார். அதுகேட்ட மாயை "முனிவரரே, வருந்தாதொழியும். நான் இங்கு வந்தது புத்திரர்பொருட்டன்றி, உம்மோடிருத்தற்பொருட்டன்று. நான் மாயை, அறிந்துகொள்ளும்" என்று மறைந்து போயினாள். உடனே அற்புதத்தின் அங்கு வந்த பொருள்களெல்லாம் மறைந்து போயின. காசிபமுனிவர் மாயையைக் காணாமையால், கவலைகொண்டு மதிமயங்கிப் பொருமி ஏங்கிநின்றார்.

பிரமதேவர் தம்புதல்வராகிய காசிபமுனிவருடைய துயரத்தை அறிந்து, அங்கு வந்தார். வருதலும், காசிபமுனிவர் பிரமதேவரை வணங்கினார். பிரமதேவர் ஆசிகள்கூறி, "காசிபனே, நீ உன்னருந்தவத்தை விடுத்து மெலிவதென்னை? சொல்" என்றார். காசிபமுனிவர் நிகழ்ந்தனவெல்லாம் விண்ணப்பஞ்செய்தார். பிரமதேவர் அது கேட்டு மனங்கூசி, தம்புதல்வரை நோக்கி, "வேதமுதலிய கலைகளை ஓதியுணர்ந்த முனிவனே, அறிவில்லாதார்போல நீ ஒரு பெண்பொருட்டு மையல்கொண்டு வருந்துகின்றாயோ! கள்ளெனவும் காமமெனவும் தீப்பொருள் இரண்டுண்டு. அவற்றுள், கள்ளு உண்டவழி அறிவைக் கெடுக்கும்; காமம் நினைந்தவழி உயிரையுங்கொல்லும். காமாக்கினி நினைப்பினும் சுடும், கேட்பினும் சுடும், அணைந்து தள்ளினும் சுடும். ஆதலால் அது கள்ளினுங் கொடியது. பிறப்புக்களையும் வினைகளையும் விளைப்பது காமமேயாதலால், மெய்யுணர்வினாலே அக்காமநோயை ஒழித்தவரன்றோ முத்தியின்பத்தை அடைந்தவர். அறிஞர்கள் காமத்தை நெஞ்சினும் நினைப்பர்களா! நினைந்தவர்களை இம்மையிலே துன்பத்தழுத்தி, மேலே பெரும்பவக்கடலின் வீழ்த்தும். அதனால் காமம் நஞ்சினுந்தீயது. ஆதலால், காமமுற்று வருந்தாதே. நீ புணர்ந்த பெண்ணும் வஞ்சகத்தையுடைய மாயை. நீ தீமைசெய்தாய். அது தீரும்பொருட்டு முன்போலத் தவஞ்செய்யக்கடவாய்" என்று அவருள்ளத்தைத் தேற்றி, அவரை அங்கு நிறுவிப் போயினார். காசிபமுனிவர் தமது தந்தையாருடைய வாய்மையினாலே தேறி, மையனோய் நீங்கி, வினையினின்று நீங்கும்பொருட்டுச் சிவபெருமானைச் சிந்தித்துத் தவஞ்செய்வாராயினர். அங்கு நின்று நீங்கிய மாயை தன் புதல்வர்கள் யாகஞ்செய்யும்பொழுது வேண்டியவற்றைக் கொடுக்கும்பொருட்டுச் சுக்கிரனுடைய ஏவலினாலே சிவபெருமானைத் துதித்துப் பெருந்தவஞ்செய்தாள்.

திருச்சிற்றம்பலம்.

அசுரர்யாகப்படலம்.

தன்மாதாவாகிய மாயையினுடைய ஏவலினாலே யாகஞ்செய்யக் கருதிப் புறப்பட்ட சூரன் தன்றம்பியர்களை நோக்கி, "நாம் யாகஞ்செய்யும்பொருட்டு வடதிசைக்குச் செல்லும்பொழுது, நீங்களிருவிரும் நமது சேனையின் கடையினும் தலையினும் காவலாய்ச் செல்லுங்கள்" என்று பணித்தான். பணித்தலும், சூரனை வணங்கி, தாரகாசுரன் "அடியேன் சேனைக்கடையிலே செல்வேன்" என்றான்; சிங்கமுகாசுரன் "அடியேன் சேனைத்தலையிலே செல்வேன்" என்

றான். தம்பியிருவரும் இவ்வாறுகூறித் தமையனிடத்து விடைபெற்றுக்கொண்டு, தாங்கூறியவாறே போயினார்கள். அவர்கள் பணியினாலே சேனைவெள்ளம் பதினாயிரம் யோசனை யெல்லை ஆகாயத்தினும் பூமியினும் கலந்து, வடதிசை நோக்கி ஆர்த்துச் சென்றது. செல்லலும், பூமிதேவி ஆற்றாது வருந்தினள், ஆதிசேடன் நாகர்களோடும் அயர்ந்தனன், திக்கியானைகளும் குலமலைகளும் மேருமலையும் சலித்தன, ஆதிகூர்மமும் வருந்தியது, இந்திரன் முதலிய திக்குப்பாலகர்கள், எண்மரும் அஞ்சி நடுநடுங்கினார்கள். அசுரசேனைவெள்ளத்தின் முன்னணியிலே சிங்கமுகாசுரனும், பின்னணியிலே தாரகாசுரனும் செல்ல, நடுவே சூரன் சென்றான்.

அப்பொழுது அசுரகுருவாகிய சுக்கிரன் அவர்களைக் காண நினைந்து, விமானமேற்கொண்டு வந்தணுகி, அவர்களுடைய விரைவையும், வலியையும், ஊக்கத்தையும் கண்டு, நடுங்கினார். நடுங்கி, "இவ்வசுரர்களுடைய கடுந்திறலைக் கண்டேன். முன்னே அசுரர்கள் அளப்பில்லாதவர்களைப் பார்த்தேன். இது சிவபெருமானுடைய திருவருளின் வண்ணமோ! இவர்களுக்கு நிகராவார் ஒருவர் உண்டோ! தங்களை எதிர்ந்த பகைவர்களுடைய ஊனையும் உயிரையும் ஒருங்குண்ணும் இவ்வசுரர்களுக்கு இந்திரனோடும் விட்டுணுவோடும் ஏனையரோடும் பொருது வெல்லல் ஒருபொருளாமோ! இவர்களுடைய வன்மைக்கு இறுதி இல்லையாயினும், முன்னோர்களைப்போலத் தவவலியும் வரமும் படைக்கலங்களும் பெற்றிலர்கள். ஐயோ இவர்களுக்கும் குறையுளதாயிற்றே! இயமனைக் கடந்த தனியாற்றல் கொண்டுற்ற சிவபெருமானொருவருக்கே குறை கண்டிலம். மற்றைத் தேவருக்கும் யாவருக்கும் ஒவ்வோர்குறை உண்டு. அது யாவரும் அறிகுவர். இவ்வசுரர்களிடத்துள்ள குறை, சிலநாட்டவஞ்செய்வாராயின், ஒழிந்துவிடும். இது திண்ணம். தவத்தால் இழிந்தோரும் உயருவர். விசுவாமித்திரரே இதற்குச் சான்று" என்று இவ்வாறு பலவுங்கூறி நின்று, தாம் சூரபன்மன் முன் செல்லவும் முகமன்கூறவும் நினைந்தார். நினைந்து, சூரபன்மன் முன் செல்லலருமையை நோக்கி உயிர்களை வசிகரிக்கும் ஒருமந்திரத்தை விதிமுறையே சிந்தித்துக்கொண்டு, எதிர் சென்று, சேனைக்கடலினடுவே புகுந்தார். அவருடைய மாயமாகிய அக்கினியினாலே அசுரர்கள் தங்கள் வன்னெஞ்சமாகிய இரும்பு உருகப்பெற்று, அவரைக் கைதொழுதார்கள். சுக்கிரன் சூரன்முன் போய், "சூரபன்மனே, நீ இந்திரன் முதலியோர் யாவருக்கும் மேலாகக்கடவாய். அசுரர்களுடைய துயரநோய்க்கு ஏலாதிகடுகமென்னும் மருந்துபோலாகக்கடவாய்" என்று ஆசிசொன்னார். அது கேட்ட சூரன் "ஐயரே, நீர் இந்திரலோகத்துள்ளீரோ? அதனின்மேலாய உலகங்களினுள்ளீரோ? பூலோகத்துள்ளீரோ? நாகலோகத்துள்ளீரோ? நீர் யார்? இங்கு வந்ததென்னை? உம்மிடத்தே என்மனம் உருகுகின்றது. அஃதன்றி என்புகளும் உருருகின்றன. என்னை அறியாது அன்பு உதிக்கின்றது. அருந்தவஞ்செய்யும்பொருட்டு வனத்துக்குப் போதற்குக் கால்களும் எழுகின்றில. நீர் நன்னேயத்தோடு வந்தீர். உயிர்களெல்லாவற்றையும் அன்னைபோலக் காத்தருளும் இயல்புடையீர்போலும். இவ்வியல்புடைய உம்மை இப்பொழுது நான் எதிர்ந்தது, முற்பிறப்பிலே வருந்திச் செய்த தவவலியானன்றோ" என்றான். சுக்கிரன் அது கேட்டு, "நான் ஆகாயநெறியிற்செல்வேன். உன்குலத்துக்கெல்லாங் குருவானேன். என்பெயர் சுக்கிரன். நான் உனக்கு ஒருறுதி

சொல்லும்பொருட்டு வந்தேன்" என்றார். சூரன் அது கேட்டு, மிக்க உவகையை யுடையனாகி, "சுவாமீ, நான் உய்ந்தேன்" என்று சொல்லி, சுக்கிரனை அணுகி நின்று, கைதொழுது துதித்தான். துதித்தலும், சுக்கிரன் சூரனை நோக்கி, "அரசனே, நீ தவஞ்செய்யும்பொழுது பகைவர்கள் ஊறு செய்வார்கள். அது உன்னை அணுகாவண்ணம் ஒருபாயம் சொல்வோம்" என்று சொல்லி, சிவபெருமானுடைய மந்திரமொன்றை அவனுக்கு விதிப்படி உபதேசித்தார். உபதேசித்து, "நீ நாடோறும் இம்மந்திரத்தைச செபித்துக்கொண்டு, கொலை களவு காமம் பொய் முதலிய தீமைகள் சாராவண்ணம் ஐம்பொறிகளை அடக்கித் தவத்தைச் செய்யக்கடவாய்" என்று செவியறிவுறுத்தார். அப்பொழுது சூரன் சுக்கிரனுடைய பாதங்களை வணங்கி, "சுவாமீ, அடியேன் இப்பணியைச் செய்வேன்" என்றான். சுக்கிரன் அளப்பில்லாத ஆசிகளைக் கூறி, மீண்டு போயினார்.

சூரபன்மன் அசுரர்கள் சூழ வடபுலத்தில் விரைந்து சென்று, அங்குள்ள ஆலவனத்தில் ஒருபக்கத்தை அடைந்தான். அங்கே யாகஞ்செய்தற் பொருட்டுப் பதினாயிரம் யோசனைப் பரப்பை உள்வைத்து, அதனைச் சூழ அசுரர்களைக் கொண்டு மலைகளினாலே மதில்செய்வித்து, அதனைச் சூழ அளப்பில்லாத சேனைகளை அரணமாக நிறுவி, நான்குதிக்கினும் வாயில் செய்வித்தான். அவ்வாயில்கடோறும் காவல்செய்யும்பொருட்டு வீரமடந்தையை மந்திரத்தினாற் கூவி நிறுவினான். மதிலைச் சுற்றிக் காவல்செய்தற்பொருட்டுப் பூதங்களையும் பிசாசுகளையும் காளிகளையும் மந்திரத்தாற் கூவி நிறுவினான். பின் வைரவர்குழாத்தை மந்திரத்தாற் கூவி வணங்கி, யாகத்தைக் காக்கும்பொருட்டு வைத்தான். மதிலினுள்ளே நடுவே ஆயிரம்யோசனை அகலமும் ஆயிரம்யோசனை ஆழமுமுடைய ஓரோமகுண்டமும், அதனைச்சூழ நூற்றெட்டு ஓமகுண்டமும், அவற்றைச் சூழ ஆயிரத்தெட்டு ஓமகுண்டமும் செய்வித்தான். இவ்வாறு செய்வித்தபின்பு, யாகத்துக்கு உரிய உபகரணங்களை வேண்டி மாயையை நினைந்தான். நினைதலும், சிவபிரானது திருவருளினாலே மாயையானவள் சிங்கம் புலி யாளி கரடி யானை குதிரை ஆட்டுக்கடா முதலிய மிருகங்களின் மாமிசம், இரத்தம், எண்ணெய், நெய், பால், தயிர், மது, கடுகு மிளகு முதலிய வெய்ய திரவியங்கள், நெய்யன்னம், யாகப்பசுக்கள், செந்நெலரிசி, அரிசனங்கலந்த அரிசி, மலர், கஸ்தூரி முதலிய சுகந்தம், சுருக்குச்சுருவம், தருப்பை, நெற்பொரி, முதிரைவர்க்கம், நச்சுச்சமித்து, கொள்கலங்கள் முதலியவற்றையும், ஒருவச்சிரகம்பத்தையும் வருவித்து, மூவாயிரம் யோசனைப்பரப்பை அவற்றால் நிறைதது, மீண்டனள்.

அது கண்ட சூரபன்மன் யாகஞ்செய்யத் தொடங்கி, நடுவோமத்தின்மத்தியிலே வச்சிரகம்பத்தை நிறுவினான். மதிலின் நாற்றிசைவாயிறோறும் போய், வீரமடந்தையைச் சிந்தித்துப் பூசித்து, மாமிசபலி கொடுத்தான். மதினடுவினுள்ள பூதங்களுக்கும் பிசாசுகளுக்கும் பலிகொடுத்தான். ஆயிரத்தெட்டுக் குண்டங்கடோறும் நச்சுவிறகிட்டு அக்கினி மூட்டி, தன்றம்பியர்களோடும் சிவபிரானது திருநாமத்தை உச்சரித்து, அவி கொடுத்தான். பின்பு தாரகனை நோக்கி, "நீ சிறிதும் தாழ்க்காது இவ்வோமதிதோறும் சென்று சென்று, வேள்வியை உலவாது செய்யக்கடவாய்" என்று பணித்து, அவனை நிறுவி, அப்பாற்சென்றான். சென்று, நூற்றெட்டு வேதிகளை அடைநது, முன்னையவற்றிற்போல அவற்றி

னும் வேள்வி செய்து, சிங்கமுகனை நோக்கி, "நீ இங்கு நின்று இவ்வேள்வியைச் செய்யக்கடவாய்" என்று பணித்து, அவனை நிறுவி, அப்பாற் சென்றான். சென்று, நடுவேதியை அடைந்து, சிவபெருமானைத் தியானித்து, விதிப்படி பூசித்து, தன்யாகத்தைச் செய்வானாயினான். நச்சுவிறகு துண்டங்களை ஓமகுண்டத்துள் இட்டு, நச்சுமரத்தினாகிய தீக்கடைகோலால் ஆக்கிய அக்கினியை இட்டுச் சொலிப்பித்து, அவ்வக்கினியிலே நெய்யை மந்திரத்தோடு சொரிந்தான். அதன் பின் மாமிசத்துண்டங்களையும் உதிரத்தையும் இட்டான். அன்னத்தை இட்டான். நெய்யையும், எண்ணெயையும், இரத்தத்தையும், பாலையும், தயிரையும் விடுத்தான். நெற்பொரியை இட்டான். ஈற்றிலே தேனையும் கள்ளையும் சிந்தினான். தோரைநெல், மலைநெல், குளநெல், தினை, இறுங்கு, எள், முதிரைவர்க்கம் முதலியவற்றை உய்த்தான். நெய்யைச் சிந்தினான். கடுகு மிளகு முதலிய வெய்ய பொருள்கள் பலவற்றையும் இட்டான். நெய்யைச் சொரிந்தான். இவ்வாறே சிவபிரானைச் சிந்தித்துக்கொண்டு சூரபன்மன் வீரயாகஞ்செய்தலும், ஓமாக்கினி மிகச்சொலித்தெழுந்து, திசைகளையும் மேலுலகங்களையும் சுட்டது.

சூரபன்மன் வீரயாகஞ்செய்தலைப் பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் கேள்வியுற்று, அஞ்சி நடுநடுங்கிப் பெருந்துயர்க்கடலின் அமிழ்ந்தினார்கள். இவ்வாறே சூரன் தன்னிளைஞர்களோடும் பதினாயிரம் வருடம் யாகஞ்செய்தான். செய்தும், சிவபெருமான் எழுந்தருளிவந்திலர். அதனாலே சூரன் "எம்பெருமான் இச்செயலுக்கு எழுந்தருளிவருவரோ" என்று சொல்லி, அத்தொழிலைத் தன்றம்பியர்களிடத்தே பணித்து, தான் ஆகாயத்திற் சென்று, அங்கு நின்றுகொண்டு, வாளினாலே தன்சரீரத்துள்ள தசைகளனைத்தையும் அரிந்தரிந்து, ஓமாக்கினியிலே சிந்தி, இரத்தத்தை நெய்போலச் சொரிந்தான். தன்சரீரத்துள்ள தசைகள், அரியவரிய, முன்போல வளர்ந்தன. வளர்தலும், அது கண்டு விம்மிதங்கொண்டு, யாவரும் அஞ்சும்படி உரப்பிப் பெருமகிழ்ச்சியுடையனாய், "இச்செயல் எம்பெருமான் அன்புசெய்யுந் தன்மையதோ" என்றெண்ணிப் பின்னும் ஆயிரம் வருஷம் ஆகாயத்தில் நின்று தன்சரீரத்தினுள்ள தசைகளையரிந்து ஓமாக்கினியிற் சிந்தி யாகஞ்செய்தான். செய்தும், சிவபெருமான் எழுந்தருளி வந்திலர். சூரபன்மன் அதனால் மனம் வருந்தி "இனி நான் மாண்டுபோவதே தகுதி" என்று உறுதிசெய்து, அக்கினியினாலே சூழப்பட்டதாய் அதனால் எரியாமல் ஆதிகுண்டத்திற் பொருந்திய வச்சிரகம்பத்தின்மேலே குதித்து, விரைந்து அதனுச்சியினின்றும் உருவி அடியிற் சென்று, எரிந்து சாம்பராயினான்.

இதனைக்கண்ட சிங்கமுகன் மனம் பதைத்து, இரத்தக்கண்ணீர் விட்டழுது, வேள்வித்தொழிலை மறந்து, தன்னுயிர் உண்டோ வில்லையோவென்று சொல்லும்படி யொடுங்கத் துயர்க்கடலுளாழ்ந்து, அறிவழிந்து மலைபோல விழுந்து, பின் ஒருவாறு அறிவுண்டாகப் பெற்றுப் பதைபதைத்துச் சுழன்று பெருமூச்செறிந்து, வாய்திறந்து புலம்புவானாயினான்: "மாயையினுடைய புத்திரனே, காசிபமுனிவருடைய அன்புள்ள குமாரனே, அசுரகுலத்துக்கிறைவனே, யான் உன்னை உடம்போடு காணேன்! எங்கே யொளித்தாய்! தீயயாகத்தைப் பலநாட் செய்து பெற்ற பேறிதுவோ! தாயும் நீ; தந்தையும் நீ; அசுரர்களைக் காப்பாற்

னும் அரசனும் நீ; எங்கள் உயிரும் நீ; என்று எண்ணியிருந்தோம். நீ அதனை நினையாதிறந்தாயே! மாய்கின்ற சிறியோர்க்கு இங்கே யாதாயினும் பற்றுண்டோ! வீரனே, அசுரர்களுக்குள் மேலானவனே, மிக்க புகழையுடைய சூரனே, உன்னைப்போல இந்த வேள்வியை அநேகநாட் செய்தவர் யாவர்! அன்பில்லாமல் எங்களை அகன்று போயினையே! முப்புரங்களையும் எரித்த வன்கண்ணராகிய பரமசிவன் உன்னிடத்து அன்பில்லாமையை யறியாது அவரைக் குறித்தோ யாகஞ் செய்தாய்! அவர் அதற்காகவோ உன்னுயிரையும் கவர்ந்தார்! உன்னைப்போல உயிரைவிட்டு உயர்வாகிய யாகத்தைச் செய்தவரும், பரமசிவனைப் போல அதற்கு அருள்செய்யாத பெரியோரும், இவைகளைக் கண்டு என்னைப் போல உயிரோடிருந்தவர்களும் இல்லை! இம்மூவருள் வன்கண்ணர் ஆர் ஐயா! 'இவர்கள் யாகத்தைச் செய்து சிவபெருமானுடைய திருவருளினால் வலிமையைப் பெற்று நமது உயிரையும் செல்வங்களையும் நீக்குவார்கள்' என்று நமக்குப் பயந்திருந்த இந்திரனும் மனக்கவலை தீர்ந்தது இன்றைக்குத் தானோ! எல்லாரும் போற்றும்படி யாகத்தைச் செய்து பல்லாயிரநாட் பழகி நமக்கும் இதனைச் சொல்லாமலிறந்தாய், இவர் துணைவராய் நம்மோடு கூட வரமாட்டாரென்றெண்ணினையோ! எல்லாருங் காண வச்சிரகம்பத்தில் விழுந்துருவி அக்கினியில் எரிந்திறந்தாய். மிக்க வன்கண்மைபூண்டாய். உன்னுடம்பைபுமொளித்தாய். புலம்பும் யாங்கள் இறந்தாயினும் உன்முகத்தைக் காண்போமோ" என்று இவை போல்வனவற்றைச் சொல்லித் தாய்ப்பசுவைக் காணாத கன்றைப்போலச் சிங்கமுகன் வீழ்ந்தழுதான். அதனைக் கண்ட தாரகனும் கைகளையுதறி அரற்றி வீழ்ந்து, பெருமூச்சுவிட்டு வேள்விக்களமுற்றும் புரண்டு, துதிக்கையால் நிலத்தைப் புடைத்துத், துயர்க்கடலுளாழ்ந்து புலம்பினான். இப்படிச் சிங்கமுகாசுரனுந் தாரகாசுரனுந் தங்கள் தமையன் இறந்ததுகண்டு புலம்ப, அதுகண்ட அவுணர்களும் கடல்போலப் புலம்பினார்கள்.

இப்படி இவர்கள் எல்லாரும் புலம்பு மொலியை இந்திரன் கேட்டு, சூரபன்மன் யாகாக்கினியில் வீழ்ந்திறந்தமையை ஒற்றுவராலறிந்து, துன்பமெல்லாம் நீங்கி மிகுந்த மகிழ்ச்சியையுடையனாய், தேவர்கள் சூழ ஐராவதயானையில் ஏறி அவுணர்களுடைய துன்பத்தைக் காணும்படி ஆகாயத்தில் வந்து, நகைத்து, தன்னுடைய தவத்தை எண்ணி, இரங்குகின்ற அசுரர்களைக் கண்ணாரக்கண்டு களிப்புற்று நின்றான். அவுணர்களோடு மிகுந்த துயர்க்கடலுள் ஆழுகின்ற சிங்கமுகன் "என்னுயிர்போன்ற தமையன் இறக்க நான் உயிரோடிருக்கலாமா" என்று எண்ணி எழுந்து தன் ஆயிரந் தலைகளையும் வாளினால் அறுத்து, வீரம்பேசி, தன்றமையனுடைய ஆதிகுண்டத் தக்கினியில் இட்டான். இட இட அவை முன்போல வளர்தலும், பின்னும் அத்தொழிலைச் செய்துகொண்டு நின்றான். அதனைக்கண்ட தாரகன் தன் தலையையும் அறுத்து அவ்வக்கினியில் இட இட அதுவும் முன்போல வளர்ந்தது. இவ்விருவருடைய செயலைக்கண்ட அவுணர்களிற் சிலர் தங்கள் சிரங்களையும் அறுத்து அவ்வக்கினியில் இட்டார்கள்; சிலர் அவ்வக்கினியில் வீழ்ந்து இறந்தார்கள். சிங்கமுகனும் அக்கினியில் வீழத்துணிந்து, ஆகாயத்தில் எழுந்துபோம்படி எண்ணினான்.

திருச்சிற்றம்பலம்.

வரம்பெறுபடலம்.

சிவபெருமான் அதனையறிந்து, ஒரு விருத்தப்பிராமண வேடங்கொண்டு தண்டைக் கையிலூன்றிக் கொண்டு வேதிகைக் கணித்தாகப்போய்ச், சிங்கமுகனைப் பார்த்து, "இங்கே நீங்கள் எல்லீரும் இரங்குகின்றீர்கள்; உங்கள் வரலாற்றைச் சொல்லுங்கள்" என்றார். சிங்கமுகன் "பிதாவையொத்த இவர் எங்கள் துயரைக் கண்டு வந்து வினவுகின்றார். இவர் அருள் சேர்ந்த மனத்தையுடையவர்" என்று எண்ணி, அக்கடவுளுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி யெழுந்து, "எங்களுடைய வரலாற்றையும் எங்களுடைய துன்பத்தின் வரலாற்றையும் சொல்லுவேன்" என்று சொல்லுகின்றான்:—

எங்கள் தந்தை காசிபமுனிவர். தாய் மாயை என்பவள். அவர்களுக்கு நாங்கள் மூன்றுபுத்திரர்கள். எங்களோடு பிறந்த புத்திரர்கள் இன்னும் பலர் உளர். நாங்கள் மூவரும் எங்கள் தாயினுடைய ஏவலினாலே சிவபெருமானை நோக்கி இந்தவனத்திலே தவத்தைச் செய்தோம். பலவாண்டு தவஞ் செய்தும் சிவபெருமான் அருள் செய்திலர். எங்கள் தமையனாகிய சூரபன்மன் ஆகாயத்திற் போய் வாட்படையினாலே தன்னுடம்பினுள்ள தசையை அறுத்து யாகாக்கினியிலிட்டான். இட இட அத்தசை பின்னும் முன்போல் வளருதலும், வச்சிரகம்பத்தினது தலையில் வீழ்ந்து உருவி அக்கினியிற் புகுந்து நீறாயினான். அதனை யாங்கள் கண்டு மிகத் துன்புற்று வெருவிப் புலம்பி, எமதுயிரையும் ஒருங்குவிட நினைந்தோம். உம்மைக்கண்டு ஓரிறைப் பொழுது தாழ்த்தேம். "இதுவே எங்கள் வரலாறும் துன்பத்தின் வரலாறும்" என்று சிங்கமுகன் கூறினான். பிராமணவடிவங்கொண்ட சிவபெருமான் அதனைக்கேட்டு, "நீவிரும் நுந்தமையனைப் போல இறவாவண்ணம் யாகாக்கினியினின்றும் இப்பொழுதே அவனை எழுவித்தருள் செய்கின்றோம். மிகுந்த சோகத்தை விடுதிர்" என்று அருளிச்செய்து, தேவ கங்கையை வரும்படி திருவுளஞ் செய்தார். அக்கங்கை மிகவிரைந்துவந்து எம்பிரானுடைய திருவடிகளை வணங்கி, அவருடைய பணியினால் நடுக்குண்டத்தினிடையே புகுதலும், சூரபன்மன் ஆர்த்தெழுந்தான். எழுதலும், சிங்கனும் தாரகனும் தரித்திரர் பெருஞ் செல்வம் பெற்றாற்போல மகிழ்ந்து, எல்லையில்லாத வலிமையைப் பொருந்தி, விரைந்தோடிச் சென்று சூரபன்மனுடைய கால்களை வணங்கினர். அவுணர்கள் "நம்மரசன் வந்தான் வந்தான்" என்று கூறி, பூரண சந்திரனுடைய வரவைக் கண்ட சமுத்திரம்போல "வாழிய" வென்று துதித்து ஆர்த்தார்கள். இவைகளைப் பார்த்த தேவர்கள் மேகத்தின் வரவைக்கண்ட குயில்போல அஞ்சித் துன்பத்தோடு ஓடித் தம்மூரை அடைந்தார்கள்.

தம்பியர்கள் இருவரும் இருமருங்கும் நிற்ப அசுரர்கள் வாழ்த்தச் சூரபன்மன் நிற்கும்போது, சிவபெருமான் பிராமண வேடத்தை மறைத்து, உமாதேவி பாகமும் முக்கண்ணும் நாற்றோளும் உடையராய் இடபவாகனத்தின் மேற்கொண்டு, தாமாந்தன்மையை அறிதற்குரிய திருவுருவத்தோடு தோன்றி

னார். சூரபன்மன் துணைவர்களோடு ஆராத பெருமகிழ்ச்சியினனாய்ப் பூமியில் விழுந்து வணங்கி யெழுந்து, பலமுறை துதித்து நின்றான். சிவபெருமான் அவனுடைய முகத்தைப் பார்த்து, "நெடுங்காலம் நம்மை நினைத்துப் பெரிய யாகத்தைச் செய்து இளைத்தாய். வேண்டும் வரம் என்னை? சொல்லுதி" என்று அருளிச் செய்தார். அவன் பிரமா முதலிய தேவர்களெல்லாரும் "இன்றே எங்கள் பெருமைகளெல்லாம் போயின" என்று இரங்கும்படி இதனைச் சொல்வான்:—

"இப்பிருதிவியிலுள்ள அண்டங்களெல்லாவற்றிற்கும் யான் அரசனாயிருத்தல் வேண்டும்; அவைகளைக் காத்தற்குரிய ஆஞ்ஞாசக்கரமும் வருதல் வேண்டும்; நினைத்தவுடனே அவைகளுக்கெல்லாம் செல்லுதற்கு வாகனங்களையும் உதவல் வேண்டும்; எப்பொழுதும் அழியாமலிருக்கின்ற உடம்பையும் எனக்கு ஈதல்வேண்டும்; விட்டுணு முதலிய தேவர்கள் போர்செய்தாலும் அவர்களை வெல்லும் பேராற்றலையும் பல படைக்கலங்களையும் உதவல் வேண்டும்; என்றும் அழியாமலிருக்கவும் வேண்டும்" என்று வேண்டினான். வேண்டுதலும், சிவபெருமான் "பிருதிவியிலுள்ள ஆயிரகோடி அண்டங்களுள் ஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆளுக" என்று அருள் செய்து, அவ்வண்டப் பரப்பெங்குஞ் செல்லும் வண்ணம் மிகுந்த வலியையுடைய இந்திர ஞாலமென்னுந் தேரையும் அவ்வண்டங்களை என்றும் பாதுகாக்கும்படி ஓராஞ்ஞா சக்கரத்தையும் சிங்கவாகனத்தையும் கொடுத்து, அன்று முதலாகத் தேவர்கள் எல்லாருக்கும் முதல்வனாகும் மேன்மையையும், தேவர்களையும் அசுரர்களையும் மற்றையோர்களையும் வெற்றிகொள்ளும் வலிமையையும், பாசுபதப்படை முதலிய தெய்வப்படைகளையும், எந்நாளும் அழியாமலிருக்கின்ற வச்சிரயாக்கையையும் ஈந்தருளினார். அதன்பின் கங்கையாற்றை விண்ணுலகத்துக்குச் செல்லும்படி அனுப்பி, அக்கங்கை யாகாக்கினியோடு கலந்தமையாற் பிறக்கும்படி பதினாயிரகோடி வெள்ளம என்னும் எண்ணைக் கொண்ட கச ரத துரக பதாதியாகிய நால்வகைச் சேனைகளை உண்டாக்கிச் சூரபன்மனுக்குச் சேனைகளாகக் கொடுத்தார். இப்படிச் சூரபன்மனுக் கருள்செய்தலும், அவனுடைய தம்பியர்கள் வந்து சிவபெருமானுடைய திருவடிகளை வணங்க; "நீங்கள் உங்கள் தமையனாகிய சூரபன்மனுடைய இரண்டு தோள்களையும் போல் அவனுக்குத் துணையாக வீரத்தைப் பொருந்தி விளங்கி நூற்றெட்டுகஞ் சிறப்போடு வாழுதிர்; தேவர்களெல்லாரையும் புறங்காணுதிர்; தேவர்களெல்லாராலும் வணங்கப்படும் உங்கள் மூவரையும் நம்முடைய சத்தி யொன்றேயன்றி வேறு யாவர் வெல்லுபவர்" என்று அருளிச் செய்து, அழியாத தேர்களையும் பாசுபதப் படையையும் கொடுத்து, வேறு வேறாக அவர்களுக்கு மிகவும் அருள்செய்து பரமசிவன் மனறைந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

சுக்கிரனுபதேசப்படலம்.

அப்பொழுது, அவுணர்கள் தம்மரசன் மிகுந்த வலிமையைப் பெற்றான் என்று எண்ணி, மிக்க வலியுடையர்களாய், முன்னுள்ள துன்பங்கள் நீங்கி மிக மகிழ்ந்து ஆர்த்து, ஏழுகடல்களும் மேருமலையைச் சூழ்வதுபோலச் சூரபன்மனைச் சூழ்ந்தார்கள். அவன் அவுணப் படைத்தலைவர்களுட் சிலரைப் பார்த்து, "இந்நாள்வரையும் நீவிர் க்ஷேமமுடையீர்களா" என்று வினவி நல்லருளைச் செய்ய, அவர்கள் மகிழ்ந்து, "சிவபிரானுண்டு, நீயுண்டு எங்களுக்கு ஓர் குறையுண்டோ! நிலையாகிய செல்வத்தையும் சிறப்பையும் பெற்றோம். தாயுண்டாயிற் பிள்ளைகளுக்கோர் தளர்வு முண்டோ!" என்றார்கள். இப்படிச் சொல்லுகின்ற அசுரர்கண்மாட்டுச் சூரபன்மன் அன்புடையனாய், தம்பியர் இருமருங்கும் ஆக நின்றான். இதனைக்கண்ட தேவர்கள் "இந்த அசுரன் வலியனாயினான், இனி நாம் செய்வதென்னை?" என்று உயிர்துறப்பார் போல அஞ்சி ஏங்கினார்கள். சேனைகளினடுவே சூரபன்மன் நிற்றலை முன்னைய அசுரர்கள் விருப்பினோடு பார்த்து, தம்மரசனோடு விமானத்தி லேறிவந்து பூக்களைத்தூவி, புடைவைகளை வீசி, "சூரபன்மன் வாழ்க" என்று ஆசிகூறி, ஆடிப்பாடிப் பெருமகிழ்ச்சியை அடைந்து, இந்திரனுடைய மனத்துயரத்தை நோக்கினார்கள். சூரபன்மன் சிவானுக்கிரகத்தினால் யாகாக்கினியிலிருந்து தோன்றிய அளவிறந்த படைகளுக்கெல்லாம் பல அசுரர்களைத் தலைவர்களாக்கி, சேனைகள் மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் திக்குக்களிலும் செல்ல, தம்பியரோடு யாகசாலையை நீங்கி, பிதாவாகிய காசிபமுனிவரிடத்திற் சென்று வணங்கி, சிவபிரானிடத்தே தாம்பெற்ற வரங்களைச் சொல்லி, "இனி யாங்கள் செய்வது என்னை?" என்று வினவினான். காசிபமுனிவர் அதனைக் கேட்டு, "இந்திரனுடைய வாழ்வுக்கு முடிவு வந்ததோ! தேவர்களுக்குத் துன்பம் வந்ததோ! எங்கள் வேதாசாரந் தவறியதோ! சிவபெருமானுடைய திருவருள் இவ்வாறாயிற்றோ!" என்று உள்ளத்திலே உணர்ந்து, "உங்கள் குரு சுக்கிராசாரியர். அவரிடத்தே போங்கள்; அவர் உங்களுக்கு இந்தச் செல்வங்கள் இடையறாதவண்ணம் விருத்தியாதற்கு வேண்டும் புத்திகளை நன்றாகப் போதிப்பார்" என்று விடைகொடுத்தனுப்பினார். சூரபன்மன் விடை பெற்றுக்கொண்டு சுக்கிராசாரியரை அடைய, அவர் இவனுடைய வரவையறிந்து, சீடர் கூட்டத்தோடு எதிர்கொண்டார். சூரபன்மன் சேனைகளுக்கு முன்னே போய்த் தம்பிமார்களோடு அவரை வணங்கினான். ஆசாரியர் ஆசி கூறித் தழுவி, தமது மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போயினார். சூரபன்மன் சேனைகளைக் காக்கும்படி தாரகனுக்குப் பணித்துச் சிங்கமுகனோடு செல்ல, சுக்கிரன் ஆசனங்கொடுத்திருக்கச்செய்து, சற்கார வசனங்களைக் கூறி, "நீங்கள் என்னிடம் வந்த காரணம் என்னை" என்று வினவினார். சூரபன்மன் தாங்கள் நெடுங்காலம் வீரயாகஞ் செய்ததும் சிவபெருமான் எழுந்தருளிவந்து வரங்களையும் அளவில்லாத வளங்களையும் தந்ததும், பின் காசிபமுனிவரிடத்தில் வந்ததும், அவர் தங்களுக்குச் சொல்லியதும் ஆகிய எல்லாவற்றையும் சொல்லி, "நாங்கள் இனிச் செய்யத்தக்க நீதிகளெல்லாவற்றையும் ஆசாரியராகிய நீர் உபதேசிக்கவேண்டும்" என்று வேண்ட, அவர் சொல்வாராயினார்:—

"பாசமென்றும் பசுவென்றும் இவற்றிற்கு மேலாகிய பதியென்றும் முப்பொருள்கள் உண்டென்றும், நல்வினை தீவினை என வினைகள் இரண்டு என்றும், அவை யேதுவாகப் பிறப்பிறப்புக்களையும் இன்பதுன்பங்களையும் பசுக்கள் அடையும் என்றும், ஊழினாலே ஒருபிறப்பிலன்றி மறுபிறப்பிலும் அப்பசுக்கள் இன்பதுன்பங்களை அநுபவிக்கும் என்றும், அவைகள் அங்ஙனம் அநுபவிக்கும்பொழுது மேல் வருபிறப்புக்காக இருவினைகளை ஈட்டும் என்றும், அவ்விரு வினைகளினால் அவைகள் மாறிமாறிப் பிறத்தலைப் பதியறிந்து அவ்வினைகளைத் தப்பாது கூட்டுவார் என்றும், பதியும் பசுக்களும் ஒன்றென்னில் அதனால் அப்பதிக்குக் குற்றம் உண்டாகும் என்றும் சிலர் கூறுவர். சூரபன்மனே, இதற்கு நாம் சொல்வோம் கேட்பாய்: பாசம் உண்டென்று சொல்லுதல் பொய். பதியும் பசுவும் இரண்டல்ல ஒன்றே. உற்பத்திநாச மில்லாதவரும் மலரகிதரும் சோதி சொரூபருமாகிய சிவபெருமான் திருவிளையாட்டினால் இச்சைகொண்டு தமது மாயையினாலே பூதங்களையும் பிறவற்றையும் உண்டாக்கி மாயையாலாகிய உடம்புகடோறும் கடாகாயம் போலத் தாம் கலந்து நின்று, அவ்வுடம்புகள் அழியுங் காலத்திலே தாம் முன்போல இருப்பர். இவ்வாறே அச்சிவபெருமான் எக்காலமும் திருவிளையாடலைச் செய்வர். இருவினைகளும் அவற்றின் பயன்களாகிய இன்பதுன்பங்களும் பொய்யாம். முத்தியென்று ஒன்று உண்டென்பதும் அதற்காக முயலவேண்டும் என்பதும் பொய்யாம். பொறிகளும் புலன்களும் பொய்யாம். ஆகவே அவைகளைக் காணும் பசு மெய்யாகுமோ! புத்தியும் வாக்கும் வடிவமும் செயல்களும் பொய்யாம். செயல்கள் பொய்யாகும்போது, அச்செயல்களால் வரும் துன்ப இன்பங்கள் மெய்யாகுமோ! இல்லனவாகிய வினைப்பயன்களை உள்ளனவாகக் கொள்ளினும், அவைகள் உடம்பிற்கன்றி நிருமலராகிய சிவபெருமானைச் சாருமோ! பிறப்பதும் இறப்பதும் வினைகளைச் செய்வதும் சிவபெருமானுக்கில்லை. உற்றுநோக்கும்போது இவைகள் உடம்பிற்கேயாம். போவதும் வருவதும் ஆவதும் அழிவதும் வினைகளைச் செய்வதும் எண்ணில்லாத கடங்கடோறும் பொருந்திய ஆகாயங்களுக்கு ஆகுமோ! அதுபோல எங்கும் உயிர் தானேயாய்ப் பொருந்திநிற்கும் சிவன் வேறுபாடு சிறிதுமின்றி ஒரேதன்மையுடையராயிருப்பர்; இது உண்மை என்று அறி. 'தருமம் நமக்குத் துணையாகும். அதனைச் செய்வது நன்று' என்று செய்வதும், 'பாவம் தீது அதனைச் செய்யலாகாது' என்று அஞ்சுகின்றதும் அறிவின்மையாம். யாது யாது செய்யும்படி நேர்ந்ததோ அதனை அதனை இது தீது இது நன்று எனச் சிந்தைசெய்யாது அவையெல்லாம் கடவுளுடைய மாயை என்று எண்ணிச்செய்தலே முறைமை. 'தருமத்தைச் செய்க பாவத்தைச் செய்யாதொழிக' என்று சில மூடர் சொல்வர். இவ்விரண்டையும் யார் செய்தாலும் மேலே வருவதொன்றுமில்லை. மாயம் வித்தாகுமோ! கனவிலே நாம் இன்பமடையவும் துன்பமடையவும் கண்டவைகளை நனவிலே கண்டதில்லை. அவைபோல இப்பிறப்பிற்செய்யும் புண்ணிய பாவங்கள் மறுபிறப்பிற் பயன்படுதலில்லை. மறுபிறப்பொன்றிருந்தாலல்லவா இப்பிறப்பிற் செய்யும் இருவினைப்பயன் அநுபவிக்கப்படும். அம்மறுபிறப்பென்பது பொய்மையே. ஆதலால் அப்பொய்யில் உண்டாவது மெய்யாகுமோ! இத்தன்மைகளையெல்லாம் பிறரறிவாரேயெனின் யாம் அடைந்த மேன்மைகளையெல்லாம் அப்போதே அடைவர். இவைகள் உறுதியாகக் கொண்டால் உண்மையாயிருக்கும். சிலரைச் சிறியர் என்றும் சிலரைப் பெரியர் என்றும் எண்ணுவது தகுதி

யன்று. 'உயிர்கள் எல்லாம் ஒன்றே' என்று அறிதல்வேண்டும். இது உண்மையே. இவைகள் ஞானிகள் அறியத்தக்க நுண்பொருள்களாம். இனி உங்களுக்கேற்ற வண்மைகளையும் வழக்கங்களையும் சொல்வோம் கேட்பாய்: தேவர்களினும் விட்டுணு முதலாகிய மற்றை எவர்களினும் மேலாகிய அரசுரிமையும் வெற்றியும் ஆணையும் அழியாத செல்வங்களும் உனக்கு வந்தன. இந்தமேன்மையினால் உன்னை நீயே பிரமமென்று தெளிகுதி. பிரமாமுதலிய தேவர்களை மேலோரென்று எண்ணாதே, வணங்காதே. தேவர்கள் உங்களுக்குப் பகைவர். அவர்களுடைய செல்வங்களை அழித்துத் தண்டிப்பாய். இந்திரனென்பவன் தேவராசன். அவனே முன்னை நாளில் அளவிறந்த அவுணர்களுடைய உயிரைக் கவர்ந்தான். அவன் தப்பி ஓடாவண்ணம் விரைந்து அவனைப் பிடித்து விலங்கிட்டுச் சிறையில் வை, பல தீமைகளையுஞ் செய். முனிவர்களையும் தேவர்களையும் திக்குப்பாலகர்களையும் ஏவல் கொள்ளுதி. அவர்களுடைய பதங்களை அவுணர்களுக்குக் கொடு. கொலை களவு காமம் வஞ்சமெல்லாவற்றையும் உறுதியென்று செய். அதனால் உனக்கு வருந்தீதொன்றுமில்லை. அவைகளைச் செய்யாயாயின் நீ விரும்பியவையெல்லாம் ஒருங்கு வாரா, உனக்கெவர் அஞ்சுவர்! சிவபெருமான் தந்த ஆயிரத்தெட்டண்டங்களையும் சேனைகளோடு இப்பொழுதே போய்ப் பார்த்துப் பார்த்து ஆங்காங்குச் செய்யும் கடன் முறைகளாகிய இறைமையைச் செய்து, எண்டிசையும் புகழும்படி மீண்டுவந்து இவ்வண்டத்தில் வீற்றிருப்பாய்." என்று சுக்கிராசாரியர் உபதேசித்தார்.

திருச்சிற்றம்பலம்.

அண்டகோசப்படலம்.

இவ்வாறாகிய தீய உபதேசத்தைச் சுக்கிராசாரியர் உபதேசித்தலும், சூரபன்மன் "இது நல்லது! ஆசாரியராகிய உம்முடைய பணியின்படி நிற்பேன். பரமசிவன் எனக்குத் தந்த ஆயிரத்தெட்டண்டங்களினிலைமைகளையும் நீர் சொல்லும்" என்று கேட்ப அவர் சொல்வாராயினர்: "மூலப்பிரகிருதிக்கு மேலுள்ள அசுத்தமாயை சுத்தமாயையாகிய தத்துவங்களும் அவற்றிலே தோன்றுவனவும் நிற்க, இப்பால் அவற்றின் கீழுள்ள மூலப்பிரகிருதியிற் புத்தி தத்துவந் தோன்றும். அதில் அகங்கார தத்துவம் தோன்றும். அதில் சத்த முதலிய ஐம்புலன்களும் தோன்றும். அவற்றில் முறையே ஆகாசம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் ஐந்து தத்துவங்களும் தோன்றும். இவற்றுள் பிருதிவி தத்துவத்துக்கு ஆயிரகோடி அண்டங்கள் உள்ளன. அவை பொன்னிறமுடையனவாய்ப் பரந்திருக்கும்; ஒன்றற்கொன்று மேலுள்ளனவல்ல. இவ்வியல்பினவாகிய ஆயிரகோடி பிருதிவி யண்டங்களில் சூரபன்மனே நீ பெற்ற அண்டங்கள் ஆயிரத்தெட்டு. இவற்றுள் ஓரண்டத்தினியற்கையைச் சொல்லுகின்றேம் நன்கறிகுதி.

கதிரொழுதுகள் இருபத்துநான்கு கொண்டது ஒருமயிர்நுனி. மயிர்நுனி எட்டுக்கொண்டது ஓர் ஈர். ஈர் எட்டுக்கொண்டது ஒரு பேன். பேன் எட்டுக் கொண்டது ஒரு நெல். நெல் எட்டுக் கொண்டது ஓர் அங்குலம். அங்குலம் இருபத்துநான்கு கொண்டது ஒரு முழம். முழம் நான்கு கொண்டது ஒரு தனு. தனு இரண்டு கொண்டது ஒரு தண்டம். தண்டம் இரண்டாயிரம் கொண்டது ஒரு குரோசம். குரோசம் நான்கு கொண்டது ஒரு யோசனை. இப்படிப்பட்ட நூறுகோடி யோசனை தனித்தனி இந்த ஓர் அண்டத்தின் விசாலமும் உயர்ச்சியுமாம். ஒழிந்த பிருதிவியண்டங்களும் இந்த அளவையுடையன. பூமியின் மேற்பரப்புக்குக் கீழே ஐம்பதுகோடி யோசனையும், அதற்குமேலே ஐம்பதுகோடி யோசனையும், மேருமலையின் மத்தியிலிருந்து அண்டகடாகத்தி னெல்லைவரையும் ஐம்பதுகோடி யோசனையுமாம். கீழேயுள்ள அண்டகடாகம் ஒருகோடியோசனை. அதற்கு மேலே காலாக்கினி உருத்திரருடைய செம்பொற்கோயில் ஒருகோடி யோசனையும், அவருடைய அக்கினிச் சுவாலை பத்துக்கோடி யோசனையும், அதன் புகை ஐந்துகோடியோசனையும், அவருடைய சிங்காசனத்தினுயர்ச்சி ஆயிரம் யோசனையும், அதன் விசாலம் இரண்டாயிரம் யோசனையும், காலாக்கினி யுருத்திரருடைய அக்கினிமயமாகிய திருமேனியி னுயர்ச்சி பதினாயிர யோசனையுமாம். அவர் தம்மைப் போல்வாராகிய உருத்திரர் பதின்மரும் அவர்களுடைய பத்துக்கோடி பரிசனங்களும் தம்மைச் சூழ்ந்து சேவிக்க வாள் பரிசை வில் அம்பு என்னும் ஆயுதங்களைத் தாங்கி யிருப்பர். ஆதிகூர்மம் அவரைத் துதித்துக்கொண்டு அந்தப்புவனத்திலிருக்கும். அதன்மேல் அடுக்குறு நிலைமையன வாகிய இருபத்தெட்டுக்கோடி நரகங்கள் உள்ளன. அவற்றின் உயர்ச்சி இருபத்தொன்பதுகோடி யோசனை. அவற்றின் இடைவெளி பன்னிரண்டிலக்கம் யோசனை. அதன்மேல் கீழ்பாகம் மண்ணும் நடுப்பாகம் இரும்பும் மேல்பாகம் பசும்பொன்னும் மயமாகிய ஒரு புவனம் தொண்ணூற்றொன்பதிலக்கம் யோசனை உயர்ச்சியுடையதாயிருக்கும். அம்மேல் பாகத்தில், கரியமுகத்தையும் சுழலுங் கண்களையும் காலாக்கினிபோலும் திருமேனியையும் மழுப்படைபொருந்திய கையையுமுடைய கூர்மாண்ட வுருத்திரர் பொன்னாசனத்தில் வீற்றிருப்பர். அவரைச் சூழ்ந்து சேவித்துக் கொண்டிருக்கும் உருத்திரர் அளவில்லாதோர். இந்தக் கூர்மாண்ட புவனத்தின்மேலுள்ள ஆகாயவெளி ஒன்பதிலக்கம் யோசனை. அதன்மேலே சப்த பாதலங்களுள்ளன. பாதலம் ஒன்றற்கு ஒன்பதிலக்கம் யோசனையாக அவற்றினுயர்ச்சி அறுபத்துமூன்றிலக்கம் யோசனை. அவற்றின் மேலுள்ள கனிட்ட பாதலம் எட்டிலக்கம் யோசனை உயர்ச்சியுடையது. அப்பாதலங்களுக்குத் தனித்தனி அகற்சி பதினாயிரம் யோசனை. அவை தனித்தனி மூன்றுபாகமுடையன. கீழ்பாகத்தில் அசுரரும், நடுப்பாகத்தில் நாகரும், மேல்பாகத்தில் அரக்கரும் இருப்பர். இப்பாதலத்துக்கு மேலுள்ள ஆடகேச வுருத்திரர் புவனம் ஒன்பதிலக்கம் யோசனையுடையது. பாதலங்களுக்கெல்லாம் தலைவராய்ப் பாதுகாப்போர் இதிலுள்ள ஆடகேசவுருத்திரர். இவரைச் சேவிக்குஞ் சனங்கள் நாகரும் அவுணரும் அரக்கருமாம். இந்த ஆடகேசர புவனத்தின்

மேல் ஒரு கோடியே இருபதிலக்கம் யோசனை வெளியுண்டு. இதன்மேல் எட்டி யானைகளாலும் எண்பெரும்பாம்புகளாலும் ஆதிசேடனாலுந் தாங்கப்படும் பூமியி னுயர்ச்சி எண்பதிலக்கம் யோசனையாம். அண்ட கடாகமுதற் பூமியீறாக * ஐம் பதுகோடி யோசனையாம். இதனைக் கணித்தறிந்துகொள்வாய்.

பாதலங்கட் கெல்லாம் மேலாயுள்ள பூமியின் விரிவையும் அங்கேயுள்ளன வற்றையுஞ் சொல்வேன் சூரபன்மனே கேட்பாய். பூமியில் சம்புத்தீவு, சாகத் தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சான்மலித்தீவு, கோமேதகத்தீவு, புட்கரந் தீவு என ஏழு தீவுகள் உள்ளன. உவர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க் கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல், சுத்தோதகக்கடல் என்னும் ஏழு கடல்கள் இத் தீவுகளை முறையே சூழ்ந்திருக்கும். சம்புத்தீவின் பரப்பும் அத னைச் சூழ்ந்த உவர்க்கடலின் பரப்பும் தனித்தனி ஓரிலக்கம் யோசனை. மற்றைத் தீவுகளுக்கும் கடல்களுக்கும் உள்ள பரப்பு முறையே இவற்றிலிருந்து ஒன்றற் கொன்று தனித்தனி இரட்டித்தயோசனை. அங்ஙனம் கணிக்கும்போது ஏழு தீவுகளுக்கும் கடல்களுக்கும் உள்ள பரப்பு இரண்டு கோடியே ஐம்பத்து நான் கிலக்கம் யோசனையாம். சுவர்ணபூமி இவற்றைச் சூழ்ந்திருக்கும். அதன் பரப் புப் பத்துக்கோடியோசனை. அதனைச்சூழ்ந்த சக்கரவாளகிரியின் பரப்புப் பதினா யிரயோசனை. அதனைச் சூழ்ந்த புறவாழியின் பரப்பு ஒருகோடியே இருபத்தேழி லக்கம் யோசனை. அதனைச் சூழ்ந்த இருட்பூமியின் பரப்பு முப்பத்தைந்து கோடியே பத்தொன்பதிலக்கத்து நாற்பதினாயிரம் யோசனை. அதனைச் சூழ்ந்த அண்டச் சுவரின்கனம் ஒருகோடியோசனை. இங்ஙனம் கணிக்கப் பூமியின் அக லம் † ஐம்பதுகோடி யோசனையாம். நாம் கூறிய இந்தக் கணிதத்தையுடையது ஒரு திசையே. இவ்வாறே மற்றைத் திசையையும் சேர்த்துக் கணிக்கில் பூமியின் அகலம் நூறுகோடி யோசனையாம்.

பிரமாவினுடைய வலப்புயத்திற் றோன்றிய சுவாயம்புவின் புத்திரனாகிய பிரியவிரதன் என்பான் இப்பூவுலக முழுதையும் ஆண்டான். அவனுக்கு அங்கி தீரன், மேதாதி, வபுட்டு, சோதிட்டு, துதிமான், அவ்வியன், சவநன் என ஏழு புத்திரரிருந்தனர். அவர் எழுவரும் முறையே சம்புத்தீவு முதலிய ஏழு தீவு களையும் ஆண்டார்கள். சம்புத்தீவுக் கரசனாகிய அங்கிதீரன் தன்னுடைய புத்தி ரர்களாகிய பாரதன், கிம்புருடன், அரி, கேதுமாலன், பத்திராசுவன், இளா விருதன், இரமியன், இரணியன், குரு என்னும் ஒன்பதின்மருக்கும் அத்தீவை ஒன்பது கண்டமாக்கிக் கொடுத்தான். மேருமலை சம்புத் தீவினடுவில் பூமிக்கு மேலே எண்பத்து நாலாயிரம் யோசனை உயர்ந்தும், கீழே பதினாறாயிரம் யோசனை ஆழ்ந்தும், தலை முப்பத்திராயிரம் யோசனையும் அடி பதினாறாயிரம் யோசனையும் அகன்றும் தாமரைப் பொகுட்டுப் போலிருக்கும். அதில் மூன்று

* காலாக்கினியுருத்திரருடைய சிங்காசனவுயர்ச்சி ஆயிரயோசனையும், அவர் திருமேனி யுயர்ச்சி பதினாயிரயோசனையும், அவருடைய திருமேனிச் சுவாலை பத்துகோடி யோசனையுள் அடங்குதலால், அவ்விரண்டனையும் நீக்கி ஐம்பதுகோடியோசனை கொள்க.

† பூமியின் மத்தியிலிருந்து கணிக்கவேண்டுதலால், ஏழுதீவுக்கும் நடுவிலுள்ள சம்புத் தீவின் பரப்பு ஓரிலக்கம் யோசனையில் ஐம்பதினாயிரம் யோசனையைக் கழிக்க ஐம்பதுகோடியா தல் அறிக.

மேகலைகளுள்ளன. மேலுள்ள மேகலையிற் பல சிகரங்களிருக்கின்றன. அவற்றுள் நடுச்சிகரத்தில் பிரமாவின் புரமாகிய மனோவதியும், மேற்றிசைச் சிகரத்தில் விட்டுணுவின் புரமாகிய வைகுண்டமும், வடகீழ்த்திசைச் சிகரத்தில் பரமசிவனுடைய புரமாகிய சோதிட்கமும், இவற்றின் மருங்கே எட்டுத்திசைகளினுமுள்ள சிகரங்களில் இந்திரன் முதலிய திக்குப்பாலகர் எண்மருடைய புரங்களுமிருக்கும். அம்மலையின் மருங்கில் தெற்கு முதல் வடக்களவும் நேர்மையான தேசமாய்ச் செவ்வே போகின்ற நெடிய குகையொன்றுள்ளது. சூரபன்மனே இதனை நினைப்பாய். அம்மேருமலையின் கீழ்த்திசையில் வெண்ணிறமுடைய மந்தரமலையும், தெற்கில் பொன்னிறமுடைய கந்தமாதனமலையும், மேற்கில் நீலநிறமுடைய விபுலமலையும், வடக்கில் மாதுளம்பூநிறமுடைய சுபார்சுவமலையும் உள்ளன. இவற்றில் முறையே கடம்பும், நாவலும், அரசும், ஆலும் நிற்கின்றன. நாவன்மரத்தினுயர்ச்சியும் பரப்பும் தனித்தனி இரண்டாயிரம் யோசனையும், மற்றை மூன்றுமரங்களினுயர்ச்சியும் பரபபும் தனித்தனி ஆயிரம் யோசனையுமாம். மந்தரமலைக்குக் கிழக்கிலும், கந்தமாதனமலைக்குத் தெற்கிலும், விபுலமலைக்கு மேற்கிலும், சுபார்சுவமலைக்கு வடக்கிலும் முறையே அருணம் மானசம் அசிதோதம் மாமடு என்னும் நீர் நிலைகளும், முறையே இவற்றின் கிழக்குத் தெற்கு மேற்கு வடக்குத்திசைகளில் சயித்திரதம் நந்தனம் வைப்பிரசம் திருதாக்கியம் என்னும் வனங்களும், மேருமலைச்சாரலிற் பொருந்தும். மேருமலையின் தெற்கில் ஒரு நாவன்மரம் நின்ற காரணத்தாற் பாரதவருடம்முற்றும் நாவலந்தீவென்னும் பெயர் பெற்றது. இத்தருவின் பழச்சாறு ஆறாய் அம்மலையைச் சூழ்ந்து வடபாற் சென்று சாம்பூநதம் என்னும் பெயர் பெறும். அதனைப் பருகினோர் உடல முழுதும் பொன்மயமாய்ப் பதின்மூவாயிரமாண்டு வாழ்வர். நாற்றிசைகளினுமுள்ள மந்தர முதலிய மலைகளின் மேலகலம் தனித்தனி பதினாறாயிரம் யோசனையும், உயர்ச்சி தனித்தனி நாற்பத்தீராயிரம் யோசனையும், கீழ் அகலமும் ஆழமும் தனித்தனி எண்ணாயிரம் யோசனையுமாம். மேருவின் கிழக்கில் நீல நிறமுடைய மாலியவானும், தெற்கில் பதுமராக நிறமுடைய நிசதமும் பொன்னிறமுடைய ஏமகூடமும் பனி நிறமுடைய இமையமும், மேற்கில் பொன்னிறமுடைய கந்தமாதனமும், வடக்கில் நீல நிறமுடைய நீலமும் வெண்ணிறமுடைய சுவேதமும் சந்திரகாந்த நிறமுடைய சிருங்கமும் அதனைச் சூழ்ந்த எட்டுமலைகளாம். முறையே கிழக்கிலும் மேற்கிலுமுள்ள மாலியவானும் கந்தமாதனமும் வடக்கில் நீலகிரியையும் தெற்கில் நிடதகிரியையுமுறத் தெற்கு வடக்காகவும், தெற்கிலுள்ள நிஷதம் ஏமகூடம் இமையம் என்னும் மூன்றும் வடக்கிலுள்ள நீலம் சுவேதம் சிருங்கம் என்னும் மூன்றும் தனித்தனி கீழ்மேல் கடல்களைச் சாரக் கிழக்குமேற்காகவும் நிற்கும். இவ்வெட்டு மலைகளும் தனித்தனி இரண்டாயிர யோசனை உயரமும், கந்தமாதனமும் மாலியவானும் தனித்தனி பதினாயிர யோசனை அகலமும், மற்றை ஆறுமலைகளும் தனித்தனி இரண்டாயிரயோசனை அகலமுமுடையனவாம். இனி; இச்சம்புத்தீவிலுள்ள நவகண்டங்களி னெல்லையைச் சொல்வோம்.

வடகடல் முதற் சிருங்கமலை வரையும் குருவருடமும், சிருங்கமலை முதற் சுவேதமலைவரையும் இரணியவருடமும், சுவேதமலைக்கும் நீலமலைக்கும் நடு இரமியவருடமும், மேருமலையைச் சூழ்ந்த வருடம் இளாவிருதமும், மாலியவான்

மலைமுதற் கீழ்கடல் வரையும் பத்திராசுவ வருடமும், கந்தமாதன மலைக்கும் மேல்கடலுக்கும் நடுக் கேதுமாலவருடமும், நிடதமலைமுதல் ஏமகூடமலைவரையும் அரிவருடமும், ஏமகூடம் முதல் இமையம் வரையும் கிம்புருட வருடமும், தென்கடலுக்கும் இமையத்துக்கும் நடுப் பாரதவருடமுமாம். கேதுமாலவருடமும் பத்திராசுவ வருடமும் தனித்தனி முப்பத்து நாலாயிரம் யோசனை விரிவும், ஒழிந்த ஏழு வருடங்களும் தனித்தனி ஒன்பதினாயிரம் யோசனை விரிவுமுள்ளன. பாரதவருடமொழிந்த மற்றை எட்டு வருடங்களும் தம்மிடத்து வசிப்பவர்க்குத் தேவருலகத்தை யொப்பனவாம். குருவருடத்திலிருப்போர் ஒரு தாய்வயிற்றில் ஒரு பொழுதினுள் ஆணும் பெண்ணுமாய்ப் பிறந்து தம்முட் புணர்ந்து தேவதருவின் காய்கனிகளை யுண்டு பச்சை நிறமும் பதின்மூவாயிரம் வயசு முடையராய் வாழ்வர். அதன் வடபாகத்தில், படிகநிறமுடைய முனிவரும் சாரணரும் சித்தரும் வசிப்பர். அவர்க்கு வயசு பதின்மூவாயிரம். பத்திராசுவ வருடத்திலிருப்போர் செம்மைநிறமும் பதின்மூவாயிரம் வயசும் உடையர்; கனிகாய் புசிப்பர். இரணிய வருடத்திருப்போர் சந்திரன்போலும் நிறமும் பன்னீராயிரத் தைஞ்ஞூறு வயசு முடையர்; பழங்களைப் புசிப்பர். இரமிய வருடத்திலிருப்போர் கருங்குவளை மலர்போலும் நிறமும் பன்னீராயிரம் வயசுமுடையர்; ஆலம்பழம் புசிப்பர். இளாவிருத வருடத்திலிருப்போர் வெண்மை நிறமும் பன்னீராயிரம் வயசுமுடையர்; கருப்பஞ்சாற்றை யுண்பர். கேதுமால வருடத்திலிருப்போர் செங்கழுநீர் மலர்போலும் நிறமும் பதினாயிரம் வயசுமுடையர்; கண்டகிப் பழம் உண்பர். அரிவருடத்திலிருப்போர் சந்திரன்போலும் நிறமும் பதினாயிரம் வயசுமுடையர்; கனி காய் புசிப்பர். கிம்புருட வருடத்திலிருப்போர் வெண்ணிறமும் பதினாயிரம் வயசுமுடையர்; இத்திப்பழம் உண்பர். ஏமகூடத்துக்குத் தென்பாலும் இமையத்துக்கு வடபாலுமாகிய இக்கிம்புருடவருடத்தில், மேன்மை மிக்க திருக்கைலாசமலை நிற்கும். அதன்மீது சிவபெருமான் உமாதேவிசமேதராய் வீற்றிருப்பர். அம்மலை ஊழி காலத்தில் அண்டத்தின் அடிமுடியளவும் வளரும். இந்த எட்டுக் கண்டங்களிலுமிருப்பவர் துன்பம் நோய் நரை திரை மூப்புக்களைச் சிறிதும் பொருந்தார். வலிமை நிறை அறிவு உடலம் ஆயுள் முயற்சி சீர் முதலிய எல்லாவற்றையும் கிருதயுகத்திற் போல மற்றை மூன்றுயுகங்களினும் அடைவர்; முன்பு பாரதவருடத்திற் பிறந்து செய்த நல்வினைப் பயன்களை அவைகளில் அனுபவிப்பர். அங்கே மழை பெய்யாது.

பாரதவருடத்திலிருப்பவர்கள் உழுது பயிர் செய்தும் மற்றும் பலவகைத் தொழில்கள் செய்தும் புண்ணிய பாவங்களையீட்டி, ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் என்னும் மூன்றினாலும் பெறற்பாலனவாகிய பயன்களைக் கொண்டு, ஈசுரனுடைய அருளினால் உய்வர். பெருமை வலி சீர் அறிவு நிறை ஆயுள் உருவம் உண்டி செய்கை என்னு மிவைகளை யுகங்களுக் கேற்றபடி பெறுவர். மலைநென் முதலிய பயிரின் விளைவுகளையும் கனிகாய் கிழங்குகளையும் பிறவற்றையு முண்புர். மற்றை எட்டுக்கண்ட வாசிகளும் தேவர்களும் நரக வாசிகளும் பாரதவருடத்திற் போயிருந்து புண்ணிய பாவங்களைச் செய்து அவற்றிற் கேற்ற பயன்களை அனுபவிப்பர். ஆதலால், பாரதவருட மொன்றே நல்வினை தீவினைகளுக்கெல்லாம் காரணமாகிய இடமாம். முனிவர்களும் தேவர்

களும் தமக்கேதும் குறையுண்டானால் அங்கே வந்து தவங்களையும் பூசைகளையுஞ் செய்து அவைகளை நீக்கிக் கொள்வர். பாரதன் என்பவனுக்கு இந்திரன், கசேருகன், தாமிரபன்னன், கபத்தி, நாகன், சவுமியன், கந்தருவன், வருணன் என்னும் புத்திரர் எண்மரும், குமரி என்னும் ஒரு புத்திரியும் உளர். அவன் இவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆயிரம் யோசனையாகப் பாரதவருடத்தை ஒன்பது கண்டமாக்கிக் கொடுத்தான். இவற்றுள், குமரிகண்ட மொழிந்த எட்டுக் கண்டங்களும் மிலேச்சரிடங்கள்; அவை வியப்பில்லன. கங்கை, கவுதமி, யமுனை, குமரி, வாணி, காவிரி, நர்மதை, பாலி, கம்பை, பம்பை, துங்கபத்திரை, குசை, கோமதி, பாஞ்சாலி, சூரி, சிகி, பாபகரை, தூதபாவை, சங்கவாகினி, சிகை, பாரத்துவாசி, சார்வரி, சந்திரபாகை, சரயு, வேணி, பிங்கலை, குண்டலை, பொன்முகரி, பொருநை, வெஃகா, பெண்ணை முதலாகிய அநேக ஆறுகளையும், மகேந்திரம் மலையம் சையம் சத்திமான் விருட்சம் பாரியாத்திரம் விந்தம் என்னும் ஏழு மலைகளையும், காஞ்சி முதலிய முத்திநகரம் ஏழையும், சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டையும், பிராமணர்கள் வசிக்குந் தேயங்கள் பலவற்றையும், வேதாசார வொழுக்கத்தையும் பொருந்தி, மெய்நெறி சேர்ந்திருப்பது குமரி கண்டமொன்றுமே. இவைகள் சம்புத்தீவின் இடங்களாம்.

இதற்கப்பால், பாற்கடலாற் சூழப்பட்ட சாகத்தீவுளது. அதற்கரசன் பிரியவிரதனுடைய மகனாகிய மேதாதி என்பான். அவன் தன் குமாரர்களாகிய சாந்தவயன் சிசிரன் கோதயன் ஆனந்தன் சிவன் கேமகன் துருவன் என்னும் எழுவருக்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழுகண்டமாக்கிக் கொடுத்தான். அங்கே, சோமகம் சுமனம் சந்திரம் துந்துபி வப்பிராசனம் நாரதீயம் கோமதம் என்னும் ஏழு மலைகளும், சிவை விபாவை அமிர்தை சுகிர்தை மறுதத்தை சித்தி கிரமை என்னும் ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் ஆரியரும் விந்தரும் குகுரரும். அவர்க்குத் தெய்வம் வாயுவாம்.

இதற்கப்பால், தயிர்க்கடலாற் சூழப்பட்ட குசைத்தீவுளது. அதற்கரசன் பிரியவிரதனுடைய மகனாகிய வபுட்டு என்பான். அவன் தன் குமாரர்களாகிய சுப்பிரதன் உரோகிதன் தீரன் மூகன் சுவேதகன் சித்தியன் வைத்திதன் என்னும் எழுவர்க்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்கே, உன்னதம் குமுதம் குமாரம் மேகம் சந்தகம் மகிடம் துரோணம் என்னும் ஏழு மலைகளும், சோனை வெள்ளிமதி தோமை நேத்திரை விமோசனை விருத்தி என்னும் ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் தர்ப்பகர் கபிலர் சாரணர் நீலர் தண்டர் விதண்டகர் எனப்படுவோர்; அவர்க்குத் தெய்வம் வாயுவாம்.

இதற்கப்பால், நெய்க்கடலாற் சூழப்பட்ட கிரவுஞ்சத்தீவுளது. அதற்கரசன் பிரியவிரதனுடைய மகனாகிய சோதிட்டு என்பான். அவன் தன் குமாரர்களாகிய சாரணன் கபிலன் கிருதி கீர்த்தி வேணுமான் இலம்பகன் உற்பிதன் என்னும் எழுவர்க்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழுகண்டமாக்கிக் கொடுத்தான். அங்கே, குசேசயம் அரி வித்துருமம் புஷ்பாவருத்தம் இமம் துதிமானம் மநதரம் என்னும் ஏழுமலைகளும், சிவை விதூதபாவை இமை புனிதை

பூரணை சர்வபாபகரை தம்பை என்னும் ஏழுநதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் தபதர் சடாவகர் மந்தேகர் அநேகர் எனப்படுவோர். அவர்க்குத் தெய்வம் பிரமாவாம்.

இதற்கப்பால், கருப்பஞ்சாற்றுக் கடலாற் சூழப்பட்ட சான்மலித்தீவாம். அதற்கரசன் துதிமான் என்பான். அவன் தன் குமாரர்களாகிய குசலன் வெய்யவன் தேவன் முனி அந்தகாரன் மனோரதன் துந்துபி என்னும் எழுவர்க்கும் அத்தீவை ஏழுகூறாக்கிக் கொடுத்தான். அத்தீவில் திமிரம் சுரபி வாமனம் விருத்தம் துந்துபி சம்மியத்தடம் புண்டரீகம் என்னும் ஏழுமலைகளும், குமுதை கவரி யாதி யாமை புண்டரிகை மனோபமை சந்தியை என்னும் ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் புட்கலாதர் புட்கரர் தனியர் சிசிரர் எனப்படுவோர். அவர்க்குக் கடவுள் சிவபெருமானும்.

இதற்கப்பால், தேன்கடலாற் சூழப்பட்ட கோமேதகத்தீவாம். அதற்கரசன் அவ்வியன் என்பான். அவன் தன் குமாரர்களாகிய விமோசனன் மோகன் சகலன் சோமன் சுகுமாரன் குமாரன் மரீசகன் என்னும் எழுவர்க்கும் அத்தீவை ஏழு கூறாக்கிக் கொடுத்தான். அத்தீவில் சிங்கம் அத்தம் உதயம் சலகம் கிரவுஞ்சம் ஆம்பிகேயம் இரமியம் என்னும் ஏழு மலைகளும், அயாதி தேனுகபத்தி சுகுமாரி குமாரி இக்ஷு மாயை என்னும் ஏழுநதிகளும் உள்ளன. அங்குவாழ்வோர் மந்தகர் ஆயங்கர் மாகதர் யானசர் எனப்படுவோர். அவர்க்குத் தெய்வம் சந்திரனும்.

இதற்கப்பால், சுத்தோதகக் கடலாற் சூழப்பட்ட புட்கரத்தீவாம். அதற்கரசன் சவனன் என்பான். அவன் தன் குமாரர்களாகிய தாதகி மாபீதன் என்னும் இருவர்க்கும் அத்தீவை இருகூறாக்கிக் கொடுத்தான். அத்தீவில் இடபம் மகேந்திரம் வருணம் வராகம் நீலம் இந்திரம் மந்திரியம் என்னும் ஏழுமலைகளும், குடிலை சிவை உமை தரணி சுமனை சிங்கை குமரி என்னும் ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் நசரரும் நாகரும் எனப்படுவோர். அவர்க்குத் தெய்வம் சூரியனும். இப்புட்கரத்தீவின் முடிவில் மானசோத்தரமென்னும் மலை ஐம்பதினாயிரயோசனை யுயர்ச்சியுடையதாய்ச் சகடக்கால்போல வளைந்து நிற்கும். அதின் கீழ்த்திசைமுதலிய எட்டுத்திசைகளினும் முறையே இந்திரன் முதலிய திக்குப்பாலகர் எண்மருக்கும் நகரங்கள் உள்ளன. இவ்வாறே ஒவ்வொரு கடல்களின் முடிவிலும் ஒவ்வோர் மலைகள் அவற்றைச் சூழ்ந்து நிற்பனவாம். சாகத்தீவு முதலிய ஆறு தீவுகளினுமிருப்பார்க்கு நரை திரை மூப்புத் துன்பங்களில்லை; கலியுகத்தினும் கிம்புருடகண்டத்தவர்களைப் போலப் பொன்னிறமுடைமை முதலிய குணங்களோடு பதினாயிரம் வருடமிருப்பர். மானசோத்தரமென்னுமலையைச் சூழ்ந்து பொற்பூமியும் அதனைச் சூழ்ந்து மாணிக்கரத்தின நிறமுடைய சக்கரவாளகிரியுமுள்ளன. அம்மலையின் உட்பக்கம் ஒளியும் வெளிப்பக்கம் இருட்படலமுமாயிருக்கும். அதில் வசிப்போர் இயக்கரும் இராக்கதரும் பேய்களுமாம். திக்குப்பாலகர்களும் மேருவிலே தத்தமக்குரிய திசைகளிலிருத்தல்போல அம்மலையிலிருப்பர். சக்கரவாளகிரிக்கப்பாற் பெரும்புறக்கடலும், அதற்கப்பால் இருட்பூமியும், அதற்கப்பால் அண்டச் சுவருமுள்ளன. தம்

பூமியினை வலியவிட்டவரும் ஞானமென்பது சிறிதுமில்லாதோரும் அவ்விருட்பூமி யிற் கிடந்துழல்வர். அண்டச்சுவரின் அணிமையில் அநாதிக்கடவுளாகிய பரமசி வன் வீற்றிருக்கின்ற மஹாகைலாசபர்வதம் இருக்கின்றது. அங்கே சிவகணங் கள் வசிக்கும். சம்புத்தீவு முதலாக அண்டச்சுவர்காறும் பூவுலகம் என்று பெரி யோர் சொல்லுவர்.

இப்பூமியின்மேல், கணரும் குய்யகரும் தசவாயுக்களும் சத்தமேகங்களும் கிம்புருடரும் கருடரும் சித்தர்களும் விஞ்சையர்களும் தேவகங்கையும் வழங்கு மிடங்கள் முறையே ஒன்றற்கொன்று மேலுள்ளன. சத்தமேகங்களுள் ஒவ்வொ ன்றை முப்பதினுயிரகோடி மேகங்கள் சூழும். இதன்மேற் சூரியலோகம் பூமியி லிருந்து ஓரிலக்கம் யோசனையிலுள்ளது. அதில் சூரியனுடன் முப்பத்துமுக் கோடி தேவர்கள் சஞ்சரிப்பார்கள். அதன்மேல் ஓரிலக்கம்யோசனையிற் சந்திர லோகமும், அதன்மேல் ஓரிலக்கம் யோசனையில் நக்ஷத்திரலோகமும், அதன் மேல் தனித்தனி இரண்டாயிரம் யோசனையில் முறையே புதன் சுக்கிரன் செவ் வாய் வியாழன் சனி என்னும் இவர்களுடைய உலகங்களும் உள்ளன. அதன் மேல் சத்தமுனிவருடைய வுலகமும், துருவனுடைய உலகமும், ஒவ்வோரிலக்க யோசனையில் ஒன்றற்கொன்று மேலுள்ளன. இதுகாறும் புவர்லோகம் எனப்ப டும். இங்கே எழுவகையாகிய மருத்துக்களும் வசிப்பர். இப்புவர்லோகத்தின் உன்னதம் பதினைந்திலக்கம் யோசனையாம். அதன்மீது சுவர்லோகம் எண்பத்தை ந்திலக்கம் யோசனையிலுள்ளது. அதில் தேவர்களும் பிறரும் துதிக்க இந்திரன் வீற்றிருந்தரசுபுரிவன். அப்பால் மகலோகம் இரண்டுகோடி யோசனையிலுள்ளது. அதில் மார்க்கண்டர் முதலிய முனிவர்களிருப்பார்கள். அதன்மேல் சனலோகம் எட்டுக்கோடி யோசனையிலிருக்கும். அதிற் பிதிர்தேவர்கள் இருப்பர். அதன் மேல் தவலோகம் பன்னிரண்டுகோடி யோசனையிலிருக்கும். அதில் சனகர்முத லிய மகாமுனிவர்கள் இருப்பர்கள். அதன்மேற் சத்தியவுலகம் பதினறுகோடி யோசனையிலுள்ளது. அது பிரமதேவரிருந்து படைப்புத்தொழில் செய்யுந்தான மாம். அதன்மேல் பிரமலோகம் மூன்றுகோடி யோசனையிலும், விட்டுணுலோ கம் மூன்றுகோடி யோசனையிலும், சிவலோகம் நான்குகோடி யோசனையிலும், முறையே ஒன்றற்கொன்று மேலுள்ளனவாம். அதன்மேல் அண்டகோளகை கோடியோசனை உயரமுடையது.* இந்த அண்டத்தில் நூற்றெட்டுப் புவனங்கள் சிவபெருமானுடைய திருவருளை அடைந்த உருத்திரர்களுடைய தானங்களாம்.

வேதாகமங்களும் அவற்றின் சார்புநூல்களும் பிறவும் அண்டத்தினியற் கையை வெவ்வேறுகச் சொல்லுகின்றன. அவை ஒன்றற்கொன்று மலைவாகுமோ எனின், சிருட்டிபேதம் பலவாமாதலால் அவை மலைவாகா. ஆதலால் அவற்றின் வேறுபாடுகளை நாம் யோசித்து, அறிந்த உனக்கு இந்தச் சிருட்டியிலிருக்கின்ற வியற்கையைச் சொன்னேம். முன் சிவபெருமான் உனக்குத் தந்தருளிய ஆயிரத் தெட்டண்டங்களும் இந்த அண்டத்தினியல்புடையன. மைந்தனே சென்று காண்பாய்" என்று சுக்கிராசாரியர் சொல்ல, சூரபன்மன் அளவில்லாத மகிழ்ச்சி யோடு அறிந்தான்.

திருச்சிற்றம்பலம்.

---

* பூமிமுதல் அண்டகோளகைவரையும் ஐம்பதுகோடியோசனையாதல காண்க.

திக்குவிசயப்படலம்.

இங்ஙனம் பற்பல குணங்களையுபதேசித்த சுக்கிராசாரியருடைய பாதங்களைச் சூரபன்மன் சிங்கமுகனோடு வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, விரைந்து அவுணசேனாசமுத்திரத்தினுட் புகுதலும், தாரகன் சென்று சூரபன்மனை முன் வணங்கிப் பின் தன்றமையனாகிய சிங்கமுகனை வணங்கி முன்னிற்க, அவன் சுக்கிரன் தனக்குபதேசித்தனவற்றையெல்லாஞ் சொன்னான். அவைகளைத் தாரகன் கேட்டு மனத்துட்கொண்டு, "தலைவனே இது நன்று. பகைவர்களை வெல்லுதற்கு நாம் இனி விரைவிற் போவதே கடன்" என்றான். அப்பொழுது மாயையானவள் தன் புதல்வர் மூவரும் சிவபெருமானிடத்திற் பெற்ற வரங்களையும் வலியையும் அறிந்து, அன்போடு ஆகாயத்தில் வந்து தோன்றினாள். சூரபன்மன் அவளை முன்னே கண்டு, தம்பியரோடும் அசமுகியோடும் வணங்கினான். அவள் பெற்ற அற்றைநாளினும் மகிழ்ந்து ஆசிர்வதித்து, "யாகத்தில் நிகழ்ந்தனவற்றையும் அதற்காகச் சிவபெருமான் கொடுத்தருளிய வரங்களையும் கேள்வியுற்று அன்போடு உங்களைக் காணும்படி வந்தேன். நீவிர் வலிமையினால் இந்திரன் முதலாயினோரை வென்று எவ்வுலகங்களையும் ஆண்டு பூமியில் என்றும் வாழுதிர். மாயைகள் வேண்டினால் என்னை அன்புடன் நினையுங்கள். அப்பொழுதே யான் வந்து நீர் விரும்பினவற்றைச் செய்து முடிப்பேன், விருப்பத்தோடு உம்மைக் காணும்படி வருவேன். நீவிர் ஒற்றுமையுடையராயிருக்குதிர்" என்று சொல்லிப் புத்திரர்கள் வணங்கப் போயினாள்.

மாயை போதலும், சூரபன்மன் கோடி தேர்களோடு அசுரர்களை அழைத்து, "நம்முடைய சேனைகள் குபேரனுடைய பட்டணத்துக்குச் செல்லும்படி பறையறைக" என்று பணித்தான். அவுணர்கள் அவ்வாறு பறையடித்தலும், சேனைகள் ஊழிக்கடல்போல வடதிசையை நோக்கிச்சென்றன. பத்து நூறு ஆயிரம் முதலாகிய பல தலைகளையும் பலவகைப் படைக்கலங்களை யேந்திய கைகளையும் கொடுமைக்குணத்தையும் கடலொலியையுமுடைய அவுணப்படைகளும், விண்ணும் திசையும் கடலும் முதலிய இடங்களிற் பாய்வனவாகிய அளவில்லாத குதிரைகளும், ஆறுபோலும் மதத்தையும் பிளிற்றொலியையுமுடைய அளவில்லாத யானைகளும், மலை முதலாகிய இடங்களிற் செல்லுந் திறத்தனவாகிய அளவில்லாத தேர்களும், மூன்றுகோடியோசனை விசாலத்திற் சென்றன; தூசிப்படைகள் அளகையை அடைந்தன. அப்பொழுது சூரபன்மன் பஞ்சபூதங்களினும் வலி மிகவுடையதும், சூரியனுடைய தேரினும் சிறப்புடையதும், அவனினும் ஒளியுடையதும், திக்குக்களை அகற்சியான் மறைப்பதும், பூவுலகையொத்த பரப்புடையதும், இமைப்பொழுதில் எங்குஞ் சென்று திரும்புவதும், பேருணர்வுடையதும், குறிப்பிற் செல்வதும், அழியாத ஒருகோடி குதிரை பூண்டதும், அழியாத பல சாரதிகளையுடையதும், சிறந்தனவும் அளவில்லனவுமாகிய படைக்கலங்களைத் தாங்கியதும், பகைவர்கள் கெடும்படி அவர்கள் தேரின்மேற் செல்வதும், முகில்களும் அஞ்சும்படி பல மணிகள் ஒலிக்கப்பெறுவதும், என்றும் அழியாதிருப்பதும், சிவபெருமானாற் கொடுத்தருளப்பெற்றதும் ஆகிய இந்திர

ஞாலம் என்னுந் தேரின்மேல், ஒரு பெரிய மலையில் சிங்கம் ஏறிச்செல்லுதல் போல அவுணர்கள் வணங்கப்போயினன். ஆயிரமாயிரம் யாளிகளும் ஆயிர மாயிரம் குதிரைகளும் ஆயிரமாயிரம் பூதங்களும் பூண்ட ஒரு தேரின்மீது சிங்க முகன் ஏறிச்சென்றான். தாரகன் பதினாயிரம் குதிரைபூண்ட ஒரு தேரிலேறி ஆலாகலவிஷம்போலச் சென்றான். இவ்விருவரும் சூரபன்மனுடைய இருமருங் கினுஞ் செல்ல, அவுணப்படைத்தலைவர்கள் தேர்களிலேறியும், மற்றைப் படை வீரர்கள் யானைகளினும் குதிரைகளினும் ஏறியும், சூரபன்மனைத் துதித்துப் பக்கங்களிற் சூழ்ந்தார்கள். அளவில்லாத அவுணர்கள் பதினெண்வகைப் படைக ளையுமேந்தி இடியும் அஞ்சுஞ் சொல்லினராய்க் கடல் கிளர்ந்தாற்போலச் சூரன் முதலிய மூவருடைய பக்கங்களிற் போயினார்கள். கசரததுரகபதாதியாகிய நால் வகைப் படைகளும் இவ்வாறே தன்னைச் சூழ்ந்துவரச் சூரபன்மன் நடுவே சென் றான். நால்வகைப்படைகளினொலியும் நானாவித வாத்தியங்களினோசையும் எங் கும் மிக்கன. அவுணவீரர்கள் ஏந்திய ஆயுதங்கள் ஒன்றோடொன்றுரிஞ்சுதலாற் பிறந்த நெருப்பினால் மலைகளும் பூமியும் பொடிந்தன. சூரனுடைய படைகளின் செலவினாற் பூவுலக முதலிய வுலகங்களும் மலைகளும் கடல்களும் நெருப்பும் நடுங்கின.

இவ்வாறே சேனைகளோடு சூரபன்மன் சென்று, குபேரனுடைய நகரத்தை வளைந்தான். வளைதலும், தூதுவர்கள் அதனை வினவி, குபேரனுடைய கோயிலை விரைந்தடைந்து, அவனுடைய பாதங்களை வணங்கி, "சூரபன்மன் நம்முடைய நகரத்தை வளைத்துகொண்டான். இப்பொழுதே யழியும்போலும், இனித்தாழ்த் திருத்தல் நன்றன்று. சேனைகளோடு போருக்கெழுவாய்" என்றார்கள். குபேரன் அதனைக்கேட்டுத் துன்பமும் நடுக்கமும் அடைந்து, "அவுணர்கள் சிவபெருமா னிடத்தில் வரம் பெற்றிருக்கின்றார்கள். அவர்களை நாம் வெல்லுதல் கூடாது. ஆதலால் அவர்களைப் புகழ்ந்து ஆசிசொல்லும்படி போதலே கடன்" என்று விரைந்தெழுந்து, புட்பகவிமானத்திலேறிச் சென்று, இயக்கர்களுந் தானும் சூரனை வணங்கித் துதித்து ஆசிகளைச் சொல்லி, "யான் உமக்கடியவன்" என்று கூற, சூரன் "நீ இந்நெறி தவறாதிருப்பாய்" என்று அவனை விடுத்தான். அவு ணப்படைகள் ஆரவாரித்தன. சூரபன்மன் தம்பியர்களோடு அதனைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான். அவுணப்படைகள் அளகாபுரியினுட் புகுந்து, நிதிகளையும் மணிகளையும் விமானங்களையும் ஆயுதங்களையும் யானை தேர் குதிரைகளையும் கவர்ந்தார்கள். இச்செல்வங்கள் நீங்கப்பெற்ற அந்நகரம் திருமங்கலியத்தையிழ ந்த கைம்மையின் வடிவுபோன்றது. குபேரன் இவற்றைப் பார்த்து உள்ளம் நாணி, பெருமையிழந்த அளகையில் மீண்டும் போயினன்.

சூரபன்மன் அங்குள்ள குபேரனை "இவன் நம்முடைய அடித்தொண்டு செய்வானாயினன்" என்று மனத்திலெண்ணிக்கொண்டு, பாகனை நோக்கி, "இமைப் பிற்றேரைத் தூண்டுதி" எனச் சொல்லி, அளகையை நீங்கி வடகிழக்குத்திசையை அடைந்து, "இது காளகண்டராகிய ஈசானவுருத்திரர் வீற்றிருக்குந்தலம்" என்றெண்ணி, அந்நகரைவிட்டு இந்திரனிருக்கும் கிழக்குத்திசையை யடைந்தான். அதனை யறிந்து மிக்கதுயருற்ற இந்திரன் மறைந்து சுவர்க்கத்துக்குப் போயி னன். அவன் ஒளித்தோடியதைச் சூரன் அறிந்து, அப்புரம் முழுவதையும்

கொளுத்தி, சேனைகளோடு அவ்விடத்தை நீங்கி, அக்கினிதேவனுடைய நகரை அடைந்தான். அதனை அக்கினிதேவன் அறிந்து, மிகுந்த கோபமுடையனாய், ஆயிரநூறுகோடிபேர் தன்னைச் சூழ, போர்புரியும்படி வந்துசேர்ந்தான். சேர்தலும், இருபக்கத்துச் சேனைகளும் போர்செய்தபொழுது, அக்கினிதேவனுடைய படைகள்தோற்றன. அவன் துன்பம்பொருந்திய மனத்தனாய், ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் ஈறு செய்கின்ற வலிய பேருருவைத் தாங்கி, "சூரனுடைய சேனாசமுத்திரம் வற்றும்படி இத்தினமே யான் மாய்ப்பேன்" என்று அவுணவெள்ளங்களை நெருங்கி வளைந்து, அழிப்பானாயினான். சட சட என்னும் ஒலியுண்டாம்படி சேனைக்கடலை அக்கினிதேவன் கொல்லும்போது, தாரகன் விடம்போலக் கோபித்து, தேருடன் வாயுவேகத்தோடு வந்து எதிர்ந்து, வில்லைவளைத்து, "அக்கினியையும் தேவர்களையும் பிறரையும் இப்பொழுதே முடிப்பேன்" என்று சிவப்படைக்கலத்தை வழிபாடுசெய்து எடுத்தான். அதனை அக்கினி கண்டு, "இவன் இதனைத் தொடுத்தால் உலகங்களை யெல்லாந் தொலைக்கும்; என்னையும் முடிக்கும்; பிரமாமுதலாகிய தேவர்களையும் இன்றே கொல்லும்" என்று கவலையுற்று, மனநடுங்கித் தன்னுருவைச் சுருக்கி, ஒடுங்கி, தாரகனுக்கு முன் வந்து, கைகளைக் கூப்பி, "உலகங்களை யெல்லாம் படைத்தழிக்கின்ற சிவபெருமானுடைய மாற்றமுடியாத படைக்கலத்தை என்மேல் விடும்படி வழிபாடு செய்து எடுத்தாய்; எப்புவனத்துள்ளவர்களுடைய வலியும் உயிர்களும் அதன் முன் நிற்குமோ? மிகுந்த சினங் கொள்ளற்க; சிவப்படைக்கலம் சிறந்தது. அதனை விடுப்பாயாயின் உலகமெல்லாம் அழியும்; அதுவன்றி, அப்படைக்கலத்துக்குத் தலைவராகிய கடவுளும் பழிபடுவார். என்பிழையைப் பொறுப்பாய்" என்று துதித்து நின்றான். நிற்றலும், தாரகன் சிவப்படைக்கலத்தை அவன்மேற் செலுத்தாது கோபம் நீங்கி மகிழ்ந்தான். அவுணர்கள் "இவனை எற்றுங்கள் எற்றுங்கள்; விரைந்து கொல்லுங்கள் கொல்லுங்கள்; இவன் மிகக்கொடியன் குற்றுங்கள் குற்றுங்கள்" என்று அக்கினியைச் சூழ்ந்தார்கள். தாரகன் அவர்கள் எல்லாரையும் விலக்கி, "நீ நம்முடைய ஏவலின்வழி நிற்பாய். போன உன்னுயிரை நாம் உதவினோம். உன்னுடைய நகரத்திற்போதி போதி" என்று விடுத்தான். அவனை விடுக்கு முன்னே, அவுணர்கள் அவனுடைய நகரிற் புகுந்து செல்வங்களையெல்லாம் வாரிக்கொண்டு மீண்டார்கள். அக்கினிதேவன் வெட்கித்துத் தன்னகரிற் போயினான். தாரகன் அந்நகரை நீங்கினான்.

சூரன் அவற்றையெல்லாங்கண்டு, "பாகனே யமனுடைய நகரத்துக்குத் தேரைச் செலுத்துவாய்' என்றான். என்னலும், பலிங்கனென்னும் பாகன் மற்றைப் பாகர்களோடும் அஞ்சலிசெய்து, "அரசனே விரைந்து யமனுடைய திசைக்குத் தேரைச் செலுத்துவேன் காண்பாய்" என்று கூறி, விரைந்து தேரைத் தூண்டி ஆர்த்தான். சேனைகளும் முரசங்களும் ஆர்த்தன; துகள் கடலைத் தூர்த்தன; கொடிகள் விண்ணுலகத்தை அளாவின. தூசிப்படைகள் யமனுடைய ஊரை அடைந்தன. அதனைக்கண்ட ஒரு தூதுவன் யமனிடத்திற்சென்று "சூரன் முதலிய அவுணருடைய சேனைகள் நம்முடைய நகரத்தை வளைந்தன" என்று சொன்னார்கள். யமன் இடியேறுற்ற பாம்புபோல ஏங்கி இரங்கி, "குபேரனும் அக்கினிதேவனும் சூரனை எதிர்கொண்டு துதித்துப் போயினார்கள். நானும் அதனைச் செய்வதே அழகிதாம்" என்று நினைத்து, தெளிவினுடன்

எழுந்து படைஞர்கள் சூழ விரைந்து சென்று, சூரனைத் தொழுது ஆசி கூறி னன். அவனுடைய செய்கையைக் கண்டு சூரபன்மன் மகிழ்ந்து, "நம்முடைய பணிகளைச் செய்துகொண்டு உன் பரிசனங்களோடும் ஈண்டே யிருக்குதி" என்று ஏவினன். அவுணசேனைகள் யமனுடைய நகரத்தினுட் புகுந்து திரவியங்களை முறைமுறையாகக் கவர்ந்தன. யமன் பெருவலி குறைந்ததையும், தம்மைத் துதித்துப் போயதையும் சூரபன்மன் நினைத்து மிகவுமகிழ்ந்து, சேனைகளோடு தென்மேற்றிசையிலிருக்கும் நிருதியின்மேல் விரைவிற்சென்றான். நிருதி, இந்நி கழ்ச்சிகளையெல்லாம் அறிந்து, "நாம் இவரைப் பொருவது அரிது, போரியற்றி னும் வசையேயன்றி வெற்றி வருவதில்லை" என்று அவர்களோடு கலத்தற் கெண்ணி, சேனைகளோடு சூரனுக்கெதிரே போய்த் தோத்திரஞ்செய்து வணங்கி, "உன்சுற்றம் யான்" என்று கூறித் தாரகனுக்குப் பக்கத்திலே போயினன். சூரபன்மன் நிருதியினுடைய நகரத்தை நீங்கி அப்பாற் சென்றான். அவனு டைய வரவையறிந்த வருணனும் வாயுவும் முறையே கடலினும் இருட்பூமியி லும் இமைப்பொழுதினுட் போயினார்கள். போதலும், சூரபன்மன் அவர்களு டைய பதங்களைச் சூறைகொண்டு பழுது செய்வித்து, சத்தபாதலங்களுக்கும் போய், அங்கங்குள்ள அவுணர் முதலாயினோர் துதிக்க அவர்களுக்கு அருள் செய்து, நாகருலகத்துக்குப் போயினன். ஆதிசேஷன் கோபத்தோடு யுத்தஞ் செய்தான். சூரபன்மன் சேனைகளால் அவனை வெற்றிகொண்டு, அவன் வியந்து துதிக்க அவனுடையவிருக்கையில் ஒருநாள் இருந்து, அங்கே தேவர்கள் தர ஆதிசேஷன் வைத்திருக்கும் அமுதத்தை வலிதின் வாங்கித் தம்பியர்களோடு உண்டு, மற்றைப் பிலங்கள் தோறும் சென்று, அங்கங்குள்ள புதுமைகளை வியப் போடு பார்த்து, போன போன திசைகளெல்லாவற்றினும் புகழை நாட்டி, பூவுல கில் வந்து, உவர்ச்சமுத்திரத்தையும் அதற்கப்பாலுள்ள சாகத்தீவையும் கடந்து, பூமிலக்ஷ்மியும் மகாலக்ஷ்மியும் துதிக்கச் சேஷசயனத்தின்மீது விட்டுணு அறிதுயில் செய்யும் பாற்கடலிற் சேனைகளோடு விரைந்து போயினன்.

சூரனுடைய அவுணப்படைகள் "இங்கே விட்டுணு இருக்கின்றான்" என்று அப்பாற்கடலை மிகுந்த ஆரவாரத்தோடு கலக்கின. அந்த ஒலியைப் பூமிலக்ஷ்மி யும் மகாலக்ஷ்மியும் கேட்டு, உடம்பு வேர்த்துப் பதைக்க அஞ்சி வெருவி விட்டு ணுவினுடைய மார்பைத் தழுவ, அவர் பார்த்து, அவர்களை அஞ்சற்கவெனக் கூறி, விரைந்து துயிலை நீங்கிச் சேஷசயனத்தை விட்டு எழுந்து, வடவாமுகாக் கினியும் அஞ்சும்படி உருத்துச் சீறி, "இத்தீயர் நம்மையும் பொரவும் வந்தார் போலும், இவர் வலியைக் காண்போம்" என்று கைதட்டிச் சிரித்துக் கருடனை நினைத்தார். உடனே அவன் வந்தான். அவனுடைய தோளின்மேல் ஏறிப் பஞ்சா யுதங்களையும் ஏந்தி, அசுரசேனைக்கெதிரே சென்று, சார்ங்கம் என்னும் வில்லை வளைத்து நாணொலிசெய்து, அவுணர்களுடைய மனசைக் கலக்கி, அவர்கள் கொண்ட செற்றத்தைக் கெடுத்துப், பாணங்களை மேன்மேற் பூட்டி விடாமழை யைப் போலப் பொழிந்தார். அப்பொழுது அவுணசேனைகள் அழிந்து, கசரததுர கங்கள் ஒழிந்து, வலியும் போரினூக்கமும் படையுமாகிய எல்லாங் கழிந்து, சூறைக்காற்றுலடியுண்ட மேகங்கள் போலாயின. சூழ்ந்த அவுணர்களுடைய சிர ங்கள் துணிந்தன. தோள்களுந் தாள்களும் கரங்களும் வீழ்ந்தன. சிந்திய இரத் தவெள்ளம் கடல் முழுதும் பாய்ந்தன. பிணமலைகள் உயர்ந்தன. விட்டுணுவான

வர் கருடவாகனூருடராய் எண்ணில்லாத வுருவங்களைக் காட்டி அவுணர்கள் யாவ ரும் போகாவண்ணம் பாணமழைகளைச் சிந்தித் தேவர்கள் ஆரவாரிக்கும்படி இப் படிப் போர்செய்தார். தாரகன் அவற்றை உருத்து நோக்கி, உடைகின்ற தன்சே னைகளை "ஒன்றும் நீர் அஞ்சற்க" என்று கூறி, மேருமலைபோலும் வில்லை யேந் தித் தேரின்மீது இமைப்பில் வந்து விட்டுணுவுக் கெதிரிற் புகுந்து, அவ்வில்லை வளைத்து, கடலின்மீது விடாமழை பொழிவதுபோலப் பாணங்களைத் துண்ணெ ன்று தூவி ஆரவாரித்தான். அப்பொழுது, விட்டுணுவானவர் எண்ணில்லாத பாணங்களைத் தாரகன்மீது சொரிந்து, அவனுடைய தேரையும் பாகனையும் தொலைத்தார். அவன் பிறிதொரு தேரிலேறி வில்லை வளைத்து விட்டுணுவின்மீது ஆயிரம் பாணங்களைச் செலுத்தி, கருடன்மீதும் ஆயிரம் பாணங்களை விடுத்தான். அப்பாணங்களினாற் கருடன் வருத்தமடைதலும், விட்டுணு அதனைப்பார்த்து, அளவில்லாத மாயாரூபங்களை எடுத்து, தாரகனைச் சூழ்ந்து போர்செய்ய, அவ னும் தன் தாய் உபதேசித்த மந்திரத்தைத் தியானித்துப் பல மாயரூபங்களைக் கொண்டு, நான்குநாள்வரையும் பெரும்போர் செய்தான். பிரமதேவர் இதனைப் பார்த்து, "யார் இவனெதிரில் நிற்பார்" என்று அதிசயமடைந்தார். விட்டுணு தாரகனுடைய வில்லும் தேரும் குதிரைகளும் பாகனும் துணிந்து விழும்படி ஒருகோடி பாணங்களை விடுத்தார். இந்திரன் அதனைக் கண்டு மகிழ்ந்தான். தார கன் தன்னுடைய தேரும் குதிரைகளும் பாகனும் வில்லும் அழிதலும், ஒரு தண் டாயுதத்தை எடுத்துக்கொண்டு நிலத்திற்போய், தேவர்கள் தலைபணித்து அஞ்ச அண்டங்கள் குலுங்க ஆர்த்து, விட்டுணுவை எதிர்த்துச் சென்றான். அவர் எதிரேவரும் தாரகன்மேல் எண்ணில்லாத பாணமழைகளை வீசினார். அவைக ளைத் தாரகன் தண்டினால் விலக்கிச் சிந்திக் கோபித்து அவருக்கு முன்னே செல்ல, விட்டுணு சக்கரப்படையை விடுத்தார். ஓரிமைப்பொழுதினுள் உலகங் களை யெல்லாந் தொலைக்கும் வலிமையையுடைய சக்கரப்படையும் தாரகனுடைய கண்டத்தை அணுகிச் செம்பொன்னாரமாயிற்று. இஃது என்ன அதிசயம்! தவ த்தினும் ஆக்கம் வேறுண்டோ!

விட்டுணுவானவர் அதனைப் பார்த்துச் சிவபெருமானருளிய வரத்தை நினை த்து, அடங்காத அற்புதத்தினராய், "தாரகன் வலியன்" என்று எண்ணி, "பிர மாவும் ததீசிமுனிவனும் என்னுடன் போர்செய்த அவுணர்களும் உனக்கொப் பல்லர். அவர்கள் சொல்லளவன்றிச் செயலளவில் உவமையாதல் இல்லை. வீர பத்திரக்கடவுள் மாத்திரம் உனக்கிணையாவர். சிவபெருமான் ஈந்தருளிய சக்க ராயுதம் உன்கழுத்திற் பதக்கமாயிற்றென்றால் வெற்றியும் உனதேயன்றோ! இனி வேறு போருமுண்டோ! உன்வலிமை இதுவானால் உனக்குத் தமையன்மார் களாய் நிற்கின்றவர்களுடைய பெருமையைப் பேசவல்லார் யாவர்! சிவபெருமான் மகிழும்படி யாகத்தைப் பலநாட் செய்து உங்களைப் போல வலிபெற்றுள்ளார் அவுணரிலொருவருமில்லை; உங்களை வெல்வார் யார்! எமக்கும் நீர் சுற்றத்தார் களே" என்று எல்லையில்லாத ஆசிகளைச் சொல்லிப் போயினார். அவைகளை யெல்லாம் அவுணர்கள் பார்த்து ஆர்ப்பரித்தார்கள். தேவர்கள் வேர்த்து, இறப்ப வர்களைப்போல மெலிந்து, துன்பமுற்றவராய் அஞ்சி ஓடினார்கள். தாரகன் பிறி தொரு தேரின்மீதேறிச் சூரபன்மனுக் கெதிரிற் போயினான். அவன் அங்கு நிகழ்ந்தவற்றை அறிந்து மிகமகிழ்ந்து தாரகனைத் தழுவி, சேனைகளோடு அப்

பார்போய், பூவுலகத்தைச் சக்கரவாளகிரிவரையும் பார்த்து, ஆகாயவழிக்கொண்டு சென்று, சூரியன் முதலாயினோர் ஆசீர்வதிக்கச் சுவர்க்கத்திற் போயினான்.

சூரபன்மன் சுவர்க்கத்துக்குச் செல்லுதலும், ஒற்றுவர்களிற் சிலர் ஓடிப்போய், "சூரன் என்னும் வலியன் வந்தான்" என்று இந்திரனுக்குச் சொல்ல, அவன் அஞ்சிப் பெருமூச்சுவிட்டு அலந்து தேம்பி அறிவு சோர்ந்து, "இங்கு வந்த சூரபன்மனோடு போரில் எதிர்ப்பேனாயின் என்னுயிர்க்கிறுதியாம். இங்கிருப்பேனாயின், துன்பத்தினும் பழியினும் மூழ்குவேன். புல்லிய செயலாய் எனக்கு வந்த இத்தீங்கு என்செயலால் வந்ததன்றிப் பிறர் செயலால் வந்ததன்று. பற்றற்ற பெரியோர்கள் பிறர் செய்கின்றனவற்றையுந் தஞ்செயல் என்பார்கள். அறிஞர்கள் செல்வம் வருங்கால் மகிழ்ந்தும் அது போங்கால் வருந்தியும் பிரபஞ்சத்தில் அழுந்துவார்களோ! வருவது வரும். அதனை மறுக்க முடியுமோ! ஆதலால் இவனோடு பொருது உயிரை விடேன்; வருத்தமுமடையேன். துன்பமுற்றவர்பின் னொருகாற் பெருமகிழ்ச்சியுமடைவர். இதனை, தீமைசெய்கின்ற இவ்வவுணர்களிடத்திற் காண்பேன். வெட்கத்தையும் பகைவர்களுடைய சிரிப்பையும் கொள்ளேன். சூரபன்மனைக் காண்பேனாயினும், கறுவுகின்ற மனத்தையுடைய அவன் என்னைச் சிறைசெய்வான்" என்று எண்ணி விரைந்தெழுந்து இந்திராணியோடு குயிலுருக்கொண்டு ஆகாயத்திற் பறந்துபோயினான். அவுணர்கள் அவனைத்தேடிக் காணாராயினர். பொன்னுலகமுழுதும் பொலிவிழந்தது. அவுணர்கள் தேவர்களைப் பிடித்து, அடித்துக் குற்றி அவர்களுடைய வஸ்திரங்களினாற் றோள்களைக் கட்டி, மிகவுந் துன்புறுத்தி, சூரனுக்குமுன் விடுத்தார்கள். தேவர்கள் அவனை வணங்கித் துதித்து, "அரசனே நீ அவுணவமிசத்திற் பிறந்து, தவத்தைச் செய்து சிவனுடைய திருவருளைப்பெற்றுத் திக்குப்பாலகர்கள் முதல் எல்லாரையும் வென்றாய் என்றால், எளிய எங்களைத் துன்பப்படுத்துவதா உனக்கு நன்று. நீ ஒரு சிறிது சினஞ்செய்தால், யமனுமிருப்பானோ! மற்றைத் திக்குப்பாலகர்களும் இருப்பார்களோ! தேவர்கள் யாவரும் உய்வார்களோ! உலகம் இப்பொழுதேயழியுமே! இன்றுமுதல் எங்களுக்கு வழிபடுகடவுள் நீ; எங்களைப் பாதுகாக்கும் அரசனும் நீ; பற்றுள்ள உறவும் நீ; யாமெல்லோமும் உன் பணிகளை முறையிற்செய்வோம்." என்று சொல்லித் தோத்திரஞ் செய்தார்கள். அவர்களைச் சூரன் பார்த்து "நுஞ்செய்கை நன்று" என்று சிரித்து, கட்டிய கட்டுக்களை அவிழ்ப்பித்து, "இனி நீர் நம்முடைய பணிகளைச் செய்துகொண்டிருக்குதிர்" என்று கூறி விடுத்தான். அவுணர்கள் இந்திரனுடைய வளங்களெல்லாவற்றையும் கவர்ந்துகொண்டு சென்றார்கள். சூரன் அளவிடப்படாத மகிழ்ச்சிகொண்டு, தம்பியர்கள் பக்கங்களில் வர, மகலோகம், சனலோகம், தவலோகம் என்னும் மூன்றுலகங்களையும் அங்கங்குள்ள மார்க்கண்டேயமுனிவர் முதலாயினோர் புகழ நீங்கி, சத்தியவுலகத்திற் போயினான்.

பிரமதேவர் சூரபன்மனுடைய வரவையறிந்து நடுக்கமுற்று, முனிவர்கள் தம்மைச் சூழ அவனையடைந்து, "நீடூழிகாலம் வாழ்தி வாழ்தி" என்று ஆசிகூறி, "மகாராசனே நீ இங்கேவர யான் முன்னாளில் என்ன தவத்தைச் செய்தேனோவறியேன். அதனைச் சிவபெருமான் அன்றி வேறியார் அறிந்தவர்! சிவபெருமானை நோக்கி அருந்தவத்தைச் செய்து இவ்வியல்பினவாகிய செல்வங்க

ளெல்லாவற்றையும் பெற்றுள்ளாய்; பெரியவலிமையைக் கொண்டாய்; விட்டுணு வையும் தேவர்களையும் தம்பியாகிய தாரகனைக்கொண்டு வென்றாய்; உன்னையொப் பவர் உலகத்திலுளரோ! நீ அன்பிற்சிறந்த என்மகனாகிய காசிபமுனிவனுடைய புத்திரனாதலால் யான் உன்பாட்டன்; உன்புகழ்களெல்லாம் என்புகழ்கள்; யான் பிறனன்று இது சத்தியம்" என்று பல உபசாரங்களைச் சொல்லி, தம்பிமார்களை யடைந்து, அழியாத வில்லையும் தேரையும் தன்படையையும் தனித்தனி கொடுத்தார். சூரபன்மன் அதனைப் பார்த்துப் பெருமகிழ்ச்சியினனாய் அன்புசெய்து, பிரமாவை அங்கே இருத்தி, வைகுண்டவுலகத்துக்குப் போய், அங்குள்ள விட்டுணுவானவர் வந்து "அழிவில்லாத வாழ்நாளோடு வாழ்வாய்" என்று பல ஆசிகளையும் இன்சொற்களையுஞ் சொல்ல மிகவும் மகிழ்ந்து, பரிசனங்களோடு அவ்வுலகமுழுதையும் பார்த்து, அவரை அங்கேயிருக்கும்படி வைத்து, சிவலோகத்துக்குப் போயினான்.

அங்கே சூரன் பரிசனங்களை நீங்கித் தம்பியர்களோடும் சிவபெருமானுடைய திருக்கோயிற் புறங்கடைவாயிலினின்று, அக்கடவுளுடைய அருண்முறையையறிந்த திருநந்திதேவர் உள்ளே விடுப்பச்சென்று, பார்வதிசமேதராய் வீற்றிருக்கும் சிவபெருமானுடைய திவ்விய சந்நிதானத்திற்போய், அன்போடு வணங்கித் துதித்து நின்றான். சிவபெருமான் கருணைசெய்து, "இனிநீ ஏனை அண்டங்களிலுஞ் சென்று பார்த்து, ஆணையாலெண்டிசையும் புகழும்படி அரசு புரிந்திருப்பாய்" என்று அருளிச்செய்தார். சூரன் அவருடைய திருவடித்தாமரைகளைத் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறத்துவந்து, சேனைகளைச் சேர்ந்து, அண்டகோளகையை அடைந்தான். அங்கே வைரவர்களாகிய உருத்திரர் அளவில்லாதோருளர். அவர்கள் சிவபெருமானுடைய திருவருளை உட்கொண்டு அப்பாலுள்ள அண்டத்துக்குச் செல்லும் வாயிலைக் காட்டி விடுக்க, சேனைகளோடு சூரபன்மன் சென்று, அங்கும் இவ்வண்டத்திற்போலவே பார்த்து, யாவரையும் வென்று, மற்றையண்டங்களினும் சிவகணங்களாயுள்ளோருடைய அருளினாற்போய், அங்குள்ள தேவர்களை வென்று, அவர்களுடைய வளங்களெல்லாவற்றையுங் கவர்ந்து, தம்மாட்டுள்ள அவுணர்களிற் பலரை அங்கே தன்னரசுரிமையை நடத்தும்படி வைத்து, தனக்கு உற்ற உறவினர்களாகிய அவுணர்களை அண்டங்கள்தோறும் அரசர்களாகவைத்து, துணைவர்களோடு மீண்டு இந்த அண்டப்பித்திகையில் வந்து, சுவர்க்கத்தை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

எதிர்கொள் படலம்.

முன்னே தேவர்களால் வருத்தமுற்ற அசுரர்கள் சூரபன்மன் திக்குவிசயஞ் செய்துகொண்டு சுவர்க்கவுலகத்தை அடைந்தமையைக் கண்டு மகிழ்ந்து, களிப்பின்மூழ்கினார்கள். அச்சூரபன்மனுடைய வரவை அசுரராசனாகிய அசுரேந்திரனுக்கு ஒற்றுவர் போய்ச்சொல்ல, அவன் களிப்பு மிகுந்து, சூரபன்மன் பெற்ற அளவில்லாத ஆக்கத்தையும் சிவபெருமானுடைய கருணையையும் மனத்

திற்கொண்டு, சேனைகளோடு சுக்கிராசாரியரிடத்திற்போய், "நான் சூரபன்மனைக் காணும்படி செல்லுவேன். நீர் முன்னே சென்று நம்முடைய முறைமையையுஞ் சொல்லைகளையும் அவனுக்குச் சொல்லுதிர்" என்று அனுப்பினான். அவர் விமானத்திலேறிக்கொண்டு முன்னே போயினார். அசுரராசன் தன்கிளைஞர்களோடு அவருக்குப் பின்னே போயினான். சுக்கிராசாரியர் விமானத்தில் வரும்போது, சூரபன்மன் அவரைத் தூரத்திலே கண்டு எதிர்கொண்டு, அஞ்சலிசெய்தான். ஆசாரியர் மகிழ்ச்சியோடு நின்று, "உனக்குச் செல்வமும் வெற்றியும் மேன்மேலும் விருத்தியாகுக" என ஆசீர்வதித்தார். சூரனுக்குப் பக்கத்தில் வந்த சிங்கன் தாரகன் என்னும் இருவரும் அவரை வணங்கித் துதித்தார்கள். ஆசாரியர் அவர்க்கும் ஏற்றவாறு ஆசிகளைச் சொல்லி, சூரபன்மனை நோக்கி, அசுரராசனுடைய வரவைக்காட்டி, "உனக்கு நாம் அறிவுறுத்துகின்ற ஒரு வார்த்தையுளது. அதனைக் கேள். இவன் காசிபமுனிவனுக்கு மனைவியாகிய உன்னுடைய தாயைப் பெற்றவன்; நுண்ணிய கேள்வியையுடையான்; அளவில்லாத அசுரர்களைப் பாதுகாத்தவன்; எங்களுக்கு ஒரு துணையென்னுந் தன்மையான்; இங்குள்ள இந்திரன் பலநாள் யுத்தஞ்செய்து வெற்றிகொண்டமையால் மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியனைப்போல மாழ்கியிருந்தான்; விதைத்த பயிரினால் வரும் விளைவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் தரித்திரனைப்போலத் தன் சிறுமை நீங்கும்படி உன்னுடைய ஆக்கத்தையே நாடோறும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். நீ யாகஞ் செய்ததையும் சிவபெருமான் உனக்குக்கொடுத்த வரங்களையுஞ் சொல்லக்கேட்டு உவந்து, துன்பத்தை ஒழிந்தான். இவனுடைய தோள்கள் இப்போது பூரித்தன. நீ சிவபெருமானிடத்திற் பெற்ற வரத்தோடு திக்குவிசயஞ் செய்துகொண்டு இங்கே வரும் மேன்மையைக்கேட்டு உன்னைக்காண வருகின்றான்" என்று சொன்னார். சூரபன்மன் இவைகளைக்கேட்டு உவகையால் நிறைந்த மனத்தினனாய் நின்றான். அசுரராசன் தன்கிளைகளோடுவந்து சூரபன்மனைத் தொழுது துதித்து, பிரிந்துபோய உயிரைப் பெற்ற உடல் போலாயினான். சூரன் அவனைப்பார்த்து, "நீ சந்தோஷத்தோடிருக்கின்றாயா" என்று வினாவினான். அவன் "நங்குலத்தலைமை விளங்கும்படி உதித்த நீ யிருக்கும்போது நம்மாட்டுத் தீயன அடையுமோ, சிறுமைகள் வருமோ" என்று உபசாரவார்த்தைகளைச் சொல்லிச் சூரனுக்குப் பக்கத்திற் போயினான். சூரன் அசுரசேனைகள் சூழ வெற்றியோடு விரைந்து பூமியில் மீண்டான்.

பிரமாவும் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் "சூரபன்மன் மண்ணுலகத்தினில் வந்தான்" என்னுஞ் சொல்லைக்கேட்டு, துண்ணென வந்து, விட்டுணு நித்திரைசெய்யும் பாற்கடலிற் புகுந்து, அவனை அணுகி நின்று கைகூப்பி வணங்கி, தாங்கள் சூரபன்மனால் அடைந்த சிறுமைகளெல்லாவற்றையும் சொல்லி, "இனிமேல் யாங்கள் செய்கின்றதென்கொல்? சொல்லும்" என்றார்கள். அவர்கள் கூறிய வார்த்தைகளை விட்டுணு கேட்டு, "புன்றொழிலையுடைய தக்கன் செய்த யாகத்திற் புகுந்த தீமையினால் இது நமக்கு வந்தது. இதனை விலக்குவார் யார்! இனிச் செய்வதொன்றை நாம் சொல்லுகின்றோம் கேளுங்கள். சூரபன்மன் சிவபெருமானிடத்தில் வரம் பெற்றுள்ளான். அண்டங்கள் எவற்றையும் வென்றான். ஆதலால் அவன் நம்மால் வெல்லுந் திறத்தனல்லன். நாம் அவனைப் போய்க் கண்டுவருவோம். இதுவே காரியம்" என்றார்.

பிரமாமுதலிய தேவர்களும் முனிவர்களும் "இதுவே செய்யத்தகுவது" என்று இசைந்தார்கள். விட்டுணு சேஷசயனத்தை நீங்கி அவர்களோடு சூரபன்மனைக் காணும்படி வந்தார். அவர்கள் எல்லாரும் சூரனுக்கெதிரே போய் நின்று ஆசீர்வதித்துத் துதித்தார்கள். சூரன் அவர்களுட் பதினொருகோடி யுருத்திரர்கள் ஒருங்கு நிற்பக்கண்டு, "சிவபெருமானைப்போல அமைந்த வடிவத்தினராய்த் தொகையான் மிகுந்த இவர் யாவர்" என்று வினவ, விட்டுணு சொல்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

உருத்திரர்கேள்விப்படலம்.

"இராசாதிராசனே, இவர்களுடைய வரலாற்றைச் சொல்வேன் கேள்: பிரமன் முன்னொரு கற்பகாலத்தில் மூவுலகங்களையும் உயிர்களையும் படைத்து அதனால் அகந்தை கொண்டு, தன்னையும் பரம் என்றுன்னிச் சிவபெருமானை மறந்து அதன்மேலும் படைத்தான். சராசரங்கள் அவன் முன்படைத்த வளவினன்றிப் பெருகாவாயின. அதனைக் கண்டு, 'நான்செய்த குறை யென்னை' என்று நோக்கி, 'எம்மை முன்னளிலே பெற்றருளிய பஞ்சகிருத்திய முதல்வராகிய சிவபெருமானை அயர்த்தேன்போலும். இனி அவரருளைப் பெற்றாலன்றி இந்தப் படைத்தற்றொழில் கைகூடாது' என்று எண்ணி, அளவில்லாதகாலம் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தான். சிவபெருமான் அவனிடத்து எழுந்தருளிவந்திலர். அவன் அதனை நினைத்து, 'தீவினையேன் முன்பு பரமபிதாவாகிய சிவபெருமான் எங்ஙனம் வெளிப்பட்டருளுவர்' என்று ஏழைகள்போல் ஏங்கித் துன்பமுற்றுப் பெருமூச்சு விட்டழுதான். அவன் வேறென்செய்வான்! அப்பொழுது, அவன் கண்ணீர் விழவிழப் பேய்களாய் மிக எழுந்து நெருங்கிற்று. பிரமன் அப்பேய்களைக் காணுதலும், இடருழப்ப வீழ்ந்து, இறந்தனன்போலச் சோர்ந்தான். உயிர்க்குயிராகிய சிவபெருமான் உணர்வைக் கொடுத்து, அவன்கனவில் வந்து, 'மைந்தனே இனி வருந்தாதே, எழுக. நீ உன்னைப் பரம்பொருளென்று மதித்து எம்மை மறந்தாய். அதனால் உனக்குச் சிருட்டித் தொழில் கைகூடிற்றில்லை. விரைவில் அது முடியும்படி நம்முடைய பதத்திலுள்ள உருத்திரரை உன்னிடத் தனுப்புவோம்' என்று அருளிச்செய்தார். உடனே பிரமன் கனவிற்கண்ட அற்புதத்தோடெழுந்து, செம்மையாகிய நெறியைப்பொருந்தி, மனத்திற் றெளிவடைந்து, அக்கனவை நினைந்தலும், சிவபெருமானுடைய திருவருளினாற் பதினொரு உருத்திரர்கள் அவனுடைய நெற்றியினின்றும் வெளிப்பட்டு நின்றார்கள். அவர்களைப் பிரமன் பார்த்து, 'நீர் நமது நெற்றித்தலத்தில் வந்த காரணம் என்னை' என்று வினவ, 'உன் படைப்புத்தொழில் கைகூடும்படி சிவபெருமான் எங்களை விடுத்தருளினர் ஆதலினால் வந்தோம்' என்று அவர்கள் கூறினார்கள். அதுகேட்ட பிரமன் 'என்பால் அன்போடு வந்த நீங்கள் விரைவில் உயிர்களைப் படைக்குதிர்' என்று கூற, அவர்கள் தம்மைப்போலப் பதினொருகோடி யுருத்திரர் கூட்டத்தைத் தந்தார்கள்.

பிரமன் அதனைப் பார்த்து, 'உயிர்களை இருவினைக்கீடாகப் படைப்பதன்றி, நீங்கள் இவ்வாறு படைத்தல் நெறியல்ல' என்னலும், பதினொருருத்திரரும் 'நீ உயிர்களை முன்போலப் படைத்துக்கொண்டிருப்பாய், நாம் இப்பொழுதே எமது பதத்திற் போவோம்' என்று கூறி, பிரமன் யாவையும் படைக்கும்படிசெய்து, தாம் படைத்த பதினொருகோடியுருத்திரர்களையும் 'தேவர்களோடு இருக்குதிர்' என்று சொல்லி, சிவபெருமான் ஆதிகாலத்திலே தமக்குக் கொடுத்தருளிய புவனத்தையடைந்தார்கள். அவர்கள் உண்டாக்கவந்த பலர் முதலிய பதினொரு கோடி யுருத்திரராயுள்ளார் இவர்கள். இவர்கள் சிவபெருமானுடைய திருவருளினால் தேவர்குழுவோடு சேர்ந்துற்றார்" என்று விட்டுணு கூறினர். சூரபன்மன் அவர்களுடைய வரலாற்றைக் கேட்டு வியந்தான்.

திருச்சிற்றம்பலம்.

நகர்செய்படலம்.

அதன்பின் சூரபன்மன் ஆண்டுள்ள தெய்வத்தச்சனை நோக்கி, "நாம் வசித்தற்கேற்ற அழகிற் சிறந்த ஒரு நகரத்தை விரைவிற் செய்குதி" என்றான். அவன் நன்றென்று வணங்கி, "உங்களுக்காகச் செய்யும் நகரத்துக்கு எல்லை சொல்லுதி" என்ன, சுக்கிராசாரியர் அவ்வெல்லையைக் கூறினர். தெய்வத்தச்சன் அவ்வெல்லையைக் கேட்டறிந்து, தென்சமுத்திரத்தையடைந்து, சூரபன்மனுடைய நகரம் எண்பதினாயிரயோசனை விரிவுடையதாகக் கோலி, மலைகளினால் அதனைத்தூர்த்து, பாசறைகொண்டு சமமாக நிலம்படுத்து, செம்பொன்னால் மதிலையும் மதிலுறுப்புக்களையும் நான்கு வாயில்களையும் நான்கு வாயில்களிலும் நான்கு கோபுரங்களையும் செய்து, ஒவ்வொன்று நூறு யோசனையுடையனவாகப் பற்பல வீதிகளையும், மூன்று மதில்களையும், அளவிறந்த பொன்மாடங்களையும், அளவிறந்த நடனசாலைகளையும், மாளிகைகள் தோறும் தெற்றிகள் மண்டபங்கள் முன்றில்கள் கோபுரங்கள் செய்குன்றங்கள் சூளிகைகள் அரங்குகள் மன்றங்கள் மேன்மாடங்கள் சாளரங்கள் என்னு மிவைகளையும், சோலைகளையும், வாவிகளையும் தனித்தனி உண்டாக்கி, அதன் நடுவே பதினாயிரயோசனையுடையதாகிய ஒரு மதிலைச் செய்து, அதனடுவே சூரபன்மன் இருத்தற்காக ஒரு கோயிலை அழகுற வியற்றினன். கசரத துரகங்கள் செல்லுதற்குரிய தோரணவாயில்களையும், கசரததுரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளும் தங்குதற்குரிய இடங்களையும், அசுரத்தலைவர்களும் பிறருமிருக்கு மிடங்களையும், அரம்பையர்கள் பாடலாடல்கள் செய்யுமண்டபங்களையும் மயில் புறா முதலிய பக்ஷிசாதிகளும் கருங்குரங்கு மான்முதலிய மிருகசாதிகளும் இருக்கு மண்டபங்களையும், வேதாத்தியயன மண்டபங்களையும், யாகமண்டபங்களையும், மந்திரிகள் இருக்கு மண்டபங்களையும், இந்திரன் முதலாயினோரிருக்கு மண்டபங்களையும், பெண்களிருக்கு மண்டபங்களையும், சூரன் அரசிருக்கும் அத்தாணி மண்டபத்தையும், பலவகைத் திரவியங்களிருக்கு மண்டபங்களையும், சிவபெருமான் கொடுத்தருளிய படைக்கலங்களிருக்கு மண்டபங்களையும், அன்னமண்டபங்களையும், கஸ்தூரி

முதலாகிய வாசனைத்திரவியங்களும் வெற்றிலைபாக்கு முதலாயினவும் இருக்கு மண்டபங்களையும், பலபெண்கள் இருக்கு மண்டபங்களையும், ஊசலாடு மண்டபங்களையும், நவரத்தின மண்டபங்களையும், சந்திரகாந்த மண்டபங்களையும், அரசருக்கேற்ற பிறவற்றையும் செய்து, சூரபன்மனும் அவனுடைய பட்டத்துத் தேவியும் இருத்தற்கு ஒருறையுளையும் அதனைச்சூழ அவன்மனைவியர்களாகிய மற்றைப்பெண்கள் இருத்தற்குரிய தானங்களையும், இவைகளுக்கருகில் வாவி ஓடை முதலிய நீர்நிலைகளையும், சோலைகளையும், செய்குன்றுகளையும, இவைபோன்ற பிறவற்றையும் இயற்றினன்.

சமுத்திரம் அகழியாக அதன் மத்தியிலிருக்கும் இந்நகரத்திலுள்ள கோயிலின் ஒளியினாற் பொன்னுலகமும் பொலிவுகுன்றியது. தனக்கு நிகரில்லாத சூரபன்மன் வெற்றியும் பெருந்தலைமையும் பொருந்த இருத்தலால் அந்நகரத்திற்கு "வீரமகேந்திரபுரம்" என்று ஒரு பெயரைத் தேவத்தச்சன் சூட்டி, அதன் எண்டிசையினும் ஏமபுரம் இமையபுரம் இலங்கைபுரம் நீலபுரம் சுவேதபுரம் அவுணர்புரம் வாமபுரம் பதுமபுரம் என்னும் எட்டு நகரங்களையும் அழகுபெற வமைத்தான். இவ்வாறு வீரமகேந்திரத்தைச் செய்தபின்பு, வடசமுத்திரத்தினடுவில் எண்பதினாயிரயோசனை விசாலமுடையதாக ஆசுரம் என்றொரு நகரத்தைச் சிங்கமுகாசுரனுக்காகச் செய்தான். மற்றைச் சமுத்திரங்கடோறும் தீவுகடோறும் சூரபன்மனுடைய சேனைகள் சுற்றங்களோடு வசித்தற்குப் பலநகரங்களை அமைத்தான். அதன்பின் விச்சுவகன்மன் மாணவர்களோடு மேருமலையின் தென்பக்கத்திலுள்ள நாவலந்தீவில் ஏமகூடமலைக்கு ஒருசாரிற் போய், அவ்விடத்தில் தாரகாசுரனுக்காக மாயாபுரம் என்னும் ஒரு நகரத்தை அணிபெற உண்டாக்கி, சூரபன்மனுக்குச் சொன்னன். அவன் சேனைகளோடு தன்னகரத்துட் குடிபுகுந்தான்.

திருச்சிற்றம்பலம்.

பட்டாபிடேகப்படலம்.

சூரபன்மன் வீரமகேந்திரத்துட் புகுந்து, அந்நகரத்தை உற்றுப்பார்த்து, விச்சுவகன்மன் கற்ற வித்தையை வியந்து களித்து, தன்கோயிலை அடைந்தான். பிரமாமுதலிய தேவர்கள் "அரசனுக்கு முடிசூட்டுதும்" என்று அதற்கு வேண்டிய உபகரணங்களெல்லாவற்றையும் வருவித்தார்கள். கோயிலினுட் புகுந்த சூரபன்மன் ஒரு பீடத்திலிருந்து, தேவர்கள் சமுத்திரஜலத்தாலாட்டச் சிறப்புடனாடி, பீதாம்பரத்தை உடுத்து, புஷ்பத்தைச் சூடி, ஆபரணங்களைப் பூண்டு, தம்பிமார்கள் இருமருங்கும் வர, அவுணர்களும் அவர்க்கரசனாகிய அசுரேந்திரனும் தேவர்களும் வணங்கித் துதிக்க, இந்திரன் மனந்தளர, சுக்கிரனும் முனிவர்களும் புகழ, வந்து சிங்காசனத்திலேறினன். அப்பொழுது பிரமாவானவர் கிரீடத்தை எடுத்துச் சூட்டினார். அவுணர்கள் அதனைக்கண்டு, சூரனுடைய கால்களை வணங்கி, அடங்காத மகிழ்ச்சியாற் சிறந்தார்கள். தேவர்களும் முனிவர்களும் அவனுடைய முடியின்மீது பொற்பூக்களை முறைமுறையாகத் தூவி வாழ்த்

தினார்கள். அதன்பின் தம்பியர்கள் பிரமாவையும் விட்டுணுவையும் "இருங்கள்" என்று அநுமதிசெய்ய இருந்தார்கள். அத்தம்பியர்களுடைய ஏவலினால் இந்திரன் காளாஞ்சியை ஏந்தினான்; குபேரன் அடப்பையைத் தாங்கினான்; வாயு சாமரை வீசினான்; அவுணர்க்கரசனாகிய அசுரேந்திரன் உடைவாள் பிடித்தான்; சூரிய சந்திரர்கள் குடையை நிழற்றினார்; வருணனும் புத்திரர்களும் ஆலவட்டம் வீசினர்; கருடரும் கந்தருவரும் சித்தரும் இசைபாடினர்; யமனும் அக்கினியும் பிரம்பை யேந்தி எவரையும் விலகும்படி கோபத்தோடு பார்த்து ஆரவாரித்துப் பத்தியாக நிறுத்தி, சூரனுடைய புகழ்களைத் துதித்து நின்றார்கள்; நிருதி கெண்டியை ஏந்தினான்; தேவகுருவும் அசுரகுருவும் பல முனிவர்களும் பொற்கலத்திலுள்ள கங்காசலத்தை அறுகிற் றோய்த்துத் தூவி ஆசி கூறினார்கள். அரம்பை மேனகை முதலிய தெய்வப்பெண்கள் சுதியோடு பாடி யாடினார்கள். இவ்வாறே தேவர்களும் பிறரும் தத்தமக்குரிய ஏவல்களைத் தவறாது மேற்கொண்டு செய்ய, சூரபன்மன் சிங்காசனத்தின்மீது ஐசுவரியத்தோடு வீற்றிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

அரசுசெய்படலம்.

பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றுச் சிங்காசனத்தின் மீதிருக்கின்ற சூரபன்மன் விட்டுணுவை நோக்கி, "நீ என்பிதாவாகிய காசிபமுனிவருக்குப் பாட்டன் ஆதலால் உன்னை நாம் அழைக்குந்தோறும் விரைந்து வருக" என்றும், பிரமாவை நோக்கி, "உன் புத்திரர்களோடு எந்நாளும் இங்குவந்து பஞ்சாங்கஞ் சொல்லிப்போகுக" என்றும், சூரியனை நோக்கி, "நம்மூர் மதிலின்மேலாற் போதல் உனக்கரிது ஆதலால் கீழ்மேற்றிசைகளிலுள்ள கோபுரவாயில்களின் வழியாற் புகுந்து ஆகாயத்திற் போய் எந்நாளும் இளங்கதிராய் எறித்துத் திரிதி" என்றும், சந்திரனை நோக்கி, "இனி வளர்தல் தேய்தல் சுருங்குதல் ஆகிய இவைகளை விடுத்துப் பூர்ணகலையோடு கீழ்மேற் கோபுரவாயிலாற் சஞ்சரிக்குதி" என்றும், அக்கினியை நோக்கி, "நம்மூரிலுள்ளவர்கள் யாவர் நினைத்தாலும் அவரிடத்து வந்து அவர் பணிகளைச் செய்து யாவர் தீண்டினும் செந்தாமரைமலர்போலக் குளிருதி" என்றும், யமனை நோக்கி, "உலகத்துயிர்களை நாளுங் கவர்வதுபோல நம்முடைய யானைக்குதிரைகளையும் அவுணர்களையும் கொல்வதைக் கனவிலுங் கருதாது அஞ்சித் திரிதி" என்றும், வாயுவைப் பார்த்து, "இநநகரிலுள்ளார் யாவரும் அணிந்து நீக்கிய மாலையும் ஆபரணங்களும் சந்தனமுமுதலாகிய குப்பைகளை அவ்வப்பொழுதில் நீக்குதி" என்றும், வருணனைப் பார்த்து, "பச்சைக்கருப்பூரம் கஸ்தூரி என்னு மிவற்றைச் சந்தனத்தோடளாவிப் பனிநீரிற் கலந்து காற்றுப் பெருக்கிய இடங்கடோறும் தெளிக்குதி" என்றும், இந்திரனை நோக்கித், "தேவர்களோடும் திக்குப்பாலகர்களோடும் முனிவர்களோடும் வந்து நாம் சொல்லிய பணிகளைச் செய்து திரிவாய், இதிற் றவறுதே" என்றும் இவ்வாறே தன்பணியிற்றவறுதொழுகும்படி யாவர்க்கும் வெவ்வேறாகக் கட்டளை

யிட்டான். அவர்கள் அஞ்சி "உன்கட்டளைப்படி செய்வோம்" என்று சொல்லி அவ்வாறொழுகினார்கள்.

சூரபன்மன் இப்படி அரசுசெய்து, பின் மணஞ்செய்ய எண்ணி, தெய்வத் தச்சன் மகளாகிய பதுமகோமளை என்பாளைச் சுக்கிரன் விதிப்படி மணஞ்செய்து கொடுக்க அவளோடு கலந்திருந்தான். அதன்பின் தேவர் கந்தருவர் முதலாகிய பலசாதிகளிலுமுள்ள அளவில்லாத பெண்களைக் காமக்கிழத்தியர்களாக மணஞ் செய்து, இன்பமனுபவித்தான். சிங்கமுகனுக்கு யமனுடைய மகளாகிய விபுதை என்பாளையும், தாரகனுக்கு நிருதியின் புதல்வியாகிய சவுரியையும் விவாகஞ்செய்து கொடுத்தான்.

இவ்வாறு மணஞ்செய்து கொடுத்தபின், சூரபன்மன் இரண்டு தம்பியர்களையும் நோக்கி, "உங்களுக்காக விதித்த நகரங்களில் இரண்டுகோடி வெள்ளஞ் சேனைகளோடுபோய் இருங்கள்" என்று அனுப்பி, சேனைத்தலைவர்களிற் பலரை நோக்கி, "நீங்கள் இரண்டு கோடிவெள்ளம் சேனைகளோடு தீவுகளிலும் சமுத்திரங்களிலும் செய்யப்பட்ட நகரங்களிற் போயிருக்குதிர்" என்று அனுப்பினான். எட்டுத்திசைகளினும், மேலுலகம் ஏழினும், கீழுலகம் ஏழினும், ஒழிந்த இடங்களினும் தன்னுடைய ஆணையை நடாத்தும்படி எல்லையில்லாத அசுரர்களை ஆறுகோடிவெள்ளஞ் சேனைகளோடு செல்ல ஏவினான். இவ்வாறு சூரபன்மனால் அனுப்பப்பட்ட அவுணசேனைகள் விண்ணுலகத்தினும், மண்ணுலகத்தினும், எண்டிசைகளினும், எழ்பிலங்களினும், மலைகளினும், ஆகாசத்தில் உதித்த அளவில்லாத நக்ஷத்திரங்கள்போல மலிந்தன. தன்சேனைகள் எங்கும் இடையறாது நெருங்குதலும், சூரபன்மன் தானிருக்கும் வீரமகேந்திரபுரியில் இலக்கம்வெள்ளம் அவுணர்களை மாளிகைகள்தோறும் முறையே இருக்கவைத்தான்; யானை குதிரை யாளி கரடி புலி பன்றி சிங்கம் மரை என்னும் முகங்களையுடைய அவுணத்தலைவர்கள் எண்மருக்கும் வீரமகேந்திரத்தின் எண்டிசையிலுமுள்ள எட்டுநகரங்களையுங் கொடுத்து, தனித்தனி பதினாயிரம் சேனைகளோடும் அதனைக் காக்கவைத்தான்; அந்நகரத்தைச் சூழ்ந்த மதிலிலுள்ள நான்குவாயில்கடோறும், அந்நகரின் மதில்கடோறும், கோயில்கடோறும் காவல் செய்யும்படி எல்லையில்லாத வீரர்களை நிலையாகவைத்தான். இதன்பின் சூரபன்மன் துர்க்குணன், தருமகோபன், துன்முகன், சங்கபாலன், வக்கிரபாலன், மகிடன் முதலாயினோரை மந்திரிமார்களாகத் துணைக்கொண்டு, தேவர்கள் துதிக்க வீற்றிருந்து அரசுசெய்தான்.

திருச்சிற்றம்பலம்.

தேவரையேவல்கொள்படலம்.

சூரபன்மன் இவ்வாறு அரசுசெய்யுங் காலத்தில், தேவர்களும் முனிவர்களும் அவனுடைய ஏவலின் வண்ணம் மகேந்திரபுரியிலும், சிங்கமுகனுடைய ஆசுரத்திலும், தாரகனுடைய மாயாபுரத்திலும், மற்றை அசுரர்களுடைய பல பதிகளிலும் சென்று, அவர் பணித்த பணிகளைச் செய்து ஊசல்போல உலைந்து திரிவர்.

அக்காலத்தில் ஒருநாள், சூரபன்மன் இந்திரனையும் தேவர்களையும் வலிந்தழைத்து, "நீவிர் அவுணர்களுக்குத் தம்பியர், அவர்பணி நும்பணியன்றே? கடலிலுள்ள மீன்களை நாடோறும் வாரிக்கொண்டுவந்து கொடுங்கள்" என்று பணித்தான். தேவர்கள் அதனைக்கேட்டு மனநடுங்கிச் சோர்ந்து வெள்கி, "கடலிலுள்ள மீன்களைப் பிடித்துக்கொண்டுவந்து தருக என்றான்; இதற்கினி நாஞ்செய்வதேது; பிரமா நந்தலையில் இப்படியும் விதித்தாரே" என்று இரங்கி மறுத்தற்கஞ்சி, "அவ்வாறே செய்வோம்" என்று அவனை வணங்கிப்போயினார்கள். போகின்ற வழியில் இந்திரனும் தேவர்களும் பொருமி ஏங்கி, "நமக்கு வருகின்றது ஒரு பழியன்றே! அது வருவதற்கு முன் சாகின்றதே மிகவும் இனிதாகும். நமக்கதுவும் வாராது; ஐயோ வேகின்ற மனத்தையுடையேம் செய்வதென்னை" என்று புலம்பிக் கடலையடைந்தார்கள். இந்திரன் வருணனையழைத்து, "சமுத்திரத்துக்குத் தலைவன் நீயன்றே; உன்னினும் வலியருளரோ. திமிங்கில முதலிய மீன்களை இக்கரையில் ஏற்றுவாயாயின், எம்மைத் துயர்க்கடலின்கரையில் ஏற்றினவனாவாய்" என்றான். வருணன் அதனைக்கேட்டு, "தேவர்க்கரசனாகிய நீயும் வருந்துகின்றனையோ, இத்தொழிலை யான் செய்வேன்" என்று கூறிக் கடலுட்புகுந்து, கைகளாலலைத்து, அங்குள்ள மீன்களையெல்லாம் கரையிலே மலைபோல உயர்த்தினான். கடற்கரையில் வருணன் உயர்த்திய மீன்களை இந்திரன் பார்த்து, தேவர்களை அழைத்து, "இவற்றை எடுப்பது உங்கள் தொழில்" என்றான். அவர்கள் நடுங்கி மனம் பதைத்துக் கண்ணீர்விட்டு நாணி, யமன் உயிரைக் கவரச் சூரியன் உலர்த்திய சின்னை திமிங்கில முதலிய மீன்களைப் பாம்புகளாற் கட்டினர். அச்சுமைகளை இந்திரன் தேவர்களுக்கு எடுத்த, அவர்கள் கொண்டுசென்று இரங்குகின்றார்கள்: "சூரபன்மனாகிய தீயவனால் முன்னமுந் துயர்க்கடலின் மூழ்கி வலியழிந்தோம். பழியாகிய இத்தொழிலையுஞ் செய்தோம். இன்னும் நமக்கு வருந்தொழிலேதோ அறியேம்! சூரனுடைய பணியினால் நமக்கு இன்று வருகின்றது பழிமொழியே. அது நம்முயிரை ஈர்கின்றது. விதியே நமக்கு இதுவும் தீர்கின்ற காலமுண்டா நீ சொல்லுவாய். பூவுலகில் வசிக்கும் மனுடரும் பாவமென்று நூலிற் சொல்லுகின்ற இத்தொழிலை எவர் செய்கின்றார். இது எமக்கோ வந்தெய்துவது! தேவகதியினும் நரகம் சிறப்புடைத்து. செய்யத்தகுவனவற்றை உணராத அசுரர்களினும் மனுடர்களினுந் தாழ்வாகிய வலைஞர்தொழிலைச் செய்தோம். இந்த விண்ணுலகவாழ்வை விரும்பி யாஞ்செய்த மிக்க தவமும் வினையாய் விளைந்ததே. வேதாசாரத்தை விலக்கினோம். ஞானநெறிக்குப் புறம்பானோம். தீயவனாகிய சூரன் கோபத்தினாற் சொல்லுகின்ற இழிந்த செயல்களைச் செய்வோமாயின், எம்மினும் உயர்ந்தவர் எவர்! 'ஐந்தரு நீழலில் இன்புற்றிருக்கும் தேவர்கள்' என்று மதிக்குந் தகையேமாகிய யாம் எவர்களும் நகைக்கும்படி இழிவோடு மீன் சுமந்து அசுரர்களுக்கு முன் செல்வதினும், சாதல் மிக நன்று நன்று!" என்று இவ்வாறு தேவர்கள் சொல்லிப் புலம்பிக்கொண்டு சூரனுடைய நகரில் வந்தார்கள். அவுணர்கள் அதனைப் பார்த்து, "இவர் சமுத்திரத்தைக் கலக்கி இதோ சில மீன்களைத் தருகின்றார்" என்பாரும், "சூரியன் முன்னுண்ட வெறுங் கோதையோ எமக்குக் கொணர்கின்றார்" என்பாரும், "கடலிலுள்ள மீனைச் சுமந்துகொண்டு வருகின்றார் இவர்க்குச் சிறிதும் நாணமில்லையோ" என்பாரும், "தீங்குசெய்தால் யாராயினும் செய்யாததேது" என்பாரும், "இவர்கள் ஊமைகள் போல்வாரோ? ஒன்றும் பேசுகின்றிலர்" என்பாரும், "பரதவர்களே செய்கின்ற இந்த இழிதொ

ழினும் இவர்க்கு வருமோ?" என்பாரும், "நாம் சிந்திப்பதென்ன இது விதியின் செயல்" என்பாரும், "வேதாசாரத்தை விட்டு நமக்குத் தொண்டு செய்யும் பேதைத்தொழிலேயே கடைப்பிடித்தார்" என்பாரும், "வடுப்படாத நம்முடைய குலத்தை இவர் மிக வருத்தினார் இன்னும் என்னபாடுதான் படார்" என்பாரும் ஆயினர். இவ்வாறு அவுணர்கள் பலருஞ் சொல்ல மனம்நொந்து புலம்புந் தேவர்கள் இந்திரனை முற்கொண்டு சூரனுடைய வாயிலை வந்தடைய, வாயிலாளர்கள் சூரனுடைய அனுமதிப்படி உள்ளே விடுத்தார்கள். தேவர்கள் மீன்களைக் கோயிலினுள்ளே சேர்த்தார்கள். சூரன் அதனைக்கண்டு களிப்புற்று, தேவர்காள், நாடோறும் மீன்களைக் கொண்டு வருகுதிர் என்று பணிக்க, அவர்கள் "நன்று" என்று சொல்லிப்போய், எந்நாளும் இவ்விழிதொழிலைச் செய்து புலம்பித் துயர்க்கடலின் மூழ்கி, வைதிகாசாரத்தை இழந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

புதல்வரைப்பெறுபடலம்.

சூரபன்மன் இப்படித் தேவர்களை ஏவல்கொண்டு அரசுபுரிந்து வருநாளில், அவன்செய்த தவத்தினாற் பதுமகோமளை என்னும் பட்டத்துத் தேவியினிடத்தில் ஒரு புதல்வன் பிறந்தான். அவனைச் சூரன் பார்த்து, தன் கிளைஞர்களுக்குச் செல்வங்களை வீசி மகிழ்ச்சியின் மிகுந்தான். இந்திரன் முதலாயினோர் துன்பமுற்றார்கள். அரம்பையர்களும் அசுரப்பெண்களும் அப்புதல்வனை ஆசீர்வதித்துத் தொட்டிலிலேற்றினர். அவன் பிறைபோல வளர்ந்து வருநாளில், ஒருநாள் தொட்டிலிலே நித்திரை செய்யும்போது, அவனுடைய உடம்பிலே சூரியகிரணம் ஒரு நூழைவழியால் வந்து படுதலும், அவன் கோபித்துப்பார்த்து, தொட்டிலினின்றும் ஆகாயத்திற் பாய்ந்து, சூரியனைக் கையாற் பற்றிக்கொண்டு இறைப்பொழுதில் வந்து, தொட்டிலின் காலிற்கட்டி, முன்போல நித்திரைசெய்தான். தேவர்கள் அதனைப்பார்த்து, அச்சமுற்றார்கள். சூரியன் ஆகாயத்திற் சஞ்சரித்தலின்றிப் பிழைபடுதலும், பிரமா அதனை நினைந்து, இந்திரன்முதலிய தேவர்களோடு சூரபன்மனிடத்தில் வந்து, "மகாராஜனே, சூரியனை உன்புதல்வன் செய்த சிறையினின்றும் விடுவித்துத் தருதி" என்றார். சூரன் அதனைக்கேட்டு, "என்மகன் சூரியனைச் சிறைசெய்ததை யான் அறியேன். அவன் சிறைசெய்யும்படி சூரியன்செய்த குற்றம் யாது?" என்றான். "உன் மகனுடைய முகத்திற் சூரியனுடைய வெய்யில் தீண்டியது. அதனால் அவனைப்பிடித்துச் சிறைசெய்தான்" என்று பிரமதேவர் கூறினார். சூரன் தன்புதல்வனுடைய வீரச்செயலைக் கேட்டு மகிழ்ந்து, "நீவிர் என்மகனை அடைந்து மிகவும் இனிய மொழிகளைக் கூறி அவன் விடுத்தபின் சூரியனை இங்கே கொண்டுவருதிர்" என்றான். பிரமா நன்றென்று விடைபெற்று; மேனகை முதலிய அரம்பையர்கள் பாடியாட்டுகின்ற பொற்றொட்டிலிற்கிடக்கும் புதல்வனிடத்தில் வந்து, அளவில்லாத ஆசிகளைச் சொல்லிப் புகழ்ந்து, முன்னிற்றலும், அவன் "நமக்கு வேண்டுவது யாது சொல்லுதிர்" என்றான். பிரமா "இந்தச் சூரியனுடைய சிறையை நீக்குதி" என்

ரீர். புதல்வன் "உன்னுடைய படைக்கலத்தை எனக்குத் தருதியாயின் விடு வேன்" என்றான். அவர் தன்படையைக் கொடுக்க, அவன் சூரியனுடைய சிறை யை விடுத்தான். பிரமா அப்புதல்வனைப் புகழ்ந்து மோகப்படையைக் கொடுத் தார். புதல்வன் சூரியனுக்கும் பிரமாவுக்கும் விடைகொடுத்தனுப்பினன். சூர பன்மன் அவர்களால் அதனையறிந்து, அவ்விருவர்க்கும் விடைகொடுத்து, அந்த நல்லநாளில் தன்மகனுக்குப் பானுகோபன் என்று காரணப்பெயரிட்டான்.

பானுகோபன் அழகினால் மன்மதனையொத்தவனாய் வளர்ந்து விட்டுணு வோடு போர்செய்து அவரை வென்றான். சூரன், பானுகோபனைப் பெற்றபின்பு, அக்கினிமுகனையும், அதற்குப்பின் இரணியனையும், அதற்குப்பின் வச்சிரவாகு வையும் பதுமகோமளை பெற மகிழ்ந்தான். மற்றை மனைவியர்கள் மூவாயிரம் புதல்வர்களைப் பெற்றார்கள். மேற் சொல்லிய புதல்வர்களெல்லாரோடும் சூரபன் மன் மகேந்திரபுரியில் வீற்றிருந்தான்.

சிங்கமுகனுக்கு விபுதை என்னும் பட்டத்துத் தேவியினிடத்தில் அதிசூ ரன் என்று ஒருகுமாரனும், மற்றை மனைவியர்களிடத்தில் நூறு புத்திரர்களும், மிகுந்த வலிமையுடையர்களாய்ப் பிறந்தார்கள். தாரகனுக்குச் சௌரி என்னும் பட்டத்துத் தேவியினிடத்தில் தபோபலத்தினால் ஒரு குமாரன்வந்து தோன்றி, குருவாகிய சுக்கிரனால் அசுரேந்திரன் என்று நாமகரணஞ் செய்யப்பெற்று, அழ கிற் சிறந்தவனாய் வளர்ந்தான். அவன் சகலகலைகளினும் வல்லவனாயினும் தீங் குடைய ஒரு விஞ்சையையும் செய்யான்; பாதகங்களைப் புரியான்; பழியைப்பூ ணான்; நீதியையன்றி வேறெவற்றையும் நினையான்; வீரம்பேசித் தன்னோடெ திர்ப்பவர் உளராயின், அவர் கெடும்படி எதிர்த்து, தன் மார்பின்மேல் அவர் படைத்தழும்பை ஏற்க நினைக்குந்தகைமையான். கள்ளி அகிலைத் தந்தாற்போ லத் தாரகன் இந்த நல்லபுத்திரனைத் தந்து மாயாபுரியில் அரசுசெய்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

வில்வலன்வாதாவிப்படலம்.

சூரன் முதலிய மூவருக்குந் தங்கையாகிய அசமுகி என்று ஒருத்தி உளள். அவள் ஒரு புருஷனுக்கு மனையாள் என்னும் முறையில்லாதவள்; கற்பில் லாதவள்; தருமமில்லாதவள்; தேவர்களுடைய மனைவியர்களைத் தன் தமையன் மாருக்கு மனைவியர்களாகச் சேர்ப்பவள்; முனிவர்கள் செய்யும் யாகங்கள் கெடும் படி தீச்செயல்களைச் செய்பவள்; பாவமே வடிவானவள்; அசுரர்குலங்களை யெல் லாம் மாளச்செய்யும் தீவினைபோல எவ்விடத்திலும் எந்நாளும் உலாவுகின்ற வள்; தன் சுற்றத்தாரை இகழுபவர்களைக் கொன்று தின்பவள்; அழகிற் சிறந்த ஆடவர்களைத் தேடி வலிந்து புணருகின்றவள். இவ்வியல்புடைய அசமுகி ஒரு நாள் துருவாச முனிவருடைய ஆச்சிரமத்தில் வந்து அம்முனிவரைப் பார்த்து, "இவன் செய்யுந்தவத்தை அழிப்பேன், அதுவன்றிப் புதல்வரையும் பெறு வேன்" என்று எண்ணி, அவருக்கெதிரே போயினாள். போதலும் துருவாசமு

னிவர் அவளைப்பார்த்து, "பெண்ணே நீ தனித்துவந்தகாரணம் என்னை? சொல்லுதி" என்ன, அவள் "உம்மை மகிழ்வோடு சேர்ந்து புதல்வரைப் பெறும்படி வந்தேன்" என்றாள். முனிவர் "இவள் சூரனுடைய தங்கை" என்றறிந்து, "நான் உன்னைக் கூடுவேனாயின் என்தவமெல்லாம் அழியும், நீ இங்கே நிற்றல் பழி, நீதியுமல்ல" என்றார். முனிவர் இப்படிச் சொல்லுதலை அசமுகி கேட்டு, "நான் இனி உன்னைச்சேராது போகேன், தப்பிப்போம் நினைவை யொழி" என்று கூறி, அவரை வலாற்காரமாகத் தழுவி அதரபானஞ்செய்தாள். அப்பொழுது அவளிடத்தில் வலிமை மிகுந்த இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களை அசமுகி நோக்கி, வருகவென்று மகிழ்ச்சியோடு தழுவி, "மைந்தர்காள், நீவிர் அசுரகுலத்தில் வந்தீர். சிறந்த தவத்தைச்செய்து வலியைப் பெறுகுதிர்" என்றாள். தந்தை தாயர்களின் வடிவாய் வந்த இருவரும் முறையே வில்வலன் வாதாவி என்னும் பெயரைப் பெற்று, தாயின் சொற்படி பிதாவாகிய துருவாச முனிவருடைய பாதங்களை வணங்கி, அவர் "உமக்கு வேண்டிய தேதென்னை?" என்று கேட்க "உம்முடைய தவம் முழுதையும் நாம் பெறும்படி அருள் செய்யும்" என்றார்கள். முனிவர் "நான்செய்த தவம் முழுதையும் தரேன், வேறொரு பொருள் என்னிடத்துளதாயின் அதனைக்கேளுங்கள் தருவேன்" என்றார். புதல்வர்கள் கோபமுடையராய் "இப்பொழுதே இவனுடைய உயிரைக்கவர்வோம்" என்று விரைந்தெழுந்தார்கள். துருவாசமுனிவர் அவர்களுடைய செயலைப்பார்த்துக் கோபமுற்று, "நீவிர் நாடோறும் முனிவர்களுக்கே துன்பஞ் செய்யுங்கள். அதன்மேல் அகத்தியமுனிவர் உங்கள் உயிரைக் கவர்வார்" என்று சபித்து, "நம்மை இவர் கொல்வார்" என்றெண்ணி மாயையினால் மறைந்து போயினார். வில்வலன் வாதாவி என்னு மிருவரும் தமது தந்தையைக் காணாதவராகி, தாயினிடத்து விடைபெற்றுக் கொண்டு அவ்விடத்தை நீங்கி, வேறொரு வனத்தையடைந்து, முனிவர்களைக் கொல்லுதலையே பொருளாகக்கொண்டு, பிரமதேவரை நோக்கி அக்கினியில் நின்று அளவிறந்தகாலந் தவஞ்செய்தனர். செய்யவும் அவர் வந்திலர். அதுகண்டு பிறிதொன்று செய்யநினைத்து, வில்வலனென்பவன், தம்பியாகிய வாதாவியை வாளாற் றுணித்துக் கிழித்து, பிரமாவுடைய மந்திரத்தை உச்சரித்து, இரத்தத்தையுந் தசையையும் முறையே நெய்யும் அவியுமாக நெருப்பிற் சொரிந்து, ஒருயாகத்தைச் செய்தான். அதுகண்டு பிரமதேவர் பூமியில் வந்து, "அருஞ்செயலைச் செய்வாய், உனக்கு நாம் தரும் வரம் என்னை" என்று கேட்க, வில்வலனாகிய அவுணன் அவருடைய பாதங்களை வணங்கித் துதித்து, "அக்கினியில் அவிப்பாகமாயிறந்த என்தம்பி, குறைவில்லாத வடிவத்தோடு விரைந்தெழல்வேண்டும்" என்றான். என்னலும், "வாதாவி எழுக" என்று பிரமதேவர் சொல்ல, உடனே அவன் ஆர்த்தெழுந்தான். அப்பொழுது வில்வலன் அதிசயித்து, தீமையோடு ஒருசூழ்ச்சியை மனத்திலெண்ணி, பிரமாவைத் துதித்து, "அடியேனுக்கு ஒருவரந்தரல்வேண்டும்" என்று அதனை வேண்டுகின்றவனாய், "ஆட்டினுருவைக்கொண்ட வாதாவி என்னும் என்தம்பி இன்னும் உடம்பு வெட்டுப்படுவனாயின், யான் 'தம்பியே எழுக' என்று சொல்ல, முன்னை வடிவோடு தோன்றி என்முன் வரல்வேண்டும். இவ்வரமொன்றை அடியேன் பெறும்படி அருள்செய்க" என்று பிரார்த்தித்தான். "அவ்வாறே பலகாலம் அதுமுடிக" என்று பிரமதேவர் அருள்செய்து, ஆகாயவழிக்கொண்டுசென்றார்.

வில்வலன் வாதாவியாகிய இருவரும் சூரன்முன் சென்று, "நாம் உன் மருகர், வேறல்லர்" என்று சொல்லி, முனிவர்களைக் கொல்லுதற்குரிய வரத்தைப் பிரமாவினிடத்திற் பெற்றதையுஞ் சொன்னார்கள். சூரபன்மன் அவர்களை மகிழ்ந்து தழுவி, "மருகர்களே, இனிமையுடன் என்னோடிருங்கள்." என்று சொன்னான். அவர்களிருவரும் சிலநாள் அங்கிருந்து பின்பு நிலவுலகத்தில் வந்து, குடகநாட்டிலே; வளஞ்செறிந்த ஒருகாட்டிற்பொருந்திய நாற்சந்தியில் ஓராச்சிரமத்தைச் செய்து, எவர்களும் விரும்பும் எல்லாப்பொருள்களையும் வருவித்து வைத்துக்கொண்டு அங்கே இருந்தார்கள். அவ்வழியில்வரும் முனிவர்களுடைய உயிரைக் கவரும்படி நினைத்து, தம்பியாகிய வாதாவி ஆட்டுக்கடாவாய் நிற்ப, தமையனாகிய வில்வலன் முனிவர் வடிவங்கொண்டிருந்து, அங்கே வரும் முனிவர்களை விரைந்தெதிர்கொண்டு வணங்கி, "அடியேனுடைய ஆச்சிரமத்துக்கெழுந்தருளுக" என்று உபசாரத்தோடு அழைத்துக்கொண்டு சென்று, "சுவாமிகளுக்கு இன்றைக்கு இங்கே திருவமுது" என்று சொல்லி, உணவின்வகைகளையெல்லாம் அப்பொழுதே சமைத்து, ஆடாய் நிற்கின்ற வாதாவியை வாளாற்றுணித்து, கறியாகத்தக்க ஊன்களை வகைபட அரிந்து, கறிகளாகச் சமைத்தபின், அம்முனிவர்கள் அவ்வூனை உண்ணும்படிசெய்து, பின் வாதாவியாகிய தம்பியைக் கூவுவான். கூவியபொழுது ஆடாகிய அவன் உயிரோடுகூடிய உடம்பையுடையனாய், தன்னை உண்ட முனிவருடைய வயிற்றை வலியோடு கிழித்துக்கொண்டுவருவான். பின் இறக்கின்ற முனிவர்களுடைய தசைகளை அவ்விருவரும் உண்டு, ஆடாகவும் முனிவனாகவும் பொருந்தி, முனிவர்கூட்டமெல்லாமிறக்கும்படி நாடோறும் இதனையே செய்திருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

இந்திரன்கரந்துறைபடலம்.

இந்தப்பிரகாரம் இவ்வில்வலன் வாதாவியாகிய அசுரரும் பிறரும் முனிவர்களையுந் தேவர்களையும் வருத்த, சூரபன்மன் இந்திரஞாலத் தேரின்மீதேறி ஆயிரத்தெட்டண்டங்களினுஞ் சென்று, நாடோறும் அரசியலை நடாத்தியிருந்தான். ஒருநாட் பாதலத்திலிருப்பான்; ஒருநாள் திக்குக்களினுலாவியிருப்பான்; ஒருநாள் விண்ணுலகங்கடோறுமிருப்பான்; ஒருநாட் சத்தியவுலகத்திலிருப்பான்; ஒருநாள் வைகுண்டவுலகத்திலிருப்பான். சூரபன்மன் இவ்வாறு நாடோறும் எண்ணிறந்த உலகங்கடோறும் சென்று மாலைக்காலத்தில் விரைந்து மீளுவான். இவ்வாறு அரசுபுரியுங்காலத்தில், மேலே தனக்கு வருங்கேட்டை அறியானாய், இந்திரனைச் சிறைசெய்து அவன் மனைவியாகிய அயிராணியைக் கவருமபடி நினைத்தான். நினைத்த சூரன், தன்னுடைய சேனைத்தலைவனொருவனை அழைத்து, "நீ இப்பொழுதே சென்று, இந்திரனைப் பிடித்துக்கொண்டுவந்து என்முன் விடுவாய்" என்று அனுப்பி, தன் கோயிலைக் காக்கின்றவர்களும் வாள் முதலிய படைக்கலங்களை ஏந்தினவர்களும் ஆகிய ஒன்பதுகோடி அசுரப்பெண்களை விரைந்தழைத்து, "நீங்கள் இந்திரன் மனைவியாகிய அயிராணியைப் பிடித்துக்கொண்டு வந்து

தாருங்கள்" என்று அனுப்பினன். அவர்களெல்லாரும் கோபித்து ஊக்கத்தோடு விண்ணுலகத்திற் சென்றார்கள். செல்லுதலும், அதனைக்கண்ட தூதுவர்கள் விரைந்து சென்று இந்திரனை அடைந்து, "அவுணர்களும் வீரத்தையுடைய பெண்களும் போர் செய்வாரைப்போல வந்தார்கள்; அவர்கள் கருத்தென்னையோ யாம் அதனை அறிந்திலோம்" என்று இந்திரனறியும்படி கூறினார்கள். இந்திரன் அவர்களை விரைந்து அனுப்பி, அவுணர்களுடைய உபாயத்தை எண்ணி, தன் மனைவியோடு மாளிகையை அகன்று, மாயையினால் விரைந்து இப்பூமியிற் சென்றான். சூரபன்மன்விட விண்ணுலகத்துக்குச் சென்ற பெண்களும் வீரரும், இந்திரனிருக்கின்ற அமராவதி என்னு நகரை அடைந்து, * ஆகரம் முதலிய இடங்களை ஆராய்வார்கள். இந்திரனைப் பிடித்துவரும்படி சென்ற வீரர்கள் அவனைத் தேடிக் காணாராயினர். இந்திராணியைப் பிடித்துவரும்படி சென்ற பெண்கள் அவளைத்தேடிக் காணாராயினர். அதனால் அவ்விருபாலாரும் அறிவுசோர்ந்து, கவலைமிகுந்து, "நம்மரசன் இங்கே நம்மை அழைத்து ஏவிய பணியை முடியேமாயினேம்; இந்திரன் அயிராணியோடும் இவ்விடத்தை விட்டுப்போயினன்" என்று அவனுடைய நகரையெல்லாம் ஆராய்ந்தார்கள். நகரெங்குஞ் சுற்றிப் பார்த்துத் தேவர்களைப்பிடித்து, "இந்திரனைக் காட்டுக" என்று அடித்து, "இந்திராணி எவ்விடத்தாள்" என்று வாய்கடோறும் இரத்தம் வடியும்படி குற்றினார்கள். அத்தண்டனையுற்ற தேவர்கள், "எங்களரசனாகிய இந்திரனும் அவன் மனைவியும் சென்றதை யாங்கள் அறியேம். எங்களை வருத்தன்மின். யாங்கள் தூயரூறுகின்றோம்" என்று அவ்வசுரர்களுக்கு அன்பு வரும்படி தளர்ந்து சொல்லினர். அசுரர்கள் அத்தேவர்களைவிட்டு, விண்ணுலகத்தை நீங்கி மகேந்திரபுரியை அடைந்து, சூரபன்மன் முன்சென்று "இந்திரனும் இந்திராணியும் விண்ணுலகத்தை நீங்கிப் புறத்தே போயினர்" என்று பழிபொருந்திய மனத்தினராய்க் கூறினார்கள். சூரபன்மன் அதனைக்கேட்டு, அக்கினிபோலக் கோபித்து, தேடுதற்கரிய மணியை இழந்த நாகம்போலத் துன்புற்று, ஒற்றுவர்களிற் பலரை விரைந்தழைத்து, "இந்திரன் தன் மனைவியாகிய இந்திராணியோடிருக்குமிடத்தைத் தேடிப்பார்த்துவந்து சொல்லக்கடவீர்கள்" என்று தூண்டினன். ஒற்றுவர்கள் வேறுவேறாய் உலகமெங்குந் தேடிக் காணாது திரிவாராயினர். இனி விண்ணுலகத்தில் நிகழ்ச்சிகளைச் சொல்வாம்.

இந்திரன் மனைவியோடு நீங்க, விண்ணுலகம் சந்திரனும் நக்ஷத்திரங்களுமில்லாத இராக்காலம்போன்று சிறிதுஞ் சிறப்பின்றாய்ப் புல்லெனலாயது. வளங்களெல்லாம் அழிந்தன. துன்பம் மிகுந்தது. தேவர்களுடைய மனம் இன்பம் நீங்கி ஒடுங்கியது. அவ்வுலகமெங்கும் புலம்பலோசை எழுந்தது. எல்லாருடைய கண்களும் நீரைப்பொழிந்தன. பொன்னுலகம் உயிர்நீங்கிய உடலையொத்தது.

இவைகள் நிகழுதற்கு முன்னரே, இந்திரனுடைய தம்பியெனப்படும் உபேந்திரனாகிய விட்டுணு விண்ணுலகத்தை நீங்கிப் பழைய வைகுண்டபதத்தை அடைந்தார். இந்திரகுமாரனாகிய சயந்தன், தன் சிறியபிதாவாகிய அவரைக் காண எண்ணி வைகுண்டத்திற் சென்று சிலநாள் அங்கிருந்தான். இருக்

* ஆகரம் - உறைவிடம்.

கின்ற சயந்தன், இந்திரன் அயிராணியோடு மறைந்தோடியதையும், அவுணர்கள் சுவர்க்கத்தில் வந்து அவ்விருவரையுந் தேடி மீண்டபின் தேவர்கள் துன்பமுற்றிருந்த தன்மையையும், வைகுண்டத்திலிருந்து அறிந்து, "பிதாவின் மெலிவைக்கண்டால், தங்குடித்தலைமைகளையெல்லாம் புதல்வர்கள் தாங்குதல் வழக்கமாம், தருமமும் அதுவே; என்பிதாவுமில்லை; யான்போய் என்னகரைக்காப்பேன்" என்று நினைத்து, பொன்னுலகத்தில் வந்தான். சயந்தன் பொன்னுலகத்தை அடைந்து, புலம்புகின்ற தேவர்களைக்கண்டு, தன்னுயிர்போலுந் தந்தை தாயர்களைக் காணாது துன்பக்கடலின்மூழ்கி, ஏங்கி இரங்கி, ஒருசெயலுமின்றிப் பித்தர் போலாயினான். அப்பொழுது, நாரதமுனிவர் அவன் மனத்தைத் தெளிவிக்க நினைத்து அங்கே செல்ல, அவன் நடுக்கத்தோடெழுந்து வணங்கி, ஆசனத்தை இட்டு அவரை அதிலிருக்கச்செய்து, பக்கத்தில் நின்று, "அடியேனைப் பெற்ற தந்தை தாயர்கள் சூர்பன்மனுக்கஞ்சி ஒளித்தோடினர். அவர் சென்ற இடத்தை அறிந்திலேன். எங்களுக்கு இந்தத்தீமை எந்தக்காலம் நீங்கும். எம்பெருமானே சொல்லியருளுக." என்றான். களிப்பை இழந்துநின்ற சயந்தன் இவ்வாறு கூற, நாரதமுனிவர் திருவருளாற் சிந்தித்தறிந்து, இரத்தினாசனத்தில் அவனை இருத்தி, பின்னர் இவைகளைச் சொல்லுவார்: "நன்மை தீமைகள் தாந்தாஞ் செய்த வினையினாலன்றிப் பிறராலே தத்தமக்கு வாரா. அமுதத்திற்கும் நஞ்சிற்கும் முறையே தித்திப்பும் கசப்பும் ஆகிய சுவைவேறுபாடுகளைக் கொடுத்தார் சிலருண்டோ? கற்றறிந்த பெரியோர் இன்பம் வந்தபொழுது அதனை இனிதென்று மகிழார்; துன்பம் வந்தபொழுது அதற்கு நடுங்கிச் சோரார்; 'இன்பமுந் துன்பமும் இவ்வுடலுக்கே இயைந்தன' என்று பழவினையை ஆராய்வர். வறியவர் செல்வராவர்; செல்வர் பின் வறியராவர்; சிறியவர் உயர்ந்தோராவர்; உயர்ந்தவர் சிறியராவர்; இது முறை முறை மாறிமாறிவரும். இதனைப் பழையவினைப்பயனே யென்றறி. உலகவழக்கமு மிதுவே. செல்வமும் வறுமையும், துன்பமும் இன்பமும் என்னும் இவைகளெல்லாம் உயிர்களுக்கு என்றும் நிலையென்று கொள்ளும் பகுதியையுடையனவோ! சந்திரனுடைய நிலாக்கற்றை தேய்தலையும் வளர்தலையும் நாடோறும் முறைமுறையே பொருந்தின. ஆதலினால், உங்களுடைய தாழ்வும் அவுணர்களுடைய உயர்வும் நிலைபெற்று நில்லா. இதனை மெய்யென்றெண்ணுதி. இந்நகரை நீங்கிச் சென்ற உன்பிதாவும் மாதாவும் தம்முருவை மறைத்துச் சென்று பூவுலகத்திலிருந்தார்போலும். சயந்தனே, அந்நாளில் நீ பிறத்தற்குமுன் தேவர்களுக்குத் துயர்புரிந்த கயமுகன் என்னும் அவுணனிறக்கும்படி உன்பிதா முயற்சிசெய்தான்? அதுபோல் இந்தக் கொடிய சூரனும் இறக்கும்படி இன்னும் முயல்வான்" என்றிவைகள் பலவற்றையுஞ் சொல்லி, "இனிக் கொடிய சூரனும் இறப்பான்; உங்கள் துயரும் விரைவில் நீங்கும்; இதை நன்றாய்த் துணிதி" என்று நாரதமுனிவர் சயந்தனைத் தேற்றிச் சென்றார். அவன்மனந் தெளிந்து வருந்திய தேவர்களைத் தெளிவித்து, நாடோறுஞ் சூரனுடைய ஏவல்களைச் செய்யும்படி அவர்களை ஏவி விண்ணுலகத்திலிருந்தான். இனி, நிலவுலகத்திற்சென்ற இந்திரன் செய்த செயல்களைச் சொல்லுகின்றேன்.

இந்திரன், ஐந்தருநீழலிலிருந்தனுபவிக்குஞ் செல்வங்களை வெறுத்து, மனைவியோடு தக்ஷிணதேயத்தில் * பன்னிரண்டு திருநாமங்களையுடைய சீர்காழியை அடைந்து, "இத்தலம் யாமிருத்தற்கு நன்று" என்று துன்ப நீங்கி இருந்தான். அதன்பின் "சிவபெருமானை மனமகிழ்வோடு எப்பொழுது அருச்சிப்போம்" என்றெண்ணி, அங்கே ஒரு திருநந்தனவனம் வைக்க நினைத்து, சந்தனம் அகில் முதலிய விருக்ஷங்களால் வேலிகோலி, சிறுசண்பகம் கோங்கு முதலாகிய தருக்களையும் மல்லிகை முல்லை செவ்வந்தி முதலாகிய புதல்களையும் பழுதறத் தெரிந்துவைத்து ஒரு நந்தனவனத்தை உண்டாக்க, அவைகள் மிகவும் மலர்ந்தன. இந்திரன் அம்மலர்களால் நாடோறும் சிவபெருமானுடைய திருவடிகளை அருச்சித்துக்கொண்டு, அங்கே மனைவியோடிருந்தான். இருக்குநாளில், சூரபன்மன் விடுத்த ஒற்றுவர்கள் இந்திரனைப் பூவுலகமெங்குந் தேடிச்செல்ல, அவன் அதனை அறிந்து, மனைவியோடும் அங்கே மூங்கில் வடிவாய் மறைந்திருந்து தவஞ்செய்தான். ஒற்றுவர்கள் காணாராய்ப் போயினார்கள். அவுணர்களுடைய ஆணையினால், முகில் மழை பெய்யாதாக, தீப்பட்டாற்போல அத்திருநந்தனவனம் வாடியது. அதனை இந்திரன் கண்டு வருந்தி, பிறிதொருசெயலுமின்றி, பிரமவிட்டுணுக்களுந் தேடியறியாத சிவபெருமானைத் தியானித்திரங்கித் துதித்தான். அப்பொழுது, "இந்திரனே நீ வைத்த நந்தனவனம் வாடிப்போயினவெனினும் அழியா; இந்தஸ்தலத்திலே ஒரு ஆறுவரும்; வருந்தாதொழி" என்று ஓரசரீரிவாக்கு ஆகாயத்திலெழுந்தது. அவ்வாக்கை இந்திரன் கேட்டு, "இது எம்பெருமானுடைய திருவருள்" என்று அஞ்சலிசெய்து துதித்து, உரோமஞ் சிலிர்ப்ப, மனமகிழ, திட்பத்தோடிருந்தான். இனி, சீர்காழியில் ஒரு நதி வந்த வரலாற்றைச் சொல்வேன்.

திருச்சிற்றம்பலம்.

விந்தகிரிப்படலம்.

இந்திரன் அசரீரிவாக்கைக்கேட்டு மனத்திட்பமுற்றிருக்க, சிவபெருமானுடைய திருவருளால், பின்னிகழ்வனவற்றை முன்னறிகின்ற நாரத மகாமுனிவர் விந்தகிரிக்கு முன்னேசென்று பல ஆசிகளைச் சொன்னார். சொல்லுதலும், தெய்வவடிவத்தைக் கொண்டு அம்மலை தொழுது, "எம்பெருமானே, நீவிர் எழுந்தருளியது பேரதிசயம்" என்று உபசாரவசனங்களைக் கூற, அந்நாரதமுனிவர், தம்முடைய வசனங்களால் அம்மலை ஏவப்படும்வண்ணம் இதனைச் சொல்லுவார்: "மேருமலையானது, தான் சிவபெருமானுடைய வில்லாகிய வலியினாலும், உலகங்களையெல்லாம் பெற்ற உமாதேவியார் தன்மரபிலே அன்போடுவந்து திருவவதாரஞ் செய்தமையினாலும், மலைகளுக்கெல்லாம் அரசாயிருத்தலினாலும், சூரியனைத் தொடும்படி ஆகாயத்தில் வளர்ந்திருத்தலினாலும், சங்காரகாலமளவும் நின்று இப்பூவுலகமுழுதையுங் காத்தலினாலும், ஆயிரங் கொடுமுடிகளையுடை

* சீர்காழியின பன்னிரண்டு திருநாமங்கள்—பிரமபுரம, வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய, சிரபுரம், புறவம, சண்பை, காழி, கொச்சைவயம, கழுமலம் எனபனவாம்.

மையினாலும், சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற திருக்கைலாசமலை தன்
னொரு பக்கத்திலே பொருந்தியிருத்தலினாலும், சூரபன்மனால் அழியாமையினா
லும், சூரியனும் சந்திரனும் மற்றை ஏழுகிரகங்களும் நக்ஷத்திரங்களுமாகிய
எல்லாருஞ் சூழும்படி நிற்கின்ற பழமையினாலும், தேவர்கள் குடிகொண்டிருத்
தலினாலும், பொன்னைக்கொண்டுயர்ந்திருத்தலினாலும், பலமலைகள் தன்னைச் சூழ்
ந்திருத்தலினாலும் தனக்கொப்பில்லை என்று செருக்குற்றது. பரந்து ஆகாயத்
தில் நிமிர்ந்த மேருமலை, தன் பெருந்தகைமையை மதிக்குந் தன்மையை நீ அறிந்
திலைபோலும்! யாம் அந்தச் செயல்களையெல்லாம் விரைந்து உனக்குச் சொல்லும்
வண்ணம் வந்தேம்" என்று கூறினார்.

தெய்வவடிவாய்வந்த விந்தகிரி இதனைக்கேட்டு, வீரத்தைப்பொருந்தி, பெரு
மூச்சுவிட்டு, "இது நன்று" என்று சிரித்துச்சொல்லும்: "இல்லாகிய இறுமாப்பு
நீங்கப் பலருமிகழ, பெண்களைப்போல நாணமுற்று வில்லாய்வளைந்தது மேன்
மையோ? எந்நாளும் எல்லாவற்றையும் பெற்ற உமாதேவியார், இமயமலையரசன்
செய்த தவத்தால் அவனிடத்தில் வந்திருந்தாரன்றி, அவன் மகளாய்ப் பிறந்த
னரோ? மேருவானவன் 'பூமியைத்தாங்குவேன், என்று உயர்ந்தான்' எவ்வுலகை
யுந் தாங்கியுற்றன இன்னும் பலவுள. அவற்றையுந் தாங்குவது சிவசத்தியே.
சூரியன் முதலியோர் தன்னைச் சூழ்ந்தார்களல்லது நாடோறும் என்னைச் சூழ்ந்
திலரோ, ஏழுதீவுகளிலுமுள்ள கற்களைச் சூழ்ந்திலரோ? அம்மேரு தனக்குப்
பல கொடுமுடிகள் உள்ளன என்று நினைக்குமோ! கள்ளிகளின் அளவிறந்த தலை
களைப் பார்த்தால், நான்குதலைகளையுடைய பிரமதேவர் அவற்றை ஒப்பாகாரோ!
கொடிய சூரபன்மன் 'இதுகல்' என்று அம்மேருவைத் தாக்காமல் விட்டான்.
அவன், சூரபன்மனுக்கஞ்சியிருக்கின்ற சக்கரப்படையையுடைய விட்டுணுவி
லும் வலியனோ! மேருவானவன் 'நாம் பொன்மயமாகிய உருவத்தைப் பொருந்
தினோம்' என்று நினைத்தானோ? அவன் மண்ணாற்செய்து அலங்கரித்த பாவை
யினழகை எண்ணினானில்லை. தன்னிடத்திலிருக்குந் தேவர்கள் பலரும் என்னி
டத்திலிராமல் இகழ்ந்தார்களோ? சிவபெருமான் வீற்றிருக்கின்ற கைலாசமலை
க்கு அருகிலில்லாதது எந்தமலை? ஆதிசேஷன் தன்னைவந்து மறைத்தநாளில்
வாயுவானவன் கோபித்துத் தன்னுடைய மூன்று கொடுமுடிகளையும் பறித்து
வீசியதை யான் அறிந்திலேனோ? வீரபத்திரக்கடவுளாகிய சரபப்பக்ஷி விட்டுணு
வாகிய நரசிங்கத்தின்முன்னே தன்னுரு அண்டமெல்லாம் பொருந்த வளர்ந்த
பொழுது, ஒருபருக்கைக்கற்போல அதன் காலின்கீழ்ப் பொருந்தினான். இதனை
அம்மேரு நினைத்திலனோ! வீரபத்திரக்கடவுள் சரபப்பக்ஷி வடிவங்கொண்ட
பொழுது, அதன் சிறைக்காற்றினால் மின்மினிபோலத் திரிந்தான். அதனை
அறிந்திலனோ! விநாயகக்கடவுள் கயமுகாசுரன்மீது முறித்தெறிந்த கொம்பி
னாலே, பாரதசரித்திரமெல்லாம் அவன்மேல் எழுதப்படும் என்பது தவறுமோ!
மேருவானவன் தானொருமலையன்றி விட்டுணுவோ அல்லன்; பிரமாவோ அல்லன்;
இந்திரனோ அல்லன்; அவன் தன்னை மேலென்றெண்ணியது ஏனோ?" என்று
மேருமலையை இழித்துப்பேசி, "முனிவரே, அந்த மேருமலை தன்னை வியக்கின்ற
செருக்கை யான் நீக்குவேன், பார்ப்பீராக" என்று, விந்தமலை பழையவடிவை
யொழித்து, கோடிவிட்டுணுக்கள் எல்லையில்லாத மாயாசரீரங்களைக்கொண்டு திர
ண்டு நிமிர்ந்தாற்போல ஒரு வித்தையினால் அகன்று ஆகாயத்திலுயர்ந்து, சத்திய

வுலகம்வரையும் நிமிர்ந்து, இமயமலைவரையுமகன்று, நெருக்கியது. விந்தகிரி இந்தப்பிரகாரம் அகன்று மேலே உயர்ந்துசென்று ஆகாயவழியைத் தடைசெய்ய, ஆதித்தன்முதலிய ஒன்பது கிரகங்களும் நக்ஷத்திரங்களும் பிறரும் பார்த்து மனநடுங்கி, "இது அவுணர்களுடைய செயலோ என்பார்; தருமமில்லாத கொடிய இராக்கதர்களுடைய செயலோ என்பார்; அவர்கள் செயலல்லவாயின், பிரம விட்டுணுக்களுடைய செயலோ என்பார்; இது மாயமாகும் என்பார்; மேலேயுயர்ந்த மலையன்றி வெளியிடம் இல்லைபோலும் என்பாராய், சிவபெருமானது திருவருள் துணையாக ஞானத்தால் நோக்க, அது வெளிப்பட்டது. வெளிப்படுதலும், "விந்தமலையானது மேருமலையோடு பகைத்து, மண்ணுலகத்தினும் விண்ணுலகத்தினுஞ் செல்லும் வழியைத்தடுத்தது" என்று சிந்தித்து, "அகத்தியமுனிவர் மேருமலைச்சாரலிற் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துத் தவஞ் செய்துகொண்டிருக்கின்றனர். அவர் இங்கே வந்தால் மேலேயுயர்ந்துநின்ற விந்தம் ஒடுங்கும்" என்று எல்லோரும் ஆராய்ந்து தெளிந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியப்படலம்.

அகத்தியமுனிவரைக்கொண்டு விந்தமலையின்வலியை அடக்குவித்தல் வேண்டும் என்று துணிந்த சூரியன்முதலிய கிரகங்களும் பிறரும் அவரை நினைத்து, இவைகளைச் சொல்லித்துதிப்பார்கள்:—"விட்டுணுவினுடைய பாதங்களை அருச்சிக்கும்படி பூவைக்கொய்த கசேந்திரனென்னும் யானையானது, தன்னை ஒருமுதலை பற்ற, 'என்னையனே' என்று கையை எடுத்தழைப்ப, அவர் வந்து விடுவித்ததை அறியீரோ? பிரமதேவர் தாம் படைத்த திலோத்தமையென்னும் பெண்ணினிடத்து ஆசைவைத்து, கிளியாய்த் தொடர்ந்துசெல்ல, அவள் 'பரம்பொருளே காத்தருளும்' என்று வேண்டுதலும், தேவாதிதேவராகிய சிவபெருமான் அவளுக்கருள்செய்ததை அறியீரோ? தேவர்க்காயினும் மனிதர்க்காயினும் ஒரு துன்பம் வந்தால் அடைந்து அதனை நீக்குதல் காத்தற்குரியாருக்குக் கடனும். அக்கடனை ஆராயின் அது அடைதற்கரிய முத்தியினுஞ் சிறந்ததன்றோ? வேதங்களைத் திருடிக்கொண்டு சமுத்திரத்திலொளித்த சோமுகாசுரனை அழித்த விஷ்ணுவாகிய மீனைப்போல, சமுத்திரத்தை உள்ளங்கையிலடக்கி அதில் மறைந்த விருத்திராசுரனைக் காட்டித்தந்து நம்மிடத்தில் வைத்த மிகுந்த கிருபை உலகமெல்லாவற்றையும் விழுங்கியது. எம்பெருமானே, விந்தமலை நாரதமுனிவருடைய சூழ்ச்சியினால் இப்பொழுது மேருமலையோடு பகைத்து, 'ஊழிக்காலத்திலுயருகின்ற திருக்கைலாசமலைக் கிணையாவேன்' என்று நினைத்தது போலும். அது ஆகாயமெல்லாம் மூடி எழுந்து அண்டகடாகம்வரையும் மேலே உயருகின்றது. இதனைக் கிருபாநோக்கஞ் செய்தருளீரோ? விந்தகிரி ஆகாயவழியைத் தடைசெய்தலால் எங்களுக்குஞ் செல்லுதற்கரிதாயது. நிலவுலகமுழுதும் பொழுதுமயங்கின. முனிவர்பெருமானே இக்குறைகளை நீக்குதற்கு

ளீமுந்தருளி வரல்வேண்டும்" என்று துதித்து அகத்தியமுனிவரை நினைப்பாராயினர்கள்.

சூரியன் முதலாயினோர் இவ்வாறு நினைத்தலும், மேருமலைச்சாரலிலே தவஞ்செய்துகொண்டிருக்கின்ற அகத்தியமுனிவர் அதனை அறிந்து, மேலேயுயர்ந்த விந்தமலையின் வலியை அடக்கி, ஆகாயவழியை முன்போலாக்கித் தேவர்களுடைய குறையை நீக்கும்படி முயன்றார். முயன்று, கண்களில் ஆனந்தபாஷ்பஞ் சொரிய, கைகளஞ்சலிக்க, மனமும் என்பும் நெக்குருக, மயிர்பொடிப்ப, சிவபெருமானைப் புகழ்ந்து தியானித்தார். தியானிக்கும்பொழுது, பரமசிவன் இடபவாகனமேற்கொண்டு பூதர்கள் சூழத் தோன்றியருளினர். அகத்தியமுனிவர் அச்சத் தோடெழுந்து அவரைத் தரிசித்து, அடியற்ற மரம்போல வீழ்ந்து பலமுறை வணங்கி, சந்நிதானத்திலே நின்று துதித்தார். சிவபெருமான் "முனிவனே, நீ விரும்பியது என்னை? அதனை வேண்டுதி" என்று திருவாய்மலர்ந்தருளினர். அது கேட்ட அகத்தியமுனிவர் "எம்பெருமானே, விந்தமலை மேருமலையோடு மாறு கொண்டு ஆகாயவழியை அடைத்தது. அதன்வலியை அடக்கும்படி அடியேனுக்குச் சிறிதருள்செய்க" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான், "முனிவனே, உனக்கு வலிமையைத் தந்தருளினோம். செருக்குற்ற விந்தத்தை அடக்கி, தெக்ஷிணதேயத்தை யடைந்து, பொதியமலையிலிருப்பாய்" என்றருளிச்செய்தார். அகத்தியமுனிவர் அஞ்சலிசெய்து துதித்து, "தேவரீரை அருச்சனை செய்தற்கும், தடாகங்களினும் கிணறுகளினும் நீர் குறைவற்றிருத்தற்கும் தென்றிசைக்கு ஒரு தீர்த்தத்தைத் தந்தருளுக" என்று வேண்டினர். அப்பொழுது சிவபெருமான், திருக்கைலாசமலையிலிருந்த ஏழு நதிகளுள்ளும் பரிசுத்தமாகிய காவேரி நதியை வரும்படி நினைத்தருள, அந்நதி அதனை அறிந்து அஞ்சி, மனவேகமும் பிற்படுமபடி விரைந்து திருமுன்வந்து வணங்கியது. அதனைநோக்கி, "பெண்ணே, நீ குற்றமில்லாத தென்றிசைக்குச் செல்லுகின்ற அகத்தியமுனிவனோடு போதல்வேண்டும்" என்று பணித்தருளினர். "எம்பெருமானே இம்முனிவர் ஐம்பொறிகளையும் அடக்கிய இயல்பினராயினும், ஓர் ஆடவர்; யான் ஒரு பெண்; ஆதலினால் இவருக்குப் பின்னே செல்லுதல் முறையோ! ஆராயின், இது முறையன்று" என்று காவேரியாகிய பெண்ணானவள் சொல்லினள். சிவபெருமான் அதனைக்கேட்டு, "இம்முனிவன் மாறுபாடில்லாத மனத்தினன், நல்வினை தீவினைகளால்வரும் ஆக்கக் கேடுகளிலே சமபுத்திபண்ணும் மனத்தினையுடையன், நம்முடைய அடியார்களுட் சிறந்தவன். இவன் பின்னே செல்வாய்" என்று அருளிச்செய்தார். அந்நதி அதற்கிசைந்து, "இன்றைக்கு அடியேன் இம்முனிவருக்குப் பின்னே செல்வேன். எம்பெருமானே இவரை அடியேன் நீங்குங்காலத்தைச் சொல்லியருளுக" என்று வேண்ட, "பெண்ணே, இது நன்று நன்று. இம்முனிவன் என்றைக்கு உன் பொருட்டாகப்பார்த்துக் கைகாட்டுவானோ அன்றைக்கு இவனை நீங்கிப் பூமியிற் சென்றிருப்பாய்" என்று சிவபெருமான் சொல்லியருளினர். அத்திருவாக்குத் தன் செவிக்கமுதம் போலாக, காவேரியாறு அகத்தியமுனிவருக்குப் பின்னே செல்லுதற்கு உடன்படுதலும், உயிர்க்குயிராகிய சிவபெருமான் அகத்தியமுனிவரைநோக்கி, "காவிரிநதியை உன்கமண்டலத்திலே ஏற்பாய்" என்று பணித்தருள, அந்நதியானவள் அகத்தியமுனிவரை அடைந்

தாள். சிவபெருமான் "முனிவனே தக்ஷிணதேயத்திற்குச் செல்லுதி" என்று விடைகொடுத்து, பூதகணங்களோடு மறைந்தருளினார். அகத்தியமுனிவர் அவரிடத்து விடைபெற்றுக்கொண்டு தென்றிசையை நோக்கி நடந்தார்.

திருச்சிற்றம்பலம்.

கிரவுஞ்சப்படலம்.

அகத்தியமுனிவர் மேருமலையினின்றும் நிலவுலகத்தின்வழியாகத் தெக்ஷிணதிசையை நோக்கிச் செல்லும்பொழுது, தாரகாசுரனுடைய மாயாபுரி என்னு நகரம் சமீபித்தது. அங்கே இருக்கின்ற கிரவுஞ்சன் என்னும், அசுரன் அவருடைய வரவைக்கண்டான். அவன் வானுலகத்தை நிலவுலகமாக்குவான்; நிலவுலகத்தை வானுலகமாக்குவான்; கடலை மலையாக்குவான்; மலையைக் கடலாக்குவான். சூரியனைச் சந்திரனாக்குவான்; சந்திரனைச் சூரியனாக்குவான். அணுவை மேருவாக்குவான்; மேருவை அணுவாக்குவான். பூமியைக் கடலாக்குவான்; கடலைப் பூமியாக்குவான். வடவைத்தீயைக் கடலாக்குவான். ஒருநாழிகையின் பதினாயிரத்திலொருபங்கினுள், தேவர்களுக்காயினும் முனிவர்களுக்காயினும் பல மாயங்களைச் செய்து, பலநாட் கழிந்தபின் அவர்களைக் கொல்வானென்றால், அவன் வலிமைகளையெல்லாம் யாவரறிந்து சொல்லவல்லார். அந்தக் கிரவுஞ்சன் அகத்தியமுனிவர் வரும்வழியில், பல சிகரங்களையுடைய ஒரு மலையாய், தன்னிடத்துய்க்கும் வழியைக்காட்டி நின்றான். நிற்றலும், அகத்தியமுனிவர் கண்டு வியந்து, "நல்லது! இம்மலையின் நடுவே இஃதோர்வழியுண்டு இவ்வழியே செல்வேம்" என்று அவ்வழியே போக, அது ஒரு கூப்பிடுதூரங் கழிந்தபின் இல்லையாக, வேறொருவழி வந்தது. அவ்வழியைக் கண்டு செல்லுதலும், அது பின்னர் இல்லையாக, திரும்பிச்சென்றார். செல்லும்பொழுது, முந்திய வழியையுங் காணாது மயங்கி, பிறிதொருவழியைக் கண்டு வருத்தத்தோடு சென்றார். அவ்வழியாற் செல்லும்பொழுது; அக்கினிநெருங்கிச்சூழ, சுழல்காற்று வீச, மழைபெய்ய, இடியிடிக்க, இருட்படலஞ்சூழ, அளவிறந்த மாயங்களைக் கிரவுஞ்சன் இயற்றினான். அகத்தியமுனிவர் அதனைநோக்கி, "இது கொடியராகிய அவுணர்களுடைய வஞ்சனை" என்று ஞானத்தாலறிந்து, அக்கினி போலக் கோபித்து, கையோடு கைதட்டிச் சிரித்து, "நல்லது நல்லது! இவ்வசுரன் நமக்கிதனைச் செய்வான். இன்றைக்கே இவன் வலிமையைக் கெடுப்பேன்" என்று அவன் மலைவடிவிலே திருக்கரத்தின்கணுள்ள தண்டினாற் குற்றிப் பூழைகளாக்கி, "நல்லறிவில்லாத கொடிய அசுரனே, நீ உன் பழைய அசுரவடிவைநீங்கி மலைவடிவாய் இங்கே நின்று, அவுணர்களுக்கிருப்பிடமாய், முனிவர்களுக்குந் தேவர்களுக்குங் கொடுந்தொழிலைப் புரிதி. உன்மீது நமது கையின்கணுள்ள தண்டினாற்செய்த முழைஞ்சுகளெல்லாம் பற்பல மாயங்களுக்கிருப்பிடமாகுக. பின்னாளில், சிவகுமாரராகிய குமாரசுவாமியினுடைய வேற்படையினால் நீ இறக்கக்கடவாய்" என்று சபித்து, கமண்டத்திலுள்ள நீரை அள்ளி மந்திரத்தோடு தெளித்து, அவன் மாயத்தைக் கெடுத்து, அவ்விடத்தை நீங்கி, தென்றிசையை நோக்

கிச்சென்றார். அந்தக்கிரவுஞ்சனென்னும் அவுணன் முந்தைநாள்வரையும் மலையின்வடிவாய் நின்றான். அவனைத் தேவரீரன்றி வேறியாவர் வதைபுரிய வல்லவர்.

திருச்சிற்றம்பலம்.

விந்தம்பிலம்புகுபடலம்.

அகத்தியமுனிவர் மேருமலையை நீங்கித் தேவகிரிச்சாரலையடைந்து, காசிப்பதியிற் சென்று, விசுவேசுரருடைய திருவடிகளை வணங்கித் துதித்து, அங்கு நின்று நீங்கி விந்தமலைச்சாரலையடைந்து அதனைப்பார்த்து, "மிகவுயர்ந்து ஆகாயத்திற் புகுகின்ற விந்தமலையே கேள், யாம் பொதியமலையிற் போயிருக்கும்படி நினைத்து வந்தோம் அதற்கு நீ இப்பொழுது ஒரு சிறிது செல்லும்வழியைத் தருதி" என்று கூறினார். அதுகேட்ட விந்தமலை, "சூரிய சந்திரர்களும் செல்லுதற்கரிய தன்மையால் ஆகாயவழியை மறைத்து, நெடிய வடிவையுடைய விட்டுணுவைப்போல யர்ன் நின்றேன். குறிய வடிவையுடைய உனக்கஞ்சி வழிகொடுப்பேனோ! எனது தோற்றத்தை நீயறிகிலை. மீண்டுபோதி" என்று சொல்லியது. அகத்தியமுனிவர் அதனைக்கேட்டுச் சிரித்து, சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்து, முன்னாளில் இந்திரன் வேண்டக் கடலில் நீட்டிய திருக்கரத்தைச் சத்தியவுலகம் வரையும் நீட்டி, தேவர்கள் அற்புதமடையும்படி விந்தமலையின் முடியின்மீது மிகவுயர்ந்த உள்ளங்கையை வைத்து, வலிபொருந்த ஊன்றினார். அது பூமியிற் றாழ்ந்து பாதலத்திற் புகுந்து, சேடனுடைய பதத்தை அடைந்தது. பின் அம்மலை அஞ்சி அகத்தியமுனிவரை நோக்கி, "வள்ளற்றன்மையையுடைய முனிவரே கேட்டருளுக. உம்மை வழிபாடு செய்யாது இகழ்ந்து மேன்மையை இழந்தேன். தமியேனுடைய குற்றத்தை மனத்துக்கொள்ளாது எழுங்காலத்தை அருளிச்செய்க" என்று கூறியது. அகத்தியமுனிவர் விந்தமலையின் வசனத்தைக்கேட்டு, "யான் சென்று பின்னர் இவ்வழியே மீண்டால் நீ எழுவாய்" என்று நாரதமுனிவருடைய சூழ்ச்சிக்கிசைய நகையோடு கூறினார்.

விந்தம் பூமியினுள் மறைதலும், அகத்தியமுனிவர் கையை முன்போலச் செய்து, தேவர்கள் பூமழைபொழியப் பொதியமலைக்குச் செல்லக் கருதினார். விந்தம் பூமியினுள் அழுந்தினமையால் ஆகாயம் வெளியிடமாக, சூரியன் முதலாயினோருடைய ஒளிகள் எங்கும் பரந்தன. சூரியன் முதலிய தேவர்கள் விரைந்து அகத்தியமுனிவரை அடைந்து, அஞ்சலித்துத் துதித்து, "தேவரீர் செய்த உதவியை யார்செய்வார். உம்மால் ஆகாயவழியிற் செல்லப்பெற்றோம். இனி நீர் எம்பொருட்டாற் பொதியமலையிற் சென்றிருத்திர்" என்றார்கள். அகத்தியமுனிவர் நன்றென்று இசைந்து, தேவர்களை வானுலகிற் செல்லும்படி விடுத்து, தென்றிசையை நோக்கிச் சென்றார். குடகதேசத்திலிருக்கின்ற வில்வலன் வாதாவி என்னும் இருவரும் தம்முயிர்நீங்கநின்றவர்கள் அவருடைய வரவைக்கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்.

வில்வலன்வாதாவிவதைப்படலம்.

வில்வலன் வாதாவி என்னும் இருவரும் அகத்தியமுனிவர் வருதலைக் கண்டு, "இவன்போலும் அவுணர்களுடைய உயிரைக் கவர்ந்தவன். கடலைக்குடித் துமிழ்ந்தவன். இப்பொழுது தேவர்களுக்கருள்புரியும்படி அடைந்தான்போலும். அவனுக்கிப்பொழுதே உணவைக் கொடுத்து உடம்போடு உயிரையுங் கவர்வோம்," என்றார்கள். அவர்கள் இவைகளைத் தம்முள்ளே பேசிக்கொண்ட பின்னர், தம்பி யாகிய வாதாவி என்பவன், மலைச்சாரலிலே ஆட்டுக்கடாவின் வடிவத்தைக்கொ ண்டு சென்று, தழைகளையும் புதல்களையும் மேய்ந்தான். தமையனாகிய வில்வலன் சடையும், திரிபுண்டரமணிந்த நெற்றியும், சுந்தரவேடமணிந்த காதும், உருத்தி ராக்கவடமும், உடம்பின்மீது உத்தூளித்த விபூதியும், தண்டையேந்திய கையும், மரவுரியுடையுமாக முனிவருக்குரிய தவவேடத்தைத் தாங்கி, அகத்தியமுனிவ ரெதிரே விரைந்துசென்று, மும்முறை வணங்கி அஞ்சலித்துத் துதித்து, "முனி வரே நீர் எழுந்தருளும்படி இந்நாள்காறும் அருந்தவஞ் செய்தேன். இன்றைக்கு முடிவுற வந்தீர். யானும் முனிவர் நிலைமையைப் பெற்றேன். பாவியேனுடைய இருக்கை இது. அது புனிதமாகும்படி எழுந்தருளுதி" என்று கூறி, அவரு டைய பாதங்களைப் பின்னும் பலமுறை வணங்கினான். வணங்குதலும், அகத்திய முனிவர் அவனுடைய தீய எண்ணத்தை நினையாது, மகிழ்ச்சியுண்டாக, "தவத் தினன் மிக்கவனே எழுதி" என்றருளிச்செய்து, "நாற்பத்தெண்ணாயிரமுனிவர் களிடத்தும், மற்றை முனிவர்களிடத்தும், உன் பெருந்தகைமைக்குணத்தில் ஓர ணுவளவுதானும் இல்லை; இது மெய்யென்று தெளிதி. உன்னுடைய ஆச்சிரமம் யாது செல்வோம் வருக" என்றார். என்றுகூறிய அகத்தியமுனிவரை வில்வலன் நோக்கி, "இதுவே அடியேனுடைய குடிசை" என்று அழைத்துக்கொண்டு சென்று, ஆசனத்திலிருத்தி, பாதங்களைப் பூசித்து, "எம்பெருமானே நீர் யானும் என் குலத்தவர்களும் உய்யும்படி எழுந்தருளினீர்போலும். இன்றைக்கு அடியே னுடைய குடிசையிலிருந்து வெந்த புற்கையையேனும் அமுதுசெய்து, அடியே னுக்குச் சேஷத்தைத் தந்தருளிச்செல்லுக" என்றான்.

அகத்தியமுனிவர் வில்வலனுடைய வசனங்களைக்கேட்டு, "அன்பின் மிக் கானே அதுநன்று. உன்மாட்டு உன்னாற் றரத்தக்க உணவை உவந்து அமுது செய்து, பின்னர்ச செல்வதே முறை" என்றுகூறினார். வில்வலன் வணங்கி, "எம் பெருமானே சிரத்தையோடு திருவமுதைப் பாகம் பண்ணுவேன் சிறிதுபொழு திருக்குக" என்றுகூறி, அப்பொழுதே ஒரு தடாகத்தில் ஸ்நானஞ்செய்து மிக வும் பரிசுத்தனாய், மடைப்பள்ளியை அடைந்து, அதனைச் சாணத்தால் மெழுகி, கோலமிட்டு, சமையலுக்கு வேண்டிய உபகரணங்களைத் தேடி, அரிசியை நீரிவி ட்டு மூன்றுதரங் களைந்து வேறொரு குழிசியிலிட்டு, தீக்கடைகோலிலே நெருப் பைக் கடைந்தெடுத்து அடுப்பினுள் மூட்டி, அகில் சந்தனமாகிய விறகுகளை மாட்டி, ஒரு செப்புப்பானையில் உலைப்பெய்து அடுப்பின்மேல் வைத்து, அரிசியை யிட்டுப் பதமறிந்து சமைத்துப் பக்கத்தில் வைத்தான். பின்னர் முதிரைத்தானி யங்களாற் சமைக்கப்படும் அன்னங்களைச் சமைத்து, பாயசான்னம் குளான்னம்

முதலிய விதம்விதமாகிய உணவுகளையெல்லாஞ் சமைத்து, புதுமணங்கமழுகின்ற புனிதமாகிய கறியையுஞ் சமைத்தான். ஆட்டுக்கடாவாய் நின்ற தம்பியாகிய வாதாவியை அகத்தியமுனிவருக்கு முன்னே வலிந்திழுத்துக்கொண்டு வந்து அரிவாளினால் வெட்டி இருதுணியாக்கி, தோலையும் எலும்பையும் நீக்கி, வாளினாற் றுணிப்பனவற்றைத் துணித்தும், அரிவனவற்றை அரிந்தும், சுவையையுடைய உறுப்பிலூன்களைக் கூணிப்போடு அகழ்ந்தெடுத்துப் பல மிடாக்களிலிட்டு, மூன்றுதரம் கழுவி, அக்கறிக்குவேண்டிய உப்பு முதலியவற்றையிட்டு, நெருப்பில்வைத்துச் சமைத்து, மிளகுபொடி முதலியவற்றைந் தூவி, நெய்விட்டுப் பொரிப்பனவற்றைப் பொரித்து, புகைபோகாவண்ணம் மூடிவைத்து, மிளகுபொடியையும் மற்றை வாசனையையுடைய பொடிகளையும் புதிதாக வறுத்த அரிசிப்பொடியையும் தூவி, நெய்யை வார்த்துப் பல காயங்களைக் கூட்டிச் சிற்சில பாகுகள் செய்து, பின்னும் பலமுறை வேண்டியபடியே பொரித்து மூடி, முதலிற் படைக்கும்படிநின்ற பருப்புக்கறியையும் புளிங்கறியையுஞ் சமைத்தான். அதன்பின் பலாப்பழம்முதலிய அளவிறந்த கனிகளைக் கீறி, சருக்கரையையுந் தேனையுங் கலந்து, வாசனைகளையும் மலர்களையுமிட்டு அளவிறந்தனவற்றைச் செய்து, சிவபூசைக்குரிய உபகரணங்களை விரைந்து சம்பாதித்து, ஐவகையுணவுகளையும் அறுசுவைபொருந்தச் சமைத்து, பின்னும் வேண்டியனவற்றை நொடிப்பொழுதிலமைத்து முனிவரர் திருவமுதுசெய்தற்குக் காலாதிக்கமாயிற்றே என்கின்ற துக்கக்குறிப்பைப் புலப்படுத்தும் காரியநிகழ்ச்சியோடு சென்று, அகத்திய முனிவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "எம்பெருமானே, தேவரீர் பெரும்பசிவருத்த மிகவும் வருந்தினீர்போலும்; திருமேனி வாடினீர். தமியேன் இங்கே உணவுகளையெல்லாங் குற்றமறச் சமைத்தேன்; திருவமுது செய்தருளும்படி எழுந்தருளுக" என்று வேண்டினான். அகத்தியமுனிவர் அதற்குடன்பட்டுச் சென்றார். வில்வலன் அவரை மடைப்பள்ளிக்கு அழைத்துக்கொண்டுசென்று, ஆசனத்திலிருத்தி, முகமன்கூறி, கபடமாக அருச்சனைசெய்து, அன்னம் பரிமாறத்தொடங்கி, பொன்வட்டிலைத் திருமுன்வைத்து, அதனைச்சூழ வரிசையாகக் கிண்ணங்களைவைத்து, நீரைவார்த்து அலம்பி, அன்னவகைகளெல்லாவற்றையும் படைத்து, நெய்யை வார்த்தான். பின்பு படைக்கவேண்டிய முறையை ஆராய்ந்து, பருப்புக்கறியையும் ஆட்டுக்கறியின் வகைகளையும் மதுரமுடைய பிறவற்றையும் படைத்து, அகத்தியமுனிவருடைய திருக்கரத்தில் நீரைவார்த்தான். அவர் அதனை இருதரம் உணவைச்சூழ மந்திரத்தோடு சுற்றி, ஒருதரம் ஆசமித்து, பலவாயுக்களுக்குமூட்டி, பின்னுஞ் செய்யவேண்டியவைகளைத் தவறாது செய்து, மிகவிரும்பித் திருவமுது செய்வாராயினார். வில்வலனிடுகின்ற கறியின் வகைகளையும் பிறவற்றையும் முடியும்வரையும் உண்டு, பின்னர் அவன் நீரைக் கையிற்கொடுக்க நுகர்ந்தெழுந்து, பொடியைத்தடவிக் கைகழுவி, வாய் கொப்பளித்து, மூன்றுதரம் ஆசமனஞ் செய்து, தொடுமிடந்தொட்டு, பின்னுஞ் செய்யவேண்டியவைகளை ஓரிடத்திலிருந்து செய்து, அங்கே வீற்றிருந்தார்.

அப்பொழுது வில்வலன் பிரமதேவர் தந்த வரத்தை நினைத்து, அகத்தியமுனிவருடைய உயிரைக் கவரும்படி எண்ணி, "வாதாவியே என்தம்பியே விரைந்து வருவாய்" என்று அழைத்தான். அழைத்தலும், வாதாவி அகத்தியமுனிவருடைய வயிற்றிலே ஆட்டுக்கடாவாயெழுந்து நின்று, "அண்ணா

வில்வலனே, முன்னே மதியாமற் கடலை யுண்டதுபோல என்னுடம்பையுமுண்ட கொடிய இம்முனிவனுடைய உயிரையும் வலியையும் கவர்ந்து, குறிதாகிய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவேன்" என்று சிங்கம்போல முழங்கினான். அகத்தியமுனிவர், பதகர்கள் செய்த மாயத்தைத் தெரிந்து வெகுண்டு, "உயிர்நீங்கிக் கறியாயுண்ணப்பட்ட வாதாவி நாம் உண்டவாறே அழிந்துபோகக்கடவன்" என்று கூறி, ஒருதரம் தமது திருவயிற்றைத் தடவினார். உடனே காட்டெரிமண்டிய சிறுபுதல்போல வாதாவி அவர் வயிற்றினுட் பொடியாயினான். அதுகண்டு முன்னின்ற வில்வலன் தன்தம்பி இறந்தானென்றறிந்து, சோபவடிவங்கொண்டு வெகுண்டு, ஒரு தண்டாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, அகத்தியமுனிவரைக் கொல்லும்படி நினைத்து வந்தான். அவர் தமது கரத்திலிருந்த தருப்பையொன்றைச் சிவப்படைக்கலமாகப் பாவித்துச் செலுத்த, அதனால் வில்வலனுமிறந்தான். அகத்தியமுனிவர் அவ்விடத்தை நீங்கி, கொங்கதேசத்தை நோக்கிச் சென்றார்.

திருச்சிற்றம்பலம்.

காவிரிநீங்குபடலம்.

அகத்தியமுனிவர் கொங்கதேசத்திற் செல்லும்பொழுது, இறந்த வில்வலன் வாதாவி என்னு மிருவரும் தவத்தர்கள் போலவந்து, கரியமேனியும் சுழலுகின்ற கண்களும் உடையர்களாய், அவருக்கு அணிமையாகியும், அகன்றும், கண்முன்வந்தும், மறைந்தும், அவரைச்சூழ்ந்தும், ஆரவாரஞ்செய்துகொண்டு அணுகினார்கள். அகத்தியமுனிவர் இதனைக்கண்டு, "இவர்களை நாம் முன்னமே கொன்றுவிட்டோம், இவர்கள் துருவாசமுனிவருடைய புத்திரர்களாதலாற் பிரமகத்தியாய் நம்மைத் தொடர்ந்தார்கள். இந்தத் தோஷம் நீங்கும்படி சிவபெருமானுடைய திருவடிகளை அருச்சனை செய்வோம்" என்று நினைந்து, கொங்கதேசத்துக்குச் சமீபமாகிய ஓரிடத்திலே "இது நல்ல வாசஸ்தானம்" என்று வீற்றிருந்து, சிவலிங்கந் தாபித்து, பூசைக்குவேண்டும் உபகரணங்களைத் தேடி, மெய்யன்போடு பலநாள் அருச்சனை செய்துகொண்டிருந்தார். அதனால் அவரைத் தொடர்ந்த பிரமகத்திதோஷம் தொலைந்தது.

இது இப்படியிருக்க; அகத்தியமுனிவருடைய செயல் முழுதையும் நாரதமுனிவர் பார்த்துக்கொண்டு, சூரபன்மனுக்குப் பயந்து மூங்கில் வடிவாய்ச் சீகாழியிலே சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்துகொண்டிருக்கும் இந்திரனிடத்தே போயினார். இந்திரன் அவரைக்கண்டு விழுந்து வணங்கினான். நாரதமுனிவர், அவனை எடுத்து நெஞ்சோடணைத்துத் தழுவி, "க்ஷேமத்தோடிருக்கின்றனையா?" என்று வினவ; இந்திரன் தொழுதகையினனாய், "இந்நாள்வரையும் தேவரீருடைய திருவருளினால் இங்கே க்ஷேமமாயிருந்தேன். அடியேன் செய்யுஞ் சிவார்ச்சனைக்கு இப்பொழுது ஓரிடையூறு உண்டாயிருக்கின்றது. அது யாதெனில், பூஞ்சோலை சிறிதும் நீரில்லாமையினால் வாடிற்று. பூசை செய்வதற்குப் பூவுமில்லை. இதுவே என்குறை" என்று சொல்லி, ஓராசனத்தின்மீது நாரதமுனி

வண்ண மிருத்தி, தானும் அவருடைய அநுமதிப்படி இருந்தான். இதைக்கேட்ட நாரதமுனிவர், "இந்திரனே, உன்னுடைய சுவர்க்கவுலகம் அரசியல் முதலிய வைகள் சிவபெருமானுடைய திருவருளினாலே இனிமேல் உனக்கு வரப்போகின் றன. அவற்றைக் குறித்து வருந்தாதே. உன்னுடைய சிவார்ச்சனைக்கு ஒரு றுபா டுளது என்றாய். அதுவும் விரைந்து நீங்குங்காலம் வந்துவிட்டது. அதனைச் சொல்வேன் கேள். சிவபெருமான் அகத்தியமுனிவரைப் பொதியமலையிலே போயி ருக்கும்படி கட்டளையிட, அவர் போகும்வழியிலே விந்தமலையை அடக்கிப் பாத லத்தில் ஆழும்படிசெய்து, வில்வலன் வாதாவி என்னும் இருவரையும் வதைத்து, அதனால் வந்த பிரமகத்திதோஷம் நீங்கும்படி சிவபெருமானைப் பூசித்துக்கொ ண்டு கொங்கதேசத்திலிருக்கின்றார். நானும் பார்த்துவந்தேன். அவருடைய கம ண்டலத்திலிருக்கின்ற காவேரியாற்றை இங்கே வரும்படிசெய்தால் உன் மனக் குறை தீரும்." என்றார். அப்பொழுது இந்திரன், "அகத்தியமுனிவர் கமண்ட லத்தில் வைத்திருக்கின்ற நதியை இங்கே வரவழைப்பது எப்படி?" என்று வின வினான். அவர், "இந்திரனே, விநாயகக்கடவுளை மெய்யன்போடு பூசித்து வழி பாடு செய்து வேண்டிக்கொள்வாயாயின் அக்கடவுள் அந்நதியைக் கவிழ்த்துவிடுவார்" என்று சொல்லினார். நாரதமுனிவர் இந்த உபாயத்தைச் சொல்லுதலும், இந்தி ரன் கவலையொழிந்து, தானிழந்த சுவர்க்கவுலகபாக்கியத்தைப் பெற்றவன்போ ன்று பேரானந்தத்தையடைந்து, "தேவரீர் இந்த உபாயத்தை அருளிச்செய்த மையால் அடியேன் கவலையெல்லாம் நீங்கியுய்ந்தேன். இனி அகத்தியமுனிவரிடத் திலிருக்கின்ற காவிரிநதி இங்கே வரும்படி விநாயகக்கடவுளுக்குப் பூசனைசெய் வேன்" என்றான். "அங்ஙனம் செய்க" என்று கூறி நாரதமுனிவர் தமது பதத்தையடைந்தார்.

இந்திரன் விநாயகக்கடவுளுடைய திருவுருவத்தைத் தாபித்து, அருச்சனை செய்து, தேங்காய் தினைமா தேன் முக்கனி வெல்லப்பாகு மோதகம் கிழங்கு பால் பலகாரவகைகள் ஆகிய இவற்றை நிவேதித்து, தோத்திரஞ்செய்து வழி பட்டான். அப்பொழுது அநந்தகோடிகணங்கள் சூழ விநாயகக்கடவுள் பிரசன்ன ராயினார். அவரைத்தரிசித்தமாத்திரத்தில் இந்திரன் அஞ்சினான். அவர் "அஞ் சற்க" என்று அருள்செய்ய, இந்திரன் அச்சம் நீங்கிப் பேருவகையடைந்து, "அடியேன் உய்ந்தேன்" என்றுகூறி, அவருடைய உபயபாதாரவிந்தங்களிலும் சிரசுபடும்படி வணங்கினான். விநாயகக்கடவுள் பேரருளோடு அவனை நோக்கி, "இந்திரனே நின் பூசையை மகிழ்ந்து ஏற்றுக்கொண்டோம் உனக்குவேண்டிய வரம் யாது? கேட்பாய்" என்றார். இந்திரன் அதுகேட்டு, "எம்பெருமானே சிவ பெருமானுக்குப் பூசனை செய்தற்காக ஈண்டு ஒரு நந்தவனத்தை வைத்தேன். அது நீரின்மையால் அக்கினிபட்டாற்போலக் கரிந்துபோயது." என்றான். என்னலும், விநாயகக்கடவுள் கேட்டு, "இந்திரனே உனக்குச் சத்தபாதலங்களிலுமுள்ள கங் கைகளை அழைத்துத் தருதுமோ? தேவகங்கையையும் பிற நதிகளையும் அழைத் துத் தருதுமோ? சமுத்திரங்களெல்லாவற்றையும் அழைத்துத் தருதுமோ? இவற் றுள் நீ விரும்பியதைச் சொல்வாய்" என்றார். இந்திரன் அதுகேட்டு, எம்பெரு மானே, "இவைகள் ஒன்றையும் அடியேன் வேண்டேன், இவைகள் தேவரீருக்கு அரியனவல்ல. அடியேன் ஒன்று வேண்டிக்கொள்வேன். அது யாதென்னில்: அகத்தியமுனிவர் இமயமலைச்சாரலினின்றும் புறப்பட்டு வரும்வழியிலே வில்வ

லன் வாதாவி என்னுமிருவரையுங் கொன்று, அப்பழி தீருமாறு சிவார்ச்சனை செய்துகொண்டு கொங்கதேசத்தில் இருக்கின்றார். அவருடைய கமண்டலத்தின் கண்ணே காவேரியென்னும் தீர்த்தம் உளது. தேவரீர் போய் அதனை நிலத்திற் கவிழ்த்துவிட்டால் இந்த வனத்திலே வரும். அப்பொழுது அடியேனுடைய குறை தீரும். இதுவே அடியேன் வேண்டிக்கொண்டது" என்றான். விநாயகக் கடவுள் இந்திரனை நோக்கி, "அங்ஙனஞ் செய்வோம்" என்று மகிழ்வோடருள் செய்து, அவனை அங்கே நிறுத்தி, சிவபெருமானுடைய திருவருளினாலே அகத்தியமுனிவருடைய கமண்டலத்திலே பொன்னியாறு வந்த தன்மையையும் அதற்கு அவர் வரங்கொடுத்த சூழ்ச்சியையும் நினைந்து, விரைந்து கொங்கதேசத்தை யடைந்து, அகத்தியமுனிவருடைய கமண்டலத்தின்மீது காகவடிவாய் வீற்றிருந்தார். அகத்தியமுனிவர் கண்டு, அவரை விநாயகக்கடவுளென்று அறியாமல், "நம்முடைய கமண்டலத்திலிருப்பது ஒரு காகமாகும்" என்று எண்ணி, அதனை ஓட்டும்பொருட்டுக் கையையுயர்த்தி ஓச்சினார். உடனே காகவடிவாய்ச் சென்ற விநாயகக்கடவுள் குண்டிகையைக் கவிழ்த்து,காவிரியாற்றை நோக்கி, "நீ பூமியிற் செல்லக்கடவாய்" என்று பணித்தருளினார். பணித்தலும், காவேரியானது விண்ணுலகமும் மண்ணுலகமும் நடுங்கும்படி ஆரவாரித்துக்கொண்டு விரைந்து நிலவுலகத்திலே பாய்ந்தது. விநாயகக்கடவுள் காகவடிவத்தை நீங்கி ஒரு பிராமணப் பிரமசாரி வடிவங்கொண்டு சென்றார், அத்தன்மையை அகத்தியமுனிவர் கண்டு, சர்வசங்காரஞ் செய்யத் தோன்றும் உருத்திரமூர்த்தியைப்போல உருத்து, "இவன் தேவனோ, அவுணனோ, அரக்கனோ, அன்றி வேறெவனோ அறியேன்; நம்முடைய கமண்டலத்திலுள்ள நதியைச் சிந்திப்போகவல்லனோ, எவர்களையும் சிறிதும் மதியாத அகந்தையுடையன்போலும்; இவன்யாவனோ, இவன் வலிமையை விரைந்து அறிவேன்" என்று சொல்லிக்கொண்டு, பிராமணவடிவங்கொண்டு செல்லுகின்ற விநாயகக்கடவுளை வேகத்தோடு தொடர, விநாயகக்கடவுள் அது கண்டு அவருக்குப் பயந்தவர்போல ஓடினார். அகத்தியமுனிவர் அவருடைய சிரசிலே குட்டும்படி நினைந்து தம்முடைய இருகைகளையும் கவித்தமாக்கிப் பிடித்துக் கொண்டு, அவரைத் துரத்தினார். அப்பொழுது விநாயகக்கடவுள், அகத்தியமுனிவரைக்கிட்டுவார், ஆகாயத்திற்கிளருவார், திசைகளிற் செல்லுவார், பூமியில்வருவார், அவருடைய கைக்கும் எட்டுவார், தூரியராவார். இப்படி அகத்தியமுனிவர் சீற்றத்தோடு உலையும்படி விநாயகக்கடவுள் அவர் கைகளுக்குத்தப்பித் திரிதலும், அவர் மிகவுந்தளர்ந்து, "இவன் மாயம் சொல்லமுடியாததாயிருக்கின்றது. இனி நான் செய்வது என்னை" என்று நினைந்தார். அப்பொழுது ஓடித்திரியும் விநாயகக்கடவுள் அதனைத் திருவுளங்கொண்டு இரங்கி, தமது திருமேனியை விரைந்து அவருக்குக் காட்டியருளினார். அகத்தியமுனிவர் தரிசித்து "ஐயோ விநாயகக்கடவுளோ ஈண்டெழுந்தருளிவந்தார். அவரை நாயேனு முதிர்ச்சியோடு துரத்தினேன்." என்று கலங்கி ஏங்கி இரங்கி, முன்னே விநாயகக்கடவுளைக் குட்டும்படி கவித்த தம் கைகளிரண்டையுமெடுத்து, மலையிலே இடிவீழ்ந்தாற்போல வருத்தமுண்டாகத் தம்முடைய நெற்றியிலே குட்டினார். அதனைப் பிரணவசொரூபியாகிய விநாயகக்கடவுள் பேரருளோடு பார்த்து, "அகத்தியனே உன்செயல் என்னை? சொல்லுதி" என்றார். "எம்பெருமானே சிறிதும் அறிவில்லாத தமியேன் தேவரீரைப் பிராமணப்பிள்ளையென்று நினைத்துத் தேவரீருடைய சிரசிலே குட்டும்படி எண்ணிவந்தேன். அந்தப் பாவத்துக்குப் பரிகாரத்தை முன்

னமே அடியேன் செய்துகொள்ளுகின்றேன்" என்று அகத்தியமுனிவர் விண்ணப்பஞ் செய்தார். விநாயகக்கடவுள் திருப்புன்முறுவல்செய்து, "அகத்தியனே, உன்மனத்துயரை யொழிவாய்" என்றருளிச்செய்ய, முனிவர் துயரம்நீங்கி, விநாயகக்கடவுளுடைய திருவடிகளிலே பன்முறை வணங்கித் தோத்திரஞ்செய்து, "தேவரீரை உள்ளபடி அறியாமையினால் தமியேன்செய்த பிழையைத் திருவுள்ளத்துக் கொள்ளாது அருள்செய்வீராக" என்று பிரார்த்தித்தார்.

விநாயகக்கடவுள் அகத்தியமுனிவரை நோக்கி, "அகத்தியனே, தேவேந்திரன் நமது பிதாவாகிய சிவபெருமானைப் பூசனைசெய்தற்காக நிலவுலகத்திலே ஒருநந்தனவனத்தை உண்டுபண்ணினான்; அது நீரின்மையாற் பொலிவழிந்து கரிந்து போய்விட்டது; அதன் பொருட்டு நீரைவிரும்பி நம்மை இந்நாள் வழிபட்டு இரந்தான். ஆதலினால், யாம் காகவடிவாய் உன்கமண்டலத்தில் விருப்பத்தோடு வந்திருந்து மெல்லக் கவிழ்த்து, அந்நதியை நிலவுலகத்திற் போகும்படியும் கட்டளையிட்டோம். அதனை நீ பொறுது செய்ததவற்றிற் சிறிதும் மனத்திற்கொள்ளோம். நீ செய்ததை நன்றென்று மகிழ்வோம். இங்கே நீ செய்தனவெல்லாவற்றையும் ஒரு விளையாட்டாகவே திருவுள்ளத்திற் கொண்டோம். உன்னிடத்துச் சினங்கொண்டோமல்லோம். நீ நம்பிதாவாகிய சிவபெருமானிடத்தே மெய்யன்புடையவன். ஆதலால் நமக்கும் அன்பனாவாய். நீ வேண்டிய வரங்களை விரைந்து கேட்பாய் தருவோம்" என்றார். அகத்தியமுனிவர் விநாயகக்கடவுளை வணங்கி, "தேவாதிதேவரே, தேவரீருடைய திருவருளைப் பெற்றமையால் அடியேன் உய்ந்தேன்" என்று கூறி, "தேவரீரிடத்தும் தேவரீருடைய பிதாவாகிய சிவபெருமானிடத்திலுமே எப்பொழுதும் அன்புடையனாயிருக்கும் வரத்தைத் தந்தருளல்வேண்டும். இப்பொழுது தமியேன் செய்ததுபோலத் தேவரீருடைய சந்நிதானத்திலே முட்டியாகப்பிடித்த இருகைகளினாலும் குட்டுபவர்களுடைய குறையைத்தீர்த்துத் தாய்போல வந்து அருள்செய்தல்வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். விநாயகக்கடவுள், "அவ்வரங்களைத் தந்தோம்" என்று அருள்செய்து, "முனிவனே இத்தன்மையனவேயன்றி இன்னும் நீ விரும்பிய வரங்களைக் கேட்பாய்" என்று கூற, அகத்தியமுனிவர் அதுகேட்டு, "சுவாமீ, அடியேனுடைய கமண்டலத்திலிருந்த நதியானது தேவரீர் கவிழ்த்தமையால் எள்ளளவுமின்றிப் பூமியிலே கவிழ்ந்துவிட்டது. உயிர்க்குயிராகிய சிவபெருமான் தந்தருளிய மிகுந்த விசேட்டமுடைய நதி போய்விட்டால் அதுபோல அடியேனுக்கு வேறுநதியொன்றுண்டோ! ஆதலினால், குற்றமில்லாத ஒருநல்ல தீர்த்தத்தைத் தேவரீர் தந்தருளல் வேண்டும்" என்றார். விநாயகக்கடவுள் தாம் கவிழ்த்துவிடச் செல்லுகின்ற காவிரியாற்றிலே, தம்முடைய ஒரு திருக்கரத்தை நீட்டிச் சிறிது ஜலத்தை அள்ளி, அகத்தியமுனிவருடைய கமண்டலத்தில் விட்டார். விடுதலும், கமண்டலத்தை நிரப்பி ஒழிந்தநீர்முழுதும் ஆற்றுவெள்ளத்தோடு பூமியிற் பாய்ந்தது. அகத்தியமுனிவர் தமது கமண்டலநீர் குறையாதபடி முன்போலிருக்கக் கண்டு, "இந்தப்பெரிய வெள்ளத்திலே சிறிது ஜலத்தைத் தமது திருக்கரத்தால் மொண்டு விடுத்துக் குண்டிகையை நிரப்பினார். இப்படி யார் செய்ய வல்லவர்! ஆயினும், பிரம விஷ்ணு முதலிய தேவர்கள் வழிபட அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளுகின்ற பிரணவசொரூபியாகிய விநாயகக்கடவுளுக்கு இதுபோலும் செயல்கள் அரியனவோ!" என்று நினைத்து,

அவரை வணங்கி, "சிறியேன் இனி ஒரு குறையுமில்லேன். கவிழ்ந்தநதியை யும் தேவரீர் முன்போலத் தந்தருளினீர். முழுமுதற்கடவுளே, சிறிதும் அன் பென்பதில்லாத சிறியேன் உய்ந்தேன். இன்னமும் தேவரீரை அடியேன் நினைக் கும்பொழுது எழுந்தருளிவந்து அருள்செய்க, அடியேனைமறவற்க." என்று வேண்டினர். விநாயகக்கடவுள் "அவ்வாறே ஆகுக" என்று அநுக்கிரகஞ்செய்து, தம்மைச் சூழ்ந்துவந்த படைகளோடு மறைந்தருளினர். அகத்தியமுனிவர் விம் மிதராய், விநாயகக்கடவுளுடைய திருக்கோலத்தைத் தியானித்துத் துதித்து, காவிரியாற்றைப்பார்த்து நகைத்து, வெகுண்டு, சிவபெருமானுடைய திருவடி களைச் சிந்தித்துக்கொண்டு, தாமிருந்த கொங்கதேசத்தை விட்டுத் தென்றிசையை நோக்கி விரைந்து சென்றார்.

திருச்சிற்றம்பலம்.

திருக்குற்றாலப்படலம்.

அகத்தியமுனிவர் செல்லும் வழியிலே விஷ்ணுஸ்தலமாகிய திருக்குற்றால மென்னும் நகரம் எதிர்ப்பட, சிவநாமங்களையுச்சரித்துக்கொண்டு அந்நகரை அடைந்தார். அங்கே விஷ்ணுவாலயமொன்றுளது. அதனைத் திருமுற்றம் என்று எவரும் பாராட்டுவர். அளவிறந்த பிராமணர்களுளர். அவர்கள் உண்மைநூல்க ளைப் படித்தும் மயக்கத்தினல் தமது மதத்தையே மேற்கொண்டொழுகுபவர்க ளும், சிவனடியார்களைக் கண்டால் வழிப்பகைவர்களைக் கண்டாற்போல அழன்று பொங்கி இகழ்ந்து அவர்களுடைய முகத்தையும் பாராராய்த் துன்மார்க்கத்தையே மேற்கொண்டொழுகுபவர்களும், மறையவர் என்னும் பெயர்மாத்திரம் வகித்து அதற்குரிய ஒழுக்கமொன்றையும் புரியாதவர்களுமாயிருந்தார்கள்.

அகத்தியமுனிவர் அவர்கள் செயலை அறிந்து, அந்நகரின் வீதியிலே நட ந்து விஷ்ணுவாலயத்தின் முன்னே வந்தார். வருதலும், வழியில்வந்த அவ்வால யத்து வைணவர்கள் அவரை உற்றுப்பார்த்து, தம்பகைவர் வரக்கண்டு பதை பதைப்பவர்போலக் கோபங்கொண்டு பெருமூச்சுவிட்டு, "தகாத கண்டிகையையும் நீற்றையும் அணிந்தாய். அதனல் நீ எல்லாரும் அறியப் பிச்சையேற்ற சிவனுக் கடியவன். இங்கே செல்லுதல் தகாது. கையிலே ஒருகோலையும் வைத்திருக்கின் றய். நீ மிக எளியைபோலும். இங்கே நில்லாதே, எம்பெருமானுடைய கோயிலை அணுகாமல் நீங்கிவிடு" என்றார்கள். அகத்தியமுனிவர் அதனைக்கேட்டுக் கோப ஞ்செய்யாது நகைத்து, "வேதநெறியை யிகந்த நீவிர் இங்கே யிருத்தலை நான் அறியேன். இதனை எவரேனும் எனக்குச் சொன்னரில்லை, இது நல்ல வழியென்று கருதிவந்தேன். உங்களுடைய தன்மையை அறிவேனுயின் நான் இவ்வூரிற் செல் லுதற்கும் நினையேன். என்னை முனியற்க, நான் மீண்டு போவேன்" என்றார். வைணவர்கள் இதனைக்கேட்டுப் பின்னும் பொறாது, "நீ இந்த ஊரில் வருவதும் பாவம் திரும்பிப் போகக்கடவாய்" என்றார்கள். அகத்தியமுனிவர் "நீங்கள் உண்மையே சொன்னீர்கள். தொல்லோருடைய நூன்முறைமையும் இதுவே"

என்று கூறி, அவர்களை நீங்கி, "திருநந்திதேவரும், பிரமதேவரும், துருவாசர் பிருகு கவுதமர் கண்ணுவர் ததீசி ஆகிய முனிவர்களும், இவர்களுக்கு இட்ட பெருஞ்சாபங்களெல்லாம் பொய்ப்படுமோ" என்று நினைத்துக்கொண்டு, மீண்டுபோயினார். போன அகத்தியமுனிவர் "உயிர்க்குயிராகிய சிவபெருமானை இகழுகின்ற இந்த வைணவர்களுடைய அஞ்ஞானத்தினாலுண்டாகிய அகந்தையை முதலோடு களைவேன்" என்றெண்ணி, தமக்குத் தகவந்த மாயையினாலே விஷ்ணுபத்தரைப் போலப் பாகவதவடிவங்கொண்டு, வைணவர்களிருக்கின்ற இடத்திற்கு மீண்டுஞ் சென்றார். நெடுந்தூரத்திலே அவருடைய வரவைக்கண்ட வைணவர்கள் எதிர்கொண்டு சென்று துதித்து, பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள். அகத்தியமுனிவர் "இவ்வணக்கம் விஷ்ணுமூர்த்திக்குப் பிரீதியாகுக" என்று சொல்லி, அவர்களை நோக்கி, "உங்களிடத்து விஷ்ணுபத்திக்கு முடிவில்லை என்று பலருஞ் சொன்னார்கள்; அதனைப்பார்க்க நினைத்து வந்தோம்; பூமியிலே உங்களுக்கு நிகராவார் ஒருவருமில்லை; உங்களைத் தரிசித்தமையால் நாமும் அருமையாகிய மெய்யுணர்வைப் பெற்றோம்; நாம் முன்னம் அழகர்திருமலையினிடத்திருந்தோம்; இப்பொழுது அத்திகிரியிலிருக்கச் செல்லுகின்றோம்; நம்பெருமான் வீற்றிருக்குந் திருக்கோயில் இத்தலத்திலே உளதென்று சொன்னார்கள். அதனை வணங்கும் விருப்புடையோம்" என்றார். வைஷ்ணவர்கள் "அதோ தோன்றுகின்ற ஆலயம் விஷ்ணுவாலயம்" என்று கைவிரலாற் சுட்டிக்காட்டினார்கள். காட்டுதலும், அகத்தியமுனிவர் அஞ்சலிசெய்து விரைந்து கோயிலையடைந்து, பிரதக்ஷிணஞ்செய்து விஷ்ணுவினுடைய பாதங்களை வணங்கித் துதித்து, தம்பக்கத்தில் நின்ற விஷ்ணுபத்தர்களை நோக்கி, "இவரைப் பூசனைசெய்தற்கு என்மனம் விரும்புகின்றது. திருமஞ்சனமுதலிய பூசைக்குவேண்டும் உபகரணங்களை விரைந்து கொண்டுவருகுதிர்" என்றார். வைணவர்களிற் சிலர் நல்லதென்று சொல்லிக்கொண்டு போய், திருமஞ்சனம் புஷ்பம் சந்தனம் வஸ்திரம் முதலிய உபகரணங்களைக் கொணர்ந்து கொடுத்தார்கள்.

முனிவர் வைணவப்பிராமணர்களை நோக்கி, "இவரை யாம் அருச்சனைசெய்யும் விதிமுறையை நீங்கள் எல்லீரும் பாருங்கள்" என்று கூறி, சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு விஷ்ணுவினுடைய திருமுடியின் மேலே தமது திருக்கரத்தை வைத்து, "குறுகு குறுகு" என்று இருத்தி, அக்கினியிற்பட்ட மெழுகுப்பாவைபோல அதனைக் குழையப்பண்ணி, ஒரு சிவலிங்காகாரமாகச் செய்து, தாபித்து, தாம் சுயவடிவங்கொண்டு, மந்திரங்களைச் சொல்லித் திருமஞ்சனமுதலியவற்றைச் சுத்திசெய்து, சிவலிங்கப்பெருமானுக்குப் பூசனைசெய்தார். அதனை வைணவப்பிராமணர்கள் கண்டு கோபித்து, "இவன் வடிவால் மிகக்குறியன். சிவனிடத்தில் மிகுந்த பத்தியுடையவன். முன்னம் இங்கே சிவவேடத்தோடு வந்தபொழுது 'நில்லாதே போய்விடு' என்று நாம் தூஷிக்கப்போய், இப்பொழுது பாகவதவடிவாய் வந்து நஞ்சமயத்தை அழித்தான். ஐயோ இவன் மாயத்தையுடையவன். இவனைப் பிடியுங்கள்" என்று சொல்லிக்கொண்டு அவரை வளைந்துகொண்டார்கள். தம்மைப் பற்றும்படி சூழுகின்ற அந்தணர்களை அகத்தியமுனிவர் எரியெழப்பார்த்து, கோபாக்கினியை விடுத்தார். அது அவர்களைச் சூழ்ந்து பொறிகளைக் கக்கித் துரத்த, அவர்கள் பொறாராய், அவ்விடத்தை நீங்கிப் பூமியெங்குஞ் சிதறி ஓடினார்கள். அந்தஸ்தலம் அனறுமுதற் சிவஸ்தலமாயிற்று.

அகத்தியமுனிவர் அந்தச் சிவலிங்கப்பெருமானைப் பூசித்து வணங்கித் துதித்து விடைபெற்றுப் பொதியமலையையடைந்து சிவபெருமானுடைய திருவடிகளை நினைத்துத் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

இந்திரனருச்சனைப்படலம்.

அகத்தியமுனிவருடைய கமண்டலத்தை விநாயகக்கடவுள் காகவடிவாய்க் கவிழ்க்கச்சென்ற காவிரிநதி பல காததூரம் அகன்று, சந்தனமுதலிய விருக்ஷங்களையும் யானைத்தந்தம் முத்து 'பொன்முதலிய பொருள்களையும் வாரிக்கொண்டு, கிழக்குத்திசையை நோக்கி விரைந்து நடந்து, இந்திரனிருந்து நோற்கும் சீர்காழி வனத்திலே சோலையிற் புகுந்தது. புகுதலும், இந்திரன் கண்டு கூத்தாடினன்; நகைத்தான்; சிவபெருமானுக்குச்செய்யும் பூசனை முடிந்ததென்று பாடினன்; சிவபெருமானுடைய திருவடிகளைத் துதித்தான்; கவலை நீங்கினன். தனக்குப் பெருந்துன்பங்களைச் செய்யுஞ் சூரபன்மனை வென்றவனைப்போல நீங்காத மதர்ப்பு மிகுந்தான். இவ்வாறாக அவன் அடைந்த சந்தோஷத்தை யாரளவிடவல்லார்! இப்படி இந்திரன் மகிழும்படி காவிரிநதி பாய்தலும், மிகுந்த பசியால் வருந்தினோர் அமிர்தமுண்டு குளிர்ந்தாற்போல, நந்தனவனங் குளிர்ச்சியோடு தழைத்தது. புன்னை, சண்பகம், பாதிரி, கோங்கு முதலிய விருக்ஷங்களும், முல்லை மல்லிகை முதலாகிய கொடிகளும், தாமரை நீலோற்பல முதலியனவும் புஷ்பித்தன. இந்திரன் வைகறைக்காலத்திலே வண்டுகள் விழுமுன் பழுதில்லாத பூக்களைக் கொய்து, சைவாகமவிதிப்படி சிவபெருமானுக்குப் பூசனை செய்துகொண்டு சீர்காழியிலே யிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

தேவர்புலம்புறுபடலம்.

இப்படி இந்திரன் சீர்காழியிலே சிவபெருமானைப் பூசித்துக்கொண்டிருக்கு நாளிலே, சில தேவர்கள் சூரபன்மனுடைய ஏவல்களால் மெலிந்து, "இந்தச் சிறுமை எந்நாளில் எம்மைவிட்டு நீங்கும்" என்றிரங்கி, விண்ணுலகத்தை விட்டு மண்ணுலகத்திலே வந்து, தமிழ்நாடாகிய தக்ஷிணதேசத்திலே சீர்காழிப்பதியிலே இந்திரனைக்கண்டு, அவன் கால்களில் விழுந்து வணங்கிப் புலம்புகின்றார்கள்: "எங்கள் அரசரே, தருமமென்பது சிறிது மின்றி எவர்களையும் வருத்துகின்ற அவுணர்கள் வசத்தில் அந்நாளிலே எங்களைவிட்டு நீங்கினீர்; உமக்கிதுவும் நன்றோ? எங்களை ஆளும் நாயகர் நீரன்றோ? தாரகனாகிய யானையோடும் சிங்கமுகனாகிய சிங்கத்தோடும் பூவுலகை வாட்டுகின்ற சூரனாகிய புலியின் சிறையிலே தேவர்களென்கின்ற பசுக்களையெல்லாங் காட்டிக்கொடுத்து, மகாராஜாவே நீர்

மன்றந்ததென்ன? பன்றிமுதலிய மிருகங்களின் இறைச்சியும் கள்ளும் மீனுஞ் சுமந்து அசுரர்க் கேவல்செய்து, மானங் குலேந்து, கற்ற வேதங்களையும் மறந்து விட்டோம். காளகண்டராகிய சிவபெருமானிடத்தே வரம்பெற்ற சூரபன்மனுக்குச் செய்யாத ஏவல்களெல்லாஞ் செய்தோம்; நீதிநெறியையும் மானத்தையுமிழந்தோம்; ஐயா மிகவும் அலுத்தோம், அலுத்தோம். முன்னேயும் பலநாள் கயாசுரன் என்பவனுக்கு ஏவல்செய்துழன்றோம்; சிவபெருமான் அதனை நீக்கியருளினர். இப்பொழுது திரும்பவும் சூரபன்மன் வருத்த உலேந்தோம்; இனி எங்களால் முடியாது. எந்நாளும் உம்மையே புகலிட மென்றிருந்த யாங்கள் அவுணர்களாலே துயருழந்து சோர, உம்முடைய உயிரைக் காத்துக்கொண்டு இங்கே ஒளித்திருந்தீர். எங்களரசரே, உமக்கிது தகுமோ? இது வசையன்றோ? சூரன்முதலிய கொடிய அசுரர்கள் இறக்கும்படிக்கும், ஆரும் பழிக்கத்திரிகின்ற அடியேங்களுடைய துன்பங்கள் தீரும்படிக்கும், ஒரு செயலேச்செய்யும்." என்றிவ்வாறு பலவற்றைச் சொல்லித் தேவர்கள் புலம்பியிரங்குதலும், இந்திரன் கேட்டு, அவர்களுடைய துயரைக்கண்டு, நெடுநேரம் யோசித்து அயர்ந்து பெருமூச்சுவிட்டு, அவர்களுக்குச் சொல்லுகின்றான்: "மாயவள் புதல்வனாகிய சூரபன்மன் செய்தற்கரிய பெரிய யாகத்தைச் செய்யத்தொடங்கின அன்றைக்கே எங்களுரிமை அழிந்தது; பொன்னுலகத்தையும் தோற்றோம் என்று ஓயும் உணர்வோடு உங்களுக்கு நான் சொல்லவில்லையா? நான் சொன்னபடியே சூரன் தவஞ்செய்து, சிவபெருமானிடத்திலே பெரிய வரங்களைப் பெற்று, விண்ணுலகத்தையுங் கைக்கொண்டு, நம்மையும் தனக்குக் குற்றேவல்களைச் செய்யும்படி அடிமைகொண்டான். நாம் அவனுக்கு மீன் சுமத்தல் முதலிய தாழ்வாகிய குற்றேவல்களைச் செய்தும் 'உலகில் இன்னும் வாழ்வோம்' என்றே மதித்திருந்தோம். அந்தப் பதகன் அயிராணியைப் பிடித்தற்கும் என்னையும் அநீதியாகப் பிடித்துச் சிறையில் வைத்தற்கும் ஒருதீய எண்ணங்கொண்டு, எங்களைப் பிடித்துக்கொண்டு வரும்படி சேனைகளைச் சுவர்க்கத்துக்கு அனுப்பினன். அதனை யூகத்தால் அறிந்து நானும் இந்த இராணியுமாக மறைந்து, சுவர்க்கவுலகத்தை விட்டோடினேம். சூரபன்மனுக்கு மீனையுந் தசையையும் கள்ளையுஞ் சுமந்த பழியையன்றி, நானும் என்மனைவியும் அவன்கையில் அகப்படுதலாகிய இந்தப் பெரிய பழியையுஞ் சுமந்தால், எங்கள் மானம் முழுதும் அழிய வருமே. அதுவன்றி அவன் சிறையும் நமக்கொருகாலமுந் தீராது சம்பவிக்குமே. பாவிகளாகிய அசுரர்களுடைய சிறையில் அகப்பட்டால், நாங்கள் உய்யவும் அவர்கள் இறக்கவும் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்தலும் முடியாதே. இவைகள் எல்லாவற்றையும் நான் யோசித்துக்கொண்டே, துயர்க்கடலில் ஆழும் உங்களையும் விட்டுப் பூவுலகில் வந்து, மறைந்து, சிவபெருமானை அருச்சித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தேன். தேவர்களே, நாம் அவுணர்கள் பணித்த ஏவல்களால் வருந்தி, பழைய மேன்மைகளைத் தோற்றுவிட்டோம். இனி நாமெல்லாம் திருக்கைலாசமலைக்குப் போய், பரமசிவனுக்குக் குறைகளை விண்ணப்பஞ்செய்து, நமது துயர்களை நீக்கிக்கொள்வோம் வாருங்கள்" என்றான்.

என்றிப்படி இந்திரன் சொல்ல; தேவர்கள் கேட்டு, கார்காலத்தைக் கண்ட மயில்போலக் கூத்தாடி நகைத்து மகிழ்ந்து, "மகாராஜாவே, எங்கள் அரசனும் நீரே. பிதாவும் நீரே. குருவும் நீரே. தெய்வமும் நீரே. செல்வமும் நீரே. எங்கள் தவமும் நீரே. அறிவும் நீரே. எங்களுக்கு வரும் இன்பதுன்பங்களும் நீரே.

இப்படி நீர் இருந்தால் எமக்குவருங் குறைகளுமுண்டோ? நீர் பார்த்துப் பணித்த பணிகளைச் செய்து, உம்மைத் துதித்துத் திரிதல் குடிகளாகிய எங்களுக்குக் கடனாம். எங்களுக்கு வருந் துன்பங்களை நீக்கி, நல்வழியிற் செலுத்திக் காத்தல் அரசராகிய உமக்குக் கடனாம். முன்னாளில் எங்களை வருத்திய அவுணர்களை வதைத்தீர். இப்பொழுதும் சூரன் முதலிய அவுணர்களை வதைசெய்தற்கு வழியை ஆராய்கின்றீர். உலகத்தை ஆளும் அரசர்களுக்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் நீரன்றி வேறியார் துணையாவார். ஆதலினால் எங்கள் துயரத்தை நீக்கும்படி, சிவபெருமானிடத்தே திருக்கைலாசத்துக்கு எங்களை அழைத்துக் கொண்டு போவீராக" என்றார்கள். இந்திரன் தேவர்களை நோக்கி, "அப்படியேயாகுக" என்று சொல்லி, அவர்களை அவ்விடத்திலிருக்கச்செய்து, ஒரு சூழ்ச்சியை மனத்திற்கொண்டு, தன்மனைவியாகிய இந்திராணியிருக்குமிடத்திற் போயினான்.

திருச்சிற்றம்பலம்.

அயிராணிசோகப்படலம்.

இந்திரன் வருதலும், அயிராணி எதிர்கொண்டு அவனுடைய கால்களைப் பலதரம் வணங்கி யெழுந்து, "என் பிராணநாயகரே, என்னை? இங்கே ஒரெண்ணத்துடன் வந்தீர்" என்று வினவினாள். இந்திரன் அதனைக்கேட்டு, "கொடிய சூரனிட்ட பணிகளால் வருந்தின தேவர்கள் சிலர் என்னிடத்து வந்து, தங்களுடைய துன்பங்களைச் சொல்லிப் புலம்பினார்கள். அவர்களுடைய துயரத்தைப் பரமசிவனுக்கு விண்ணப்பஞ்செய்தால் இந்நாளிலே அவுணர்களைச் சங்கரித்து, பழைய பொன்னுலக பாக்கியத்தை எங்களுக்குத் தந்தருளுவார் என்னுந் துணிவால் அத்தேவர்களோடு திருக்கைலாசத்துக்குப் போகின்றேன். என் பிராணநாயகியே, இதை உனக்குச் சொல்ல வந்தேன்." என்றான்.

இந்திரன் இப்படிச் சொல்லும்பொழுதில், அயிராணி பாணம் ஏறுண்ட மயில்போல அவன்முன் மயங்கி வீழ்ந்து, துயர்க்கடலில் ஆழ்ந்து, அறிவிழந்தாள். இந்திரன் அவளைக் கையாலெடுத்தணைத்து, தொடைமீதிருத்தி அறிவு வரும் வழிகளைச் செய்தான். அயிராணி சிறிதே மயக்கந்தெளிந்து, மிக்க துயரால் நொந்து நெடுநடுங்கி, இந்திரனை நோக்கிச் சொல்லுகின்றாள்: "என் பிராணநாயகரே, அடியேன் பொன்னுலகைவிட்டுப் பூமியில் வனத்தில் வந்திருந்தும், உம்முடைய திருவருளினால் மகிழ்ந்திருந்தேன். என்னை நீர் பிரிந்தால், பின் யார் துணையாவார்? யான் பிழைக்கும் வழியுமுண்டோ? சக்கரவாகப்பட்சிக்குச் சந்திரனும், வானம்பாடிக்கு மேகமும் துணையாதல்போல, என் சோகத்தை நீக்க நீரே துணையாவீர். உம்மையொழிந்தால் வேறு துணையுண்டோ? அதுவன்றி, உம்மைப் பிரிந்து உயிர்தாங்க வல்லேனாயினும், யானோ ஒருத்தி, துணையொருவருமில்லை. நீதியென்பது சிறிதுமில்லாத அவுணர்கள் என்றும் வருவர். அவர்கள் கண்டால், தீங்கு வருமன்றோ? சூரனாலே தேவருலகத்துச் செல்வத்தை யிழந்து, இந்த வனத்தில் வந்து, மறைந்து தவஞ்செய்து பாடுபடுவதும் பழிக்கஞ்சி

யன்றோ? தீய அவுணர்கள் திரிவார்கள். அவர்கள் இழிதொழிலாளர். பல மாயங்களினும் வல்லர். பாவத்தையன்றிப் புண்ணியமென்பதை அறியவுமாட்டார், பழிக்கஞ்சார். இது நீரும் அறியாததல்லவே. உம்முடைய புத்திரனாகிய சயந்தனும் இங்கில்லை, தேவர்களுமில்லை, ஐராவதயானையுமில்லை, ஒருபெண்களுமில்லை. பிராணநாயகரே, பெண்பாலாகிய நானொருத்தி தன்னந்தனியே இந்தவனத்திலிருக்க அஞ்சேனோ? பலவாற்றானும் பாவத்தைச் செய்யும் அவுணர்கள் என்னைக் காணின், ஓடிவந்து பற்றி, அடாதகாரியங்களைச் செய்வார்களானால், அதனால் வரும் பழியெல்லாம் உம்மிடத்தன்றி வேறோரிடத்துச் செல்லும். நாயகரே, நான் ஒரு துணிவைச் சொல்வேன். உம்மை விட்டு நான் இங்கே தனியே இரேன். பரமசிவன் வீற்றிருக்குந் திருக்கைலாசமலைக்கு உமது பின்னே வருகின்றேன், போதற்கு எழுந்திரும்" என்றிப்படிச் சொல்லி இராணி பெருந்துயரோடு எழுந்து நின்றாள்.

இந்திரன் அதனைக்கண்டு, சிறிதுநேரம் யோசித்து, அன்பினோடு அவளைப் பார்த்து, "பெண்ணே, உன் றிறம் நன்றாயிருக்கின்றது" என்று எடுத்துத் தழுவி, இதனைச் சொல்லுகின்றான்: "வாராய் அயிராணியே, வருந்தாதே. நான் தேவர்களோடு திருக்கைலாசத்துக்குப் போனால், உன்னைக் குறிக்கொண்டு காப்பவர் ஒருவரும் இல்லாதவிடத்தன்றோ நீ என்பின் வருவது. சிவபெருமானும் விஷ்ணுவும் கூடிப்பெற்ற ஐயனார் நமக்கு ஒப்பில்லாத காவலாயிருக்கின்றார். அவரும் இருக்க, பெண்ணே, நீ வருந்துதல் தகுதியாமோ? அந்த ஐயனாரை 'வருக' என்று அன்போடு துதித்துத் தியானித்தால், இங்கே வருவார். 'யான் திருக்கைலாசத்துக்குப் போய்த் திரும்பிவருமளவும் காத்துக்கொள்ளுதிர்' என்று உன்னை அவரிடத்து அடைக்கலமாகக் கொடுப்பேன். மிகுந்த வலியையுடைய அந்த ஐயனாரே உன்னைக்காத்தருளுவர். நீ அஞ்சாது ஈண்டிருப்பாய்" என்று இந்திரன் சொல்லித் தேற்றினான். தேற்றுதலும், "அந்த ஐயனாருடைய வரலாறு என்ன? சொல்லும்" என்று இராணி வினாவினாள். அதற்கு இந்திரன் சொல்லுகின்றான்.

திருச்சிற்றம்பலம்.

மகாசாத்தாப்படலம்.

"முன்னொருகாலத்திலே விஷ்ணு முதலிய தேவர்கள் சிவபெருமானுடைய திருவருளின்றிப் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது அதினின்றும் ஆலாகலவிஷம் எழுந்தது. அதுகண்டு, அவர்கள் அனைவரும் நடுநடுங்கி ஓட்டெடுத்து, திருக்கைலாசத்தையடைந்து, சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தார்கள். திருக்கைலாசபதியானவர் 'வருந்தற்க' என்று திருவாய்மலர்ந்து, அந்த விஷத்தை உண்டு, அவர்களைக் காத்து, விஷ்ணு முதலிய தேவர்களை நோக்கி, 'இன்னும் பாற்கடலைக் கடையுங்கள் அமுதம் எழும்' என்று கட்டளையிட்டார். விஷ்ணுமுதலிய தேவர்கள் விநாயகக்கடவுளை வழிபாடுசெய்யாமல், முன்போலப் பின்னும் பாற்கடலைக் கடைந்தார்கள். கடையும்பொழுது, விநாயகக்கடவுளை வழிபாடுசெய்யாமை

யால், மந்தரமாகிய மத்துக் குலைந்து, பாதலத்திலாழ்ந்தது. அதனைக்கண்டு, 'இது விக்கினேசுர வழிபாடின்மையால் வந்தது' என்றறிந்து, அவரை ஆராதனை செய்ய, அவருடைய திருவருளினால் மந்தரமலை பாதலத்தினின்று வந்து முன் போல நிலைபெற்றது.

விஷ்ணு முதலிய தேவர்கள் மகிழ்ந்து, பின்னும் பாற்கடலைக் கடைந்தார்கள். கடைதலும், பொற்குடத்தோடு அமிர்தம் எழுந்தது. அங்கு நின்ற தேவர்களும் அசுரர்களும் தனித்தனியே 'எங்களால் இதுவந்தது ஆதலால் எங்களுக்கே உரியது எங்களுக்கே யுரியது' என்று அதனை விரும்பி, கடல்போலார்த்து, தம்முண் மாறுபட்டுப் போர்செய்ய எண்ணினார்கள். அதனை விஷ்ணுகண்டு, ஓர் உபாயத்தால் அவர்கள் பிணக்கை ஒழிக்க நினைந்து, மூவுலகத்தாரும் விரும்பத்தக்க ஒரு மோகினிவடிவை எடுத்து நின்றார். அந்த மோகினியின் வடிவத்தைக் கண்ட அவுணர்கள் அமிர்தத்தைவிட்டு, காமப்பித்துக்கொண்டு அறிவழிந்து மயங்கி, தாருகாவனத்து ரிஷிகளினும் பார்க்க ஆசைமிக்கவராயினர். தேவர்களும் பெண்மயலுற்று நின்றார்கள். பெரியோர்களுக்கும் மண்ணாசை பொன்னாசைகளினும் பார்க்கப் பெண்ணாசை நீங்குதல் அரிதன்றோ?

இப்படி இருதிறத்தாரும் மயங்கி நிற்கும்பொழுது, மோகினிவடிவங்கொண்ட விஷ்ணு அவர்களை நோக்கி, 'போரை ஒழிமின். ஈண்டியானுளன், அமுதமுமுளது. இவ்விரண்டுள் நீர் விரும்பியதொன்றை விரைந்து கைக்கொண்மின்.' என்றார். என்னலும், அவுணர்கள் மோகினியை நோக்கி, 'எங்களுக்கு நீயே வேண்டும்.' என்றார்கள். தேவர்கள் 'அமுதமே எங்களுக்கு வேண்டும்' என்றார்கள். தேவர்கள் அமிர்தத்தைக்கொண்டு ஒருசாரிற் போயினர், அசுரர்கள் மோகினியைக்கொண்டு ஒருசாரிற் போயினர். தம்மைக் கொண்டுசென்ற அசுரர்களை மோகினிவடிவங்கொண்ட விஷ்ணு பார்த்து, 'சயனத்தில் என்னைத் தழுவவல்லான் ஒருவீரன் உளன், அவனை இன்னங் கண்டிலேன்' என்றார். அவுணர்கள் பலரும் இந்தவார்த்தையைக் கேட்டு, 'எனக்கு நிகராய் ஒருவருமில்லை, நானே எவரினும் வலியேன், வீரனும் யானே' என்று தனித்தனி சொல்லி, 'என்னையே சேர்வாய்.' என்று வந்து கூடி, அதனாற் பகைகொண்டு தம்முட் பொருது இறந்தார்கள். அவர்களுள்ளே இரண்டு அவுணர்கள் விஷ்ணுசெய்த மாயத்தை அறிந்து, 'யாமும் இவர்களோடு வீணாய் இப்பொழுது ஏன் இறக்கின்றோம்' என்று அசுரர்களை நீங்கி, தேவவடிவங்கொண்டு அவர்களோடு கலந்துநின்றார்கள். அவுணர்கள் தம்மிற்பொருது இறக்கக்கண்ட விஷ்ணு மோகினி வடிவம் நீங்கிப் பழைய வடிவைக் கொண்டு, தேவர்குழுவுட்போய், அவர்களுக்கு அமிர்தத்தைப் பகிர்ந்து கொடுத்தார். கொடுக்கும்பொழுது, தம்வடிவை மறைத்துத் தேவர்களோடு கலந்துநின்ற அவுணர்கள் இருவரும், தங்களுக்கு விஷ்ணுகொடுத்த அமிர்தத்தை மந்திரத்தோடு உட்கொள்ளாது, தேவர்களுக்கு முந்திவிரைந்து உண்பாராயினர். இதனை அருகில்நின்ற சூரியசந்திரர்கள் கண்டு, 'இவர் கள்வராம், அமிர்தத்தை விரைந்துண்டார்கள்' என்று மனத்திற்கொண்டு, அவர்களிருவரையும் விஷ்ணுவுக்குக் கண்ணாற் காட்டினார்கள். விஷ்ணு அவர்களைக்கண்டு, 'இக்கள்வர்களா தேவர்களோடுடனிருந்து அமிர்தமுண்பார்' என்று கோபித்து, கையிலிருந்த அகப்பையினால் அவ்வசுரர்களுடைய சிரசை வீழ்த்தி, தேவர்களுக்கு அமிர்தத்தை ஊட்டி

விருந்துசெய்தார். உண்ட அமிர்தங் கண்டத்தில்வருமுன் விஷ்ணு சிரசைத் துணித்தமையால் அந்த இரு அசுரர்களுடைய உடல்கள் அழிய, சிரங்கள் அழியாதிருந்தன. சிரசு அழியாத அவரிருவரையும் விஷ்ணு நோக்கி, 'அமிர்தத்தையுண்டமையால் இவர்களிருவரும் விண்ணுலகில் நிற்கத்தக்கார்' என்று சிந்தித்து, 'சிவாநுக்கிரகத்தினாலே கிரகங்களாகுதிர்' என்று பணித்தார். அவர்களிருவரும் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து, இராகு கேது என்னும் பெயரையுடைய கரும்பாம்பும் செம்பாம்புமாகி, தம்மைக் காட்டிக் கொடுத்த சூரிய சந்திரர்களை ஒவ்வொரு காலத்திலே மறைத்து, சூரியன் முதலிய ஏழு கிரகங்களோடும் தாமும் ஒன்பதின்மர்களாக எண்ணப்பட்டிருந்தார்கள். இதுநிற்க.

விஷ்ணு தாம் முன் கொண்ட மோகினிவடிவத்தோடு திருப்பாற்கடலின் கரையிலிருந்தார். சிவபெருமான் தம்முடைய நால்வகைச் சத்திகளுள் விஷ்ணுவும் ஒருசத்தியாயிருத்தலால் அதனை நம்மனோர்க்குத் தெரிவித்தருளும்பொருட்டு அழகிற் சிறந்த ஒரு திருவுருக்கொண்டு, அவ்விடத்தில் வந்தார். விஷ்ணு அவரைக் கண்டு ஆசைகொள்ள, சிவபெருமானும் உன்னைப் புணரும் வேட்கை நமக்கும் உண்டு, நீ கொண்ட வேடம் இனிது என்றார். மோகினிவடிவங் கொண்ட விஷ்ணு அதுகேட்டு, நாணி 'உலகமாதாவாகிய உமாதேவியார் தேவரீருடைய திருவுருவைக் காணியாகக் காதலித்திருக்க, பெருந்தகைமையையுடைய தேவரீர் அடியேனை விரும்புவதென்னை? தேவரீர் ஜகத்காரணர் ஆதலால், முன்னொருகாலத்திலே பிரமாவினுடைய சிருட்டித்தொழில் கைகூடுமாறு உமாதேவியைச் சேரும்படி வந்து வேண்டினோம். தேவரீருக்கு அந்த உமையம்மையாரிடத்தும் ஆசையுண்டோ என்றால் இல்லை. தேவரீர் மேனோக்கிய வீரியமுடையரன்றோ? உமக்கு யாவரிடத்தும் விருப்பு வெறுப்பில்லை. அங்ஙனமாக, அடியேனைச் சேரும்படி வந்த விருப்பமும் உமக்கு உண்மையன்று. எம்பெருமானே, என்னகாரணத்தைக் கருதிவந்தீரோ அதனை யான் அறியேன். உம்முடைய திருவிளையாடலை நீரேயன்றி வேறார் அறியவல்லார்? ஆடவர் ஆடவரோடு சேரும் வழக்கமில்லை. ஆதலால் முதல்வரே நீர் என்னை வன்போடு சேர்தல் நீதியோ?' என்றார். சிவபெருமான் அதுகேட்டு, 'விட்டுணுவே நீயும் நமக்கொரு சத்தியாம். தாருகாவனத்துக்குச் சென்ற அந்தநாளிலும் நீ ஒரு பெண்ணானாய். பழைய பிரமன் இறந்துபோதலும் உன்னை வந்து நாம் சேர இந்தப் பிரமனை நீ தாயாய் உந்தியினாற் பெற்றாயல்லையோ? ஆகையால் நீயும் நமக்கொரு சத்தியாதல்பற்றி உன்னைச் சேரவந்தனம். வருவாய்' என்று கையாற் பிடிக்கும்படி வந்தார். விஷ்ணு நாணி ஓடினார். சிவபெருமான் அவரைத் தொடர்ந்து பற்றி, நாவலந்தீவில் வடதிசையிற் சமுத்திரதீரத்தில் உள்ள சாலவிருக்ஷநிழலிற் கொண்டுபோய், அந்த மோகினி வடிவங்கொண்ட விஷ்ணு இன்புறக் கூடினார்.

அவர்கள் இருவரும் சேருங்காலத்து, அவர்கள் கான்றுமிழ்ந்த நீர் கண்டகி என்னும் நதியாய்ப் பாய, அந்த நீரிலே வச்சிரதந்தி என்னும் கீடங்கள் உள்ளும் புறமும் சக்கரக் குறியோடு பொன்வண்ணமாய் முறை முறையாக வந்துதித்தன. அக்கீடங்கள் அந்நதியிலுள்ள மண்ணினாற் கூடுகளையுண்டாக்கி, சில நாள் அக்கூட்டினுள் வசித்து, இறக்கும். அவையிறந்தபின், அக்கூடுகள் சக்கரக் குறியுடையனவாய்க் காணப்படும். அவற்றைக்கண்டகிநதி கரையில் ஒதுக்கி

விடும். அக்கூடுகளை உலகத்தார்கள் கொண்டு சென்று அவற்றின் உள்ளேயிருக்கின்ற பொன்னை எடுத்து அவற்றின் அடையாளங்களைப் பார்த்து, 'இன்ன இன்ன மூர்த்தம்' என்று தெரிந்து கொண்டு, அவற்றை விஷ்ணுவாகப் பாவித்துப் பூசனை செய்வார்கள். அதன்பெயர் சாளக்கிராமம் என்பதாம்.

சாளக்கிராமத்தின் வரலாறு இப்படியிருக்க, சிவபெருமானும் விஷ்ணுவும் சேர்ந்தபொழுது, கரியமேனியும் சிவந்த சடையும் செண்டுதரித்த கையுமாய் உக்கிரத்தோடு ஒரு குமாரர் அவதரித்தார். உடனே சிவபெருமான் விஷ்ணுவோடு கலத்தலை நீங்கி, அப்புதல்வருக்கு அரிகரபுத்திரன் என்னும் நாமத்தைச் சூட்டி, பல வரங்களையீந்து, உருத்திரர்களுள் ஒருவராக்கி, ஒரு புவனத்தைக் கொடுத்து, தேவர்களும் முனிவர்களும் வணங்கும் முதன்மையோடு அப்புவனத்தலைவராக வைத்து, அப்புத்திரருக்கும் விஷ்ணுவுக்கும் விடைகொடுத்து மறைந்தருளினார். ஐராணியே, சிவபெருமானுடைய திருவருள் இத்துணைத்தென்று நம்மாற் புகழ்ந்து பேசத்தக்கதோ? விஷ்ணுவும் ஐயனாரும் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தத்தம் பதங்களை அடைந்தனர். அரிகரபுத்திரர் சிவபெருமான் தமக்குக் கொடுத்த பதத்திலே அளவிறந்த பூதகணங்களோடு இரவும் பகலும் காத்துக்கொண்டிருப்பார். அவர் மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் பிரமாவும் பூசிக்கும் விசிட்டமுடையார். இதுமட்டோ, விஷ்ணுவாலும் புகழப்படத்தக்கவர். அவருக்கு நிகரானவர் ஒருவருமில்லை. என்பிராணநாயகியே, இப்படிப்பட்ட விசேஷமுடைய அரிகரபுத்திரரே உன்னை வந்து காத்துக்கொள்வர்." என்று இவ்வாறு ஐயனாருடைய வரலாற்றையும் விசிட்டங்களையும் எடுத்துச் சொல்லுதலும், ஐராணி அங்கிருத்தற்கு உடன்பட்டாள்.

இந்திரன் அவள் உடன்பட்டதுகண்டு, அரிகரபுத்திரரை வரும்படி தியானித்தான். அவர் அதனை அறிந்து, பூதகணங்கள் சூழ வெள்ளையானைமேற் கொண்டு பூரணை புட்கலை சமேதராய் அங்கே வந்தார். இந்திரன் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கித் துதித்து நின்றான். ஐயனார் அவனை நோக்கி, "நீ விரும்பியது யாது சொல்லுதி" என்றார். இந்திரன் "எம்பெருமானே, சூரபன்மன் செய்கின்ற வருத்தத்தைச் சகிக்கமாட்டாமல் விண்ணுலகத்தை நீங்கி மனைவியாகிய இந்த ஐராணியோடு இங்கே வந்து, மூங்கிலாக மறைந்து, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தேன். தேவர்கள் சூரபன்மன் செய்கின்ற துயரத்தைச் சகிக்கமுடியாமல் அடியேனிடத்திலே வந்து அழுது முறையிட்டார்கள். இதனைச் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ் செய்யுமாறு ஐராணியை இங்கே வைத்து அந்தத் தேவர்களோடு திருக்கைலாசமலைக்குப் போகின்றேன். இவள் 'அவுணர்கள் காணிற் பிடிப்பார்கள்' என்று இவ்வனத்திலே தனித்திருக்க அஞ்சுகின்றாள். இவளை உம்மிடத்து அடைக்கலமாக வைத்தேன். திருக்கைலாசமலைக்குத் தமியேன்போய் மீண்டு வரும்வரையும் இவளைக் காத்தருளும்" என்று சொன்னான். ஐயனார் "இந்திரனே உன்மனையாளை ஒரு தீங்குமுறாத வண்ணம் நாம் நன்றாய்க் காத்துக்கொள்வோம். தனியே இருக்கின்றாள் என்று நீ அஞ்சாதே. அவளை இங்கே வைத்துத் திருக்கைலாசமலைக்குச் செல்வாய்" என்று அருளிச்செய்து, ஒரு சாரிற்போய், மகாகாளர் என்பவரை நோக்கி, "இந்திரன் திருக்கைலாசமலைக்குப் போகின்றான்; அவன்மனைவியாகிய ஐராணி தனித்

திருக்கின்றாள்; அவளை ஒருதீங்கும் அணுகவிடாது நீ காத்துக்கொள்ளக்கடவாய்" என்று கற்பித்தார்.

திருச்சிற்றம்பலம்.

இந்திரன்கயிலைசெல்படலம்.

இந்திரன் அப்பொழுது இந்திராணியை நோக்கி, "ஐயனார் உன்னைக் காத்துக்கொள்வர். வருந்தாதே" என்று தெளிவித்து, அவ்விடத்தில் அவளை இருக்கச்செய்து, தேவர்களை அழைத்துக்கொண்டு திருக்கைலாசமலைக்குப் போய், முதல்வாயிலைச் சேர்ந்து, நந்திதேவரை வணங்கித் துதித்து நின்றான். நிற்றலும், நந்திதேவர் "இந்திரனே நீ வந்ததென்னை சொல்வாய்" என்ன, வந்த சமாசாரத்தைச் சொல்லினான். நந்திதேவர் அதனைக்கேட்டு, "சிவபெருமான் சனகாதிமுனிவர் நால்வர்க்கும் ஞானத்தை உபதேசித்துக்கொண்டிருக்கின்றார்; இப்பொழுது அங்கே யாவரும் செல்லுதல் தகாது" என்றார். அவ்வார்த்தை செவிப்புலப்பட்ட மாத்திரத்திலே இந்திரன் இறங்கின விஷம் மீண்டும் தலைக்கேறினாற்போலத் துயர்க்கடலில் ஆழ்ந்தான். தேவர்கள் தோணியோடு சமுத்திரத்திலாழ்ந்தவர்போலத் துன்புற்றார்கள். இப்படித் தேவர்களோடு துன்புற்ற இந்திரன் திருநந்திதேவரைத் தோத்திரஞ்செய்து, "எம்பெருமானே சூரபன்மன் அருந்தவஞ்செய்தமையால் அவனுக்கு அளவுபடாத ஆயுளையும் வலியையும் செல்வங்களையும் சிவபெருமான் கொடுத்தார். நாங்கள் தீவினைப்பயனை அநுபவிக்குங்காலம் வந்தமையால் அவனுக்கு ஏவல்செய்து துன்பத்தை அநுபவித்தோம். இதுவும் இறைவன் செயலே. மீன் சுமத்தலாதியாகிய இழிதொழில்களைத் தந்து சூரபன்மன் நமக்குச் செய்யும் துன்பங்களை வந்து விண்ணப்பஞ்செய்வோம் என்றால், வேண்டுவார் வேண்டுவதே யீயும் கருணைக்கடலாகிய அவர் எங்கள் வேண்டுகோட்கிரங்கிச் சூரபன்மனை அவன் செல்வத்தோடும் அழித்தல் வேண்டும். எங்கள்பொருட்டு அங்ஙனம் செய்தால், சூரன் தவஞ்செய்தகாலத்து அவர் அவனுக்குக் கொடுத்த வரம் அழியும். அஃதழிந்தால், கடவுள் சொற்றப்பினார் என்பார்கள். இனி எங்கள் துயரத்தை நீக்காதொழியில், அருள்வள்ளல் என்னும் புகழுக்குக் குறைவுண்டாம்; வேதவாக்கும் குறைவுபடும். ஆதலினால், இவைகளெல்லாவற்றையும் நினைந்து, எங்களை ஆட்கொண்டருளும் பரிபாககாலத்தைநோக்கி, 'சனகாதிமுனிவர்களுக்கு யோகநிலைகாட்டிச்' சிவபெருமான் வீற்றிருந்தார்போலும். இந்தத் திருக்கைலாசபதியேயன்றி இவ்வாறாகிய தீங்கை நீக்குதற்கு ஒருதேவருமில்லை. விஷ்ணு இத்துயரை நீக்கவல்லரோ என்றால், அவர் அந்த அசுரர்களோடு பொருது சக்கரப்படையையும் இழந்தார். ஆதலால், அவரால் முடியாது. 'சிவபெருமான் ஞானோபதேசம் செய்துகொண்டிருக்கின்றார்' என்று அடியேன் தேவர்களோடு பூவுலகத்துக்குப் போனால், அவுணர்கள் நம்மைப்பிடித்துச் சிறைசெய்வது நிச்சயம். ஆதலின், இனிநாம் பூவுலகத்துக்குப் போதலில்லை. சிவபெருமானைத் தரிசிக்குங்காலத்தை எதிர்நோக்கிக்கொண்டு தேவரீர் வீற்றிருக்கின்ற இந்த வாய்தலின் ஒருபுடை இருப்பேன்" என்று கூறினான். "உங்கள் துயரந்தீருமாறு

நீங்கள் இங்கே இருங்கள்" என்று நந்திதேவர் அருள் புரிந்தார். அவ்வாய்தலின் ஒரு புடையிலே தேவர்களோடு இந்திரன் இருந்தான். இனி ஐராணியுடைய செய்கையையும் பிறவற்றையும் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

அசமுகிப்படலம்.

இந்திரன் திருக்கைலாசமலைக்குப்போக, அவன் நினைத்தகருமம் இனிது முற்றுப்பெறும்படி, அரம்பையர் சூழச் சீர்காழிவனத்திலே தவஞ் செய்துகொண்டிருந்த இந்திராணியானவள், நெடுநாளாகத் தன் நாயகன் வரக்காணாமையால் நாளொருவண்ணமாய்த் தன்னுடம்பு அழகுகுறைய மெலிபவளாய், மனம் பதைபதைத்துக்கொண்டிருந்தாள். இவள் இப்படியிருக்க, பொறுமை நாணம் கற்பு முதலிய நற்குணங்கள் ஒன்றும் இல்லாதவளும், கொலை களவு பொய் முதலிய தீச்செயல்கள் எல்லாம் மிகப்பெற்றவளும், மிகுந்த காமத்தினால் எவரையும் வலிந்து பிடித்தணைபவளும், மூவுலகங்களையும் ஒருநாழிகையினுட் சுற்றிவரும் வேகம் உடையவளும், எத்துணைவலிமையுடையார் போர்செய்தாலும் தோல்வியடையாதவளும், சூரபன்மனுக்குத் தங்கையும் ஆகிய அசமுகி என்னுங் கொடியாள், அவனுடைய கிளைமுழுதையும் முடிவிக்கும் ஊழ்வினைபோல்வாளாய், சூலப்படையை ஏந்தி, துன்முகியென்பாளோடு ஆலாகல விஷம்போல அங்கே வந்தாள்.

வந்த அசமுகி அந்தச் சோலையின் அழகைத் தூரத்தே கண்டு, "ஆகா இந்தச்சோலை நன்றாயிருக்கின்றது! இது பூவுலகத்ததன்று, இந்திரன் வானுலகத்து நந்தனவனத்தை இங்கே கொண்டுவந்து வைத்தான். இதுதப்பாது. தோழியே நீ இதனைப்பார்" என்று வியந்து, துன்முகிக்குக் காட்டி, கோலாகலத்தோடு அந்தச் சோலைக்கருகில் வந்து, அதிலுள்ள பூக்கள் முதலானவற்றை நோக்கி, "இந்தச்சோலையினுள்ளே இருக்கின்றவர்களைப் பார்ப்பேன்" என்று சொல்லிக்கொண்டு உள்ளே புகுந்தாள். அவளுடைய வரவை மகாகாளர் கண்டு "இவள் அசமுகி என்னுங் கொடியாள். எதனைக்கண்டு இங்கே வருகின்றாள்? இவள் கருத்தென்னை? இவளுடைய செயல்களை மறைந்து நின்று பார்த்துக்கொண்டு இவள் செய்யுங் குற்றத்துக்குத் தக்க தண்டனையைச் செய்வேன்" என்று மறைந்து நின்றார். அதனை அசமுகி காணாதவளாய், மிகுந்த களிப்புடன் துன்முகியும் உடன்வர, அந்தச்சோலை எங்குந்திரிந்து பார்த்துக்கொண்டு வரும்பொழுது, இந்திராணி தவஞ்செய்துகொண்டிருத்தலைக் கண்டாள்.

கண்ட அசமுகி, "அதோ இருக்கின்றவள்தான் ஐராணி. நம்மரசனுக்குப் பயந்து, பொன்னுலகத்தை விட்டு இங்கே வந்து தவஞ்செய்துகொண்டிருக்கின்றாள். நம்மரசன் இவள்மேல் ஆசைவைத்து, இவளைப் பிடித்துவரும்படி அநேக படைஞர்களை விண்ணுலகத்திற்கு ஏவினான். அவர்கள் அங்கே இவளைக் காணாமையினால் 'அங்கில்லை' என்று கூறச் சினந்து, பின்னும் இவளைத் தேடும்படி சிலரை விடுத்தான். அவர்கள் இவளை எங்குந்தேடிக் காணாமையால், திரிந்து

வருந்தி யுழன்றார்கள். அவளை நான் இங்கே கண்டுகொண்டேன். 'இனி இவள் மேல்வைத்த ஆசையாற் கவலாதே' என்று கூறி என்றமையனுக்குக் கொடுக்கும் படி நானே இவளைக்கொண்டுசெல்வேன். இங்கே இவளை இந்திரன் தனியேவைத்து விட்டுப்போயினான். இவளுக்குத் துணையாக ஒரு தேவர்களுமில்லை. இது வேசமயம். இந்திரன் வருதற்குமுன்பே இவளைக்கொண்டு போவேன்" என்று, சூற்கொண்டமேகம் நிலத்தில் வந்தாற்போலத் துன்முகியுடனே துண்ணென வந்தாள்.

அசமுகி கிட்டவருதலும், தவஞ்செய்துகொண்டிருந்த அயிராணிகண்டு, "இவள் ஆரோ" என்று பயந்து விரைந்தெழுந்தாள். எழுகின்ற அவளை அசமுகி நில் என்று எதிரேவந்து, "அயிராணியே கேட்பாய்: உன்னுடைய யௌவனப்பருவமும் பேரழகும் வீணாகும்படி, நீ தவஞ்செய்தல் முறையோ? இதனை விடுவாய். உலகத்தில் உனக்கு நிகராக யார் இருக்கின்றார்? இலக்குமியும் உனக்கு நிகராகாள். இப்படிப்பட்ட நீ பூமியிலே மறைந்திருந்து தவஞ்செய்கின்றாய். இஃதென்னே? சூரபன்மன் உன்னைச் சேரும்படி தவஞ்செய்துகொண்டிருக்கின்றான். இந்நாள்வரையும் உன்னைச் சேர்ந்த இந்திரன் உனக்கு நாயகனாதற்குத்தகுந்த அழகுடையவனல்லன். 'தன்னழகு தனக்குத் தெரியாது' என்று உலகத்தார் சொல்வர். அதனாற்றான் நீயும் உன் பேரழகை அறியாமல், பாகன்கையில் அகப்பட்ட யானைபோல இந்திரனோடு இருந்து வாழ்ந்தாய். இந்திரன் தவறுதலடையும் சுவர்க்கவுலகமொன்றை மாத்திரம் ஆள்பவன், என்றமையனாகிய சூரபன்மன் பல புவனங்களையும் பல அண்டங்களையும் ஒருங்கே அரசாள்வான்; அந்தச் சூரபன்மன் அழிவில்லாதவன், இவன் அஃதுள்ளவன்; அவன் பழியில்லாதவன், இவன் அஃதுள்ளவன்; அவன் என்றும் இன்பமுள்ளவன், இவன் மிக்க துன்பமுழந்தவன்; அவன் ஒருவரையும் வணங்கான், இவன் பலரையும் வணங்குவன். ஐராணியே, இப்படி எல்லாவற்றாலும் மேற்பட்ட சூரபன்மனோடு இருந்து வாழ நினைக்கின்றாயில்லை. அவனுடைய குற்றேவல்களைச் செய்து திரியும் இந்திரனை நாயகனாகக் கொண்டு, இங்ஙனந் தவஞ்செய்து ஏன் மெலிகின்றாய்? உனக்கிது தகுமோ? உன்னுடைய அழகும் நெடுங்காலம் வீணே கழிந்தது; இது குணமாமோ? இனியாயினும் சிந்தித்துப்பார். தேவர்களும் அவுணர்களும் அரம்பையர்களும் உன் குற்றேவல்களைச் செய்ய மும்மூர்த்திகளாலும் புகழப்படும் சூரபன்மனுக்கு உன்னை மனைவியாகச் செய்வேன். நீ அவனோடு உலகத்தை ஆண்டு சுகித்திருப்பாய். அவன் தன் பட்டஸ்திரீயாகிய பதுமகோமளையையும் மற்றைப் பெண்களையும் வெறுத்து உன்மேல் அளவுகடந்த ஆசைவைப்பன். இது உண்மை. விரைந்து என்னோடுகூட வருவாய்" என்று சொன்னாள்.

திருச்சிற்றம்பலம்.

இந்திராணிமறுதலைப்படலம்.

அசமுகி சொல்லிய இத்தன்மைப்பனவாகிய கொடுமொழிகளைக் கேட்டலும், இந்திராணி தன் செவித்துளையில் அக்கினியிற்காய்ச்சிய வேல் புகுந்தாற்போலப் பொருமி விம்மி, காதுகளைக் கைகளாற் பொத்தி, அக்கொடுமொழிகளைக் கேட்டமையினாலே தனக்கு வரும் பாவத்திற்குப் பரிகாரத்தைச் சிந்தித்து, பதகியாகிய அசமுகி கேட்கும்படி சில வசனங்களைச் சொல்வாள்: "ஏடி நீ இங்கே சொன்ன தீமொழிகளைக் கேட்டவர்கள் நரகத்தையடைவர். இவைகளைச் சொன்ன உனக்கு வரும் பாதகத்தை யார் இவ்வளவென்று வரையறுத்துச் சொல்வார். பிரமாவின் புத்திரராகிய காசிபமுனிவருடைய மகளாகிய நீ அநீதியான மொழிகளை அறிவிலர்போலப் பேசலாமோ? தாம் துன்புறுமையை விரும்பினோர் அதனைப் பிறர்மாட்டுச் செய்யாமையையும் தாம் துன்புறுதலை விரும்பினோர் அதனைப் பிறர்மாட்டுச் செய்தலையும் நீ அறியாயோ? நீ தருமம் தவம் கற்புமுதலிய ஒன்றையும் பாராமல் இழிந்தனவும் தீயனவுமாகிய இப்படிப்பட்ட சொற்களைச் சொல்லலாமோ? செல்வமும் வலிமையும் ஆயுளும் கீர்த்தியும் என்னும் இவைகளை இழக்கின்றவர்களுக்கே இத்தன்மையாகிய சிந்தனை வரும். இதற்குச் சாட்சி உன் குலத்தவர்களாகிய அவுணர்களே. நீ இவற்றைத் துணியாதே, வாழ்வாய். நான் இந்திரனையன்றி வேறொருவரையும் விரும்பேன். தீதில்லாத கற்பினையுடையேன். என்னிடத்து வந்து இதனைச் சொன்னாய். இவ்வார்த்தை உன்கிளையை வாழச்செய்வதன்று. கொடுங்கோல் செலுத்தும் அரசரும் அவரைச்சார்ந்தாரும் நரகத்துக்கு ஆளாவர். இது நிச்சயம். எனது நாயகனாகிய இந்திரன் மீளுதலில்லாத துன்பக் கடலில் ஆழ்ந்தான் என்கின்றாய். அது நாளைக்கு உங்கள்பால் வாராதோ? இத்துன்பங்கள் எல்லாருக்கும் வரும். நீ நீதியில்லாதவளாதலால் மிகவும் புத்திமயங்கித் தீது பேசினாய். இது உனக்கு அழகன்று. நீ உய்யும்படி இதை மறந்துவிடு. என்னை யார்வந்து சேரவல்லவர்? என் மனமானது என்னுயிரையும் ஐம்பொறிகளையும் காத்துக்கொள்ளும். எனக்கு எங்கும் காவலுண்டு. நீ விரைந்துபோவாய்" என்றாள்.

அயிராணி இவ்வாறு சொல்லுதலும், அசமுகி அதரத்தைக் கடித்து, பெருமூச்சுவிட்டு, கையோடு கையைத்தட்டி "நன்று நன்று" என்று நகைத்துச் சீறினாள். அறிவீனனும் பேய்பிடியுண்டானும் பித்தனுமாகிய ஒருவனுக்குச் சொல்லிய உபதேசமொழி சிறிதும் பயன்படாதவாறுபோல அசமுகிக்கு இந்திராணி கூறிய உறுதிமொழிகள் சிறிதும் பயன்படாவாயின. இங்ஙனம் கோபங்கொண்ட அசமுகி இந்திராணியை நோக்கி, "உன்னைக் கிட்டிவந்து இனிய வார்த்தைகளைச் சொன்னேன். என்னை யொட்டிவந்தாயில்லை, மாறு சொல்கின்றாய். உன்னைக் கொன்று தின்றுவிடுவேன். என்றமையனாகிய சூரபன்மனுக்காக உன்னை விட்டேன். இது மெய்ம்மை. விருப்பமெல்லாம் நிறைவேறும்படி என்றமையனிடம் வருவதை நீ நினைக்கின்றாயில்லை. போகவிடாது பிடித்திழுத்துக்கொண்டு போகின்றேன். இது நிச்சயம். மும்மூர்த்திகளும் என்னோடு யுத்தஞ்செய்து தடுத்தாலும் விடமாட்டேன். இதோ உன்னைப் பிடித்திழுத்துக்கொண்டு செல்கின்றேன் பார்."

என்று சொல்லி, அவள் கையைப்பற்றி விரைந்திழுத்துக்கொண்டு போயினாள். இந்திராணி யமபாசம் போன்ற அசமுகியின் கைப்பட்டு, ஐயகோ வென்றரற்றி, அவசமாய், அறிவழிந்து, கண்ணீர் வடியத் தேம்பி, பூனையின்வாயில் அகப்பட்ட புள்ளின் பெடைபோலப் பேதுற்றுச் சோர்ந்து, சுற்றிலும் பார்த்து, ஒருவரையுங் காணாமையால், "விஷ்ணுவும் சிவபெருமானும் சேர்ந்து பெற்ற ஐயனே ஓலம்; தேவர்களுக்கு முதல்வரே ஓலம்; செண்டை ஏந்திய கரத்தரே ஓலம்; எங்கள் கடவுளே ஓலம்; மெய்யர்க்கு மெய்யரே ஓலம்; வீரரே ஓலம்; வேதங்கள் உருத்திரர் என்று துதிக்கும் காரணக்கடவுளே ஓலம்; கடல்வண்ணராகிய எந்தையே ஓலம்; பூரணைமணாளரே ஓலம்; புட்கலைமணாளரே ஓலம்; வெள்ளையானையின்மேற் கொண்டுவரும் பெருமானே ஓலம்" என்று ஐயனாரைக்குறித்து ஓலமிட்டாள்.

திருச்சிற்றம்பலம்.

மகாகாளர்வருபடலம்.

இந்திராணி இவ்வாறு ஓலமிடுதலும், ஐயனாருடைய படைத்தலைவராகிய மகாகாளர் அதனைக்கேட்டு, "இவள் எங்கள் ஐயனாரைக் குறித்து ஓலமிடுகின்றாள்போலும்" என்று எண்ணி, வாட்படையைச் சுழற்றி இடிபோலார்த்து உரப்பி, "களவுசெய்து எங்கே போகின்றாய் நில்" என்று கழறிக்கூறி, விரைந்து வந்து, இந்திராணியை நோக்கி, "அம்மே வருந்தாதே. அசமுகியென்னும் பதகிக்குச் சிறிதும் அஞ்சாதே. உன்னைத் தீண்டிய இவள் கையைத்துணித்து விரைவில் விடுவிப்பேன் காணுதி" என்றார். வீரமகாகாளருடைய வார்த்தையைக் கேட்டவளவில் இந்திராணி மழையின் வரவைக்கண்ட பயிர்போல உயிர்பெற்றாள். அசமுகி அவரைக்கண்டு, "மும்மூர்த்திகளும் இந்திரனும் திக்குப்பாலகர்களும் என்முன் நில்லார். தேவர்குழுவினுள்ளானொருவனோ என்னை இகழ்ந்து சீறி வருவான்" என்று வெறித்துப்பார்த்து, இதழை அதுக்கிப் பற்களைக் கறித்து ஆர்த்து, "இவனை முறித்துத் தின்று இவனுடைய வலியைத் தொலைப்பேன்" என்று குறித்து நின்றாள். மகாகாளர் அவளை அணுகி, பெண்ணே "தவத்தைப் பூண்ட அயிராணியைத் தமியள் என்று வஞ்சனையாற் பற்றிச் செல்லுகின்றாய்; இவளை இப்பொழுதே விட்டுப் போதியாயின் நீ செய்த இந்தப் பெரும்பிழையைப் பொறுப்பேன்; உன்னைக் கொல்லுகின்றதில்லை, அஞ்சற்க" என்றார். தன்கிளையை நாசஞ்செய்யும்படி வந்த அசமுகி அதனைக்கேட்டு உருத்து, "இந்த வார்த்தையை என்முன் சொன்னாய்! 'வலிமையோடு இவளைக் காப்பாற்று' என்று இப்பணியை உனக்குத் தந்தவர் யாவர்? அவர் பெயரைக் கேட்க விரும்பினேன் சொல்வாய்" என்றாள். "பூவுலக முதலாகிய மூவுலகங்களையும் காப்பவன்; மேகம்போலக் கரியவன்; வெள்ளைவாரணமுடைய ஐயன் இதனைப் பணித்தான். என்பெயர் வீரரில் வீரனான வீரமகாகாளன்" என்று மகாகாளர் கூறினார்.

இந்த வார்த்தை இந்திரனுக்கும் ஐயனாருக்கும் பொதுமையாயிருத்தலின், தேவர்கள் அசுரர்களால் வருந்துதற்குரிய ஊழ் உண்மையால், "இங்குவந்தவன் இந்திரனுடைய ஏவலாள்" என்று அசமுகி எண்ணி, கோபாவேசமுடையளாய்,

"இந்திரனுடைய ஏவலாளனு என்னைத்தடை செய்புமியல்பினன்! இவனைக்கொல்வேன்" என்று கையிலுள்ள முத்தலைச் சூலத்தை எறிந்தாள். அது தன்முன் வருதலும், மகாகாளர் வாளினால் அதனை அக்கினிசிந்தும்படி இருதுணியாக்கினார். அசமுகி கோபங்கொண்டு தன்பக்கத்தில் நிற்குந் துன்முகியின் கையிலிருந்த சூலத்தைக் கடிதில்வாங்கி, இந்திராணியை அவள்கையிற்கொடுத்து, கூற்றுவனும் அஞ்ச ஆர்த்து, வேகத்தோடு வீரமாகாளர் மேல்வந்து, அவருடைய மார்பிலே குற்றும்படி சூலத்தைநீட்ட, மகாகாளர் அதனை வாட்படையினால் இருதுணியாம்படி வெட்டினார். அசமுகி பின்வாங்கிப்போய், ஒரு மலையைப்பறித்து, "இப்பொழுதே முடிந்தாய்" என்று அவர்மேல் எறிந்தாள். அவர்வாளினால் அதனையும் அழித்தார். அவ்வாட்படையும் ஒடிந்தது. அசமுகி அதனைப்பார்த்து இடிபோலார்த்து, "வீரமாகாளனே, கேட்பாய்: பிரமாமுதலிய தேவர்கள் எல்லாரும் வந்து ஆசீர்வதிக்க எல்லாவுலகங்களையும் ஆளுகின்ற சூரனாகிய நந்தமையனுடைய புயங்களோடு சேர்க்கும்படி இவளைக் கொண்டுபோவேன். இதனை அறியாதவனாய்ப் பேதைமைத்தன்மையால் விலக்கினாய். நீ தடுத்தல் முறையன்று. என்றமையனாகிய தாரகாசுரனுடைய சேனாவீரர் வந்தால் உன்னைக் கொல்லுவர். அன்றி நானே உன்னை எடுத்துண்பேன், என்னுடைய பெரும்பசி தணியாதென்று விடுத்தேன். எளியனே வீணில் இறவாமற் பிழைத்துப்போ" என்றாள். அசமுகியினுடைய வார்த்தைகளை மகாகாளர் கேட்டு, "வாளினால் உன் சூலப்படையை வெட்டினேன். உன்னைப் பெண்ணென்று கொல்லாது நின்றேன். இதை உணர்ந்து விரைந்து இவளைவிட்டுப் போய்விடு; உன்கையைப் போக்காதே" என்றார். அசமுகி கேட்டு, "இவன் வாளுமின்றி நின்றான், இவனோடு போர் செய்தல் முறையன்று. அன்றியும் இவனை வெல்லுதலரிது. இனி இந்திராணியைக்கொண்டு செல்லுதலே துணிபாம்." என்று எண்ணித் தோழியாகிய துன்முகியினிடத்தே திரும்பிப்போய், அவள் கைப்பட்டிருந்த இந்திராணியைப் பற்றியிழுத்துக்கொண்டு வேகத்தோடு போயினாள்.

அதனை வீரமாகாளர் பார்த்து, "செல்லுகின்றாய் போலும் நில்" என்று அணுகி, அவளுடைய கூந்தலைக் கையாற்பிடித்து, உடைவாளை எடுத்து, அயிராணியைப் பிடித்த கையைத் துணித்து, அவளை விடுவித்து, அசமுகியைத் தமதுகாலினாலுதைத்துருட்டி, அதுகண்டு அஞ்சி அயலில் நின்ற துன்முகியை நோக்கி, "ஒரு குற்றமுமில்லாத அயிராணியை நீயுந் தீண்டினாய்போலும்" என்று அவள்கையிலொன்றையும் துணித்து, அவளையும் உதைத்துருட்டினார். இருவரும் ஓ என்று பதைத்துப் புலம்பி நிலத்தில் வீழ்ந்தார்கள். இரத்தம் ஒழுகாநின்ற அவர்களுடைய கைகள், சூரபன்மனுடைய செல்வத்தைச் சுடுங் கொள்ளிகள்போலிருந்தன.

திருச்சிற்றம்பலம்.

அசமுகிசோகப்படலம்.

அசமுகியானவள், இரத்தம் ஆறுபோலப் பெருகும்படி கைவெட்டுண்ணு தலும், வீழ்ந்து வருந்தி அரற்றினாள்; மருண்டாள்; பதைத்தாள்; கையை உதறி வெருண்டாள்; கையை நிலத்தில் அறைந்தாள்; உருண்டாள்; முதுகும் மார்புந் தேயப் புரண்டாள். "அயிராணியை விரைந்து பிடித்து வாயிலிட்டுண்பேன்" என்று விரைந்தெழுவாள்; போவாள்; வருவாள்; வீழ்வாள்; இருப்பாள்; சாய்வாள்; இரங்குவாள்; சோர்வாள்; இதழைக்கடிப்பாள்; அதிலிருந்து இரத்தம் வெளிப்பட அதனைக் குடிப்பாள்; கொப்பளிப்பாள்; நிலத்திலிருந்து துடிப்பாள்; எழுவாள்; தலையை அசைப்பாள்; இடியொலியுண்டாகும்படி பல்வரிசைகளைக் கறிப்பாள்; திகைப்பாள்; "நம்முடைய இந்தச் செய்கை நன்று" என்று நகைப்பாள்; விரலை மூக்கில் வைப்பாள்; புகைபோலப் பெருமூச்சு விடுவாள்; நிலத்தைக் காலாலுதைப்பாள்; வாயினால் நெருப்பைக் கக்குவாள்; உம்மென்று உரப்புவாள்; இடிகான்றாற்போல இம்மென்று சினப்பாள்; அக்கினிகாலப் பார்ப்பாள்; மகாகாளரை வியப்பாள்; உடம்பு வியர்ப்பாள்; வெள்குவாள்; அறுந்த கையை மற்றைக் கையினால் விரைந்து எடுப்பாள்; அதனை நன்றாய்ப் பார்ப்பாள்; கண்களில் ஒற்றிக்கொள்வாள்; இரத்தத்தை உகுப்பாள்; "என்னைப்போல இத்தன்மையாகிய துயரை யாவர் அனுபவித்தார்" என்பாள்; "இனி நான் இறப்பதே" என்பாள்; "வினையினேனுக்கு இஃதாவதோ" என்பாள்; ஐயகோவென்பாள்; "எவரும் புகழுகின்ற எங்கள் அண்ணார்பாற் போவதெவ்வாறு" என்று துன்புறுவாள்; "பூமியில் வரும் கணவர்கள் கைதொடக் கூசுவார்களே" என்பாள்; "முடம் என்று பேசுவார்களே" என்பாள்; "தேவர்களும் பிறரும் என்னை ஏசுவார்களே" என்பாள்; "என்செய்வேன்" என்பாள்; "தேவர்களனைவருஞ் சிந்தித்து என்கரத்தைப் போக்கினார்கள், யான் இனி இறப்பேன், அதன்முன் அவர்களைக் கொன்று உலகெல்லாவற்றையும் முடிப்பேன்" என்று எண்ணிச் சீறுவாள்; "பூவுலகிலுள்ள உயிர்களெல்லாவற்றையும் அழிப்பேனோ" என்பாள்; "வடவாமுகாக்கினியை அவிப்பேனோ" என்பாள்; "காற்றைப் பிடிப்பேனோ" என்பாள்; "மேருமலையை அசைத்து வீழ்த்துவேனோ" என்பாள்; "சூற்கொண்ட மேகங்களைப் பிடித்து உண்பேனோ" என்பாள்; "நக்ஷத்திரங்களையும் [illegible]கங்களையும் கொறிப்பேனோ" என்பாள்; "நான் கைவெட்டுப்பட்டு வருந்துவதை இந்தச் சூரியன் பார்த்து இகழுவான்போலும். தேரோடும் அவனைப்பிடித்து இழுத்துக்கொண்டு வருதற்கு எழுவேனோ" என்பாள்; "சூரியனைக் கறித்துக்கொண்டு தேவர்களை அன்னமாக உண்டு எழுகடலையும் உறிஞ்சிக்கையைப் பெரும்புறக் கடலிற் கழுவித் திரும்புவேனோ" என்பாள்; "சந்திரனைப் பிடித்துக் கவ்வி அவனுடலிலுள்ள அமுதைக் குடித்து எறிவேனோ" என்பாள்; "இந்திரனுடைய யானையையும் மற்றைத் திக்கு யானைகளையும் பூக்காகவும், ஐந்தருவை வெற்றிலையாகவும், அவற்றிலுள்ள வெண் மலர்களைச் சுண்ணமாகவுங் கொண்டு உண்பேனோ" என்பாள்; "பாம்புகளை அடித்துத் தலைகீழாகத் தூக்குவேனோ, பாதலவாசிகளை அவ்விடத்தினின்று நீக்குவேனோ, பூமியைச்சுழற்றி மேலுள்ளனவற்றைக் கீழாக்குவேனோ, அதனை விட்டுணு உண்டதுபோல உண்பேனோ" என்பாள்.

சூரன்றங்கையாகிய அசமுகி வீரவலிமையையுடையவளாதலால், மயங்கிய மனத்தினளாயும், இறக்கத் துணிந்தவளாயும், பெருந்துயரத்தையுடையவளாயும், தொலையாத மானம் பூண்டவளாயும், இவ்வாறு சொல்லிக் கோபித்தாள். அப்பொழுது தோழியாகிய துன்முகி அதனைப்பார்த்து, தானும் அசுரகுலத்தினளாயினும், செய்யத்தகுவது இதுவென்றறியுமறிவுபொருந்திய மனத்தையுடையவளாதலினால் விரைந்து அசமுகிக்கு முன்வந்து, இவைகளைச் சொல்லுவாள்: "தலைவியே நீ வீரமாகாளனாற் கையிழந்தாற் பூவுலகமென்செய்யும்! வானுலகமென்செய்யும்! தேவர்கள் என்ன செய்வர்! மலைகளென்செய்யும்! கடல்களென்செய்யும்! நீ உலகங்களையெல்லாம் அழிப்பது முறையோ! பூவுலகத்தையும் வானுலகத்தையும் திசைகளையும் உயிர்களையும் நீ ஒருங்கே அழிக்க நினைத்தாய். அப்படிச் செய்தால் யாரும் உன்னை என்னசெய்வர்! அவைகளெல்லாவற்றையும் ஒருங்கேயுடைய சூரனே உன்னைக் கோபிப்பான். அவனுடைய செல்வங்களே அழியும். ஆதலால் இவைகள் ஒன்றையும் நீ எண்ணாதே. சூரபன்மனிடத்தில் நாம் போய் இவைகளெல்லாவற்றையுஞ் சொன்னால், அவன் தேவர்களைகளையெல்லாம் அழிப்பான். நாம் அவனிடத்திற் போதலே துணிவு" என்றாள். பின்னும், "ஞானமில்லாத தக்கன் செய்த யாகத்தில் தேவர்களினும் அரம்பையர்களினும் அசுரர்களினும் தத்தமுடம்பில் ஊனமில்லாதவர்களில்லை. பரமபதியாகிய சிவபெருமானுக்கும் அவரைச் சரண்புகுந்த மெய்யன்பர்களுக்குமன்றி மற்றை எவர்களுக்கும் எவைகளுக்கும் வினைவயத்தால் வருந்துயர் விட்டு நீங்குமோ! ஆதலால் தலைவியே நீ புலம்பாதே, வெள்கிச் சோகமுங் கொள்ளாதே. துன்பமும் இன்பமும் அறியாமையும் உயிர்களுக்கெல்லாம் முறைமுறையாய் வரும். சூரனிடத்திற் போவோம் எழுவாய்" என்று சொல்லித் தேற்றினாள்.

இப்படிச் சொல்லித் துன்முகி தேற்றுதலும், அசமுகி நன்றென்று எண்ணி எழுந்து, துன்பமென்பது சிறிதுமில்லாமல் நின்ற அயிராணியைப் பார்த்து, "அண்டங்களெல்லாவற்றினும் சூரபன்மனுடைய சக்கரமும் ஆணையுஞ் செல்லும். ஆதலால் அண்டத்தின் இப்புறத்திலொளிப்பினும் அதுவன்றி அப்புறத்திலொளிப்பினும் உமக்குப் பிழைப்பதரிது. மறைந்த இந்திரனையும், இவ்வனத்திலிருக்கும் உன்னையும் ஒழிந்த தேவர்களையும் இறைப்பொழுதிற் பிடித்திழுத்துக்கொண்டுபோய் நம்மரசனைக்கொண்டு என்னகரிற் சிறைப்படுத்துவேன். இது நிச்சயம். உங்களைச் சிறைசெய்யேனாயின், உலகமுழுதையும் ஆளுகின்ற சூரபன்மனென்னும் அரசனுடைய தங்கையல்லள் யான். என்மார்பில் எழுந்தனவுந் தனங்களல்ல, யான் பேடியே. இதனைத் தெரிந்துகொள்" என்று சொல்லி, அவ்விடத்தை விட்டுப் போயினாள்.

திருச்சிற்றம்பலம்.

இந்திரன்மீட்சிப்படலம்.

அங்கே சிறிதுதூரத்தில் நின்ற வீரமாகாளர் மகிழ்வோடு நிற்கும் இந்திராணியைப் பார்த்து, "அன்னையே, உன்னுளத்தில் அசுரர்களுக்கு அஞ்சாதே. உன் நாயகன் வருமளவும் உன்னைக்காப்பேன். இங்கேயிருப்பாய்" என்று சொல்

லிப்போயினர். இந்திராணி, காட்டில் ஒரு பிணைமான் தன்னினத்தைப் பிரிந்திருந்தாற் போன்றவளாய், "தன்னுடைய நாயகன் நினைத்துச்சென்ற கருமம் நிறைவேறும்படி தவஞ்செய்துகொண்டு அவ்வனத்திலிருந்தாள். இதனை நாரதமுனிவர் அறிந்து, விரைந்து திருக்கைலாயமலையையடைந்து, சிவபெருமானைத் தெரிசித்தற்குக் காலம் பெறாமையால் தேவர்களோடு அங்கேயிருந்த இந்திரனிடத்துப் போய், பூவுலகத்திருந்த அயிராணிக்குச் சம்பவித்தவைகளையெல்லாஞ் சொன்னார்.

இந்திரன் அதனைக்கேட்டுக் கவற்சியடைந்து, தேறிக் கோபித்து, பின்பு சிவபெருமானுடைய திருவருளை எண்ணி, அக்கடவுள் விதித்த விதியைச் சீர்தூக்கிப்பார்த்து, தன்னைநொந்து வருந்தி, சிவபெருமானுடைய புகழைத் துதித்து, தேவர்களோடு எழுந்துவந்து நந்திதேவருடைய பாதங்களை வணங்கி, "அடியேங்கள் இங்கே நமது கடவுளுடைய சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு நெடுங்காலம் இருந்தோம். அக்கடவுள் முன்னே தமியேங்கள் செய்த தீவினைப் பகுதியைத் திருவுளஞ்செய்து எங்களுக்குத் திருவருள் புரிகின்றிலர். எங்களைக் காத்தற்பொருட்டுக் கறுத்த காளகண்டராகிய சிவபெருமான் எமக்கருள்செய்யும்படி மெய்ம்மையாகிய தவத்தைச் செய்யுமாறு பூவுலகுக்குப் போவோம். அநுமதி தந்தருளும்" என்று பிரார்த்தித்தான். நந்திதேவர் நன்றென்று விடைகொடுத்தருளினார். இந்திரன் தேவர்களோடு சீர்காழியை அடைந்து, அங்குநின்ற வீரமாகாளரைக்கண்டு தழுவி, பல உபசாரவார்த்தைகளைச் சொல்லி, "ஐய நீ போதி" என்று அவரை ஐயனாரிடத்திற்கு அனுப்பி, அயிராணி தவஞ்செய்துகொண்டிருக்குமிடத்தையடைந்து, அவளுடைய துன்பத்தைமாற்றி, அசமுகி கூறிய சபதமொழிகளை அவ்வயிராணி சொல்லக்கேட்டு, "இனிச் செய்வதென்னை" என்று வருந்தி, ஆலோசித்து, "செய்வது இது" என்று துணிந்து, அயிராணியையுடன்கொண்டு தன்பக்கத்திலுள்ள தேவர்களோடு மேருமலையிற்போய் மறைந்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

சூரனரசிருக்கைப்படலம்.

இஃதிவ்வாறாக, வீரமாகாளராற் கைவெட்டுண்ட அசமுகி துன்முகியோடு சென்று மகேந்திரபுரியை அடைந்தாள். அவள் போங்காலத்திற் சூரபன்மன் அரசிருந்த சிறப்பைச் சொல்வாம்:—

தன்னுடைய ஆஞ்ஞாசக்கரமும் கீர்த்தியும் இரண்டுருக்கொண்டு இருபக்கங்களினும் வந்துநின்றாற்போல அவுணர்கள் சந்திரனையொத்த இரண்டு வெண்கொற்றக்குடைகளை நிழற்றவும், உவர்ச்சமுத்திரங்களும் பாற்சமுத்திரங்களும் இரண்டுருவாய் எழுந்து மேலோங்கியிருந்தாற்போலத் தாரகனும் சிங்கமுகனும் இருபக்கங்களினுமிருக்கவும், அக்கினிதேவர்களைப்போல அமைச்சர்களும் புதல்வர்களும் இருக்கவும், எல்லாவண்டங்களினுமுள்ள வாயுக்களும் வருணர்களும் பலவுருவாய்ச் செவ்விதாகக்கூடி வேண்டுமளவிற் பனித்திவலைகளைச் சிதறித்

தன்னடிகளை வணங்கி எழுந்திறம்போல அவுணர்கள் இரட்டும் சாமரங்கள் விளங்கவும், மூவுலகிலும் சிறந்தனவாயுள்ள வெற்றிலை பாக்குச் சுண்ணம் முதலியனவற்றைப் பொதிந்த தட்டையும் சில சூரியர்களைக்கொண்டு செய்தாற்போன்ற கெண்டியையும் பொன்னிலத்திற் செம்மணிகளைச் சொரிந்தாற்போலத் தம்பலமுமிழும் பொற்களாசியையும் பல ஏவலாளர்கள் ஏந்திநிற்கவும், நானாவிதமாகிய நிறங்களையுடைய அவுணத்தலைவர்கள் முன்னும் பின்னும் இருமருங்கும் கிளையோடு நெருங்கவும், இளந்தென்றலானது முகில்களின் வயிற்றில் அளாவிச் சந்திரனுடைய மெய்யிற்படிந்து பாற்கடலிலும் பெரும்புறக்கடலிலும் தோய்ந்து நிலவுலகத்தினும் வானுலகத்தினுமுள்ள சோலைகடோறும் உலாவி ஒலியின்றி மெல்ல மெல்ல அசைந்து தண்ணென்று தன்முன் வரவும், மேகங்கள் சந்திரனிடத்துள்ள அமுர்தத்திவலைகளைப் பருகிக் கற்பகப்பூஞ்சோலையிலே அவற்றைக் கவிழ்த்துப் பலநாட்கழிந்தபின் கவர்ந்து கண்ணுக்குப் புலப்படாத பனித்துளிகள்போலும் துவலைகளை ஒழிவின்றிச் சிதறவும், உருப்பசி அரம்பை திலோத்தமை முதலிய தெய்வப்பெண்களும் இயக்கர் இராக்கதர் அசுரர் வித்தியாதரர் முதலாகிய பற்பல சாதிப்பெண்களும் வெவ்வேறாய் நடிக்கவும், பிரமதேவர் காலையிலே பஞ்சாங்கஞ் சொல்லுதற்குச் சமயம்பெறாமல் ஒருபுடையில் வந்தொதுங்கியிருக்கவும், அவருடைய குமாரர்கள் நீர்க்குடங்களில் நாழிகையைப் பார்த்து நாழிகைப் பறையை ஒலித்து ஒவ்வொரு நாழிகையையும் முறைமுறை சென்று சொல்லவும், புலிக்கூட்டங்களுக்கிடையே சில மான்கள் சென்றாற்போல அவுணர்களுடைய நெருக்கில் உடம்பு வேர்த்துப் பதைக்கவரும் முனிவர்கள் வெவ்வேறாய் ஆசிகளைச் சொல்லி அவைகள் ஆரவாரத்தினாற் கேட்டிலவென்று அஞ்சித் தாம் நிற்குமிடத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம் "வாழ்க" என்று ஆசீர்வதித்துக் கைகளை விரித்து நிற்கவும், மேருமலையில் மறைந்த இந்திரனை யொழிந்த தேவர்கள் யாவரும் அவுணர்கள் நெருக்கித்தள்ள வாயிலால் உள்ளேபோயும் எதிரேவருவோர் வாயில்வரையுந் தள்ள அஞ்சி மீண்டும் பின்னும் அவ்வாறாய் வாயிற்காவலாளர்கள் அடிக்க உளங்குலைந்து சபையைக் காணப்பெறாது அங்குமிங்குந் திரியவும், சட்டையிட்டவர்களும் கோபத்தையே யுடையவர்களும் பொற்பிரம்பை ஏந்தினவர்களும் இடியொலிபோலும் உரப்புதலையுடையவர்களும் பிறைபோலும் வக்கிரதந்தங்களையுடையர்களும் பல தேவர்களுடைய மகுடங்கள் சிதறும்படி அடிப்பவர்களும் ஆகிய அவுணர்கள் வருவோர்களைத் தகுதிக்கேற்றபடி தூரத்தியும் சூழநிறுத்தியும் இருத்தியும் அவரவர் பெயர்களைச் சொல்லித் தன்னைத் துதிக்கவும், பலபெண்கள் வாழ்த்தி ஆலத்திகளைச் சுற்றவும், கின்னரரும் சித்தரும் இயக்கரும் கந்தருவரும் பல்வகைப் பண்களோடு மங்கலங்களைப் பாடவும், தான் யாகஞ்செய்ததையும் சிவபெருமானிடத்தில் வரம்பெற்று மீண்டதையும் திக்குவிசயஞ் செய்ததையும் ஆயிரத்தெட்டண்டங்களையும் பார்த்துவந்து ஐசுவரியத்தோடு அரசியற்றியதையும் பல அசுரர்கள் பக்கத்தில் நின்று முறைமுறை புகழவும், திக்குப்பாலகர்களும் பிறரும் கைதொழுது தூவும் மலர்களையும் சுக்கிரனும் முனிவர்களும் மந்திரத்தோடு ஆசீர்வதித்துத் தூவும் மலர்களையும் அக்ஷதைகளையும் வாயுவானவன் பெருக்கிக்கொண்டு திரியவும், ஆடுவோர்களுக்கும் பாடுவோர்களுக்கும் தன்மேல் அன்புசெய்யுந் தலைவர்களுக்கும் கிரீடம் அத்தகடகம் உபவீதம் முதலிய அணிகளையும் வஸ்திரங்களையும் நிதிக்குவைகளையும் பிறவற்றையும் அவர்கள் கைநீட்டுந்தோறும் தன்கை கொடுக்கவும், தேவர்களும் முனிவர்க

ளீம் பிறரும் குற்றஞ்செய்யாத தங்களிடத்தன்றி அதுசெய்த வேறு யாவரிடத்தாவது தீன் ஒரு குற்றத்தை நோக்கி வெருண்டால் அது தம்மாட்டு நிகழ்ந்தது என்று தம்முயிரை இழப்பவர்போல வெருவிப் புகழ்ந்தும் அவரை மகிழ்ந்தால் அது தம்மாட்டு நிகழ்ந்தது என்று அவ்வுயிர் பிழைத்தார் போன்றும் நிற்கவும்;

ஆயிரகோடி பொற்றூண்களையும் பலநிறம்பொருந்திய ஓவியங்களையும் கண்ணாடிகளையும் விதானங்களையுமுடையதும், சாமரங்களும் புடைவைக்குஞ்சங்களும் இடையிடையே தொங்கப்பெற்றதும், ஆயிரம்யோசனை பரப்புடையதுமாகிய அத்தாணிமண்டபத்திலே, பொன்னாற்செய்து இரத்தினங்கள் அழுத்திய சிங்காசனத்தின்மீது, கூற்றுவர்களெல்லாரும் ஒரேவடிவெடுத்து ஆயிரகோடி. யண்டங்களினுமுள்ள வடவாமுகாக்கினிகளையும் விடங்களையும் உண்டு அழியாத இயல்பைப் பொருந்திப் பலவித ஆபரணங்களைத் தாங்கி அவுணர்கள் துதிக்க வானளவும் நிமிர்ந்திருந்தாற்போல, ராசாதிராசனாகிய சூரபன்மன் வீற்றிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

அசமுகிநகர்காண்படலம்.

இவ்வாறாகச் சூரபன்மன் அரசிருக்கும்போது, அசமுகியானவள் துன்முகியோடு மகேந்திரபுரிக் கணிமையாகப் போய், மூதேவி தன் தோழியோடு அந்நகரின் செல்வமுழுதும் கெடுதற்காக வந்தாற்போல அதன் கீழ்த்திசைவாயிலைக் கிட்டினாள். மானமில்லாத அசமுகி மகேந்திரபுரி இனி அடையும் துன்பத்துக்கு ஒருவழி காட்டுதல்போல வெட்டுண்ட கை இரத்தஞ் சொரியச் செல்லும்பொழுது, அந்நகரத்திலுள்ள அவுணர்கள் யாவரும் அதனைப்பார்த்து, "இழிந்த இச்செயலை யார் செய்தார்?" என்று மிகுந்த துன்பங்கொண்டு அக்கினி போலக் கோபித்தார்கள்.

சூதாடிக்கொண்டிருந்தவர் சிலர் அதனைவிட்டு விரைந்து வந்தார்கள். ஆட்டுக்கடாக்களைச் சண்டைமூட்டி அதனைப் பார்த்துக்கொண்டு நின்றவர் சிலர் அதனைவிட்டு வந்தார்கள். யானைகள் ஒன்றின்கோடு ஒன்றினுடம்பின் மூழ்குதலால் இரத்தம் வடியும்படி சண்டை செய்வதைப் பார்ப்பவர் சிலர் அதனை விட்டு வந்தார்கள். கோழிச்சேவல்கள் தம்முயிர்போம்வரையும் வலிமையோடு செய்யும் சண்டையைப் பார்த்து நின்றவர் சிலர் அதனைவிட்டு வந்தார்கள். ஆகாயத்திலே பறக்கும்படி பட்டங்களை விட்டுக்கொண்டு நின்ற சிலர் அவற்றைக் கைவிட்டு வந்தார்கள். கசரததுரகங்களையும் விமானங்களையும் வண்டிகளையும் ஆசையோடு செலுத்தப் பழகுகின்ற சிலர் "தகாத இஃதொன்று நமக்கு வருவது என்னை?" என்று அவற்றை விட்டு வந்தார்கள். தூண்களை நிறுத்தியும் வேறு அறிகுறிகளை எழுதியும் அவைகள் இலக்காக எறிவனவும் எய்வனவுமாகிய ஆயுதங்களைப் பயிலுகின்ற சிலர் அவற்றை விடுத்து வந்தார்கள். ஆசிரியர்களெதிரே வாள்வித்தை முதலியவற்றைக் கழகங்களிலே பயில்வோர் சிலர் துன்பம் மிகுந்து வந்தார்கள். யாழ் வீணை முதலியவற்றினிசைகளையும் குழலிசையையும் கண்டப்

பாடலையும் கேட்பவர் சிலர் அவற்றை விட்டு வந்தார்கள். சிலர் நாடகர்களும் கழாய்க் கூத்தர்களும் பிறரும் விளையாடுகின்ற கோட்டிகளை நீங்கி, 'நிலைகுலையுமுடம்பினராய் வந்தார்கள். வேண்டும் பொருள்களெல்லாவற்றையும் சம்பாதித்துக்கொண்டு இளைஞர்களோடு பலபல விவாகச்சடங்குகளைச் செய்கின்றவர்கள் சிலர் அவைகளை விட்டு வந்தார்கள். மற்றொரு பெண்ணினிடத்தே ஆசைவைத்து முன்பு கூடியிருந்த ஒரு பெண்ணினிடத்திற் செல்ல, அவள் ஊடி மிகுந்த கோபத்தோடு சண்டைசெய்தலும், "இது நல்ல சமயம்" என்று எண்ணி அவளை நீங்கி வந்தார்கள் சிலர். மாடங்களினிடையிடையே உள்ள தாமரைத்தடாகங்களிலும் நந்தனவனங்களிலும் பெண்களோடு விளையாடுதலை வெறுத்து அடைந்தார்கள் சிலர். காய்ந்த மீனைக் கறித்துக்கொண்டு கள்ளைக்குடித்து அதனாற் புலன்கள் ஊசல் போலத் திரியத் தள்ளாடித்தள்ளாடித் தளர்ந்துவந்தார்கள் சிலர்.

அசமுகியைக்கண்ட இவர்களும் இவர்களையொத்த வேறு பலரும் நீர்வடியுங் கண்களையும், பதைக்கும் மனத்தையும், நெருப்பையும் புகையையுங் காலும் உயிர்ப்பையும் உடையர்களாய்க் கோபத்தோடு பின்வருமாறு சொல்லுகின்றார்கள்:—"அந்தகனும் கயாசுரனும் புலிமுகனும் முதலாகிய அசுரர்களையும், தம்மை மதியாத திரிபுரத்தசுரர் முதலிய வலியோர்களையும், முப்புரங்களையும் அழித்து, எல்லாவற்றையும் இனிமேற் சங்கரிக்கநின்ற அக்கினிசொரூபராகிய சிவபெருமானுடைய செயலோ இது?" என்பார். "மகிடாசுரன், நிசும்பன், சும்பன், இரத்தநேத்திரன், இரத்தபீசன், முன்னோர் காலத்திலே பூமியை ஆண்ட தாரகன், பண்டன் முதலாயினோருடைய உயிரைக் கவர்ந்த துர்க்கையின் செயலோ இது?" என்பார். "விட்டுணுவும் சிவபெருமானும் கூடிப்பெற்ற உருத்திராகிய ஐயனாருடைய செய்கையேபோலும் இது?" என்பார். "நங்குலத்தோனாகிய கயமுகன் என்னும் மேலோனுடைய மார்பிற் புகுந்து உயிரைப் பருகிய தந்தத்தையுடைய விநாயகருடைய செயலோ இது?" என்பார். "பரம்பொருளாகிய சிவபெருமானை மதியாது 'யாம் முதற்கடவுள்' என்று வாதம்பேசும் பிரம விட்டுணுக்களுக்கு ஏற்றபிரகாரம் தண்டங்களைச் செய்கின்ற சங்குகன்னர் குண்டோதரர் பானுகம்பர் முதலாயினோர் செயலோ?" என்பார். "விட்டுணுவின் செயலோ இது?" என்பார்; "அவன் இச்செயலைச் செய்தற்கு அஞ்சுவான்; ஆதலால் அது நினைக்கத்தக்கதன்று" என்பார். "பிரமன் இதனைச்செய்ய நெஞ்சினும் நினைப்பானோ?" என்பார். "இந்திரன் செய்த செயலோ இது?" என்பார்; "அவன் மறைந்து திரிவான்; ஆதலால் இதனைச் செய்ய வல்லனோ அது கருத்தன்று" என்பார். "மற்றைத் தேவர்கள் செய்த செயலோ?" என்பார். "இடைவிடாது நம்முடைய பணிவிடையில் நிற்பவர்கள் இதனை நினைப்பார்களோ?" என்பார். "கட்குடித்துக் களித்து மதிமயங்கினவர் அல்லது பித்தர் இதனைச் செய்தார்" என்பார். "வாழ்நாள் முடிவு வரப்பெற்றவர் யாவர் செய்தார்?" என்பார். "முனிவர்களுடைய சாபத்தால் இவர்கள் கைகள் வீழ்ந்தனவோ?" என்பார். "இவர்கள் இருவருந் தங்களுள்ளே சபதமிட்டுப் போர்செய்து, ஒருவர்கையை மற்றொருவர் வெட்டினார்களோ? இவர் இருவர்கையும் வெட்டுண்டன காண்மின்" என்பார். "இந்த அசமுகி கையில் ஒன்றை யாவர் துணிக்கவல்லவர்! இவள் யாவரிடத்திலோ பேராசைகொண்டு பெண்புத்தி மயக்கத்தால் 'என் சிறந்த உறுப்பிலொன்றை அடையாளமாய்த் தருவேன்' என்று உடைவாளினாற் கையை அறுத்துக் கொடுத்தான்

யீர்போலும்!" என்பார். "கேட்டினையடைந்த இவளை இனிநாம் கேட்பதென்னை?" என்பார். "நாம் கேட்டால் நம்மைக் கோபிப்பாள்" என்பார். "நாம் இவள் பக்கத்திற் போவதென்னை? பூமியின் எல்லைவரையும் நாம் ஓடி விசாரித்தறிவோம்" என்பார். இப்படி அசுரர்கள் சொல்ல, அசமுகி துன்முகியோடு விரைந்துபோதலை அசுரப்பெண்கள் கேள்வியுற்று, அளகம் அவிழ்ந்து தொங்கவும், கண்ணீர் வடியவும், வீதிகடோறும் நெருங்கிச் சூழ்ந்தார்கள். அம்மகேந்திரபுரத்திலுள்ள ஆடவர்களும் பெண்களும் தன்னைச் சூழ்ந்து இவ்வாறு இரங்கிச்சோர, அவள் துன்முகியோடு அந்நகரத்தினுட்போய், சூரபன்மன் அரசிருக்கின்ற அத்தாணி மண்டபத்துக்குச் சமீபித்தவளாயினாள்.

திருச்சிற்றம்பலம்.

அசமுகிபுலம்புறுபடலம்.

அசமுகி சூரபன்மனுடைய அவைக்களத்தை அணுகி, தன்னுடைய தாயையும் சுற்றத்தாரையும் மருகர்களையும் தமையன்மார்களையும் நினைத்து, அந்நகரிலுள்ள சிதேவி நீங்கும்படி கதறிப் புலம்பலுற்றாள்:—

"சிவபெருமான் வரந்தந்தருளிய அந்நாளில் வந்து, 'உங்களைப் பிரியாது காத்துத் திரிவேன்' என்றாய்; அம்மொழியும் பிழைத்தாய் போலும்! என்கரம் போனதறியாயோ? 'அஞ்சாதே' என்றாயில்லை. இது தகுமோ? அன்னையே அன்னையே, சிறியேனாகிய நானொரு பெண்பிறந்து பட்ட பரிபவம் எப்போ தீரும்! ஐயோ! 'தந்தையர்கள் தம் புதல்வர்களிடத்தில் அன்புவைப்பர்; தாயர்கள் தம்பு புதல்வியர்களிடத்தில் அன்புவைப்பர். இஃது உலகவழக்கம்' என்று பெரியோர் சொல்வர். அம்முறைபற்றி என் துயரை நீக்க வந்தாயில்லை. அந்தோ! தமியேன் ஒருதுணையுமில்லாதவர்போலக் கையிழந்தும், இவ்வுயிரைத் தாங்கிக்கொண்டிருப்பதேயோ! நம்மவர்களே 'நீவிர் எங்கும் வருவீர்' என்று கருதி, அஞ்சாது ஐராணியை வலாற்காரமாய்ப் பற்றிக்கொண்டு, மிகுந்த வீரத்தோடு வந்தேன். வீரமாகாளன் பின்னேவந்து என்கையைத் துணித்து, அவளையும் மீட்டுக்கொண்டு போயினான். நீவிர் ஒருவரும் அக்காட்டிற் செல்லீரோ! நீவிரும் அத்தேவர்களுக் கொளித்தீரோ! புரத்தை அழித்தும், வலியைக் குறைத்தும், பழைய நிலைமையைக் குறைத்தும், வரத்தைக் குறைத்தும், புகழைக் குறைத்தும், வேதாசாரத்தைக் குறைத்தும், செல்வத்தைக் குறைத்தும் 'தேவர்களை ஏவல்கொண்டோம்,' என்றிருப்பீர்; ஒருவன் வந்து என்கையைத் துணித்ததை அறியீர். உங்கள் நாசியைக் குறைத்தான்போலும். காண்மின் காண்மின். 'இந்திரன் நமக்கு மீன் சுமந்து பழிக்கஞ்சி வெருவிப் போயினான் போயினான்' என்று சொல்வீர்போலும்; அவன் ஒருவனையே யனுப்ப, அவன் வந்து என்கையைத் துணித்தான், அவ்விந்திரனுடைய செயலும் வீட்டுக் கூரையில் நெருப்பு மறைந்திருந்த செயலாயிற்றே. 'எட்பிளவை யொத்த சிறுமையையுடைத்தேயாயினும், உட்பகை உளதாயின் எத்துணை வலியோர்க்கும் கேடுளதாம்' என்று, அறிஞர் கூறுவர். அஃது உண்மையாம். தள்ளுற்றுத் தள்ளுற்று நம்மேவல் புரிந்துழன்ற இந்திரன்

கள்ளமாய் மறைந்திருந்தே எனது கரத்தைத் துணிப்பித்தான். காண்மின் காண்மின். சமுத்திரத்தின் நடுவிலிருக்கும் வடவாமுகாக்கினி காலம்பார்த்துப் பூவுலகங்களையும் அச்சமுத்திரங்களையும் அழிப்பதுபோல, அங்கிருந்து என்கையைத் துணித்த வீரமாகாளனும் உங்களை இனிமேல் அழிப்பான்போலும். இங்கிருந்தென்ன செய்கின்றீர்! தேவர்களைச் சிறியர் என்று இகழ்ந்தீர்களே! இரணியனுக்கு மூன்று சிரங்களும், அக்கினிமுகனுக்கு இரண்டு சிரங்களும், வச்சிரவாகுவுக்குப் பத்துச்சிரங்களும் உள்ளனவே! அவைகளை வீணாக வளர்த்தார்களோ! இந்தச் சிரங்கள் என்ன செய்யும்! ஒரு சிரசையுடையோன் என் கையைத் துணித்துப்போயினான். அந்தத் தேவர்களுக்கா இவர்கள் அஞ்சுவர்! பாதலத்திலுள்ள அரக்கர்கள்தாமா இவர்களுக்கெளியர்! குழந்தைப்பருவத்திலே சூரியனுடைய வெய்யில் உடம்பிற் படுதலும் அவனைச் சினந்து பற்றிக்கொண்டுவந்து சிறைசெய்த மருகாவோ மருகாவோ! ஒருவன் என் கையைத் தீண்டித் துணித்துப்போவதா! நீ வினவுகின்றாயில்லை, இஃதென்ன கொடுமை! பூமியை ஓரடியாக அளந்த விட்டுணு செலுத்திய சக்கரத்தை அந்நாளிற் பொன்னாரமாகத் தரித்தாய்; இந்நாளிலும் ஒரு பழியையே ஆரமாகப் பூணுநின்றாய். இப்பூமியிலே சிறுபகைஞர் என் கை போந்திறத்தைச் செய்ய நீ இனிதாக இந்நிலவுலகத்தை ஆண்டாய். நந்தலையனாகிய தாரகனே, உன்னுடைய பெரிய வலிமை அபரபக்கச் சந்திரன்போலாயிற்றே! 'வச்சிராயுதகரனாகிய இந்திரனை ஐராவதயானையோடும் வானுலகத்திற் செல்ல ஒருகையாலெறிந்து அவன் வீழ்ந்துகிடப்ப உதைத்தாய்' என்று சொல்லுவர். அதனை மெய்யென்று வியந்திருந்தேன். அது பொய்யோ! அவ்விந்திரனுடைய தூதுவன் கோபித்துவந்து என்கை யொன்றைத் துணித்தானே! சிங்கமுகவீரனே, இதனைக் காண்கிலாயோ! சூரன் என்னும் பெயரைப் படைத்த அவுணர்களுடைய பெருவாழ்வே, அண்டங்களையெல்லாம் ஒருங்கே யாண்டாய். உன்னுடைய ஆஞ்ஞாசக்கரமும் செங்கோலும் வெண்கொற்றக்குடையும் எங்குஞ் செல்லாநிற்கும், தேவர்கள் எல்லாரும் அவற்றிற் கஞ்சுவர். அங்ஙனமாக, உனது பொன்னுலகிலிருக்கும் இந்திரனுடைய ஆணையை வகித்த வீரமாகாளனிடத்து அவ்வச்சத்தைக் கண்டிலேன். அவை மூன்றும் வலியாரிடத்துச் செல்லாவோ! முன்னாளில் ஒரு முனிவன் பகைவர்களுடைய சூழ்ச்சியினால் என் குமாரர்களுடைய உயிரைக் கவர்ந்து தான் உயிரோடிருக்கின்றான். அஃதன்றி இந்நாளில் ஒருவனைக்கொண்டு என்கையையும் அப்பகைவர்கள் இழப்பித்தார்களே! தங்கையாகிய யான் இவ்வருத்தங்களை அனுபவிக்க நீ நன்றாக அரசு செய்தாய்! இது பிழையன்றோ! மன்னவோ மன்னவோ! யான்பட்ட இழிவரவை நினைக்கிலாயோ; காவல்செய்து உலகங்களை ஆளும் அண்ணாவோ அண்ணாவோ! கரமிழந்தேன் காண்; எவர் எனக்குறவானார்! அங்கதனை உயிரோடிருப்பதும் பழுதன்றோ! நான் உயிரை விடுவேன்; அதன்முன் என்மானமே என்னைக் கொல்லுகின்றது ஐயோ! பாவியாகிய ஒருபெண் பிறந்த பயன் இதுவோ! விதிக்கு என்னிடத்து யாதும் பகையுண்டோ!'" என்று அசமுகி பற்பலவற்றைச் சொல்லி ஆவலித்திரங்கி, தன்பின்னே வருகின்ற துன்முகியோடும் போய், அத்தாணிமண்டபத்தில் வீற்றிருக்கின்ற சூரபன்மனுடைய கால்களில் வீழ்ந்துபுரண்டாள்.

திருச்சிற்றம்பலம்.

சூரன் றண்டஞ்செய்படலம்.

அசமுகி இவ்வாறு சகடைபோலப் புரளும்பொழுது, அவ்வவைக்களத்தி லுள்ளவர்கள் அஞ்சி வருந்த, சூரபன்மன் இருகண்களினும் அக்கினியெ ழும்படி பார்த்து, "தங்கையாகிய அசமுகியே, ஏன் இங்கே புலம்புகின்றாய்? உன்னை இன்னாள் என்று யோசியாமலும், என்னையும் நினையாமலும், உன்கை யையும் இவள்கையையும் வாளினால் வெட்டி முன்போல் உயிரோடிருந்தவர் யாவர்?" என்று வினாவினான். "இந்திரனுடைய மனைவியாகிய இந்திராணி பூமி யில் ஓரிடத்திலே தவஞ்செய்துகொண்டிருந்தாள். அவளை உனக்கென்று சென்று எடுத்தோம். ஒரு தேவன் விரைந்து வந்து கோபித்து எங்கள் கையை வெட்டி, அவளை மீட்டுக்கொண்டு போயினான்" என்று அசமுகி சொல்லினாள். சொல்லு முன், சூரபன்மனுடைய கண்கள் நெருப்பைச் சொரிந்தன; வாய் புகைப்படல த்தை உமிழ்ந்தது; மூக்கு அக்கினிமயமாகிய உயிர்ப்பை விடுத்தது; வக்கிரதந் தங்கள் அதரத்தை மறைத்தன; அண்டங்கள் வெடிக்கலுற்றன என்னும்படி வாய் இடியொலியைச் செய்தது; சிரிப்புண்டாயிற்று; அதரந்துடித்தது; புருவங் கள் துள்ளி நிமிர்ந்தன; பற்கள் கறகறவென்று கடிக்கலுற்றன; வியர்ப்பு மிகுந் தன; அவை வறழும்படி மயிர்க்கால்தோறும் தீப்பொறிகள் தோன்றின; மனத்தி னின்றும் விரைந்து கோபாக்கினி உண்டாயிற்று. வெம்மையாகிய பெருங்கோபம் இவ்வாறு சூரபன்மனிடத்து உண்டாதலும், திசைகளினுள்ளார் ஓடுகின்றார்கள்; முனிவர்கள் உலைந்தார்கள்; நடனஞ்செய்கின்ற தெய்வப்பெண்களும் அவனுடைய புகழ்களைப் பாடுகின்றவர்களும் பதைபதைத்தோடினர்; அட்டதிக்குயானைகள் ஓடின; அட்டகுலமலையும் மேருமலையுங் குலைந்தன; நாகங்களெல்லாம் உலைந்தன; தேவர்கள் ஏங்கி நடுங்கினர்; சூரியன் இத்தீங்கைப்பார்த்து ஓடியும் மீண்டுந் திரிந் தான்; பூமி நடுங்கின; விண்ணுலகமெல்லாம் நடுங்கின; சமுத்திரஜலம் நடுங்கின; பிரமபதம் நடுங்கின; விட்டுணுபதம் நடுங்கின; அவுணரும் நடுங்கினர்; உலகில் யார் தாம் நடுங்காதவர்! அவனுடைய கோபம் சிறியதா!

தாக்ஷணியமில்லாத சூரபன்மா வென்னும் புல்லிய மனத்தையுடைய அசு ரன் இவ்வாறு துண்ணென்று சினந்து, தேவர்கள் எல்லாரையும் தொலைக்கும்படி எண்ணி, அங்கேயிருக்கின்ற தம்பியர்களைப் பார்த்து, இவற்றைச் சொல்வான்: "நம்முடைய ஏவலினால் மீன் சுமந்து திரிந்த இந்திரன் காட்டில் மறைந்திருந்து ஒருவனைக் கொண்டு இவர்களுடைய கைகளைத் துணிப்பித்தான் என்றால், இனி மனுடர்களும் நம்மைக் கொல்வார்களே! சிவனல்லன், பிரமனல்லன், விஷ்ணுவல் லன், நமக்குப் பயந்தோடிய இந்திரனல்லன், அவனுடைய ஏவலைச்செய்யும் ஒரு வனும் இவர்களுடைய கையைத் துணித்துவிட்டு உயிர்பிழைத்திருப்பான்! எளி மையையுடைய தேவர்களைப் போரிலே வஸ்திரத்தினாற் கட்டிக்கொண்டு வருத லும், என் கண்முன்னிற்கின்ற அவுணர்களுடைய மிகுந்த பசியொழியும்படி 'நீர் உண்மின்' என்று கொடுத்திலேன்; அறத்தை நினைந்து அதுசெய்யாதிருந்தேன். மறைந்திருக்கின்ற இந்திரனையும் இந்திராணியையும் முன்னே சிறைவைத்தேனி ல்லை; அவர்களை எளியர் என்று எண்ணினேன்; தீயின் சேஷத்தை வைத்தவர் கள் போலாயினேன்; இத்தன்மையை எண்ணிலேன். தன்கையகப்படுத்திய உயிர்ப் பலியை விரைந்துண்ணாது தப்பவிட்ட மதயானையையொத்தேன். இந்நிலவுலகத்

திலே இவர்களுடைய கைகளை வெட்டியது என்னுடம்பிற் செய்த அவமானமன்றி வேறுண்டோ! இந்திரனையும் இந்திராணியையும் தேடும்படி சென்ற தூதுவர்களும், அத்தேவர்கள் தமக்கொரு தீங்குமின்றிப் பூமியிற் குறும்பு செய்துகொண்டிருத்தலை இன்னும் கண்டிலர்போலும். தம்பியர்களாகிய நீர் இருந்தீர்; புதல்வர்களுமிருந்தார்; இணையில்லாத இந்திரஞாலத் தேரிருந்தது; சிறீதே என்பேரிருந்தது; யானுமிருந்தேன். பின்னை யாரிருந்துமென்! மற்றையெல்லாருமிருந்து மாகின்றதென்! அந்தோ! வானுலகத்தையளாவுகின்ற பஞ்சுமலை ஒரு சிறு தீப்பொறி பட்டமாத்திரத்தில் அழியுஞ் செயல்போல, இவர்களுடைய கைகளினின்று முதிர்ந்த சிறிய இரத்தத்துளியினாலே பலவண்டங்களையும் விழுங்கிய நம்முடைய புகழ் போனதே! இவர்களுக்கு இழிவும் வருவதா! தேவர்கள்மாட்டு நின்ற துன்பமும இங்கேவருமா! பழியும் என்னிடத்து வருமா! இப்பழி என்றும் ஒழிவதில்லையே! இதனை என்னுயிர் பொறுப்பதா! யானை குதிரை தேர்களும் எண்ணில்லாத அவுணர்களும் உலகமெங்குமிருக்க, அசமுகி படுவது இதுவா! என்னரசியன் முறைகள் நல்லன நல்லன!" என்று சிரித்தான்.

சூரபன்மன் இவ்வாறு சொல்லிச் சிரித்தபொழுது, அவன் புதல்வர்களிற் பானுகோபன் என்னும் வலியோன் அக்கினிபோலக் கோபாவேசத் தனாயெழுந்து பிதாவுக்கு முன்போய் வணங்கிநின்று, இவ்வாறு சொல்வான்: "ஐயனே கேட்பாய்! இந்திரன் நமது குற்றேவலால் வருந்தி இளைத்த மனத்தோடு மறைந்தான். தேவர்களும் எளியர்; இத்தொழிலை நினைத்தலுஞ் செய்யார். உன் தங்கை கையிழந்தது என்னை! மாயமோ! இதனை அறியாது கவல்வேன். 'தேவரிலொருவனே இவர்களுடைய கையைத் துணித்துவிட்டு உயிரோடிருக்கின்றான்' என்று நீ சொல்வது, 'மலடிபெற்ற மகன் ஆகாயத்திற் செல்லுஞ் சந்திரனைக் கையினாற் பிடித்தான்' என்பதே. ஒருவாறு அவர்கள் வலியராகியே இவர்களுடைய கையைத் துணித்தாரெனினும், உன்னாற் கோபிக்கப்படுந் தகுதியுடையர்களோ! அவர்கள் மிகவும் மெலியர். கடலிலுள்ள மீனைச்சுமந்து உன்பணி செய்த அவர்கள் பேடிகளன்றி ஆண்டகைமையுடையர்களோ! பிரமா விட்டுணு உருத்திரன் ஆகிய இவர்களைக் கோபித்தாலும் உனக்குத் தகுதியே. பெருமையிற் சிறந்த நீ சிறியோர்களையும் கோபிக்கின்றனையோ! மும்மூர்த்திகளன்றி வேறியார் உன்கோபத்திற்கியைந்தோர்! உன்றம்பியர்களுக்கும இவ்வாறே. உன் மனத்திற்கொண்ட கோபத்தைத் தீருதி. இவர்கள் கைவெட்டுண்ட இடத்திற்கு நான் கடிதிற் செல்வேன். இவர்களுடைய கைகளை வெட்டின ஆடவனையும், உன் மனத்தில் ஆசையை மூட்டிய இந்திராணியையும், கள்வனாகிய இந்திரனையும், தம்முயிர்மேல் அன்பில்லாத தேவர்களையும் பிடித்துக்கொண்டு வருவேன். அவர்கள் அங்கேயில்லாமல் மறைகுவாராயின், சுவர்க்கத்தை அக்கினி கொளுத்தி, உலகமெங்குந் தேடிப் பார்த்து, அத்தேவர்களையும் அரம்பையர்களையும் ஒருநாழிகைப் பொழுதினுட் பிடித்துக்கொண்டு வருவேன். அடியேனுக்கு விடை ஈகுதி" என்று நின்றிரந்தான். பிதாவாகிய சூரபன்மன் சினந்தணிந்து, "மைந்தனே உன்படையோடு ஆண்டுச் செல்லுதி" என்று கூறினான். பானுகோபன் நன்றென்று மகிழ்ந்து, பிதாவினுடைய கால்களை வணங்கி, தன் சிறிய பிதாமார்களையும் வணங்கி, விடைபெற்றுத் தனது மாளிகைக்குப் போயினான்.

பானுகோபன் செல்லுதலும், சூரபன்மன் ஏவலாளரிற் சிலரைநோக்கி, "அந்தப் பிரமன் இங்ஙனம் வருவான் அவனை நம் முன் கொண்டு வருவீராக" என்றான். அவர்கள் "பிரமன் எங்குற்றான்" எனக் கூவிச் சென்று, அவனைக் கண்டு, "நம்மரசன் உன்னைக் கொண்டுவரும்படி பணித்தான்" என்றார்கள். அவர் பஞ்சாங்கத்தோடு விரைந்து சூரன்முன் சென்று, திதிவாரநக்ஷத்திரமுதலிய பஞ்சாங்கங்களையும் மேலுள்ளனவற்றையும் சொல்லினன். சூரபன்மன் பிரமனை நோக்கி, "நுட்பபுத்தியால் எல்லாவற்றையும் படைத்த பிரமனே, இவர்களுடைய வெட்டுண்ட கையை விரைந்து உண்டாக்குவாய்" என்றான். பிரமதேவன் இசைந்து, "இவர்களுடைய கை கூடுக" என்னலும் ஒரு நொடிப்பொழுதினுள் வளர்ந்தன. சூரன் "உன் வல்லபம் நன்று நன்று என்று" பிரமனைவியந்து, அசமுகியை அந்நகருள் இருக்கும்படி செய்து, துன்முகியை "ஐராணி முன்னிருந்த இடத்தைக்காட்டி வருகுதி" என்று பானுகோபனோடு அனுப்பி, தன் மருங்கிலே நிற்கின்ற பல ஏவலரை நோக்கி, "சூரியனையும் நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும் இப்பொழுதே அழையுங்கள்" என்று பணித்தான்.

ஏவலாளர்கள் பலர் விடைபெற்று விண்ணுலகத்துக்குப்போய், சூரியன் முதலிய யாவரையும் தேடிக்கொணர்ந்து, சூரபன்மனுக்கு முன்னே நிறுத்தினர். அவன் தன்மனத்தில் முன்பு தவிர்ந்திருந்த கோபாக்கினி பின்பு கிளர, வியர்க்கும் நெஞ்சினனாய், அவர்களை அழைத்து, "அயர்ச்சியின்றி ஆகாயத்திற் சஞ்சரிக்கும் நீவிர் அறியாத தொன்றுமில்லை. என்றங்கையினுடைய கையைத் துணித்தவனுடைய செய்கையைக் காணுதிர். கண்டும் வறிதே ஆகாயத்தில் இருந்ததென்னை? இவளுடைய கையைக் குறைத்த தேவனுடைய உயிரைக் கவர்ந்திலீர்; அல்லது அவனைக்கட்டுத் தளை செய்து இங்கே கொணர்ந்திலீர்; அல்லது அவ்விடத்து நிகழ்ச்சியை நமக்குவந்து சொன்னீரில்லை. நும் செய்கை நன்று! யோசிக்கின், ஒரு வலியவன் மறைந்தவண்ணமாயினும் என்றங்கையின் கையைக் குறைத்தற்கு நீவிரும் அகத்தரேயல்லது புறத்தரன்று. நீங்கள் உங்களுக்குரிய தொழில்களை நம்மாணையாற் செய்வீர்; நுமக்கிது முறையா?" என்று கூறினான். நீதியில்லாத சூரன் இங்ஙனஞ் சொல்ல, "மகாராஜனே, எங்களை ஏதும் வெகுளற்க. இவளுடைய கரத்தைத் துண்டித்தவனைக் கண்டிலேம்; எங்கள் கண்கள் இன்று செல்லுகின்ற கதியின்மீது சென்றன" என்று அவர்கள் சொன்னார்கள். "இவள் கை துணிபட்ட இச்செய்கையைக் கண்டிலர்களாம்; கண்கள் கதியிற் சென்றனவாம்; இத்தேவர்களுடைய செயல் அழகிது" என்று அவர்களெல்லாரையும் சூரன் நீங்காத சிறையிலிடுவித்தான். சூரியன் முதலாயினோர் சிறையிற் புகுந்த பின்பு, சூரன் சில ஏவலாளரை அழைத்து "நீர்போய் வாயுக்களைக் கொண்டு வாருங்கள்" என்று கோபத்தோடு சொல்லித் தூண்டினான். ஒற்றரிற் சிலர் விரைவிற் போய் வாயுக்களின் தொகுதியைக் கூவிப்பற்றிக் கொண்டுவந்து முன்னேவிட, பதைக்கும் நெஞ்சினனாய், "விண்ணிலும் மண்ணிலும் திசைகளிலும் பாதலத்திலும் ஊனிலும் உயிரிலும் ஏனையபொருளிலும் எங்கும் நிற்பீர். என் தங்கையினுடைய கையை ஒருதேவன் வாள் கொண்டு சேதித்ததைக் காணுதிர்; உமக்கு யாவர் மறைத்தற்பாலார்? இந்நகரில் வந்து இந்நிலைமையைச் சொன்னீரில்லை; பகைவர்களுடைய சூழ்ச்சியால் 'அவுணர்களுக்கு இப்பழி வருவது நன்று' என்று

மகிழ்ந்து வாளாவிருந்தீர்; உங்கள் பெருமிதம் நன்று!" என்று சூரன் சொல்ல, அவர்கள் ஒருபதிலும் பேசாது நின்றார்கள். வலியின்றி அச்சத்தோடு நின்ற வாயுக்களை ஒரு சிறைச்சாலையிலிடுவித்தான். உலகங்களுக்கு அழிவைச் செய்ய விருக்கின்ற வாயுக்களையும் சூரன் சினத்தோடு சிறையிலிட்டான். நாம் சொல் லின் உலகத்திலே தவத்தினால் வரும்பேற்றினும் பெருமையாயது வேறுளதோ!

அதன்பின் சூரன் ஏவலரை அழைத்து, "இந்தவருஷம், இருது, மாதம் முதலிய காலவரையறைத் தெய்வங்களைத் தருதிர்" என்று பணிக்க, வணங்கிப் போய், அவரை அழைத்துப் பற்றிக்கொண்டுவந்து விட்டார்கள். சூரன் அவர் களைச் சீறி, "புல்லிய இந்திரன் புணர்த்த அச்செயல் தகுவதென்று அதற்கு ஒருப்பட்டு நீவி ரெல்லீரும் மனமகிழ்ந்திருந்தீர்; என்னோடுஞ் சொல்லவந்தீரி ல்லை; நீர் எங்கும் உள்ளீர்; நம்முடைய ஏவல் வழியினின்றி நீர் இருந்ததிற் பயன் என்னை? நீர் இல்லாமையால் தவறு என்னை? நீவிர் தேவர்பக்கஞ் சார்ந்தீர்" என்று அவர்களையும் சிறைசெய்தான். பின் சில ஏவலர்களை யழைத்து, "இப்பூவுலக அரசர்களை விரைந்து கொண்டு வருதிர்" எனச்சொல்லித் தூண்டினான். அள வில்லாத தூதுவர்கள் ஓடி, மிகுந்த அரசர் தொகுதியை நிலவுலகமெங்குந் தேடிப் பற்றிக்கொண்டு வந்து சூரனுடைய அவைக்களத்தில் விடுத்தார்கள். உடம்பில் வேர்வை மிகவும் அச்சமும் நாணமும் உயிரைத்தாக்கவும் மனம் மிகத்தளரவும் கைகூப்பிவணங்கும் அவ்வரசர் தொகுதியைச் சூரன் நோக்கி வெகுண்டு, "எளி மையின்றி நம்மேவலை நீங்கிக் களிக்கின்ற இந்திராணியோடும் இந்திரன் இவ்வுல கில் ஒளித்தான், தேவருலகிலில்லை. நீர் அரசியல்செய்தது மிகவும் அழகிது! கள் ளமனத்தினையுடைய இந்திரனுடைய ஆணையின்வழிநின்ற தூதுவன் என்றங்கை யாகிய அசமுகியினுடைய கையை அறுத்து ஆண்டே இருந்தான். அதனையும் அறிந்திலீர்; நாடோறும் கள்ளுண்டு கலங்கினீர்களோ, அல்லது உறங்கினீர்களோ? அரசியலைவிட்டீர்களோ? பெருஞ்செல்வத்தாற் பித்துற்றீர்களோ? என் பகைவர்க ளோடு உறவுற்றீர்களோ? அல்லது அவர்களுக்கு அஞ்சினீர்களோ? பெண்களைச் சேர்ந்து களிப்புற்றீர்களோ? நீங்கள் இருந்தநிலைமை என்னை?" என்று வினவி னான். அவர்கள் "மகாராசனே, நீ சொல்லிய தன்மையில் ஒன்றையுங்கொண்டி லேம்; பூமியைப் பண்டுதொட்டுப் பரிபாலித்து வருகின்றோம்; உன் பகைவர்கள் யாரையுங்கண்டிலேம்; அவர்கள் ஒளித்திருக்குங் கதையையுங் கேட்டிலேம்; எங் கள் தாய்போலும் அசமுகி துன்முகியோடு நிலவுலகில் வந்ததையும், அவர்கள் கை வெட்டுண்டதையும் தெரிந்திலேம்; இது ஒருமாயமாகும்; இதனை உறுதி யென்று மனத்துக்கொள்ளுதி" என்றார்கள். "மிகுந்த செல்வத்தை அநுபவித்து அதனால் மயங்கிப் பூவுலகத்தை எங்கும் பரிபாலித்திலீர்; இடையிலே என்னி டத்து இத்தன்மையாயதோர்பழி அடைவதும் ஒரு மாயையாம்; இது அழகிதே!" என்று சூரன் சொல்லி, சங்கார காலத்திலே வடவாமுகாக்கினி எழுவதுபோலச் சினம்மேற்கொள்ள, வாளை உருவிக்கொண்டு தன் மருங்கில்நின்ற சேனைத்தலை வரை ஏவித் தனித்தனி தண்டஞ்செய்வானாய், சிற்சிலருடைய நாவையும் கையை யும் சேதிப்பித்தான்; சிற்சிலருடைய மூக்கையும் காதையும் களைவித்தான்; சிற் சிலருடைய மார்பையும், முதுகையும் கொய்வித்தான்; சிற்சிலருடைய தாளையும் தோளையும் சிரத்தையும் அறுப்பித்தான்.

சூரபன்மன் இவ்வாறே பலவகைத் தண்டங்களை முறைமுறை செய்வித்து, சிங்காசனத்தினின்று மிறங்கி, தம்பியர்கள் செல்ல விடைகொடுத்து, பிரமாவை நோக்கி "பிரமனே நீ போதி" என்றான். பிரமதேவர் "மகாராஜனே கேட்பாய்; சூரிய சந்திரர்களும் நக்ஷத்திரங்களும் மற்றைக்காலக் கடவுளரும் ஆகிய எல்லா ரும் உன் பணியின்வழி நிற்பர்; உலகம் அவர்களையின்றி நடைபெறாது; அவர் களுடைய பழியை உட்கொள்ளாதே, அவர்களைச் சிறை விடுதி" என்று குறை யிரந்து வேண்டினார். சூரன் அதனைக்கேட்டு நன்றென்று, ஒற்றுவரைநோக்கி, "நம்முடைய சிறைச்சாலையிலிருந்தோரைக் கொண்டு வருதிர்" என்ன, அவர்கள் கொண்டுவந்து விடுத்தார்கள். சிறைப்பட்டிருந்த அவர்களைச் சூரபன்மன் பார்த்து, "என்றும் நம்முடைய பணியின்வழி நிற்கக்கடவீர்; இந்திரனோடு சேரா திருப்பீர்; சென்று உங்களுக்குரிய பழைய தொழில்களைச் செய்யுங்கள்" என்று சொல்லினான். அவர்கள் "மகாராஜனே நன்று, நீ பணித்தபடி செய்வோம்" என்று உபசாரங்களைச் சொல்லி, விடைபெற்றுக்கொண்டு போயினார்கள். போத லும், சூரன் பிரமாவுக்கும் தன்புத்திரர்களுக்கும் அமைச்சர்களுக்கும் முனி வர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் விடைகொடுத்தனுப்பி, தானும் தனது றையுளிற் புகுந்தான். இனி, முன்புசென்ற பானுகோபன் செய்த செயலினைச் சொல்லலுற்றேன்.

திருச்சிற்றம்பலம்.

அமரர்சிறைபுகுபடலம்.

சூரபன்மனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன்மாளிகைக்குச் சென்ற பானுகோபன் தன்னைப் பேரழகு பொருந்த அலங்காரஞ்செய்து, படைக்கலங் களை யேந்தி, தும்பைமாலைசூடி, இரண்டாயிரங் குதிரைகள் பூண்ட ஒப்பில்லாத ஒரு தேரையூர்ந்து, முதற்கடைவாயிலிற் சென்றான். அப்பொழுது, ஆயிரம் வெள் ளம் அவுணசேனையும், ஆயிரம்வெள்ளம் குதிரைகளும், ஐஞ்ஞூறுவெள்ளம் தேர்களும், ஐஞ்ஞூறுவெள்ளம் யானைகளும் அவனைவந்து சூழ்ந்தன. அச் சேனைகளினின்றும் தூளிகளெழுந்து மகேந்திரபுரியை மறைத்தன. கொடிக்காடு களும் குடைக்காடுகளும் மொய்த்தன. வீரர்களுடைய புயங்கள் வளர்ந்தன. தேவர்களுடைய மனங்கள் தளர்ந்தன. இங்ஙனம் நிகழப் பானுகோபன் மகேந் திரபுரியை நீங்கி, அதனைச்சூழ்ந்த சமுத்திரமாகிய அகழியைக்கடந்து, பூமியி னெல்லையையடைந்து, தன் மருங்கில் வருகின்ற துன்முகியை நோக்கி, "உங்கள் கைகள் வாளால் வெட்டுண்ட இடம்யாது? சொல்லுதி" என்றான். அவள் "அர சிளங்குமரனே, ஒருவீரன் ஒருசோலையில் எங்களுடைய கையைத்துணித்து இருந்தான், அயிராணியுமிருந்தாள்; அந்த இடமும் இஃதே" என்று விரலினாற் சுட்டிக்காட்டினாள். பானுகோபன் சீர்காழிப் பதியிலுள்ள அந்தச் சோலையுட்புக, அவனுடைய தூசிப்படைகள் முன் சென்று, அச்சோலையைத் துவைத்து வெளி யாக்கின. பானுகோபன் அங்கே இந்திராணியையும் வாள்வீரனையும் தேடிக்காணா னாய், பூவுலகமெங்குந்தேடிப் பார்த்து, பின் விண்ணுலகிற் போயினான். போய்

கினி சொலிக்கும் கண்களும் மடித்தவாயும் தேவர்கள் அஞ்சும் ஆரவாரமும் உடைய அவுணர்கள் ஒருங்கு சென்றார்கள். ரதகஜதுரகபதாதியாகிய நால்வகைச் சேனைகளும் பொன்னுலகைச் சூழ்ந்தன. இந்தன்மைகள் நிகழப் பானுகோபன் தேவருலகத்தை அடைதலும், தேவர்கள் அங்குவந்தவன் பானுகோபன் என்று அறிந்து, அந்தோ என்று பதைபதைத்து அலமந்து ஏங்கி அறிவழிந்து நொந்து ஓடிப்போய், இந்திரகுமாரனாகிய சயந்தனுக்குச் சொல்லினர். அவன் அதனைக் கேட்டுச் சொல்லுகின்றான்:

"எமது குரு இங்கில்லை; தேவர்குழுவிற் பலரில்லை; என்தாயும் தந்தையும் இங்கில்லை; தமியேன் உங்களோடு இருந்தேன். அந்தப் பானுகோபன் இங்கு வந்தமையும் நம்மைத் துன்பஞ் செய்தற்குப்போலும். முன்னை விதியை யான் அறிவேனோ? இன்றைக்கு யாது முடியுமோ? செல்வங்கள் அழிதலும், தந்தை தாயர் ஒளிப்பதும், சுற்றத்தார் வருந்தலும், பழி நீங்காதிருப்பதும், சூரபன்மனுடைய ஏவல்களைச் செய்துகொண்டு எல்லாப் பெருமையுமிழந்தும், இந்நாள்காறும் இந்த நகரத்தில் இருந்தேன். இன்று அதற்கும் கேடு வருகின்றது. இதற்கு என்செய்வேன்? தேவர்களே சொல்லுங்கள். என்னுடைய தாயுந்தந்தையும் சுற்றத்தாராகிய தேவர்களும் நிலவுலகத்தில் மறைந்தார்கள். அதனைப் பல அவுணர்கள் ஆராயும்படி திரிந்தனர். அவ்வாறாயிருக்கும்பொழுது, எளியவர்களாகிய யாமும் எங்கே போயிருப்போம்? நம்மையெல்லாங் காக்கும்படிக்கு ஒரு புகலிடம் உண்டோ! ஆதலால், இனி யாண்டும் போவதில்லை, புலம்புவதும் இல்லை, அப்படிப் புலம்புவதினால் ஆவதொன்றுமில்லை, வருவதெல்லாம் வருமன்றி வராதொழியுமோ? அவ்வசுரர்களுக்குப் புறங்கொடுப்பதில்லை, வணங்கிப் புகழ்வதில்லை. எதிர்த்து சாவது அல்லது பிழைப்பது இந்த இரண்டே தமியேனுக்குறுதி, அவர்க்கு இனி யான் அஞ்சேன். தம்முயிரைப் பொருளாகக் கொள்ளாதவர் நஞ்சுபோலும் நீங்குகள் தமக்கு வரினும் நடுக்கமடையார், துன்பத்திலாழார், தம்முடைய வீரத்தினெறி பிழையார். அதுபோல, யான் பானுகோபனுடைய கொடிய சேனைகளை எதிரேற்றுச் செல்வேன், பலரைக் கொல்வேன், போர்வீரத்துடன் அவ்வசுரரோடு பொரும்படி செல்வேன். நீரும் என்னைப் பாதுகாத்து வருதிர். வன்மையில்லாதீர் இப்பொழுதே விரைந்து வழிக்கொண்டு போமின். உங்களுள் ஒருவரன்றி எல்லாரும் மனம் பயந்து என்னைவிட்டு நீங்கி ஓடிப்போவீராயினும் நன்றே. துணிந்த தமியேன் சிறிதும் மனந்தளரேன்" என்று சயந்தன் கூறினான். தேவர்கள் அவற்றைக் கேட்டுத் துன்பமுற்று, "உன்மனம் இதுவாயின், நமக்கு வேறோர் எண்ணமுண்டோ? அசுரர்களுடைய ஏவலைச்செய்து அழியாத துன்பத்தை அனுபவிப்பதினும், இறந்துவிடுதல் நல்லது. விரைந்து போருக்குப் புறப்படுவாய்" என்றார்கள். சயந்தன் தேவர்குழுவை நோக்கி, "துன்பமடைந்த உங்கள் மனம் துணிந்ததுபோலும்" என்று வியந்து, சிங்காசனத்தினின்றும் இறங்கி, ஐராவத யானையை நினைக்க, அது அறிந்து அவனெதிரே வந்து வணங்கிநின்றது. சயந்தன் அதன் பிடரில் ஏறிச் செலுத்தித் தேவர்கள் சூழப் பெருங்கோபத்தோடு விரைந்து போயினான். பக்கத்திலுள்ள தேவர்கள் மிகுந்த துன்பங்கொண்டு, ஓடிப் போதற்கு ஓரிடமுங் காணாதவர்களாய், தாம் சயந்தனை நீங்குவது வசை என்பதனை நினைந்து துணிவாகி, பல படைக்கலங்களையும் ஏந்தி, அச்சமில்லாதவர்கள் போல அவனோடு போயினர். ஐராவதயானையின் பின்புறத்திலும் தேவர்களு

ட்டிய ஆர்ப்பும் முரசொலியும் ஒன்றாகச் சேர்ந்து, "எனக்குத் தவறு வரும்" என்று பொன்னுலகம் வாய்விட்டுப் புலம்புதல் போன்றது. தேவசேனைகள் செல்லும்பொழுது பொன்னுலகின் துகள் மேலே நிமிர்ந்தெழுதல் அது "என்னை அக்கினி பற்றி எரிக்கும்" என்று மேலே கிளர்ந்தெழுதல் போன்றது.

இவைகள் நிகழச் சயந்தன் ஐராவதாரூடனாய், மனோவதி நகரத்தை நீங்கிப், பானுகோபனுடைய சேனையினெதிரே போயினான். அங்கே வந்த தேவர்களை அசுரர்கள் நோக்கி, "நேற்றை வரையும் இவர்கள் நம்முடைய தொண்டுகளைச் செய்தார். செருக்கோடு இன்றைக்குப் போர்செய்ய நினைந்து வருவாரோ! இஃது அற்புதம் இஃதற்புதம்" என்று சொல்லலுற்றார். தேவர்களும் அசுரர்களும் "போர்கிடைத்தது" என்று ஒருவரையொருவர் முட்டி, உரப்பி, வேற்படைகளை விடுத்தும், வாட்படைகளால் வெட்டியும், விற்களை வளைத்து அம்புகளை விடுத்தும், எழுப்படைகளையும் தண்டுகளையும் மழுப்படைகளையும் குலிசங்களையும் முத்தலைச் சூலங்களையும் எறிந்தும், சக்கரங்களை உருட்டியும், இரத்தவெள்ளம் பெருகும்படி போர்செய்தார்கள். இருதிறத்தினரும் படைக்கலங்களையேந்தி இப்படிப் போர் செய்யும்பொழுது, தேவர்கள் வலியழிந்து ஓடினார்கள். அவுணர்கள் விரைந்து அவர்களைப் பின்றொடர்ந்து பற்றிக் குற்றிப் புயங்களைக் கயிற்றினாற் கட்டி இழுத்துக்கொண்டு சென்று, பானுகோபனுக்கு முன்னே விடுத்தார்கள். அவன் "இவர்களை வலிமையோடு காத்துக்கொள்ளுங்கள்" என்றான். சயந்தன் இவற்றைக்கண்டு வெகுண்டு, வில்லைக் கையிலெடுத்து வளைத்து நாணொலிசெய்து, அசுரர்களுக்கு நேரே போய், அவர்கள் அஞ்சும்படி பாணமழைகளை ஆரவாரத்தோடு பொழிந்தான். அப்பொழுது அவுணவீரர்கள் மனோவேகமும் பிற்பட வந்து யுகாந்தகாலத்துச் சமுத்திரம்போல அவனேறிய ஐராவதத்தைச் சூழ்ந்து, சயந்தன்மீதும் வெள்ளையானையின்மீதும் கோடி பாணங்களைச் சொரிந்தார்கள். சயந்தன் மேன்மேலும் பாணங்களைச் சொரிந்து, அவர்கள் விடுத்த பாணங்களெல்லாவற்றையும் அழித்து, வில்லையும் அவர்களுடைமையும் வீழ்த்தி, அவுணசேனைகளையும் யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் வீரர்கூட்டங்களையும் வாட்டி, நூறுவெள்ளஞ் சேனைகளை அழித்தான். அவனேறிய ஐராவதயானை பானுகோபனுடைய சேனைகளை வாலினால் அடித்தும், துதிக்கையினால் வாரியெறிந்தும், கால்களினால் மிதித்தும், கோடுகளினாற் குத்தியும், முகில்போலப் பிளிற்றொலி செய்தும் கொன்றது. இவ்வாறு பானுகோபனுடைய நூறுவெள்ளஞ் சேனைகள் கணப்பொழுதினுள் அழிய, இரத்தவெள்ளம் நதிபோலப் பாய்ந்தது. சயந்தன் ஐராவதத்தின்மேலேறிக்கொண்டு அவுணப்படைகளை இப்படி அழிக்கும்பொழுது, நீலகேசனென்னும் படைத்தலைவன் "பேயா! உன்னைப் பிடித்தது! மேல்வருந் தன்மையை நினையாய்; விளக்கில் விழும் விட்டிற்பறவையை நிகர்ப்பாய்; நம்முடைய சேனையை நீயா கொல்லுகின்றனை!" என்று சொல்லிக்கொண்டு அவனுக்கு முன் போய், வில்லைவளைத்து அம்புமழையைச் சொரிந்தான். சயந்தன் அதற்கெதிராக அம்புகளைச் சொரிந்து அழித்து, பின்னும் நூறுபாணங்களை விடுத்து அவன் கவசத்தை அறுத்தான். நீலகேசன் வேர்த்துப் பெருமூச்செறிந்து, ஒரு பிறைமுகாஸ்திரத்தைச் செலுத்திச் சயந்தனுடைய வின்னாணை அறுத்து, ஆரவாரித்தான். தன்னந்தனியாய் நிற்குஞ் சயந்தன் வின்னாண் அறுதலும், அவ்வில்லைக் கைவிட்டு, முன் [illegible] பயின்ற ஒருமாயத்தை நினைத்து, அதனைச் செய்து [illegible]

வேறு வகைப்பட்ட உருவங்களைக்கொண்டு பலவாறு போர்செய்தான். நீலகேசன் குறிப்பினால் இது மாயமென்று நினைத்து, அவற்றை நீக்க யாதும் செயலில்லாதவனாய், எதிர்நின்று ஆர்ப்பரிக்கவும் வாயின்றி மயங்கித் தொலைந்தான். பானுகோபனுடைய சேனைகள் அலைந்து உலைந்து பயந்து ஓடுவனவாயின. அப்பொழுது சோமாசுரன், மாயாபலி, சுரகேசரி, பதுமன், மாருதபலி, தண்டகன், வாமன், வருணன், மாகதன் முதலாகிய அவுணப் படைத்தலைவர்கள் "இது மாயமாகும்" என்று சொல்லிக்கொண்டுவந்து, அதனை அறியாராய், தாம் பயின்ற மாயைகளை நினைத்துப் போர்செய்து, சயந்தன் செய்த மாயம் அவற்றால் அழியாமைகண்டு மனந்தடுமாறி, "யாம் என்செய்வோம்" என்று நினைத்து ஏங்கினார்கள்.

அப்பொழுது, பானுகோபன் தன் படைத்தலைவர்கள் [illegible]ற்றதையும், சயந்தனுடைய பெரிய வெற்றியையும், தன்னுடைய சேனையெல்லாம் வீணாக அழிகின்றதையும் கண்டு, "இது சயந்தனுடைய மாயைபோலும்" என்று நினைத்து, முன்னே சுக்கிராசாரியர் தனக்குபதேசித்த ஞானமந்திரத்தை விதிப்படி நினைத்துக்கொண்டு சென்றான். சயந்தனுடைய மாயாரூபங்கள் யாவும் அழிந்தன. அவன் தமியனாய் ஐராவதத்தின்மேற்றோன்றி, "இது சுக்கிரனுபதேசித்த மந்திரம்" என்றறிந்து, மானமுஞ் சினமுஞ் சுட மனமறுகி, ஐராவதத்தின்மேலிருந்தான். பானுகோபன் தேரோடு அவனை அணுகி, "இந்திரகுமரனே வருதி. நான் ஒரு மந்திரத்தை நினைத்துக்கொண்டு வருமுன் உன்னுடைய மாயையும் வலியும் போயின காணுதி. சூரியனைச் சிறைசெய்ததுபோல உன்னையும் சிறைப்படுத்துவேன், விரைந்து போர்செய்குதி" என்றான். "வலிமையுடையோர் வெல்வதும், அஃதில்லாதோர் தோற்பதுமில்லை, ஊழின் முறையைச் சிவபெருமானே அறிவர், உன்னை நீயே துதிக்கத்தகுமா?" என்றனன் சயந்தன். சயந்தன் மன உறுதியோடு இப்படிச் சொல்லுதலும், பானுகோபன் "வலியில்லாதவர் பேசுந் திறத்தைப் பேசினாய், உயர்ந்த வீரரும் இப்படிச் சொல்வாரோ?" என்று சொல்லி வில்லைவளைக்க, சயந்தனும் சினந்து வில்லை வளைத்தான். பானுகோபன் பலபாணங்களைச் செலுத்த, சயந்தனும் அத்துணைப் பாணங்களைச் செலுத்தி, அவற்றை விலக்கினான். சயந்தன் விடும் பாணங்களைப் பானுகோபன் அறுத்தான். இவ்வாறு இருவரும் போர்செய்யும்பொழுது, சயந்தன் பானுகோபன் செலுத்தும் பாணங்களை விலக்கி, ஆயிரம்பாணங்களினால் அவனுடைய வின்னாணை அறுத்தான். பானுகோபன் அக்கினிபோலக் கோபித்து வேறொரு வில்லைவளைத்துப், பாணமழைகளைச் சிதறி, சயந்தன் பின்னும் விடும் பாணங்களையழித்து, அவன் சரீரத்தில் ஆயிரம் பாணங்களையழுத்தினான். சயந்தன் ஆயிரம் அம்புகளைத்தூவிப் பானுகோபனுடைய தேரிற்கட்டிய குதிரைகளை அழித்து, இறப்பவர்கள் தம்மிடத்துள்ள பொருள்களெல்லாவற்றையும் யாவர்க்குங் கொடுத்தல்போல அவனுடைய சேனைகண்மீதும் அளவில்லாத பாணங்களைச் செலுத்தினான். பானுகோபன் தன்னுடைய தேர் அழிதலும், வேறொரு தேரிற் பாய்ந்து, பெருமூச்சுவிட்டு வெகுண்டு பற்கறித்து இதழைமதுக்கி இடிபோல உரப்பி, வில்லை வளைத்து, நூறுயிரகோடி பாணங்களை விடாமழைபோலப் பொழிந்து, சயந்தனுடைய வில்லையும் அப்பறாக்கூட்டையும் துணித்து, அவனுடைய உடம்பெங்கும் ஐராவதயானையினுடைய உடம்பெங்கும் பாணங்களை அழுத்தினான், பாணங்கள் தன்னுடம்பிலும் மார்பிலும் மூழ்குதலும் சயந்தன் மயங்கி, பின்பு போர்செய்தற்குத்

தெளிவில்லாதவனுகி, யானையின்மேல் வீழ்ந்து அறிவழிந்தான். அமுதமுண்டமையால் இறந்திலன். அவனுடம்பெங்கும் இரத்தம் வடிந்தது. அவனுடைய கோபத்தை நாம் முற்றுஞ் சொல்லமுடியுமோ! அறிவிழந்தபோதும், அவன் கண்ணிலிருந்து வந்த கோபாக்கினி உடம்பிலிருந்து வடிந்த இரத்தநீரை வற்றுவித்தது. சயந்தன் அறிவிழந்து வீழ்ந்தபோது ஐராவதயானை அதனைக் கண்டு கலங்கித் துன்பமுற்று நின்று கோபித்து, பானுகோபனுக் கெதிரேபோய், அவனுடைய தேரின்மீது பாய, அதிற்கட்டிய குதிரைகள் பாகனோடழிந்தன. யானை பிளிற்றெலி செய்தது. தேரழிதலும், பானுகோபன் நிலத்திற் குதித்து, அவ்வியானையைக் கோபிக்க, அது அவனுடைய மார்பில் முட்டியது. அதன் நான்கு கோடுகளும் மலையின்கட் குற்றிய ஊசிகளைப் போலச் சடசட என்னும் ஒலியோடு ஒடிந்தன. பானுகோபன் அதன் துதிக்கையைப் பிடித்துக்கொண்டு கன்னத்தில் அடித்தான். யானை பாற்கடல் உடைந்தாற்போல அரற்றி வீழ்ந்தது. முன்னே அயர்ந்து வீழ்ந்த சயந்தன் அறிவுபெற்று, உண்மைநூற்றுணிவைத் தன்மனத்தில் நுண்ணிதாக ஆராய்ந்து, "நாம் செய்தமாயம் போயது; தனித்தோம்; வலிமை குறைந்தது; 'தீயர்களாகிய அவுணர்கள் நம்மைப் பற்றுவர், இந்நகர் அழியும்' என்று மனமே நீ இனிச் சிறிதும் இரங்காதே. ஆராயின் இவை விதிமுறையே காண்." என்று தன்மனத்தோடு சொல்லினன். சயந்தன் தனித்தமையையும் ஐராவதயானையோடு தளர்ந்து வீழ்ந்தமையையும் அவுணத்தலைவர்கள் பார்த்து, ஆரவாரித்து, அவனைச் சுற்றிப் பற்றினர். அப்பொழுது எல்லா அவுணர்களும் ஒன்றுகக் கூடி, "இவன் மிகவும் வஞ்சன் வஞ்சன். இவனை அடியுங்கள், குற்றுங்கள், இவனுயிரைக் குடியுங்கள்" என்றார்கள். பானுகோபன் மற்றொரு தேரின்மேலேறிக்கொண்டு அவ்விடத்தில் விரைந்து வந்து, சயந்தனைப் பற்றிக்கொண்டு சூழ்ந்துநிற்கின்ற அவுணர்களை நோக்கி, "யான் விடுத்த பாணங்களால் மயங்கி மிகவும் சரீரந்தளர்ந்தான், பேசவும் வலியிலன். ஆதலால் இவனைப் பகைவனென்று வருத்தஞ் செய்யாதொழிமின். விரைந்து தேவர்குழுவோடு சிறைசெய்யுங்கள்" என்றான். அதுகேட்ட அவுணர்கள் சயந்தனுடைய தோள்களைக் கயிற்றினால் இறுகக்கட்டி, முன் சிறைசெய்த தேவர்கூட்டத்தோடு ஒருங்கே சேர்த்தார்கள்.

அப்பொழுது, பானுகோபன் தன்பக்கத்திலுள்ள அவுணப்படைத்தலைவர்களை நோக்கி, "இந்தத் தேவர்களும் சயந்தனுமல்லாத ஒழிந்ததேவர்களெல்லாரையும் விரைவில் இங்கே கொண்டுவந்து சிறைசெய்து, பின் இத்தேவருலகம் அழியும்படி அக்கினியைக் கொளுத்துங்கள்" என்றான். அசுரர்கள் அவனை வணங்கி, சுவர்க்கம் எங்கும் போய்த்தேடி, தேவர்களையும் அரம்பையர்களையும் ஒருவரையும் தப்பவிடாமல் உடனே பிடித்து, கயிறுகளினுற் றோள்களை இறுகக் கட்டிக்கொண்டுவந்து பானுகோபனுக்கு முன்னேவிட்டு, பொன்னுலகமெங்கும் அக்கினியைக் கொளுத்தினார்கள். சிவபெருமானுடைய திருப்புன்முறுவலால் முப்புரங்களும் எரிந்ததுபோல அவ்வுலகம் விரைந்து பொடியாயிற்று. ஊழிக்காலத்தினன்றி மற்றெப்பொழுதும் அழிவுறாத சுவர்க்கவுலகமுழுதும் சாம்பராயிற்று; இந்திரன் வறியனாய் ஒளித்தோடிப்போயினான்; மற்றைத் தேவர்கள் எல்லாரும் சிறையில் வீழ்ந்தார் என்றால், யாரும் செல்வத்தை நிலையென மதிக்கலாமோ!

சுவர்க்கமுழுதும் எரிந்து சுடலைபோலாகி வேற்றுருவாதலும், அதனைக் கண்டு களித்த பானுகோபன் 'அவுணவீரர்களுட் சிலரை நோக்கி, "சயந்தனையும் அவனோடு கூடிவந்து நம்முடனெதிர்த்த தேவர்களையும் மற்றைத் தேவர்களையும் நீங்கள் முன்னே கொண்டுசெல்லுங்கள்" என்றான். அப்படியே அவர்கள் கொண்டுசென்றார்கள். பானுகோபன் சேனைகளோடு பூமியில் வந்து மகேந்திரபுரியை யடைந்து, சூரபன்மனுடைய கோயிலுக்கு முன்னே போய்த் தேரினின்றும் இறங்கி, சேனைகளை அங்கே நிறுத்தி, தேவர்ச்சிறையைக் கொண்டு சென்று, சூரனுடைய கால்களை வணங்கி, "என்பிதாவே, இந்திராணியைக் கண்டிலேன்; இந்திரனையுங் கண்டிலேன்; சுவர்க்கவுலகமுழுதும் நெருப்பைக் கொளுத்தி, சயந்தனையும் தேவர்களெல்லாரையும் கொண்டுவந்தேன்" என்றான். சூரன் அதனைக் கேட்டு மகிழ்ந்து, தன்குமாரனைத் தழுவினான்.

பின்பு சூரன் தன்முன்னிட்ட சயந்தன் முதலாயினோரை மிகவுங் கோபித்து, வாட்படையை யேந்திய காவலர் சிலரை நோக்கி, "இவர்களுடைய அங்கங்களெல்லாவற்றையுந் துண்டஞ்செய்யுங்கள்" என்றான். அச்சொல்லைக்கேட்ட அவுணர்கள் பலர், புல்வாய் மான்கூட்டத்தில் சிறையினின்றும் விடுபட்ட புலிகள் பாய்ந்தாற்போலத் தேவர்கள் பக்கத்தில் வந்து, அவர்களுடைய கைகளையும் கால்களையும் தோள்களையும் காதுகளையும் கண்டங்களையும் நாசிகளையும் அசமுகி காணத் துணிப்பாராயினர். தேவர்கள் சிறியரா! அவர்கள் செய்த தவத்தின் வலியினால் அவ்வங்கங்களெல்லாம் உடனுடனே பொருந்தலுற்றன. சூரன் அதனைப்பார்த்து, "தேவர்களை யாருங் கொல்வதரிது; அங்கங்களைச் சிறிதும் குறைத்தலும் அரிது என்றால், இவருடைய வன்மையைச் சொல்லமுடியாது. இவர்கள் நமக்குத் தோற்றது நாம்பெற்ற வரத்தினாற்றான்." என்று மதித்துக் கோபித்து, "இவர்களை எக்காலத்தும் மீளவிடாத நரகத்தைப் போன்ற பெரிய சிறையில் இடுதிர்" என்று மிகுந்த வலியையுடைய ஏவலாளர்களுக்குப் பணித்தான். அவர்கள் சயந்தனையும் தேவர்களையும் பிடர்பிடித்துத்தள்ளிச் சிறைச்சாலைக்குக் கொண்டு போய், அதனைக் காவல் செய்வோரை நோக்கி, "நம்மரசன் இவர்களை அனுப்பினான்; இவர்கள் யாவரையுங் காத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி நீங்கினார்கள். அக்காவலாளர்கள் சயந்தன் முதலிய தேவர்களை விலங்கு பூட்டி அரிய சிறையில் வைத்தார்கள்.

அதன்பின் சூரபன்மன் பானுகோபனை அன்போடு பார்த்து, "உன்னுடைய நகரத்துக்குப் போவாய்" என்று சொல்லி, அனுப்பி, தானும் அவ்வக் களத்தை நீங்கி மாளிகையை அடைந்தான். சிறைப்பட்ட தேவர்கள் துன்பக் கடலில் ஆழ்ந்தார்கள். இந்திரன் சூரபன்மனுக்குப் பயந்து காட்டிலோடி மறைந்தான்; பொன்னுலகம் எரிந்தழிந்தது; சயந்தனும் சிறையிலகப்பட்டான்; தேவ பூதத்தின் செய்கை இது. நாம் ஆராயில் எம்பெருமான் தந்தருளும் மோக்ஷம் ஒன்றேயல்லாமல் துன்பமில்லாத ஆக்கம் வேறுண்டோ!

தெய்வப்பெண்கள் அவுணர்களுடைய ஊரிலே சிறைப்பட்டு, வேடர்களிடத் தகப்பட்ட மயில்களைப்போல மிகவும் அஞ்சி, இழிவாகிய ஏவல்களைச் செய்து, தூக்கணங்குருவி தன் கூட்டிற் கொண்டுபோய் வைக்க அதினின்றும் பெயர

மூடியாதிருக்கும் மின்மினியைப்போல வருந்தினார்கள். சயந்தனும் தேவர்களும் சூரனுடைய நீங்காத சிறையில் அகப்பட்டுத் துன்பக்கடலில் அழுந்தினார்கள். அவர்களுடைய துன்பத்தின்றிறத்தை யார்சொல்ல வல்லவர்! நம்மையெல்லாம் படைத்துக் காக்கும் முன்னவர்க்கு முன்னவராகிய முதல்வரே, அத்தேவர்களுடைய பெருஞ்சிறையை நீக்கித் துன்பக்கடலினின்றும் எடுத்துக்காக்கும் வலிமையுடையவர் தேவரீரன்றி வேறியாவர்.

பானுகோபனோடு சயந்தன் விண்ணுலகிற் போர்செய்தபொழுது அப்பானுகோபனுடைய மார்பிற் குற்றித் தன்கோடுகள் நான்கும் முரிந்து வீழ்ந்தயர்ந்த ஐராவதயானை அறிவுபெற்றெழுந்து, பூமியிலே திருவெண்காட்டில் வந்து, சிவாகமவிதிப்படி சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து சிரத்தையோடு பூசித்து, அக்கடவுளுடைய திருவருளால் முன்போல அக்கோடுகள் வளரப்பெற்று, பெருமகிழ்ச்சியோடு அந்தத்தலத்திலிருந்தது. அந்நாளில் இந்திரன் அயிராணியோடு விண்ணுலகிற்போய், பானுகோபன் அந்நகரை அக்கினிகொளுவி எரித்து அங்கிருந்த தேவர்களையும் சயந்தனையும் பிடித்துச் சிறைசெய்ததை அறிந்து தளர்ந்து, மேருமலையிற்போய், சிவபெருமானைநோக்கி நெடுநாளாகத் தவஞ்செய்தான். அவர் வெளிப்பட்டு "உனக்கு வேண்டும் வரம் என்னை? சொல்லுவாய்" என்றருளிச்செய்தார். அவன் "நீதியில்லாத சூரபன்மனைக் கிளையோடழித்து எங்கள் துன்பத்தை நீக்கியருளும்" என்று வேண்டினான். "யாம் உமையை மணஞ் செய்து ஒரு குமாரனைத் தருவோம், அவனே சூரன் முதலாகிய அசுரர்களை வதைத்து உறுதியாக உங்களுரிமையைத் தருவான் வருந்தாதே" என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்து, மறைந்தருளினார். [சாதலும் தோல்வியடைதலுமில்லாத சூரபன்மன் பிறரெவராலும் இறக்கமாட்டான் என்று சிவபெருமான் திருவுளத்திலெண்ணி, பரஞ்சோதி சொரூபராய்த் தோன்றிய முதல்வர் நீரே ஆகலின் அச்சூரனுயிரை நீர் சங்கரிப்பீர் என்று இந்திரனுக்கருளிச்செய்தார்.] அத்திருவாக்கை இந்திரன் கேட்டு, பிரமவிஷ்ணுக்களோடு யோசித்துச் சிவபெருமானிடத்து மன்மதனை அனுப்ப, அவன் அக்கடவுண்மீது பூம்பாணங்களைத்தூவி, அவருடைய நெற்றிக்கண்ணின் அக்கினியால் எரிந்து சாம்பராயினான். தேவர்கள்யாவரும் தங்கள் குறையை நீக்கும்படி சிவபெருமானை வேண்டிக்கொண்டார்கள். பின் அவர் அதற்கு இரங்கிக் கருணைசெய்து, அரி பிரமேந்திராதிதேவர்களும் பூதகணத்தலைவரும் பிறரும் சேவிக்க இமயமலைக்கு எழுந்தருளி, உமாதேவியாரைத் திருமணஞ்செய்து, திருக்கைலாசமலைக்கு மீண்டுவந்து, எங்களுடைய துயரத்தை நோக்கிக் கருணையினால் தேவரீரை நெற்றிக் கண்ணினின்றும் உண்டாக்கியருளினார்.

எம்பெருமானே, தேவரீர் திருவவதாரஞ் செய்தபின்பு, இந்திரனுக்கும் பிரமவிஷ்ணுக்களுக்கும் மற்றைத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிறர்க்கும் நீங்கிப்போன தம்முயிர் வந்ததுபோன்றது; வலிமையுங் கொடுமையுமுடைய சூரனைவதைத்து அவனால் நீங்கிய தங்கள் அரசுரிமையை அவர்கள் அடைந்தவர்போலாயினார். ஆழமாகிய சமுத்திரத்திலே புகுந்து அமிழ்ந்தினோர்களுக்கு ஒரு மேலான மரக்கலம் வர அவர் அதைப்பற்றிக் கரையேறி உய்ந்தாற்போல, துன்பக்கடலுள் ஆழ்ந்த அத்தேவர்கள் உம்மால் அதினின்று கரையேறு

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-20

வாராயினர். எம்மனோருடைய துன்பத்தை நீக்கத் தேவரீர் திருவவதாரஞ் செய்தபின், இந்திரன் முதலாயுள்ள தேவர்கள் துணிவுடையோராயிருந்தும், சூரன் தம்மைக் கண்டால், "கடுஞ்சிறையில்வைப்பான்" என்றெண்ணி, அவனுக்கஞ்சி ஒளித்திருந்தார்கள். எம்பெருமானே, இந்திரன் முதலாகிய தேவர்கள் உம்மையும் உமது பிதாவாகிய சிவபெருமானையும் வழிபடுதற்கு உங்கள் சந்நிதியில் வரும்பொழுதுமாத்திரம் தங்களுடைய சுயவடிவங்கள் யாவருங் காண வருவர். ஒழிந்த காலங்களில் தம் வடிவங்கள் மறைந்துழல்வர். இத்தன்மையினராகிய அத்தேவர்கள் தாம் மறைந்திருக்குமிடங்களிற் சூரபன்மனுடைய படைத்தலைவர்களைக் கண்டால், நெஞ்சிடிக்கவும், மனம் நடுங்கவும், உடம்பு வியர்க்கவும், இறந்தவர்போல்வாராய், அவர் மறைந்தபின் உயிர்பெறுவர். அத்தேவர்கள் சூரபன்மனை நினைப்பினும் அவசமாவர். நித்திரையில்லாமையால் அவர்களுக்குக் கனவு வருவதில்லை; வருமாயின், அக்கனவிற் சூரனைக்கண்டால் உயிரையுமிழப்பர். சூரபன்மன் இந்திரனுடைய சுவர்க்கத்தை அழிவுசெய்து, அவன் குமாரனாகிய சயந்தனைத் தேவர்களோடு சிறைப்படுத்துத் துன்பக்கடலுள் வீழ்த்தி, அழியாத செல்வங்களைக் கவர்ந்து, மனைவியாகிய இராணியோடு ஒளித்துத் திரியும்படி செய்தும், இன்னும் அவ்விந்திரனுக்குத் துன்பங்களையே சூழுகின்றான். செல்வத்தினாலும், வலிமையினாலும், வெற்றியினாலும், மேன்மையினாலும், அழியாமையினாலும், தேவர்களுக்குத் துன்பஞ்செய்யுங் கொடுமையினாலும் சூரனுக்கொப்பானவர் ஒருவருமிலர். சூரன் ஓரண்டத்திற் செய்தன இவை. மற்றை ஆயிரத்தேழண்டங்களினும் அவன்செய்த தீங்குகளை சுத்தமாயாதீத சோதி சொரூபராய் எம்மைக்காக்கும்படி திருவுருக்கொண்டு வந்தருளிய தேவரீரன்றி வேறியாவர் அறிவார். "சூரபன்மனுடைய ஆணை" என்னில், விட்டுணுவும், பிரமாவும், தேவர்களும், முனிவர்களும், ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள மற்றை உயிர்களும் அதனைக் கடவாரென்றால், அவனுடைய பெருமையை யார் சொல்லவல்லார்! அழியாத இவ்வளங்களைப் பெற்ற சூரபன்மன் சிவபெருமான் கொடுத்த வரத்தினால் அழியான். அக்கடவுளுடைய குமாரராகிய பரஞ்சோதி சொரூபரே, நீரே அவனைச் சங்கரிப்பதன்றி வேறியார் அதுசெய்ய வல்லார். பிரமா சூரனுக்கு நாடோறும் பஞ்சாங்கஞ்சொல்லி உழல்வார். விஷ்ணு அவனோடுபோர்செய்து தோற்றார். எவர்க்கும் மேலாகிய பரமசிவன் அவனுக்கு முன்னே வரத்தைக் கொடுத்தார்; அவர் பின்வந்து அவனைக் கொல்லமாட்டார். ஆதலால், நீரே அவனைக்கொல்லல்வேண்டும். சூரபன்மனையும் அவனுடைய தம்பிமாரையும் புத்திரர்களையுஞ் சங்கரித்து, சயந்தனையும் தேவர்களையுஞ் சிறையினின்று நீக்கி, பிரம விஷ்ணு முதலாகிய உலகபாலர்களுடைய பதங்களை அவரவர்களுக்குக் கொடுத்து, நம்மைக் காத்தருளும் என்று வியாழகுரு சுப்பிரமணியக்கடவுளுக்கு விண்ணப்பஞ் செய்தார்.

இவ்வாறு சுப்பிரமணியக்கடவுளுடைய திருவுள்ளத்துக் கேற்ப வியாழகுரு சிரத்தையோடு சொல்ல, அவர், தந்தைதாயர் முன் அறிந்ததொன்றை மழலைச் சொல் நீங்காத தங்கள் பிள்ளைகள் வாயாற் கேட்குந்திறம்போல அன்பினாற் கேட்டு, "புன்றொழிலையுடைய அவுணர்கள் தன்மையையும் மற்றையோர் செய்கைகளையும் ஒன்றும் விடாது முற்றும் உள்ளவாறு நம்முன் சொன்னாய். இது நன்று. கட்டுரைக்கும் வன்மைக்குத் 'தலைவன் நீயன்றோ" என்று திருவாய்

மலர்ந்து, அவருடைய முதுகைத்தடவி, இனிதருள் புரிந்தார். "அறிவிற்கறிவா யிருக்கின்ற ஆறுமுகப்பெருமானே, 'கொடிய சூரபன்மன் அழியவேண்டும்' என்று நீர் திருவுளஞ்செய்யின் அது ஆகும். ஒரு திருவிளையாடலை நினைத்து ஈண்டு எழுந்தருளிவந்தீர். அதுபோல அவனுடைய இயற்கைகளையும் தெரிந்தும் தெரியாதவர்போல அடியேனை வினவினீர். முற்றறிவுடையராகிய தேவரீருக்கு ஒரு சிறியேன் சொன்னேன் என்னுந் தீய பிழையைப் பொறுத்தருளும்" என்று வியாழகுரு கூறி, அவருடைய திருவடித்தாமரைகளை மறவாத அன்போடு பற்றிக்கொண்டு வணங்கி அஞ்சலித்துத் துதித்தார். அவர் வியாழனே, "நம்முடைய அனுமதிப்படி சொன்னாய், ஆதலால் உண்டாகத்தக்க பிழையில் ஒன்றையும் நினையாதே, இருக்குதி" என்று திருவாய்மலர்ந்தருளினார். சுப்பிரமணியக்கடவுள், தம்முடைய திருவருளைப் பெற்று வியாழகுரு இருந்த பின்னர், தமக்கயலினிற்கும் இந்திரன்மீது கிருபாநோக்கஞ்செய்து, "இந்திரனே கேட்பாய். மனத்தில் ஏது மெண்ணற்க. சூரபன்மன் கிளையோடு அழியவும் தேவர்கள் சிறை மீளவும் விண்ணுலகத்தை நீ ஆளவுஞ் செய்வோம, ஐயுறுதே" என்றருளிச்செய்தார். இம்மை மறுமை யின்பங்களைத் தந்தருளுவாராகிய முருகக் கடவுள் இதனைத் திருவாய்மலர்ந்தருளுதலும், இந்திரன் தேவர்களோடு அவரை வணங்கித் துதித்து, துன்பமெல்லாம நீங்கி, சந்தோஷசாகரத்தில் அழுந்தி வாழுயினன்.

திருச்சிற்றம்பலம்.

அசுரகாண்டமுற்றிற்று.

உ

மூன்றாவது

மகேந்திரகாண்டம்.

வீரவாகுகந்தமாதனஞ்செல்படலம்.

விரிஞ்சன்மாறேவராலும்வெலற்கரும்விறலோனாகிப்
பெருஞ்சுரர்பதமும்வேதவொழுக்கமும்பிறவுமாற்றி
யருஞ்சிறையவர்க்குச்செய்தவவுணர்கோனாவிகொள்வான்
பரஞ்சுடருருவாய்வந்தகுமரனைப்பணிதல்செய்வாம்.

இந்திரன் முதலாகிய தேவர்களும் பிறரும் மனமகிழ்ச்சியோடு திருமருங்கி லொழுகித்துதிக்க, திருச்செந்தூரிலே திவ்விய சிங்காசனத்தின்மீது வீற்றிருந்தருளும் முருகக்கடவுள், திருவுள்ளத்தில் முகிழ்த்த பெருங்கருணையினால் இவ்வாறு கருதுவார்: "பிரமா முதலிய தேவர்களையும் முனிவர்களையும்போல அவுணர்கூட்டத்தாரும் எமது கடவுளாகிய சிவபெருமானுக்குப் புததிரர்களாமுறையை யுடையரேயாயினும், கொடியரை அழித்தல் நீதிநூன்முறையாம்; தருமநெறியும் அஃதே. இது துணிபேயாயினும், சூரனையும் அவன் சுற்றத்தாரையும் நாம் கொல்லுதல் முறையன்று. தேவர்களுடைய சிறையை விட்டு உய்யும்படி அவனுக்கு ஓர் ஒற்றனை விரைவில் அனுப்புவோம். அவ்வொற்றன் சொல்லைச் சூரபன்மன் கேட்டுத் தேவர்களைச் சிறையினின்று நீக்கிவிடுவானாயின், அவன் அழியாமல் இன்னும் வாழ்க. அதனை மறுத்தானாயின் நாம ஆண்டே சென்று அவனைக் கொல்வோம். இதுவே தருமநெறி" என்று திருவுளங்கொண்டார். சுப்பிரமணியக்கடவுள் இவ்வாறு திருவுளஞ்செய்து, தம்முடைய திருமருங்கிலுள்ள அரிபிரமேந்திராதிதேவர்களை நோக்கி, "அவுணர்கிளையையெல்லாம் அழிக்கும்படி நாம் நாளைக்குப் புறப்படுவோம். அதன்முன் ஒரு தூதுவனை அனுப்பி, சூரபன்மனுடைய கருத்தை அறிதல்வேண்டும" என்றார். அத்திருவாக்கைப் பிரமாவும் விஷ்ணுவும் கேட்டு, "எம்பெருமானே அங்ஙனஞ் செய்தலே தருமநெறி" என்றார்கள். என்னலும், குமாரக்கடவுள் "நம்முடைய இநத வீரர்களுள் சூரபன்மனிடத்தே வீரமகேந்திரத்திற்குத் தூதுசெல்ல யாரை அனுப்புவோம் சொல்லுங்கள்" என்று வினவியருள, "வாயுவும் மெல்லவாக வீரமகேந்திரத்திற் செல்லுவது அரிது, அச்சூரபன்மனுக்குச் செய்யும் பணிவிடை காரணமாக அன்றி அங்கே செல்லுதல் அடியேனுக்கும் அரிது. விரைந்து வீரமகேந்திரத்துக்குச் சென்று பகைவர்களை வென்று மீளவல்லவர் இந்த வீரவாகுதேவரே" என்று பிரமதேவர் சுப்பிரமணியக்கடவுளுடைய திருவுள்ளத்துக்

கேற்பக் கூறினர். அக்கடவுள் நன்றென்று கருணைசெய்து, வீரவாகுதேவரு டைய முகத்தைப்பார்த்து, மிகுந்த சந்தோஷத்தோடு இவ்வாறு சொல்லியருளு வார்: "வீரவாகுவே, நீ விரைந்து வீரமகேந்திரத்திற்குப் போய், சூரபன்மனை அணுகி, 'சயந்தனையும் தேவர்களையும் தருமநெறியை நினைத்துச் சிறையி னின்று விடுத்து இந்திரபாக்கியத்தோடிருக்குதி' என்று அவனுக்குச் சொல் லுதி. இந்த வார்த்தையை மறுத்தானாயின், 'அவுணனே, உன் கிளையையெல் லாம் விரைவிலழித்து உன்னையும் வேற்படைக்கிரையாகக் கொடுக்கும்படி பகை கொண்டு நாமே நாளைக்குச் செல்வோம். இது மெய்ம்மை' என்று கூறி மீள்வாய்" என்று கட்டளையிட்டருளினர். அப்பணியைச் சிரமேற்கொண்ட வீரவாகு தேவர் எம்பெருமானே, "மிக்க வலியையுடைய அவுணர்கள் நெருங்கிய வீர மகேந்திரத்தில் மேலாகிய செல்வத்தோடிருக்கும் சூரபன்மனுக்கு முன்னே போய், தேவரீர் அருளிச்செய்தவற்றையெல்லாம் சொல்லி, அவன் கருத்தை யறிந்து வருகின்றேன்" என்று வணங்கி அஞ்சலித்து, விடைபெற்றுக்கொ ண்டு போயினர்.

இந்திரன் வீரவாகுதேவருக்குப் பின்னே போய், "வீரரே, வீரமகேந்திரத் திற் சென்று, அங்கே சிறையிலிருக்கின்ற சயந்தனையுந் தேவர்களையும் அடை ந்து, அவர்களைத் தேற்றி, பின்பு நீர் தூதுசென்ற செயலை முடிப்பீராக" என் றான். வீரவாகுதேவர் "நீ கூறியது நன்று அவ்வாறு செய்வேம் நீ நிற்பாய்" என்று கூறி, தம்மைப் பின்றொடர்ந்து வந்த இலக்கத்தெட்டு வீரர்களையும் பார் த்து, "யான் கடலைத் தாண்டி வீரமகேந்திரத்திற் சென்று, சூரனுக்கு முன்னே போய், எம்பெருமான் கட்டளையிட்டருளிய திருவாக்குக்களைச் சொல்வேன். மறுத்தானாயின், அவனுடைய நகரம் முழுவதையும் அழித்தபின் மீளுவேன்" என்றார். தம்பியர்கள் வியந்து அவரை வணங்கினார்கள். வீரவாகுதேவர் அவர் களை மார்போடு இறுகத்தழுவி, பூதப்படைத்தலைவர்களோடும் அவர்களை அங்கே நிற்கும்படி கட்டளையிட்டு, விரைந்து கடற்கரையை அடைந்து, அங்குள்ள கந்த மாதனமென்னு மலையினுச்சியில் ஏறி நின்றார். நிற்றலும், அவருடைய பாரத் தைத் தாங்கலாற்றாது அம்மலை பிளந்து பூமியில் ஆழ்ந்தது. அதிலிருந்த பக்ஷிக ளும் விலங்குகளும் ஓடின. முன் போரிலே புறங்கொடுத்தோடி அம்மலைமுழை யில் ஒளித்திருந்த தாரகனுடைய படைவீரர்கள் சிலர் அவரைக்கண்டு ஏங்கி இறந்தார். இவ்வாறு இன்னும் பல நிகழ வீரவாகுதேவர் மகேந்திரபுரிக்குச் செல்ல எண்ணி, எம்பிரானாகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவுருவத்தைத் தியானித்து, பிரமாவும் விஷ்ணுவும் நோக்கவும், பிரம விட்டுணுக்கள் மற்றைத் தேவர்கள் முனிவர்கள் கருடர் சித்தர் கந்தருவர் சந்திரசூரியர் முதலாயினோரு டைய பதங்கள் பல வேறுவகைப்பட்ட ஆரங்களாய் விளங்கவும், ஒரு பெரிய திருவுருவத்தைக் கொண்டு நின்று, பூமி முழுதையும் எண்டிசைகளையும் எழு கடல்களையும் பெரும்புறக்கடலையும் சக்கரவாளகிரியையும் விண்ணுலகத்தையும் மற்றை யுலகங்களெல்லாவற்றையும் கண்பரப்பி நோக்கி, திருக்கைலாசமலையை யுந் தரிசித்துக் கைகூப்பி வணங்கி, அதன்பின் விஷ்ணுமுதலாகிய தேவர்களு டைய நகரங்களையும் திக்குப்பாலகர்களுடைய நகரங்களையும் பூமியிலுள்ள சிற ந்த நகரங்களையும் வீரமகேந்திர நகரத்தையும் நோக்கி, "சூரனுடைய இந்தப் பெரிய நகரத்துக்கு மற்றெந்த நகரங்களும் நிகர்த்தலில்லை" என்று வியந்து

கூறி அந்நகரத்தைப் பார்க்கும்பொழுது மேன்மேல் வளராநின்ற கோபத்தை யுடையராய், "இந்நகரத்தில் ஒருகையை நீட்டிப் பகைவர்கள் யாவரும் இறக்கும் படி பிசைவேனோ" என்று எண்ணி, அங்கே சிறையிலிருக்கின்ற சயந்தன் முத லாகிய தேவர்கள்பொருட்டு இரங்கி, அவ்வெண்ணத்தை மீட்டார். விஞ்சையரும் இயக்கரும் சித்தரும் கருடரும் சூரியசந்திரர்களும் மற்றைக் கிரகங்களும் நக்ஷ த்திரங்களும் தேவகணத்தரும் அவருடைய பேருருவைப் பார்க்கலாற்றாதவராய் அஞ்சினர். வீரவாகுதேவர் அவர்களை நோக்கி, "வருந்தாதொழிமின்" என்று கையமைத்தார். வீரமகேந்திரத்தில் உள்ள அவுணர்களும் வேறிடங்களில் உள்ள அவுணர்களும் அவருடைய பெரிய திருவுருவத்தை நோக்கி, "கிரவுஞ்ச மலை முன் அழிந்ததென்பது பொய்யே. இப்பேருரு அம்மலையின் மாயமோ. இன் னும் ஆராயவேண்டியதுண்டு" என்றார்கள். வீரவாகுதேவர் கந்தமாதனமலையை ஊன்றி இந்நிலைமையோடு நிற்றலும், பிரமாவும் இந்திரனும் இலக்கத்தெண் மரும் பூதர்களும் பிறரும் கண்டு, ஆச்சரியத்தோடு ஆரவாரித்தார்கள். தேவர் கள் முனிவர்கள் முதலாயினோர் தங்கள் தங்கள் இடங்களில் நின்றபடியே தந்த மக்குச் சமீபமாய்ப் பொருந்திய அவருடைய ஒவ்வோருறுப்புக்களிலும் கற்பகப் பூக்களைத்தூவி அஞ்சலிசெய்து, "தலைவரே சூரனுடைய நகருக்குத் தூது சென்று எங்கள் துன்பத்தை நீக்கியருளும்" என்று பிரார்த்தித்தார்கள்.

அப்பொழுது, வீரவாகுதேவர் "எம்பிரானுடைய பன்னிரண்டு திருப்பு யங்களும் வாழ்க; ஆறு திருமுகங்களும் வாழ்க; பேரருளைப் பொழியும் பன்னி ரண்டு திருக்கண்களும் வாழ்க; வேற்படை வாழ்க; மற்றைப் படைக்கலங்கள் வாழ்க; தேவாதிதேவராகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடி வாழ்க" (ஆவதோர் காலையெந்தை யாறிரு தடந்தோள் வாழ்க—மூவிருவதனம் வாழ்க முழுதருள் விழிகள் வாழ்க—தூவுடை நெடுவேல் வாழ்க தொல்படை பிறவும் வாழ்க—தேவர்க டேவன்சேயோன் றிருவடி வாழ்க வென்றான்.) என்று தோத் திரஞ்செய்து, கைகளைச் சிரசின்மேற் கூப்பி, ஆனந்தபாஷ்பம் ஆறுபோலப் பெரு கவும், உரோமாஞ்சம் திருமேனியெங்கும் மூடவும், நாத்தழுதழுப்பவும், என்பு நெக்குருகவும், கண்கள் செருகவும், ஐம்புலனு மனமும் ஒருவழிப்பட அம்முரு கக்கடவுளுடைய பேரருள் வெள்ளத்தில் மூழ்கிக், குதூகலமடைந்தார். அடை தலும், உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் மகிழ்ந்தன. இவ்வாறு அன்பு நிகழ, சுப்பிரமணியக்கடவுளுடைய பேரருளைப் பெற்றுக், கந்தமாதனமலையில் நின்ற வீரவாகுதேவர் "மிகவும் பெரிய இவ்வுருவத்தோடு நாம் செல்லில் உயிர்கள் அழியும் ஆதலால் இது அழகன்று" என்றெண்ணி, அங்கே செல்லுதற்கு வேண் டுந் திருவுருவத்தைப் பொருந்தி, சிரசிலணிந்த இரத்தினகிரீடம் அண்டகோளை கையை உரோஞ்ச ஆகாயத்திற் கிளர்ந்தெழுந்து, மகேந்திரபுரியை நோக்கிப் போயினார்.

திருச்சிற்றம்பலம்.

கடல்பாய்படலம்.

வீரவாகுதேவர், தாம் ஏறி நின்றமையாற் பூமியின்கீழ்ச்சென்று ஆழ்ந்த கந்தமாதனத்தை நோக்கி, "நீ மீண்டு எழுதி" என்று கூறினர். அது விரைவிற் கிளர்ந்து தோன்றிக் கடற்கரையில் முன்போல நின்றது. அவர் கந்தமாதனத்தினின்றும் வீரமகேந்திரத்தை நோக்கி எழலும், விசைக்காற்றினாற் பூமியிலுள்ள மலைகள் யாவும் பக்கத்திற் செல்லுதல், பூதத்தலைவரும் இலக்கத்தெண்மரும் முதலிய யாவரும் அவருடைய பக்கத்தில் அணிவகுத்துச் செல்லுதல் போன்றது. அவ்விசைக்காற்றினால் அண்டங்கள் திரிந்தன; உயிர்கள் யாவும் சுழன்றன; சூற்கொண்ட மேகங்கள் சுழன்றன; ஊழிக்காற்றும் ஆற்றாதோடியது. அவ்விசைக்காற்றுச் சூரியனையும் அக்கினியையும் குளிரச்செய்து வடவாமுகாக்கினியையும் அவித்தது; அது தள்ளுதலாற் கடல் சுழித்து உள்வாங்கி மகேந்திரத்திற் செல்லுதல், சூரனுடைய சேனைகள் வீரவாகுதேவர்மேலெதிர்த்துச் சென்று அவரோடு போர் செய்தற்கு வலிமையின்றித் தோற்றுத் தம்மூரையடைதல்போன்றது; அக்காற்றுப் பூமியைக் கிழித்துப் பாதலவுலகத்தைக் காட்டிற்று. அக்காற்றோடு பெருமூச்சினுண்டாகிய அக்கினி கலந்து வீரவாகுதேவருடைய கொடிப்படைபோல மகேந்திரபுரியைச் சுற்றிப் புகைசூழக் கொளுத்தியது. அவ்விசைக்காற்று மகேந்திரபுரியிலுள்ள மதில்களையும் செய்குன்றுகளையும் சோலைகளையும் பூமியிலலைத்துத்தள்ளியது. அவருடைய மூச்சினுண்டாகும் அக்கினி முன்பு ஓடிச்சென்று மகேந்திரபுரியைக் கொளுத்த, விசைக்காற்றினாற் றள்ளுண்ட சமுத்திரஜலம் சென்று முறைமுறை அந்நெருப்பை அவித்தது. விசைக்காற்றும், மூச்சுக்காற்றும், கண்ணிலும் சுவாசத்திலுமிருந்து வரும் நெருப்பும், எதிர்செல்லாதோடுகின்ற கடலும், மகேந்திரத்திற்சென்று அப்புத்தேயுவாயுவாகிய மூன்று பூதங்களும் பொருதல் போலப் பூசல் விளைத்தன. விசைக்காற்றினாற் சமுத்திரம் புறந்தர, அதிலுள்ள சின்னை, சுறா, பனைமீன், சூறை, திருக்கை, யானைமீன், திமிங்கிலம் முதலிய மீன்கள் ஓடிப்பாய்ந்தன. அக்காற்றினாற் கடல் எதிர்ந்தெழாது சாய்ந்து மீன்களைத் திரைக்கரங்களிற் றாங்கி மகேந்திரத்திற் செலுத்துதல், இறப்பவர்கள் விரும்பிய உணவுகளைச் சுற்றத்தார் மிகக் கொடுத்தல்போன்றது. விசைக்காற்றினால் நக்ஷத்திரங்கள் கடலிலுதிர, மறிந்து செல்லும் அக்கடலிலுள்ள மீன்கள் ஆகாயத்திற் சென்றன. அவ்வீரவாகுதேவருடைய திருக்கரத்திலிட்ட இரத்தினகடகத்தினொளி சென்று சக்கரவாளகிரியைச் சூழ்ந்த இருட்டை ஓட்டி, பொன்மயமான அண்டச்சுவரின் ஒளியோடு மாறுபட்டது.

இவ்வாறெல்லாம் நிகழ, சிவபெருமான் முப்புரங்களின்மீது விடுத்த சிரிப்பாகிய அக்கினியைப் போலவும், அவருடைய கண்ணினக்கினியைப் போலவும், அவர் விடுத்த விஷ்ணுவாகிய அம்பைப்போலவும், சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மனைக் கிளையோடழிக்க விடுத்த வேற்படையைப்போலவும், விஷ்ணு வரும்படி நினைக்கப் பாற்கடலில் வந்த மந்தரமலையைப்போலவும், சிவபெருமானாலே திருக்கண்டத்தில் அடக்கிவைக்கப்பட்டு விடுக்கக் கடலில்வரும் ஆலாகலவிஷத்

னிதப் போலவும், வீரவாகுதேவர் சமுத்திரத்தின்மீது பாய்ந்து, வீரமகேந்திரத்தின் வடபக்கத்திலுள்ளதும் யாளிமுகன் என்னும அசுரனாற் காவல்செய்யப்படுவதும் ஆகிய இலங்கை நகரத்திற்குச் சமீபத்திற் சென்றார்.

திருச்சிற்றம்பலம்.

வீரசிங்கன்வதைப்படலம்.

வீரவாகுதேவர் செல்லும்பொழுது, அந்நகரைக்காக்கின்ற யாளிமுகனென்பவன் சேனைகளோடு சூரபன்மனைக் காணும்படிபோக அதிவீரன் என்னும் அவன்குமாரன் ஆயிரம் வெள்ளஞ் சேனைகளோடு அவ்விலங்கையைக் காத்துக்கொண்டிருந்தான். அவன் கோயிலினுள்ளிருப்ப, அவனுடைய சேனைத்தலைவனாகிய வீரசிங்கன் என்பவன் அந்நகரின் வடக்கு வாயிலைக் காத்துக்கொண்டிருந்தான். அவன் வீரவாகுதேவர் விரைந்து செல்லுதலைக்கண்டு, "சிறிதும் நம்முடைய காவலை எண்ணாது தனித்தவனாய் வருவான், இவன்யார்?" என்று வடவாமுகாக்கினிபோலக் கோபித்து, "இவனுயிரை விரைந்து உண்பேன்" என்றெண்ணி, மனோகதியும் பிற்பட எழுந்து ஐந்நூறு வெள்ளஞ் சேனைகளோடும் வீரவாகுதேவருக்கு முன்னேபோய், அவரைநோக்கி, "இன்றளவும் எமதுகாவலுள் வருதவரில்லை, நீ யார்? உன் உயிர்க்கு அன்பிலையாய், அஞ்சலாய் தனித்து வந்தாய் உன்னைக் கொல்லுமுன் நீ வந்த செய்தியைச் சொல்வாய்" என்றான். வீரவாகுதேவர், அதனைக்கேட்டு, "யான இலங்கையைத் தாண்டிச் சூரபன்மன் வசிக்கும மகேந்திரபுரிக்குப் போய் மீளும்படி நினைந்து வருகேன். இது என் செயல். நீ வலியவனாயின், இனி வேண்டியதொன்றைச்செய், காண்பேன்" என்றார். வீரசிங்கன் அவர் சொல்லியதைக்கேட்டு, "இவன் சிறிதும நம் அவுணருடைய ஆணையை எண்ணுகின்றிலன்; வலியன்போலும்; அதனை யறிவோம; மீண்டுபோதல நன்றன்று" என்று நினைத்து, தன்படைவீரரை நோக்கி, "இவனுயிரைக்கவருங்கள்" என்று சொல்ல, அவாகள ஒரு சிங்கத்தை வேட்டைக்காட்டில் வேடர்கள் சுற்றிப்பொருவதுபோல வீரவாகுதேவரை வளைந்து, வேல் தண்டு இருப்புலக்கை முதலாகிய ஆயுதவகைகளினாற் போர்செய்தார்கள். அவர் தளர்ச்சியடையாது, வாட்படையை உறையினின்றுங் கழற்றி அவ்வசுரர்களைக் கொன்று திரிந்தார். இரத்தவெள்ளத்தினால் சமுத்திரஜலம மறைந்தது. இரதகஜதுரகபதாதிகள் அழிந்தன. நூறுவெள்ளஞ் சேனைகள் அழியும்படி வீரவாகுதேவர் இவ்வாறு கொல்ல, மற்றையவுணர்கள் யாவரும் மனநொந்திரங்கி, தம்முயிரைப் பாதுகாத்துப் புறங்கொடுத்தோடினர். அதனைக்கண்ட வீரசிங்கன் சினங்கொண்டு, வீரவாகுதேவர்மீது ஒரு சூலப்படையை விட, அவர் அதனை வாட்படையினால் இருதுணியாக்கி ஆர்ப்பரித்தார். வீரசிங்கன் அவருடைய வலிமையைப் பார்த்து, தன் கையிலுள்ள படைக்கலங்களுட் சிறந்த ஒரு குலிசத்தை வீசினான். அவர் அதனையும வாளினால்வெட்டி, மீண்டு ஆயுதம எடுத்தற்குமுன் அவனுக்கெதிரேசென்று, வாட்படையை வீசிக் கைகளை வெட்டி, முடியையும் அறுத்துக் கடலில் வீழ்த்தி, பின்பு எதிர்ப் பாரில்லாமையினால் வாளை உறையுட்

புகுத்தி, முதலில் ஒருவெற்றியைக் கொண்டு அப்பாற் சென்று, இலங்கையி லுள்ள மூன்று சிகரங்களுள் நடுச்சிகரத்திற் பாய்ந்தார்.

திருச்சிற்றம்பலம்.

இலங்கைவீழ்படலம்.

வீரவாகுதேவர் மகேந்திரபுரியின் வடக்கிலுள்ள இலங்கையின்மீது பாய, அதனைக் காவல்செய்துகொண்டிருந்த அதிவீரனென்பவனும் மற்றை அசுரர்களும் இடியேறுண்ட பாம்புபோலக் கலங்கி ஏங்கி நடுங்கி, வீழ்ந்தார்கள். வீரவாகுதேவர் குதித்தமையினால் இலங்கை குலைகுலைந்து அவுணர்களோடு கடலில் ஆழ்ந்தது. அவர் அதனைக்கண்டு மகிழ்ச்சியுற்றார். இலங்கை கடலுண் மூழ்க, கூட்டமாய் அதிலிருந்த அவுணர்கள் யாவரும் கலங்கிப் புலம்பி மருண்டு வெருண்டு, மிகவுந் துன்பமுற்றார். அவ்வசுரர்களை சுறா திமிங்கிலம் திமிங்கிலகிலம் முதலிய எண்ணில்லாத மீன்கள் சூழ்ந்தன. அவற்றுட் சில அவர்களுடைய கைகளை யிழுப்பனவும், சில கால்களை யிழுப்பனவும், சில தலைகளையிழுப்பனவும், சில தோள்களையிழுப்பனவும், சில மார்புகளையிழுப்பனவுமாயின. சில அசுரர்கள் தந்தையையும் தாயையும் மனைவியையும் கூட்டத்தோடு கையிற்பற்றிக் கூவிக்கொண்டெழுகின்றார். வேறு சிலர் இளைப்படைந்து செய்வதின்னதென்றறியாது, ஆயுதங்களையும் கைவிட்டுத் தம்முயிரைக்கொண்டு தாம் மாத்திரம் எழுந்தார். மீன்கள் தம்மை உண்ணும்படி வந்து அடித்தலும், வாள் வேல் முதலாகிய படைக்கலங்களைக்கொண்டு அவைகளோடு போர்செய்து நின்றார்கள் சில அவுணர்கள். சில அசுரப்பெண்கள் மீன்கள் ஒருகையைப் பிடித்துக்கொள்ள, மற்றொரு கையை அவுணர்கள் பிடித்திழுப்ப, வருத்தமுற்றார்கள். திருக்கை சுறா முதலாகிய மீன்கள் கடலில் ஆழுகின்ற தம்மைக்கண்டு தாக்க, அவைகளை வாட்படையினாற் றுணித்தெழுந்தார்கள் சில அவுணர்கள். சமுத்திரத்தில் எழுகின்ற அவுணர்கள் சிலர், வீரவாகுதேவருடைய செயலைக்கண்டு, “நின்றால் நம்மையும் வருத்துவான், நாம் விரைந்து ஓடிப்போவோம்” என்று விரைந்து அயலில் மறைந்தோடினார்கள். இவ்வாறாக இன்னும் பல நிகழ இலங்கை கடலில் ஆழ்ந்தது.

திருச்சிற்றம்பலம்.

அதிவீரன்வதைப்படலம்.

இவ்வாறாக இலங்கை சமுத்திரத்திலாழ, அதனைக் காவல்செய்துகொண்டு கோயிலிலிருந்த அதிவீரன் அறிந்து, மிகத்துன்பமும் நாணமும் அடைந்து, கோபித்து, அக்கினிசிந்தச் சிரித்து, இப்படிச் சிந்திப்பான்: “சூரபன்மனோ அவன் தம்பியர்களோ அவர்களுடைய புத்திரர்களோ இதனைச் செய்தார்? வேறி யார் இதனைச் செய்யவல்லவர்? அவர்கள் இப்படிச் செய்தற்கோர் ஏதுவுமில்லை.

அவர் தம்மூர்க்குத் தாமே தீங்கைச் செய்யார். ஆதலால் இப்படி எண்ணுதல் புத்தியன்று. மாயையும் இதனைச் செய்யாள். மும்மூர்த்திகளும் இச்செயலை நினைத்தலுஞ் செய்யார். பின்னர் எந்தத்தேவர்கள் இதனைச் செய்ய வல்லார்? அவர்கள் எல்லாரும் எங்கள் சிறையிலுள்ளார். இந்திரனோவெனில், அவன் தன்னுயிரைக் காத்து ஒளித்தான். மற்றைத் திக்குப்பாலகர்களும் பிரமவிஷ்ணுக்களும் விஞ்சையர் சித்தர் முதலாயினோரும் நம்மரசனுடைய பணியின் வழி ஒழுகுவாராயுள்ளார். அவர்கள் இத்தீங்கைச் செய்ய எண்ணுவார்களோ? இங்குள்ள அவுணர்கள் சரீரவலியும் மாயையும் மிகவுடையரேயாயினும், சூரபன்மனுடைய படைகளுக்கு அஞ்சி இத்தன்மையைச் செய்யார் போலும். அவர் செய்யாதொழியில், இதனைச் செய்தவர் யாரோ? பிதா விட்டுநீங்கிய காலத்தில் புதல்வனாகிய யான் அசுரர்களோடும் இந்நகரைக் காத்தது நன்று! பிரமதேவரை நோக்கி அருந்தவஞ்செய்து மாயைகளையும் படைக்கலங்களையும் வலிமையையும் அவர் தரப்பெற்ற என்செயல் நன்று! 'பிதா இல்லாமல் நீங்கியிருக்கும் பொழுது புத்திரன் நகரைக் காவல்செய்து அதனோடு கடலிலாழ்ந்தான்' என்றால் நம்முடைய சுற்றத்தார்கள் என்னைச் சிரிப்பார்களே. சூரபன்மன் இதனை அறிந்தால் என்னைக் கொல்வான். என் தகப்பனும் அப்படியே. பிறரெல்லாரும் இகழ்வர். இது இந்நகரத்தின் பாடானால் என்றன்மை நன்றாயிருந்தது!" என்று எண்ணி, அதிவீரன் வருந்தி, கடலிலே ஆழ்கின்றவன் "யான் கடலின்மேலே போய் யார் இதனைச் செய்தார் என்று அறிந்து, அவரை விரைந்து கொன்று இரத்தத்தைக் குடிப்பேன்." என்று மீண்டு எண்ணி, ஆயுதங்கள் எல்லாவற்றையும் எடுத்து, தன்சேனைகளுள் அங்கு நின்றவர்களை அழைத்துக்கொண்டு ஆலாகல விஷம் கடலினின்றும் எழுந்தாற்போலச் சமுத்திரத்தின்மீது வந்தான். வந்து வீரவாகுதேவருடைய நிலையைக்கண்டு, இதழைக்கடித்துச் சிரித்து, "இவன் ஓர் ஆண்டகைமை உடையான். நம்மூரைக் கடலில் அமிழ்ந்தும்படி செய்தும் இங்கே நின்றான். எட்டுத்திக்கிலுள்ளாராலும் புகழப்படுகின்ற அசுரர்களுடைய ஆணை நன்று" என்று கூறி, "இவனைக் கொன்று உயிரைக் குடிப்பேன்" என்று நினைத்து, அவருக்கு எதிரே போயினான். கடலில் ஆழ்ந்த அவுணர்களுடைய செயலைப் பார்த்துநின்ற வீரவாகுதேவர் அவன் வருதலைக் கண்டார்.

அப்பொழுது அதிவீரனுக்குப் பக்கத்திலே வந்த அசுரர்கள் வீரவாகுதேவரைச் சூழ்ந்து போர்செய்ய, அவர் வாளை உறையினின்றுங் கழித்து அவர்களைக் கொன்றார். சிரங்களும் கரங்களும் புயங்களும் கால்களும் முதலாகிய உறுப்புக்கள் வெட்டுண்டு அவ்வசுரர்கள் யாவரும் இறந்தார்கள். அவர்களுடைய தலைகள் இரத்தவெள்ளத்தில் மிதந்தன. பிணத்தொகை மலைபோல் வளர்ந்தது. தன் சேனைகள் அழிந்து கடலினுள் வீழ, அதிவீரன் கோபித்து, அதனை நோக்கி, "என்பக்கத்திலுள்ளவர்களைக் கொன்றாய், விரைவில் உன்னைத் தின்பேன், காணுதி" என்று போரை முயன்றான். அவன் வருகின்ற தோற்றத்தை வீரவாகுதேவர் கண்டு, "விரைவில் வருக" என்று அழைப்ப, அவன் எதிர்த்து, "இவனை இப்பொழுதே கொல்லுக" என்று ஒரு வேற்படையை எறிந்தான். அது மார்பை அணுகுமுன் வீரவாகுதேவர் வாட்படையினாலே இரண்டு துண்டாம்படி வெட்டினார். வேற்படை வெட்டுண்ணுதலும், அதிவீரன் விரைந்து ஒரு தண்டாயுதத்தை எடுத்து "உன்னுயிரை இது கவரும்" என்று வீரவாகு